மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்
பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

தொகுப்பு – 2

மாண்புமிகு புரட்சித்தலைவி
அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

சிறப்பு வெளியீடு எண். 30

தமிழரசு

பிப்ரவரி 2019

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

தொகுப்பு – 2

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.07.2018 அன்று கிருஷ்ணகிரி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளிக் கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரை 1

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 15.07.2018 அன்று விருதுநகரில், நாடார் மஹாஜன சங்கத்தின் சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற கல்வித் திருவிழாவில் ஆற்றிய உரை 13

3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.07.2018 அன்று மதுரையில் ஆற்றிய உரை 37

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.07.2018 அன்று சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்ட விழாவில் ஆற்றிய உரை 40

5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.07.2018 அன்று சென்னையில் நடைபெற்ற ஆச்சார்ய ஸ்ரீ மஹாஸ்ரமண் அவர்களின் சதுர்மாஸ் பிரவாஸ் விழாவில் ஆற்றிய உரை 52

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
6.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.07.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், கூடுதல் புலிகள் இருப்பிடம் மற்றும் சிறுவர் பூங்கா ஆகியவற்றைத் திறந்து வைத்து, புதியதாக பிறந்தப் பெண் சிங்கக்குட்டிக்கு பெயர் சூட்டி ஆற்றிய உரை.*	61
7.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.07.2018 அன்று சேலம் மாவட்டம், வனவாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை*	64
8.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.07.2018 அன்று, சேலம், கொங்கணாபுரத்தில் புதிய காவல் நிலையத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை*	75
9.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.07.2018 அன்று சேலத்தில் நடைபெற்ற அரசு பொருட்காட்சியில் ஆற்றிய உரை*	83
10.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.08.2018 அன்று ஆற்றிய சுதந்திர தின உரை*	101
11.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.08.2018 அன்று பெப்சி–எம்.ஜி.ஆர் நூற்றாண்டு படப்பிடிப்புத் தளம் திறப்பு விழாவில் ஆற்றிய உரை*	122

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

12. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
30.08.2018 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோனேரிப்பட்டியில் கட்டப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை 139

13. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
30.08.2018 அன்று, சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை 151

14. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
31.08.2018 அன்று சேலத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை 160

15. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
01.09.2018 அன்று சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டினம் ஊராட்சி ஒன்றியம், அனுப்பூர் ஊராட்சியில் கட்டப்பட்ட அம்மா உடற்பயிற்சி கூடத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை 174

16. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
01.09.2018 அன்று, சேலம் கல்வராயன் மலை, கருமந்துரையில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை 179

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

17. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் எழுதிய "பரீட்சைக்குப் பயமேன்" நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.09.2018 அன்று ஆற்றிய உரை 195

18. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 05.09.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தின முப்பெரும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை........ 205

19. 15ஆவது நிதிக்குழு ஆலோசனைக் கூட்டத்தில் 06.09.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்........ 223

20. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2018 அன்று சென்னை பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு கடந்த வைர விழா ஆண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை........ 231

21. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 10.09.2018 அன்று நடைபெற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கான செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை 2018 வெளியீடு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை........ 246

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
22.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.09.2018 அன்று திராவிட ஆய்வியல் நிறுவன தொடக்க விழாவில் ஆற்றிய உரை	254
23.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.09.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை	266
24.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.09.2018 அன்று காவல் நிறைவாழ்வு பயிற்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை	277
25.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 10.10.2018 அன்று இந்தியா தொழில் கூட்டமைப்பும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்திய Connect 2018 மாநாட்டில் ஆற்றிய உரை	288
26.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.10.2018 அன்று சென்னை, நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அரசின் வேலைவாய்ப்பில் 2 விழுக்காடுவரை உள்ஒதுக்கீடு அறிவித்ததையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விளையாட்டுச் சங்கங்களின் சார்பில் பாராட்டு விழா மற்றும் தேசிய பள்ளிக்குழும விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு காசோலை வழங்கும் விழாவில் ஆற்றிய உரை	300

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
27.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.10.2018 அன்று விபத்தில்லா கோவை மாநகரை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள "உயிர்" என்ற தன்னார்வ அமைப்பின் தொடக்க விழாவில் ஆற்றிய உரை	319
28.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.10.2018 அன்று வன்னியர் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் ஏற்புரை	333
29.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.11.2018 அன்று சென்னையில் நடைபெற்ற நியூஸ் J தொலைக்காட்சி தொடக்க விழாவில் ஆற்றிய உரை	345
30.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.11.2018 அன்று, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, ஆற்றிய உரை	356
31.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 17.11.2018 அன்று சேலம் மாவட்டம், வனவாசியில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை	367

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
32.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 17.11.2018 அன்று, சேலம் மாவட்டம், மேச்சேரியில், மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்ட திறப்பு விழாவில் ஆற்றிய உரை	377
33.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.11.2018 அன்று சேலம் மாவட்டம், இரும்பாலை சந்திப்பில் பாலங்கள் திறப்பு விழாவில் ஆற்றிய உரை	385
34.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 22.11.2018 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற "இந்தியா டுடே" விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் தமிழாக்கம்	394
35.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.11.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு காவல்துறையின் வீரத்தியாகிகள் புத்தகம் வெளியிடுதல் மற்றும் 6,119 சீருடைப் பணியாளர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை	401
36.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 03.12.2018 அன்று சென்னை, பெருங்குடியில் நடைபெற்ற GEM மருத்துவமனை திறப்பு விழாவில் ஆற்றிய உரை	414

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
37.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.12.2018 அன்று சேலம் மாநகரில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு திட்டங்களைத் தொடங்கியும், சீர்மிகு நகரத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை............................	424
38.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.12.2018 அன்று சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், கூடமலை பகுதியில் பொதுமக்கள் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை	436
39.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.12.2018 அன்று சேலம் மாவட்டம், வீரகனூரில் நடைபெற்ற, முப்பெரும் விழாவில் (புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழா) ஆற்றிய உரை........	441
40.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.12.2018 அன்று “சென்னையில் திருவையாறு” 14ஆவது ஆண்டு இசை தொடக்க விழாவில் ஆற்றிய உரை..	456

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

41. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
27.12.2018 அன்று சென்னையில் நடைபெற்ற
இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள் கூட்டமைப்பின்
78ஆம் ஆண்டு தேசிய கருத்தரங்கை
தொடங்கி வைத்து ஆற்றிய உரை.. 465

42. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
04.01.2019 அன்று சென்னையில், தென்னிந்திய
புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள்
சங்கத்தினரால் நடத்தப்பட்ட 42ஆவது சென்னை
புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.............473

43. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
09.01.2019 அன்று சென்னையில் நடைபெற்ற
45ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியைத்
தொடங்கி வைத்து ஆற்றிய உரை.. 481

44. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
10.01.2019 அன்று சென்னையில் நடைபெற்ற
NABARD வங்கியின் மாநில வங்கிக் கடன் குறித்த
கருத்தரங்கில் ஆற்றிய உரை.. 491

45. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்
16.01.2019 அன்று சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில்
நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை.. 500

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

46. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்
20.01.2019 அன்று புதுக்கோட்டைமாவட்டம், விராலிமலையில்
நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாவில் ஆற்றிய உரை 515

47. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
21.01.2019 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் மற்றும்
தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில்
ஆற்றிய உரை 518

48. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
25.01.2019 அன்று சென்னையில், அப்போலோ மருத்துவமனையால்
துவக்கப்பட்டுள்ள அப்போலோ புரோடான் கேன்சர் சென்டர்
திறப்பு விழாவில் ஆற்றிய உரை 530

49. மதுரையில் அகில இந்திய மருத்துவ அறிவியல்
கழகத்தின் (எய்ம்ஸ்) அடிக்கல் நாட்டு விழாவில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
ஆற்றிய உரை – 27.01.2019 537

50. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
28.01.2019 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில்,
விரிவாக்கம் செய்யப்பட்ட செயிண்ட் கோபைன் இந்தியா
தொழிற்சாலையை துவக்கி வைத்து ஆற்றிய உரை.............................. 542

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
51.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 31.01.2019 அன்று சென்னையில் நடைபெற்ற இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை ....*	*550*
52.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 02.02.2019 அன்று சேலம் மாவட்டம், கந்தம்பட்டியில் புதிய சாலை மேம்பாலம் மற்றும் உயர்மட்டப் பாலம் அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை ....*	*562*
53.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 02.02.2019 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை ....*	*574*

❖ ❖ ❖

கற்றல், கற்பித்தலையும் தாண்டி சுயசிந்தனையை வளர்த்தெடுக்கும் கல்விமுறை உருவாக்கப்பட்டுள்ளது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்களின் திறப்பு விழாவில் கலந்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை உரையாற்றிய பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, சுருக்கமாக பேசி அமர்ந்திருக்கின்ற மாவட்ட அமைச்சர்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.பா.பாலகிருஷ்ணரெட்டி அவர்களே!

இந்தக் கலையரங்கம் சிறப்பாக அமைவதற்கு உறுதுணையாக இருந்த முன்னாள் அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்களே!

மரியாதைக்குரிய கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.அசோக்குமார் அவர்களே!

மரியாதைக்குரிய ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி நா.மனோரஞ்சிதம் நாகராஜ் அவர்களே!

மரியாதைக்குரிய பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.வி.ராஜேந்திரன் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.தங்கமணி அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.மைத்ரேயன் அவர்களே!

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.கோவிந்தராஜ் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியில் தலைமையுரை ஆற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே! நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுள்ள கல்வித் துறை அலுவலர்களே! பெற்றோர் ஆசிரியர் கழகத்தினுடைய நிருவாகிகளே, ஆசிரியர்களே, பெற்றோர்களே! மாணவச் செல்வங்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

'புதியதாக ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்தால் குறைந்தது 10 சிறைச்சாலைகளையாவது மூட வேண்டியிருக்கும் என்ற கருத்துக்கேற்ப மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் அதிகமான பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டது.

அதனால்தான் குற்றங்கள் மிகக்குறைவாக உள்ள மாநிலமாகவும், அமைதிப் பூங்காவாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. அந்தப் பெருமைக்கு முழு காரணமாக இருப்பது பள்ளிக்கூடங்களும், சேவை உணர்வுமிக்க ஆசிரிய பெருமக்களும்தான்.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க ஏட்டுக்கல்வி மட்டும் இல்லாமல், சிறந்த திறன் கொண்ட வாழ்க்கைக் கல்வி தான் ஒரு மாணவனை சிறந்த மனிதனாக உருவாக்கும்.

தேர்வுக்காக படிக்காமல் வாழ்வுக்காக படிக்கும் கல்விதான் இந்தக் காலகட்டத்திற்கு மிகவும் தேவை. இன்று அரசுப் பள்ளிகளில் இதன் அடிப்படையில் கல்வி வல்லுநர்களைக் கொண்டு புதிய பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மத்திய, மாநில போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் அளவிற்கு புதிய பாடத்திட்டங்கள் அமைந்திருப்பதாக ஆசிரியர்களும், மாணவர்களும் பாராட்டுகிறார்கள். பேருக்காக பாடத்திட்டங்களை தயாரிக்காமல், மாணவச் செல்வங்களான உங்களின் உயர்வுக்காக புதிய தொழில்நுட்பத்துடன் இந்தப் பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

‘மாற்றம் என்பது மானிடத்தத்துவம்’ என்பது பழமொழி. ‘மாற்றம் என்பது மாணவர் தத்துவம்’ என்பதுதான் புதிய மொழி. ஒரு நாட்டின் மலர்ச்சியும், எழுச்சியும் – ஒவ்வொரு மாணவனிடமிருந்துதான் தொடங்குகிறது.

‘இந்தக் காட்டில் எந்த மூங்கில் புல்லாங்குழல்’ என்ற ஒரு புதுக்கவிதை இருக்கிறது. எதிரே அமர்ந்திருக்கின்ற உங்களில் பலர் எதிர்காலத்தில் அறிவியல் மேதையாகவும், அரசியல் தலைவராகவும், ஆட்சியராகவும், உயர் அலுவலர்களாகவும், நீதிபதிகளாகவும், மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் உயரலாம். வகுப்பறையில் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியரை விட,

கற்றலைத் தூண்டுகின்ற ஆசிரியரை விட, ஒரு மாணவனின் சுய சிந்தனையை தட்டி எழுப்புகின்ற, சுடர்விட்டு மிளிர செய்கின்ற ஆசிரியரைத் தான் இன்றைய சமுதாயம் வரவேற்கிறது. ஆகவே கற்றல், கற்பித்தல் நிகழ்வுகளையும் தாண்டி சுய சிந்தனையை வளர்த்தெடுக்கும் கல்விதான் இன்றைக்கு நமக்குத் தேவை. அத்தகைய கல்வி முறையை உள்ளடக்கித்தான், இன்றைய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் புதிய பாட நூல்களைப் பார்த்து உணர்ந்திருப்பீர்கள்.

இன்றைக்கு அரசுப்பள்ளி, தனியார் பள்ளி வித்தியாசம் காணமுடியாத அளவிற்கு அரசுப்பள்ளிகளின் தரமும், தோற்றமும் மாறியுள்ளது என்றால், அதற்கு வித்திட்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இன்றைக்கு அரசுப்பள்ளிகளின் கற்றல், கற்பித்தல் முறையில் மிகப்பெரிய மாற்றமும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த கல்வித் திட்டங்கள்தான் இந்த மறுமலர்ச்சிக்கு காரணம் என்பதில் நாம் பெருமை கொள்ளலாம்.

மாண்புமிகு அம்மாவின் வழியில், தமிழ்நாடு அரசு அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், பள்ளிக் கல்வித்துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக 27ஆயிரத்து 205 கோடியே 88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதற்கு சான்றாகும்.

மிகத் தெளிவான திட்டமிடலின் காரணமாக 10, 11, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு நடைபெறும் தேதிகளும், இந்த வகுப்புகளுக்குரிய பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப்படும் தேதிகளும்,கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே கொடுக்கப்பட்டதன் காரணமாக மாணவர்களின் மன அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது.

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் மாணவ, மாணவியர்களுக்கான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களில் உள்ள கல்வித்துறை, நமது கல்வித் திட்டங்களில் ஒரு சிலவற்றை தங்களின் மாநிலங்களிலும் செயல்படுத்தி வருகின்றன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா நான்கு இணை சீருடை, மலைப்பிரதேசங்களில் பயிலும் மாணவர்களுக்கு கம்பளிச் சட்டை, விலையில்லா மடிக்கணினிகள், இடைநிற்றலை குறைத்திட சிறப்பு ஊக்கத்தொகை, விலையில்லா புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, காலணி, விலையில்லா வண்ணப் பென்சில், விலையில்லா கிரையான்ஸ், விலையில்லா புவியியல் வரைப்படம், விலையில்லா பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், விலையில்லா மிதிவண்டி, கட்டணமில்லா பேருந்து பயண அட்டை, மதிய உணவு மற்றும் வருவாய் ஈட்டும் தாய், தந்தையை இழந்த மாணவர்களுக்கான நிதி உதவி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களுக்காக, 2018–2019ஆம் ஆண்டில் ஆயிரத்து 967 கோடியே 47 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு.

அரசு பொதுத் தேர்வுகளில் அறிவிக்கும் தரமுறை கைவிடப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை பல மாணாக்கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தைக் குறைத்து மனநிம்மதியை அளித்துள்ளது.

2017–2018ஆம் கல்வியாண்டு முதல் 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2017–2018ஆம் கல்வியாண்டு முதல் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 20 இலட்சம் மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட 2 நிமிடத்தில் குறுஞ்செய்தி மூலம் தேர்வு முடிவுகள் அனுப்பப்பட்டது.

மார்ச் 2017 பொதுத் தேர்வு முதல் மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் தமிழில் அச்சிட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரசுத் தேர்வுகள் துறையில் மாணவர்களின் மதிப்பெண் சான்றிதழ்களைப் பாதுகாக்கவும், உண்மைத்தன்மை அறிவதற்கும், மின் ஆவண காப்பக வசதி முதன் முறையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளச்சிக்கு ஏற்ப 3,090 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 2,939 மேல்நிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்பக் கணினி ஆய்வகங்கள் (Hi-tech Labs) 438 கோடி செலவில் ஏற்படுத்தப்பட உள்ளது.

மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் 412 மையங்களில் V-SAT தொழில்நுட்பத்தில் நடைபெற்று வருகின்றன.

இத்தோடு நில்லாமல், இந்திய கல்வித் துறை வரலாற்றிலேயே இதுவரை நடைபெறாத சாதனையாக, பள்ளிக்கல்வித் துறை, தமிழகமெங்கும் 11 இடங்களில் போட்டித் தேர்வுகளுக்காக, உண்டு உறைவிட பயிற்சி மையங்களை நடத்தி வருகிறது.

தனியார் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளிலும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை ஆயிரத்து 72 கோடியே

70 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதி ஆகியவை அரசுப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2017–2018ஆம் ஆண்டில் 968 கட்டடப் பணிகள் 66 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2013ஆம் ஆண்டு முதல் 2016–2017ஆம் ஆண்டு வரை 227 புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 51 பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

2017–2018ஆம் ஆண்டில் 20 புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

979 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 504 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மாணவர்கள் அதிக கட்டணம் செலுத்தாமல் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி பயிலுவதற்காக அம்மா அவர்கள் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த காலத்தில் 65 கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளை கொடுத்தார்கள். அதற்குப் பின்பு அம்மா வழியிலே செயல்படும் அம்மாவினுடைய அரசு மாணவர்களின் நலன் கருதி, கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளைக் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, பாலிடெக்னிக் கல்லூரி, ஐடி கல்லூரி, மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற ஏராளமான கல்லூரிகளை கொடுத்து, சாதாரண ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்கள் கூட உயர்கல்வி குறைந்த கட்டணத்தில் பயிலக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்த

அரசு அம்மாவினுடைய அரசு. அத்தனை திட்டங்களையும் இந்த மாணவச் செல்வங்களுக்குக் கொடுத்ததன் வாயிலாக 2011இல் அம்மா ஆட்சிப் பொறுப்பேற்றபொழுது, 100க்கு 21 சதவீதம் உயர்கல்வி படித்திருந்த மாணவர்கள், இன்றையதினம் இந்திய அளவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாநிலத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 100க்கு 46.94 சதவீதம் மாணவர்கள் உயர்கல்வி படித்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை தமிழகத்தில் உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற இந்த கல்விப்புரட்சியானது தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களைக்கூட அரசுப்பள்ளிக்கு விரும்பி வந்து சேருகின்ற மாற்றத்தை உருவாக்கும். கல்வியை கசப்பாக, கடுமையாக வழங்கும் முறையை மாற்றி, மாணவர்களுக்கு கல்வியை இனிமையாக, இலகுவாக அளிக்கும் முறையே அதற்கு காரணம். முதலில் கல்வியைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும், பிறகுதான் கற்றல் கற்பித்தல் பணியே தொடங்க வேண்டும் என்று ஆசிரியப் பெருமக்களை இந்த தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

“கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதே எனது கோட்பாடகவும், எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில், இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொடர் முயற்சிகளின் பயனாக, தொடக்க நிலை வகுப்புகளில் 2011–2012ஆம் ஆண்டில் 99.63 நிகர சேர்க்கை விகிதம் 2017–2018இல் 99.86 ஆக உயர்ந்தது. உயர்தொடக்க நிலை வகுப்புகளில் 2011–2012ஆம் ஆண்டில் 98.88ஆக இருந்த நிகர சேர்க்கை விகிதம் 2017–2018இல் 99.22ஆக

உயர்ந்துள்ளது. இடைநிற்றல் விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளது. இந்த சாதனைக்கு முக்கிய காரணமானவர்கள் ஆசிரியர்கள்.

நமது தாய்த் திருநாட்டின் வருங்கால நம்பிக்கையாகத் திகழும் மாணவச் செல்வங்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தி, அவர்தம் எதிர்கால வாழ்க்கையை செம்மைப்படுத்தி, அவர்களை சிறந்த மனிதர்களாக்கும் பெருமை ஆசிரியர் சமுதாயத்தையே சார்ந்ததாகும்.

மன்னனுக்கு அவனது நாட்டில் மட்டும்தான் பெருமை உண்டு. ஆனால் கல்வி உடையவனுக்கு சென்ற இடங்களில் எல்லாம் பெருமை வந்து சேரும். எனவே, மன்னனை விடவும் கற்றவனுக்கே பெருமை உண்டு என்று கல்வியின் சிறப்பைப் பற்றி மூதுரை கூறுகிறது.

இதை கூறுகின்ற போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு நாட்டின் இளவரசிக்கு சுயம்வரம் நடத்த திட்டமிட்டான் அந்த நாட்டின் மன்னன்.

'அழியாத செல்வம் உடையவர்கள் சுயம்வரத்தில் கலந்து கொண்டு, தன்னிடமுள்ள அழியாத செல்வம் எது? என்பதை அவர்கள் இளவரசியிடம் நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபித்த ஆண் மகனுக்கு இளவரசி மணமாலை இடுவார்' என அறிவிக்கப்பட்டது. இந்த செய்தி காட்டுத் தீ போல பரவியது. எல்லா நாட்டு இளவரசர்களும் இளவரசியை மணக்க போட்டி போட்டுக் கொண்டு வந்தனர்.

அவர்களில் ஒரு ராஜகுமாரர், உலகத்திலேயே விலை மதிப்பற்ற ஒரு அரிய வைரக்கல்லை கொண்டு வந்து இளவரசியின் காலடியில் வைத்தார்.

இப்படியாக ராஜகுமாரர்கள் ஒவ்வொருவரும் விலைமதிப்பற்ற பொருள்களையும், தன்னுடைய நாட்டின் பரப்பு, செல்வ வளம் ஆகியவற்றையும் பட்டியலிட்டு காட்டினர்.

அப்பொழுது ஒரு இளைஞன் சுயம்வரம் நடக்கும் மண்டபத்திற்குள் வந்தான். அவன் சாதாரண உடை அணிந்திருந்தான். அவனை முதலில் உள்ளே அனுமதிக்க மறுத்தனர். ஆனால், அந்த நாட்டு மன்னர் அவனை உள்ளே அனுமதிக்கச் சொன்னார். அந்த மன்னர் அவனிடம், "உன்னிடம் விலைமதிப்பில்லா செல்வம் என்ன உள்ளது?" என்று கேட்டார். உடனே அந்த இளைஞன் ஓர் ஓலைச் சுவடியை மன்னனிடம் அளித்தான். உடனே மன்னர், அதை வாங்கி இளவரசியிடம் கொடுத்தார். இளவரசி அதைப் பிரித்துப் பார்த்தாள். அதில், திருக்குறள் அனைத்தும் எழுதப்பட்டிருந்தது. உடனே, இளவரசி அந்த இளைஞனிடம்,

"விலை மதிப்பற்ற செல்வத்தை நான் கேட்டால் நீ திருக்குறள் ஓலைச் சுவடிகளைக் கொண்டு வந்திருக்கிறாயே?" என்றாள்.

'திருக்குறள் வாழ்வியலைக் கற்றுத் தரும் கருவூலம். எல்லா செல்வத்திலும் கல்விதானே அழியாத செல்வம் என்பதால் திருக்குறளும் விலைமதிப்பற்ற செல்வம்தான்' என்றான் அந்த இளைஞன்.

உடனே இளவரசி, 'அது எப்படி அழியாத செல்வமாகும்?' என்று வினவினாள் இளவரசி. 'நீங்கள் யாருக்கு வேண்டுமானாலும் செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கலாம். அள்ள அள்ள அந்த செல்வம் குறைந்து விடும். ஆனால், அள்ள அள்ள குறையாத செல்வம் கல்வி ஒன்று தான்' என்றான் அந்த இளைஞன். இதைக் கேட்டு மகிழ்ந்த இளவரசி "நீங்கள் போட்டியில் வெற்றி பெற்றுவிட்டீர்கள், நீங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள்.

‘அள்ள அள்ள குறையாத கல்விச் செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் ஒரு ஆசிரியன் நான்’ என்றான் அந்த இளைஞன். அந்த ஆசிரியருக்கும் இளவரசிக்கும் திருமணம் நடைபெற்றது. அந்த இருவரும் பல ஆண்டு காலம் நாட்டை ஆண்டு, ஊர்கள்தோறும் பள்ளிகளைத் திறந்து மக்களின் கல்விக் கண்களைத் திறந்தனர்.

ஆகவே, கல்வி என்பது நெருப்பால் வேகாது; கள்வர்களால் கொள்ளையடிக்க முடியாது; கொடுக்க கொடுக்கப் பெருகுமே தவிர குறையாது.

எனவே, மாணவர்களே! உங்கள் வாழ்வின் ஆக்கமும் ஊக்கமும் நீங்கள் பெறும் கல்வியிலேயே இருக்கிறது.

ஆகவே, நீங்கள் பெறும் கல்வியால் நீங்கள் மேன்மையுறுவது மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்தையும் மேன்மையுறச் செய்ய உழைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

ஆசிரியர்களின் கற்பித்தல் தேவைகளையும், மாணவர்களின் கற்றல் தேவைகளையும் நிறைவு செய்துக் கொடுக்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு இருக்கிறது. படிப்பதும், உயர்வதும், பெற்றோரைக் காப்பாற்றுவதும், நாட்டுக்கு நல்ல பெயர் ஈட்டித்தருவதும் உங்கள் பணி. உங்களை உருவாக்குவது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சிப்பணி என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவரின் புகழ்!

தொடர்க புரட்சித்தலைவி அம்மாவின் பொற்கால ஆட்சி!

ஆகவே, இன்றைக்கு ஒரு பொன்னான நாள், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த பொற்காலத்தில் தான் சிறு வயதிலே பசியால் வாடிய துன்பத்தை தமிழகத்திலே பிறந்த எந்த

குழந்தையும் பசியால் வாடக்கூடாது என்பதற்காக சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த நாள், இந்த இனிய நாள். இந்த இனிய நன்னாளிலே கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறை திறப்பு விழா. இந்த இனிய நிகழ்ச்சியிலே பல மணிநேரம் காத்திருந்து, பொறுமை காத்த அத்தனை மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை, 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை, சீருடை மாற்றம் கொண்டு வரப்படும், என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்தில் தெரிவித்து, இப்பொழுது தனியார் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு இணையாக நம்முடைய மாணவச் செல்வங்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்த சீருடை மாற்றத்தை கொண்டு வந்திருக்கின்றோம். அதேபோல், 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை, 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை, அணிகின்ற அந்த மாணவ, மாணவியர்களுடைய சீருடை அனைவரும் பாராட்டுதலுக்குரிய சீருடையாக இருக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, விடை பெறுகிறேன்.

நன்றி ! வணக்கம் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
01.07.2018 அன்று கிருஷ்ணகிரி, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளிக் கலையரங்கம் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்து வைத்து ஆற்றிய உரை

தமிழ்நாட்டில் கல்விப் புரட்சிக்கு வித்திட்டார் பெருந்தலைவர் காமராஜர்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மறைந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 116வது பிறந்த நாள் விழா, கல்வித் திருவிழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வரவேற்புரை வழங்கிய நாடார் மஹாஜன சங்கத்தினுடைய பொதுச் செயலாளர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.கரிக்கோல் ராஜ் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை உரையாற்றிய இந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.கே.டி.ராஜேந்திர பாலாஜி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே,

வாழ்நாள் சாதனை விருதினை பெற்று, இன்றைக்கு தன் வாழ்நாளிலே பல்வேறு சாதனைகளை படைத்து சிறப்பான உரையாற்றி அமர்ந்திருக்கின்ற முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மரியாதைக்குரிய பி.எச்.பாண்டியன் அவர்களே!

நீண்ட நாட்களாக அரசியலிலே ஈடுபட்டு, மூத்த அரசியல் சாணக்கியராக விளங்கிய காந்தி பேரவையினுடைய நிறுவனர் மரியாதைக்குரிய பெரியவர் டாக்டர் குமரிஆனந்தன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் சகோதரி ராஜலெட்சுமி அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் சகோதரர் ம.ஃபா.பாண்டியராஜன் அவர்களே!

கழகத்தினுடைய அமைப்புச் செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் மரியாதைக்குரிய வழக்கறிஞர் சகோதரர் மனோஜ் பாண்டியன் அவர்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் பிரபாகரன் அவர்களே, விஜயகுமார் அவர்களே,

தூத்துக்குடி மாவட்ட கழகத்தினுடைய செயலாளர் முன்னாள் அமைச்சர் சகோதரர் சி.த.செல்லப்பாண்டியன் அவர்களே,

விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் ராதாகிருணன் அவர்களே,

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் ஜெயசிங் தியாகராஜ் நட்டர்ஜி அவர்களே,

முன்னாள் அமைச்சர் சட்டப்பேரவை உறுப்பினர் அண்ணன் எஸ்.பி.சண்முகநாதன் அவர்களே,

சட்டப்பேரவை உறுப்பினர் திரு.எஸ்.செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்களே,

சட்டப்பேரவை உறுப்பினர், வழக்கறிஞர் திரு.ஐ.எஸ்.இன்பதுரை அவர்களே,

ஸ்ரீவில்லிப்புத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி எம்.சந்திரபிரபா முத்தையா அவர்களே,

முன்னாள் தோல் வாரியத் தலைவர் சகோதரர் விநாயக மூர்த்தி அவர்களே மற்றும் மாவட்ட வளர்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு உறுப்பினர் சகோதரர் எஸ்.எஸ்.கதிரவன் அவர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி, முன்னாள் மாநிலங்களை உறுப்பினர் எனது அருமைச் சகோதரர் மரியாதைக்குரிய என்.தளவாய் சுந்தரம் அவர்களே,

இந்த மேடையில் வீற்றிருக்கின்ற நாடார் மஹாஜன சங்கத்தினுடைய நிர்வாகிகளே, பொறுப்பாளர்களே,

வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே! நாடார் சமுதாயத்தைச் சார்ந்த பெரியோர்களே! ஊடக மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களே! மற்றும் பல்வேறு பொறுப்புகளை வகிக்கின்ற நிர்வாகிகளே, அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

115 ஆண்டுகளுக்கு முன்பு, இதே நாளில் திரு. குமாரசாமி – சிவகாமி அம்மையார் தம்பதிக்கு மகனாக பிறந்த ஒரு சிறுவன், தன்னுடைய தந்தையின் மறைவுக்குப் பிறகு பள்ளிக்கு செல்ல முடியாமல், தாய்மாமன் கருப்பையா நாடாரின் துணிக்கடைக்குப் போகவேண்டிய சூழ்நிலையிலும், தவறாது ஞானம்பிள்ளையின் பொடிக்கடைக்கு பத்திரிகைகளை படிப்பதற்காகவே போவான்.

அங்கு வரும் பத்திரிகைகளை ஆர்வத்துடன் படிப்பான், அரசியல் பற்றி மற்றவர்களுடன் விவாதிப்பான்.

இந்த சிறுவனுக்கு அரசியல் அக்கறை வேண்டாமென்று அவரது பாட்டி கூறுவார்.

அதற்கு அந்த மாணவன் "நான் ஒன்று சொல்லுகிறேன் பாட்டி. நம்ம எண்ணெய் கடை பெரியசாமி அண்ணாச்சி வீட்டில் இருக்கிற நாய் மிகவும் அழகாக இருக்கிறது.

ஆனால், அந்த நாய் நம் வீட்டிற்குள் நுழைந்தால் முதலில் விரட்டுபவர்களே நீங்கள்தான் பாட்டி, அதேமாதிரிதான் வெள்ளைக்காரன்.

நம்ம நாட்டிலே அவனுக்கு என்ன வேலை? அதிகாரம் செய்கிறான். அதைக் கண்டிக்காமல் எப்படி விடுவது பாட்டி?" என்றான் அந்த சிறுவன். அச்சிறுவன் தான் பிற்காலத்தில் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்த பெருந்தலைவர் காமராசர்.

மகாத்மா காந்தியின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்த சுதந்திரப் போராட்டம் பற்றி பத்திரிகையின் மூலமும், விருதுநகரில் உள்ள 'பம்பாய் அண்ணாச்சி' என்றழைக்கப்பட்ட திரு.கோவிந்த நாடாரின் மூலமும் தெரிந்துகொண்டார்.

இதனால் நாட்டின் மீதும், தேசியத் தலைவர்கள் மீதும், பற்றும் பக்தியும் ஏற்பட்டது. இதன் மூலம் மகாத்மா காந்திஜியின் மானசீக தொண்டனாகவே மாறினார். இதன் விளைவாக தனது 16ஆவது வயதில் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தபின், தீரர் சத்தியமூர்த்தி அவர்களை தனது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார்.

1930ஆம் ஆண்டு நடைபெற்ற உப்புசத்தியாகிரக போராட்டத்தில் பங்கு கொண்டு சிறை சென்றார்.

பின்னர் “வெள்ளையனே வெளியேறு போராட்டம்” போன்ற பல்வேறு சுதந்திரப் போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றார். அவர் தனது இளமைக் காலத்தில் 9 ஆண்டுகளை சிறையிலேயே கழித்து, தனது வாழ்வை நாட்டுக்காகவே அர்ப்பணித்தார். இவர் 1936ஆம் ஆண்டு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலாளர் ஆனார்.

பின்னர் 1940ஆம் ஆண்டு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1954ஆம் ஆண்டு வரை அந்த பொறுப்பினை வகித்தார். 1940ஆம் ஆண்டு விருதுநகர் நகராட்சிக்கு நடந்த தேர்தலில், காமராசர் சிறையில் இருந்து கொண்டே வெற்றி பெற்றார். பின்னர் 1941ஆம் ஆண்டு அந்த நகராட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்த பின் நகராட்சித் தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டபின்னும் சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபடுவதில் அவருடைய நாட்டம் இருந்ததால், அந்தப் பதவியை ராஜினாமா செய்தார்.

இவர் முதன்முதலில் 1937ஆம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் மீண்டும் 1946ஆம் ஆண்டில் சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன் பின்னர் 1952ஆம் ஆண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் நாள் தமிழ்புத்தாண்டில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றார்.

1954ஆம் ஆண்டு முதலமைச்சராக பதவியேற்ற சமயம் அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். அவரது நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட தொகுதியில் உள்ள யாரையும் பதவி விலகச் சொல்லாமல், அப்போது காலியாக இருந்த குடியாத்தம் சட்டமன்ற தொகுதியிலிருந்து போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர் 1957 மற்றும் 1962ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தல்களில், சாத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். காமராசர் அவர்கள் 1954 முதல் 1963 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக 9 ஆண்டுகள் பணியாற்றினார்.

பின்னர், அக்டோபர் 1963 முதல் 1967ஆம் ஆண்டு வரை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக பொறுப்பு வகித்தார்.

1969 மற்றும் 1971ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் நாகர்கோவில் நாடாளுமன்ற தொகுதியின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சாதாரணத் தொண்டனாக பொது வாழ்வைத் தொடங்கி, நாட்டுப்பணியையே தனது உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்து, பின்னர் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியலில் ஒரு தனிப்பெரும் சக்தியாக திகழ்ந்தவர் கர்மவீரர் காமராசர்.

இந்தியா முழுமையும் பெருந்தலைவராக போற்றப்பட்ட கர்ம வீரர் காமராசர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்த்தார்.

அத்தகைய பெருமைக்குரிய பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டு உங்களையெல்லாம்

சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். சிரஞ்சீவியாக வரலாற்றில் வாழ்பவர்கள் சிலர்; அவர்களில் வரலாறாகவே மாறியவர்கள் ஒருசிலர்தான். அந்த ஒரு சிலரின் வரிசையில் முன்னிலையில் இருப்பவர் கர்மவீரர் காமராசர் அவர்கள்.

'வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்களின் மனதில் நிற்பவர் யார் ?'

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் கேள்விக்கு பதிலாக இருப்பவர்களில் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதன்மையானவர்.

மக்களாட்சியில் ஒரு தலைவர், தான் ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்காக உழைக்க வேண்டும் – தியாகம் புரியவேண்டும். கட்சியில், தலைமை ஏற்கும்போதும், ஆட்சியில், தலைமை தாங்கும்போதும், கறைபடாத பணி செய்யவேண்டும் என்பதற்கு பெருந்தலைவர் காமராசர் எடுத்துக்காட்டாய், இலக்கணமாய் திகழ்ந்தவர்.

எளிய வாழ்க்கை, நேர்மை, அன்பான அணுகுமுறை, எதனையும் சுருக்கமாக சொல்லும் இயல்பு, எதையும் சாதிக்கும் மன உறுதி, இவைகள்தான் பெருந்தலைவர் காமராஜரின் தனிச் சிறப்புகள். ஒரு நாட்டின் அடிப்படைத் தேவைகளான கல்வி, விவசாயம், தொழில் வளம், நீர் பாசனம் ஆகிய துறைகளில் கர்மவீரர் காமராசர்அதிக கவனம் செலுத்தினார்.

சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு என்ன செய்யலாம் என்று சிந்தித்து, அதற்குக் 'கல்வி ஒன்றே வழி' என்ற உண்மையை உணர்ந்து தம் ஆட்சியில் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தவர் பெருந்தலைவர் காமராசர்.

படிக்க வசதியில்லாத ஏழைகளுக்காக ‘இலவசக் கல்வித் திட்டத்தை’ நடைமுறைப்படுத்தினார். கல்வி வளர்ச்சி ஒன்றே, சமுதாயத்தை மாற்றும் என்பது அவரது நம்பிக்கை.

“தனி மனிதனோ, சமூகமோ உயர வேண்டுமானால், அதனைக் கல்வியினால் மட்டுமே செய்ய முடியும்” என்று தந்தை பெரியார் கூறினார்.

கல்வித்துறையில் ஒரு நூற்றாண்டில் ஏற்பட வேண்டிய வளர்ச்சியை, முதலமைச்சர் காமராசர் ஒன்பது ஆண்டுகளில் சாதித்துக் காட்டினார்.

தனது ஆட்சிக் காலத்தில் பள்ளிகளின் எண்ணிக்கையை பன்மடங்காக உயர்த்தி, தமிழ்நாட்டில் கல்விப் புரட்சிக்கு வித்திட்டவர் பெருந்தலைவர் காமராசர்.

கிராமங்களில் உள்ள குழந்தைகள் கல்வி பயில வழி வகுத்தவர் பெருந்தலைவர் காமராசர்.

இன்று, தமிழ்நாட்டில் 80 சதவீதத்திற்கு மேல் கல்வியறிவு பெற்றவர் இருக்கின்றனர் என்றால், அதற்கு அடித்தளம் இட்டவர் பெருந்தலைவர் காமராசர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

விருதுநகரில் இன்று சிறப்புடன் செயல்படும் ஷத்திரியர் வித்தியாசாலா மேல்நிலைப்பள்ளி தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்கிய கல்வி நிலையமாகும்.

இப்பள்ளி 1888ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. விருதுநகரில் உள்ள நாடார் சமுதாயத்தினர் தங்களின் சமுதாய நிதியிலிருந்து இந்தப் பள்ளிக்கூடத்தைத் துவக்கினர். இந்தப் பள்ளியில், சாதி, சமய வேறுபாடு இன்றி, எல்லா மாணவர்களையும் சேர்த்தனர்.

எல்லாப் பிள்ளைகளும் ஒழுங்காக பள்ளிக்கு வரவேண்டும்; பசி, பட்டினி, காரணமாக அவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இலவச மதிய உணவு கொடுத்தனர்.

இந்தப்பள்ளிக்கு உதவுவதற்காக, விருதுநகரில் உள்ள ஒவ்வொரு வீட்டாரும் தினமும் ஒரு பிடி அரிசிகொடுத்து உதவினர். இதனைப் பெற நாடார் உறவின் முறை சார்பில், சிலர் தினமும் எல்லா வீதிகளுக்கும் நடந்து சென்று ஒவ்வொரு வீட்டிலும் பிடி அரிசியைப் பெற்று வந்தனர். இதன் காரணமாக இப்பள்ளி ‘பிடியரிசி பள்ளி’ என்று அழைக்கப்பட்டது.

தினமும் பிடி அரிசி வாங்குவது சிரமமான பணியாக இருந்ததால், ஒவ்வொரு வீட்டாரும், தங்களின் வீட்டில் தனியாக ஒரு பானையில் ஒவ்வொரு நாளும் பிடியரிசியைப் போட்டு வந்தனர். பிடி அரிசியை வாரத்திற்கு ஒரு முறை மொத்தமாகச் சேர்த்து, எல்லா வீட்டிலும் பெற்றனர். அரிசி, மூட்டைக் கணக்கில் சேர்ந்தது.

காமராசர் முதல்வரானதும், மதிய உணவுத் திட்டத்தைத் தீவிரப் படுத்தியதற்கு அடிப்படைக் காரணமாக விளங்கியது அவர் படித்த ‘பிடியரிசி’ பள்ளிக்கூடம் தான்.

கிராமப்புற மாணவ, மாணவிகள் கல்வியறிவு பெற, வறுமை பெரிய தடையாக இருப்பதை தமது அனுபவம் மூலம் பெருந்தலைவர் காமராசர் உணர்ந்தார். மாணவர்களுக்குப் பள்ளியிலேயே, ஒருவேளை உணவு அளித்தால், அதிகமான பிள்ளைகள் கல்வி கற்க முன்வருவார்கள்.

அதன்மூலம், படிப்பறிவு பெறுவோரின் எண்ணிக்கையை உயர்த்தலாம். அது சமுதாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்ற எண்ணத்தில், உதித்ததுதான் மதிய உணவுத் திட்டம்.

ஒருமுறை பெருந்தலைவர் காமராசர் அவர்களும், அப்போதைய பள்ளிக்கல்வி இயக்குநர் திரு.நெ.து.சுந்தரவடிவேலு அவர்களும், ஒரு நிகழ்ச்சிக்கு காரில் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த நேரம் ரயில்வே கேட் மூடி விட்டதால், கார் நின்றது.

அப்போது பெருந்தலைவர் காமராஜரின் கண்களுக்கு அருகில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஏழை

சிறுவர்கள் தெரியவே, அவர்களை அழைத்து “இப்போது பள்ளிக்கூட நேரமாச்சே. ஏன் பள்ளிக்கூடம் செல்லாமல் ஆடுகள் மேய்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?” என பெருந்தலைவர் கேட்டார்.

காமராசர் யார் என்று தெரியாத அந்த சிறுவர்கள் “நாங்கள் பள்ளிக்கூடம் போனால் யார் சாமி சாப்பாடு போடறது?” என்று கேட்டார்கள்.

“சாப்பாடு போட்டால் பள்ளிக்கூடம் போவீர்களா?” என்று காமராசர் கேட்டார்.

சிறுவர்கள் ஆமாம் என்று தலையாட்டினார்கள். அருகிலிருந்த திரு. சுந்தரவடிவேலுவிடம், “தமிழ்நாடு முழுவதும் மதிய உணவு போட ஏற்பாடு செய்யுங்கள், அதற்கு என்ன செலவானாலும் சமாளித்துக்கொள்ளலாம்” என்றார்.

அப்படி உருவானதுதான் மதிய உணவுத்திட்டம். இந்த திட்டத்தைப் பற்றி எட்டயபுரத்தில் அவர் பேசுகையில், “எதற்காக சுதந்திரம் வாங்கினோம், எல்லோரும் எப்படி வாழணும்? ஆடு, மாடுகள் மாதிரி உயிரோடு இருந்தால் போதுமா? மனிதர்களாக வாழணும், அதற்கு படிப்பு வேணும், பட்டினியாக இருந்தால் படிப்பு வருமா? வராது. ஏழைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடங்களில் சாப்பாடு போடணும். அப்ப தான் படிப்பு ஏறும்.

இதுவே முதல் வேலை. முக்கியமான வேலையும் கூட. இதை நான் ரொம்ப முக்கியமாகக் கருதுகிறேன். அதனால் மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, இதே வேலையாக ஊர், ஊராக பிச்சையெடுக்கவும் சித்தமாக இருக்கிறேன்” என்று உருக்கமாகப் பேசினார் கர்மவீரர் காமராசர் அவர்கள்.

எல்லா ஏழைப்பிள்ளைகளும் இலவச கல்வியை பெற வேண்டும். அவர்கள் முன்னேற வேண்டும் என்பதில் பெருந்தலைவர் அவர்கள் காட்டிய அக்கறையை இந்த நிகழ்வு புலப்படுத்துகிறது.

பசியை மட்டும் விரட்டினால் போதாது, அவர்கள் சத்தானவர்களாகவும் வளர வேண்டும் என்ற எண்ணத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தினை, சத்துணவுத் திட்டமாக மாற்றினார்கள்.

வெறும் சத்துணவுடன் நில்லாமல், இளைய தலைமுறையினருக்கு அனைத்து வகையான சத்துகளும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தினமும் சூடான கலவை சாதத்துடன் பயறு வகைகள் மற்றும் உருளைக் கிழங்கு ஆகியவற்றையும் வழங்கி பெருந்தலைவரின் திட்டத்தை மேலும் மெருகேற்றினார்கள்.

இவ்வாறு பெருந்தலைவர் கொண்டு வந்த திட்டத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பலவகைகளிலும் மெருகேற்றி செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த, மாண்புமிகு அம்மாவின் அரசு, அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது.

அதனை நிறைவேற்றும் வகையில், 2018–2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், எத்தனையோ துறைகள் தமிழகத்தில் இருந்தாலும், அனைத்துத் துறைகளைக்காட்டிலும் பள்ளிக் கல்வித் துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக 27ஆயிரத்து 205 கோடியே 88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதற்கு சான்றாகும்.

மிகத் தெளிவான திட்டமிடலின் காரணமாக 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு நடைபெறும் தேதிகளும், இந்த வகுப்புகளுக்குரிய பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப்படும் தேதிகளும் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே கொடுக்கப்பட்டதன் காரணமாக மாணவர்களின் மன அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது.

எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் மாணவ, மாணவியர்களுக்கான பல திட்டங்கள் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பள்ளி மாணவர்களுக்கு படிப்பிற்கு தேவையான விலையில்லா சீருடை, காலணி, இடைநிற்றலை குறைத்திட சிறப்பு ஊக்கத்தொகை, விலையில்லா மடிக்கணினிகள், விலையில்லா மிதிவண்டி, கட்டணமில்லா பேருந்து பயண அட்டை என அனைத்தும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் அரசால் தொடர்ந்து மாணவர் சமுதாயத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களுக்காக 2018–2019ஆம் ஆண்டில் ஆயிரத்து 967 கோடியே 47 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா வழியில் செயல்படும் அரசால் பொதுத் தேர்வுகளில் அறிவிக்கும் தரமுறை கைவிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மாணாக்கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் மன அழுத்தத்தைக் குறைத்து மனநிம்மதியை அளித்துள்ளது.

2017–2018ஆம் கல்வியாண்டு முதல் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிய 20 இலட்சம் மாணவர்களுக்கு அவர்களுடைய கைபேசி மூலமாக தேர்வு முடிவுகள் வெளியான 2 நிமிடத்தில் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்பட்டு சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு.

மதிப்பெண் சான்றிதழ்களில் மாணவர்களின் பெயர் தமிழில் அச்சிட்டு வழங்கும் முறை மார்ச் 2017 பொதுத் தேர்வு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறு தமிழக கல்வித்துறையில் செயல்படுத்தப்படும் சிறந்த திட்டங்களில் ஒரு சிலவற்றை மற்ற மாநிலங்களில் உள்ள கல்வித்

துறை, தங்கள் மாநிலங்களிலும் செயல்படுத்தி வருகின்றன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்மவீரர் காமராசர் அவர்கள் பள்ளிக்கல்விக்கு எவ்வாறு ஊக்கம் அளித்தார்களோ, அது போல் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உயர் கல்வித்துறைக்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறது.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றபோது, உயர்கல்வி படித்திருந்த மாணவர்களின் சதவீதம் 21. இன்றைய தினம் தமிழகத்தில் 46.94 சதவித மாணவர்கள் உயர்கல்வி படிக்கின்றனர். இதன் காரணமாக இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்கள் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் கண்ட கனவு அம்மாவினுடைய அரசால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இதற்கு காரணம், மாண்புமிகு அம்மா அவர்கள் உயர் கல்விக்கு அளித்த ஊக்கமும், 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியதும் தான்.

அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசு கடந்த ஆண்டு மேலும், 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியுள்ளது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியில் இருக்கின்ற ஏழை மாணவ, மாணவியரும் குறைந்த கட்டணத்தில் கல்வியறிவு பெறுவதற்காக, உயர்கல்வி படிப்பதற்காக, இன்றைக்கு 2011–லிருந்து இன்று வரைக்கும் ஆகமொத்தம் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு.

1961ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பொது நூலகச் சட்டத்தை இயற்றி, 454 கிளை நூலகங்களையும், எல்லா மாவட்டங்களிலும் மாவட்ட மைய நூலகங்களையும் ஏற்படுத்தினார்.

இப்படிப்பட்ட மக்கள் திட்டங்களால் தான், ‘காமராசர் ஆட்சி’, என்னும் சொற்றொடர் இந்திய அரசியல் சொல்லகராதியில் இடம்பெற்றன. விவசாய நிலங்களுக்கு பாசன வசதி அளித்து உணவு உற்பத்தியைப் பெருக்க ஆறுகளின் குறுக்கே பெருந்தலைவர் காமராசர் காலத்தில் பல்வேறு அணைகளை கட்டப்பட்டது.

பரம்பிக்குளம் – ஆழியார் திட்டம், கீழ்பவானி – நீர்த்தேக்கத் திட்டம், அமராவதி – அணைக்கட்டுத்திட்டம், சாத்தனூர் – நீர்த்தேக்கத் திட்டம், வைகை – அணைக்கட்டுத் திட்டம், மணிமுத்தாறு – உயர்மட்ட கால்வாய் திட்டம் இப்படி பல அணைகளை கட்டி விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள்.

தற்காலம் அறிவியல் காலம். இதற்கு அடிப்படை தேவை மின்சக்திதான். இந்த மின்சக்தியை பெருக்காமல் தொழில் வளர்ச்சி காண முடியாது என்பதை நன்கு அறிந்து பல மின் திட்டங்களை பெருந்தலைவர் செயல்படுத்தினார்.

அவருடைய ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்ட மின்திட்டங்கள்: பெரியார் – மின்சக்தி திட்டம், குந்தா – மின்சக்தி திட்டம், நெய்வேலி – மின்சக்தி திட்டம், கும்பார் அமராவதி – மின்திட்டம், மேட்டூர் கீழ்நிலை நீர்செல்வழி – மின்திட்டம் ஆகிய மின் திட்டங்கள் பெருந்தலைவர் காமராசர் அவர்களால் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் என்பதை பெருமையயோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், மாண்புமிகு அம்மா அவர்கள் 2011இல் தமிழ்நாட்டின் முதல்வராக பதவியேற்ற போது ஒரு நாளைக்கு 10 மணி நேரம், 15 மணி நேரம் மின்தடை. அம்மா அவர்கள் சொன்னார்கள் இன்னும்

3 ஆண்டுகளில் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றுவேன் என்று சூளுரைத்தார்கள், சொன்னதை நிறைவேற்றினார்கள். அம்மா அவர்கள் வழியில் இன்றும் ஆளுகின்ற நம்முடைய அரசால் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக திகழ்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம், கல்விச்சாலைகள் வைப்போம்"

என்ற மகாகவி பாரதியாரின் வாக்கினை மெய்ப்பிக்கும் வகையில் ஆட்சி செய்தவர் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர்அவர்கள். அவருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் தொழில் புரட்சி ஏற்பட்டது.

பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி தொழிற்சாலை, உதகமண்டலத்தில் போட்டோ பிலிம் தொழிற்சாலை, சென்னையில் – இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை, திருச்சியில் பாய்லர் தொழிற்சாலை, ஆவடியில் டாங்க் தொழிற்சாலை, சென்னை கிண்டி, மதுரை, விருதுநகர், திருச்சி போன்ற ஒன்பது நகரங்களில் தொழிற்பேட்டைகள், கூட்டுறவுத்துறை சார்பில் நூற்பாலைகள் ஆகிய அனைத்தும், பெருந்தலைவர் காமராசர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு கிடைத்த அரிய திட்டங்களாகும்.

அதேபோல் மாண்புமிகு அம்மா அவர்கள் முதலீட்டாளார்களை ஈர்க்கும் வகையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினை வெற்றிகரமாக நடத்தினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் வரும் **2019**இல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு அம்மா அரசால் மீண்டும் நடத்தப்படவுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.தாய் நாட்டின் மீது இருந்த அதே பற்று, தாய்மொழியின் மீதும் பெருந்தலைவருக்கு இருந்தது.

சென்னை மாகாணத்தின் **1957–1958**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை தமிழிலேயே சமர்ப்பிக்கப்பட்டது பெருந்தலைவர்

காமராசர் ஆட்சியில்தான். 1956இல் தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் கொண்டு வந்ததும் பெருந்தலைவர் காமராசர் தான்.

பெருந்தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாடு பாடநூல் வெளியீட்டுக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு படிப்பவர்களுக்கு மாத ஊக்கத் தொகையும், அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையும் வழங்கப்பட்டன. பெருந்தலைவர் ஆட்சிக் காலத்தில்தான் கலைச்சொல் அகராதி வெளியிடப்பட்டது.

தன்னை காந்தியடிகளின் தொண்டனாக பொது வாழ்க்கையில் இணைத்துக் கொண்டு சிறுவயதிலேயே ஒரு நாடு எப்படி வளர வேண்டும் என்று தீர்க்கமாக மனத்தில் இறுத்திக் கொண்டவர் காமராசர்.

நாட்டைப்பற்றி தன் மனதில் தேக்கி வைத்திருந்த எண்ணங்களை எல்லாம் பின்னாளில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்புக்கு வந்த பிறகு படிப்படியாக நிறைவேற்றினார்.

தலைவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியதோடு மட்டுமல்லாமல், மக்களுக்கும், மாணவர்களுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்தவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள்.

இந்திய அரசியல் வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தலைவர் காமராசர். பெருந்தலைவர், கருப்புகாந்தி, கர்மவீரர், பச்சைத்தமிழன், படிக்காதமேதை, கிங்மேக்கர், ஏழைப்பங்காளன் எனப் பலவாறு போற்றப்படுகிறவர் காமராசர் அவர்கள். மகாத்மா காந்தியைத் தம் லட்சியத் தலைவராக ஏற்றுக் கொண்ட பெருந்தலைவர் காமராஜரும் 'நலிந்த மக்களின் உயர்வே என் கொள்கை' என்றும் வாழ்ந்தார்.

பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் 1964 மே 27ஆம் நாளன்று திடீரென காலமானார்.

இந்தச் செய்தி காமராஜருக்கும், நாட்டுக்கும் ஒரு பேரிடியாக அமைந்தது. நேருவுக்குப் பிறகு பிரதமர் யார்? என்ற கேள்வி உலகளவில் எழுந்தது. இந்தியாவின் எதிர்காலமே ஒரு கேள்விக் குறியானது. இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு கர்மவீரர் காமராசர் கையில் ஒப்படைக்கப்பட்டது.

'பிரதமர் தேர்வு போட்டியில்லாது இருக்க வேண்டும், தேர்ந்தெடுக்கப்படுபவர் பிரதமர் பதவிக்கு ஏற்றவராகவும் இருக்க வேண்டும்' என்று காமராசர் சிந்தித்தார். தமது அரசியல் சாதுரியத்தால், சமரச வேட்பாளராக திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்களையும், அவருக்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி அவர்களையும் தேர்வு செய்து, பாரதப் பிரதமர் ஆக்கினார். இதனைக் கண்டு உலகமே வியப்பில் ஆழ்ந்தது. அரசியல் அறிவியல் தத்துவத்தில் "அரசர்களை உருவாக்குபவரே, அரசரை விட உயர்ந்தவர்" என அறிஞர்கள் கூறுவார்கள்.

இந்திய நாட்டையும் ஜனநாயகத்தையும் வழி நடத்த, நெருக்கடியான நேரங்களில் இரண்டு முறை இந்தியப் பிரதமர்களை கர்மவீரர் காமராசர் தேர்ந்தெடுத்தது, வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வுகளாகும்.

உலகில் பிறப்பால் சிலர் பெருமை பெற்றனர்; சிலர் தமது உழைப்பால், பெருமை பெற்றனர்; சிலர் மீதோ பெருமை திணிக்கப்பட்டது, பெருந்தலைவர் காமராசர், உழைப்பால் மட்டுமே பெருமையை எட்டிப் பிடித்தவர். எனவே, இந்திய அரசியல் வரலாற்றில் காமராஜருக்குத் தனித் தன்மையோடு கூடிய ஒரு முக்கிய இடம் உண்டு என்பதில் தமிழர்களாகிய நாம் பெருமை அடையலாம்.

குடும்பப் பின்னணி, பணபலம், உயர் கல்வி ஆகிய பின்புலம் ஏதுமின்றி, கர்மவீரர் காமராசர், ஒரு சாதாரண தொண்டனாகப் பொது வாழ்க்கையைத் தொடங்கி, ஒரு பெருந்தலைவராக வளர்ந்தது சரித்திர சாதனையாகும்.

தலைவர்களுக்கு நல்ல தொண்டராகவும், தொண்டர்களுக்கு நல்ல தலைவராகவும் பெருந்தலைவர் காமராசர் வாழ்ந்தார். மனிதர்களை எடைபோடுவது, சமயோசித ஆற்றல், பொறுமை, நிதானம், தொண்டர்களிடம் நெருக்கம் ஆகியன கர்மவீரர் காமராஜரிடம் காணப்பட்ட சீரிய பண்புகள். பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, அனைவரின் கருத்துக்களையும் கேட்டு முடிவெடுக்கும் சிறந்த தலைமைப் பண்பு அவரது வெற்றியின் ரகசியம்.

1967இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டது; காங்கிரஸ் தோல்வி அடைந்தது. அப்பொழுது தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. பெருந்தலைவர் காமராசர் அரசியல் நாகரிகத்தோடு “6 மாதகாலம் தி.மு.க. ஆட்சியை யாரும் விமர்சிக்கக் கூடாது” என்று காங்கிரஸ் கட்சியினருக்குக் கட்டளையிட்டார்.

பெருந்தலைவர் காமராஜரது அரசியல் முதிர்ச்சியை இது காட்டுகிறது. ஒரு ஆக்கபூர்வமான எதிர்க்கட்சித் தலைவராக அரசியலில் கர்மவீரர் காமராசர் செயல்பட்டாரே ஒழிய, ஒருபோதும் அநாகரிகமாகச் செயல்பட்டது கிடையாது. கர்மவீரர் காமராசர் சமுதாயத்தின் அடித்தட்டிலிருந்து தலைவராக உருவாகி வந்த காரணத்தால், சமுதாயப் பிரச்சினைகளை நன்கு உணர்ந்திருந்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் “பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்து நூறாண்டு கடந்து விட்டாலும், நம்முடைய நினைவிலே, அவருடைய எளிமையால், தன்னலமற்ற தொண்டால், நாட்டுப் பற்றால், புரிந்த தியாகத்தால் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது” என்றார்.

“பெருந்தலைவர் காமராசர் அவர்களின் அத்தனை பண்பு நலன்களையும் கைக்கொள்ள முடியாவிட்டாலும், அவற்றில் ஒரு சிலவற்றையாவது இன்று அரசியலுக்கு வர விரும்புவோர் பின்பற்ற வேண்டும் என்பதே அவரது வாழ்க்கை நமக்கு சுட்டிக் காட்டுகின்ற

உண்மையாகும்" என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

சென்னையில் உள்ள கர்மவீரர் காமராசர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக 21.6.1978 முதல் தமிழ்நாடு அரசு பராமரித்து வருகிறது. இதற்கான உத்தரவினை அன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பிறப்பித்தார்கள்.

பெருந்தலைவர் காமராசர் அதிகம் கல்வி கற்காதவர். ஆனால், கல்விக் கூடங்களை அதிகமாக திறந்தவர். கல்விக்காக அதிக திட்டங்களை வகுத்தவர். கர்மவீரர் காமராசர் அறிவியல் படிக்கவில்லை. ஆனால், அவருடைய அரசியலும், ஆட்சியும் அறிவியல் ரீதியாகத்தான் இருந்தது. பெருந்தலைவர் காமராசர் திருக்குறளாக வாழ்ந்து காட்டியவர்.

கர்மவீரர் காமராசர் இறந்தபின்பு, அவர் வசித்த வாடகை வீட்டை, அதன் சொந்தக்காரர் எடுத்துக் கொண்டார். அவர் பயன்படுத்திய காரை, காங்கிரஸ் கட்சி எடுத்துக் கொண்டது. அவருடைய பெயரை மட்டும் வரலாறு எடுத்துக் கொண்டது என்பதை நினைவு கூற விரும்புகிறேன்.

கவிஞர் வாலி "ஒரு பெண்ணை மணக்காமல் இம்மண்ணை மணந்தவன்" என்று பெருந்தலைவரை புகழ்ந்து பாடினார். 'கல்வி கண் திறந்த காமராசர்' என்று பாமர மக்களால் போற்றப்பட்ட பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை தமிழ்நாடு அரசு கல்வி வளர்ச்சி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.

தென்னகத்தில் துவக்கப்பட உள்ள பல் மருத்துவக் கல்லூரியை தமிழகத்தில் கல்விப் புரட்சியை ஏற்படுத்திய பெருந்தலைவர் காமராசர் பிறந்த மாவட்டமான விருதுநகரில் துவக்குவதே சாலச் சிறந்தது என்பதால், இங்கு அக்கல்லூரியை துவக்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருந்தலைவர் நினைவாக சென்னை எண்ணூர் துறைமுகத்திற்கு காமராசர் துறைமுகம் என்றும்; உள்நாட்டு விமான நிலையத்திற்கு காமராசர் விமானநிலையம் என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளில் மூலம் செயல்படுத்திய திட்டங்களில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

விருதுநகர் மக்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு அளிக்கப்படும் மருத்துவ வசதியை மேம்படுத்த சுகாதாரத் துறையில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகின்றது. 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்ட தலைமை மருத்துவமனை வளாகத்தில் தாய்சேய் நலப்பிரிவு கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மாவட்டதில் 10 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகள் நடைபெற்று முடிவுறும் தருவாயில் உள்ளன. இம்மாவட்டத்தில் 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 50 மெட்ரிக் டன் கால்நடை தீவன தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மூலம் அருப்புக்கோட்டையில் அரசு தொழிற் பயிற்சி கட்டடம் 2 கோடி ரூபாயில் கட்டப்பட்டு, திறக்கும் தருவாயில் உள்ளது.

கால்நடைத் துறையின் சார்பில் மீனாட்சிபுரம், நல்லமங்கலம் போன்ற பல்வேறு இடங்களில் 2 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருந்தக கட்டடங்கள் கட்டப்பட்டு, திறக்கும் தருவாயில் உள்ளன. 354 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் திருத்தங்கல், சிவகாசி, ராஜபாளையம் ஆகிய நகராட்சிப் பகுதிகளுக்கு தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

குட்டி ஜப்பான் என அழைக்கப்படும் சிவகாசியில் பட்டாசு தொழிற்சாலைகளில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்தியா முழுவதும் பட்டாசு விற்பனையை தடை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில், சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள் 1986ன் பிரிவு 3(பி)ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளிலிருந்து பட்டாசு தொழிலுக்கு விலக்கு பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க மத்திய அரசை மாண்புமிகு அம்மாவின் அரசு வலியுறுத்தி வருகிறது என்பதை கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

பெருந்தலைவர் காமராசர் ஓர் ஏழைப் பங்காளர், ஆனால் நாட்டை ஆண்ட மன்னர்களுக்கெல்லாம் மன்னராக திகழ்ந்தவர். இதைக் கூறுகின்றபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

அரசர் ஒருவருக்கு நான்கு மகன்கள் இருந்தனர். தனக்குப் பிறகு வாரிசு உரிமையை யாரிடம் கொடுக்கலாம் என அரசர் யோசித்தார். அதற்கு ஒரு போட்டி வைத்தார். ‘உங்களில் யார் சிறந்த தர்மவானை தேடிக்கண்டுபிடித்து அழைத்து வருகிறீர்களோ, அவரே நாட்டை ஆள தகுதியுள்ளவர் ஆவார்’ எனக் கூறினார். நான்கு மகன்களும் புறப்பட்டனர்.

முதல் மகன் பெரிய வணிகனை கொண்டு வந்து நிறுத்தி, “இவர் தினமும் ஆயிரக்கணக்கான ரூபாய் தர்மம் செய்கிறார், கோயில், குளங்களை கட்டுகிறார்; அன்னதானம் செய்கிறார்” என்றான்.

இரண்டாவது மகன், “ஒரு மெலிந்த அந்தணரை அழைத்து வந்து, ‘இவர் முக்தி தரும் திருவிடங்களுக்கு பாதயாத்திரையாகவே செல்கிறார். தொடர்ந்து விரதம் இருக்கிறார். கோபமே படாதவர்” என்று கூறினார்.

மூன்றாவது மகன், எலும்பும் தோலுமாக இருந்த ஒரு சாதுவை அழைத்து வந்தான். பொதுமக்கள் நலமாக இருக்க வேண்டும் என்று "தொடர்ந்து உண்ணா நோன்பு, தியானம் செய்து வருகிறார்" என்றார்.

கடைசி மகன், ஒரு ஏழை குடியானவனை அழைத்து வந்து, "தந்தையே, இவன் தெரு நாயின் காயத்துக்கு மருந்து போட்டு குணப்படுத்தினான்" என்றான்.

மன்னர் அந்தக் குடியானவனைப் பார்த்து, "நீ என்ன தர்மம் செய்கின்றாய் ?" என்றார். "நான் படிக்காதவன், தர்மத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. யாராவது நோய்வாய்ப்பட்டால் முடிந்தவரை பணிவிடை செய்வேன். யாராவது யாசித்தால் கைபிடி அளவாவது அன்னம் கொடுப்பேன்" என்றான்.

"இவன்தான் பெரிய தர்மவான்" என்று அரசர் முடிவு செய்தார்.

தர்மம் செய்வதற்கு கல்வி வேண்டாம், தவம் வேண்டாம், தியானம் வேண்டாம். நல்ல மனம் ஒன்றே போதும். அந்த வகையில் ஏழைக் குடியானவனை அழைத்து வந்த தன் இளைய மகனுக்கு முடிசூட்டினார் அரசர்.

இந்தக் கதையில் வரும் ஏழைக் குடியானவனைப் போன்றவர் பெருந்தலைவர் காமராசர் என்பதால் அவரே சிறந்த முதல்வராக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார். இன்றும் அவரது புகழ் நிலைத்து நிற்கிறது. எனவே, பெருந்தலைவர் அவர்களின் பிறந்த நாளில் நான் அவரை மனதார வணங்குகிறேன்.

கர்மவீரர் காமராசர் அவர்கள் கிராமத்தில் வாழ்பவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அதிகமாக பள்ளிகளை கிராமந்தோறும் திறந்த காரணத்தினால்தான், கிராமத்திலே பிறந்தவர்கள் அறிவு ஜீவியாக, பல்வேறு பதவிக்கு உயர்ந்த நிலைக்கு வருவதற்குக் காரணம் அடித்தளமாக திகழ்ந்தவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள். நானும் கிராமத்திலே பயின்றவன், அந்த சிறப்புக்கு உரியவர்களின் நானும் ஒருவன். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே கல்விக்கு முன்னுரிமை

கொடுத்து, குறிப்பாக கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய, நடுத்தர மாணவர்கள் கிராமத்திலே படிப்பதன் மூலமாக கல்வி அறிவு பெறுவதற்கு அவர் உருவாக்கித் தந்த பள்ளிகளில்தான் இன்றைக்கு மேடையிலே வீற்றிருக்கின்ற அத்தனைபேரையும் உருவாக்கியது என்று சொன்னால், அதன் பெருமைக்குரியவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள்தான். ஏனென்றால், அந்த சிந்தனை அவரிடத்திலே இருந்தது, அதை நனவாக்கியவரும் அவர்தான்.

அதுமட்டுமல்ல, என்னுடைய பகுதியைப் பொறுத்தவரைக்கும், கிட்டத்தட்ட 10 சதவிகிதம் நாடார் சமுதாயத்திலே இருக்கின்றார்கள். அதிலே 80 சதவிகிதம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கக்கூடியவர்கள். நான் முதலில் சட்டமன்ற உறுப்பினர் ஆனவுடன், எனக்கு உறுதுணையாக இருந்த நண்பர், நாடார் சமுதாயத்தைச் சேர்ந்த திரு.ஏ.மாதேஸ் அவர்களை எடப்பாடி ஒன்றிய பெருந்தலைவர் ஆக்கினேன். அதற்குப் பிறகு, 2011இல் நான் அமைச்சரான பிறகும், எடப்பாடி ஒன்றியத்திற்கு அவரை பெருந்தலைவராக்கி, அந்த சமுதாயத்தினருக்கு ஒரு மரியாதை செலுத்தினேன். ஆகவே, இந்த சமுதாய மக்களைப் பொறுத்தவரைக்கும், இந்தியாவிலேயே பரந்து, விரிந்து தொழில் செய்கின்ற சமுதாயம் இந்த நாடார் சமுதாயம் என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கின்றேன். எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கே ஒருவர் இருப்பார், அந்தளவிற்கு அறிவுப்பூர்வமான சிந்தனை உடையவர்கள் இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதற்கு அடித்தளமாக விளங்கியவர் பெருந்தலைவர் காமராஜ் என்பதை நாம் நினைவு கொள்ளவேண்டும்.

இந்த சமுதாய மக்கள் வளரவேண்டும், அவர்களுடைய வாழ்க்கை மிளிர வேண்டும், வாழ்வு சிறக்க வேண்டும், அவர்களுடைய வாழ்வு உயர்வதற்கு நாங்கள் அத்தனை உதவிகளையும் செய்வோம் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஒரு முறை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, ஒருவரை ஒன்றியப் பெருந்தலைவர்

என்று குறிப்பிட்டதற்கு, உடனடியாக அம்மா அவர்கள் இடைமறித்து, பெருந்தலைவர் என்று சொல்லாதே, ஒன்றிய குழுத்தலைவர் என்று சொல், பெருந்தலைவர் என்று சொன்னால், கர்மவீரர் காமராசர் ஒருவருக்குத்தான் அந்த பெயர் உண்டு என்று சொன்னார். அப்படி இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெருந்தலைவர் காமராஜரிடம் மிகுந்த மரியாதையை வைத்திருந்தார். ஏனென்றால் இந்த நாட்டிற்கு உழைத்தவர், தேசபக்தி கொண்டவர், எளிமையாக வாழ்ந்தவர், மக்களுக்காக வாழ்ந்து மறைந்த தலைவர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள். இந்த மண்ணிலே எத்தனையோ பேர் பிறக்கின்றார்கள், வாழ்கின்றார்கள், இறக்கின்றார்கள், ஆனால், பிறந்த ஒருவர், தான் இறக்கின்றவரை இடைப்பட்ட காலத்திலே இந்த நாட்டு மக்களுக்கு என்ன செய்தார் என்பதைத்தான் மக்கள் சிந்திப்பார்கள். அந்த சாதனையை படைத்தவர் நம்முடைய கர்மவீரர் காமராசர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே புகழஞ்சலி செலுத்தி, அவரைப் பாராட்டி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மண்ணிலே பிறந்த பெருந்தலைவர் காமராசர் அவர்கள் படித்த பள்ளியிலே இந்த அரங்கினிலே பேசுகின்ற நல்வாய்ப்பினை உருவாக்கித் தந்த நாடார் மஹாஜன சங்கத்தின் நல்ல நிர்வாகிகளுக்கு மனமார, உளமார்ந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள், 15.07.2018 அன்று*
விருதுநகரில், நாடார் மஹாஜன சங்கத்தின் சார்பில் பெருந்தலைவர்
காமராஜர் அவர்களின் பிறந்தநாளையொட்டி நடைபெற்ற
கல்வித் திருவிழாவில் ஆற்றிய உரை

மதுரை, காளவாசல் சந்திப்பில் ரூ.54.07 கோடி மதிப்பீட்டில் நான்கு வழித்தடத்துடன் கூடிய சாலை மேம்பாலம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

புதிதாக உருவாக்கப்படவுள்ள உயர்மட்டப்பாலம் நிகழ்ச்சிக்கு தலைமையேற்று, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்குரிய திரு.செல்லூர் ராஜூ அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் திரு.பாஸ்கரன் அவர்களே மற்றும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை, காளவாசல் சந்திப்பில் முதன்முறையாக ரூ,54.07 கோடி மதிப்பீட்டில் நான்கு வழித்தடத்துடன் கூடிய சாலை மேம்பாலம் அமைக்க இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதனால்

போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறைவதுடன், சந்திப்பில் வாகன காத்திருப்பு நேரம் குறையும். மேலும், அருகிலுள்ள அரசரடி சந்திப்பும், இப்பணியுடன் இணைந்து மேம்படுத்தப்பட உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதோடு மதுரை போக்குவரத்து நெரிசல் மிகுந்த கோரிப்பாளையம் சாலை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலப் பணிகளை விரைந்து துவக்கும்பொருட்டு, அதிக போக்குவரத்து செரிவுள்ள தடத்தை ஆய்வு செய்து, குறைந்த அளவு நில எடுப்புடன் செயல்படுத்த திட்டத்தினை மறுஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விபத்துப் பகுதியான செல்லூர் இரயில்வே மேம்பாலத்தின் அணுகு சாலையில் விபத்தினை குறைக்கும்பொருட்டு, செல்லூர் இரயில்வே மேம்பாலத்தின் கீழ் சூலமங்களம் சாலையை அடைய உரிய சேவைச் சாலை ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைக்க சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டு, விரைவில் பணி துவங்கப்படவுள்ளது. மதுரை எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் முதல் கூடல்நகர் வானொலி நிலையம் வரை புதிய நான்கு வழி இணைப்புச் சாலை ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறை மற்றும் மதுரை மாநகராட்சி சாலைகளை ஒருங்கிணைந்து அமைக்க சட்டசபையில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதேபோல, பாண்டிக்கோவில் அருகில் மதுரை தொண்டி சாலை, மதுரை சுற்றுச்சாலை சந்திப்பில் ரூபாய் 56 கோடியில் மேம்பாலம் அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அதோடு, வைகையாற்றின் வடகரையில் குருவிக்காரன் சாலை முதல் அண்ணாநகர் பாலம் வரை சாலை அமைக்க ரூபாய் 16.35 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, இந்தப் பணி விரைவில் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆகவே, மதுரை மாநகர மக்கள் கண்ட நீண்டகாலக் கனவை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு நிறைவேற்றி தந்திருக்கிறது

என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அதுமட்டுமல்ல, வைகை ஆற்றிலே இன்றைக்கு நீர் செல்கின்றபொழுது இந்த மாநகரத்தினுடைய கழிவு நீரெல்லாம் அந்த ஆற்றிலே கலக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, நீர் மாசுபடுகின்றது. அதைத் தடுப்பதற்காக ஆங்காங்கே சுத்திகரிப்பு நிலையம் (Treatment Plant) அமைத்து, வருகின்ற கழிவுநீரை சுத்திகரித்து ஆற்றில் விடுவதற்குண்டான சூழ்நிலையை அம்மாவினுடைய அரசால் உருவாக்கித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. கல்வி, வேளாண்மை, சாலை வசதி, பொதுப்பணித்துறைப் பணிகள் என அனைத்துத் துறைகளுமே வளர்ச்சி காணுகின்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்து, குறுகிய காலத்திலே மிகச் சிறப்பாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த மாவட்ட அமைச்சர்கள் மாண்புமிகு திரு.செல்லூர் ராஜூ மற்றும் திரு.உதயகுமார், திரு.ராஜன் செல்லப்பா, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், அரசு அதிகாரிகள், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த, உளமார்ந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள்,*
15.07.2018 அன்று மதுரையில் ஆற்றிய உரை

177.25 டி.எம்.சி. நீரை ஒவ்வொரு ஆண்டும் கருநாடக அரசு நமக்கு வழங்கவேண்டுமென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அம்மா அவர்களுடைய அரசு பெற்றுத்தந்திருக்கிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, இன்றைய தினம், விவசாயப் பெருங்குடி மக்கள் உரிய நேரத்திலே சாகுபடி செய்வதற்காக டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், தமிழ்நாட்டு மக்களுடைய நீண்டகால பிரச்சினைக்காக போராடினார்கள். அவர்களோடு, விவசாயப் பெருங்குடி மக்களும், பொதுமக்களும் இணைந்து, கிட்டத்தட்ட 48 ஆண்டு காலம் நம்முடைய காவேரி நீரினுடைய உரிமையை பெறுவதற்காக போராடி, இருபெரும் தலைவர்களுடைய நல்லாசியோடு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய சட்டப் போராட்டத்தின் விளைவாக 48 ஆண்டு காலம் போராடிய தமிழ் மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மிகப்பெரிய வெற்றியை அம்மாவினுடைய அரசு பெற்றுத் தந்திருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சாதனை. நமக்கு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 177.25 டி.எம்.சி. ஒவ்வொரு ஆண்டும் கர்நாடக அரசு நமக்கு வழங்க வேண்டுமென்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அம்மா அவர்களுடைய அரசு பெற்றுத் தந்திருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவை, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது. விவசாய பெருங்குடி மக்களுக்கு, விவசாயிகளுக்கு உயிராக இருப்பது நீர். அந்த நீரைப் பெறுவதற்காக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு காலகட்டங்களிலே தன்னையே வருத்திக் கொண்டு, கிட்டத்தட்ட 80 மணி நேரம் மெரினா கடற்கரையில் உண்ணாவிரதம் இருந்து மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சட்டப்போராட்டம் நடத்தி அம்மா அவர்கள் தன்னுடைய இறுதி மூச்சு இருக்கும்வரை தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்தவர். அவர் அப்போலோ மருத்துவமனையில் உடல்நலக்குறைவால் சேர்க்கப்பட்ட இரண்டாம் நாள் இந்த காவேரி பிரச்சினை பற்றி பேசினார்கள். அப்பொழுது நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தேன். உயர் அதிகாரிகளை எல்லாம் அழைத்து, அடுத்த நாள், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உமாபாரதி அவர்கள் தலைமையில், கர்நாடக அரசுக்கும்,



தமிழ்நாட்டிற்கும், காவேரி நீர் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், அதற்கு பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமியை அனுப்புங்கள், தலைமைச் செயலாளரும் செல்லுங்கள், அந்தத் துறையைச் சேர்ந்த செயலாளரும், அந்த அதிகாரிகளும் அவருடன் சென்று நம்முடைய பிரச்சினைகளை எல்லாம் எப்படி எடுத்து வைக்க வேண்டுமென்ற கருத்தை அம்மா அவர்கள் கடிதம் மூலமாக கொடுத்தனுப்பினார்கள். அதுதான், அவர்கள், இறுதியாக, இறப்பதற்கு முன் கொடுக்கப்பட்ட அந்த நிகழ்வு, ஏனென்று சொன்னால், எத்தனையோ அரசியல் கட்சித் தலைவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், உணர்வுப்பூர்வமாக, தன்னுடைய உடல்நிலையைக்கூட பொருட்படுத்தாமல், இறுதிக் கட்டத்தில், காவேரி நீர் தீர்ப்பை பெற்றுத்தரவேண்டுமென்டும் என்பதற்காக போராடிய தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே மனம் உருகி தெரிவித்துக் கொள்கின்றேன். அப்படி போராட்டத்தின் வாயிலாகத்தான் இந்த வெற்றியை பெற்றிருக்கின்றோம். அப்படிப் போராடிய, வரலாற்றுச் சிறப்புமிக்க, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய விடாமுயற்சியின் காரணமாக, காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு நீரை இந்த இரண்டு அமைப்புகளும் முறைப்படி பெற்றுத்தருவதற்காக உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி மத்திய அரசு இன்றைக்கு அமைத்திருக்கின்றது. காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி

நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும்கூடி, விவாதிக்கப்பட்டு, முதற்கட்டமாக நமக்கு ஜூன் மாதத்திற்கு கர்நாடக அரசு வழங்க வேண்டிய 9.19 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்பட்டது. இப்பொழுது ஜூலை மாதம், கர்நாடக அரசால் நமக்கு வழங்க வேண்டிய நீரின் அளவு 31.24 டி.எம்.சி. தண்ணீர். இதை எல்லாம் வல்ல இறைவனுடைய அருளாலும், வர்ணபகவானுடைய கருணையாலும், அவர்கள் விட்டாலும், விடாவிட்டாலும், இன்றைக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆசியிலே, வர்ணா பகவான் அவர்கள் கருணைகாட்டி, இன்றைக்கு பருவமழை நன்றாக பெய்து மேட்டூர் அணைக்கு இன்றையதினம் 1 இலட்சத்து 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது. இதே, கடந்த மாதம் நமது அணை வறண்டு கிடந்தது. ஒரே மாதத்தில் எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய மிகப்பெரிய சக்தியால், ஆசியால் இன்றைக்கு 1 இலட்சம் கனஅடிக்கு மேற்பட்ட தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து, இன்றைய தினம் 109 அடி உயர்ந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றையதினம், தொடர்ந்து 1 இலட்சம் கனஅடிக்கு மேலாக வந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட இன்னும் 3 நாட்களில் 120 அடியை எட்டும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இன்றைக்கு முதன்முதலாக காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் அமைத்து, இன்றைக்கு அணை 120 அடியை எட்டக்கூடிய சூழ்நிலையை பார்க்கிறோம். இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வு. இது அம்மா அவர்களுடைய அரசுக்கு கிடைக்கப்பெற்ற மாபெரும் வெற்றி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, ஒவ்வொரு மாதமும் கர்நாடகத்திலிருந்து ஆகஸ்டு மாதம் 45.95 டி.எம்.சி, செப்டம்பர் மாதம் 36.76 டி.எம்.சி, அக்டோபர் மாதம் 20.22 டி.எம்.சி, நவம்பர் மாதம் 13.78 டி.எம்.சி, டிசம்பர் மாதம்

7.35 டி.எம்.சி, ஜனவரி மாதம் 2.7 டி.எம்.சி பிப்ரவரி முதல் மே மாதம் வரை 2.50 டி.எம்.சிதண்ணீரும் கர்நாடக அரசு நம்முடைய அணைக்கு வழங்க வேண்டுமென்ற ஒரு நல்ல தீர்ப்பு உச்சநீதிமன்றத்தின் வாயிலாக கிடைத்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒவ்வொரு ஆண்டும் போராடி, போராடி பெறுவதற்கு பதிலாக, catchment பகுதியில், கர்நாடக பகுதியிலே பெய்கின்ற மழையினுடைய அளவினை வைத்து, ஒவ்வொரு மாதமும் நான் குறிப்பிட்ட அளவிற்கு கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும், காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும் பேசி, தீர்வு கண்டு, நமக்குத் தேவையான நீரை இன்றைக்கு விடுவிப்பார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்து, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மருத்துவர் எஸ்.சரோஜா அவர்களே, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே, இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. செம்மலை அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.வெங்கடாசலம், திரு.சக்திவேல், திருமதி.மனோன்மணி, திரு.எஸ்.ராஜா, திரு.எஸ்.வெற்றிவேல், திரு.ஆர்.எம்.சின்னதம்பி, திரு.அ. மருதமுத்து, திருமதி.கு.சித்ரா ஆகியோர்களே! திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே, பவானிசாகர் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே மற்றும்வருகை தந்திருக்கின்ற,

மேடையில் வீற்றிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களே, நாடளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, இந்தத் துறையினுடைய செயலாளர் அவர்களே, மற்றும் பொறியாளர்களே, உயர் அதிகாரிகளே மற்றும் கழகத்திலே பல்வேறு பொறுப்புகளை வகித்துக் கொண்டிருக்கின்ற நிருவாகிகளே, விவசாயப் பெருங்குடி மக்களே, விவசாய சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களே, நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் முன்பருவம், காரிப்பருவம் மற்றும் பின்பருவம் ராபி முதலான சாகுபடி பருவத்தில் பயிரிடும் பயிர்களுக்கு உபயோகித்திட 20 முதல் 25 இலட்சம் மெட்ரிக் டன் உரங்கள் இந்த ஆண்டிற்கு பயன்படுத்தப்படவிருக்கிறது. 2018–2019ஆம் நிதியாண்டில், கர்ரிப் மற்றும் ராபிப் பயிர் சாகுபடி தேவைக்காக யூரியா 9.90 இலட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 2.25 இலட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 4.60 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் உரவகைகள் 5.90 இலட்சம் மெட்ரிக் டன் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு காரிப்பயிர் சாகுபடிக்குஎன மத்திய அரசு, யூரியா 3 இலட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி.1 இலட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 1.50 இலட்சம் மெட்ரிக் டன், மற்றும் உரவகைகள் 2 இலட்சம் மெட்ரிக் டன் ஒதுக்கீடு செய்துள்ளது. காரிப் பருவத்தில் இதுநாள் வரை யூரியா 1.68 இலட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 0.47 இலட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 0.72 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் உரவகைகள் 0.78 இலட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் பெறப்பட்டுள்ளது. தற்சமயம் யூரியா 0.96 இலட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 0.51 இலட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 0.49 இலட்சம் மெட்ரிக் டன், மற்றும் உரவகைகள் 1.09 இலட்சம் மெட்ரிக் டன், இராசாயன உரங்கள் இருப்பில் உள்ளது. டெல்டா மாவட்டங்களில் மட்டும் யூரியா 3 இலட்சம் மெட்ரிக் டன்,

டி.ஏ.பி. 0.17 இலட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 0.13 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் உரவகைகள் 0.32 இலட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் இருப்பில் உள்ளது. சம்பா பயிர் சாகுபடி மற்றும் இதர காரிப் பருவ பயிர்கள் சாகுபடிக்குத் தேவையான இரசாயன உரங்கள் இருப்பில் உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், மத்திய அரசு உரங்கள் துறை இணைச் செயலாளர் அவர்கள் நடத்திய வாராந்திர காணொலி காட்சியில், தமிழ்நாட்டிற்கு மேலும், கூடுதலாக யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் உரங்களை ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்துள்ளார்கள் என்பதையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

டெல்டா பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீர் இன்றைய தினத்திலிருந்து திறக்கப்படுகின்றது. படிப்படியாக நீரின் அளவை அதிகரித்து, விவசாயிகளுக்கு பாசனத்திற்கு எவ்வளவு நீர் தேவைப்படுகிறதோ அந்தளவிற்கு முழுமையாக கடைக்கோடியிலிருக்கின்ற விவசாயிகளுக்குக்கூட பாசனத்திற்கு தண்ணீர் கிடைப்பதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, காவேரிப் படுகையில் இருக்கின்ற கிழக்குக் கரை, மேற்குக் கரை பாசன விவசாயிகளுக்கும் குறித்த காலத்திலே தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு காவேரி மேலாண்மை ஆணையம் அமைத்ததற்கு வெற்றியினை நினைவுகூறும்வகையில், மேட்டூர் அணை பூங்கா பகுதியில் நினைவு ஸ்தூபி அமைத்தல் மற்றும் மேட்டூர் அணைப் பூங்காவை மேம்பாடு செய்வதற்கான மதிப்பீடான ரூபாய் 2 கோடிக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேட்டூர் அணை பூங்கா பகுதியில் நினைவு ஸ்தூபி அமைப்பதற்காக ரூபாய் 1.25 கோடியும், மேட்டூர் அணைப் பூங்காவை மேம்பாடு செய்வதற்காக ரூபாய் 0.75 கோடியும், ஆகமொத்தம் ரூபாய் 2 கோடி

நிதி ஒதுக்கீடு செய்து இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் அணை கட்டப்பட்டு சுமார் 83 ஆண்டு காலம் ஆகிறது. இந்த 83 ஆண்டு காலத்திலே மேட்டூர் அணை தூர்வாராமல் இருந்தது. இந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும், டெல்டா பாசன விவசாயப் பெருங்குடி மக்களும் நீண்டகாலமாக இருக்கின்ற மேட்டூர் அணையிலே வண்டல் மண் படிந்து அதனுடைய நீரின் கொள்ளளவு குறைந்திருக்கிறது. ஆகவே, வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் துணைபுரிய வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள். அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, அம்மாவின் அரசு மேட்டூர் அணையிலிருந்து வண்டல் மண் இலவசமாக எடுத்துக் கொள்வதற்கு ஆணையிட்டு, நாள்தோறும் 3,000 லாரியில் மேட்டூர் அணையிலிருந்து வண்டல்மண் எடுக்கப்பட்டு விவசாயிகளுடைய நிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தினார்கள். மேட்டூர் அணையைச் சுற்றிலும் 60 கிலோமீட்டர் சுற்றிலும் உள்ள விவசாயிகள் இந்த வண்டல் மண்ணை அள்ளி, அவர்களுடைய நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்தினார்கள். அந்த விவசாயிகளெல்லாம் என்னிடத்திலே தெரிவித்தார்கள், நீங்கள் ஒரு வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தை அறிவித்தீர்கள். நீண்ட காலமாக நாங்கள் விவசாய நிலத்திற்கு ரசாயன உரத்தைத்தான் வைத்துத்தான் நிலங்களில்

பயிர் செய்தோம். இப்பொழுது வண்டல் மண்ணை இயற்கை உரமாக பயன்படுத்தியதன் விளைவாக கூடுதலான விளைச்சலை நாங்கள் பெற்றிருக்கின்றோம் என்று தெரிவித்தார்கள். ஒருபுறம் வண்டல் மண் அள்ளுவதால், அணை தூர்வாரப்படுகிறது, ஆழமாகிறது. இன்னொருபுறம் விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தை அம்மாவின் அரசு அறிவித்து, அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையில் தண்ணீர் வடிந்த பிறகு, அந்த அணைப் பகுதியில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளிக்கொள்ளலாம் என்று அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு விவசாயிகளுடைய அரசு, விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்களை அளிக்கின்ற அரசு. ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 12 ஆம் தேதி, டெல்டா பாசனத்தில் இருக்கின்ற குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுவோம். ஆனால் ஜுன் 12ஆம் தேதி போதிய நீர் அணையிலே இல்லாத காரணத்தால், குறுவை சாகுபடிக்கு உரியநேரத்தில் தண்ணீர் திறக்கமுடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, டெல்டா பாசனத்தில் இருக்கின்ற விவசாயிகள் குறுவைசாகுபடி செய்யவேண்டும், அப்படி செய்யாமல் போனால் அந்த விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று கருதி, குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். அந்த வழியிலே வந்த அம்மாவினுடைய அரசும் குறிப்பிட்ட காலத்திலே மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தபொழுது, மூத்த அமைச்சர்களோடு கலந்து பேசி, இன்றைக்கு டெல்டா பாசன விவசாயிகளுக்கு, அங்கே இருக்கின்ற நிலத்தடி நீரை பயன்படுத்தி, குறுவை சாகுபடி செய்யலாம் என்ற ஒரு அறிவிப்பை கொடுத்து அதற்குத் தேவையான உதவிகளையும் செய்வதற்காக, குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து,

அதற்காக ரூபாய் 115 கோடி அம்மாவினுடைய அரசு விவசாயிகளிக்கு அளித்து விவசாயிகளை ஊக்கப்படுத்தி, விவசாயிகள் குறுவை சாகுபடி திட்டத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே தண்ணீர் இல்லாவிட்டாலும்கூட, இருக்கின்ற நிலத்தடிநீரை வைத்து விவசாயிகள் அந்த பயிரை நடவு செய்ய வேண்டுமென்ற ஒரு நோக்கத்தில், இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் பார்த்தால், என்றைக்கும் இல்லாத ஒரு வரலாற்று சாதனை இன்றைக்கு அருகிலே இருக்கின்ற பவானி சாகர் அணைக்கு கிட்டத்தட்ட 24 டி.எம்.சி. தண்ணீர் வந்துவிட்டது, கடந்தகாலம் வெறும் 3 டி.எம்.சி. தண்ணீர்தான் இந்த காலக்கட்டத்தில் இருந்தது. அமராவதி அணை நிரம்பிவிட்டது. முல்லை பெரியாறு அணை நிரம்பிக் கொண்டிருக்கிறது. கோயம்புத்தூரில் இருக்கின்ற சிறுவாணி அணை நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. சிறுவாணியில் இருந்துதான் கோவை மாநகர மக்களுக்கு தேவையான குடிநீர் விநியோகம் செய்யமுடியும். அது வறண்டு இருந்த காரணத்தால் கடுமையான குடிநீர் பிரச்சினை ஏற்பட்டு இருந்தது. இன்றைய காலகட்டத்தில், எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், இன்றைக்கு அந்த அணை நிரம்பி வழிகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். அதுமட்டுமல்ல, பெரும்பாலான அணைகள், பரம்பிக்குளம், ஆழியாறு, மணிமுத்தாறு, பாபநாசம் என பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற அணைகள் எல்லாம் இன்றைக்கு நல்ல பருவமழை பெய்ததன் காரணமாக அந்த அணைகளுடைய நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. எல்லா அணைகளிலிருந்தும் குறித்த காலத்தில் விவசாய பெருங்குடி மக்களுக்கு பாசன வசதிக்காக, விவசாயம் செய்வதற்காக தண்ணீர் திறக்கப்படும் என்ற செய்தியை இந்த தருணத்தில் தெரிவித்து, இன்றைக்கு அம்மாவினுடைய அரசுதான் மக்களுக்குத் தேவையான திட்டங்களை அளிக்கின்ற அரசு என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களெல்லாம், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் போராட்டம் நடத்தினார்கள். சரியாக உச்சநீதிமன்றத்திலே வாதாடவில்லை, ஆகவே நமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கவில்லையென்ற தவறான, அவதூறான கருத்தையெல்லாம் தமிழகத்திலே பரப்பி வந்தார்கள். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும், இந்த இரண்டு தலைவர்களும் என்ன நடவடிக்கையை மேற்கொண்டார்களோ, அதே நடவடிக்கையை அம்மாவினுடைய அரசும் மேற்கொண்டு சட்டப்போராட்டத்தின் மூலமாக விவசாய பெருங்குடி மக்களுக்கு நிலையான தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கின்றோம். ஆகவே, இன்றைக்கு அவர்களெல்லாம் எதுவும் பேசமுடியாத அளவிற்கு, நல்ல மழைபொழிந்து, அணைகளெல்லாம் நிரம்பிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே ஒரு அறிவிப்பை சட்டமன்றத்திலே அறிவித்திருந்தேன். தேசிய தலைவர்களில் ஒருவரும், தமிழக மக்கள் நலனுக்காக பாடுபட்டவரும், பின்தங்கிய மக்களின் வாழ்க்கை முன்னேற வேண்டும் என்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த முன்னாள் அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய மறைந்த ராமசாமி படையாச்சியார் அவர்களுடைய பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்ற அறிவிப்பை தந்தேன். அதைத் தொடர்ந்து, என்னை என்னுடைய அறையில், தலைமைச் செயலகத்தில் சந்தித்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களும், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களும், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களும், அந்த சமூகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த

சமூகத்தைச் சேர்ந்த சான்றோர் பெருமக்கள், அந்த சமூகத்தைச் சேர்ந்த பல நல்ல உள்ளம் கொண்டவர்களெல்லாம் என்னை அணுகி, அவருடைய பெருமையும், புகழும் சேர்க்கின்ற விதமாக, அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில் ஒரு மணிமண்டபமும், அவருக்கு வெண்கல முழு திருவுருவச்சிலை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இந்த நல்ல மேடையிலே, நல்ல நாளிலே அப்படி சிறப்புமிக்க, புகழ்மிக்க மக்களுக்காக வாழ்ந்து மறைந்த ஒப்பற்ற தலைவர் ராமசாமி படையாச்சியார் அவர்களுடைய நினைவாக, பெருமையை போற்றுகின்ற விதமாக, அவர் புகழுக்கு பெருமை சேர்க்கின்ற விதமாக, அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில் ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு நினைவுமண்டபம் அரசின் சார்பாக கட்டப்படும் என்று தெரிவித்து, அந்த நினைவு மண்டபத்திலே அவருக்கு முழு உருவ வெண்கலச்சிலையும் அமைக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்து, அவரைப் போல இருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை, எதிர்வருகின்ற இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்காக இப்படிப்பட்ட நல்ல நிகழ்வை அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, இந்த நிகழ்வுக்கு வருகை தந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வருகை தந்திருக்கின்ற விவசாய சங்கத்தைச் சார்ந்த தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், விவசாய பெருங்குடி மக்களுக்கும், பொதுமக்களுக்கும், கழகத்தின் பல்வேறு மட்டத்தில் இருக்கின்ற நிர்வாகிகளுக்கும், ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் மனமாற, உளமாற நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.07.2018 அன்று,*
சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து
தண்ணீர் திறந்து விட்ட விழாவில் ஆற்றிய உரை

சமூக உணர்வையும், தேசிய உணர்வையும் உள்ளடக்கிய மகான்களும், ஞானிகளும்தான் மக்கள் மனதில் இன்றளவும் போற்றப்படுகிறார்கள்!

மேடையிலே வீற்றிருக்கின்ற தவநெறியாளர் அருட்திரு. மகாஸ்ரமண் அடிகளார் அவர்களே,

அவருடைய சீடர்களே, இங்கு பெருந்திரளாக வருகை தந்திருக்கின்ற ஜெயின் சமூகத்தினரே, இங்கு கூடியிருக்கின்ற சகோதர, சகோதரிகளே, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே, வருகை தந்துள்ள அனைவருக்கும் பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா ஒரு திருக்கோயில் என்றால், அதில் இறைவன் உறைந்திருக்கும் கருவறைதான் ‘தமிழ்நாடு’ மகான்களை

தோற்றுவிக்கும் ஞானபூமி, 'தமிழ்நாடு'. பக்தியும் அறமும் தழைத்து விளையும் புண்ணிய பூமி, 'தமிழ்நாடு'.

பல்வேறு இடங்களில் இருந்து, ஞானிகளும், மகான்களும், குருமார்களும், ஆன்மிகத் தேடலுக்காகவும், அமைதிக்காகவும் தமிழ்நாட்டுக்கு வருகை தருவது என்பது தொன்றுதொட்டு நடைபெற்று வரும் சிறப்பாகும்.

இதன் அடிப்படையில், நல்லெண்ணம், அஹிம்சை, போதை ஒழிப்பு ஆகியவற்றை முன்னிறுத்தி, இன்று தமிழ் மண்ணில் நடைபயணம் மேற்கொண்டுள்ள தவநெறியாளர் அருட்திரு. மகாஸ்ரமண் அடிகளாரை தமிழ்நாட்டு மக்கள் சார்பாக வரவேற்பதில் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்துள்ள, உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகில் உள்ள அனைத்து சமயமும் மனிதனை பக்குவப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

தீங்கு செய்யாமை, கொல்லாமை, பொய்யாமை, தூய்மை, கருணை, இரக்கம், உலக அமைதி, அறவாழ்வு போன்ற உண்மைகளை மனிதர்களிடத்தில் விதைப்பதே அனைத்து சமயங்களும் தலையாய கடமையாகக் கொண்டுள்ளன. சமயங்கள் பரப்பும் கொள்கைகள் அனைத்தும் மனிதர்கட்கு இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தை விளைவிக்கின்றன.

50 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1968ஆம் ஆண்டு அருட்திரு துளசி அடிகளார் அவர்கள், உலக அமைதிக்காக நடைபயணம் மேற்கொண்டு, முதன்முதலில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது, அன்று முதலமைச்சராக இருந்த எங்கள் இயக்கத்தின் ஆணிவேர், பேரறிஞர் அண்ணா அவர்கள், சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில்

தமிழ்நாட்டு மக்களின் சார்பாக 'தமிழ்நாடு அரசின் சிறப்பு விருந்தினர்' என்ற அந்தஸ்தை அடிகளார் அவர்களுக்கு அளித்து வரவேற்றார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் ஆசியில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உழைப்பில் அமைந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, இன்று தவத்திரு மகாஸ்ரமண் அவர்களை வரவேற்று சிறப்பிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் சிறப்பு விருந்தினர் என்ற சிறப்பை தவத்திரு துளசி அடிகளாருக்கு எப்படி அளித்தாரோ, அதைப் போலவே, தவத்திரு துளசி அடிகளாரின் சீடரான தவத்திரு மகாஸ்ரமண் அவர்களுக்கு, 'தமிழ்நாடு அரசின் சிறப்பு விருந்தினர்' என்ற சிறப்பை அளித்து, நாங்கள் வரவேற்கிறோம். ஓராண்டு காலம் தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளுக்கு எல்லாம் நடைபயணம் மேற்கொண்டு, அஹிம்சை, அமைதி, அன்பு ஆகியவற்றை பரப்பி, தமிழ்நாட்டில் அறநெறிகளை தழைத்தோங்கச் செய்யும் தவநெறியாளர் அவர்களை நான் மனமார உவந்து பாராட்டுகிறேன்.

புலன்களை அடக்கி, தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அவற்றை, மக்கள் நலனுக்காக பயன்படுத்துவது தான் 'அறிவு' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய அறிவைப் பெற்றவர்கள்தான், ஞானிகள் என்றும் மகான்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். உலக நன்மைக்காக தன்னை வருத்திக்கொண்டு தவம், உண்ணா நோன்பு, நடைபயணம் ஆகியவற்றை மேற்கொள்கிறார்கள்.

திடமான நம்பிக்கை, மேன்மையான அறிவு, நற்செயல் என்ற போதனைகளை மக்களிடையே போதித்தவர் மகாவீரர் ஆவார்.

இவருடைய போதனைகளும், தத்துவங்களும் இன்றும் உலகம் முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக போற்றப்படுகிறது.

அத்தகைய ஞானியின் வழியில் வந்தவர்தான், நமது தவநெறியாளர் மகாஸ்ரமண் அவர்கள். சமூக உணர்வையும் தேசிய உணர்வையும் உள்ளடக்கிய மகான்களும், ஞானிகளும் தான் இன்றளவும் மக்கள் மனதில் நிலைத்து நின்று போற்றப்படுகிறார்கள்.

'ஊருக்கு உழைத்திடல் யோகம் – நலம்
ஓங்குமாறு வருந்துதல் யாகம்'
என்கிறார் தேசிய கவி பாரதியார் அவர்கள்.

யாகம் என்பது இறைவனை நோக்கி தவமிருந்து, துதித்து பலன் பெறுவது அல்ல. மக்கள் நலனுக்காக தன்னை வருத்திக் கொள்வதுதான் யாகம்.

அவ்வாறு பிறர் நலனுக்காக தன்னை வருத்திக் கொள்ளும் ஞானிகளைத்தான் இந்த உலகம் வரவேற்று, போற்றுகிறது. ஒவ்வொருவருக்கும் தாய் தந்தை எவ்வளவு முக்கியமோ, அந்த அளவிற்கு குருவும் முக்கியமானவர். உலகைக் காட்டுபவர்கள் குருமார்கள். மகாபாரதத்தில் அர்ச்சுணனுக்கு தேரோட்டியாகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், குருவாகவும் இருந்து பகவத் கீதையை அருளிய கண்ணபிரான் இன்றளவும் சிறந்த குருவாகப் பேசப்படுகிறார்.

சிவாலயங்களில் கைவிரல் காட்டி, குறிப்பினால் உபதேசம் செய்யும் தட்சிணாமூர்த்தியைத்தான் நாம் "குரு" என்ற கடவுளாக துதிக்கின்றோம். இந்தியப் பண்பாடு, குருவின் திருவடி பணிந்து வணங்கி போற்றுகின்ற பண்பாடாகும்.

'தெளிவு – குருவின் திருமேனி கண்டல்
தெளிவு – குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு – குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு – குருவுரு சிந்தித்தல் தானே’ – என்று குரு வழியில் நடக்கும் சீடர்களின் நிலையை திருமூலர் அழகாக கூறியிருக்கிறார்.

மகான் கபீர்தாசரிடம், ‘உன் முன்பாகக் குருவும், கடவுளும் ஒரே நேரத்தில் தோன்றினால், நீ யாரை முதலில் வணங்கிப் பணிவாய்’ என்ற கேள்வி கேட்கப்பட்ட போது, சிறிதும் யோசிக்காமல், கபீர்தாசர் சொன்ன பதில் என்ன தெரியுமா? “நான் முதலில் குருவைத்தான் வணங்கிப் பணிவேன். ஏனென்றால், இறைவன் இருக்கிறார் என்பதையே எனக்கு குருதான் சொல்லித் தந்தார்” என்பதுதான் அந்த பதில்.

இதன் வழியில் வந்தது தான் ‘மாதா, பிதா, குரு, தெய்வம்’ என்னும் தத்துவம். அத்தகைய குருநிலையில் வைத்துதான் இன்று மக்கள்நல நோக்கத்துடன் நடைபயணம் மேற்கொண்டுள்ள தவத்திரு மகாஸ்ரமணார் அவர்கள், 800 க்கும் மேற்பட்ட துறவியர்களையும், பல்லாயிரக் கணக்கான சீடர்களையும் வழிநடத்தி வருகிறார். அவர்களைப் போலவே, மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கெல்லாம் குருவாக திகழ்ந்து எங்களையும், தமிழ்நாட்டு மக்களையும் வழி நடத்தி வருகிறார்கள்.

குரு நிலையில் வைத்துதான் மாண்புமிகு அம்மா அவர்களை நாங்கள் போற்றி துதிக்கின்றோம். தவத்திரு துளசி அடிகளாரைப்போல, அவருடைய சீடர் தவத்திரு மகாஸ்ரமண் அவர்களைப் போல, மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

அடிகளாரின் வழி ‘ஆன்மிக வழி’ மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழி ‘அரசியல் வழி’. இரண்டு வழிகளும் சேரும் இடம் ஒன்றுதான் – அதுதான் மக்கள் நலம் காக்கும் ‘அறம்’ ஆகும். தோன்றும் பொருட்கள் யாவும் ஒரு நாள் அழியக்கூடியதே. எனவே உடல் நலமாக உள்ளபோதே வீட்டிற்கும், நாட்டிற்கும் நன்மை தரும் அறச் செயல்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் போல் செய்ய வேண்டும்.

மகான்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு, அவர்களுடைய அறவழியில் நடந்தால், தனிமனிதனுக்கு துன்பமோ, நாட்டுக்கு குழப்பமோ, ஏற்பட வாய்ப்பில்லை. வெளிநாடுகளில் குறிப்பாக மேலை நாடுகளில் மக்களின் புறவாழ்க்கை ஆடம்பரமாகவும், இயந்திரத்தனமாகவும் இருக்கின்றது.

ஆனால், அகவாழ்க்கை போராட்டம் மிக்கதாகவும், அமைதியற்றதாகவும் இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். காரணம், அங்கே அமைதியாக வாழ வழிசொல்லும் மகான்களும், குருமார்களும் அதிகமாக தோன்றுவதில்லை. அதனால்தான், அந்நாட்டு மக்கள் மன இறுக்கத்தால் துயரம் அடைகிறார்கள்

ஆகவே, அவர்கள் மனஅமைதிக்காக ஞானிகளையும் மகான்களையும் குருமார்களையும் தேடி இந்தியாவிற்கு வருகிறார்கள். குறிப்பாக தமிழ்நாடுதான் அவர்களுக்கு சரணாலயமாக திகழ்கிறது. தமிழ்நாடுதான் அடைக்கலம் கொடுத்து அவர்களை அமைதிப்படுத்தி மகிழ்விக்கிறது.

அதனால்தான், 'பலவிதமான சாத்திரத்தின் மணம் பாரெங்கும் வீசும் தமிழ்நாடு' என்று பாரதியார் பாடினார்.

மனிதனிடம் தன்முனைப்பு அதிகரிக்க, அதிகரிக்க, பொருள், புலனின்பம், புகழ் என்னும் மாயையில் சிக்கிக் கொண்டு, இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்னும் பேராசையிலிருந்து விடுபட முடியாமல் மனம் தவிக்கிறது.

இந்தத் தவிப்பினால் சிந்தனையாற்றல் மயங்கி, பேராசை, சினம், கடும்பற்று, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய தீய குணங்கள் மனிதனுக்குள் உருவாகின்றன.

பேராசையாலும், ஆடம்பர மோகத்தாலும் மனம் சிதைந்து, இயந்திர வாழ்க்கைக்கு தள்ளப்பட்ட ஆயிரக்கணக்கான மேலை நாட்டினர். நமது மகான்களாலும் குருமார்களாலும் மடை மாற்றம்

செய்யப்பட்டு, தங்களை நமது பண்பாட்டோடு இணைத்துக் கொண்டு வாழ்வதை கண்கூடாகப் பார்க்கின்றோம். இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு மன்னர், அவர் சிறந்த வீரன் ஆகையால், தனது சாம்ராஜ்யத்தை அடிக்கடி விஸ்தரித்துக் கொண்டிருந்தார். அவர் வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து கிடைத்த வைரம், வைடூரியம், நவரத்தினம் ஆகிய கற்கள் மூலம் தனது கஜானாவை நிரப்பி இருந்தார். அதனால் அவரிடம் தற்பெருமை அதிகமாயிற்று. ஒரு நாள், ஒரு புகழ் பெற்ற துறவி அவரது அரண்மனைக்கு வந்தார். மன்னர், துறவியிடம், தான் வென்ற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட வைரக்கற்களை காட்டி மிகவும் பெருமைப்பட்டார். 'இதைவிட ஒளிவீசும் கற்களை கண்டதுண்டா' என்று கேட்டார். அதற்கு அந்த துறவி, 'ஆம், நான் இதைவிட சிறந்த கற்களை பார்த்திருக்கிறேன்' என்று கூறினார்.

உடனே அந்த மன்னர், 'நான் அதனை உடனடியாக பார்க்க வேண்டும்' என்று கூறினார். 'உடனே பார்க்கலாம், அதுவும் உங்கள் நாட்டின் எல்லையில்தான் உள்ளது' என்றார். பிறகு மன்னரை அந்த இடத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றார். ஊரின் எல்லையை அடைந்து அரண்மனைக்குச் சொந்தமான சத்திரத்திற்குள் அந்த துறவி புகுந்தார். அங்கு சென்று மன்னரிடம் தானியம் அரைக்கும் கல் ஒன்றினை காண்பித்து, "இது, வழிப்போக்கர்கள் இங்கு வந்து தங்கும்போது அவர்களுக்கு உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் கல். 'இந்தக் கல் உன்னிடம் உள்ள கல்லைவிட மிகவும் பெரியது' என்றார்.

"ஏனென்றால், உன் மூதாதையர் காலந்தொட்டு இந்தக் கல் இங்கே இருக்கிறது. இங்கு தங்குவோர் அனைவரின் பசியையும் போக்கி, அரச வம்சத்தின் புகழை ஞாபகப்படுத்துகிறது. பல பசியாறிய வழிப்போக்கர்கள் உன்னையும் உன் மூதாதையர்களையும் வாழ்த்தி வணங்கி விட்டுச் செல்கின்றனர். ஆனால், உன்னிடம்

உள்ள வைரக்கற்கள் அதை வைத்திருந்த அரசர்களை மட்டுமின்றி பல்லாயிராக்கணக்கான வீரர்களின் உயிர்களை பறித்தவை.

எனவே, பல்லாயிரக்கணக்கோரின் பசியை போக்கிய இந்த கல் சிறந்ததா? பல்லாயிரக் கணக்கானோரின் உயிரைப் பறித்து கொண்டு வரப்பட்ட இந்த வைரக்கற்கள் உயர்ந்ததா?"என்று அந்த துறவி, மன்னரிடம் கேட்டார்.

உடனே மன்னர், 'சுவாமி! தாங்கள் கூறுவது அனைத்தும் உண்மை. இனிமேல் நான் உயிர் உள்ளவரை போர் புரியமாட்டேன். அன்பே என் வழியாகக் கொண்டு வாழ்வேன்' என்று துறவியிடம் உறுதி அளித்தார்.

அதன் பின்னர் அவர் போர் புரிதலை விட்டொழித்து, அகிலம் போற்றும் மாமன்னராக திகழ்ந்தார். இந்த கதையின் மூலம், 'அன்பு' மற்றும் 'அறம்' ஆகியவைதான் என்றும் நிலைத்து இருப்பது என நாம் தெரிந்து கொள்ளலாம்.

எனவே, இன்றைய காலகட்டத்தில் சமுதாயத்தில் நடந்து வரும் தீமைகளையும், இழிவான செயல்களையும், தங்களுடைய தூய போதனைகளால் தடுத்து நிறுத்தி, மனிதனை செம்மைப்படுத்தும் நற்பணிகளை மேற்கொண்டு வருகின்ற, போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் உரிய தவத்திரு மகாஸ்ரமண் அவர்கள், தம் சீடர்களுடன் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்திருப்பதை நான் பெருமையாக கருதுகிறேன்.

தவத்திரு மகாஸ்ரமண் அவர்களின் அகிம்சை நடைப்பயணம் வெற்றி பெறவும், அவரது அறப்பணி தொடர்ந்து நடைபெற்று, மக்களுக்கு நலம் பயக்க வேண்டும் என்றும் நான் இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே, ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்த மரியாதைக்குரிய பி.ஆர்.ஓ. திருமதி மாலா காத்ரேலா அவர்களுக்கும், அவருக்கு துணை நின்றவர்களுக்கும்,

எனது மனமார, உளமார நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, அதுமட்டுமல்லாமல், சென்னையில் வசிக்கின்ற மக்களுக்கு, புயல், வெள்ள காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஜெயின் சமுதாயத்தை சேர்ந்த மக்கள், ஓடோடி வந்து அந்த காலகட்டத்தில் உதவி புரிந்ததை நன்றாக பார்க்க முடிந்தது. இந்த ஜெயின் சமுதாயத்தினரை பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். அப்படி நல்ல உள்ளம் படைத்தவர்களை என்றென்றும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 21.07.2018 அன்று*
சென்னையில் நடைபெற்ற ஆச்சார்ய ஸ்ரீ மஹாஸ்ரமண் அவர்களின்
சதுர்மாஸ் பிரவாஸ் விழாவில் ஆற்றிய உரை

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் கூடுதல் புலிகள் இருப்பிடம் திறப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.07.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், புலிகளை பார்வையாளர்கள் சிறப்பான முறையில் பார்வையிட 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் புலிகள் இருப்பிடம் மற்றும் 27 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிறுவர் பூங்கா ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், புதிதாக பிறந்த பெண் சிங்கக்குட்டிக்கு பெயர் சூட்டினார்கள்.

அழிவின் விளிம்பில் இருக்கும் விலங்குகளின் அடைப்பிட இனப்பெருக்கத்திற்கு அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா சிறந்த அமைப்பாக உள்ளது. மிகவும் அரிதான புலிகளை இனப்பெருக்கம் செய்வதில் இப்பூங்கா வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. தற்போது 26 புலிகளைக் கொண்ட இப்பூங்காவில், காட்டு இன புலிகள் மற்றும் வெள்ளைப் புலிகள் உள்ளது. இப்புலிகளை பார்வையாளர்கள் சிறப்பான முறையில் பார்வையிட 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 புலிகளை பராமரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் புலிகள் இருப்பிடம் மற்றும் இங்கு அதிகளவு சிறுவர்கள் வருவதையொட்டி, சிறுவர்களின் பொழுது போக்கிற்காக 27 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள

புதிய சிறுவர் பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் சிங்கங்கள் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு அவை இனப்பெருக்கம் செய்து வருகின்றன. சிவா என்ற ஆண் சிங்கத்திற்கும், நீலா என்ற பெண் சிங்கத்திற்கும் 27.01.2018 அன்று பெண் சிங்கக்குட்டி பிறந்தது. இந்த பெண் சிங்கக் குட்டிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் “ஜெயா'' என்று பெயர் சூட்டினார்கள்.

‘‘நீலா என்ற பெண் சிங்கத்திற்கும், சிவா என்று ஆண் சிங்கத்திற்கும் பிறந்த 6 மாத பெண் சிங்கக்குட்டிக்கு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, “ஜெயா'' என்று பெயர் சூட்டப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலங்குகள் மீது மிகுந்த பாசம் கொண்டவர். இந்த உயிரியல் பூங்கா சிறந்து விளங்குவதற்காக பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த வண்டலூர் உயிரியல் பூங்காவில் 17 சிங்கங்கள் இருக்கின்றன, அதில் 10 பெண் சிங்கமும், 7 ஆண் சிங்கமும் இருக்கின்றன. அதுமட்டுமல்ல, கிட்டத்தட்ட இந்த வண்டலூர் உயிரியல் பூங்காவில் 193 வகையான விலங்குகள் இருக்கின்றன. மொத்தம் 2,410 விலங்குகள் இருக்கின்றது. அதோடு 46 வகையான பறவைகள் இந்த உயிரியல் பூங்காவில் வளர்க்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் பார்வைக்காகவும், அவர்கள் கண்டுகளிப்பதற்காகவும் வண்டலூர் உயிரியல் பூங்காவில், விலங்குகளும், பறவைகளும் அரசால் சிறப்பான முறையிலே பேணிக்காத்து வளர்க்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இங்கே வருகின்ற சுற்றுலா பயணிகள் கண்டுகளிப்பதற்காக காண்டாமிருகம் ஒன்று பீஹார் மாநிலத்திலிருந்து பாட்னா உயிரியியல் பூங்காவிலிருந்து பெறப்பட்டு நம்முடைய உயிரியில் பூங்காவிற்கு விரைவில் கொண்டு வரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் பங்குபெற்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மருத்துவர் சி.விஜயபாஸ்கர் அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்களுக்கும், வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைச் செயலாளர், வனத்துறையின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், வருகை தந்திருக்கின்ற முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், கழகத்தினுடைய முக்கிய நிருவாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முக்கிய முன்னாள் நிருவாகிகள், கூட்டுறவு சங்கப் பிரதிநிதிகள் இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று புகைப்படம் எடுக்கின்ற நம்முடைய நிருபர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் மனமாற, உளமாற பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
24.07.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், கூடுதல் புலிகள் இருப்பிடம் மற்றும் சிறுவர் பூங்கா ஆகியவற்றைத் திறந்து வைத்து, புதியதாகப் பிறந்த பெண் சிங்கக்குட்டிக்கு பெயர் சூட்டி ஆற்றிய உரை.

கடைக்கோடி கிராமத்தில் வசிக்கின்ற ஏழை, எளிய மாணவ, மாணவியர்களுக்கும் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி கிடைக்க வேண்டும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியிலே நடைபெறுகின்ற அம்மாவினுடைய அரசு கல்வியை மையமாக வைத்துத்தான் இருக்கிறது. எந்த ஒரு மாநிலத்தில் கல்வியாளர்கள் அதிகம் இருக்கின்றார்களோ அந்த மாநிலம் வளர்ச்சி பெறும், பொருளாதார மேம்பாடு அடையும், அமைதி நிலவும். நம்முடைய மாநில மக்களுக்கு கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே அதிக நிதி ஒதுக்கித் தந்தார்கள். அதைத் தொடர்ந்து அம்மாவினுடைய அரசும் கல்விக்கும், உயர்கல்விக்கும் மற்ற துறையைக் காட்டிலும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து, இந்தத் துறையின் மூலமாக எண்ணற்ற மாணவ, மாணவியர்கள் கல்வி பயில வேண்டுமென்பதற்காக அதிக நிதியை கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன். இந்தப் பகுதியில் தொழில்நுட்ப கல்லூரி உருவாக்க வேண்டுமென்று நீங்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி

ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் மையமாக இருக்கக்கூடிய இந்த வனவாசி பகுதியை தேர்ந்தெடுத்து, அற்புதமான பாலிடெக்னிக் கல்லூரிக்கு நான் கடந்த வருடம் அடிக்கல் நாட்டினேன். இப்பொழுது உங்களுடைய மகத்தான ஆதரவிலே அதனை திறந்து வைத்திருக்கின்றோம். அம்மாவினுடைய அரசு எப்படி சாதனை படைத்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த ஆண்டு இந்தக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, துரிதமாக, வேகமாக பணிகள் நடைபெற்று, அனுமதி வழங்கி, இந்தக் கல்லூரியை நாங்கள் துவக்கியிருக்கின்றோம், இதுதான் சாதனை. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே 65 அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளை கொடுத்தார்கள். அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கடைக்கோடியில் இருக்கின்ற, கிராமத்திலே வாழ்கின்ற குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்களுக்கு எல்லாம் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி கிடைக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான், அரசாங்கமே இன்றைக்கு கல்லூரியை திறந்து, அவர்களுடைய வாழ்க்கையை மேம்பாடு செய்ய வழிவகை செய்திருக்கிறது.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இத்தனை கல்லூரிகளை திறந்தார்களா? இத்தனை ஏழை மாணவர்கள் உயர்கல்வி படித்தார்களா? என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கல்லூரி திறந்து ஐந்தே நாட்களில் 200 நபர்கள் சேர்க்கை நடந்திருக்கிறது, 300 நபர்கள் சேர்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது, சிவில் இன்ஜினியிரிங், கம்ப்யூட்டர் இன்ஜினியரிங், எலக்ட்ரிகள் & எலக்ட்ரானிக் இன்ஜினியரிங், எலக்ட்ரானிக் & கம்யூனிகேஷன் இன்ஜினியரிங், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் என ஐந்து பாடத் திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளது, இது ஒரு பெரிய சாதனை. இதற்காக இன்றைக்கு அம்மாவினுடைய

அரசு ரூ.56 கோடியில் இந்த பாலிடெக்னிக் கல்லூரியை உருவாக்கித் தந்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு, அரசு கலை கல்லூரியை அம்மா கொடுத்தார்கள், இதில் இன்றைக்கு 1,300 பேர் படிக்கிறார்கள். அதோடு பி.எட். கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், எட்டுகோட்டைமேட்டில் பி.எட். கல்லூரி கட்டிக் கொண்டிருக்கிறோம், அடுத்த ஆண்டு திறக்கப்படும். எட்டுக்கோட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டையும் இன்னும் ஒரு வருடத்தில் திறக்கப்படும்.

ஏற்கெனவே நாங்கள் வாக்கு சேகரிக்கும்பொழுது, எல்லா கிராமங்கள், பேரூராட்சிகளுக்கு செல்லும்பொழுதும், அங்கிருந்த மக்கள் “எங்களுக்கு இருக்கும் தண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டும்” என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலகட்டத்தில் இதைத் தெரிவித்தேன். எங்களுக்கு குடிப்பதற்கு நீர் கிடைக்கவில்லை. ஆகவே, பாதுகாக்கப்பட்ட காவேரி தண்ணீர் வழங்குவதற்கு நீங்கள் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அந்த கோரிக்கையின் அடிப்படையில், மேச்சேரி, நங்கவள்ளி இரண்டு ஊராட்சி ஒன்றியங்களையும் உள்ளடக்கி கூட்டுக் குடிநீர் திட்டத்தை அறிவித்தார்கள். கிட்டதட்ட ரூ.158.64 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அருமையான டேங்க் கட்டிக் கொண்டிருக்கிறோம், இதுபோல, பல டேங்க் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு மாதத்தில் இந்தப் பணி முடிவுற்று மேச்சேரி ஒன்றியம், நங்கவள்ளி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் அனைத்திற்கும் பாதுகாக்கப்பட்ட நிலையான காவேரி தண்ணீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற திட்டங்கள் எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட 51 புதிய குடியிருப்புகளுக்கு சுமார் 11,302 மக்கள் பயன்பெறும் வகையில் 327 குடியிருப்புகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்திலிருந்து குழாய் நீடிப்பு செய்யப்பட்டு, அதற்காக ஒன்பதரை கோடி ரூபாய் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணியும் விரைவில் தொடங்கப்பட இருக்கின்றது. ஜலகண்டபுரத்தில் செப்டேஜ் மேனேஜ்மெண்ட் செயல் திட்டத்தில் ரூ.2.9 கோடியில் கசடு மேலாண்மை திட்டத்தை அமல்படுத்த இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கழகத்தினுடைய முன்னோடி நிருவாகிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, நங்கவள்ளியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். 20 கிலோ மீட்டர் சுற்றளவில் பெரிய ஊர்கள் கொண்ட பகுதியாக இந்தப் பகுதி இருக்கிறது. இங்கு ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், உடனடியாக இங்கு வந்து தீயை அணைக்கக்கூடிய அளவிற்கு இந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு தமிழ்நாட்டில் மொத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் எண்ணிக்கை 326 தற்போது புதிதாக திறக்கப்பட்ட நங்கவள்ளி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தை சேர்த்து,

இப்பொழுது 327 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இருக்கின்றது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுதே, உயரத்தில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், அதை அணைப்பதற்காக 104 மீட்டர் உயரம், கிட்டத்தட்ட 350 அடி உயரத்தில் ஏதாவது விபத்து ஏற்பட்டால் கூட, அதை அணைக்கக்கூடிய அளவிற்கான ஊர்தியை வாங்கியிருக்கிறோம். இந்தியாவிலேயே நம்முடைய மாநிலம்தான் இந்த ஊர்தியை வாங்கியிருக்கிறது. இது அம்மாவினுடைய ஆட்சியில் போடப்பட்ட இந்தத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது. இன்றைக்கு தீயணைப்புத் துறையை பொறுத்தவரையில் 7,225 நபர்கள் இருக்கிறார்கள், பெண் தீயணைப்பு வீரர்கள் ஒருவரும் இல்லை, 9 பெண் நிலைய அலுவலர்கள், 2 பெண் துணை இயக்குநர்கள் இருக்கிறார்கள். அம்மாவினுடைய அரசு 2013ஆம் ஆண்டு 791 நபர்களும், 2017ஆம் ஆண்டு 1,434 நபர்களும், ஆக மொத்தம் 2,225 நபர்களும் இந்த தீயணைப்புத் துறையில் புதிதாக அலுவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு இணைக்கப்பட்டிருக்கின்றார்கள். தீயை அணைத்தல் தவிர, பொதுமக்களுக்கு வெள்ளக் காலங்களில், விபத்துக் காலங்களில் எவ்வாறு செயல்படுவது என்ற விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சிகள், பொருட்காட்சி மேடை நாடகங்கள், குறும்படங்கள் மூலம் பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், குடிசைப் பகுதிகள் மற்றும் அடுக்குமாடி கட்டடப் பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்றன. 2017ஆம் ஆண்டில் தீ தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் 4,881 கல்வி நிறுவனங்கள், 4,095 தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் கிட்டத்தட்ட 9,076 இடங்களில் நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, தீ விபத்து ஏற்பட்டால், எப்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக மேற்கொள்ள வேண்டுமென்ற விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதற்காக, அம்மாவினுடைய அரசால் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். நியாய விலைக் கடைகள் கட்டுவதில் ரூ.307.15 இலட்சத்தில், 42 எண்ணிக்கையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய அங்கன்வாடி கட்டடம் ரூ.72.80 இலட்சத்தில் 13 எண்ணிக்கையிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பல்நோக்கு மைய கட்டடம் ரூ.53.58 இலட்சம் மதிப்பீட்டில் 7 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. சமுதாயக்கூடம் ரூ.58.50 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய கால்நடை மருந்தகங்கள், புதிய கால்நடை கட்டடங்கள் கச்சுப்பள்ளி, பக்கநாடு மற்றும் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டு திறக்கப்பட்டன. அணுகுசாலை அமைக்க ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் 1 பணி மேற்கொள்ளப்பட்டது. பொது சுகாதார வளாக கட்டடம் ரூ.54.35 இலட்சம் மதிப்பீட்டில் 7 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சிமெண்ட் கான்க்ரீட் சாலை ரூ.67.90 இலட்சம் மதிப்பீட்டில் 18 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவதில் ரூ.60.20 இலட்சம் மதிப்பீட்டில் 16 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிகளில் மிதிவண்டி நிறுத்தும் கூடம் அமைத்தல் ரூ.64.10 இலட்சம் மதிப்பீட்டில் 16 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல் ரூ.32.75 இலட்சம் மதிப்பீட்டில் 6 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சிறு மின்விசைபம்பு அமைத்தல் ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில் 1 பணி மேற்கொள்ளப்பட்டது. புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் ரூ.149.70 இலட்சம் மதிப்பீட்டில் 58 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தார் சாலை புதுப்பித்தல் ரூ.98.74 இலட்சம் மதிப்பீட்டில் 11 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பழுதடைந்த வீடுகளை புதுப்பித்தல் ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்

ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் 2 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஈரடுக்கு தார்சாலை அமைத்தல் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் 2 எண்ணிக்கையிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுமட்டுமல்லாமல், இன்னும் பல்வேறு கிராம சாலைகள் சீர் செய்யப்பட்டு வருகிறது. அங்கன்வாடி மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் பணிகள் ரூ.31.93 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன.

தேர்தல் நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிக்குச் செல்கின்றபொழுது, 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம், மழைக்காலத்தில் மேற்கூரை வழியாக நீர் வடிகிறது. எனவே, மேற்கூரையை அப்புறப்படுத்திவிட்டு, நல்ல கூரை அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கின்ற 25 ஆண்டுகளுக்கு மேல் இருக்கின்ற 45,000 வீடுகளுக்கு கூரைகளை மாற்றிக் கொடுத்து, சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலே, உபரிநீரை, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற வறட்சியான பகுதிக்கு, ஏரிகளில் நிரப்பி, அதன் மூலமாக நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து, விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்கும்,

பாசனத்திற்கும், குடிப்பதற்கும் தேவையான நீர் கிடைக்க வழிவகை செய்வதற்காக திட்டம் தீட்டப்பட்டது. இதற்கு ஆரம்ப கட்டமாக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடும் செய்யப்பட்டது. அந்தத் திட்டம் துரிதமாக நடைபெற வேண்டும் என்பதற்காக, 2 மாதத்திற்கு முன்பு, ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர்களின் குழுவை அமைத்து, அவர்களுக்கு தேவையான வசதிகள் எல்லாம் செய்து கொடுத்து, அவர்கள் இந்தப் பணியை மேற்கொள்ள இருக்கின்றார்கள். மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை எடுத்து, கிட்டத்தட்ட 93 ஏரிகள், எந்தெந்த பகுதிக்கு தண்ணீரை கொண்டு செல்ல முடியுமோ அந்தப் பகுதிகளில் தண்ணீர் சேர்ப்பதற்கெல்லாம் இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது. இந்தத் திட்டம் பெரிய திட்டமாதலால், சர்வே செய்து கொண்டிருக்கிறார்கள், இந்தப் பணிக்கு வேண்டிய அதிகாரிகள், பொறியாளர்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தால், இதை விரைவாக செயல்படுத்த வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு ஓய்வு பெற்ற தலைமை பொறியாளர்களின் குழுவை அமைத்திருக்கிறது. இப்பணிகளை துரிதமாக மேற்கொண்டு நிறைவேற்றித் தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல விவசாயிகள் வண்டல் மண்ணை இயற்கை உரமாக பயன்படுத்தக்கூடியது கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, ஏரி, குளங்களில் இருக்கின்ற வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்து இயற்கை உரமாக பயன்படுத்த குடிமராத்துத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். பரீட்சார்த்த முறையில், முதற்கட்டமாக ரூ.100 கோடி செலவில் 1,519 ஏரிகள் தேர்வு செய்து பராமரிப்புப் பணியை மேற்கொண்டோம். வெற்றிகரமாக, அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களிடமும், பொதுமக்களிடமும் வரவேற்பு கிடைத்ததால், இந்த ஆண்டு ரூ.328 கோடி இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றது. விவசாயிகளே இந்த பணியை மேற்கொள்வார்கள், டெண்டர் கிடையாது. டெண்டர்

முறையை மாற்றி, விவசாயிகளின் பங்களிப்போடு குடிமராமத்துத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டு அதை நடைமுறைப்படுத்தி இருக்கின்றோம். ஏரிகளோ, குளங்களோ, அந்தந்தப்பகுதியிலே இருக்கின்ற பாசனம் பெறுகின்ற விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்த்து குழு அமைத்திருக்கின்றார்கள். அக்குழுவில் பதிவு செய்கின்ற விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் கிடைக்கும். ஏரிகள், குளங்களில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தேவையான நிதிகள் அம்மாவினுடைய அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மூன்று ஆண்டுகாலத் திட்டமாக, ஓடைகள், நதிகளின் வழியாக ஓடுகின்ற நீர் பருவமழை காலங்களில் அதிகமாக மழை பொழிகின்றபொழுது கிடைக்கின்ற நீர் கடலிலே கலப்பதைத் தடுப்பதற்கு எந்தெந்த பகுதிகளில் தடுப்பணை கட்டலாம் என்பதை ஆராய்ந்து, ஆய்வு செய்து தடுப்பணை கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும். நதியின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கி, மூன்றாண்டுகளில் இந்த திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டங்களை நிறைவேற்றுகின்ற பொழுது, பொழிகின்ற மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் பார்த்துக்கொள்ளும் நிலையிலே அரசு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவினுடைய அரசு தொடர்ந்து விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கின்ற அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அம்மாவினுடைய அரசைப் பொறுத்த வரையில், மக்கள் நினைப்பதை செயல்படுத்துகின்றோம். அம்மா அவர்கள் போராடி, வாதாடி, காவேரி மேலாண்மை ஆணையத்தை பெற்ற அரசு அம்மாவினுடைய அரசு. ஓராண்டு, ஈராண்டு அல்ல, பல ஆண்டு காலமாக போராடி வந்த போராட்டத்திற்கு

முடிவு கிடைத்திருக்கிறது. நமக்குக் கிடைக்ககூடிய பங்கு நீரை பெற்றுத் தருவதற்கு அம்மாவினுடைய அரசு போராடி, தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் கருதி நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கு நீரை கருநாடக அரசிடமிருந்து பெறுவதற்காக 4 நாட்கள் தன் உடல்நிலையைகூட பொருட்படுத்தாமல் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த வகையிலே அம்மாவினுடைய அரசு, அம்மா அவர்கள் இருந்தபொழுது, உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் அடிப்படையிலே இன்றைக்கு தீர்ப்பைப் பெற்று அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும் அமைக்கப்பட்டு, இரண்டு கூட்டமும் நடைபெற்று முடிந்திருக்கிறது. இந்த இரண்டு கூட்டங்களிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் நமக்கு காவேரியில் கிடைக்க வேண்டிய நீரை கருநாடக அரசு திறந்துவிட வேண்டுமென கூறி உச்சநீதிமன்றம் மூலமாக தீர்ப்பை அம்மாவினுடைய அரசு பெற்றுத்தந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அதுமட்டுமல்ல, இறைவனும் நமக்கு பக்கபலமாக இருக்கிறார். கருநாடக அரசு தண்ணீர் தந்தாலும், தராவிட்டாலும் இயற்கை நமக்கு சாதகமாக உள்ளது. எல்லாம்வல்ல இறைவனின் அருளாலும்,

வருண பகவானுடைய ஆசியாலும் நல்ல மழை பொழிந்து மேட்டூர் அணையில் 30 நாளில் 120 அடி உயர்ந்து உபரி நீர் வெளியேறிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நல்ல சூழ்நிலை எல்லா அணைகளும், பரம்பிக்குளம், ஆழியாறு, அமராவதி, பவானிசாகர், மணிமுத்தாறு இப்படிப் பல ஆறுகளின் அணைகள் எல்லாம் நிரம்பிக் கொண்டிருக்கிறது. இறைவன் அரசுக்கு துணை நிற்கின்றார், மக்கள் துணை நிற்கின்றார்கள். எவர் தடுத்தாலும், எந்தப் போராட்டம் நடத்தினாலும் அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் மக்கள்தான் எஜமானர்கள், மக்கள்தான் நீதிபதிகள், அவர்கள் அளிக்கின்ற தீர்ப்புக்கு அம்மாவினுடைய அரசு கட்டுப்பட்டு, மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசாக செயல்படும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கக் கூடிய அரசு அம்மாவினுடைய அரசு. 234 தொகுதிகளிலும் இருக்கக்கூடிய மக்களை, முதலமைச்சர் என்ற முறையில் சென்று பார்க்கக்கூடிய பொறுப்பில் இருக்கின்றேன். அதுமட்டுமல்ல, 234 தொகுதிக்கும் கிடைக்கப்பெறாத வாய்ப்பை, எடப்பாடி சட்டமன்ற தொகுதி முதலமைச்சர் என்ற வாய்ப்பை பெற்றிருக்கிறது. இந்த வாய்ப்பின் அடிப்படையில்தான் பல்வேறு திட்டங்கள், சாலைகள், பாலங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு மக்களுடைய அரசு, மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்ற அரசு. ஏழை, எளிய மக்களின் நன்மைக்காக பாடுபடுகின்ற அரசாக இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
27.07.2018 அன்று சேலம் மாவட்டம்,
வனவாசியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை

நடப்பு நிதியாண்டில் காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.7,877.58 கோடி

இங்கே ஒரு புதிய காவல் நிலையம் வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில், இன்றையதினம் அம்மாவினுடைய அரசு புதிய காவல் நிலையம் துவக்கி, உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சட்டப்பேரவை உறுப்பினர்கள், மாநில கூட்டுறவு வங்கித் தலைவர் மற்றும் பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இன்றையதினம், வாழப்பாடியில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வில்லாலபுரம் அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக் கூடமும் இன்றையதினம் திறக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற காவல் துறை இயக்குநர் அவர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! மேற்கு மண்டல காவல் துறை தலைவர் அவர்களே! சேலம் சரக காவல் துறை துணைத் தலைவர் அவர்களே! சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே!

மேட்டூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு.செம்மலை அவர்களே! சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.வெங்கடாசலம் அவர்களே! சகோதரி மனோன்மணி அவர்களே! திரு.வெற்றிவேல் அவர்களே, திரு.ராஜா அவர்களே! சகோதரி கு.சித்ரா அவர்களே! திரு.மருதமுத்து அவர்களே! திரு.சின்னத்தம்பி அவர்களே! மாநில கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே! சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களே!

முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் திரு.கே.கே.மணி அவர்களே! முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சகோதரர் திரு. ராஜேந்திரன் அவர்களே! பெரியோர்களே, தாய்மார்களே, நிர்வாகிகளே, காவல் துறையைச் சேர்ந்த நண்பர்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அத்தனை பேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் காலையில் துவங்கி மாலை வரை எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ஏற்கெனவே துவங்கப்பட்ட பணிகள் நிறைவு பெற்று திறப்பு விழா செய்தும், இப்பொழுது புதிய காவல் நிலையத்தை துவக்கி நிறைவு செய்கின்ற வேளை, காலையிலே நங்கவள்ளியிலே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் புதிதாகத் துவங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வனவாசியில் புதிதாக பாலிடெக்னிக் கல்லூரி

ஒன்றும் இன்றையதினம் துவங்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட 4 நாளில், 300 நபர்களுக்கு, 205 நபர்கள் கல்லூரியில் படிப்பதற்காக விண்ணப்பம் செய்திருக்கின்றார்கள். கல்லூரி கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசால் ரூபாய் 56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நம்முடைய சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே, பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். அந்தக் கல்லூரியை மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் மையமாக இருக்கக்கூடிய வனவாசி பகுதியை தேர்ந்தெடுத்து அமைத்த காரணத்தினாலே, மூன்று தொகுதியிலிருந்தும் மாணவர்கள் அந்த கல்லூரியில் சேருகின்றார்கள். இந்தக் கல்லூரி துவங்கப்பட்ட காரணத்தினால் விவசாயம் மற்றும் நெசவுத் தொழிலை செய்யக்கூடிய ஏழை குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

அதேபோல, பல்கலைக் கழகத்தில் உறுப்புக் கல்லூரிகளாக இருந்த 41 கல்லூரிகளை, ஆண்டொன்றுக்கு ரூபாய் 152 கோடி தொடர் செலவினமாக, அரசுக்கு கூடுதல் செலவினமாக இருந்தாலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்பதற்காக அரசு கல்லூரியாக இந்த ஆண்டு நான் அறிவித்தேன். அதேபோல, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். பல்வேறு அரசுத் துறைகளைக்காட்டிலும் கல்வித் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு அரசு செய்திருக்கிறது. அடுத்த ஆண்டு, கொங்கணாபுரம் தொகுதிக்குட்பட்ட எட்டிக்குட்டைமேட்டில் புதிதாக ஒரு பி.எட். கல்லூரி திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எட்டிகுட்டைமேட்டில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம், அது ஒரு வருடத்தில்

ஏற்படுத்தப்பட்டு அங்கே சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று பிரம்மாண்டமாக அமைக்கப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செங்கோடிலிருந்து ஓமலூர் வரை கொங்கணாபுரத்தின் வழியாக நான்கு வழிச்சாலை செல்ல இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் மொத்த காவல் நிலையங்கள் 1,342, அதில் 5 வகை காவல் நிலையங்கள் உள்ளன. இலகுவகை காவல் நிலையம், மிதவகை காவல் நிலையம், கனவகை காவல் நிலையம், மெட்ரோ வகை–2 காவல் நிலையம், அனைத்து மகளிர் காவல் நிலையம். போக்குவரத்து காவல் நிலையங்கள் 266. தற்போது புதிதாக கொங்கணாபுரத்தில் துவக்கப்பட்ட காவல் நிலையத்தோடு சேர்த்து 1,343ஆவது காவல் நிலையமாக திறக்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, வாழப்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்திலே 201ஆவது காவல் நிலையமாக வாழப்பாடியில் அனைத்து மகளிர் காவல் நிலையமாக திறக்கப்பட்டுள்ளது. காவல் துறை இயக்குநர் முதல் இரண்டாம் நிலை காவலர்கள் வரை மொத்த காவலர்களுடைய எண்ணிக்கை 01.07.2018இன்படி 1 இலட்சத்து 24 ஆயிரத்து 236, தற்போது பணியிலுள்ள காவலர்களுடைய எண்ணிக்கை 1 இலட்சத்து 12 ஆயிரத்து 728, ஆண்கள் 94 ஆயிரத்து 321, பெண்கள் 18 ஆயிரத்து 407, காலிப் பணியிடங்கள் 11 ஆயிரத்து 508. மற்ற மாநிலங்களோடு தமிழகத்தை ஒப்பிட்டும் பார்க்கும்பொழுது, 1 இலட்சம் மக்களுக்கு, தமிழகத்தில் 195.4 காவலர்கள், பீகாரில் 107.7 காவலர்கள், ராஜஸ்தானில் 142.1 காவலர்கள், மேற்கு வங்காளத்தில் 143.4 காவலர்கள், குஜராத்தில் 168.9 காவலர்கள், கேரளாவில் 178.2 காவலர்கள், கர்நாடகத்தில் 183.2 காவலர்கள், உத்திரப்பிரதேசத்தில் 187.8 காவலர்கள், அம்மா அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட 2011–லிருந்து

2017வரை 32,905 காவலர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்கள். உதவி ஆய்வாளர்களைப் பொறுத்தவரைக்கும் 2015ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டுவரை 1,112 நபர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். காவல் துணை கண்காணிப்பாளர்கள் 2012ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை 99 நபர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றார்கள். சேலம் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 31 காவல் நிலையங்களில், 5 மகளிர் காவல் நிலையங்கள், 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள். சேலம் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 15 மாநகர காவல் நிலையங்களில், 3 மகளிர் காவல் நிலையங்கள், 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள்.

2010ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காவல் துறைக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு ரூபாய் 2,962 கோடிதான். 2018–2019ஆம் ஆண்டு அம்மாவினுடைய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 7,877.58 கோடி. அதாவது, 166 சதவிகிதம் அதிகப்படுத்தி கொடுத்திருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழக காவல் துறையின் சாதனைகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட சட்டம்–ஒழுங்கு பராமரிப்புப் பணியை மேம்படுத்தி, பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும்வகையில் சட்டத்தின் ஆட்சியை மீண்டும் கொண்டு வந்து கடந்த 7 ஆண்டுகளாக பொது அமைதியை பராமரித்து வருகிறோம்.

முல்லைப் பெரியாறு அணை, கூடங்குளம் அணுமின் நிலையம் எதிர்ப்பு, கெயில் நிறுவனம் எதிர்ப்பு, ஜல்லிக்கட்டு, எதற்கெடுத்தாலும் போராட்டம் என அனைத்து போராட்டங்களையும் அமைதியான முறையில் பொதுமக்களுக்கு அதிக இடையூறு இல்லாமல் நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நில அபகரிப்பு புகார்களை விசாரிக்க தனியாக பிரிவு துவங்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வீரபாண்டி

ஆறுமுகம், என்.கே.கே.பி.ராஜா, ஜெ.அன்பழகன், ரெங்கநாதன், உடுமலைப்பேட்டை முன்னாள் நகர்மன்றத் தலைவர் வேலுச்சாமி, மதுரை மாவட்ட முன்னாள் செயலாளர் தளபதி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அட்டாக் பாண்டி, எஸ்.ஆர்.கோபி உட்பட பலர் மீது நில அபகரிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

31.01.2016 வரை 3,203 வழக்குகள் பதிவு செய்து, 3,100 எதிரிகள் கைது செய்யப்பட்டு, 3,646 கோடி ரூபாய் மதிப்புள்ள 5,181 ஏக்கர் நிலம் மற்றும் 34,91,099 சதுர அடி வீட்டு மனைகள் மீட்கப்பட்டு, 2,775 நில உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இன்றைக்கு அகில இந்திய அளவில் நம்முடைய காவலர்கள் பெற்ற பரிசுகள் விவரங்களை தெரிவிக்க விரும்புகின்றேன். அகில இந்திய காவல் திறனாய்வுப் போட்டியில் பதக்கங்கள் வெல்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக, தங்கப்பதக்கம் வெல்பவருக்கு 5 இலட்சம் ரூபாயும், வெள்ளி பதக்கம் வெல்பவருக்கு 3 இலட்சம் ரூபாயும், வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு 2 இலட்சம் ரூபாயும், குழுப் போட்டியில் செயல்படுபவர்களுக்கு முறையே ரூ.50,000, ரூ.30,000, ரூ.20,000ஆக அதிகரித்து ஆணையிடப்பட்டன. 2012ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலம், நாசிக்–ல் நடைபெற்ற 55ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் 2 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்கள், 2 சுழல் கோப்பைகள் வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்க்கப்பட்டிருக்கின்றன. 2013இல் போபாலில் நடைபெற்ற 56ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில், மொத்தமுள்ள 54 பதக்கங்களில், 5 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலம் என 14 பதக்கங்கள் பெற்று, அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று காவலர்கள் பெருமை சேர்த்துள்ளார்கள். 2014இல் அரியானாவில் நடைபெற்ற 57ஆவது அகில இந்தியா காவல் பணித்திறன் போட்டியில், 13 தங்கம், 9 வெள்ளி, 6 வெண்கலம் மற்றும் 7 கோப்பைகள் பெற்றது. 2015இல் பஞ்சாபில் 58ஆவது அகில இந்திய

காவல் பணித்திறன் போட்டியில் 6 தங்கம், 4 வெள்ளி, 1 வெண்கலம் மற்றும் 3 கோப்பைகள் பெற்றது. 2015இல் அரியானாவில் நடைபெற்ற 59–வது அகில இந்தியா காவல் பணித்திறன் போட்டியில் 7 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் மற்றும் 5 கோப்பைகள் பெற்றது. பிப்ரவரி 2014இல்அஸ்ஸாம் மாநிலத்தில் நடைபெற்ற அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டியில், 22 வீரர்கள் கலந்து கொண்டு, ஒட்டுமொத்த பிரிவில் மாண்புமிகு முதலமைச்சரின் கோப்பையை வென்றது.

2016ஆம் ஆண்டு தேசிய குற்ற ஆவணத்தின் அடிப்டையின்படி, பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் நகரமாக கோயம்புத்தூர் நகரமும், மெட்ரோ நகரில் சென்னை முதல் மாநகரமாக உள்ளது. இதிலிருந்து, நாட்டிலேயே பெண்களுக்கு பாதுகாப்பாக உள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளிவிவரத்தின்படி, களவு போன சொத்துக்களை மீட்பதில் 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் அகில இந்திய அளவில், தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அகில இந்திய அளவில், சிறந்த காவல் நிலையங்களை தேர்வு செய்ய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நடைபெற்ற தேர்வில், கோவை மாநகர ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம், நாட்டிலேயே முதலாவது சிறந்த காவல் நிலையமாகவும், சென்னை, அண்ணா நகர் காவல் நிலையம், ஐந்தாவது சிறந்த காவல் நிலையமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நமக்கு காவல் துறை மூலமாக புகழும், பெருமையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாநகர பகுதிகளிலே குற்ற நிகழ்வுகளை எளிதாக கண்டுபிடிப்பதற்கு, இன்றைக்கு சிசிடிவி

கேமராக்கள் எல்லா பெருநகரங்களிலும் பொருத்தப்பட்டு வருகின்றன. எந்த அளவில் குற்றம் நிகழ்ந்தாலும், அந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி விடும். அதன் மூலம் யார் அந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்று எளிதில் கண்டுபிடித்து அவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து, தகுந்த தண்டனையும் பெற்றுத் தருவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய ஆலோசனை வழங்கி, அதன் பேரிலே நம்முடைய காவல் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, பயிரை காப்பதற்கு வேலி எப்படி பாதுகாப்பாக அமைகிறதோ, அதுபோல, மக்களை காப்பதற்கு காவல் துறை மிக அவசியம், அந்தக் காவல் துறை தமிழகத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த காவல் துறை இயக்குநர் அவர்களுக்கும், அவருடன் இணைந்து பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், காவல் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.07.2018 அன்று,*
சேலம், கொங்கணாபுரத்தில் புதிய காவல் நிலையத்தைத்
திறந்து வைத்து ஆற்றிய உரை

அரசுக்கும் பொதுமக்களுக்கும் பாலமாக இருப்பது அரசு பொருட்காட்சி!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, சேலம் அரசு பொருட்காட்சி தொடக்கவிழா மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்புமிக்க தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு வரவேற்புரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் அவர்களே! மற்றும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி.பன்னீர்செல்வம் அவர்களே! நாமக்கல் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களே! மேட்டூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு.செ.செம்மலை அவர்களே! சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கோ. வெங்கடாசலம் அவர்களே! சேலம் தெற்கு சட்டமன்றத்

தொகுதி உறுப்பினர் திரு. ஏ.பி.சக்திவேல் அவர்களே! வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திருமதி பி.மனோன்மணி அவர்களே! சங்ககிரி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. எஸ்.ராஜா அவர்களே! ஓமலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. எஸ்.வெற்றிவேல் அவர்களே! ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ஆர்.எம்.சின்னதம்பி அவர்களே! கங்கவல்லி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. அ.மருதமுத்து அவர்களே! ஏற்காடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திருமதி கு.சித்ரா அவர்களே! தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி தலைவர் திரு. ஆர்.இளங்கோவன் அவர்களே! மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்று நன்றியுரை ஆற்ற இருக்கின்ற சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரோஹிணி அவர்களே! சேலம் மாநகராட்சி ஆணையாளர் திரு. ரெ.சதீஷ் அவர்களே! முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் எம்.செல்வராஜ் அவர்களே! முன்னாள் மேயர் சவுண்டப்பன் அவர்களே! முன்னாள் துணை மேயர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.நடேசன் அவர்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! வருகை தந்திருக்கின்ற கழகத்தின் முன்னோடி நிருவாகிகளே, அரசு அலுவலர்களே! உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளே! கூட்டுறவு சங்க நிர்வாகிகளே அரசு அலுவலர்களே! கழகத்தில் பல்வேறு பொறுப்புக்களில் இருக்கின்ற நிருவாகிகளே அரசு அலுவலர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே! நலத்திட்ட உதவி பெறுகின்ற நண்பர்களே! அரசு அலுவலர்களே! தாய்மார்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு சிறப்பு உள்ளது. சேலம் மாவட்டத்திற்கென்று தனிச் சிறப்பு உண்டு. பல தொழில்கள் நடைபெறும் ஒரு கதம்ப மாவட்டம்தான் சேலம் மாவட்டம். இங்கு விவசாயம் முதன்மையான தொழிலாக

நடைபெற்றாலும் சிறு, குறு தொழில்களும், இரும்பு மற்றும் டெக்ஸ்டைல்ஸ் தொழில்களும் அதிகமாக நடைபெறுகின்றன. உடல் உழைப்பை மட்டுமே நம்பி வாழ்கின்ற மக்கள் சேலம் மாவட்ட மக்கள். சேலம் மாவட்டத்தின் வலிமையும், எனக்கு நன்றாகத் தெரியும். அதன் வளமையும் எனக்கு நன்றாகத் தெரியும்.

காரணம், நான் இந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவன் இந்த மண்ணின் மகிமை எனக்குத் தெரியும். உழைத்து வாழும் உங்களோடு நானும் உழைத்து வளர்ந்ததால் உங்கள் அனைவரின் ஆசியோடும், இறை அருளோடும். என்னை வளர்த்து ஆளாக்கிய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடும், இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக உங்கள் முன்னால் நிற்கின்றேன். உங்களுக்கு சேவை செய்ய நிற்கிறேன்.

நான் இந்த நிலைக்கு உயர எனக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், என்னை நம்பி எனக்கு பலமுறை வாக்களித்து சட்டமன்றத்திற்கும், பாராளுமன்றத்திற்கும் அனுப்பி வைத்த மக்களாகிய உங்களுக்கும் நான் என்றைக்கும் நன்றியுடன் கடமைப்பட்டவன்.

சேலத்து மக்கள், இங்கு கிடைக்கும் மாங்கனியை விட இனிமையானவர்கள். இங்கு உற்பத்தியாகும் இரும்பை விட உறுதியானவர்கள். அதனால்தான் நம் தலைவர்களும், கலைஞர்களும் இந்த சேலம் மாவட்டத்தில் முதன்முதலாக சினிமா

படப்பிடிப்பு நிலையங்களையும், தொடக்க காலங்களில் அரசியல் கூட்டங்களையும் நடத்தியிருக்கின்றார்கள் என நான் நம்புகிறேன்.

சேலத்து மக்கள் நம்பியவர்களை ஒரு காலமும் கைவிடுவதில்லை. நம்பியவர்களுக்காக உயிர், பொருள், உழைப்பு அத்தனையும் கொடுக்க துணிபவர்கள்.

குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக சேலம் மாவட்டம் விளங்கி வருகிறது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா ஆகியோர் மீது சேலத்து மக்கள் வைத்த நம்பிக்கைதான் ஒரு சாதாரண தொண்டனாக இருந்த என்னை தமிழ்நாட்டின் முதலமைச்சர் நிலைக்கு உயர்த்தியிருக்கிறது.

அதற்காக நான் என் உள்ளத்தில் குடியிருக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், என் பாசத்திற்குரிய உங்கள் அனைவருக்கும் இந்த இனிய வேளையில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கருத்தை மட்டும் நான் இங்கே பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன். சேலத்து மக்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எது தேவை, எது தேவையில்லை, எது நீண்ட கால பயனளிக்கக் கூடியது, எது தீங்கிழைக்கக்கூடியது என்பதை நான் நன்கு உணர்ந்தவன்.

சில தலைவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய இளைஞரணியைச் சேர்ந்தவர், நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய அன்புமணி ராமதாஸ் அவர்கள் மத்திய அமைச்சராக இருந்தபொழுது, இந்த மண்ணுக்கோ, இந்த மக்களக்கோ என்ன செய்தீர்கள்? என்ன திட்டங்களைத் தந்து இந்த மக்களை வளர்த்தீர்கள், இந்த மக்களைக் கொண்டு நீங்கள் வளர்ந்தீர்களே தவிர, உங்களைக் கொண்டு இந்த மக்கள் வளர்ந்தார்களா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, சமுதாயத்தைச் சேர்ந்த தாராள குணம் கொண்ட கொடையாளிகள், பல்வேறு அறச் செயல் நோக்கங்களுக்காக, தமது சொத்துக்களை காணிக்கையாக வழங்கினர். பல நேர்வுகளில் பல்வேறு அறச்செயல் நோக்கங்களுக்காக கொடையாக வழங்கப்பட்ட சொத்துக்கள், அந்த நோக்கங்களுக்காக பயன்படாமலும், நல்ல நிலையில் பேணி வரப்படாமலும் இருக்கின்றன. அவ்வாறு வழங்கப்பட்ட பல சொத்துக்கள் விற்கப்பட்டும் உள்ளன. சில சொத்துக்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன.

இதனால் உயில் எழுதிய கொடையாளிகளின் விருப்பங்கள் நிறைவேறாமல் போய்விட்டன. இது சம்பந்தமாக பல முறையீடுகள் அரசுக்கு வரப்பெற்றுள்ளன.

இதைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மேற்படி கொடையாக வந்த சொத்துக்களை முறையாக பாதுகாத்து, பயன்படுத்துவதற்கென தனியாக ஒரு சட்டத்தினை சட்டமன்றத்தில் இயற்றி மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் நடைமுறைக்கு வரும்போது, ஒரு நிர்வாகக் குழுமம் உருவாக்கி, அதன் மூலம் மேற்படி கொடையாளர்களின் எண்ணங்கள் ஈடேறும் வகையிலும், வன்னியர்குல சத்திரிய ஏழை, எளிய மக்களின் கல்வி மற்றும் பல்வேறு வகையிலான முன்னேற்றத்தினை உறுதி செய்யும் என்று கூறிக் கொள்கிறேன்.

வன்னியர் குல இனத்தின் நலம் விரும்பியாக விளங்கிய மரியதைக்குரிய ராமசாமி படையாச்சி அவர்களுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு தான் மணி மண்டபம் எழுப்பி சிறப்பு சேர்த்திருக்கிறது என்பதைக் கொண்டே, யாருக்கு வன்னியர் குல மக்களின் மீது அக்கறை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளுங்கள். உண்மையிலேயே, இவர்களுக்கு வன்னியர் குல மக்கள் மீது அக்கறையும், ராமசாமி படையாச்சி அவர்கள் மீது மரியாதையும் இருக்குமேயானால், மணி மண்டபம் அமைத்ததற்காக எங்களுக்கு நன்றியை தெரிவித்திருப்பார்கள்.

அதை அவர்கள் தவிர்த்தது எதனால்? அதை அவர்களிடம் கேட்டு நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

எனவே, வன்னியர் குல மக்களின் நலனில் மாண்புமிகு அம்மாவின் அரசுக்குத் தான் அதிக அக்கறை இருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவருடைய பிறந்தநாள் விழாவை அரசு விழாவாக அறிவித்ததும் அம்மாவினுடைய அரசு தான்.

சேலம் பொருட்காட்சியில் தொடர்ந்து கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைக்கப் பெற்றதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்.

நான் இதை எதற்காக சொல்கிறேனென்றால், சிலபேர் வேண்டுமென்றே அரசியல் காரணத்திற்காக, அரசியல் லாபம் தேடுவதற்காக, விளம்பரம் தேடுவதற்காக சில பல கூட்டங்களிலே இந்த அரசைப் பற்றியும், என்னைப் பற்றியும் விமர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான், இந்த விழாவின் வழியாக இதை நான் தெரிவித்தேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவும் சரி, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரும் சரி, இப்பொழுது அம்மா மறைந்த பிறகு அம்மாவின் அரசும் சரி, வன்னியர் குல மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை வழங்கும் என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

1977ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டே, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்த முதல் பொருட்காட்சி இந்த சேலம் பொருட்காட்சிதான். ஆகவே, அந்த சிறப்புமிக்க பொருட்காட்சியை முதன்முதலாக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான் 1977 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு அம்மா அரசின் ஓராண்டு சாதனையை விளக்கி 1,000 தொண்டர்களுடன் மதுரையில் சைக்கிள் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அந்த பயணம் மக்களிடையே இன்று மகத்தான எழுச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு அம்மாவின்அரசு மீது அள்ளி வீசுகின்ற புகார்கள் எல்லாம் பொய் என்பதை மக்கள் புரிந்து

கொள்ளும் அளவிற்கு ஓராண்டு சாதனையை மக்களிடம் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

அதைப்போலத் தான், இந்தப் பொருட்காட்சிகளும் பொய் பிரச்சாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டிருக்கின்றன,

பொருட்காட்சி என்பதை பொழுதுபோக்காக யாரும் நினைத்துவிடக் கூடாது. இது அரசுக்கும் மக்களுக்கும் நடுவில் உள்ள இடைவெளியை நிரப்புகின்றன, பாலமாக இருக்கின்றன.

நேரடியாக ஒரு நிகழ்ச்சியைப் பார்ப்பதன் மூலம், அந்த நிகழ்ச்சி மக்கள் மனதில் எளிதில் பதியும். செய்தி–மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளால், அரசின் திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை மக்கள் நேரடியாக எளிதில் அறிந்து கொள்ள இயலும்.

மாவட்டங்களில் நடைபெறும் பொருட்காட்சிக்கு பொதுமக்கள் குடும்பத்துடன் வருகை தந்து, கண்டுகளித்து பயன்பெறவும், விழாக் காலங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் மாவட்ட தலைநகரங்களில் பொருட்காட்சிகளை நடத்தினால், பெரிதளவில் மக்கள் வருகை தந்து பயன் பெற்றிட ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையில், அரசுப் பொருட்காட்சிகள் மாவட்டம் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை சேலத்தில் 35 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

1978ஆம் ஆண்டு முதல், தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 194 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

195ஆவது அரசுப் பொருட்காட்சி 20.06.2018 அன்று திருநெல்வேலியில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

அரசுப் பொருட்காட்சிகளில், முன்னர் 15 அரசுத் துறைகள்தான் பங்கேற்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேலும் 12 அரசுத் துறைகள் பங்குபெற ஆணையிட்டதன் விளைவாக, தற்போது 27 அரசுத் துறைகள் பொருட்காட்சிகளில் பங்கு பெற்று பெற்று சிறப்பிக்கின்றன.

அரசுப் பொருட்காட்சிகளில் பங்கேற்கும் ஒவ்வொரு அரசுத் துறைக்கும் அரங்கு அமைப்பதற்கு வழங்கப்பட்டுவந்த 66 ஆயிரம் ரூபாய் நிதி, 12.04.2017 முதல், 70 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு கிராம கைத்தொழில் வாரியம், கோ–ஆப்டெக்ஸ், ஆவின், தாட்கோ, சேலம் மாநகராட்சி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம் போன்ற அரசு சார்பு நிறுவனங்களும் 37 அரங்குகளில், அரசுப் பொருட்காட்சிகளில் பங்கேற்கின்றன.

தமிழ்நாட்டில், ஆண்டுதோறும் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அனைத்து மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

மேலும், ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 4 மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

புதுடெல்லியில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், பொங்கல் விழாவினைச் சித்தரிக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறையால் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் இரண்டாம் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

புது தில்லியில், 2016ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், நீலகிரி மாவட்டத்தில் வசித்துவரும் “தோடர்கள்” என்ற மலைவாழ் பழங்குடி இனத்தினரைக்

குறிக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டு, பங்கேற்றது.

2017ஆம் ஆண்டின் குடியரசு நாள் விழா அணிவகுப்பில் நாட்டுப்புறக் கலையான கரகாட்டத்தை விளக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில், இந்திய துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது.

2012 முதல் 2017ஆம் ஆண்டு வரை நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில், தமிழ்நாடு அரசு பங்கேற்று தொடர்ந்து முதல் பரிசு பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெற்று வரும் இந்த அரசால், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், 2018–2019ஆம் ஆண்டிற்கான செய்தி மற்றும் விளம்பரத் துறையின் மானியக்கோரிக்கையின்போது, அரசுப் பொருட்காட்சியில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம், 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, தற்போது இந்த உயர்த்தப்பட்ட மதிப்பூதியத்தினை நலிந்த கலைஞர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகளில், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் நடைபெறும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்களுக்கு எளிதில் விளக்கும் வகையில் பொருட்காட்சிப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிநவீன மின்னணு விளம்பர வாகனம்

என்னால் இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

இன்றைக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம், இந்த ஆட்சியிலே என்ன திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றார்கள், இந்த மக்களுக்கு என்ன நன்மை செய்திருக்கின்றார்கள் என்று கேள்வி கேட்கின்றார்கள், அவர்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பதிலளிக்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசால் இன்று வரை 22 ஆயிரத்து 224 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 40ஆயிரத்து 909 பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. 16ஆயிரத்து 641 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 595 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

ஆக மொத்தம் 38 ஆயிரத்து 866 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 48 ஆயிரத்து 504 பணிகள் நடைபெற்று வருகின்றன. அதே அம்மாவின் அரசினுடைய சாதனை என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

மக்களுக்கான நலப்பணிகள் விரைவாகவும், உரியமுறையிலும் சென்றடைவதை முதன்மை பணியாகக் கொண்டு நான் ஓய்வின்றி தொடர்ந்து செயல்பட்டு வருவதன் காரணமாக இன்று வரை 8ஆயிரத்து107கோப்புகள்பார்த்துஒப்புதல்வழங்கயுள்ளேன்என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதன் மூலம் பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்துத்தர மக்களும் பயன்பெறும் வகையில் வீட்டுவசதித் திட்டங்கள், வேளாண் மக்களுக்கான திட்டங்கள், ஏழை மக்கள் உயர்தர சிகிச்சைப் பெற சுகாதார திட்டங்கள், மக்களின் போக்குவரத்து எளிதாக்கும் சாலை வசதிகள், புதிய பேருந்துகள்,

நெசவாளர்களின் முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த, மாண்புமிகு அம்மாவின் அரசு, அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. அதனை நிறைவேற்றும் வகையில், 2018–2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், பள்ளிக் கல்வித் துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக 27ஆயிரத்து 205 கோடியே 88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்றைக்கு கல்வித் துறையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

அதேபோல இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலேதான், 10ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் எழுதிய 20 இலட்சம் மாணவர்களுக்கு அவர்களுடைய கைபேசி மூலமாக தேர்வு முடிவுகள் வெளியான இரண்டே நிமிடத்தில் குறுஞ்செய்தி மூலம் அவர்களுக்கு தகவல் அளிக்கப்படுகின்றன.

உயர்கல்வித் துறையில், 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, 21 சதவீதமாக உயர்கல்வி படித்திருந்த மாணவர்கள் எண்ணிக்கை இருந்தது, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சி சிறப்பான ஆட்சி செய்ததன் விளைவாக, அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இன்றைக்கு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை 46.94 சதவீதமாக உயர்ந்து, இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாநிலத்தில் முதலிடம் தமிழகம் வகிக்கின்றது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவினுடைய ஆட்சியிலே 4 பொறியியல் கல்லூரி, 16 பலவகைத் தொழில் நுட்ப கல்லூரிகளும் தொடங்கப்பட்டன. அதேபோல, புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான், எண்ணற்ற திட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

சுகாதாரத் துறைக்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றோம். கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்கள் சுகாதாரமாக இருக்கவேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு விவசாயிகளுக்கு நிறைய திட்டங்களை நாங்கள் செயல்படுத்தி வருகின்றோம். இன்றைக்கு உ ணவு தானிய உற்பத்தியில் இந்தியாவிலேயே தொடர்ந்து முதலிடம் வகிக்கின்ற அரசு தமிழ்நாடு அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக உயர்ந்த விருதான க்ரிஷ் கர்மாண் விருது, தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆகவே, இன்றைக்கு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு தான் மக்களுடைய அரசு , மக்களுக்குத் தேவையான நன்மைகளை வழங்கக்கூடிய அரசு என்பதைத் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா கொண்டு வந்த திட்டம் அத்தனையையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். தாலிக்குத் தங்கம் திட்டத்தை அம்மாவினுடைய அரசு கொண்டு வந்தது. அதை சிறப்பான முறையில் நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, அம்மாவினுடைய ஆட்சியிலே பசுமை வீடுகள் திட்டம், இன்றைக்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதேபோல, முதியோர் உதவித் தொகை, விலையில்லா ஆடுகள், வறட்சி நிவாரணம், விவசாயிகளுக்கு வேளாண்மைக்கு கடன் தள்ளுபடி, கூட்டுறவுத் துறையின் மூலமாக கடனுதவி, விவசாயிகளுக்கு வண்டல் மண் வழங்கும் திட்டம், குடிமராமத்து திட்டம், பள்ளிக் கல்வித் துறையில் ஒரு மறுமலர்ச்சியை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே,

இப்படி பல்வேறு திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்கு வாரி, வாரி வழங்குகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில்தான், கல்வியிலே ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றோம். 201–2012 முதல் 2016–2017 வரை 227 புதிய தொடக்கப் பள்ளிகள், 116 தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகவும், 829 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன. இதன் விளைவாக, கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள் தங்களுடைய குழந்தைகளை அங்கேயே கல்வி கற்பதற்கான வசதியை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கிறது. அதன் விளைவாக, இன்றைக்கு கல்வி கற்போரின் எண்ணிக்கை தமிழகத்திலே உயர்ந்திருக்கின்றது, அதற்காக பாடுபட்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர்கல்வியில், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 65 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் கொடுத்தார்கள். இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்தது. அதுமட்டுமல்ல. இன்றைக்கு 41 பல்கலை உறுப்புக் கல்லூரியை அரசுக் கல்லூரிகளாக அறிவித்து, ஆண்டுதோறும் தொடர் செலவினமாக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வேளாண் கல்வியை உருவாக்கியிருக்கிறது. வீட்டுமனை இல்லாதவர்களுக்கெல்லாம், இலவச வீட்டுமனை பட்டாக்களை அம்மாவினுடைய அரசு வழங்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு சேலம் மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் எங்கெல்லாம் உயர்மட்டப் பாலம் கட்டவேண்டும் என்று

கோரிக்கை வைக்கிறார்களோ, அங்கெல்லாம் உயர்மட்டப் பாலம் அம்மாவினுடைய ஆட்சியில்தான் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, அம்மாவினுடைய அரசும் எங்கெங்கெல்லாம் மக்கள் பயன்பாட்டிற்கு தேவையோ அதையறிந்து, மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக, உயர்மட்டப் பாலம், கீழ்ப்பாலம், ரயில்வே பாலங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், சேலத்திலே இதற்கு முன் எத்தனை பாலங்கள் இருந்தது, அம்மா ஆட்சிக்கு வந்தபிறகு, நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக வந்தபிறகு, எவ்வளவு பாலங்கள் நம்முடைய சேலம் மாநகரத்தில் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து ரயில்வே கடவுகளின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஆணையிட்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே பல்வேறு திட்டங்களை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியிருக்கின்றது.

சேலம் தனி குடிநீர் திட்டம், **233** குடியிருப்புகளுக்கு தனி மின்விளக்கு, எடப்பாடி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், மேட்டூர் குடிநீர் திட்டம், எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி குடிநீர் திட்டம், மேச்சேரி நங்கவள்ளி குடிநீர் திட்டம், வாழப்பாடி, நரசிங்கபுரம் மற்றும் ஆத்தூர் பகுதிகளுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்கும் திட்டம், இப்படி பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசு அறிவித்திருக்கிறது என்பதை தெரிவித்து ஒரு சிறு கதையை இந்த நேரத்திலே உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

வாழை பயிரிடும் ஒரு விவசாயி ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாளில் இறைவனுக்கு ஆயிரம் வாழைப் பழங்களைக் காணிக்கையாக செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அந்த வருடம் காணிக்கையாக செலுத்த அவரால் கோவிலுக்குப் போக முடியவில்லை. எனவே, தனக்குப் பதிலாக தன் கணக்குப் பிள்ளையை காணிக்கை செலுத்த அனுப்பினார்.

ஒரு மாட்டு வண்டியில் ஆயிரம் வாழைப் பழங்களை ஏற்றிக் கொண்டு கணக்குப்பிள்ளை கோவிலுக்குப் புறப்பட்டார். போகிற வழியில் சாலை ஓரத்தில் ஒரு ஏழை மயங்கிய நிலையில் சுருண்டு கிடந்தார்.

இதைப்பார்த்த அந்தக் கணக்குப்பிள்ளை வண்டியை நிறுத்தச் சொல்லிவிட்டு அந்த ஏழையின் முகத்தில் நீரை தெளித்து எழுப்பிப் பார்த்தார்.

அந்த ஏழை கண்விழித்துப் பார்க்கவில்லை. அவரது வயிறு ஒட்டிப்போய் இருந்தது. பசி மயக்கமாக இருக்குமோ என்று எண்ணிய கணக்குப்பிள்ளை, வண்டியிலிருந்த ஒரு வாழைப்பழத்தை எடுத்து அந்த ஏழையின் வாயில் ஊட்டிவிட்டார்.

அவர் மெதுவாக கண்விழித்துப் பார்த்தார். ஆனால் எழுந்திருக்க முடியவில்லை. மேலும், ஒரு வாழைப்பழத்தை ஊட்டினார். அப்போது, வண்டிக்காரன் கணக்குப்பிள்ளையிடம்,

‘முதலாளி கொடுத்தனுப்பிய வாழைப்பழம் குறைந்திருப்பதாக கோவிலில் கூறிவிட்டால் நம் வேலை போய்விடும்’ என்று எச்சரித்தான். அதை கணக்குப்பிள்ளை கண்டு கொள்ளவில்லை. இவ்வாறு ஐந்து பழங்களை சாப்பிட்ட பின், மயங்கிக் கிடந்த அந்த ஏழை, எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

வண்டி மீண்டும் புறப்பட்டது. மீதியிருந்த **995** வாழைப் பழங்களையும் இறைவனுக்கு காணிக்கை செலுத்திவிட்டு கணக்குப்பிள்ளை திரும்பிவிட்டார்.

அன்று இரவு முதலாளியின் கனவில் இறைவன் வந்து, ‘பக்தா, நீ எனக்கு கொடுத்தனுப்பிய ஐந்து பழங்கள் எனக்கு வந்து சேர்ந்தன’ என்றார். திடுக்கிட்டு எழுந்த விவசாயி, கோபத்துடன் கணக்குப்பிள்ளையையும், வண்டிக்காரனையும் இழுத்து வரச் சொன்னார். பயத்துடன் இருவரும் வந்தார்கள். ‘நான் அனுப்பிய ஆயிரம் பழத்தில், ஐந்து பழம்தான் கோவிலுக்கு சென்று சேர்ந்திருக்கிறது. மீதி பழங்களை என்ன செய்தீர்கள்?’

என்று கேட்டார். கணக்குப்பிள்ளை, நடந்த உண்மை சம்பவத்தை விளக்கமாக விவசாயியிடம் கூறினார். பசியோடிருந்த ஏழைக்குக் கொடுத்த ஐந்து பழங்கள்தான் நேராக இறைவனுக்குப் போய் சேர்ந்திருக்கிறது

என்ற உண்மை அப்போதுதான் விவசாயிக்குத் தெரிந்தது. ஏழைகளுக்கு செய்யும் தர்மத்தின் மகத்துவத்தை நினைத்து விவசாயி மெய்சிலிர்த்துப் போனார்.

இதைப்போலத் தான் ஏழைகளுக்கு செய்யும் நற்பணிகள்தான் இறைவனுக்கு செய்யும் காணிக்கையாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நினைத்து, ஏழைகளுக்காகவே திட்டங்கள் தீட்டினார்கள். அதே வழியைத்தான், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பின்பற்றுகிறது என்பதை எங்கள் ஓராண்டு சாதனையைக் கொண்டே நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

இன்றைக்கு பெங்களூருவைச் சேர்ந்த ‘பொது விவகாரங்கள் மையம்’ என்ற ஒரு அமைப்பு, சமூக – பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முக்கியமாக, மாநிலத்தின் குழந்தைகள் வளர்ச்சி விகிதம், சட்டம்–ஒழுங்கு, தீர்ப்பு வழங்குதல், பொருளாதார சுதந்திரம், சுற்றுச்சூழல், அத்தியாவசிய உள்கட்டமைப்பு, நிதி மேலாண்மை, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட 10க்கும் மேற்பட்ட காரணிகளைக் கொண்டு மாநில அரசின் செயல்பாடுகளை தர மதிப்பீட்டுடன் வெளியிட்டிருக்கிறது.

இதில் 2018ஆம் ஆண்டிற்கான அம்மையத்தின் அறிக்கையில் தமிழ்நாடு ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக திகழ்கிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல் இது வரை பல்வேறு பிரச்சனைகளில் மக்களின் நலன் காக்கும் வகையில் பல முக்கிய முடிவுகளை எடுத்து, அவற்றில் வெற்றி கண்டுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இப்படி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் நமக்கு இந்த இரண்டாம் இடம் கிடைத்திருக்கின்றது. எதிர்க்கட்சி யாரும் ஏற்றுக்கொள்ளவோ, பாராட்டவோ மாட்டார்கள். இருந்தபோதும், மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாட்டு மக்களுக்காக எப்பொழுதும் தன்னுடைய கடமையை நிறைவேற்றும். தற்போதுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு மீது அரசியல் ரீதியான குற்றச்சாட்டுகள் தான் எழுகிறதே தவிர, திட்டப்பணிகள் விரைவாக நடந்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தி மக்கள் தொடர்புத் துறை, அல்லும் பகலும் அயராது உழைத்து அரசின் திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி வருகின்ற காரணத்தால் இத்துறையைச் சார்ந்த அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசுப் பொருட்காட்சி இத்தனை சிறப்பாக நடைபெறுவதற்கு உழைத்த, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அலுவலர்களுக்கும், அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் உளமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் அம்மா இருசக்கர வாகனம் கிட்டத்திட்ட 2,000 மகளிருக்கு வழங்கப்படுகின்ற நற்செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சிதான் ஏராளமான திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. பல ஆண்டுகளாக, காவேரி பிரச்சினைக்காக போராடி வந்தோம். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் காலத்தில் இருந்து, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா காலம் வரை தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி வந்தோம். இருபெரும் தலைவர்கள் கண்ட கனவை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றி வெற்றி கண்டிருக்கின்றது, அதுதான் நம்முடைய மக்கள் செய்தித் தொடர்புத் துறையின் வழியாக விளக்கமாக தெரிவித்தார்கள். ஆகவே, மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ, அதை

குறிப்பறிந்து செயல்படும் அரசு அம்மாவினுடைய அரசு, திட்டமிட்டு செயல்படுகின்ற அரசு அம்மாவினுடைய அரசு. அதனால் தான், பல்லாண்டு காலமாக இருந்த காவேரி பிரச்சினைக்கு, ஒரு தீர்வை கண்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு நம்முடைய செய்தி விளம்பரத் துறை அமைச்சர், காவேரி பிரச்சினை பற்றியும், நாம் எப்படி மீட்டுக் கொண்டு வந்தோம் என்பதையெல்லாம் தெளிவாகச் சொன்னார்கள், இதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, ஒரு அரசின் கடமை, மக்களுக்கு என்ன சாதனை செய்தது என்பதுதான். அந்த சாதனையை இன்றைக்கு நாம் செய்து காட்டியிருக்கிறோம் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு காவேரி மேலாண்மை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் அமைத்த அரசு அம்மாவினுடைய அரசு, அதற்காக அம்மா இரவு, பகல் பாராமல் போராடினார்கள், அம்மா அவர்கள் நான்கு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள், தனது இறுதி மூச்சு இருக்கின்றவரை காவேரிக்காக போராடினார்கள். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பொழுதுகூட, காவேரி பிரச்சினையைப் பற்றிதான் இறுதியாக பேசினார்கள். ஆகவே, ஒரு தலைவர், ஒரு முதலமைச்சர் நாட்டு மக்கள் மீது, விவசாயிகள் மீது எவ்வளவு பற்றும், பாசமும் கொண்டிருந்தார் என்பதை இதன் மூலமாக தெரிந்து கொள்ள வேண்டும். நாட்டுக்காக உழைத்தார், மக்களுக்காக உழைத்தார், அந்த மறைந்த ஒப்பற்ற புரட்சித்தலைவி அம்மாவை வணங்கி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 29.07.2018 அன்று*

சேலத்தில் நடைபெற்ற அரசு பொருட்காட்சியில் ஆற்றிய உரை.

மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்ட மாநிலமாகத் திகழ்வதால், தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்குகிறது!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் அண்ணன் டாக்டர் மு.தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அண்ணன் திரு. ப.தனபால் அவர்களே!

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளே! அரசு அலுவலர்களே!

காவல் துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே.ராஜேந்திரன் அவர்களே!

காவல் துறை உயர் அதிகாரிகளே! அலுவலர்களே! காவல் துறையினரே! தரைப்படை, விமானப்படை, கடற்படை, கடலோரப் பாதுகாப்பு மற்றும் மத்திய பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளே!

போற்றுதற்குரிய சுதந்திரப் போராட்ட தியாகிகளே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ, மாணவிகளே! பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தினையும், இனிய 72ஆவது சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்”

என்று தேசியக் கொடியின் மாண்பினைப் பற்றி பாடினார் மகாகவி பாரதியார் அவர்கள். கம்பீரம் மிக்க நமது கொடியினை, இந்த இனிய நாளில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் இரண்டாவது முறையாக ஏற்றியதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

பல்லாயிரக் கணக்கான நமது சுதந்திரப் போராட்ட வீரர்கள் தங்களது உடமைகள் மற்றும் இன்னுயிரை ஈந்து பல வருடங்கள்

பாடுபட்டதன் விளைவாக பெறப்பட்டது நமது சுதந்திரம். இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரை துச்சமென மதித்து, உயிர் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நமது தமிழ்நாடு. நமது தேசத்தந்தை மகாத்மா காந்தி அவர்கள் காட்டிய அகிம்சை வழியிலேயே அடிமை விலங்கை தகர்த்தெறிந்த தியாகச் செம்மல்கள் வாழ்ந்த இடம் என்ற பெருமையைப் பெற்றது நமது தமிழ்நாடு.

தொடக்கத்தில் ஆயுதம் ஏந்திய போர் தான், காந்தியடிகளுக்குப் பின்னால் அறப்போராக மாறியது. ஆயுதப் போரிலும், அறப் போரிலும் அதிக பங்கு வகித்தது நமது தமிழ்நாடு தான் என்று சொல்லிக் கொள்வதில் நாம் பெருமை கொள்ளலாம். இந்த வரலாற்று நாயகர்களை நாம் என்றென்றும் போற்றி வணங்க வேண்டும். வட இந்தியாவில் நடந்த சிப்பாய்ப் புரட்சிதான் இந்தியாவின் முதல் சுதந்திரப் போர் என்பது வரலாறு. ஆனால், அதற்கு முன்பே கிட்டத்தட்ட அதே காரணங்களுக்காக வெள்ளையர்களுக்கு எதிராக வேலூரில் 1806ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் நாள் ஓர் புரட்சி நடந்தது. ஆகவே, இந்திய சுதந்திர போராட்டத்திற்கான வேள்வி, தமிழ்நாட்டில்தான் ஆரம்பித்தது என்பதை எண்ணி நாம் பெருமை கொள்ளலாம்.

மருது சகோதரர்கள், மாவீரன் தீரன் சின்னமலை, வெள்ளையத் தேவன், வீரன் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரன் அழகு முத்துக்கோன், வ.உ.சிதம்பரனார், திருப்பூர் குமரன், வேலு நாச்சியார், வீரத்தாய் குயிலி, கோபால நாயக்கர், பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர், தியாகி சீனிவாச ராவ், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், தியாகி விஸ்வநாத தாஸ், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், ரிபல் முத்துராமலிங்க சேதுபதி, வா.வே.சு.அய்யர், தியாகி செண்பகராமன், தில்லையாடி வள்ளியம்மை, வீரர் சுந்தரலிங்கம், சுப்பிரமணிய சிவா, மூதறிஞர் இராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி, தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், போன்றோரும், தங்களது பாடல்கள் மூலம் சுதந்திர வேட்கையை தூண்டிய மகாகவி பாரதியார்,

பாவேந்தர் பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை போன்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த எண்ணற்ற தலைவர்களும், பொது மக்களும் இந்திய விடுதலைக்காக எண்ணிலடங்கா தியாகங்களை செய்ததுடன், சுதந்திர உணர்வையும் பரப்பினர்.

நாம் பெற்ற சுதந்திரத்திற்காக இன்னுயிர் நீத்த வீரத் தியாகிகளின் தியாகத்தினை, நாம் அனைவரும் நினைத்துப் போற்றிட வேண்டும். அவர்கள் செய்த தியாகத்தினையும், அவர்களின் பெருமையையும், நாம் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். எனவே தான் இவர்களின் தியாகங்களைப் போற்றிடும் வகையில், தமிழ்நாடு அரசு இவர்களுக்கு மணிமண்டபங்களையும், அரசின் சார்பில் விழாக்களும், முக்கிய இடங்களில் சிலைகளையும் நிறுவியுள்ளது.

விடுதலை போராட்ட வீரர்களுக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும், விடுதலை போராட்ட வீரர் ஒய்வூதியத் திட்டம், மருத்துவ வசதி, கட்டணமில்லா பேருந்து வசதி, வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை, வீடுகள் ஒதுக்கீடு போன்ற பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

சுதந்திரம் அடைந்து கடந்த 71 ஆண்டுகளில் நாம் நமது நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், நமது மக்களின் நல்வாழ்விற்காகவும், ஆற்றிய பணிகளை திரும்பிப் பார்க்கின்ற

நேரம் இது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்றுவரை, மாநிலம் முழுவதும் நிறைவடைந்த **22** ஆயிரத்து **439** கோடியே **92** இலட்சம் ரூபாய் மதிப்பிலான **41,031** திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தும், **16** ஆயிரத்து **681** கோடியே **84** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான **7** ஆயிரத்து **596** புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் உள்ளேன்.

“எல்லோரும் எல்லாமும் பெற்று, வாழ்வில் வளம் பெறும் வகையிலான ஆட்சி அமைவதே சிறந்த மக்களாட்சி ஆகும். இவ்வாறான மக்களாட்சியில்தான் ஏழைகளும், வசதி படைத்தோருக்கு இணையான வசதிகளை பெற இயலும்” என்றார் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னது மட்டுமின்றி, செயலிலும் செய்து காட்டினார்கள். அவர்கள் வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசும், மக்களின் நலனைக்காக்க பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகவும், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் அரும்பாடுபட்டு, இறுதி வரை தனக்கென வாழாமல் தமிழ்நாட்டு மக்களுக்காகவே உழைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, மெரினா கடற்கரையில் நினைவு மண்டபமும், அவர் வாழ்ந்த இல்லத்தை மக்கள் பார்வையிடுவதற்காக நினைவு இல்லமாக மாற்றவும் மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது.

சோழ வளநாடு சோறுடைத்து எனும் பெரும் மொழியை நனவாக்கும் விதமாக, இவ்வருடம் தமிழ்நாட்டின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களாலும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசாலும் நடத்தப்பட்ட சட்டப் போராட்டத்தின் விளைவாக, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும்

குழு அமைக்கப்பட்டது. இந்த வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பினை மாண்புமிகு அம்மாவின் அரசு பெற்றுத்தந்தது.

காவேரி நீர் மேலாண்மை ஆணையம் எடுத்த முடிவின்படி ஜூன் மாதம் நமக்கு வர வேண்டிய 9.19 டி.எம்.சி. அடி தண்ணீர் கிடைக்கப் பெற்றது. ஜூலை மாதத்திற்கு கிடைக்க வேண்டிய நீரின் அளவு 31.24 டி.எம்.சி. அடி தண்ணீர். ஆனால், ஜூலை மாதம் இயற்கை அன்னையின் அருளால் தென்மேற்கு பருவ மழை அதிக அளவில் பொழிந்ததன் காரணமாக, 1 இலட்சம் கன அடிக்கும் அதிகமான நீர் மேட்டூர் அணைக்கு வந்து, 5 ஆண்டுகளுக்குப் பிறகு அணை தனது முழு கொள்ளளவினை இரண்டு முறை எட்டியுள்ளது. ஜூலை மாதம் 19ஆம் நாளன்று டெல்டா மாவட்டத்தில் உள்ள நிலங்கள் பாசன வசதி பெறுவதற்காக, மேட்டூர் அணை என்னால் திறக்கப்பட்டது.

மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, அனைவருக்கும் தரமான கல்வியை அளிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. அதனை நிறைவேற்றும் வகையில், 2018–2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், பள்ளிக் கல்வித் துறைக்கு மிக அதிக அளவு ஒதுக்கீடாக 27ஆயிரத்து 205 கோடியே 88 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதே இதற்கு சான்றாகும்.

பள்ளி மாணவச் செல்வங்கள் தங்கள் வாழ்க்கையில் சிறந்து விளங்க மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திய பல நலத்திட்டங்களை, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் இந்த அரசும் தொடர்ந்து செயல்படுத்தி, பள்ளிக் கல்வித்துறையில் தொடர்ந்து சாதனை படைத்து வருகிறது.

உயர் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கினார்கள். அதற்குப் பின்பு அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியுள்ளது. அதன் விளைவாக உயர்கல்வி சேர்க்கையில் மாணவர்களின் எண்ணிக்கை, இன்றைய தினம்

48.6 சதவீதமாக உயர்ந்து இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது என்பதே மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் இந்த அரசு எடுத்த முயற்சிகளுக்கு கட்டியம் கூறுகிறது.

நான் விவசாய குடும்பத்தில் பிறந்து, ஒரு விவசாயியாக வாழ்ந்து வருபவன் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு விவசாயிகளின் நலன் காக்கும் அரசு. விவசாயிகள் வாழ்வில் ஒளி ஏற்றிடச் செய்ய இந்த அரசு எடுத்த நடவடிக்கைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, 2011–2012 முதல் 2017–2018ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் உணவு தானிய உற்பத்தி ஐந்து முறை 100 இலட்சம் மெட்ரிக் டன்–ஐ கடந்து சாதனை படைத்துள்ளது. டெல்டா விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கும் வகையில் 115 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறுவை தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 802 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மானாவாரி சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் – 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து

கூட்டுப் பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2016–2017ஆம் ஆண்டில் 31 இலட்சத்து 85 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன. முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு இந்தத் திட்டத்தின் கீழ் 3,457 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனங்களால் ஒப்பளிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தென்னை விவசாயிகளின் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் தென்னையிலிருந்து "நீராபானம்" உற்பத்தி செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் அனுமதி வழங்கப்பட்டு, அவர்களின் வருமானம் இருமடங்காக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய 1,824 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாநிலத்தின் பல்வேறு இடங்களில் குடிநீர் திட்டப் பணிகளை செயல்படுத்தி வருகின்றது.

நீர்வள ஆதாரங்களைப் பாதுகாக்க பாரம்பரிய நீர் மேலாண்மை முறையான குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டி, 2016–2017ஆம் ஆண்டு முதல் அதனை ஓர் இயக்கமாக இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டில் குடிமராமத்து திட்டம் 328 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்பார்வையிட இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் கண்காணிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளில் படிந்துள்ள களிமண், வண்டல், சவுடு மற்றும் சரளை மண்ணை, மண்பாண்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு கட்டணமின்றி வழங்கும் திட்டம் இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினால், மேட்டூர் அணையில் 83 ஆண்டுகளுக்கு பிறகு 28.05.2017 அன்று தூர் வாரும் பணி என்னால் நேரடியாக துவக்கி

வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் ஏரிகள், கால்வாய்கள் மற்றும் அணைகளிலிருந்து 6 கோடியே 51 இலட்சத்து 65 ஆயிரம் கன மீட்டர் வண்டல் படிவுகள், 5 இலட்சத்து 83 ஆயிரத்து 539 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் பயன் பெறும் வகையில் அத்திக்கடவு–அவிநாசி திட்டம் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியிலேயே செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆதனூர்–குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே கதவணை ஒன்று 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம், 745 கோடியே 49 இலட்சம் ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நீர்வளத் துறையின் கீழ் உள்ள 69 அணைகளும் மின் உற்பத்தி பகிர்மான கழகத்தின் கீழ் உள்ள 20 அணைகளும் பயன்பெறும். தமிழ்நாட்டில் சாதி, மதம், மொழி, இனம் மறந்து அனைவரும் சகோதர, சகோதரிகளாக ஒரு குடும்பம்போல் வாழ்ந்து வருகின்றனர். மதச்சார்பின்மையை பின்பற்றும் ஒரு உன்னத மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனித பயணத்தை மேற்கொள்வதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, இந்த ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 6 கோடி ரூபாய் மானியம் வழங்க ஆணையிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் 3,780 நபர்கள் இந்த ஆண்டு மட்டும் பயன் பெற்றுள்ளனர் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் பணிபுரியும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த பெண்களுக்காக, வக்ஃப் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் மகளிர் விடுதி ஒன்று அரசு நிதியுதவியுடன் கட்டப்பட உள்ளது.

ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ளும் கிறிஸ்துவ பயணிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு முதல் 500லிருந்து 600ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ், ஜூலை மாதம் இறுதிவரை 1 கோடியே 96 இலட்சத்து 94 ஆயிரத்து 132 புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களை எதிர்வரும் சந்ததியினருக்கு நல்ல முறையில் விட்டுச் செல்வது நம் அனைவரின் கடமை என்பதை கருத்தில் கொண்டு, ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடைசெய்து, 01.01.2019 முதல் தமிழ்நாட்டில், இத்திட்டத்தை அமுலுக்கு கொண்டு வர மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இதனை வெற்றிகரமாக செயல்படுத்த, பொது மக்கள், வணிகர்கள் என அனைவரின் ஒத்துழைப்பையும் நான் இந்த தருணத்தில் கோருகிறேன்.

அரசின் நோக்கங்களையும், நலத் திட்டங்களையும் பொதுமக்களிடம் கொண்டு செல்வதில் அரசு ஊழியர்களின் பணி இன்றியமையாதது. அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்களுக்கு மத்திய அரசு அறிவித்த 7ஆவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் குறுகிய காலத்திலேயே அமல்படுத்தப்பட்டது. மேலும், அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நான்கு இலட்சம் ரூபாயும், சில தீவிர சிகிச்சைகளுக்கு ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வரையும் மருத்துவக் காப்பீடு வழங்கப்படுகிறது.

போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கையினை ஏற்று அவர்களுக்கு ஊதிய உயர்வு இந்த அரசால் அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு ஊதிய உயர்வின் காரணமாக எழுந்த நிலுவைத் தொகையையும் இந்த அரசு வழங்கியுள்ளது. அது மட்டுமன்றி, பல ஆண்டுகளாக போக்குவரத்துக் கழக ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படாமல் இருந்த நிலுவைத் தொகையை வழங்குவதற்காக 2 ஆயிரத்து 247 கோடியே 39 இலட்சம் ரூபாய் நிதியை தமிழ்நாடு அரசு வழங்கியது. மக்களின் தேவை மற்றும் வசதிகளைக் கருத்தில் கொண்டு, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக வரலாற்றில் முதல் முறையாக கழிவறையுடன் கூடிய குளிர்சாதன படுக்கை வசதியுடன் கூடிய சொகுசு பேருந்துகள் மற்றும் பிற வகையிலான சொகுசு பேருந்துகள் சேவை கடந்த மாதம் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, சென்னையின் பல்வேறு முனையங்களை இணைக்கும் வகையில் மெட்ரோ ரயில் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. அதில் சின்னமலை முதல் ஏ.ஜி.–டி.எம்.எஸ். வரையிலான 4.35 கி.மீ. சுரங்க வழித்தடப் பகுதியில் மெட்ரோ ரயில் போக்குவரத்தை கடந்த மே மாதம் நான் துவக்கி வைத்துள்ளேன். இது தவிர, மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும், மாதவரம் முதல் கோயம்பேடு வரையிலுமான வழித் தடங்களுக்கு மெட்ரோ இரயில் திட்டத்தின்

கட்டம்–IIஇன் கீழ் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

ஜவுளி தொழிலின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் வகையில் பன்னாட்டு ஜவுளி கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் கோவையில் நடத்தப்பட உள்ளது. மக்கள் அனைவருக்கும் சுகாதார சேவை கிடைக்கும் வகையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கடந்த 7 ஆண்டுகளில் 4,880 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 27.80 இலட்சம் நபர்கள் பயனடைந்துள்ளனர்.

கர்ப்பிணித் தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய நிலையான வளர்ச்சி இலக்கினை 2016ஆம் ஆண்டிலேயே அடைந்த மூன்று மாநிலங்களில், நமது மாநிலமும் ஒன்றாக விளங்கி சாதனை படைத்து மத்திய அரசின் விருதினை பெற்றுள்ளது.மக்கள்நல்வாழ்வுத்துறைமேம்படஇந்த அரசு பல அளப்பறிய சாதனைகளை செய்துள்ளது. அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு அம்மா அவர்களாலும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அரசினாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக, மதுரை மாவட்டம், தோப்பூரில் சுமார் 1,500 கோடி ரூபாய் செலவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கீகாரம் அற்ற மனைப் பிரிவுகளில் மனைகளை வாங்கிய ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கட்டட, மனை விற்பனை (முறைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்) சட்டம், 2016ஐ தமிழ்நாடு அரசு முனைப்பாக செயல்படுத்துகிறது. குடிசைகளற்ற தமிழ்நாட்டை உருவாக்க வேண்டும் என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவை நனவாக்க இந்த அரசு தொடர்ந்து பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இதன் அடிப்படையில், இந்த ஆண்டு, பிரதம மந்திரி

வீட்டுவசதி திட்டத்தின் கீழ், 2,276 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 30 ஆயிரம் வீடுகளும், முதலமைச்சரின் சூரிய ஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் 420 கோடி ரூபாய் செலவில் 20,000 வீடுகளும் கட்டப்படும் என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

'அனைவருக்கும் வீட்டுவசதி' என்ற பிரதம மந்திரி வீட்டுவசதி திட்டத்தின் கீழ் நகர்புறங்களில் 16 ஆயிரத்து 776 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 இலட்சத்து 25 ஆயிரம் குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக இந்த அரசு 2 ஆயிரத்து 301 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, இந்த ஆண்டு முதல் ஊரக உள்ளாட்சிகளுக்கு வழங்கும் பகிர்வு நிதியில் ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. 'அனைவருக்குமான வளர்ச்சி' எனும் எண்ணத்தை

ஈடேற்ற, அரசின் அனைத்து சேவைகளையும், கிராம மக்களும் அடையும் வண்ணம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பாரத்நெட் – கிராம ஊராட்சி களுக்கான இணைய சேவைத் திட்டம் என்ற பெயரில் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்த தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி 2017–2018ஆம் ஆண்டு 1 இலட்சத்து 11 ஆயிரத்து 179 கோடியாக இருக்கும் எனவும், மென்பொருள் வல்லுநர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 38 ஆயிரமாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. குறைந்த செலவில், அதிக எண்ணிக்கையிலான சேனல்களை நல்ல தரத்துடன் மக்கள் பார்த்து மகிழும் வண்ணம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் 23 இலட்சத்து 99 ஆயிரம் செட்டாப் பாக்ஸ்கள் விலையின்றி வழங்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. மேலும் உயர் வரையறை தரத்திலான (H.D) செட்டாப் பாக்ஸ்கள் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

“ஒகி” புயலின்போது தமிழ்நாடு அரசின் அனைத்து துறைகளும் திறம்பட பணியாற்றியதன் விளைவாக மக்கள் விரைவாக இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினார்கள். மீனவ நண்பனாக செயல்படும் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசின் இடைவிடாத முயற்சி மற்றும் உறுதியான நடவடிக்கைகள் காரணமாக, தமிழ்நாட்டைச் சார்ந்த 460 மீனவர்களும், அவர்களின் 26 மீன்பிடி படகுகளும் இலங்கை சிறைகளிலிருந்தும், 46 மீனவர்கள் ஈரான் சிறைகளிலிருந்தும், 10 மீனவர்கள் ஓமன் நாட்டு சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு, தமிழ்நாடு திரும்பியுள்ளனர்.

2016ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் அறிக்கையில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பை நனவாக்கும் வண்ணம், இந்தத் திட்டம் மாண்புமிகு பாரதப்

பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த நாளான 24.02.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் நாளது வரை 16 ஆயிரத்து 903 மகளிருக்கு 36 கோடியே 69 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இதனை மெய்ப்பிக்கும் வகையில், அமெரிக்காவில் உள்ள ஆர்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க தமிழ்நாடு அரசின் சார்பில் 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறையிலும் தமிழ்நாடு தனது முத்திரையை பதித்துள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது என மத்திய அரசின் சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 2013ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை, தொடர்ந்து 5 ஆண்டுகளாகவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 2014ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 4 ஆண்டுகளாகவும், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடத்தை பெற்று வந்துள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2017ஆம் ஆண்டில் மட்டும் 34 கோடியே 50 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 48 இலட்சத்து 60 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றுள்ளனர்.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்கும்பொழுது, தமிழ்நாடு மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட

பல்வேறு நடவடிக்கைகளினால், தற்போது மின்மிகை மாநிலமாக திகழ்கின்றது. மத்திய மின்சார ஆணையம் வெளியிட்டுள்ள **2016–2017** மற்றும் **2017–2018**ஆம் ஆண்டிற்கான மின்தேவை – மின் உற்பத்தி சமன்பாட்டு அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த ஆண்டுகள் போலவே, மாண்புமிகு அம்மாவின் வழியில் நடைபெறும் இந்த அரசின் நிர்வாகத் திறமையினால், தற்போதும் தமிழ்நாடு தொடர்ந்து மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. எரிசக்தித் துறையில் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திய பல்வேறு அரிய நடவடிக்கைகளின் காரணமாக, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவுதிறன், **11,113** மெகாவாட் என்ற உயர்ந்தபட்ச அளவை **31.03.2018** அன்று எட்டி, நாட்டிலேயே முதலிடத்தை பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு கொண்டு வரும் திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு, மாநிலம் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய வேண்டுமெனில், நம் நாட்டு தொழில் முனைவோர்களும், பன்னாட்டு நிறுவனங்களும் மாநிலத்தில் முதலீடு செய்து தொழில் துவங்க முன்வர வேண்டும் என்றால், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு, பொது அமைதி நிலவ வேண்டும். இதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், தொடர்ந்து சட்டம் ஒழுங்கு பராமரிப்புக்கு உரிய முக்கியத்துவம் அளித்து, காவல் துறையினர் எவ்வித குறுக்கீடும் இன்றி, சுதந்திரமாக தங்கள் பணிகளை நேர்மையாகவும், செம்மையாகவும் மேற்கொள்ள முன்னுரிமை அளித்து, சரியான சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்து, அவர்களுக்கு தேவையான நவீன வசதிகள் செய்து கொடுத்தார்கள்.

இதன் மூலம், “அமைதி, வளம், வளர்ச்சி” என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கோட்பாடுகளில் அமைதி எனும் முதல் கோட்பாட்டை நாம் நிலைநிறுத்தி, வளம் மற்றும் வளர்ச்சி என்ற கோட்பாடுகளை மாண்புமிகு அம்மாவின் வழி நின்று, வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம், மாண்புமிகு

அம்மா அவர்களின் “தொலைநோக்குத் திட்டம் 2023”ஐ நாம் குறித்த காலத்தில் அடையலாம். “ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்” என்றார் மகாகவி பாரதியார் அவர்கள்.

பாரதியின் கனவை நனவாக்கும் விதத்தில் தமிழ்நாட்டில் தொழிற்புரட்சி ஏற்படுத்தி மாண்புமிகு அம்மாவின் தொலைநோக்குப் பார்வை 2023ஐ முழுமையாக வெற்றி பெற அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வரும் 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாவது உலக முதலீட்டாளர் சந்திப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இச்சந்திப்பு நடத்துவதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதை எளிமையாக்குவதன் ஒரு பகுதியாக “ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச்சாளர தகவு” ஒன்று துவக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 11 அரசுத் துறைகளிலிருந்து தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பல்வேறு அனுமதிகள் பெறுதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய

சேவைகளை பெற இயலும். கடந்த மாதம் மாண்புமிகு அம்மாவின் அரசு "சியட்" நிறுவனத்துடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, 4,000 கோடி ரூபாய் செலவில் ஒரு டயர் உற்பத்தி தொழிற்சாலை காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

மனித ஆற்றல் மற்றும் இயற்கை வளங்களை தன்னகத்தே கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதால், தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்குகிறது. மேலும், தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முறையே 16 மற்றும் 16.24 சதவீத பங்களிப்புடன் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அன்னிய நேரடி முதலீடு பற்றிய ரிசர்வ் வங்கியின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தமிழ்நாட்டில் கடந்த ஆண்டுகளைவிட 2017–2018ஆம் ஆண்டு 56 சதவீதம் கூடுதல் முதலீடு பெறப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூற்றினை மெய்ப்பிக்கும் வகையில், தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆய்வு நிறுவனம் 21 மாநிலங்களில் நடத்திய ஆய்வின் முடிவில், 2018ஆம் ஆண்டில் தொழில் முதலீட்டிற்கு சிறந்த மாநிலமாக தில்லிக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.

2017ஆம் ஆண்டு ஆய்வில், ஆறாம் இடத்தில் இருந்த தமிழ்நாடு, 2018இல், நான்கு இடங்கள் முன்னேறி இரண்டாம் இடம் பிடித்துள்ளது. இது தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாட்டினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இந்த ஆய்வில், நிருவாகத் திறன், அரசியல் ஸ்திரத்தன்மை, சிறந்த தொழிலாளர்கள் ஆகிய இனங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பீடுநடை போடுகிறது என்பதையே இந்த அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

தமிழ்நாட்டில் புதிய சாலைகள் மற்றும் பாலங்களை உருவாக்கிடவும், இருக்கின்ற சாலைகளை அகலப்படுத்துதல் போன்ற பணிகளுக்காகவும், தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களின் மேம்பாட்டிற்காகவும் ஒரு இலட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

பெங்களூருவைச் சேர்ந்த 'பொது விவகாரங்கள் மையம்' என்ற ஒரு அமைப்பு சமூக பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில், மாநிலத்தின் குழந்தைகள் வளர்ச்சி விகிதம், சட்டம்–ஒழுங்கு, நீதி வழங்குதல், பொருளாதார சுதந்திரம், சுற்றுச்சூழல், அத்தியாவசிய உட்கட்டமைப்பு, நிதி மேலாண்மை, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட 10 அடிப்படை தலைப்புகளின் கீழ், நூறு காரணிகளைக் கொண்டு மாநில அரசின் செயல்பாடுகளை தர மதிப்பீட்டுடன் வெளியிட்டுள்ளது. இதன் 2018ஆம் ஆண்டிற்கான அறிக்கையில், ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்று கூறப்பட்டுள்ளது. இது மாநில அரசின் நிருவாகத் திறமைக்கு வழங்கப்பட்ட சான்றாகும்.

மாண்புமிகு அம்மாவின் நோக்கத்தினை நிறைவேற்றிடும் வகையில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உயர்த்திட மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மனிதனின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், உணவு, கல்வி, குடியிருப்பு, சுகாதாரம், மின்சாரம், தொழில், வேளாண்மை, நீர்மேலாண்மை, வேலைவாய்ப்பு, பாதுகாப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகிய அனைத்தும் கிடைத்தலே உண்மையான சுதந்திரமாகும். அந்த வகையில், மேற்சொன்ன அனைத்தையும் வழங்கி, தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது என்பதை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து, பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு கூட்டமைப்புகள் நடத்தும் – தேசிய அளவிலான முதுநிலைப் போட்டிகளில், தமிழ்நாட்டின் சார்பில் பங்கேற்று தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கம் வென்றாலோ; நமது மாநிலம் சார்பாக நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கம் வென்றாலோ; அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், தங்கம், வெள்ளி அல்லது வெண்கலப் பதக்கம் வென்றாலோ; அல்லது நமது நாட்டின் சார்பாக கலந்து கொண்டால் கூட, அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அல்லது தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில், குறிப்பிட்ட பதவிகளில், தகுதியின் அடிப்படையில் 2% வரை உள்ஒதுக்கீடாக வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு இது நடைமுறைபடுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக தனது இன்னுயிரை துச்சமென மதித்து, உயிர் தியாகம் செய்த தியாகச் செம்மல்கள் நிறைந்திட்ட மாநிலம் நம் தமிழ்நாடு. நாட்டின் விடுதலைக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்த தியாகச் செம்மல்களை சிறப்பிக்கும் வகையில் தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் 13,000 ரூபாயிலிருந்து 15,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும், சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் 6,500 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும், விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு, நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றியவர்களின் தியாகத்தை போற்றும் வகையில் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம்

6,500 ரூபாயிலிருந்து 7,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சுதந்திர போராட்ட வீரர்கள் போராடி பெற்ற இந்த சுதந்திர திருநாட்டை எல்லா வகையிலும் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு இணையாக உயர்த்தவும், குறிப்பாக தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உயர்த்திட தொடர்ந்து பாடுபடுவோம் என்று இந்த நன்னாளில் உறுதி எடுப்போம்.

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் அவர்கள் புகழ்!

ஓங்குக புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கீர்த்தி!

தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி!

பொருளாதார வலிமைமிக்க தமிழ்நாட்டை உருவாக்கி ஒற்றுமையான பாரதத்தை படைப்போம்!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
15.08.2018 அன்று ஆற்றிய சுதந்திர தின உரை

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா பெயரில் அமைக்கப்படும் அரங்கிற்கு 5 கோடி ரூபாய் நிதி!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

தென்னிந்திய திரைப்பட தொழிலாளர் சம்மேளனத்தின் (FEFSI) சார்பில் பையனூரில் திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட எம்.ஜி.ஆர் நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தை திறந்து வைத்ததில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின் அவர்களே! மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத்துறை அமைச்சர் திரு.கே.பாண்டியராஜன்

அவர்களே! மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு அவர்களே!

இவ்விழாவிற்கு தலைமையேற்றுள்ள சம்மேளனத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு.ஆர்.கே.செல்வமணி அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று நல்ல பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்ற திரைப்பட இயக்குநர் திரு.பாரதிராஜா அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் நடிகர் திரு. விஷால் அவர்களே! நடிகர் சங்கத்தினுடைய தலைவர் திரு. நாசர் அவர்களே! திரு. சுரேஷ் அவர்களே! திரைப்பட நடிகர் திரு.கார்த்திக் அவர்களே! திரைப்பட நடிகர் திரு.விஜய் சேதுபதி அவர்களே! திரைப்பட நடிகர் திரு. சிவ கார்த்திகேயன் அவர்களே! திரைப்பட நடிகர் தாணு அவர்களே! திரு.தீனா அவர்களே! திரு.பி.வாசு அவர்களே! திரு. விக்ரமன் அவர்களே! திரு.கதிரேசன் அவர்களே! திரு. பன்னீர்செல்வம் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் திரு. அங்கமுத்து சண்முகம் அவர்களே! இங்கே வாழ்த்துரை வழங்கிய திரைப்படத் தயாரிப்பாளர்களே, திரைப்பட இயக்குநர்களே, இசையமைப்பாளர்களே, ஒளிப்பதிவாளர்களே, திரையரங்க உரிமையாளர்களே, நன்றியுரை ஆற்றவுள்ள சம்மேளன பொருளாளர் திரு. பி.என். சுவாமிநாதன் அவர்களே! சின்னத்திரை மற்றும் திரைப்படத் துறைகளின் தொழிலாளர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி மரகதம் குமரவேல் அவர்களே! சட்டப் பேரவை உறுப்பினர் திரு.பழனி அவர்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்களே! கழகத்தில் பல்வேறு பொறுப்புக்களில் இருக்கின்ற நிருவாகிகளே, மேலும் இங்கு வருகை தந்துள்ள கழக நிர்வாகிகளே, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் முன்னாள்

பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்கங்களின் நிருவாகிகளே, ஊடகத் துறை நண்பர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, திரைப்படத் துறையில் இருக்கின்ற பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த நிர்வாகிகளே, அங்கத்தினர்களே, அனைவருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதன் நாகரிகமடைந்து உருவாக்கிய படைப்புகளில் சினிமா மிகவும் முக்கியமான இடத்தை பெற்றுள்ளது. உலகில் நெடுந்தூரம் சென்று காண முடியாத அற்புதங்களை அமர்ந்த இடத்திலிருந்து காண திரைப்படம் வழி வகுத்துள்ளது.

சினிமாவிற்கு முதலில் வடிவம் கொடுத்தவர்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூமியர் சகோதரர்கள் என்றாலும், இந்தியாவில் முதன்முதலில் பேசாப் படத்தை தயாரித்து வெளியிட்ட பெருமை இந்திய சினிமாவின் தந்தை என அழைக்கப்படும் தாதா சாகிப் பால்கே அவர்களையே சாரும். இவர் தயாரித்த – ராஜா அரிச்சந்திரா – படம் 1913ஆம் ஆண்டு வெளிவந்தது.

தமிழில் 1931ஆம் ஆண்டு முதல் பேசும் படமாக காளிதாஸ் திரைப்படம் திரையிடப்பட்டது. ஊமைப் படங்களாகவும், பேசும் படங்களாகவும், பின்னர் வண்ணப் படங்களாகவும் பரிணாம வளர்ச்சி பெற்று, இன்று பலர் வியக்கும் அளவுக்கு சினிமாத் துறை வளர்ந்துள்ளது. 1931ஆம் ஆண்டுகளில் பேசும் படங்கள் வெளிவந்தாலும், 1950 மற்றும் 1960ஆம் ஆண்டு காலகட்டம் தான் இந்திய சினிமாத் துறைக்கு மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது.

இந்தக் காலத்தை இந்திய சினிமா உலகத்தின் பொற்காலம் என்றே அழைத்தனர். அந்த சமயத்தில்தான் மக்கள் திலகம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த படங்கள் அதிக அளவில் வெளிவந்து, அவர் மிகப் பெரிய நடிகராக புகழ் பெற்று தமிழக மக்களின் மனதில் நீங்கா இடத்தை பெற்றார்.

புராண இதிகாச படங்கள் வெளிவந்து கொண்டிருந்த கால கட்டத்தில் சமுதாய படங்கள் வெளிவர காரணமாக இருந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். தன் திரைப்படங்கள் மூலம் சமுதாய மறுமலர்ச்சியை உண்டாக்கும் விதத்தில் கதை அமைப்பையும், திரைப்படப் பாடல்களையும் உருவாக்கிய பெருமை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையே சாரும்.

எம்.ஜி.ஆர் அவர்கள் புரட்சித்தலைவராக உயர்வதற்கு அடிப்படை காரணமாக இருந்தது அவர் ஒரு புரட்சி நடிகர் என்பதால்தான்.

"நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே
நம் நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும்
முல்லைகளே"

போன்ற பாடல்கள் மூலம் ஒரு ஆசிரியராக மாணவர்களுக்கு அறிவுரை கூறியவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள்.

"கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த
தொழிலாளி விவசாயி"

என்ற பாடல் மூலம் விவசாயிகளின் முக்கியத்துவத்தை நாட்டுக்கு உணர்த்தியவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

"இருப்பதைக் கொண்டு சிறப்புடன்
வாழும் இலக்கணம் படைத்தவன் தொழிலாளி"

என்ற பாடல் மூலம் தொழிலாளர்கள் நிலை பற்றியும்,

"நாளை உலகை ஆள வேண்டும்
உழைக்கும் கரங்களே!
இந்த நாடு முழுவதும் மலர வேண்டும்
புரட்சி மலர்களே!"

என்ற பாடல் மூலம் தொழிலாளர்களின் உரிமை மற்றும் சிறப்புகள் பற்றியும்,

“புத்தன், ஏசு, காந்தி பிறந்தது பூமியில்
எதற்காக, தோழா ஏழை நமக்காக”

என்ற பாடல் மூலம் நாட்டுக்கு கிடைத்த நல்ல தலைவர்களை பற்றியும்,

“தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை
தண்ணீரில் பிழைக்க வைத்தான்”

என்ற பாடல் மூலம் மீனவர்களின் வாழ்க்கை நிலையையும்,

“ஒன்றே குலம் என்று பாடுவோம்
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்”

என்ற பாடல் மூலம் தனக்கிருந்த மதச்சார்ப்பின்மை கொள்கையை பற்றி – திரு. எம்.ஜி.ஆர் அவர்களுக்கு முன்பும், பின்பும் இதுவரை யாரும் கூறவில்லை.

இதுபோன்ற சமுதாய கருத்துகள் நிறைந்த பாடல்கள் மூலம், **திரைப்படத் துறை ஒரு பொழுதுபோக்கு சாதனம் என்பதை மாற்றி, திரைப்படங்களின் மூலம் சமுதாயத்தில் மாற்றத்தை உண்டாக்க இயலும் என்பதை நிரூபித்துக் காட்டியவர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.** சமூக கருத்துகளை, மக்களிடையே எடுத்துச் சென்றதில் திரைப்படங்களுக்கு முக்கிய பங்கு உண்டு.

அரசியலில், திரைப்படத் துறையினரின் ஆதிக்கத்தினை நிலை நிறுத்தியவர்கள் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும்தான் என்று சொன்னால் அது மிகையாகாது. திரைப்படத்தை மக்களின் ரசனைக்கேற்ப இயக்கும் இயக்குநர்கள், வெளி நாடுகள் மற்றும் உள்நாடுகளில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் இடங்களை மக்கள் கண் முன் கொண்டுவந்து நிறுத்தும் ஒளிப்பதிவாளர்கள், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி சமுதாயத்தை நல்வழிப்படுத்தும் கருத்துகளை கொண்டு செல்லும் கவிஞர்கள்

மற்றும் வசனகர்த்தாக்கள், பொட்டல்காட்டை மாளிகைகளாக உருவாக்கும் கலை இயக்குநர்கள், பலவிதமான உருவத் தோற்றங்களை மாற்றி உருவாக்கும் அற்புதமான திறமை கொண்ட ஒப்பனைக் கலைஞர்கள், உடையலங்கார கலைஞர்கள், சரித்திரப் புகழ் பெற்ற மாவீரர்களை போல ஆற்றல் கொண்ட சண்டைப் பயிற்சி இயக்குநர்கள், சண்டைப் பயிற்சி கலைஞர்கள், மக்களை வியக்க வைத்த நடன இயக்குநர்கள், நடன கலைஞர்கள் என திரைத் துறையைச் சார்ந்த பல்வேறு கலைஞர்கள் மற்றும் இவர்கள் அனைவருடனும் தோளோடு தோள் கொடுத்து உழைக்கும் திரைப்படத் துறை தொழிலாளர்கள் தங்களது உரிமைகளை பாதுகாக்க ஒவ்வொரு துறைக்கும் ஒரு சங்கங்கள் அமைத்தனர்.

அந்த வகையில் அமைக்கப்பட்ட 22 சங்கங்கள் இணைந்த ஒரு கூட்டமைப்புதான் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர்கள் சம்மேளனம். அதாவது ‘பெப்சி’ (FEFSI) என்ற இந்த அமைப்பு ஆகும். திரைப்படத் தொழிலாளர்கள் நலனுக்கான இந்த அமைப்பு 1967ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

திரைப்படம் மற்றும் அரசியல் என்ற இரண்டையும் தனது இரண்டு கண்களாக பாவித்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான் இந்த அமைப்பை உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறார் என்பதை அறிவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

“கடமை செய்வோம் கலங்காமலே
உரிமை கேட்போம் தயங்காமலே
வாருங்கள் தோழர்களே!
ஒன்றாய் சேருங்கள் தோழர்களே!”

என்ற புரட்சித்தலைவர் அவர்களின் பாடலுக்கேற்ப, இந்த அமைப்பு திரைப்படத் துறையினர் சந்திக்கும் அன்றாடப் பிரச்சனைகள் குறித்தும், அவர்களுக்கு கிடைக்கப் பெறவேண்டிய

உரிய ஊதியம் குறித்தும், அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நியாயமான உரிமைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட நிருவாகிகளிடம் பேசி பெற்றுத் தருதல், மத்திய மாநில அரசுகள் மூலம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய – கல்வி உதவி, மருத்துவ உதவி, வீடு கட்ட உதவி போன்ற நலத் திட்டங்களை பெற்றுத் தருதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தொழிலாளர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட இந்த சம்மேளனம் செய்யும் முயற்சிகளை அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரைப்படத் துறையில் ஆரம்ப காலத்தில் படப்பிடிப்பு நிலையங்கள் மற்றும் தளங்கள் அதிக அளவில் இருந்தது தமிழ்நாட்டில் தான். முதலில் இந்தி மொழி உள்பட அனைத்து மொழி திரைப்படங்களும் சென்னையில் உருவாக்கப்பட்டன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, வங்காளம், போஜ்பூரி, துளு, பஞ்சாபி என இந்தியாவின் அனைத்து மொழிப் படங்களிலும் இந்த அமைப்பின் தொழிலாளர்கள் பங்கு பெற்று சாதனை படைத்து வருகிறார்கள் என்பது போற்றுதலுக்குரியதாகும். தற்பொழுதைய காலமாற்றத்திற்கேற்ப, படப்பிடிப்பு நிலையங்களின் எண்ணிக்கை தமிழகத்தில் வெகுவாக குறைந்து விட்டது.

படப்பிடிப்பு தளங்கள் இருந்த இடங்கள் தற்பொழுது குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களாக மாறி வருகின்றன. இந்த சூழ்நிலையில் திரைப்பட கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்கள் இணைந்து, சினிமாத் துறையின் மூலம் சமுதாய நலன் சார்ந்த கருத்துகளை மக்களிடையே விதைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்த முடியும் என்று சாதித்துக் காட்டிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயரால் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு படப்பிடிப்பு தளம் உருவாக்கி இருப்பது பாராட்டுக்குரிய செயலாகும்.

மேலும் FEFSI என்ற அமைப்பு உருவாக உறுதுணையாக இருந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது பெயரை தங்களது முதல்

படப்பிடிப்பு தளத்திற்கு வைத்தது, இந்த அமைப்பினர் அவருக்கு தங்கள் நன்றியை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

110 அடி நீளமும் 100 அடி அகலமும் 56 அடி உயரமும் கொண்ட இந்த படப்பிடிப்புத் தளம் இந்தியாவிலேயே மிக உயர்ந்த படப்பிடிப்பு தளம் என்று அறிவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். மேலும், யாரிடமும் கடன் பெறாமல் சம்மேளனத்தின் கலை நிகழ்ச்சியின் மூலமும், இணைக்கப்பட்ட சங்கங்களின் இருந்து பெறப்பட்ட நன்கொடையின் மூலமும் இத்தனை அழகுமிக்க படப்பிடிப்பு தளத்தை உருவாக்கி சாதனை படைத்துள்ளது பெப்சி அமைப்பு.

இந்த சாதனையை படைத்த இந்த அமைப்பினைச் சார்ந்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் ஆவார்கள். சென்னையின் பிற இடங்களிலும், தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் இப்படிப்பட்ட படப்பிடிப்பு தளங்களை இந்த அமைப்பு உருவாக்க வேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதிக அளவில் படப்பிடிப்பு தளங்கள் உருவாக்கப்படுவதன் மூலம் தமிழ் படத் தயாரிப்பாளர்கள் வெளியிடங்களுக்குச் செல்லாமல் உள்ளூரிலேயே படப்பிடிப்பு நடத்த வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் அவர்கள் தயாரிக்கும் படங்களுக்கான செலவுகள் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.

மேலும், இதர மொழிப் படங்களும் இங்குள்ள படப்பிடிப்பு தளங்களில் பயன்படுத்திக் கொள்ள முன்வரும் வாய்ப்பு உருவாகும். இதன் மூலம் இங்குள்ள தமிழ் திரைப்படத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுவது உறுதிப்படுத்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் திரைப்படத் துறைக்கும் தனக்கும் உள்ள தொடர்பை பற்றிக் குறிப்பிடும்போது, “எப்பொழுதெல்லாம் நான் முதலமைச்சராக பொறுப்பேற்கிறேனோ, அப்போதெல்லாம் தமிழ்த் திரைப்படத் துறைக்கு தேவையான அனைத்து

ஊக்கத்தையும், உதவியையும், ஆதரவையும் அளித்து வருகிறேன்" என்று கூறினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழிவந்த அம்மாவின் அரசும் தமிழ் திரையுலகத்தை ஊக்கப்படுத்தியும், வழிகாட்டியும் வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் திரைப்படத் துறைக்கு ஏராளமான திட்டங்களை வழங்கி செயல்படுத்தியுள்ளார்கள். அவைகளை முழுமையாக இங்கே குறிப்பிட நேரமில்லை என்பதால் சிலவற்றை மட்டும் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

- மாண்புமிகு அம்மா அவர்கள் 'பெப்சி' அமைப்பின் அலுவலகத்திற்காக சென்னை 100 அடி சாலையில் இடம் வழங்கினார்கள். இந்த இடத்தில்தான் தற்போது FEFSI அலுவலகம் இயங்கி வருகிறது என்பது பெருமைக்குரிய விஷயமாகும்.
- குறைந்த முதலீட்டில் திரைப்படம் எடுக்கும் சிறு தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அந்த திரைப் படத்திற்கான மானியத் தொகையையும், திரைப்படங்களின் எண்ணிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்தினார்கள் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.
- ஒற்றைச் சாளர முறையில் படப்பிடிப்பு நடத்த அனுமதி வழங்கும் முறை மாண்புமிகு அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- திரைப்படத் தொழிலாளர்கள் பணிபுரியும்போது உயிரிழந்தாலோ, ஊனமுற்றாலோ அவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் அம்மா அவர்கள் ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது.
- மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பெயரில் விருது, பெண்களை உயர்வாக சித்தரிக்கும் திரைப்படத்திற்கு அரசு விருது, சிறந்த திரைப்பட ஒப்பனைக் கலைஞர்

விருது, சிறந்த தையல் கலைஞர் விருது, பின்னணிக் குரல் கொடுப்பவர்களுக்கு விருது, சிறந்த நகைச்சுவை நடிகர் மற்றும் நடிகையர், குணச்சித்திர நடிகர் மற்றும் நடிகையர் ஆகியோருக்கு புதிய விருதுகள் ஆகியவை மாண்புமிகு அம்மா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டன.

- சட்டத்திற்கு புறம்பாக திருட்டு வீடியோக்கள் எடுக்கப்படுவதை தடுக்கும் வகையில் காணொலி திருட்டு தடுப்பு பிரிவு எனும் ஒரு தனிப் பிரிவு காவல் துறையில் உருவாக்கப்பட்டுள்ளது. திருட்டு வீடியோ தொழிலில் ஈடுபட்டு குற்றம் இழைப்போரை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வழிவகை செய்தது மாண்புமிகு அம்மா அவர்கள். மரியாதைக்குரிய சகோதரர் குறிப்பிடுகின்றபொழுது இங்கே தெரிவித்தார், திருட்டு வி.சி.டி. அதிக அளவிலே இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே, அதை தடுப்பதற்குத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே, இதற்கு கடுமையான சட்டம் வேண்டும் என்று குண்டர் சட்டம் அம்மாவினுடைய ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

- மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்டுதோறும் சென்னையில் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு 50 இலட்சம் ரூபாய் மானியம் அளித்தார்கள். அதை மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது.

இதுபோன்று, எண்ணற்ற சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் திரைப்படத் துறைக்கு வழங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களிடம் திரைப்படத் துறையினர் வைத்த பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. அதே நிலையில் தான் அம்மாவின் வழியில், அம்மாவின் அரசும் திரைப்படத் துறைக்கு பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி வருகிறது. இருப்பினும், திரைப்படத் துறையினரே, தங்களுக்குள் இருக்கின்ற ஒற்றுமையை

நிரூபிக்கும் வகையில், இந்த படப்பிடிப்பு தளங்களைக் கொண்டு பல்வேறு திட்டங்களையும் தங்களுக்குள் செயல்படுத்தி வருகிறார்கள்.

அவர்களுடைய ஒற்றுமையும், விடாமுயற்சியும் நிச்சயம் வெற்றியைத்தான் தரும். "வெற்றி பெறுவதற்கு தேவையானது – முடிவில்லா விடா முயற்சியும், அதீதமான நம்பிக்கையும்தான்", என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். உங்கள் அமைப்பின் விடா முயற்சியினால்தான் இன்று இவ்வளவு பெரிய படப்பிடிப்பு தளத்தினை அமைக்க முடிந்தது.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
ஒற்றுமையே உயர்வு தரும்" என்பது ஆன்றோர் வாக்கு.

பல சங்கங்கள் ஒற்றுமையாக இணைந்து உருவாக்கியதுதான் இந்த அமைப்பு. ஒற்றுமையின் உணர்வுக்கு உங்கள் அமைப்பே ஒரு எடுத்துக்காட்டாகும். உங்கள் அமைப்பில் உள்ள சங்கங்களின் ஒற்றுமை மற்றும் கூட்டு முயற்சியின் காரணமாகத்தான் இன்று இந்தியாவிலேயே மிக உயர்ந்த எம்.ஜி.ஆர் நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தினை வெளியிலிருந்து எந்த உதவியும் பெறமாமல், உங்களது கூட்டு முயற்சியின் விளைவாக உருவாக்கி இருக்கிறீர்கள் என்பதை அறிவதில் நான் மட்டமற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்கள் அமைப்பில் உள்ள அனைவரது ஒருங்கிணைந்த ஒற்றுமையின் முயற்சியின் காரணமாக, இந்த சிறப்பான படப்பிடிப்பு தளம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒற்றுமையின் உயர்வு பற்றி இங்கு கூறுகையில் எனக்கு ஒரு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு சிறு கிராமம். அங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை குறைவு. இக்கிராமத்தில் மரங்களும் குறைவாக இருந்தன. எனவே, சமைப்பதற்கு தேவையான விறகை கூட மக்கள் வெளி ஊரிலிருந்து அதிக விலைக்கு வாங்க வேண்டியிருந்தது.

ஒரு சமயம் அதிக மழை பொழிந்ததால், விறகு விற்பதற்கு பக்கத்து ஊர்களிலிருந்து எந்த வியாபாரியும் வரவில்லை. இதனால் சமையல் செய்வதற்கே சிரமம் அந்தப் பகுதியில் ஏற்பட்டது. அந்த கிராமத்தில், ஒரு வீட்டில் இரண்டு சிறுவர்கள் இருந்தனர். அவர்கள் தங்களது தாயின் கட்டளைப்படி, தங்களுக்கு சொந்தமான தோட்டத்திலிருந்து மழை மற்றும் காற்றினால் கீழே விழுந்திருக்கும் காய்ந்துபோன மரக்கிளைகளை கொண்டு வரச் சென்றனர்.

அவர்கள் தோட்டத்திற்கு சென்று பார்த்தபோது மழையினால் பெரிய மரக்கிளைகள் விழுந்து இருந்தன. ஆனால் அவர்கள் இருவரால் அந்த மரக்கிளைகளை தூக்க முடியவில்லை.

அப்பொழுது இறந்துப்போன ஒரு பெரிய புழுவை பல எறும்புகள் சேர்ந்து ஒன்றாக இழுத்துச் செல்வதை பார்த்தனர்.

"இவ்வளவு சிறிய எறும்புகள் ஒரு புழுவை எப்படி இழுத்துச் செல்கின்றன ?" என சிறியவன் கேட்டான். அதற்கு பெரியவன், "நிறைய எறும்புகள் ஒன்று சேர்ந்துவிட்டால் ஒரு செத்த பாம்பைச் கூட இழுத்துச் செல்ல முடியும்" என்று கூறினான். எறும்புகள் புழுவை மெல்ல மெல்ல இழுத்துச் செல்கையில், புழு அடிக்கடி உருண்டு விழுந்தது. சிற்சில சமயங்களில் சில எறும்புகள் அதன் அடியில் மாட்டிக் கொண்டது. ஆனால் மற்ற எறும்புகள்அந்த புழுவை அசைத்து, அடியில் மாட்டிக் கொண்ட எறும்புகளை காப்பாற்றியது.

அந்த எறும்புகள் களைப்பு என்பதையே அறியவில்லை. அந்த சிறுவர்கள் பார்த்துக் கொண்டிருந்தபோதே அந்த புழுவை வெகுதூரத்திற்கு இழுத்து சென்று விட்டன. உடனே அந்த சிறுவர்களுக்கு உற்சாகம் பிறந்தது. "அண்ணா, நாம் இந்த எறும்பைவிடக் கீழானவர்களா ? நீ போய் உன் நண்பர்களை அழைத்து வா.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்த மரக்கிளையை நமது வீட்டிற்கு எடுத்துச் செல்வோம்" என்று சிறியவன் கூறினான்.

அதன்படி அவர்கள் அனைவரும் சேர்ந்து மரக்கிளையினை தங்களது வீட்டிற்கு கொண்டு சென்றனர். வீட்டிற்கு சென்றவுடன் அந்த சிறுவர்கள் தங்கள் தாயாரிடம் நடந்ததை கூறினர். அப்பொழுது அவர்களின் தாயார் ஒற்றுமையின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

"ஒற்றுமையில் மிகுந்த வலிமை உண்டு." நீங்கள் ஒன்று சேர்ந்தால் கடுமையான வேலையாக இருந்தால் கூட செய்ய முடியும். உங்களுக்குள் ஒற்றுமை இருந்தால், உங்கள் மனதும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கும், உங்கள் வேலையை சுலபமாக முடிக்க முடியும். ஆதலால் ஒற்றுமையில்தான் பலமிருக்குது என உணருங்கள். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்றார் அந்த தாயார். மேலும், சிறுவர்களின் தாயார், அப்பெரிய மரக்கிளையினை தோட்டத்திலிருந்து வீட்டிற்கு கொண்டு வர உதவி செய்த சிறுவர்களின் வீட்டிற்கும், மரக்கிளையினை பிரித்து கொடுத்து அனைவரது வீட்டிலும் சமையல் செய்வதற்கு உதவினார்.

எனவே, பெப்சி அமைப்பைச் சார்ந்த நீங்கள் அனைவரும் விடாமுயற்சியால் வெற்றி பெற்று உள்ளீர்கள் என்பதை உணர்ந்து உங்கள் அனைவரையும் மனதார பாராட்டி வாழ்த்துகிறேன். இந்த நன்னாளில் தமிழ் திரையுலகம் மென்மேலும் வளர்ச்சி பெறவேண்டும், திரைப்படத் தொழிலாளர்கள் எல்லா நலமும், வளமும் பெற்று மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன். விரைவில் திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நடைபெறும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மேடையிலே பேசியவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு வைத்தார்கள். இன்றைக்கு பல தொழிலாளர்கள் வீடு இல்லாமல் இருக்கின்றார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், குடிசையில்லா வீடு உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள்

திட்டம் தீட்டினார்கள், அந்தத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. பல இலட்சம் வீடுகளை கட்டித் தருவதற்கு இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் என்னிடத்திலே தெரிவித்திருக்கின்றார்கள், அவர்களுக்கு எப்படி வீடு கட்டிக் கொடுக்க வேண்டும், எவ்வாறு உதவி செய்ய முடியும் என்பதையெல்லாம் பரிசீலித்துக் உங்களுடைய தொழிலாளர்களுக்கும் சட்டப்படி, விரைவாக, உங்களுடைய எண்ணப்படி அம்மாவினுடைய அரசு உங்களுக்கு உதவி புரியும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதேபோல, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் உடைய நூற்றாண்டு விழாவை அரசின் சார்பாக எல்லா மாவட்ட தலைநகரிலும் நாம் நடத்தியிருக்கின்றோம். இதுவரை அரசின் சார்பாக, 30 மாவட்டங்களில் அறிவித்து, அந்த அறிவிப்பின்படி 30 மாவட்டங்களுக்கு சென்று, அந்த மாவட்ட மக்களை சந்தித்து, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் என்ன என்பதையறிந்து, அதற்கான அறிவிப்புகளை வழங்கியிருக்கிறோம். அந்த அறிவிப்பின்படி, இன்றைக்கு ஒவ்வொரு திட்டமாக நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

அந்த அறிவிப்பிலே, இன்று கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக சிறையிலே இருந்த சிறைவாசிகள் நீதிமன்றத்தினுடைய சட்டதிட்டத்திற்குட்பட்டு யார், யார் வருகின்றார்களோ, அவர்களெல்லாம் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பை தந்து, அந்த அறிவிப்பின் கீழ் இதுவரை சுமார் 600 நபர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கிட்டத்தட்ட இன்னும் 1,000 நபர்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கும் பரிசீலித்து, படிப்படியாக

விடுதலை செய்வதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எங்கள் இயக்கத்தின் ஆணிவேராக வாழ்ந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும் திரைத்துறையை சேர்ந்தவர்கள்தான் என்பதை என்றும் மனதில் வைத்திருக்கின்றோம். இருபெரும் தலைவர்கள் சுமார் 26 ஆண்டுகாலம் தமிழகத்திலே ஆட்சி அதிகாரத்தில் இருந்து பல்வேறு திட்டங்களை வழங்கியிருக்கின்றார்கள், திரைப்படத் துறையினருக்கும் வழங்கியிருக்கின்றார்கள், பொது மக்களுக்கும் வழங்கியிருக்கின்றார்கள்.

ஆகவே, அவர்கள் மறைந்தாலும் அவர்களுடைய திட்டங்கள் அனைத்தையும், அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பல்வேறு கோரிக்கை வைத்தீர்கள். அதையெல்லாம், அம்மாவினுடைய அரசு கனிவோடு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.ஆர்.கே.செல்வமணி அவர்கள் பேசியபொழுது, இங்கே இருக்கின்ற 23 சங்கங்களில் உள்ள நிருவாகிகளுக்கு என்னென்ன பிரச்சினை இருக்கிறது என்பதை முழுமையாக கூறியிருக்கிறார்.

இது திரைப்பட குடும்பம், திரைப்பட குடும்பம் நடத்துகின்ற விழா, இங்கே தயாரிப்பாளர்கள் இருக்கின்றார்கள், இயக்குநர்கள் இருக்கின்றார்கள், நடிகர்கள் இருக்கின்றார்கள், உருவாக்குகின்ற களத்தில் திரைப்படத் தொழிலாளர்கள் அமர்ந்திருக்கின்றீர்கள், ஒட்டுமொத்த திரைக்குடும்பமே இங்கு அமர்ந்திருக்கின்றது. முதன்முதலாக திரைப்படத் துறையினர் நடத்துகின்ற முதல் விழா, இந்த விழாவில் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். எனக்கு

முன்னாலே, சம்மேளனத் தலைவர் திரு.ஆர்.கே.செல்வமணி அவர்கள், திடீரென்று அழைப்பிதழ் அளிக்க வருவதாகச் சொன்னார், வாருங்கள் என்று சொல்லிவிட்டேன். நான் வீட்டிலே அமர்ந்திருந்தபொழுது, இந்த அழைப்பிதழைக் கொடுத்தார், நான் எப்படி உடை அணிகிறேன் என்று சுட்டிக் காட்டினார். நானெல்லாம் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன், மரியாதைக்குரிய துணை முதலமைச்சர் அவர்களும் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். ஆகவே, கஷ்டம் என்றால் என்ன என்பது நன்றாகத் தெரியும், உழைக்கின்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் என்பதை நன்றாகப் புரிந்தவர்கள். அரசியலில் வருவதற்கு பல்வேறு வழிகள் இருக்கின்றன. ஆனால் உங்களைப் போல் உழைத்து இந்த நிலைக்கு வந்தோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, உழைக்கின்ற பொழுதுதான் அந்தக் கஷ்டம், வலி தெரியும். இந்த 23 அமைப்புகளும் எப்படி கஷ்டப்படுகின்றீர்கள், எப்படி வலி தாங்கிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதையெல்லாம் உங்கள் சம்மேளனத் தலைவர் அழகாக கோடிட்டுக் காட்டினார்கள்.அத்தனையையும் உணர்ந்தவர்கள் நாங்கள், உங்களோடு இருந்து பழகியவர்கள், உழைப்பில் இருந்து நாங்கள் வளர்ந்தவர்கள். ஆகவே, உழைப்பிற்கு என்றைக்கும் முன்னுரிமை வழங்குகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

பக்கத்திலே ஒரு அரங்கம் கட்டித் தரவேண்டும் என்று ஒரு கோரிக்கையும் வைத்தார்கள். இங்கே பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவருடைய நூற்றாண்டு படப்பிடிப்பு தளத்தை துவக்கி வைக்க வேண்டும் என்றுதான் நான் இங்கே நுழைந்தேன். அதை மேடையில் வந்து பார்க்கின்றபொழுதுதான் பல்வேறு கோரிக்கைகள் வந்தன. இவ்வளவு கோரிக்கைகள் திரைப்படத் துறைக்கு இருக்கின்றது என்று நான் இப்பொழுதுதான் தெரிந்து கொண்டேன். இருந்தாலும், முதன்முதலாக இந்தத் திரைப்படத் துறையால் நடத்துகின்ற விழாவில் பங்கு பெற்றிருக்கின்ற நிகழ்ச்சியின்

காரணமாக, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா பெயரிலே அமைக்கப்படுகின்ற அந்த அரங்கிற்கு அம்மாவினுடைய அரசு, அவர் கேட்ட 5 கோடி ரூபாய் நிதியை வழங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, பேசுகின்றபொழுது ஏற்கெனவே, பலமுறை திரைப்பட நடிகர்களும் சரி, இயக்குநர்களும் சரி, இங்கே இருக்கின்ற சம்மேளனத்தைச் சேர்ந்த நிருவாகிகளும் என்னை சந்திக்கின்ற பொழுதெல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றீர்கள். அதை துறையினுடைய அமைச்சருடன் கலந்துபேசி, படிப்படியாக உங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தரும். ஆகவே, இருபெரும் தலைவர்கள் திரைப்படத்தில் இருந்து வந்தவர்கள். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவும் திரைப்படத் துறையிலிருந்து வந்து 26 ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சி தந்த இருபெரும் தலைவர்களுடைய நிலையிலே, நீங்கள் வைக்கின்ற கோரிக்கைளை கனிவோடு பரிசீலித்து அம்மாவினுடைய அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த சம்மேளனத் தலைவர் மரியாதைக்குரிய திரு. செல்வமணி அவர்களுக்கும், அவரைச் சார்ந்த அத்தனை பிரிவு நிருவாகிகளுக்கும், வருகை தந்திருக்கின்ற அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
26.08.2018 அன்று பெப்சி–எம்.ஜி.ஆர் நூற்றாண்டு படப்பிடிப்புத் தளம் திறப்பு விழாவில் ஆற்றிய உரை

சேலம், கோனேரிப்பட்டியில் 50,000 மக்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையம்!

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு, கவனம் முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையம், அதேபோல, ஏற்கெனவே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதிகளவில் நோயாளிகள் வருகின்றபொழுது அந்தப் பகுதிகளில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்தி, இன்றைக்கு தமிழகம் முழுவதும் மருத்துவ துறை சிறந்து

விளங்கிக் கொண்டிருக்கின்றது. அகில இந்திய அளவில் பார்க்கின்றபொழுது, மருத்துவத்துறையிலே தமிழகம் முதன்மை மாநிலமாக இன்றைக்கு திகழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையை பார்க்கின்றோம்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை வழங்கப்படவேண்டும், அதோடு, அந்தந்தப் பகுதிகளிலேயே அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சையை அளிப்பதற்குத் தேவையான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, அவர்களுடைய மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து அம்மா வழியிலே செயல்பட்டு ஒவ்வொரு ஒன்றியப் பகுதியிலும், எந்தெந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையம் தேவைப்படுகிறதோ, அந்தப் பகுதிகளெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையிலே, மத்தியப் பகுதியான கோனேரிப்பட்டியிலே இன்றையதினம் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது. கோனேரிப்பட்டியில் வசிக்கக்கூடிய சுமார் 50 ஆயிரம் மக்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சையை அளிக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாக கோனேரிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அமைவதற்காக அம்மாவினுடைய அரசால் அறிவிக்கப்பட்டு, அதற்குத் தேவையான கட்டடம் கட்டப்பட்டு, இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் சுமார் 8 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற பொதுமக்கள் சிகிச்சை பெறக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது.

சேலம் மாவட்டம் மட்டுமல்லாமல், அருகில் இருக்கின்ற ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும் இங்கு வந்து சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

சேலம் மாவட்டத்திலே நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தினாலே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் மட்டும், நங்கவள்ளி ஒன்றியம், கொங்கணாபுரம், சித்தூர், வாழவந்தி, பனைமரத்துப்பட்டி, மகுடஞ்சாவடி, அரியாபாளையம், வள்ளிக்கரை, வடுகபட்டி, தும்பல், பேளூர் போன்ற 12 இடங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தப்பட்டு, தேவையான அளவிற்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டி, அதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு ரூபாய் 9.42 கோடி இந்த கட்டடம் கட்டும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றது.

அதேபோல, புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டு அதற்காக புதிய கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப் பட்டிருக்கின்றன. சேலம் மாவட்டத்தில் சவரியூர், சமுத்திரம், கோனேரிப்பட்டி, பக்கநாடு, செம்மந்தப்பட்டி, கூட்டாத்துப்பட்டி, பச்சனாம்பட்டி, மாட்டையாம்பட்டி, சூலக்குறிச்சி, மஞ்சக்குட்டை, குண்டூர் ஆகிய 11 இடங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாக்கப்பட்டு, அதற்குத் தேவையான கட்டடம் கட்டப்பட்டு, அதற்காக ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீடு அம்மாவினுடைய அரசால் செய்யப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான கூடுதல் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 8.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வாழவந்தி, நாகலூர், சூலாங்குறிச்சி, கருமந்துறை, தும்பல் போன்ற 5 இடங்களில் தேவையான கட்டடங்களை அம்மாவினுடைய அரசு கட்டிக் கொடுத்திருக்கின்றது.

அதேபோல, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2011–2018–ஆம் ஆண்டு 29.08.2018 வரை ரூபாய் 178.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 2,10,481 பயனாளிகள் பயன் பெற்றிருக்கின்றார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

அம்மாவினுடைய அரசு மக்களைப் பேணிக்காக்கக்கூடிய அரசாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு, இறந்தவர் ஒருவரின் உடலிலிருந்து இரண்டு கைகளை எடுத்து, பொருத்தி, தமிழ்நாடு மருத்துவர்கள் சாதனை புரிந்திருக்கின்றார்கள். இன்றைக்கு அவர் Basket Ball விளையாடுகின்ற அளவிற்கு இருக்கின்றார். இந்தியாவிலே எந்த அரசு மருத்துவமனையிலும் இதுபோல் பொருத்தவில்லை.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தாய்மார்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் திட்டத்தின் வாயிலாக, கருவுற்ற

பெண்களுக்கு தேவையான சிகிச்சை அளித்ததன் விளைவாக, மருத்துவத் துறையில், சிறந்த, அற்புதமான திட்டத்தை கொடுத்ததன் விளைவாக, மருத்துவர்கள் சிறந்த சிகிச்சை அளித்து, இன்றைக்கு பிரசவ காலத்தில் இறக்கின்ற குழந்தைகளின் இறப்பு சதவிகிதமும், அதேபோல, பிரசவ காலத்தில் தாய்மார்கள் இறக்கின்ற சதவிகிதமும் குறைக்கப்பட்டிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், உலகவங்கி உதவியுடன், தனியார் மருத்துவமனைக்கு இணையாக, அரசு மருத்துவமனைகளில், நவீன சிகிச்சை அளிக்கக்கூடிய அளவிற்கு தேவையான கருவிகள் வாங்கிக் கொடுக்கப்பட்டு, சிறந்த மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கக்கூடிய சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கித் தந்திருக்கின்றோம். தமிழ்நாட்டில் இருக்கின்ற மருத்துவர்கள் சிறப்பான சிகிச்சை அளித்து, மருத்துவ சேவை அளிப்பதில் அகில இந்திய அளவிலே தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பல்வேறு இடங்களில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் அணைக்கு அதிக அளவில் வருகின்றபொழுது, அந்த உபரிநீரை எடுத்து, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற பல்வேறு பகுதிகளுக்கு அளிப்பதன் மூலமாக, அங்கிருக்கின்ற ஏரிகள், குளங்களில் நிரப்புவதன் மூலமாக, நிலத்தடி நீர் உயர்ந்து, குடிப்பதற்குத் தேவையான நீரை, விவசாயிகளுக்குத் தேவையான நீரை வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மேட்டூர் அணை 120 அடி எட்டுகின்றபொழுது, அங்கே மோட்டார் வைத்து, பம்ப் செய்து அதன் மூலமாக மேட்டூர் சட்டமன்றத் தொகுதி மேச்சேரி,

நங்கவள்ளி, தாரமங்கலம், எடப்பாடி ஒன்றியம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கொங்கணாபுரம் ஒன்றியம், சங்ககிரி ஒன்றியம் போன்ற பல்வேறு இடங்களுக்கு உபரிநீரை எடுத்து, அந்தந்த பகுதிகளில் இருக்கின்ற ஏரிகளை நிரப்புவதன் மூலமாக நிரந்தர தீர்வு காணப்படுகிறது. உபரியாக இருக்கின்ற நீரை முறையாக பயன்படுத்தியதன் மூலமாக அந்தந்த ஏரி, குளங்கள் நிரப்பப்பட்டு, நீர்நிலை உயர்ந்து, விவசாயத்திற்கு தேவையான நீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. வெள்ளரிவெள்ளியில் நமது நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம், மாநிலங்களவை உறுப்பினர் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.அர்ச்சுனன் ஆகியோருடைய நிதி உதவியுடன் கிழக்குக்கரை கால்வாயிலிருந்து வெளியேறுகின்ற உபரிநீரை, பம்ப் செய்து, ஏரிகளுக்கு தண்ணீரை கொண்டுசென்று, தண்ணீர் நிரப்பப்பட்டு வருகின்றது, இன்னும் 20 நாட்களில் தண்ணீர் நிரம்பிவிடும். வெள்ளரிவெள்ளியில் உள்ள ஏரி முழுவதும் நிரம்புகின்றபொழுது கோணேரிப்பட்டி வரை நீர் செறிவூட்டப்படும், எல்லா இடங்களிலும் நீர்மட்டம் உயரும், அப்படிப்பட்ட திட்டத்தை நாங்கள் வகுத்துக் கொடுத்திருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கெல்லாம் உபரிநீர் இருக்கின்றதோ, அந்த உபரிநீரை பயன்படுத்துவதற்காக ஓய்வு பெற்ற 6 தலைமை பொறியாளர்களை நியமித்து அந்தக் குழு, ஒவ்வொரு மாவட்டமாக சென்று, எங்கெங்கெல்லாம் பருவமழை காலங்களில் பெய்கின்ற மழைநீர் எவ்வளவு வீணாக கடலிலே கலக்கின்றது என்பதை கணக்கிட்டு, எந்த இடத்திலே தடுப்பணை கட்டவேண்டும், எந்த இடத்தில் நதியின் குறுக்கே தடுப்பணை கட்டவேண்டும், எந்தப் பகுதியிலிருந்து நீர் எடுக்கப்பட்டு, எந்தெந்த பகுதிக்கு வினியோகம் செய்யமுடியும், எந்தெந்த ஏரியிலே நிரப்ப முடியும் என்ற ஆய்வுப்பணியை மேற்கொண்டு, அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பருவகாலங்களிலே பெய்கின்ற மழைநீர் அந்தந்த

பகுதிகளில் இருக்கின்ற மழைநீரை ஏரிகள், குளங்கள், ஓடைகள் வழியாக நாம் சேமித்து வைப்பதன் மூலமாக நிலத்தடி நீர் உயரும். ஆகவே, அப்படிப்பட்ட பணியை செய்வதற்காக, முதற்கட்டமாக, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, 1,519 ஏரிகளை பரிட்சார்த்த முறையிலே எடுத்து, அந்தப் பணிகள் துவக்கப்பட்டு, வெற்றிகரமாக இருந்த காரணத்தினால், மேலும், இந்த ஆண்டு 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக 328 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று கொண்டிருக்கின்றன. அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளுக்கு தேவையான நன்மைகளை செய்யவேண்டும், விவசாயிகளுக்குத் தேவையான நீர் ஆதாரத்தை பெருக்கிக் கொடுக்க வேண்டும், பெய்கின்ற மழைநீர் ஒரு துளி கூட வீணாகக்கூடாது என்பதற்காக அம்மாவினுடைய அரசு குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை வகுத்து, அந்த திட்டத்தின் வாயிலாக ஆங்காங்கே உள்ள ஏரிகள், குளங்கள்,

தடுப்பணைகள் மூலமாக நதிகள், ஓடைகள் வழியாக தண்ணீரை தேக்கி, நீரை சேமித்து மக்களுக்கு வழங்குகின்ற ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

தடுப்பணைக்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறோம். அந்த தடுப்பணையின் மூலமாக, மூன்று ஆண்டுகளிலே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஆங்காங்கே உள்ள ஓடைகள் வருகின்ற நீரை சேமித்து, நதிகள் மூலமாக வீணாகும் நீரை தடுப்பணைகள் கட்டி, நீரை சேமித்து, நிலத்தடி நீரை உயர்த்துவது. அதற்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கி, முதற்கட்டமாக 292 கோடி ரூபாய் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு, 62 தடுப்பணைகள் கட்டுவதற்கான நடவடிக்கையை அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய பெருங்குடி மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் இன்றைக்கு செய்து கொடுக்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், ஏரிகள், குளங்களில் பல ஆண்டுகளாக படிந்து, அள்ளாமல் இருந்து வந்துள்ள வண்டல் மண்ணை அள்ளுவதன் மூலம், ஏரிகள், குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு, தேக்கி வைக்கும் நீரின் கொள்ளளவை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அள்ளப்படுகின்ற வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தப்படுகிறது.

மேட்டூர் அணை கட்டப்பட்டு 83 ஆண்டுகாலமாக தூர் வாராமல் இருந்து, அம்மாவினுடைய அரசால் மேட்டூர் அணை தூர்வாருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தினந்தோறும் 3,000 லாரிகள் மூலமாக அள்ளப்படும் வண்டல் மண் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இயற்கை உரமாக பயன்படுகிறது. இப்படிப்பட்ட சரித்திர சாதனைகளை இன்றைக்கு படைத்துக் கொண்டிருக்கின்றோம். இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, விவசாயிகளுடைய அரசு, விவசாயத்திற்குத் தேவையான

அத்தனை நன்மைகளையும் செய்யக்கூடிய அரசு, விவசாயத் தொழிலாளி வளம் பெறுவதற்காக உழைக்கக்கூடிய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மருத்துவமனை அமைந்த காரணத்தினாலே, ஞாயிற்றுக் கிழமைகளில் இப்பகுதியில் கூடுகின்ற சந்தை அமையாமல் போய்விடும் என்ற தவறான கருத்தை பரப்பி வருகின்றார்கள். ஏற்கனவே, சந்தை கூடியது போல், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சந்தை கூடுவதற்கான இடம் வழங்கப்படும், எக்காரணம் கொண்டும், இந்த சந்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்படாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வியிலே ஒரு புரட்சியை, மறுமலர்ச்சியை அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவிலேயே, தமிழகத்தில்தான், எந்த ஒரு ஆட்சியிலும் செய்யாத அளவிற்கு, இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில்தான், சிறப்பான திட்டங்களை கல்விக்காக கொடுத்திருக்கின்றோம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தார்கள். அதே வழியில் செயல்படும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்து, ஆகமொத்தம் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்து, ஆயிரக்கணக்கான ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் தங்கள் பகுதியிலேயே குறைந்த கட்டணத்திலே உயர்கல்வி படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எடப்பாடியிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்திருக்கின்றோம். கிட்டத்தட்ட ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர் 1,350 பேர் அக்கல்லூரியில் குறைந்த கட்டணத்திலே உயர் கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். அதேபோல, வசதி, வாய்ப்பு

இல்லாத காரணத்தினால், மாணவச் செல்வங்கள் வெளியூர் சென்று படிக்கக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தினால், வனவாசிக்கு அருகாமையிலே, அம்மாவினுடைய அரசால் கிட்டத்தட்ட ரூபாய் 52 கோடி மதிப்பீட்டில் பாலிடெக்னிக் கல்லூரி இந்த ஆண்டு திறக்கப்பட்டதன் விளைவாக, அந்தக் கல்லூரியை சுற்றியுள்ள பகுதியிலிருந்து வந்து படிக்கின்ற மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற்றுள்ளார்கள். தற்பொழுது வீட்டிலிருந்து நேரடியாக கல்லூரிக்கு செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் அத்தனை இடங்களும் நிரப்பட்டுள்ளன. அதேபோல, B.Ed., கல்லூரி எட்டிக்கோட்டையில் அடுத்த ஆண்டில் திறக்கப்படவிருக்கின்றது. இதனால் மாணவர்கள் ஏழை, எளிய மாணவச் செல்வங்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி பயில்கின்ற சூழ்நிலை உருவாக்கப்படும்.

எட்டிக்கோட்டைப் பகுதியில் புதிதாக தொழிற்பேட்டை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கி மேம்பாடு அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எடப்பாடியில் இருக்கின்ற சாலைகள் குறுகலான சாலைகளாக இருக்கின்ற காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்ற காரணத்தினாலே, சுற்றுச்சாலை அமைக்க, அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலேயே, அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்து அந்த அறிவிப்பின்படி, இன்றைக்கு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து, அந்த சுற்றுச்சாலை அமைத்து எடப்பாடி நகரத்தில் போக்குவரத்து நெரிசல் இல்லாத சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

எடப்பாடியில், நெடுஞ்சாலைத் துறையின் வாயிலாக, கோட்டப் பொறியாளர் அலுவலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்நாடு

மின்சார வாரியத்தில் தமிழ்நாடு மின்சார கோட்டப் பொறியாளர் அலுவலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய பகுதியில் இருக்கின்றவர்கள் இங்கேயே நேரடியாக உயர் அதிகாரிகளை சந்திக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு மேலாக, நம்முடைய பகுதியிலே அரசு மருத்துவமனை அமைக்கப்பட்டு, திறந்த இந்த நேரத்திலே அம்மாவின் ஆசியோடு, இங்கே இருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலே திறக்கப்பட்டதை நான் மகிழ்ச்சியாக கருதுகின்றேன். இதனால், இங்கே நோய்வாய்ப்பட்டால் மக்கள் பல மைல் தொலைவு சென்று சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை மாறி, இங்கேயே மருத்துவ சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்திருக்கின்றது. மேலும், அதிகமாக நோயாளிகள் வந்தால் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உருவாக்கி, இங்கேயே ஆபரேஷன் செய்யப்கூடிய அளவிற்கு இந்த மருத்துவமனையை தரம்

உயர்த்துவதற்கு அம்மாவினுடைய அரசு முயற்சி எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகச்சிறப்பாக, எழுச்சியாக இந்த விழாவை ஏற்பாடு செய்த மருத்துவத்துறையை சார்ந்த அதிகாரிகளுக்கும், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைய உறுதுணையாக இருந்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், சிறப்பாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த கழகத்தின் நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அனைத்து உயர்அதிகாரிகளுக்கும், வருகை தந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் **30.08.2018** அன்று*
சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட
கோனேரிப்பட்டியில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய
புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை

தமிழ்நாட்டில் இதுவரை 554 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலம் 4.21 கோடி மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் விரிவுபடுத்தப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான, எழுச்சியான இந்த நிகழ்ச்சிக்கு தலைமைதாங்கி, தலைமையுரை ஆற்றிய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்களே, முன்னாள் அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு. ஜி.வெங்கடாசலம் அவர்களே, திருமதி மனோன்மணி அவர்களே, திரு.எஸ்.ராஜா அவர்களே, திரு.எஸ்.வெற்றிவேல் அவர்களே, திரு.காமராஜ் அவர்களே,

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறியியல் இயக்குநர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்பு பொறியாளர் அவர்களே, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையினுடைய திட்ட இயக்குநர் அவர்களே, வருகை தந்திருக்கின்ற அரசு உயர் அதிகாரிகளே, பல்வேறு துறையைச் சார்ந்த அரசு அலுவலர்களே, முன்னாள் சேர்மேன் திரு.மாதேஷ் அவர்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே, அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதனின் வாழ்க்கையில் அத்தியாவசியமான தேவைகள் உணவு, உடை மற்றும் இருப்பிடம். இதைத்தவிர, மனிதன் ஆரோக்கியமாக வாழ இன்றியமையாதது குடிநீர். எடப்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், எடப்பாடி–கொங்கணாபுரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ், கூடுதல் கிராமங்களுக்கு குடிநீர்த் திட்டம் விரிவுபடுத்தும் பணி, புதிய திட்டப்பணிகள் அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் போதிய அளவு வழங்குவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு தீவிர முன்னுரிமை மற்றும் முக்கியத்துவம் அளிக்கிறது குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் மற்றும் நகர்ப்புற மாற்றங்களுக்கான திட்டம் ஆகியவற்றின் மூலம் நிதி முதலீடு பெறப்பட்டு குடிநீர் திட்டங்கள் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2011ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒன்றுக்கு சராசரியாக 93 லிட்டர் என்ற விகிதத்தில் மொத்தம்

1,567.10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. அதற்குப்பிறகு மாண்புமிகு அம்மா அவர்களாலும், அம்மாவினுடைய அரசாலும் செயல்படுத்தப்பட்ட குடிநீர் திட்டங்களால் 2017–2018ஆம் ஆண்டில் குடிநீர் விநியோகம் 1,873.29 மில்லியன் லிட்டராக அதிகரிக்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு சராசரியாக 113 லிட்டர் வீதம் வழங்கும் அளவிற்கு 2017–2018ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். சென்னை நகர் நீங்கலாக, மாநிலம் முழுவதும் உள்ள உள்ளாட்சிகளுக்கு குடிநீர் திட்டங்கள் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை செயல்படுத்தும் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் செயல்படுத்தி வருகிறது. இந்த அமைப்பானது, மக்களுக்கு நீடித்து, நிலையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்கத்துடன், மாநிலத்தில் கடலோரப் பகுதியில், குடிநீர் திறன் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் குடிநீர் தேவை உள்ள பகுதியிலுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆறுகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் ஆகிய பொதுவான நீர் ஆதாரம் இருக்கக்கூடிய கூட்டுக்குடிநீர் திட்டங்களை நகரங்கள் மற்றும் ஊரக குடியிருப்புகள் இரண்டும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி, தமிழ்நாட்டில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கி வருகிறது. தமிழகத்தில் இதுவரை 554 கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலம் 2,073 மில்லியன் லிட்டர் குடிநீர் 4 கோடியே 21 இலட்சம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரை, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அம்மா அவர்கள், மக்கள் சார்பில் நான் வைத்த அனைத்து கோரிக்கைளையும் நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். எடப்பாடி தொகுதியைப் பொறுத்தவரையில், இதுவரை 257 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் சேலம் மாவட்ட எல்லையில் பனமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் வீரபாண்டி, பனமரத்துப்பட்டி, சேலம் ஆகிய மூன்று ஊராட்சி

ஒன்றியங்களிலுள்ள 195 ஊரக குடியிருப்புகளுக்கான திட்டப் பணிகள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 8 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டவைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ், 12 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏறத்தாழ 276 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் பல்வேறு திட்டங்களின் மூலம் 241 கோடியே 92 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் ஏறத்தாழ 39,225 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இந்தக் கோட்டத்தில், 611 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 637 சாலைப்பணிகள் மற்றும் பாலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எடப்பாடி நகரத்தில் பல்வேறு நிதிகளின் கீழ், 55 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 126 பல்வேறு திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்த நெடுஞ்சாலைத் துறையில் நபார்டு மற்றும் கிராமச் சாலை சார்பில், நபார்டு திட்டத்தின் கீழ், எடப்பாடி– நெடுங்குளம்–கோனேரிப்பட்டி–ஆனந்தம்பாளையம் வரை 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள சாலை உட்பட 2 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளை நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 327 ஊரக குடியிருப்புகள் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டுக்குடிநீர் திட்டத்தை, 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேலும் விரிவு படுத்தப்படும். புதிய கூட்டுக்குடிநீர் திட்டம் உட்பட 25 கோடியே 66 இலட்சம் மதிப்பீட்டில் 46 புதிய திட்டப் பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இன்றையதினம் பல்வேறு துறையின் சார்பில் 229 பயனாளிகளுக்கு 1 கோடியே 20 இலட்சத்து 9 ஆயிரத்து 900 ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளேன்.

தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மாவின் எண்ணத்திற்கு வடிவம் கொடுக்கும் வகையில், மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், தமிழ்நாடு அரசு 4,466 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 101.67 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2 மாநகராட்சிகள், 17 நகராட்சிகள், 41 பேரூராட்சிகள் மற்றும் 14,218 கிராம ஊராட்சிகளில் 65 குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், குடிநீர் வழங்கும் பணிகளுக்காக 1,853 கோடியே 38 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு மக்கள் யாரும் குடிநீருக்கு கஷ்டப்படக்கூடாது என்ற மாண்புமிகு அம்மாவின் உயரிய சிந்தனையின் அடிப்படையில், கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு, மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. கடந்த 85 ஆண்டுகளுக்குப் பிறகு, சென்ற

ஆண்டு தான் முதல்முறையாக மேட்டூர் அணையில் தூர்வாரப்பட்டது. தமிழ்நாட்டிற்கு கிடைக்கவேண்டிய காவேரி நீரை கொடுக்க மறுத்த கர்நாடக மாநிலத்திற்கு பாடம் புகட்டும் வண்ணமாக, கடவுள் கிருபையால் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழையின் காரணமாக பெய்த மழையின் அளவை தாங்க முடியாமல் அவர்களாகவே இலட்சக்கணக்கான கன அடி நீரை தமிழ்நாட்டிற்கு திறந்துவிடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமிழகத்தில் அனைத்து அணைகளும் நிரம்பியுள்ளன. இதன் விளைவாக, தமிழகத்தில் உணவு உற்பத்தி இந்த ஆண்டு உயர வாய்ப்புள்ளது, இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடச் செய்ய வேண்டும் என்பதும், இந்தியாவிலேயே, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கவேண்டும் என்பதும்தான் அம்மாவின் அரசின் குறிக்கோள் என்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும், தமிழ்நாட்டை, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சமீபத்தில், பெங்களூருவைச் சார்ந்த பொது விவகாரங்கள் மையம் என்ற அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் ஆளுமையில், இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளது. இது இந்த அரசின் நிருவாகத் திறமைக்கும், மக்கள் நலத் திட்டத்திற்கும் நல்ல முறையில் செயல்படுத்தும் முறைக்கும் வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ் என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு அமைதி, வளம், வளர்ச்சி என்ற கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பதவி ஏற்றது முதல் இன்று வரை ரூபாய் 22,640 கோடியே 29 இலட்சம் மதிப்பிலான 41,887 முடிந்த பணிகளை துவக்கி வைத்தும், ரூபாய் 19,101 கோடியே

84 இலட்சம் மதிப்பிலான 7,597 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். மொத்தத்தில் இன்று வரை ரூபாய் 41,742 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டிலான 49,484 பணிகள் நடைபெற்று வருகின்றன. மக்களுக்காக நான், மக்களுக்காகவே நான் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு நலன் அளிக்கும் திட்டங்களை செயல்படுத்துமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

இங்கே பல்வேறு துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் வந்திருக்கின்றீர்கள். இன்றைக்கு நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல உணவு, உடை, இருக்க இருப்பிடம், குடிக்கக் குடிநீர் இது மிக முக்கியமான ஒன்று. அதை நிறைவேற்றுவது அரசாங்கத்தினுடைய கடமை. அந்த வழியிலே சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் உரிய முறையிலே பணியாற்றி மக்களுக்குத் தேவையான அடிப்படை தேவைகள் முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டும். குடிநீர் மிக, மிக முக்கியமானது. மாவட்டத்திலுள்ள ஊரகக் குடியிருப்புகளுக்கும், பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்குத் தேவையான அளவிற்கு குடிநீர் வழங்க வேண்டும். அதை முறைப்படுத்தி அனைத்து மக்களுக்கும் தங்குதடையில்லாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீரை முறையாக வழங்க வேண்டும். அதேபோல, தெரு விளக்குகளைப் பொறுத்தவரைக்கும், அரசு உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித்தலைவரையும் நேரடியாக சென்னைக்கு அழைத்து, கிட்டத்தட்ட 12 மாவட்ட ஆட்சித்தலைவர்களை அழைத்து, மாவட்டங்களில் நடைபெற்ற பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில், குடிநீர் பிரச்சினை, கிராமப்புற சாலைகள், தெரு விளக்குப் பிரச்சினை, பசுமை வீடுகள் எந்தளவிற்கு கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன, கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் தேவையான அடிப்படை

வசதிகள், ஆங்காங்கே சுகாதார வளாகங்கள் என்னென்ன முறையில் பேணிக்காக்கப்படுகின்றது, பட்டா மாறுதல், புதிதாக பட்டா வேண்டி விண்ணப்பிக்கின்றவர்கள் விபரம், புதிதாக வீட்டுமனை வேண்டுமென்று விண்ணப்பிக்கின்றவர்கள், அவர்களுக்கு வழங்கப்பட்ட விபரம், என்ன நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்பட்டிருக்கின்றது, விவசாயிகளுக்கான மகத்தான திட்டமான குடிமராமத்துத் திட்டம் செயல்படும்விதம், என்பனவற்றையெல்லாம் ஆய்வு செய்து, அரசுக்கு தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையிலே, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோல், ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண் முழுமையாக விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும், பொழிகின்ற மழைநீர் அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஏரிகள், குளங்களின் மூலமாக சேமிக்கத் தேவையான நடவடிக்கைப்பட வேண்டும், பொழிகின்ற மழைநீரை விவசாயிகள் சரியான முறையில் பயன்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குத் தேவையான பயிர்களை சாகுபடி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் முழுமையாக விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டு

அவர்களுக்கு காப்பீட்டுத் தொகை கிடைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திடமும், வேளாண்மைத் துறையை சார்ந்த அதிகாரிகளுக்கும் அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இன்றைக்கு பருவ மழை நல்ல முறையில் பொழிந்து அணைகள் முழுவதும் நிரம்பியுள்ளதால் இந்த ஆண்டு கூடுதலான விளைச்சல் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, வருகை தந்திருக்கின்ற அதிகாரிகள், தங்களுடைய பகுதியிலே நான் குறிப்பிட்ட வேளாண்மை, உள்ளாட்சி, பொதுப்பணித் துறை, குடிநீர் வடிகால் வாரியத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள் என்பதை தங்கள் மூலமாக அறியவிரும்புகிறேன் என்று தெரிவித்து, இந்த விழாவை சிறப்பாக நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அவரோடு சேர்ந்து பணியாற்றிய அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே.பழனிசாமி*** *அவர்கள் 30.08.2018 அன்று,*
சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற
அரசு விழாவில் ஆற்றிய உரை

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சேலம் மாவட்டத்தில் ரூ.1,088 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்புத் திட்டங்கள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு மாணவச் செல்வங்களுக்கு பல்வேறு திட்டங்களை வகுத்து அளித்ததன் மூலமாக இன்றைக்கு இந்தியாவிலேயே கல்வித்தரம் தமிழகத்தில் உயர்ந்து காணப்படுகின்றது. கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவை அம்மாவினுடைய அரசு நனவாக்கிக் கொண்டிருக்கிறது.இந்தியாவிலேயே அதிக அளவு கல்வி கற்கக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்குக் காரணம், அதிகமான ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் என்று அந்தந்தப்

பகுதிகளில் இருக்கின்ற மாணவ, மாணவியர் அங்கேயே கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தந்ததுதான். அதற்காக புதிய, புதிய பள்ளிகளை திறந்திருக்கின்றோம். அதேபோல, மாணவச் செல்வங்கள் சிறந்த கல்வி கற்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு மாணவர்களுக்கு காலணி, சீருடை, நோட்டு, புத்தகம், சைக்கிள், அறிவுப்பூர்வமாக கல்வி கற்பதற்கு மடிக்கணினி, S.S.L.C., +1, +2 படித்தால் ஊக்கத் தொகை போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து, அவர்களை ஊக்கப்படுத்தி, கல்வியில் சிறந்த மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு திகழ்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கொண்டு வந்த அத்தனை திட்டங்களும் இன்றைக்கு மாணவச் செல்வங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாணவச் செல்வங்களுக்குத் தேவையான பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் கட்டடங்கள், விளையாட்டு மைதானம், கழிவறை வசதி, குடிநீர் வசதி என அனைத்து வசதிகளையும் அனைத்து பள்ளிகளிலும் அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது. தனியார் பள்ளிகளுக்கு இணையான அனைத்து வசதிகளும் அரசு பள்ளிகளில் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அரசுப் பள்ளிகளில் படித்தால், உயர்கல்வி, தொழிற்கல்வி ஆகியவற்றிற்குச் செல்ல முடியாது என்ற நிலையை மாற்றி, உயர்கல்வி, தொழிற்கல்வி படிக்க முடியும் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்த அரசு அம்மாவினுடைய அரசு. சாதாரண குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவியர்கூட உயர்கல்வி கற்கக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த காலத்தில் **65** அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை

துவக்கினார்கள். அதைத் தொடர்ந்து அம்மாவினுடைய மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசால் 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் கடந்த ஆண்டு துவங்கப்பட்டு, அதன் மூலமாக ஆங்காங்கே இருக்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தரப்பட்டுள்ளது. அம்மா வழியில் செயல்படும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, இதுவரை 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தமிழக மாணவ, மாணவிகளுக்குக் கொடுத்து அதன் மூலமாக ஆயிரக்கணக்கானவர்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இந்த ஆண்டுகூட கல்லூரிகளில், கூடுதலாக 20 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கை நடைபெற்றிருக்கிறது. ஒரு நாட்டினுடைய உயரிய வளர்ச்சி கல்வியைப் பொறுத்துத்தான் இருக்கிறது. எந்தவொரு மாநிலம், எந்தவொரு நாட்டிலே கல்வி வளர்ச்சி அதிகம் இருக்கின்றதோ, அங்கு பொருளாதாரம் உயரும், அமைதி நிலவும், பண்பு நிலவும். அப்படிப்பட்ட கல்வியை அம்மாவினுடைய அரசு தொடர்ந்து மாணவச் செல்வங்களுக்கு வழங்கி வருகிறது. கல்வி கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று சொல்வார்கள். வாழ்நாள் முழுவதும் நம்மோடு இருக்கின்ற ஒரே செல்வம் கல்விச் செல்வம் மட்டும் தான். செல்வத்துள் செல்வம் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை இளம்பருவத்திலே மாணவ, மாணவியர் தங்களுடைய கடமையை உணர்ந்து, பெற்றோருடைய நிலைமையை உணர்ந்து, சிறப்பான முறையிலே படித்து உயர்வடைய வேண்டுமென்று இந்த நன்னாளிலே உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கல்வி என்பதை சிறு வயதில் தான் கற்க முடியும். மாணவப் பருவத்தில்தான் கற்கமுடியும். இளம்பருவத்தில் கிடைக்கக்கூடிய ஒரே செல்வம் கல்விச் செல்வம். அரசைப்

பொறுத்தவரைக்கும் மாணவச் செல்வங்களுக்கு ஏராளமான வசதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் வாழ்ந்த காலத்திலும் சரி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்த காலத்திலும் சரி, அம்மாவினுடைய மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு மாணவ, மாணவியர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், கல்வி சிறக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

சேலம் மாநகரத்திலே ஏற்கெனவே பிளாஸ்டிக் பொருள் தடை செய்யப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் ஒருமுறை உபயோகப்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தக் கூடாது என்பதற்காக அம்மாவினுடைய அரசு ஆணை பிறப்பித்திருக்கின்றது. இது ஜனவரி, 2019 முதல் அமலுக்கு வருகின்றது. இப்பொழுதே நம்முடைய மாநகராட்சியைச் சேர்ந்த ஆணையாளர்கள், சேலம் மாநகரத்திலே ஒருமுறை உபயோகப்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்காக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் நகராட்சி 1886ஆம் ஆண்டு நகராட்சியாக துவக்கி வைக்கப்பட்டது. சேலம் நகராட்சியின் முதல் கூட்டம் அப்போதைய ஆங்கிலேய கலெக்டர் அர்பத்நட் தலைமையில் நடந்தது. நகராட்சியின் முதல் தலைவராக கலெக்டர் அர்பத்நட் இருந்தார். அப்போது சேலம் நகராட்சி ஒன்பது வார்டுகளை மட்டுமே கொண்டிருந்தது. இப்பொழுது 60 வார்டு இருக்கின்றது. சேலம் நகராட்சி படிப்படியாக விரிவடைந்து பெரிய நகராட்சியாக மாறியது. 1972இல் முதல் தேதியன்று சேலம் சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டது.சேலம் நகராட்சி 44 வார்டுகளாக பிரிக்கப்பட்டது.

நகராட்சியாக இருந்த சேலம் 1994 ஜுன் முதல் தேதியன்று மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அதன்படி சேலம் மாநகராட்சியின் வார்டுகள் 60 ஆக உயர்ந்தது. சேலம் மாநகராட்சியின் கீழ் ஏழு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகள், மூன்று மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள், ஒன்பது நகராட்சி நடுநிலைப் பள்ளிகள் 41 நகராட்சி துவக்கப் பள்ளிகள் 60 மாநகராட்சி சத்துணவு மையங்கள் இயங்குகின்றன.

சேலம் மாநகராட்சியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய சேலம்–மேட்டூர் பழைய குடிநீர் திட்டம் மூலம் 1 கோடியே 20 இலட்சம் லிட்டர் குடிநீரும், மேட்டூர் ஆத்தூர் குடிநீர் திட்டம் மூலம் 8 கோடி லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுகிறது.

சேலம் மாநகராட்சி சேலம் நகர மக்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் சேலம் நகரத்தை அனைத்து வகையிலும் முதன்மை நகரமாக உருவாக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட 4 மண்டலங்களில் சூரமங்கலம் மண்டலத்தில் தர்மா நகர், கீழ்மேம்பாலம் நகர், அபிராமி கார்டன், அஸ்தம்பட்டி மண்டலத்தில் பிரகாசம் நகர், பரமன் நகர், குறிஞ்சி நகர், கம்பர் தெரு, அம்மாபேட்டை மண்டலத்திலுள்ள அய்யாசாமி பார்க், கொண்டலாம்பட்டி மண்டலத்திலுள்ள அபிராமி கார்டன் ஆகிய 9 இடங்களில் 4 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பசுமை வெளி பூங்காக்களை நான் இன்று சேலம் நகரத்து மக்களின் பயன்பாட்டிற்காக துவக்கியுள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பூங்காக்களில் மூத்த குடிமக்கள் மற்றும் பொதுமக்கள் நடை பயிற்சி செய்ய ஏதுவாக நடைபாதைகள், 8 வடிவிலான நடைபயிற்சி மேடைகள், தியான மண்டபம், மூலிகை பண்ணைகள்,

இறகு பந்து, கூடைப் பந்து விளையாட்டு திடல்கள், உடற்பயிற்சி கூடங்கள், குழந்தைகளை கவரும் வண்ண ஓவியங்கள், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், வண்ண ஒளி விளக்குகள் மற்றும் குடிநீர் உள்ளிட்ட பிற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை மிகுந்த மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் ஜனவரி 1 முதல் பிளாஸ்டிக் தமிழ்நாட்டில் முழுவதுமாக தடை செய்யப்படும் என்ற அரசின் அறிவிப்பிற்கிணங்க, சேலம் மாநகராட்சி,அதன் எல்லைக்குட்பட்ட பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜிஆர் மத்திய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையங்களில் உள்ள கடைகளில் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் தண்ணீர் பாக்கெட்டுகள் விற்பனையும் அதனது பயன்பாட்டிற்கு 01.08.2018 முதல் தடை விதித்து ஆணை பிறப்பித்து இன்றைக்கு அது நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநகராட்சியினுடைய வளர்ச்சிக்கு, செயல்பாட்டிற்கு ஆணிவேராக இருப்பவர்கள் மாநகராட்சி ஊழியர்கள். அவர்கள் நலமுடன் வாழ்ந்து பணிகளை செம்மையாக ஆற்றுவதற்காக, அவர்களுக்கு மாநகராட்சியின் மூலம் மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டம் இன்று பல்வேறு துறைகளில் ஒரு முன்னோடி மாவட்டமாக திகழ்கிறது. கடந்த 8 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் கீழ், 45 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் 525 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பிலான குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் 18 ஆயிரத்து 21 பயனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.
- உள்ளாட்சி அமைப்பினால் 468 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,494 பணிகள் எடுக்கப்பட்டு, 1,235 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- பொதுப்பணித்துறையின் மூலம் 251 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 344 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் 398 புதிய பேருந்துகள் விடப்பட்டுள்ளன.
- ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் 3 இலட்சத்து 14 ஆயிரத்து 417 பணிகள் 1 ஆயிரத்து 388 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 111 கோடி மதிப்பிலான 333 திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- நெடுஞ்சாலைத்துறை மூலம் 1 ஆயிரத்து 88 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு திட்டங்கள் மூலம் 944 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- 73 ஆயிரத்து 796 சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியுடன் இணைப்பு திட்டத்தின் மூலம் 1,874 கோடி வங்கிக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழலை காப்பாற்றுவதற்காக தமிழகத்திலே பிளாஸ்டிக் இல்லாத தமிழகமாக பாதுகாக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக

ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கு **01.01.2019** முதல் தமிழகத்தில் தடை விதிக்கப்பட உள்ளது என்பதை நான் சட்டப்பேரவையில் அறிவித்தேன். தமிழகம் முழுவதும் மேற்கூறிய தடையை அமல்படுத்த தலைமைச் செயலாளர் தலைமையில் வழிகாட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், மேற்கூறிய நோக்கத்தை செயல்படுத்தும் நோக்கில், மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் மாவட்டங்களில் குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசாணையின்படி, ஒருமுறை பயன்படுத்திய பிளாஸ்டிக் தடை செய்யப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்தல், சேமித்தல், வாகனங்களில் எடுத்துச் செல்லுதல், விநியோகம், விற்பனை மற்றும் பயன்படுத்துவதை தடைவிதித்து உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகள் பலவகை பிளாஸ்டிக் பொருட்களை உபயோகித்தால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதாக பெரும்பாலும் அறியப்பட்டுள்ளது. ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக், ஒவ்வொரு உபயோகப்படுத்தும் பிளாஸ்டிக் பொருளும் எந்த ஒரு மாற்றமும் இல்லாமல் நீண்டகாலம் பூமியில்

நிலைத்து இருக்கிறது. பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தினால் மரபணு பாதிக்கும் நிலை ஏற்படுத்துதல், நீர்நிலைகளை மாசுபடுத்துதல், நிலத்தடி நீர் நிலத்தில் ஊடுருவுவதையும் தடுக்கிறது. கீழ்க்கண்ட ஒருமுறை உபயோகப்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்படுகின்றன.

பிளாஸ்டிக் பேப்பர்கள், பிளாஸ்டிக் மேசை விரிப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தடவப்பட்ட டம்ளர், பிளாஸ்டிக் டீ டம்ளர், பிளாஸ்டிக் கை–பைகள், பிளாஸ்டிக் தடவப்பட்ட கை–பைகள், பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்டுகள் இவையெல்லாம் தடை செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு பதிலாக, மாற்றாக பயன்படுத்தக்கூடிய பொருட்கள் வாழை இலை, தாமரை இலை, பாக்குமர இலையிலான தட்டுகள், கண்ணாடி, உலோகங்களிலான பொருட்கள், துணி, காகிதம், சணல் பைகள், காகித துணிப் பைகள், பீங்கான் பாத்திரங்கள், மண் கரண்டிகள் மற்றும் மண்பானைகள் ஆகியவைகளை பயன்படுத்தலாம். இங்கு நான் வருகின்றபொழுது, இந்த அரங்கிற்கு முன்பாக, அந்த பிளாஸ்டிக் பயன்படுத்துவதினால் என்னென்ன சுகாதாரக் கேடு விளைகிறது என்பதையெல்லாம் கண்காட்சியில் நாம் பார்த்தோம், அதற்கு மாற்றாக நாம் எதைஎதையெல்லாம் பயன்படுத்த வேண்டும் என்ற பொருட்களும் கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறது. வந்திருக்கின்ற மாணவச் செல்வங்கள் இதையெல்லாம் பார்த்து, தங்களுடைய பெற்றோரிடத்தில் சொல்ல வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

விலக்கு அளிக்கப்படுகின்ற பொருட்கள், பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பேனர்கள், பால், தயிர், எண்ணெய் விற்கக்கூடிய பிளாஸ்டிக் பைகள், மருத்துவப் பொருட்களுக்கான உறைகள், பிளாஸ்டிக் கன்டெய்னர்.

அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஒருமுறை மட்டும் உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை உடனடியாக தடை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு பலகைகள் அனைத்து அலுவலகங்களிலும் பொதுமக்கள் அறியும்படியான இடங்களில் நிறுவுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சேலம் மாநகர் காவல் ஆணையரகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த சில விளக்கங்களை அளிக்கிறேன். சாலை பாதுகாப்பு ரோந்துப் பணி என்பது தனியே செயல்படக்கூடிய அமைப்பாகும். சேலம் மாவட்டத்தில் பல பள்ளிகள் போக்குவரத்து நெரிசலான பாதையில் அமைந்துள்ளதால் ஒவ்வொரு பகுதியிலிருக்கும் போக்குவரத்து இடத்திலும் பணியில் இருக்கும் காவலர்கள் வைத்து போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது நடைமுறையில் சாத்தியப்படாததாகும். அந்தந்தப் பகுதிகளிலே சாலை பாதுகாப்பு ரோந்துப் பணிக்கு ஏற்படுத்தப்பட்ட அந்த பள்ளி மாணவ, மாணவிகள் உறுப்பினராக சேர்ந்து பயிற்சி பெற்று அவர்கள் மூலம் அந்தப் பகுதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும். சாலை பாதுகாப்பு ரோந்துப் பணியை மாணவ, மாணவிகளை ஈடுபடுத்தும் முயற்சியாக 1957ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, தொடர் வெற்றியினால் பல மாநிலங்களிலும் இந்தத் திட்டம் பின்பற்றப்பட்டது. சென்னையில் 1982ஆம் ஆண்டு இத்தகைய பணி மேற்கொள்ளப்பட்டது. சேலம் மாநகரத்தில் ஒரு சில தனியார் பள்ளிகளில் மட்டுமே சாலை பாதுகாப்பு ரோந்து பணி அமைப்பு உள்ளது. தற்போது அனைத்து பள்ளிகளிலும் விரிவுபடுத்தும் விதமாக சேலம் மாநகரத்தில் சேலம் மாநகரத்தைச் சேர்ந்த 33 அரசுப் பள்ளிகள், 19 அரசு உதவி பெறும் பள்ளிகள், 44 அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 419 என மொத்தம் சாலை பாதுகாப்பிற்கு தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு சீருடை வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2017 சேலம் மாநகரில் 214 பேர்

உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரை 81 பேர் சாலை விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். கடந்த வருடத்தைவிட இந்த வருடம், சாலை விபத்துக்களில் உயிரிழந்தவர்கள் குறைந்துள்ளது. சேலம் மாநகரத்தில் சாலை பாதுகாப்பு நிதியாக 1 கோடியே 15 இலட்சத்து 30ஆயிரத்து 30 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த நிதியிலிருந்து சேலம் மாவட்டத்தில் விபத்துக்களை குறைக்கும் பொருட்டு, பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சேலம் மாநகரத்தில் அடிக்கடி விபத்துக்கள் நடைபெறும் 30 இடங்கள் கண்டறியப்பட்டு, உரிய கவனம் செலுத்தி, அந்த இடங்களில், போக்குவரத்து தொழில்நுட்பத்தை அமலாக்கம் செய்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாக, இன்றையதினம் விபத்துக்கள், கடந்த ஆண்டைவிட சரிபாதியாக குறைந்திருக்கிறது. சாலை பாதுகாப்பு ரோந்துப் பணியில் ஈடுபடும் மாணவ, மாணவியர்கள் சாலை விதிகளின்படி சாலை பாதுகாப்பு ஒழுங்குபடுத்தும் பணியை மேற்கொள்ள, சாலை விதிகளைப் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டு, சாலையை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். பள்ளிப் பருவத்திலேயே பொறுப்பான குடிமகனாக வருவதுடன், சாலை விதியை மதிக்கும் பழக்கம் ஏற்படும். எதிர்காலத்திலே, சாலை விபத்துக்கள் மேம்பாட்டுப் பணிகள் இருக்கும் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சில துறைகளின் வாயிலாக ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, கூட்டுறவுத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை ஆகிய துறைகளின் மூலம் 861 பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்டங்கள் 4 கோடியே 81 இலட்சத்து 56 மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்டங்கள் இன்றைய தினம், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படவுள்ளது என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பணியிலுள்ள சாலை பாதுகாப்பு ரோந்துக் குழுக்கள் 100 பள்ளிகளைச் சேர்ந்த 1,500 மாணவ, மாணவியர்களுக்கு சாலை பாதுகாப்பு சீருடையை இன்றையதினம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகராட்சியில் பல்வேறு திட்டங்களை அம்மாவினுடைய அரசால் நிறைவேற்றப்படவுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். ரூபாய் 165 கோடி மதிப்பீட்டில் பெரியார் பல்பொருள் அங்காடி மற்றும் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில் சூரிய சக்தி மூலம் 30 மெகாவாட் மின்உற்பத்தி தயாரிக்கப்படும்.

ரூபாய் 117 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடைக் கழிவுநீர் குழாய்கள் அமைக்கின்ற பணிகள் துவங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 92 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டிலான பழைய பேருந்து நிலையம் அதிகளவில் இடம் கொண்ட பன்னாட்டுத் தரத்தில் மாற்றியமைக்கப்படும்.

ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் நகர் முழுவதும் 24 மணிநேரமும் குடிநீர் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 47 கோடி மதிப்பீட்டில் சீருந்து சாலைகள் அமைக்கப்படும்.

ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அம்மாப்பேட்டை பகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியும் துவங்கப்படும்.

ஆகவே, அறிவிக்கப்பட்ட 75 திட்டப் பணிகள் ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் நம்முடைய சேலம் மாநகர் பகுதி உருவாக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாநகர மக்கள் பயன்படுத்துகின்ற விதத்திலே பசுமைப் பூங்கா இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அம்மாவினுடைய

அரசு ஆங்காங்கே இருக்கின்ற மூத்த குடிமக்கள், பொதுமக்கள், சிறுவர்கள் பொழுதுபோக்குவதற்கும், நடைப்பயிற்சி செய்வதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் தேவையான அடிப்படை வசதியுடன் கூடிய பசுமைப் பூங்கா அம்மாவினுடைய அரசால் சேலம் மாநகரத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாநகரம் முழுவதும் 12 பசுமை பூங்கா இன்று என்னால் திறக்கப்படுகின்றது. இதனுடைய மதிப்பு ரூபாய் 5 கோடியே 63 இலட்சத்து 46 ஆயிரம். சேலம் மாநகரம் வளர்ச்சி பெறுகின்ற மாவட்டமாக திகழ்கின்றது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சேலம் மாநகரம் எப்படி இருந்தது? 2011–க்குப் பிறகு சேலம் மாநகராட்சி எப்படி இருக்கிறது என்பதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட ஏழரை ஆண்டு காலம் சேலம் மாநகராட்சியிலே பல்வேறு திட்டப்பணிகளை செயல்படுத்தி, மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அம்மாவினுடைய அரசு செயல்படுத்தியிருக்கிறது. அதேபோல பல்வேறு சாலைகளை சீர் செய்திருக்கிறது. அதிகமான பாலங்கள்

சேலம் மாநகரத்திலே கட்டப்பட்டு சேலம் மாநகரம் போக்குவரத்து நெரிசல் இல்லாத நகரமாக இன்றைக்கு உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் 2 ஆண்டுகாலம் கழித்துப் பார்த்தால் சேலம் மாநகரம் தமிழகத்திலேயே ஒரு முன் மாநகரமாக திகழும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்திலே தெரிவித்து, சேலம் மாநகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கு அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்றித் தரும் அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாணவர்கள், உங்களுடைய பெற்றோர்கள் இருசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது ஹெல்மட் அணிந்து செல்ல வேண்டுமென்று நீங்கள் சொல்ல வேண்டும். விலைமதிக்க முடியாத உயிர் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது. அதை பாதுகாப்பது அனைவரது கடமை. இருசக்கர வாகனத்திலே செல்கின்ற நம்முடைய பெற்றோர்களை வலியுறுத்தி நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொண்டு, சிறப்பான ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 31.08.2018 அன்று*
சேலத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை

கிராமப்புற மக்களுடைய அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைக்கப்பெற வேண்டும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இங்கே வருகின்றபொழுது, கழகத்தின் சார்பாக நல்ல வரவேற்பு நல்கினார்கள். இந்த இனிய நிகழ்ச்சியிலே தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கின்ற ஒன்றிய கழகச் செயலாளர் அவர்களே, மாவட்ட அம்மா பேரவைச் செயலாளர் முன்னாள் மாநில கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே, சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.ராஜா அவர்களே, ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.வெற்றிவேல் அவர்களே, வீரபாண்டி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்களே மற்றும் கழகத்திலே பல்வேறு பொறுப்புக்களை

வகிக்கின்ற நிர்வாகிகளே, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.காமராஜ் அவர்களே, இந்தப் பகுதியைச் சேர்ந்த கிராமத்திலே இருக்கின்ற கழக நிர்வாகிகளே, தாய்மார்களே, விவசாயிகளே, தொழிலாளிகளே, மாணவ, மாணவிகளே, அரசு அலுவலர்களே அனைவருக்கும் பணிவான வணக்கத்தை சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

இந்தப் பகுதியில் இருக்கின்ற இளைஞர்கள் உடல் வலுவைப் பெறுவதற்கும், மூத்த குடிமக்கள், வயதானவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் உடற்பயிற்சி மிக முக்கியம். அம்மா பார்க், அம்மா ஜிம் இரண்டும் இப்பொழுது திறக்கப்பட்டிருக்கின்றன, நல்ல சுகாதாரத்துடன், காற்றோட்டத்துடன் இந்த அம்மா பார்க் அமைக்கப்பட்டிருக்கின்றது. இதிலே வயதானவர்கள் காலையிலும், மாலையிலும் நடைபயணம் செய்து ஆரோக்கியமான வாழ்விற்கு இந்த அம்மா பார்க்கை பயன்படுத்திக் கொள்ளலாம். அதேபோல இளைஞர்கள் உடல் வலுவைப் பெறுவதற்கும், நல்ல உடற்பயிற்சி செய்வதன் மூலமாக, ஆரோக்கியமான வாழ்வு பெறுவதற்கு, விளையாட்டிலே மேம்பாடு அடைவதற்கு தன்னுடைய உடல்வலிமையை பெருக்கிக் கொள்வதற்கு அம்மா ஜிம் கிராமத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றது. கிராமத்திலே வாழ்கின்ற சாதாரண குடும்பத்திலே பிறந்த ஏழை, எளிய மாணவ, மாணவிகள், இளைஞர்கள், பெரியோர்கள் இந்த அம்மா பார்க், அம்மா ஜிம் ஆகியவற்றை பயன்படுத்தி, அவர்களுடைய சுகாதாரமான வாழ்க்கைக்கு வழிவகை செய்கின்ற விதத்திலே இப்படிப்பட்ட கிராமங்களிலே இன்றைக்கு அம்மா பார்க், அம்மா ஜிம் எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை சுட்டிக் காட்டுகிறேன்.

நம்முடைய மாவட்டம் இன்றைக்கு ஒரு முன்னோடி மாவட்டமாக திகழக்கூடிய அளவிற்கு பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது. தமிழகத்திலே 32 மாவட்டங்கள் இருந்தாலும், நம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் தமிழகத்தினுடைய முதலமைச்சராக உங்கள் முன் நிற்கின்றேன். இதயதெய்வம் புரட்சித்தலைவி

அம்மாவினுடைய நல்லாசியோடு, எல்லாம் வல்ல இறைவனுடைய ஆசியோடு, உங்களுடைய அன்போடு, ஆதரவோடு இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற பொறுப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. ஒரு முதலமைச்சர், ஒரு கிராமத்திற்கு வருவார் என்றால், மிக அரிது. நான் ஏற்கெனவே பலமுறை இந்தப் பகுதிக்கு வந்து சென்றிருக்கின்றேன். ஏற்காடு சட்டமன்றத் தொகுதியை பொறுத்தவரைக்கும் ஏற்காடு மலைப்பகுதியிலும், கீழே இருக்கின்ற கிராமப் பகுதிகளிலும், பேரூராட்சி பகுதிகளிலும், எல்லா இடத்திற்கும் நான் வந்து சென்றிருக்கின்றேன். நான் 2011இல் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆட்சியின்பொழுது, அம்மாவினுடைய அமைச்சரவையிலே நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக இருந்தபொழுது, இந்த சாலைகளையெல்லாம் சிறப்பாக அமைத்துக் கொடுத்திருக்கின்றேன். இங்கே வருகின்றபொழுது விவசாய சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகள் வைத்தார்கள், அதெல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

கிராமப்புற மக்களுடைய வாழ்வாதாரம் முன்னுக்கு வரவேண்டும், கிராமத்தில் இருக்கின்ற மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைக்கப் பெறவேண்டும், அதுதான் அம்மாவின் அரசினுடைய லட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நகரத்திலே வாழ்கின்ற மக்களுக்கு என்ன அடிப்படை வசதிகள் கிடைக்கின்றதோ, அதேபோல, கடைக்கோடியில் இருக்கின்ற கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுடைய வாழ்வாதாரம் சிறக்கவேண்டும் என்பதுதான் அம்மாவினுடைய ஆட்சியினுடைய திட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நானும் கிராமத்திலே பிறந்து வளர்ந்தவன், நான் ஒரு விவசாயியாக இருந்தவன், இன்றைக்கும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றேன். ஆகவே, விவசாயிகளுடைய பிரச்சினை எந்த அளவிற்கு கடினமானது என்பதை நான் உணர்ந்தவன். அதேபோல விவசாயத் தொழில் எந்த அளவிற்கு சிரமம் என்பதையும் நன்கு

அறிவேன். விவசாயப் பணியில் ஈடுபட்டிருப்பது எவ்வளவு துன்பம், கஷ்டம் என்பதையும் நான் நன்கு அறிவேன், எந்தத் துறையிலும் இவ்வளவு கஷ்டம் கிடையாது. வெயிலிலே, மழையிலே நனைந்து பணியாற்றக்கூடியவன் விவசாயத் தொழிலாளி. இரத்தத்தை வேர்வையாக மண்ணிலே சிந்தி உழைக்கின்றவன் விவசாயி. ஆகவே, அப்படி உழைக்கின்ற இறைவனால் அற்புதம் படைத்த விவசாயிகளுடைய நலன் மேம்பாடு அடைய, அந்த விவசாயிகளுக்கு அம்மாவினுடைய அரசு என்றென்றைக்கும் துணை நிற்கும், அவர்களுக்கு தேவையான திட்டங்களை வகுத்து அளிக்கும். எல்லா பகுதிகளிலும் விவசாயிகள் முன்னுக்கு வரவேண்டும், விவசாயிகள் செழிப்பாக இருந்தால், நாடு செழிப்படையும், அந்த செழிப்பான ஆட்சி அம்மாவினுடைய ஆட்சியிலே கிடைக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்ற காலத்திலே, கிராமம் முன்னுக்கு வரவேண்டும், கிராமத்தில் வாழுகின்ற மக்களுக்கு என்னென்ன தேவை என்பதையறிந்து பல்வேறு திட்டங்களை வகுத்து, அந்தத் திட்டங்களின் மூலமாக கிராம பொருளாதாரம் மேம்பாடு அடைய கிராமங்களிலே வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான அத்தனையும் பெறவேண்டும் என்பதற்காக திட்டம், கிராமப்புற சாலை வசதி, பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஏராளமான திட்டங்கள், இப்படி அளிப்பதன் மூலமாக கிராமங்கள் வளர்ச்சி பெறும், கிராமத்திலே வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவிகள் உன்னத நிலையை அடையவேண்டும் என்று சொன்னால், கல்வியிலே புரட்சி, மறுமலர்ச்சியை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். அதையே, அம்மா அரசு தொடர்ந்து கடைபிடித்துக் கொண்டிருக்கிறது, மாணவர்களுக்கு காலணி, விலையில்லா புத்தகம், நோட்டு, கொண்டு செல்வதற்கு பை, பள்ளிக்குச் செல்வதற்கு சைக்கிள், அறிவுபூர்வமான கல்வி கிடைப்பதற்கு மடிக்கணினி அத்தனையையும் கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு. இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த

மாநிலத்திலும் கிடையாது. விவசாயத்திலும் சரி, கல்வியிலும் சரி இரண்டையும் இரண்டு கண்களைப் போல் அம்மாவினுடைய அரசு காத்து நிற்கின்றது. இரண்டு துறையும் செழிக்க அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லா துறைகளும் இன்றைக்கு வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது. வேளாண்மைத் துறையில் இந்திய அளவிலேயே இன்றைக்கு வேளாண்மைத் துறை சிறந்து விளங்குகின்ற காரணத்தினால், இன்றைக்கு அகில இந்திய அளவிலே வேளாண் உற்பத்தியில், உணவு தானிய உற்பத்தியில் இந்திய அளவிலே அதிக அளவு உற்பத்தி செய்து, அதற்கான தேசிய விருதைப் பெற்ற அரசு அம்மாவினுடைய அரசு. எல்லா துறைகளும் முன்னணி வகித்துக் கொண்டிருக்கிறது. மக்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் அளிப்பது அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, நம்முடைய மக்களுடைய குறைகளை போக்குவதே என் லட்சியம், அதற்காக அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும். ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரம் முன்னுக்கு வர, கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு அடிப்படை தேவை வழங்க அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும் என்று தெரிவித்து, சிறப்பான வரவேற்பு நல்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.09.2018 அன்று*
சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டினம் ஊராட்சி ஒன்றியம்,
அனுப்பூர் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள அம்மா உடற்பயிற்சி கூடத்தைத்
திறந்து வைத்து ஆற்றிய உரை

மலைவாழ் மக்களின் அடிப்படை தேவைகள் முழுவதும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்!

புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஏற்காடு, ஆத்தூர் இரண்டு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 10 மலை கிராமங்களுக்கு முதன்முறையாக மின் இணைப்பு வழங்கும் திட்டம் மற்றும் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, கருமந்துரை புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துவக்க விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா மற்றும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த இனிய நிகழ்ச்சியிலே வரவேற்புரை நிகழ்த்திய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கிற கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.காமராஜ் அவர்களே, ஆத்தூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சின்னத்தம்பி அவர்களே, ஏற்காடு சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி சித்ரா அவர்களே, மேட்டூர் சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு.செம்மலை அவர்களே, வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர்

பி.மனோன்மணி அவர்களே, சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் திரு.எஸ்.ராஜா அவர்களே, ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. வெற்றிவேல் அவர்களே, உளுந்தூர்பேட்டை சட்டப்பேரவை உறுப்பினர் திரு.குமரகுரு அவர்களே, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் முன்னாள் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் மேற்கு மண்டலத்தின் இணை இயக்குநர் அவர்களே, கோவை மண்டல வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அவர்களே, தமிழக மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மேற்பார்வை பொறியாளர் அவர்களே மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற அரசு உயர் அதிகாரிகளே, கழகத்தினுடைய முன்னோடி நிருவாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, விவசாயிகளே, தொழிலாளிகளே, மலைவாழ் மக்களே, மாணவச் செல்வங்களே, பத்திரிகையாளர் மற்றும் ஊடக நண்பர்களே, பயனாளிகளே, இறுதியாக நன்றியுரை ஆற்ற இருக்கின்ற சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மலைவாழ் மக்களுக்கு ஏராளமான திட்டங்களை வாரி வழங்கினார்கள். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் இருக்கின்ற காலத்திலே, மலைவாழ் மக்களென்றால் அவருக்கு ஒரு தனி பிரியம் உண்டு. எப்பொழுதும் இந்த மலைவாழ் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்று எண்ணி, எண்ணி திட்டங்களை வகுத்த தலைவர்கள் இருபெரும் தலைவர்கள். அந்த இருபெரும் தலைவர்களுடைய வழியில் நின்று, அவர்கள் எந்தெந்த திட்டங்களை இந்த மலைவாழ் மக்களுக்கு வழங்கினார்களோ, இந்த விவசாயிகளுக்கு வழங்கினார்களோ, இந்த நாட்டு மக்களுக்கு வழங்கினார்களோ அதையெல்லாம் அம்மாவினுடைய அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்று கல்வராயன் மலை பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்களுக்கு அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உங்களுக்கெல்லாம் நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன்.

கல்வராயன் மலைகள் கிழக்கு தொடர்ச்சி மலைத் தொடரின் ஒரு பகுதி. பச்சைமலை, ஜவ்வாது மலைகள், சேர்வராயன் மலைகள் ஆகியவற்றுடன், இவை காவேரி ஆற்று வடிநிலத்தை பாலாற்றின் வடிநிலத்திலிருந்து பிரிக்கும் எல்லையாக அமைந்துள்ளன. 1,095 சதுர கி.மீ. பரப்பளவுள்ள இம்மலைகளின் உயரம் 2,000 முதல் 3,000 அடி வரை உள்ளது. இந்த மலையின் வடபகுதி சின்ன கல்வராயன் என்றும் தென்பகுதி பெரிய கல்வராயன் என்றும் அழைக்கப்படுகிறது. சின்ன கல்வராயன் மலைகள் சராசரியாக 2,700 அடி உயரமும், பெரிய கல்வாராயன் மலைகள் சராசரியாக 4,000 அடி உயரம் கொண்டவையாக அமைந்துள்ளன.

ஜவ்வாது மலையின் தெற்கு முனையிலிருந்து 40 கி.மீ. தொலைவில் கல்வராயன் மலைத்தொடர் அமைந்திருக்கிறது. இது காராளன் என்றழைக்கப்படும் மக்களின் பூர்வீக வாழ்விடமாக அமைந்துள்ளது. இம்மலையின் தென்மேற்கு பகுதி சேலம் மாவட்டத்தின் ஆத்தூர், மேற்குப்பகுதி விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் வரையிலும், வடதிசையில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செங்கம் வரையிலும் பரவியுள்ளது.

கல்வராயன் மலையின் வடக்கே சாத்தனூர் அணையும், தெற்கே ஆத்தூர் கணவாயும், கிழக்கே மணிமுத்தாறு அணையும் மற்றும் சித்தேரி மலையும் அமைந்து இந்தப் பகுதிக்கு நல்ல வளத்தினை அளிக்கின்றது. இந்த மலையில்தான் கோமுகி உற்பத்தியாகி இந்த ஆற்றின் குறுக்கே கோமுகி அணையும் கட்டப்பட்டுள்ளது.

இந்த மலைக்கு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இங்கு கோமுகி அணையும், அதைச் சுற்றி 15 ஏக்கர் அளவில் அழகிய பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகள் நீராட மேகம், பெரியார், புண்ணியப்பாடி போன்ற அருவிகள் உள்ளன. இங்கு சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறவும், கழிப்பிடம் செல்லவும், குளியலறைக்கும் என தனிக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மலையில் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்பட்டு படகு குழாம் உருவாகியுள்ளது. இதுபோன்ற சுற்றுலாப் பயணிகளைக் கவர எண்ணற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன மிகவும் சுவைமிக்க விளாம்பழம் இங்குள்ள அரசின் பாதுகாக்கப்பட்ட வனப்குதிகளிலும், புதிய காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ள மலையோர கிராமங்களிலும் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது.இதுபோன்ற எண்ணற்ற இயற்கை வளங்களைக் கொண்ட இந்த மலை, இனி வருங்காலத்தில் பலதரப்பட்ட மக்களும் வாழும் வகையில் மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இந்த தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்
இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர் கடலிலே விழமாட்டார்

என்றார் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அவர் வழிவந்த அம்மா அவர்களும், அம்மாவின் அரசும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- பழங்குடியின விவசாயிகளுக்கு துரிதமாக மின்இணைப்பு பெறுவதற்கு நபர் ஒன்றுக்கு ரூ.75,000 வீதம் 100 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ஜவ்வாது மலையில் இரண்டு உண்டு, உறைவிட மாதிரிப் பள்ளிகள் ஆசிரியர் குடியிருப்புகளுடன் 24 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுள்ளது.

- பழங்குடியின மக்கள் அனைவரும் இணையதளம் வாயிலாக பயன் அடையும் வகையில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒரு இணையதளம் உருவாக்க ஆணையிடப்பட்டுள்ளது.

- பழங்குடியின மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் 42 பழங்குடியினர் நல விடுதிகளும் 314 அரசு பழங்குடியினர் உண்டு, உறைவிடப் பள்ளிகள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

- நடப்பாண்டில் 46 கோடி ரூபாய் செலவில் 19 விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளது.

- பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கான உணவு கட்டணம் 900 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கான உணவு கட்டணம் 1,000 ரூபாயாக உயர்த்தி அரசு வழங்கி வருகிறது.

- ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பழங்குடியினர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- அழிந்து வரும் நிலையிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டிற்காக சிறப்பு நிதியுதவியாக 104.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

இதுபோன்று எண்ணற்ற திட்டங்களை பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு, பெத்தநாயக்கன் பாளையம், கெங்கவல்லி, அயோதியாப் பட்டினம் மற்றும் கொளத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 16க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மலைப்பகுதிகளில் அமைந்துள்ளது. இங்கு வாழும் மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும், மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கும், வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

- 10 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 628 பசுமை வீடுகள் மலைவாழ் மக்களுக்காக கட்டப்பட்டுள்ளன.

- 13 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்திரா காந்தி குடியிருப்பு திட்டத்தின் கீழ், 1,192 குடியிருப்புகள் மலைவாழ் மக்களுக்காக கட்டப்பட்டுள்ளன.

- பாரத பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 15 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 883 வீடுகள் மலைவாழ் மக்களுக்கு கட்டப்பட்டுள்ளன.

- கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 21 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 68 சாலைப் பணிகள் மலைவாழ் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் 16 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7,939 தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

மேலும், வருவாய்த்துறையின் மூலம் 22,239 பழங்குடியினருக்கு சாதி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

631 மலைவாழ் மக்களுக்கு வன உரிமைச் சட்டம் 2006இன் கீழ், தனிநபர் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

20 மலைவாழ் மக்களுக்கு வன உரிமைச்சட்டம் 2006இன் கீழ், சமூக உரிமை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வராயன் மலைப் பகுதிக்குட்பட்ட குன்னூர் மற்றும் சூலாங்குறிச்சி ஆகிய கிராமங்களிலும், ஏற்காடு மஞ்சக் குட்டையிலும் என 3 கிராமங்களில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மலைவாழ் மக்களின் மருத்துவ சிகிச்சைக்காக புதிதாக துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

என கடந்த 8 ஆண்டுகளில் மலைவாழ் மக்கள் வாழும் 16 ஊராட்சிகளில் மாண்புமிகு அம்மாவின் அரசு 167 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 12,267 பணிகளை நிறைவேற்றப் பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி பாராளுமன்ற தொகுதியில் உள்ள ஏற்காடு, ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி ஆகிய 3 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அயோதியாப்பட்டினம், பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் தலைவாசல் ஆகிய 3 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட மலை கிராமங்களான பள்ளிக்காடு, பெலாப்பட்டி, கோட்டமேடு,

வாலுத்து, தாளூர், மண்ணூர், ஆவாரை, எலந்தவாரி, ஆலங்கடை மற்றும் சேட்டூர் ஆகிய 10 மலை கிராமங்களில் 599 வீடுகளுக்கு 2 கோடியே 59 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் புதியதாக மின்பாதை அமைத்து மின்மாற்றிகள் பொருத்தி மின் இணைப்பு வழங்கும் பணிகளுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட வளர்ச்சி முகமையின் சார்பில் பெத்தநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருமந்துரை சந்தைக்கு 25 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர், நடைபாதை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிக்கும், சின்ன கல்வராயன் மலை, வடக்குநாடு ஊராட்சி கருமந்தறை வார சந்தையில் 14 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைக்கும் பணிக்கும் என மொத்தம் 2 கோடியே 99 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பீட்டில் 3 புதிய திட்டப் பணிகளுக்கு இன்றைய தினம் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் கருமந்துரை அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 5 பணிமனை கட்டடங்கள் உட்பட 12 கோடியே 78 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடிக்கப்பட்ட 15 திட்டப் பணிகளை நான் இன்றைய தினம் திறந்து வைத்துள்ளேன்.

மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை சார்பில் கருமந்தரை மலைப்பகுதியில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தீயணைப்பு வாகனத்துடன் கூடிய புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையமும் என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே நான் கடந்த முறை கருமந்துரை பகுதிக்கு வந்தபொழுது, தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்ற

கோரிக்கையை இந்த மலைவாழ் மக்கள் வைத்தீர்கள். அதை அம்மாவினுடைய அரசால் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஏற்கெனவே கருமந்துரையில் இயங்கி வந்த சார்பு ஆய்வாளர் (Sub - Inspector) நிலையில் இருந்த காவல் நிலையம் ஆய்வாளர் (Inspector) காவல் நிலையமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், இந்த ஆண்டு ஆத்தூர் நகரில் புதிய காவல் நிலையம் மற்றும் வாழப்பாடியில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையம் துவங்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் காரணமாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியுடன் நடைபெறும் இந்த ஆட்சியில், இப்பகுதிகளில் குற்ற நடவடிக்கைகள் விரைவில் கண்டறியப்பட்டு, மேலும் குற்றங்கள் நிகழா வண்ணம் விரைந்து செயல்படுத்த இந்த காவல் நிலையம் உதவி புரியும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழப்பாடியில் இயங்கிவந்த தாலுக்கா அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மலைவாழ் மக்களின் நலனுக்காக பல்வேறு துறைகளின் சார்பில் 11 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,760 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். மேலும், இப்பகுதி

மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, ஆத்தூர் நகரில் 14.6 கி.மீ. புதிய புறவழிச்சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

ஆத்தூர்–பெரம்பலூர் சாலையை விரிவுபடுத்தி, அகலப்படுத்தி, உறுதிபடுத்துகின்ற பணி விரைவில் நிறைவேற்றப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

விரைவில் கருமந்துரையில் சாலை சீரமைக்கப்பட்டு, பிறகு பேருந்து போக்குவரத்து துவங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சிற்றுந்து இந்தப் பகுதிக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்று எண்ணற்ற திட்டங்கள் இனி வருங்காலங்களில் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளின் முன்னேற்றத்திற்காக, மலைவாழ் மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட உள்ளன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் இந்தப் பகுதிக்கு வந்தவுடனேயே இந்தப் பகுதியிலே, பல்வேறு விவசாய பெருமக்களும், பொதுமக்களும் கோரிக்கை வைத்தார்கள். இங்கே, பாரம் ஏற்றி செல்கின்ற லாரிகள் அதிக அளவில் செல்கின்றன. கருமந்துரையிலிருந்து–பாப்பநாயக்கன்பட்டி செல்கின்ற பாலம் குறுகிய பாலமாக இருக்கின்றது. ஆகவே, அந்தப் பாலத்திற்கு பக்கத்திலேயே புதிய அகலமான, உறுதியான பாலம் கட்டிக் கொடுக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, மக்களுடைய அரசு. புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்களை மலைவாழ் மக்களுக்காக வழங்கியிருக்கின்றார். புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 1991லிருந்து 1996, 2001லிருந்து 2006, 2011லிருந்து 2016, 2016லிருந்து ஆறு

மாதங்கள் ஆக மொத்தம் பதினைந்தரை ஆண்டுகாலம் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்று மலைவாழ் மக்களுக்கு பல்வேறு அடிப்படை வசதிகளை செய்து கொடுத்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மா அவர்கள்தான் இந்த மலைவாழ் மக்கள் நல்ல கல்வி கற்க வேண்டும் என்பதற்காக மலைவாழ் மக்கள் பயன்பெறக்கூடிய ஐ.டி.ஐ. கல்லூரியை கருமந்துரையில் கொடுத்தார்கள். அம்மா அவர்கள் மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர். நான் வரும் வழியில் கூட பார்த்தேன், ஒரு குடிசை இருந்தது. அங்கே நிறுத்தி, இறங்கி அவர்களுடன் பேசினேன். அவர்கள் விவசாயம் செய்வதாக சொன்னார்கள். என்னென்ன சாகுபடி செய்திருக்கிறீர்கள் என்று கேட்டேன். நாங்கள் பல்வேறு தானியங்களை பயிரிட்டு, விளைவித்து, எங்களது தேவைக்குப் போக மற்றவைகளை சந்தைக்கு சென்று விற்பனை செய்கின்றோம் என்று அவர்கள் கூறினார்கள். அது மட்டுமல்லாமல், ஆடு வளர்ப்பதையும் பார்த்தேன். மலைவாழ் மக்கள் குடிசையில் வாழ்கின்றோம். ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். மலைவாழ் மக்களிடத்திலே அம்மாவினுடைய அரசு தனிக்கவனம் செலுத்தி, குடிசையில் வாழும் அனைத்து மலைவாழ் மக்களுக்கும் பசுமை வீடு திட்டத்தின் கீழ் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தேவையானது போல் வீடுகளை கட்டிக் கொள்ளலாம், அதற்கு தனி ஆணை பிறப்பிக்கப்பட உள்ளது. இப்பொழுது ஒரு குறிப்பிட்ட அளவுதான் பசுமை வீடு ஒதுக்கப்பட்டுள்ளது, ஆகவே, அந்த அளவில்தான் வீடு கட்டவேண்டும் என்று உள்ளது. அதை மாற்றி, தங்களுக்கு எந்த அளவிற்கு வீடு கட்டிக் கொள்ள முடியுமோ, அந்த அளவிற்கு வீடு கட்டிக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கித் தரும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து இன்று வரை மின்சாரம் இல்லாத அந்தப் பகுதிகளுக்கு மின்வசதி கொடுத்த அரசு

அம்மாவினுடைய அரசு. புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது ஒவ்வொரு பகுதிக்கும் நேரடியாக சென்று மக்களை சந்தித்து, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்க வேண்டுமென்று ஆணையிட்டதன் பேரில், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற அனைத்து சட்டமன்ற தொகுதிக்கும், ஏற்காடு, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் வாழ்கின்ற கிராமத்திற்கு நானே நேரடியாகச் சென்று விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றை வழங்கினேன். அப்பொழுது பல்வேறு கோரிக்கைகள் கொடுத்தீர்கள். அதையெல்லாம் நிறைவேற்றி இருக்கின்றோம். மலைவாழ் மக்கள் வாழ்வதற்காக அவர்களுக்குத் தேவையான கட்டட வசதியுடன் கூடிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். தேவையான குடிநீர் வசதி, தேவையான சாலை வசதி, மருத்துவ வசதி, கல்வி வசதி செய்து கொடுக்கப்படும். அடிப்படை தேவைகளான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, வேளாண்மை சிறக்க பல்வேறு நடவடிக்கைகள், தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அம்மாவினுடைய அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு சிறப்பான வரவேற்பை கொடுத்தீர்கள். என்றென்றும் நான் மறக்க மாட்டேன். தமிழகத்திலே 32 மாவட்டங்கள் இருக்கின்றன. 32 மாவட்டத்திலே, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர்தான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்றார். அனைத்து பகுதிகளுக்கும் நான் நேரடியாக சென்றிருக்கிறேன். அங்குள்ள பிரச்சினைகளும், சிரமங்களும், குறைபாடுகளும் எனக்கு நன்றாகத் தெரியும். அந்தந்த பகுதியிலுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும். அவர்களது பிரச்சினையை தீர்த்து வைக்க அனைத்து நடவடிக்கையும் அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மாவின் மறைவிற்குப் பிறகு, நான் பொறுப்பேற்று ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்த

ஒன்றரை ஆண்டுகாலத்திலே பல்வேறு பிரச்சினைகளை நான் சந்தித்திருக்கிறேன், பல்வேறு போராட்டங்களை நான் சந்தித்திருக்கிறேன். அந்தப் போராட்டம் நடத்துபவர்களையெல்லாம் சந்தித்துப் பேசி அவர்களுக்குத் தேவையான தீர்வும் நான் கண்டிருக்கின்றேன். **இந்த ஜனநாயக நாட்டிலே நம்முடைய அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. அதன் அடிப்படையில், நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கவனமாக பரிசீலித்து அதை நிறைவேற்றித் தருவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.** ஆகவே, நம்முடைய மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும், மலைவாழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அம்மாவினுடைய அரசால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். இங்கே, நான் வந்தபிறகு 110 நபர்களுக்கு கறவை பசுமாடுகள் கொடுத்துள்ளோம். அதேபோல, வனத்துறையின் மூலமாக கோழி வளர்ப்பதற்கு குஞ்சுகள் கொடுத்துள்ளோம். எனவே, மலைவாழ் மக்கள் கோழிக் குஞ்சுகளை பெருக்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடையலாம். அதேபோல இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சிக்காலத்திலே கிராமத்திலே வாழ்கின்ற மக்களுடைய பொருளாதாரம் மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா கறவை மாடுகள், விலையில்லா ஆடுகளை வழங்கினார்கள். அம்மா அவர்கள் ஒவ்வொரு திட்டமும் பார்த்து, பார்த்து உங்களுக்கு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அம்மாவினுடைய அரசு, உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, ஏழைகளுடைய அரசு.

இன்றைக்கு எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்த ஆட்சியிலே என்ன திட்டத்தை கொண்டு வந்தீர்கள் என்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனை ஆண்டு காலம் தமிழகத்தில் ஆட்சியில் இருந்தது என்பது நன்றாகத் தெரியும். மத்தியிலும்,

மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தார்கள். மத்தியிலே ஆட்சியில் இருக்கும்பொழுது தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன திட்டத்தை கொண்டு வந்தார்கள் ? புதிய புதிய தொழிற்சாலைகளை கொண்டு வந்தார்களா ? தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிக்காக ஏதாவது செய்தார்களா ? காவேரி நதிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏதாவது செய்தார்களா ? முல்லைப் பெரியாறு பிரச்சினை தீர்ப்பதற்காக பாடுபட்டார்களா ? எதையும் செய்யவில்லை. சுயநலம் தான் மேலோங்கி நின்றது. அவர்களுடைய பதவி ஆசை தான் மேலோங்கி நின்றது. அவர்கள் அதிகாரத்திற்கு வரவேண்டும், வந்தவுடன் மக்களை மறந்து விடுவார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை பொறுத்தவரைக்கும் இருபெரும் தலைவர்கள் உருவாக்கிய அரசு, மக்களுக்காக தொடர்ந்து பாடுபடும். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தக் கட்சியை உருவாக்கியது ஏழை மக்களுக்காக. பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் 11 ஆண்டுகாலம் ஆட்சி செய்தபொழுது கிராமம் வளர்ச்சி பெற்றது. அவர் மறைவிற்குப் பிறகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பதினைந்தரை ஆண்டுகாலம் ஆட்சி செய்தார்கள். இருபெரும் தலைவர்களும் கிட்டத்தட்ட 27 ஆண்டுகாலம் ஆட்சி செய்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இருபெரும் தலைவர்களின் மறைவிற்குப் பிறகு, இருபெரும் தலைவர்களின் வழியிலே ஒன்றரை ஆண்டுகாலம் சிறப்பான ஆட்சியை தந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்கு நாட்டுமக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

நம்முடைய குழந்தைகளுக்கு சிறந்த கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் கல்வியில் புரட்சி, மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்கள். பள்ளிக் குழந்தைகளுக்கு காலணி, சீருடை, விலையில்லா புத்தகம், நோட்டு, பை, பள்ளிக்குச் செல்வதற்கு விலையில்லா சைக்கிள், அறிவுபூர்வமான விஞ்ஞான கல்வி

கொடுப்பதற்கு மடிக்கணினி ஆகியவற்றை, தான் பெற்றெடுத்த குழந்தையாக பாவித்து அத்தனை குழந்தைகளுக்கும் விலையில்லா மடிக்கணினியை கொடுத்து விஞ்ஞான கல்வியை வழங்கியவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இன்னும் 10 ஆண்டுகள் கழித்துப் பார்த்தால், இந்தியாவிலேயே விஞ்ஞான உலகமாக தமிழ்நாடு மாறுவதற்கு அச்சாணி போட்டவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். ஒரு மாநிலம் சிறந்து விளங்கவேண்டுமென்று சொன்னால், கல்வியிலேயே சிறக்க வேண்டும். அதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே செய்த புரட்சிகளின் விளைவாக கல்வி கற்போர் எண்ணிக்கை உயர்ந்தது, கற்றோர் எண்ணிக்கை உயர்ந்தது. உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கையில் தமிழகம் தான் முதன்மை வகிக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். புரட்சித்தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியிலே 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அவர்கள் வழியிலே வரும் அம்மாவினுடைய அரசு 11 கலை மற்றும் அறிவியில் கல்லூரியை கொடுத்தது. ஆக மொத்தம், அம்மாவினுடைய அரசு 76 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே பிறந்த மாணவ, மாணவியர் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்கின்ற சூழ்நிலையை அம்மாவினுடைய அரசுதான் வழங்கியது. அரசு என்ஜினியரிங் கல்லூரி, அரசு பாலிடெக்னிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, இப்படி ஏராளமான கல்லூரிகளை தமிழகத்தில்தான் அம்மாவினுடைய ஆட்சியில் கட்டிக் கொடுக்கப்பட்டது. அம்மாவினுடைய அரசு தான் ஏழை மக்களை வாழ வைத்த அரசு. மருத்துவத்துறை சிறக்க கிராமந்தோறும் அதிக அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்தது அம்மாவினுடைய அரசுதான்.

அதேபோல, நபார்டு திட்டத்தின் மூலமாக ஐருகு மலை சாலை 9 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட இருக்கிறது. 5 கோடி ரூபாய் செலவில் கொட்டமேடு சாலை பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக அம்மா அவர்கள் எப்படி செயல்பட்டார்களோ அதே வழியில், அம்மாவினுடைய அரசும் அம்மாவினுடைய வழியில் நின்று மலைவாழ் மக்களின் அடிப்படை தேவைகள் முழுவதும் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதை தெரிவித்து, இந்த நிகழ்ச்சி சீரும் சிறப்பாகவும் நடைபெற உறுதுணையாக இருந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அவரோடு துணைநின்ற அரசு உயர் அதிகாரிகளுக்கும், கழகத்தின் சார்பில் பல்வேறு இடங்களில் நல்ல வரவேற்பு நல்கிய ஒன்றிய கழகச் செயலாளர் திரு.ரமேஷ் அவர்களுக்கும், ஒன்றியச் செயலாளர் திரு.முருகேசன் அவர்களுக்கும், கழகத்தின் முன்னோடி நிருவாகிகளுக்கும் மலைவாழ் மக்களுக்கும், அத்தனை பேருக்கும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 01.09.2018 அன்று,*
சேலம் கல்வராயன் மலை, கருமந்துரையில்
நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை

பெற்றோர் முதல் ஆசிரியர், ஆசிரியர் இரண்டாவது பெற்றோர்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு ஆளுநர் அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே! மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு.பொன்.ராதாகிருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே! மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே! வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே! மதிப்பிற்குரிய கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஆர்.ராஜகோபால், இ.ஆ.ப., அவர்களே! மதிப்பிற்குரிய பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே! வருகை தந்திருக்கின்ற அனைத்து பதிப்பகத்தின் பிரதிநிதிகளே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு

பெற்றிருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே! வணக்கத்திற்குரிய ஆசிரியப் பெருமக்களே! அரசு உயர் அதிகாரிகளே! அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்ற குறளின் மூலம் திருவள்ளுவர் உணர்த்துவது கற்க கற்க அறிவு வளரும் என்பது தான். 'கற்றல்' என்பது தாய் முகம் பார்த்து அம்மா என்று அறிந்துகொள்ளும் குழந்தை பருவத்திலிருந்து தொடங்குகிறது. அப்போதுதான் தாய் ஒரு ஆசிரியை அல்லது குரு நிலைக்கு உயர்ந்து தன்னை சுற்றியிருக்கிற உறவையும் சூழலையும், தன்னை சுற்றியிருக்கிற பொருள்களையும் குழந்தைக்கு கற்றுத்தருகிறார். அதன்பிறகு ஆசிரியர் இந்த உலகத்தை அந்த குழந்தைக்கு அறிமுகப்படுத்துகிறார். அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிறார்கள். ஒருவன், மாதாவையும், பிதாவையும், குருவையும் பின்பற்றி வாழ்ந்தால், அவனுக்கு இறைவன் தேடி வந்து அருள் புரிவார். அவன் இறைவனை தேடிச்செல்ல வேண்டியதில்லை.

கற்றவன்தான் முழு மனிதனாக மதிக்கப்படுகிறான். இளமையில் கற்பதுதான் கல்வி. அதன்பிறகு கற்பது எல்லாம் அறிவும் அனுபவமும் தான். அந்த இளமைக்கல்வி தான் எதிர்கால முன்னேற்றத்தை தீர்மானிக்கிறது. அதனால்தான் குழந்தைகள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும். குழந்தைகளை உளவியல் ரீதியாக அணுகி அவர்களுக்கு கற்பிப்பது ஒரு மாபெரும் கலை. ஒரு மகத்தான, புனிதமான, தெய்வீகமான கலை. வேரில் நீரூற்றி, உரம் போட்டு உருவாக்குகிற குழந்தைகளுக்கான கல்வியில் தான் அதிகம் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு தாய்க்கு உள்ள பொறுப்பும், கடமையும், தியாக உணர்வும், சகிப்புத்தன்மையும் நிச்சயமாக ஆசிரியர்களுக்கும் அவசியம்

இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு உளவியல் அறிவு அதிகமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியர்களின் முகத்தை அந்தக் குழந்தைகள் எதிர் காலத்தில் மறந்து போகலாம். தாங்கள் சீராட்டி, பாராட்டிய அந்தக் குழந்தைகளை ஆசிரியர்களும் மறந்து போகலாம். ஆணிவேரும் அஸ்திவாரமும் கண்ணுக்குத் தெரிவதில்லை. ஆனால், அவைகளால் தான் மரங்களும், மாளிகைகளும் ஓங்கி வளர்ந்திருக்கிறது என்பதை எல்லோரும் உணர வேண்டும். அந்த ஆணி வேருக்கும் அஸ்திவாரத்திற்கும் வலிமைதான் அந்தக் குழந்தையின் எதிர்காலத்தை வலிமை உடையதாக மாற்றுகிறது. தேர்வு என்ற போர்க்களத்தில் நின்று போர்புரிகிற வீரர்களாக உருவாக்குகிறது.

அதனால்தான் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் இந்த நூலுக்கு "Exam Warriors" அதாவது **"பரீட்சைக்கு பயமேன்"** என்று பெயர் வைத்திருக்கிறார்கள். நூலுக்குள் பரந்துகிடக்கின்ற ஆலோசனைகள் அனைத்தும் மிக இலகுவாக புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு, மத்திய, மாநில போட்டித்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்கின்ற அளவிற்கு, தேர்வை எண்ணி அஞ்சும்படியான மன அழுத்தத்திலிருந்து விடுபடுகின்ற அளவிற்கு, எந்தத்தேர்வு வந்தாலும் நான் எளிதாக எதிர்கொள்வேன் என்ற மனநிலையை ஒரு மாணவனுக்கு உருவாக்குகின்ற அளவிற்கு இந்த நூலில் பல செய்திகள் அடங்கி இருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

இந்திய நாட்டின் தலைமைப்பொறுப்பை வகிக்கின்ற ஒரு தலைவருக்கு இப்படிப்பட்ட ஒரு நூலை எழுதவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை அவர்களே தன்னுடைய முன்னுரையில் தெளிவாக எடுத்துரைக்கிறார்கள். தேர்வைக்கண்டு அஞ்சும் ஒரு குழந்தையை ஒரு தாய் எப்படி சமாதானப்படுத்தி, ஊக்கப்படுத்தி தேர்வுக்கு அனுப்பி வைப்பாளோ, அப்படித்தான் இந்திய நாட்டின் பிரதமர் இந்திய குழந்தைகள் அனைவரையும் ஊக்கப்படுத்தி, நெறிப்படுத்தி தேர்வுக்குத் தயார்படுத்துகிறார். இது இந்திய

குழந்தைகள் மீதும், இந்திய இளைஞர்கள் மீதும் அவர் வைத்திருக்கும் அக்கறையைத்தான் வெளிப்படுத்துகின்றது.

இளைஞர் சக்தியை அதிகமாகக் கொண்டது இந்தியா. அவர்களை சரியான திசைகளில் வழி நடத்தினால் இந்தியா மிக விரைவில் உலக நாடுகளை வழி நடத்தும் தலைமை நாடாக மாறும் என்பதை இந்த நூலின் வழியாக மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு நாட்டின் எதிர்காலமே ஒரு வகுப்பறையில்தான் உருவாக்கப்படுகிறது. நாம் அதிகமாக கற்கிறோம், ஆனால் குறைவாக புரிந்துகொள்கிறோம், செயல்படுகிறோம். இந்நிலை மாற வேண்டுமானால் இந்நூலில் மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் அறிவுறுத்தும் மந்திரங்களை நாம் மனதில் ஏற்றிக்கொள்ளவேண்டும். தேர்வுக்காக படிக்காமல் வாழ்க்கைக்காக படிக்க வேண்டும். அதுதான் உண்மையான கல்வி என்கிறார் நமது பாரதப் பிரதமர் அவர்கள்.

‘அறிவற்றங் காக்குங் கருவி’ என்பார் வள்ளுவர். கல்வி என்பது நமக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும். பிறகு நம்மை முன்னேற்ற வேண்டும். கல்வி என்பது மாணவர்களை அச்சுறுத்துவதாக இருக்கக்கூடாது என்பதை பல இடங்களில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வலியுறுத்துகிறார்கள். காந்த ஊசி எப்போதும் வடக்கு நோக்கி இருப்பது போலவே கற்கும் பருவத்தில் மாணவனின் மனம் கற்றலிலேயே ஒருமுகப்படவேண்டும். நிலையானதாக அமையும் கல்வியைத்தான் மிகச்சிறந்த கல்வியாக கருதவேண்டும். கல்வி என்பது ஒருவருக்கு அறிவையும், அனுபவத்தையும் கொடுக்க வேண்டும். அது அதிக மதிப்பெண்ணை மட்டுமே தருமேயானால் அதனால் எந்தப்பயனும் இல்லை என்கிறார் நமது பாரதப் பிரதமர் அவர்கள். ஒரு மருத்துவர் மருத்துவக்கல்லூரியில் பெற்ற மதிப்பெண்ணைப் பார்த்து அவரிடம் மக்கள் சிகிச்சைக்கு

செல்வதில்லை. ஒரு வழக்கறிஞர் சட்டக்கல்லூரியில் பெற்ற மதிப்பெண்ணைப் பார்த்து நமது பிரச்சினைக்கு தீர்வு காண அவரிடம் செல்வதில்லை. மதிப்பெண் என்பது வேறு, அறிவு என்பது வேறு. மதிப்பெண் ஒருவருடைய அறிவுக்கான அளவுகோல் அல்ல என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் உறுதியாகக் கூறியிருப்பது ஒரு தலைசிறந்த கல்வி நிபுணருக்கான சிந்தனையாகவே நான் கருதுகிறேன்.

“பயிற்றில் பல கல்வி தந்து இந்தப்பாரை
உயர்த்திடல் வேண்டும்”

என்பதுதான் பிரதமர் அவர்களின் நோக்கம்.

கணிப்பொறிக்கல்வி, விளையாட்டுக்கல்வி, தொழில்நுட்பக் கல்வி போன்று வாழ்க்கையின் பாதுகாப்புக்கும், உயர்வுக்கும், வலிமைக்கும் தேவையான கல்விக்குத்தான் அதிக முக்கியத்துவம் தருதல் வேண்டும் எனவும் இந்நூல் வலியுறுத்துகிறது. **“சமையல் மோசமானால் நாம் இழப்பது ஒரு நாள். அறுவடை மோசமானால் நாம் இழப்பது ஓராண்டு. ஆனால் கல்வி மோசமானால் நாம் இழப்பதோ நமது வாழ்க்கை**” என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். ஆரோக்கியமான உடலை பேணும் கலையைக் கூற வேண்டும். பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் மனதில் விதைக்க வேண்டும். நேர்மையை நமது இரத்த ஓட்டத்தோடு கலக்கச்செய்ய வேண்டும். அன்பு, அகிம்சை, அமைதி என்ற மூன்றும் எண்ணத்திலும், செயலிலும் இருக்க வேண்டும். இவற்றை, எந்தக் கல்வி தருகிறதோ அந்தக் கல்வி தான் மிகச்சிறந்த கல்வி என்ற கருத்துகள் நிரம்பிய இந்த நூல் ஒவ்வொரு மாணவனின் கையிலும், மனதிலும் எப்போதும் இருக்க வேண்டிய ஒரு வாழ்க்கை வழிகாட்டி நூல்.

தேர்வை இன்முகத்தோடு வரவேற்க வேண்டும். அதை ஒரு பண்டிகையைப் போல கொண்டாடி மகிழ வேண்டும். ஒரு பண்டிகைக்காக எப்படியெல்லாம் முன்னேற்பாடுகள், திட்டங்கள்

வகுக்கிறோமோ அப்படிதான் தேர்வுக்கும் நாம் தயாராக வேண்டும். மன இறுக்கத்தோடு தேர்வு எழுதினால் உங்களுக்கு தெளிவாகத் தெரிந்த விடைகளைக்கூட எழுதத் தவறி விடுவீர்கள், போன்ற பல தேர்வுத் தத்துவங்கள் மாணவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று இந்த நூலின் ஆசிரியர் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு உலகம் முழுவதிலுமிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருவதை நான் அறிவேன். அதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் உளமார பாராட்டுகிறேன்.

கல்வி களத்தில் பெற்றோர்களின் பங்கைப்பற்றி மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இந்நூலில் அறிவுறுத்தியிருப்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு குழந்தையைப் பற்றி அதிகமாக பெற்றோர்கள் தான் தெரிந்திருப்பார்கள். குழந்தைகள் படிக்கும் பாடத்திற்கும் வாழ்க்கையில் அதன் உபயோகத்திற்கும் உள்ள தொடர்பை பெற்றோர்கள் இயன்ற அளவு குழந்தைகளுக்கு விளக்க முயற்சி செய்ய வேண்டும். குழந்தைகளின் முதல் வழிகாட்டி பெற்றோர்கள்தான். குழந்தைகளின் ஒவ்வொரு வளர்ச்சியையும், பெற்றோர்கள் எப்போதும் உற்று நோக்கிக்கொண்டு இருக்க வேண்டும். கல்வியில் குழந்தைகளின் கனவை நனவாக்க வேண்டிய கடமை ஒவ்வொரு பெற்றோருக்கும் உள்ளது. இப்படிப்பட்ட அரிய கருத்துக்களை மிகத் துல்லியமாக இந்நூலில் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் கல்விக்கும் தனக்கும் ஏதோ சம்பந்தமே இல்லாததை போல் பெற்றோர்கள் இருக்கக் கூடாது. குழந்தைகளின் புத்தகங்களை பெற்றோர்களும் படிக்க வேண்டும். புத்தகங்களில் உள்ள எல்லா கேள்விகளுக்கும் விடை தெரிந்திருப்பதை விட எல்லா கேள்விகளுக்கும் விடையை எப்படி கண்டுபிடிப்பது என்பதை தெரிந்திருப்பது மிக அவசியம். குழந்தைகள் படிப்பில் போதிய முன்னேற்றம் இல்லையென்றால், அந்த குறையை நீக்க அவர்களுக்கு விளையாட்டுகளில் ஆர்வம் ஏற்படுத்த முயற்சி செய்யலாம். மனதை ஒருநிலைப்படுத்தும் யோகாசனத்தை

மேற்கொள்ள வேண்டும். குழந்தைகள் தங்கள் வேலைகளை தாங்களே கவனித்துக்கொள்ளும் அளவிற்கு பெற்றோர்கள் பயிற்சி கொடுக்க வேண்டும். குழந்தைகளின் மன ஆரோக்கியத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் ஒவ்வொரு பெற்றோரும் வழிகாட்ட வேண்டும்.

பெற்றோர் முதல் ஆசிரியர், ஆசிரியர் இரண்டாவது பெற்றோர். பெற்றோருடைய வாழ்க்கைதான் குழந்தைகளுடைய மிகச்சிறந்த பாடப்புத்தகம். குழந்தைகளோடு அதிக நேரம் செலவிடுங்கள். தேர்வு நேரத்தில் உங்களுடைய பெற்றோர்களின் அரவணைப்பும், ஆதரவும், அண்மையும் மிகமிக அவசியம் போன்ற முத்தான தத்துவங்களை பெற்றோர்களுக்கு ஒரு உளவியல் அறிஞராக மாண்புமிகு பாரதப் பிரதமர் அறிவுறுத்தியிருப்பது மிகவும் பாராட்டுதலுக்கும் வாழ்த்துகளுக்கும் உரியது. இந்த நூலில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூறியிருக்கிற அத்தனை கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கொண்டதாக இன்று தமிழ்நாடு கல்வித் துறை விளங்கி வருவதை நான் மகிழ்ச்சியோடும், பெருமையோடும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அசுர வேகத்தில் மாற்றங்களை எதிர்கொண்டு வரும் கல்விச் சூழலில், உலக நாடுகளோடு போட்டி போடுகிற அளவிற்கு நம் நாட்டில் கல்வி நிலை உயர வேண்டும் என்கிற, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் எண்ணத்தை நிச்சயம் தமிழ்நாடு கல்வித் துறை நிறைவு செய்யும் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். உயர் கல்விக்கு முக்கியத்துவம் தரும் அதே வேளையில் அடிப்படைக் கல்விக்கும், அதிக முக்கியத்துவம் தருகிறது தமிழ்நாடு கல்வித்துறை. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வித்துறையில் செய்த புரட்சிதான், இன்று நாம் கல்வியில் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரி மாநிலமாக சிறந்து விளங்குகிறோம்.

மாணாக்கர்கள் கல்வி கற்பதற்கு அவர்களது குடும்ப பொருளாதார நிலை தடையாக இருக்கக்கூடாது எனக் கருதி

மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து, பள்ளிகளில் அதிக அளவில் மாணாக்கர் சேர்க்கை மற்றும் இடைநிற்றலைக் குறைக்க **மாண்புமிகு அம்மாவின் வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.**

பள்ளிகளில் சேர்ந்து படிப்பது, தேர்வு எழுதுவது சம்பந்தமாக மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இடையே நிலவும் மன இறுக்கத்தை குறைக்க பல்வேறு சீர்த்திருத்த நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- கல்வித்துறைக்கு அதிக அளவு ஒதுக்கீடாக 27 ஆயிரத்து 205 கோடியே 88 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.
- 10, 11 மற்றும் 12 வகுப்பு மாணவர்களுக்கான பொது தேர்வு நடைபெறும் தேதிகளும், பொதுத் தேர்வு முடிவு அறிவிக்கப்படும் தேதிகளும் முன்கூட்டியே அறிவிக்கப்படுகிறது.
- அரசு பொதுத் தேர்வுகளில் அறிவிக்கும் தரமுறை கைவிடப்பட்டுள்ளது.
- 11ஆம் வகுப்பிற்கு பொதுத்தேர்வு முறை அறிமுகப்படுத்தியது.
- மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் 2 நிமிடத்தில் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படுகிறது.
- மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பு போட்டித் தேர்வுகளுக்காக 412 மையங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.
- புத்தகப் பையின் சுமையை குறைக்க முப்பருவக் கல்வி முறை நடைமுறைப்படுத்தியது.

என்று பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

மாண்புமிகு அம்மா அவர்களாலும் மற்றும் மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தொடர் முயற்சியின் பயனாக தொடக்க நிலை வகுப்புகளின் நிகர சேர்க்கை விகிதம் **99.86** ஆகவும், உயர் தொடக்க நிலையில் வகுப்புகளின் நிகர சேர்க்கை விகிதம் **99.22** ஆகவும் உயர்ந்துள்ளது. இது **100** விழுக்காட்டை விரைவில் எட்டும் என்றும் உறுதி கூறுகின்றேன்.

குழந்தை பிறப்பதற்கு முன் கருவுற்ற தாய்மார்களுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மருத்துவ உதவித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்குவது, அந்த குழந்தை பிறந்தவுடன் அம்மா பரிசு பெட்டகம், பிறகு அந்த குழந்தை பள்ளி சேர்ந்து பள்ளியில் இறுதி வகுப்பு படிக்கும் வரை உள்ள அனைத்தும் கட்டணமின்றி வழங்கும் ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதாவது கருவறை முதல் கல்விச்சாலை வரை அனைத்தும் கட்டணமின்றி வழங்கும் ஒரே அரசு மாண்புமிகு அம்மாவின் அரசுதான்.

குழந்தைப் பருவம் குதூகலமாய், வண்ணத்து பூச்சிக்களாய் விளையாடி துள்ளி திரியும் காலம். பள்ளி சென்று பயில வேண்டிய காலம், குழந்தைகளின் திறமைகளை கண்டறிந்து, மேம்படுத்தி அவர்களின் உரிமைகளை பாதுகாத்து பராமரிக்க வேண்டியது நமது கடமையாகும் என்றார் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். இந்த கருத்தும் இந்த நூலின் வழியாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் அறிவுறுத்தும் கருத்தும் ஒன்றாகவே இருப்பதால், இரண்டு தலைவர்களின் கல்வி சார்ந்த சிந்தனைகள் நம் நாட்டு குழந்தைகளின் முன்னேற்றத்தை மையமாக வைத்தே இருப்பதை உணர முடிகிறது.

எனவே, குழந்தைகளின் மனதை குதூகலமாக வைத்து, அவர்கள் எந்தவிதமான மனஇறுக்கமுமின்றி மகிழ்ச்சியாக கல்வி கற்று வாழ்வில் உயர்ந்து இந்த நாட்டையும் உயர்த்த மாண்புமிகு

அம்மாவின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என உறுதி கூறுகிறேன்.

"Exam Warriors" என்று ஆங்கிலத்தில் வெளிவந்த இந்த அரிய நூல் "பரீட்சைக்கு பயமேன்" என்ற தலைப்பில் தமிழில் சிறப்பாக வெளி வந்துள்ளது. ஆங்கில நூலின் எழுத்து நடையும், தமிழ் நூலின் எழுத்து நடையும் எல்லோரும் புரிந்து கொள்ளுகிற அளவிற்கு எளிமையாக இருக்கிறது. பக்கத்திற்கு பக்கம் இளைஞர்களை, குழந்தைகளை கவர்ந்து இழுக்கும் அளவிற்கு கார்ட்டூன் வண்ணப்படங்களுடன் இந்நூல் வடிவமைக்கப்பட்டிருப்பது தனிச்சிறப்பாகும். செய்வோம், செய்வதன் மூலம் வளர்வோம் என்ற மைய கருத்துடன் வாழ்க்கை வழிகாட்டி நூலாக உலக இளைஞர்கள் அனைவருக்கும் பொருந்தும் படியான ஒரு சிறந்த நூலை வழங்கியமைக்கு நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மீண்டும் பாராட்டி மகிழ்கிறேன். இந்நூலை தமிழில் நேர்த்தியாக வெளியிட்டுள்ள "அல்லயன்ஸ் கம்பெனி" பொறுப்பாளர்களையும் பாராட்டுகிறேன்.

வாழ்க அண்ணா நாமம்

வளர்க புரட்சித்தலைவரின் புகழ்

தொடர்க அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் எழுதிய
"பரீட்சைக்குப் பயமேன்" நூல் வெளியீட்டு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
04.09.2018 அன்று ஆற்றிய உரை

ஆசிரியப்பணி அறப்பணி! அதற்கு உன்னை அர்ப்பணி என்ற அர்ப்பணிப்பு உணர்வோடு ஆசிரியர்கள் செயல்படவேண்டும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் ஆசிரியர் தின நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களின் 130ஆவது பிறந்த நாளான இந்நன்னாளில், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெறுகின்ற இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தச் சிறப்புமிக்க விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் நிருவாக சீர்த்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார் அவர்களே!

இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களே! தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தினுடைய தலைவர் மரியாதைக்குரிய திருமதி பா.வளர்மதி அவர்களே!

முன்னிலை வகிக்கும் தலைமைச் செயலாளர் அவர்களே!

திட்ட விளக்கவுரை ஆற்றிய பள்ளிக் கல்வித் துறை முதன்மை செயலாளர் அவர்களே!

மரியாதைக்குரிய முன்னாள் அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள தொடக்கக்கல்வி இயக்குநர் அவர்களே!

பள்ளிக் கல்வித் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த இயக்குநர்களே, இணை இயக்குநர்களே! முன்னாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே, ஆசிரியப் பெருமக்களே! பெற்றோர்களே! மாணவச் செல்வங்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்துள்ள கல்வித் துறை அலுவலர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறியாமை இருள்அகற்றி, கல்விச்சுடர் ஏற்றிவைத்த தத்துவமேதை டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளும், அடிமை இருள் அகற்றி விடுதலை தீபம் ஏற்றிய கப்பலோட்டிய தமிழன்; செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரனார் அவர்களின் பிறந்தநாளுமான இந்த நன்நாளில்....

பள்ளியின் தூய்மைக்கு ஒரு விழா!

கற்றுக்கொடுப்போருக்கு ஒரு விழா!

கற்றுக்கொள்வோருக்கு ஒரு விழா!

என திரிவேணி சங்கமமாய், முப்பெரும் விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருப்பது மனதுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

எனக்கு கல்வி போதித்த என் ஆசிரியர்களையும், அரசியல் போதித்த மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களையும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களையும் என் மனதில் நிறுத்தி, மாணாக்கர்களுக்கு கல்வி புகட்டும் உன்னத பணியை நிகழ்த்திக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்வில் இரண்டு அதி முக்கிய அறைகள் உண்டு.

ஒன்று, கருவறை– அம்மாவுடையது.

மற்றொன்று, வகுப்பறை – ஆசிரியருடையது.

அம்மா, வாழ்க்கையை தந்து உலகத்தை அறிமுகப்படுத்துகிறார். ஆசிரியர், அறிவை தந்து வாழ்க்கையை அறிமுகப்படுத்துகிறார்.

ஒழுக்கம், பண்பு, ஆற்றல், ஊக்கம், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, வாழ்க்கை, பொது அறிவு என அனைத்தையும் மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்து, உண்மையான வழிகாட்டிகளாக விளங்குபவர்கள் ஆசிரியர்கள். அப்படிப்பட்ட

ஆசியர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் செப்டம்பர் 5ஆம் நாளை ஆசிரியர் தினமாக கொண்டாடுகிறோம்.

ஆசிரியர்கள் சமூக மேம்பாட்டின் சான்றோர்கள்; அறிவொளி ஏற்றும் தீபங்கள்; **சுடர் விடும் தீபமொன்றில் இருந்து தான் மற்றொரு விளக்கை ஏற்ற முடியும்.**அதற்கொப்ப தன்னலம் கருதாது பணிசெய்து நிறைவு காண்பவர்கள் தான் ஆசிரியர்கள். உலகில் உன்னதமான பணி ஆசிரியர் பணி; ஒரு தொழிலாகக் கருதக் கூடியது அல்ல ஆசிரியர் பணி என்பது; தியாகபூர்வமாக ஆற்றப்படும் தொண்டாக அது மதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அதன் பெருமை உயரும், மகத்துவம் மிளிரும், தனித்துவம் ஒளிரும். தியாகத்துவம் மலரும்.

ஆசிரியர்கள் தியாக மனப்பான்மை கொண்டவராக இருந்தால் மட்டும் போதாது, கற்பிக்கும் தொழிலில் பேரார்வம் கொண்டவராகவும் இருக்க வேண்டும். அவர்கள் தான் உண்மையான ஆசிரியர்கள்.

இன்றைய தினம் தன்னுடைய சிறப்பான பணியின் காரணமாக டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதுபெறும் 373 ஆசிரியர்களையும், தமிழ் வழி பயிலும் மாணவர்களின் அறிவார்ந்த செயல்பாட்டின் காரணமாக “காமராஜர் விருது” பெறும் 960 மாணவச் செல்வங்களையும் உளமார பாராட்டுகிறேன். சுத்தம் மற்றும்

சுகாதாரம் சார்ந்து, பள்ளிகள் சிறப்பாக செயல்படுவதை அடையாளம் ணகாட்டும் விதமாக, பாராட்டும் விதமாக மாநில அளவில் தூய்மைப் பள்ளி விருதுபெறும் 40 பள்ளிகளைச் சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கும், அதன் பெற்றோர்ஆசிரியர் கழகங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கல்வி சிறந்த தமிழ்நாடு' 'புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று பாரதியார் பாடினார். பாரதி கண்ட கனவை மெய்ப்பிக்கும் விதமாகத் தான் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வாழ்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டை கல்வியில் சிறந்த மாநிலமாக, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்கி, அதை மேலும் முன்னெடுத்துச் செல்ல எங்களிடம் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

"தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்

கல்வி தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்

கருத்தாக பல தொழில் பயிலுவோம்"

என்று புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாடினார்கள்.

"அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில், அனைவருக்கும் தங்கு தடையின்றி தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும்" என்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அமுத மொழியை அடிப்படையாகக் கொண்டே கல்வித் துறையின் ஒவ்வொரு திட்டமும் வகுக்கப்பட்டும், செயல்படுத்தப்பட்டும் வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, கல்வித் துறைக்காக முன் எப்போதும் இல்லாத வகையில் இந்த ஆண்டில் அதிக நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டப் பணிகளை செம்மையாக செயல்படுத்திக்

கொண்டிருக்கின்றது என்பதை இங்கு பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைதூரத்தில் உள்ள பள்ளிகளினால் மாணவர்களின் கல்விக்கனவு தொலைந்து விடக்கூடாது என்பதற்காக கிராமங்கள் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் 20 புதிய தொடக்கப்பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வாண்டு 100 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

மாவட்டத்திற்கு ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி வீதம் 32 பள்ளிகளைத் தேர்வு செய்து, தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், கல்வி கற்பிக்கும் தரத்தை உயர்த்தும் வகையிலும், ஒவ்வொரு பள்ளிக்கும் 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அவை மாதிரிப் பள்ளிகளாக மாற்றப்பட்டு வருகிறது. இதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசுப்பள்ளி மாணவர்கள் போதிய கணினித் திறன்களை அடையும் வகையில், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. இதன்படி 3,090 உயர்நிலை பள்ளிகளுக்கு தலா 10 கணினிகளும், 2,939 மேல்நிலை பள்ளிகளுக்கு தலா 20 கணினிகளும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய மின் கருவிகளும் வழங்கப்படும்.

இந்த ஆண்டு 11 இலட்சத்து 17 ஆயிரம் மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை நான் தொடங்கி வைத்ததை இத்தருணத்தில் மகிழ்வுடன் நினைவுகூற விரும்புகிறேன்.

ஆசிரியர்களின் பற்றாக் குறையினால், மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயல்பாடு எந்தவிதத்திலும் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடாது என்ற உயரிய சிந்தனையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு, காலிப் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி

வருகிறது. அந்த வகையில் 4,362 ஆய்வக உதவியாளர்களும், 2,373 முதுகலை மற்றும் சிறப்பாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

படித்த பின்பு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடத்திட்டத்தில் தனித்திறன் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாட நூல்கள் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் அளவிற்கு தரம்மிக்கதாகவும், கருத்தாழம் மிக்கதாகவும், கண் கவரும் வண்ணங்களோடும் நம் மாணவர்களின் கைகளில் தவழ்ந்து அறிவுப் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. அதில் இடம்பெற்றுள்ள Quick response என்று சொல்லப்படும் QR கோடுகள் மூலமாக இணையதளத்தில் உள்ள எண்ணற்ற வளங்களை விரல்நுனிக்கு கொண்டுவரும் விந்தையும் விளைந்திருக்கிறது. கல்வியில் காலத்திற்கேற்ற பரிமாண மாற்றம் மலர்ந்திருக்கிறது.

இப்புதிய பாடத் திட்டங்களை சிறப்பான முறையில் கையாளக்கூடிய வகையில், ஆசிரியர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இறுதி நேரத்தில் வெளியிடப்படும் தேர்வு கால அட்டவணையால், மாணவர்கள்

மன இறுக்கத்திற்கு ஆளாகும் நிலையினை மாற்றி, 10, 11, 12ஆம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு கால அட்டவணையும், தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படும் தேதியும், கல்வியாண்டின் தொடக்கத்திலேயே திட்டமிட்டு வெளியிடுவதால், மாணவர்களின் மனஅழுத்தம் நீக்கப்படுகிறது.

அரசு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியாகி 2 நிமிடங்களுக்குள் குறுஞ்செய்தி மூலம் மாணவர்களுக்கு அவர்கள் பெற்ற மதிப்பெண்கள் அனுப்பப்பட்டு வரலாற்றுச் சாதனை படைத்திருக்கிறது. இதன் மூலம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 14 வகையான விலையில்லா நலத் திட்டங்களை கொடுத்தார்கள்.மேலும் மாணவர்கள், கல்வி கற்றலில் களைப்பு ஏற்படாமல் இருக்க சத்துணவு திட்டத்தில் கலவைச் சாதம் அளித்தார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும் இத்திட்டங்களை தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது.

இதனால் கல்லாதவர்களே இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மாண்புமிகு அம்மாவின் அரசு மாற்றியிருக்கிறது என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

மாணவர்களுக்கு கல்வி மட்டும் போதாது, பொது அறிவும் தேவை என்பதை அறிந்து மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நூல் நிலையங்களை அமைத்து வருகிறது.

ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக நீடித்து வந்த நீதிமன்றத் தடை நீக்கப்பட்டு, இவ்வாண்டு 1,172 உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களுக்கான கலந்தாய்வு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

2018–2019 கல்வியாண்டிற்கான ஆசிரியர், தலைமை ஆசிரியர் பணியிட மாறுதல் கலந்தாய்வில் இணையதளம் வாயிலாக கலந்து

கொண்டு அவரவர் விருப்பத்திற்கேற்ப பணியிடங்களை தேர்வு செய்து பதவி உயர்வு மற்றும் பணி மாறுதல் ஆணை பெற்றுள்ளனர்.

மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் கல்வி தொடர்பான ஐயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளும்வகையில் 14,417 என்ற கட்டணமில்லா தொலைபேசி சேவை அறிமுகப்படுத்தப்பட்டு, மாணவர்களிடமும் அவர்தம் பெற்றோரிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

10 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் 15 இலட்சம் மாணவர்களுக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பிற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், இவ்வாண்டு முதல் இணைய வழியில் தனியார் பள்ளிகளில் தொடக்க வகுப்புகளுக்கு மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. இதுவரை இத்திட்டத்திற்காக 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக 4 இலட்சத்து 20 ஆயிரத்து 485 மாணவச் செல்வங்கள் பயனடைந்துள்ளனர்.

பள்ளி மற்றும் பள்ளிசார் செயல்பாடுகளின்போது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு எதிர்பாராத விதமாக விபத்து ஏற்பட்டு, இறப்பு நேரிடின் ஒரு இலட்சம் ரூபாயும், பெரிய காயங்கள் எனில் 50 ஆயிரம் ரூபாயும், சிறிய காயங்களுக்கு 25 ஆயிரம் ரூபாயும், விபத்து ஏற்பட்ட 24 மணி நேரத்திற்குள் அவர்களின் குடும்பத்தாரிடம் நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.

2017–2018ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின்போது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிறப்பாக செயல்படும் பள்ளிகளை கண்டறிந்து, ஒரு மாவட்டத்திற்கு தலா ஒரு தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என 4 பள்ளிகளுக்கு “புதுமைப் பள்ளி” என்ற விருதும், தொடக்க பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு

தலா ஒரு இலட்சமும், மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா 2 இலட்சமும் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், இந்த ஆண்டு 16 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், 16 நடுநிலைப் பள்ளிகள், 12 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 12 மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 56 பள்ளிகள் புதுமை பள்ளி விருதுக்கு தெரிவு செய்யப்பட்டு புதுமைப் பள்ளி விருதுகள் மற்றும் பரிசுத் தொகையாக 80 இலட்சம் ரூபாய் என்னால் 09.07.2018 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இதே போன்று, அரசு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த முறையில் கணினியை பயன்படுத்தி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் சிறந்த ஆசிரியர், கல்வி இணைச் செயல்பாடுகளில் சிறந்து விளங்கும் ஆசிரியர், குழந்தைகள் சேர்க்கை மற்றும் பள்ளி மேலாண்மையில் சிறந்து விளங்கும் ஆசிரியர்கள் என மாவட்டத்துக்கு 6 ஆசிரியர்கள் வீதம் தேர்வு செய்து ஒவ்வொருவருக்கும் “கனவு ஆசிரியர் விருது” மற்றும் தலா 10,000/– ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயலாக்கும் வகையில், 140 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு கனவு ஆசிரியர் விருது என்னால் 09.07.2018 அன்று வழங்கப்பட்டது.

இவ்வாண்டு முதல் சிந்தனைத் திறன், நற்பண்புகள், பேச்சாற்றல், மற்றும் எழுத்தாற்றல் கொண்ட மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில்

பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பேச்சு, கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்தி மாவட்ட அளவில் வெற்றிபெறும்

மாணவ, மாணவியருக்கு "இளம் படைப்பாளர் விருது" வழங்கப்பட உள்ளது.

பள்ளிக்கல்வித் துறையில் உள்ள பல்வேறு இயக்குநரகங்களை ஒரே கட்டடத்தில் கொண்டுவரும் வகையில் 39 கோடி ரூபாய் செலவில் "புரட்சித்தலைவர் நூற்றாண்டு விழா கட்டடம்" என்ற பெயரில் ஏறத்தாழ ஒரு இலட்சம் சதுர அடியில் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா முடிந்து, கட்டடப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள 242 பள்ளிகளில் இடைநிலை வகுப்பில் பயிலும் மாணவிகளுக்கு கராத்தே, ஜூடோ மற்றும் டேக்வாண்டோ போன்ற தற்காப்புக் கலைப் பயிற்சிகள் சிறந்த பயிற்சியாளர்களைக் கொண்டு 21 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டு வருகிறது.

"செய்துணர்ந்து கற்றல்" (RAA) திட்டத்தின் கீழ் மாணவர்களின் கள அனுபவத்தையும், அறிவையும் மேம்படுத்தும் வகையில், 67 கல்வி மாவட்டங்களிலிருந்து 6,700 மாணவர்கள் 1 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் விக்ரம் சாராபாய் வானியல் ஆய்வு மையத்திற்கு கல்வி சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அறிவியல், தொழில்நுட்பம், கலை மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில். 100 மாணவர்கள் மற்றும் 12 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு அயல்நாட்டு சுற்றுலாவிற்கு அனுப்பப்பட உள்ளனர். இப்புதுமை நிகழ்விற்காக 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அனைத்து பள்ளிகளையும் திறம்பட ஆய்வு செய்யவும், அரசின் நலத் திட்டங்கள் அனைத்து மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்கவும், ஆசிரியர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்க்கவும்,

அனைத்து மாவட்டங்களிலும் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த 67 மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதனை ஒத்த அனைத்து பணியிடங்களையும் ஒருங்கிணைத்து தற்போது 120 மாவட்ட கல்வி அலுவலகங்களாக அதிகரிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

ஆசிரியர் பெருமக்களுக்கு இந்த இனிய நன்னாளில் நான் கூற விரும்புவது, ஆசிரியர் என்பவர் கற்பித்தலில் மட்டும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது. அவதானியாக, ஆலோசகராக, இனம் காண்பவராக, உதவுபவராக, ஒழுங்கமைப்பாளராக, மதிப்பீட்டாளராக, இன்னும் பல பரிமாணங்களில் தேடலுக்கு வழி செய்பவராக விளங்க வேண்டும் என கல்வியாளர் அறிஞர் லூயில் கோகலே என்பவர் கூறியுள்ளார்.

ஏட்டுக் கல்வியின் வரையறையைத் தாண்டி, பரந்த பரிமாணத்தில், சமூக பொறுப்புடன் தீர்மானிக்கும் திறனோடு, வசீகரிக்கும் தன்மையோடு, சினேகித மனோபாவத்தோடு, பொது நலன் பாராட்டும் நல்லெண்ணத்தோடு, சமூக மேம்பாட்டுக்கு, வழிகாட்டும் விதமாக ஆசிரியர் சமுதாயம் செயல்பட வேண்டும். அதேபோல், மாணவ சமுதாயமும் தமக்கே உரித்தான பொறுப்பையும், கடமையையும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஆசிரியப் பணி என்பது ஒரு உன்னதமான பணி, புனிதமான பணி! தியாக உணர்வும், சகிப்புத்தன்மையும், விடா முயற்சியும் கொண்டவர்கள் தான் சிறந்த ஆசிரியர்களாக முடியும்.

எத்தனை எத்தனை துன்பங்கள் மனதுக்குள் இருப்பினும், அவற்றையெல்லாம் தன்னுள் மறைத்து, சோகங்களை தன்னுள் அடக்கி, சுகம் கொடுக்கும் சிவரஞ்சனி ராகமாக, மாணவர்களிடம் வலம் வரும் ஆசிரியர்களாகிய நீங்கள், பாடப் புத்தகத்தையும் தாண்டி சிந்திக்கக் கூடிய மனப்போக்கை மாணவர்களிடம் வளருங்கள்.

தன்னை சுற்றியுள்ள சுற்றுப்புறத்திலிருந்து கற்றுக்கொள்ளக் கூடிய திறமையை மாணவர்களிடம் வளருங்கள்.

ஒரு இளம் நரேந்திரனிடம் உள்ள திறமையை கண்டறிந்து அவனை ஒரு விவேகானந்தனாக உயர்த்தினார் அவனது குரு ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவர்கள்.

அதேபோன்று நவீன இந்தியாவின் ஏவுகணை நாயகன் மாண்புமிகு அப்துல் கலாம் அவர்களிடமிருந்த திறமையை வெளிக்கொண்டு வந்தவரும் அவரது ஆசிரியர்தான்.

இதனை கூறுகையில் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு நாள், கோபாலன் என்ற ஓர் ஆடு மேய்க்கும் சிறுவன், மேய்ச்சலுக்கு சென்றபோது, பெற்ற தாய் சிங்கத்தை இழந்து அனாதையாகக் கிடந்த, ஒரு சிங்கக் குட்டியை பார்த்து, பரிதாபப்பட்டு தூக்கி, ஆட்டுப் பாலை அந்த சிங்கக் குட்டிக்கு புகட்டினான். பின்னர் ஆட்டு மந்தைகளுடன், ஆடுகளுக்கு கொடுப்பது போலவே, பாலையும், புல்லையும் அதற்குக் கொடுத்து வளர்த்தான்.நாளடைவில் ஆடுகளுக்கு இடையில் சிங்கக் குட்டி ஆடுபோலவே வளர்ந்து வந்தது.

ஒரு நாள், ஆற்றங்கரையில் மேய்ச்சலில் இருந்தபோது அங்கே வந்த ஒரு பெரிய சிங்கம் ஆடுகளின் மீது பாய்ந்தது. சிங்கக் குட்டியும் ஆடுபோல கத்திக் கொண்டு தலை தெறிக்க ஒடியது.அந்த சிங்கக் குட்டியைக் கண்ட பெரிய சிங்கத்திற்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அதனை பிடித்து, “என்னைப் போல் நீயும் சிங்கமாயிற்றே! ஏன் இப்படி ஆடு மாதிரி கத்துகிறாய்”, என்றது. ஆனால் சிங்கக் குட்டி, தான் ஆடு என்று உறுதியாக நம்பியது.உடனே சிங்கக் குட்டியை பிடித்து, “தண்ணீரில் தெரியும் உன் பிம்பத்தை கவனமாக பார்”, என்றது.

“நாம் இருவரும் சிங்கம்தான்” என்றது. நீரில் தெரியும் தனது பிம்பத்தையும், பெரிய சிங்கத்தையும் குட்டி சிங்கம் மாறி மாறி

பார்த்தது. பின் சிறிது சிறிதாக கர்ஜனை செய்து, முடிவில் பெரிய சிங்கத்தைப் போலவே கர்ஜிக்க தொடங்கியது. பிறகு பெரிய சிங்கத்தோடு காட்டிற்குள் ஓடியது.

இந்தக் கதையில் கூறியதைப் போல் மாணவர்களிடம் இருக்கும் அறியாமை எனும் இருளை நீக்கி, அவர்கள் தன்னகத்தே கொண்டிருக்கும் திறமையை, இயல்பை ஆசிரியர்கள் வெளிக் கொணர வேண்டும்.

ஆசிரியர் ஒருவரிடம் "ஐயா, ஒரு மாணவர் என்பவர் எப்படி இருக்க வேண்டும் ?" என்று ஒரு மாணவர் கேட்கிறார்.

அதற்கு அந்த ஆசிரியர், "மாணவன் என்பவன், கொக்கைப் போலவும், காக்கையைப் போலவும், கோழியைப் போலவும், உப்பைப் போலவும், உன்னைப் போலவும் இருக்க வேண்டும்" என்றார்.

அதற்கு மாணவன், "அய்யா எனக்கு சரியாக புரியவில்லை, சற்று விளக்கமாக கூற முடியுமா ?"என்றார்.

அதற்கு அவ்வாசிரியர்,

"கொக்கு என்பது ஓடு மீன் ஓட, உறுமீன் வரும் வரை காத்திருக்கும். வருகின்ற சிறிய மீன்களையெல்லாம் விட்டுவிட்டு பெரியமீன் வரும்வரை காத்திருந்து கவ்விபிடிக்கும். அதுபோலத்தான் மாணவர்கள் தனக்கு கிடைக்கின்ற வாய்ப்புகளில் மிக நல்ல வாய்ப்பினை கண்டறிந்து அதனைக் கைகொள்ள வேண்டும்".

"அடுத்ததாக, காக்கையைப் போல, தன் சுற்றத்தாரோடு சேர்ந்திருத்தல், தேவையான பொருட்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய பண்புகளை மாணவர்கள் கொண்டிருக்க வேண்டும்" என்றார்.

"கோழியைப் போல இருக்க வேண்டும் என்றீர்களே,

அது எப்படி ?'' என்று மாணவன் கேட்டான்.

அதற்கு ஆசிரியர், ''கோழியை கவனித்திருக்கிறாயா ? அது குப்பையை கிளறி, தனக்குத் தேவையான உணவினை மட்டும் உண்ணும். அதுபோல ஒரு மாணவர் நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டாலும், அதிலுள்ள தீய விஷயங்களை விலக்கிவிட்டு, தன் வாழ்க்கைக்கு எது தேவை; தன் வளர்ச்சிக்கு எது தேவை என்பதை கண்டறிந்து, அதன் வழி முன்னேற வேண்டும்''.

''உப்பை பற்றி கூறினீர்களே ?'' என்றான் மாணவன். உடனே ஆசிரியர், ''ஆம் உப்பு என்ன செய்யும் ? யோசித்துப் பார். உப்பில்லா உணவை யாரும் விரும்ப மாட்டார்கள். ஆனாலும், உணவோடு உப்பினை கலக்கும்போது, அந்த உப்பானது உணவோடு கலந்து மறைந்துபோனாலும் அது உணவுக்கு சுவையை கொடுக்கும். அதுபோலவே, மாணவர்கள் தனித்தன்மையோடு செய்யும் நற்செயல்கள் மற்றவர்களுக்கு கண்கூடாக தெரியாவிட்டாலும், இந்த மாணவர்களால்தான் இது சாத்தியமாகியிருக்கிறது என்று பிறர் உணரும் வண்ணம் வாழ வேண்டும்'' என்றார். ''சரி, என்னைப் போல இருக்க வேண்டும் என்று கூறினீர்களே, அதற்கு என்ன பொருள் ? என்று மாணவன் கேட்டான்''.

அதற்கு ஆசிரியர், ''மாணவன் என்பவன் தனக்குள் எழும் சந்தேகங்களை எந்தவித தயக்கமுமின்றி ஆசிரியர்களிடம் கேட்டு தெளிவு பெற வேண்டும் எனக் கூறுவதற்காகவே உன்னைப் போல் இருக்க வேண்டும் என்று கூறினேன்'' என்றார்.

இப்படியாக மாணவர்கள் இயற்கையிடமிருந்தும் தமக்குத் தேவையான பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆசிரியப்பணி அறப்பணி! அதற்கே உன்னை அர்ப்பணி என்ற அர்ப்பணிப்பு உணர்வோடு ஆசிரியர்கள் செயல்படவேண்டும். ஆசிரியர்–மாணவர் உறவு என்பது ஒரு பெற்றோருக்கும் அவர்களின் குழந்தைக்குமான உறவைப் போன்றது. இன்னும் சொல்லப்போனால்

அதைவிடப் புனிதமானது. பெற்றோர் இரண்டாவது ஆசிரியர், ஆசிரியர் இரண்டாவது பெற்றோர் என்பதை பெற்றோரும், ஆசிரியர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

வசதியில்லாதவன் அவன் வரம்புக்குள் தான் கனவு காண வேண்டும் என்ற வரையறைகளை உடைத்தெறிந்து, அவர்கள் வானளாவிய கனவு கண்டு, அதனை நனவாக்க உழைத்து, சாதனை படைத்து புகழ் பெற வேண்டும் என்ற முனைப்போடு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு மாணவர்களுக்கு நலம் பயக்கும் பல்வேறு நல்ல திட்டங்களை உருவாக்கி அதை நன்முறையில் செயல்படுத்தியும் வருகிறது.

மாணவ சமுதாயம் நினைத்தால் எதையும் செய்ய இயலும். இதை ஆசிரியர்களும் நன்கு அறிவர். எனவே, மாணவர்களை நல்வழிப்படுத்தும் பணியில் இருக்கும் ஆசிரியப் பெருமக்கள், பாட நூல்களைத் தாண்டி, மாணவர்களுக்கு நல்லதொரு புரிதலை ஏற்படுத்த வேண்டும். தற்போது சமூக நலன் சார்ந்து தமிழ்நாடு அரசு எடுத்து வரும் சிறப்பான நடவடிக்கைகளைப் பற்றிய புரிதலை ஏற்படுத்த வேண்டும். சக்தி மூலம் வெற்றி கொள்ள துணை புரிய வேண்டும். அதாவது, வேளாண் தொழிலுக்கு உதவும் குடிமராமத்து, தண்ணீர் பற்றாக்குறையை போக்க மழைநீர் சேகரிப்பு, சுகாதாரத்தைப் பேண வீட்டுக்கு ஒரு கழிவறை, சுற்றுச்சூழலை பராமரிக்க பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை ஒழித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்களிடம் எடுத்துரைத்து, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த இனிய விழாவில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு, “காந்திய அனுபவக்கல்வி மற்றும் அடிப்படைக்கல்வி” என்ற புத்தகத்தை வெளியிட்டுள்ளேன். இந்தப் புத்தகத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகின்றேன். கல்வி என்பது வெறும் ஏட்டுக்கல்வி மட்டுமல்ல; குழந்தைகளின் உடல், மனம்

மற்றும் ஆன்மா ஆகியவை ஒருங்கிணைந்து பயிலும் கல்வியே ஒரு குழந்தையை நல்ல பண்புள்ளவனாக வளர்வதற்கு உறுதுணையாக இருக்கும். இது தற்கால சூழ்நிலைக்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.

அண்ணல் காந்தியடிகளின் 150ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் அக்டோபர்–2, 2018, அன்று நாடு முழுவதும் தொடங்கப்படவுள்ள நிலையில் காந்தியடிகளின் பொதுக்கல்வி, அடிப்படைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை நாடு முழுவதும் கொண்டு செல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மிகவும் சாலச் சிறந்ததாகும்.

அதன் ஒரு பகுதியாக, “அனுபவ வழிக்கல்வி: காந்தியடிகளின் அடிப்படைக்கல்வி” என்ற இந்த நூலை தமிழ்நாடு அரசின் சார்பில் வெளியிடுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூலில் அண்ணல் காந்தியடிகளின் அடிப்படைக்கல்வி குறித்த கோட்பாடுகள், தொழிற்கல்வி மற்றும் பொதுக்கல்விக்கான பாடத்திட்டம், ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி மற்றும் ஆசிரியர் பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டம் போன்ற பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த நூலைப் பயில்வதன் மூலம் தமிழ்நாட்டில் 57,539 தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 92 இலட்சத்து 36 ஆயிரத்து 192 மாணவர்கள், 12 ஆயிரத்து 471 உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் 40 இலட்சத்து 41 ஆயிரத்து 789 மாணவர்கள் பயனடைவார்கள். இச்சீரிய பணியை மேற்கொண்டுள்ள தமிழ்நாடு கல்வித்துறைக்கும் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தைச் சார்ந்த அண்ணல் காந்தி கிராமியக் கல்விக் குழுமத்திற்கும் எனது பாராட்டுதலை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு முன்பு விருது பெற்றவர்களையும், இப்போது விருது பெறுபவர்களையும் மட்டுமே சிறந்த ஆசிரியர்கள் என எண்ணிவிடக்

கூடாது. அனைவருமே சிறந்த ஆசிரியர்கள்தான். விருது பெறாதவர்கள் சோர்ந்துவிட வேண்டாம். விருது பெற்றவர்கள் நின்றுவிட வேண்டாம். இந்த விருதின் மூலம் உங்களுக்கு புதிய பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. விருது என்கிற பயணச்சீட்டைத் தான் உங்களுக்கு வழங்கியுள்ளோம். இன்னும் நீங்கள் பயணிக்க வேண்டியது நீண்ட தூரம் இருக்கிறது என்பதை உணருங்கள். ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களாகவே இருந்து புதிது புதிதாகப் படிக்க வேண்டும். தான் படித்தவற்றை தன் மாணவர்களுக்கு தொடர்ந்து கற்பித்து வர வேண்டும். அதுதான் நீங்கள் மாணவர் சமுதாயத்திற்கு செய்யும் சீரிய தொண்டாகும். விருது பெற்றவர்களுக்கு வாழ்த்துகளையும், இந்த அருமையான விழாவை ஏற்பாடு செய்த கல்வித் துறையினருக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க அண்ணா நாமம் !

வளர்க புரட்சித்தலைவரின் புகழ் !

தொடர்க புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 05.09.2018 அன்று*
சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற
ஆசிரியர் தின முப்பெரும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை

சமூகப் பாதுகாப்பு திட்டங்கள் கவர்ச்சித் திட்டங்கள் அல்ல! ஒவ்வொரு திட்டமும் சமூகப் பொருளாதார கண்ணோட்டத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது!

15ஆவது நிதிக்குழுவின் தலைவர் திரு. என்.கே.சிங் அவர்களே,

15ஆவது நிதிக்குழுவின் உறுப்பினர்கள், டாக்டர் அனூப்சிங், டாக்டர் அசோக் லகரி, டாக்டர் ரமேஷ் சாந்த் அவர்களே,

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

தலைமைச் செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் அவர்களே,

15ஆவது நிதிக்குழுவின் செயலாளர் திரு. அரவிந்த் மேத்தா அவர்களே,

15ஆவது நிதிக்குழுவின் மூத்த அலுவலர்களே, மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர்களே,

வணக்கம்,

தமிழ்நாடு அரசு எப்போதும் நிதிக்குழு அமைப்பிற்கு உறுதுணையாகவே இருந்து வந்திருக்கிறது. திட்டக்குழு நடைமுறையில் இருந்த நாட்களிலும், மத்திய அரசிலிருந்து மாநில அரசிற்கு நிதி பரிமாற்றத்திற்கு நிதிக்குழுவே முக்கியமான ஆதாரமாக இருந்திட வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி வந்திருக்கின்றோம். இருப்பினும் தமிழ்நாட்டிற்கான நிதி பகிர்மானம் சமீபத்திய நிதிக்குழுக்களால் குறைக்கப்பட்டுள்ளது. 15ஆவது நிதிக்குழுவினால் மத்திய வரிகளின் பங்கு 32 சதவீதத்திலிருந்து 42 சதவிதமாக உயர்த்தப்பட்ட போதிலும், அது தமிழ்நாட்டிற்கு உதவாமல் போனதற்கு காரணம் மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டின் பங்கு அதிகமாக குறைக்கப்பட்டதேயாகும்.

14ஆவது நிதிக்குழு பரிந்துரை காலத்தில் ஆண்டுக்கு ரூ.6,000 கோடி அளவிற்கு தமிழ்நாட்டிற்கு இழப்பீடு ஏற்பட்டுள்ளது. அது ஒட்டுமொத்த நிதிக்குழு பரிமாற்ற அமைப்பின்மீது தமிழ்நாட்டு மக்களிடம் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

15ஆவது நிதிக்குழுவில் குறிப்பிடப்பட வேண்டிய அம்சங்கள் குறித்தும், முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் நிதிக்குழு தலைவருக்கு, நான் ஏற்கெனவே கடிதங்கள் எழுதியிருக்கிறேன். 2011ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் தரவுகளை பயன்படுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதை நான் இங்கே வலியுறுத்துகிறேன்.

தங்களது சொந்த முயற்சியினால் மக்கள் தொகையை கட்டுப்படுத்துவதில் சாதனை எய்துவரும் தமிழ்நாடு போன்ற வளர்ந்து வரும் மாநிலங்களுக்கான நிதிப் பங்கீட்டில் அந்தத்

தரவுகளை பயன்படுத்துவது பாதிப்படைய செய்துவிடும் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

மக்கள் தொகை கட்டுப்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில் நிதிப் பங்கீடு வழங்கவும் நான் நிதிக்குழுவை வேண்டுகிறேன். இக்குறியீட்டிற்கு மக்கள் தொகைக்கு வழங்கப்படும் அளவில் மதிப்பீடு அளித்து பரிந்துரைக்கப்பட வேண்டும். நிதிப்பங்கீட்டினை பொறுத்தமட்டில் 1971ஆம் ஆண்டின் தரவுகளையே அமல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் முன்னோடி திட்டங்களை செயல்படுத்தும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இருப்பினும் மத்திய அரசின் முன்னோடித் திட்டங்களுடன் இணைந்த ஊக்கத்தொகைகள் குறித்து சில முக்கிய கொள்கை அடிப்படையிலான பிரச்சினைகள் எங்களுக்கு உள்ளன. ஊக்கத் தொகைகள் குறித்த குறிப்புகள் அரசியலமைப்பு சட்டம் பிரிவு 280க்கு அப்பாற்பட்டது என்பதனை குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம்.

கவர்ச்சி திட்டங்களுக்கான செலவினங்களை கட்டுப்படுத்துதல் குறித்து ஆய்வு வரம்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது தொடர்பாக கடுமையான எதிர்ப்பினை தெரிவித்துக்கொள்கிறோம். கவர்ச்சித் திட்டங்களுக்கும் மக்கள் நலத்திட்டத்திற்குமான இடைவெளி மிக மெல்லியதான ஒன்றாகும்.

பள்ளிக் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் என்பது முந்தைய காலத்தில் கவர்ச்சித் திட்டம் என்று ஒரு சிலரால் அழைக்கப்பட்டது. ஆனால் தற்போது மத்திய அரசு பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவு திட்டத்தினை தனது தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் ஒரு அங்கமாகியுள்ளது. தமிழ்நாடு அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் வெவ்வேறு நிலையில் உள்ள மக்களை அடிப்படையாகக்

கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்தகைய திட்டங்கள் யாவும் தகுதிவாய்ந்த மக்களை சென்றடையுமாறு உள்ளன. எனவே, அத்தகைய திட்டங்களை கவர்ச்சித் திட்டங்கள் என்று குறிப்பிட இயலாது. நிதிக்குழுவானது பல்வேறு மாநில சட்டமன்றங்களின் ஒட்டுமொத்த முடிவுகளை குறைத்து மதிப்பிடக்கூடாது என்று கருதுகிறேன்.

இந்தியா போன்ற பெரிய நாடுகளில் வளர்ச்சியில் குறைந்துள்ள பகுதிகளுக்கு பகிர்ந்தளிப்பது குறித்த தேவைகளை நாம் அறிந்திருக்கிறோம். அவ்வாறு இருப்பினும் முந்தைய நிதிக் குழுக்களின் சில பரிந்துரைகள் மிகவும் மோசமான பின் விளைவை ஏற்படுத்தியுள்ளது. வளர்ச்சிக்கான உரிய முயற்சிகளை மேற்கொள்ளாத வருமான இடைவெளி மிகவும் அதிக அளவாக உள்ள பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடு முந்தைய நிதிக்குழுவால் உயர்த்தப்பட்டது. அது தமிழ்நாடு போன்று மாநிலங்களின் வளர்ச்சியை பாதிக்கும் காரணியாகவே உள்ளது. இந்தியா மிக விரைவாக வளர வேண்டுமானால் தமிழ்நாடு போன்ற வளர்ந்து வரும் மாநிலங்களை மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு நிதித் தேவைகள் அதிகமாக உள்ளன. வளர்ச்சியின்றி மறுபகிர்வு செய்ய இயலாது. எனவே, மறு பகிர்விற்கும் வளர்ச்சிக்கும் இடையே உரிய சமநிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் நிதிக்குழுவை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசு பகிர்ந்தளிக்க வேண்டிய நிதியை முழுமையாக மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கவில்லை என்று இந்திய தலைமை கணக்காயர் முன்னரே குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய அளவு நிதியை மாநிலம் முன்பு இழந்துள்ளது. எனவே, முந்தைய நிதிக்குழுக்களில் ஏற்பட்ட குறைபாடுகளை சீராய்வு செய்து நிதிப் பகிர்மானத்தில் ஏற்பட்டுள்ள குறைகளை சரி செய்யும்

வகையில் அதற்கான நிதியினை உடனடியாக வழங்க 15ஆவது நிதிக்குழுவை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நிலையான அரசு சொத்துக்களின் பராமரிப்புக்கு முக்கியத்துவம் வழங்கி பரிந்துரைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், இந்த நிதிக்குழுவை நான் வலியுறுத்துகிறேன். எங்கள் அலுவலர்கள் இது தொடர்பான விரிவான விளக்கங்களை அளிப்பார்கள். நாங்கள் தங்களிடமிருந்து ஏற்றுக் கொள்ளும்படியான பயனுள்ள விவாதங்களை எதிர்நோக்குகிறோம்.

இந்த நிதிக்குழு மிகச்சிறந்த நிபுணர்களை ஒருங்கே கொண்டுள்ளது. மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு அரசியலிலும், நிருவாகத்திலும் அனுபவமிக்க ஒரு தலைவரை இந்த நிதிக்குழு பெற்றிருக்கிறது. சுமார் 8 கோடி தமிழ்நாட்டு மக்கள் இந்த நிதிக்குழுவின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த சிறந்த 15ஆவது நிதிக்குழு தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

தமிழகம் வந்துள்ள 15ஆவது நிதிக்குழுவிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அளித்துள்ள கோரிக்கை மனுவில் கூறப்பட்டிருப்பதாவது:–

பொருளாதாரத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் மிகப்பெரிய வளர்ச்சியை எதிர்கொள்ளும் இந்த நேரத்தில் 15ஆவது நிதிக் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. பொருளாதார ஏற்ற இறக்கங்கள் நிலவும் சூழ்நிலையில் மக்களை பாதுகாப்பதற்காக, நிதியளிப்பு மற்றும் மக்கள் நலத்திட்டங்களுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துவதற்கு மாநில அரசு தள்ளப்பட்டுள்ளது. 14ஆவது நிதிக்கமிஷன் இருந்த காலகட்டத்தில் தமிழக அரசு நிதிப் பற்றாக்குறையில் இருந்தபோதிலும், இழப்பீட்டையோ அல்லது வருவாய் பற்றாக்குறை மானியத்தையோ தமிழகம் பெறவில்லை.

இந்த விஷயத்தில் தமிழகத்துக்கு எதிராக 14ஆவது நிதிக்கமிஷன் பெரிய தவறை இழைத்துவிட்டது. மத்திய மாநில அரசுகளுக்கு இடையே நேர்மையான நிதிப் பகிர்வை 15ஆவது நிதிக் கமிஷன் ஏற்படுத்த வேண்டும்.

வளரும் மாநிலங்களுக்கு முதலீடுகள் கிடைக்காமல் போனால் தேசத்தை முன்னெடுத்துச் செல்லும் மாநிலங்களின் வளர்ச்சித் தடுக்கப்பட்டுவிடும். 15ஆவது நிதிக்கமிஷன் தனது பரிந்துரைகளை இறுதி செய்வதற்கு முன்பு தமிழகத்தின் சார்பில் அளிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை கருத்தில் கொள்ள வேண்டும். மாநிலங்களில் நிலவுகின்ற நிதி ஆதாரங்களை விட அதிகமாக பொறுப்புகள் வழங்கப்படும். அடிப்படை ஏற்றத்தாழ்வை நிதிக்கமிஷன் சரிசெய்ய வேண்டும். இரண்டாவதாக, மாநிலங்களின் வருவாய் மற்றும் செலவினங்களை பற்றிய நம்பிக்கையைவிட எதார்த்தமான நிலையை கவனிக்க வேண்டும். 14ஆவது நிதிக்கமிஷனின் நியாயமற்ற பரிந்துரையால் தமிழகத்துக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு ஈடுகட்டப்பட வேண்டும்.

சென்னை மாநகரங்களின் பொருளாதார முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு தமிழகத்தின் தேவைக்காக ரூ.4,800 கோடி மானியம் வழங்கப்பட வேண்டும். தமிழகத்தின் கடலோரக் கடற்பரப்பில் கடல் நீர் ஊடுருவல் தடுப்புக்கு ரூ.260 கோடி

வழங்க வேண்டும். கடல் அரிப்பு தடுப்புப் பணிகளுக்கு ரூ.1,000 கோடி ரூபாய் அளிக்க வேண்டும். கிழக்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுக்காக ரூ.1,900 கோடி நிதி தேவைப்படுகிறது. பொது சுத்திகரிப்பு மையங்களின் விரிவாக்கத்துக்காக சிறப்பு மானியமாக ரூ.5 ஆயிரம் கோடி, சென்னையில் உள்ள நீர் நிலைகளை புதுப்பிப்பதற்காக ரூ.300 கோடி அளிக்கப்பட வேண்டும்.

சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நகரங்களான இராமேஸ்வரம், மதுரை, பழனி, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக முறையே, ரூ.200 கோடி, ரூ.500 கோடி, ரூ.100 கோடி, ரூ.75 கோடி, ரூ.100 கோடி நிதி கொடுக்க வேண்டும் காவேரி அக்னியாறு தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை குண்டாறு, கால்வாய் திட்டத்தின் கீழ் அவற்றை இணைப்பதற்காக ரூ.7,800 கோடி மானியம் அளிக்க வேண்டும். வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ள பழைமையான கோயில்களை புனரமைக்க ரூ.400 கோடி நிதி வேண்டும்.

தமிழகத்தில் உள்ள 58,326 தனிச்சாலைகள், நடுத்தர சாலைகள், இருவழிச்சாலைகள், பலவழிச்சாலைகள் ஆகியவற்றின் பராமரிப்புக்காக ரூ.23,465 கோடி மானியம் தரப்பட வேண்டும். 30,952 சதுர கி.மீ. வனப்பகுதி பராமரிப்புக்காக 1,000 கோடி ரூபாய், காவல்துறை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு ரூ.7,875 கோடி, நீதிமன்ற கட்டுமானம் உள்பட நீதித்துறை மேம்பாட்டுக்கு ரூ.1,500 கோடி, நகர்மயமாதல், குடிசை பகுதி மேம்பாடு ஆகியவற்றை எதிர்கொள்ள ரூ.5 ஆயிரம் கோடி, பாரம்பரிய நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்காக மட்டும் ரூ.1,500 கோடி, சுகாதார நிலையங்களுக்காக ரூ.1,000 கோடி பழைய அரசு மருத்துவக் கல்லூரி கட்டடங்களை புதுப்பிக்கவும், புதிய கட்டடங்கள் கட்டவும் ரூ.600 கோடி, நோயாளிகள் நலனுக்காக தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.400 கோடி உயர்நீதிமன்றம் புனித ஜார்ஜ் கோட்டை, அரசு அருங்காட்சியகம்,

பொதுப்பணித்துறை கட்டடங்கள், ஹுமாயூன்மஹால் ஆகிய பாரம்பரிய கட்டடங்களை புதுப்பிப்பதற்காக ரூ.250 கோடி, சிறார் நீதிமன்ற உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ரூ.80 கோடி உள்ளாட்சி மன்றங்களின் கட்டட பராமரிப்புக்காக ரூ.6,000 கோடி மானியத் தொகைகளை வழங்க பரிந்துரைக்க வேண்டும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏட்டுக்கல்வி மட்டும் வாழ்க்கைக்கு போதாது! பொது அறிவையும், சமயோசித அறிவையும் வளர்த்துக் கொண்டால்தான் வெற்றி பெற முடியும்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த இனிய விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.கே.பி. அன்பழகன் அவர்களே!

இந்த இனிய விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் மணிகண்டன் அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. பாலகிருஷ்ணரெட்டி அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே,

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.விஜயகுமார் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் மரியாதைக்குரிய முன்னாள் டி.ஜி.பி. முனைவர் நடராஜ் அவர்களே, திரு. சத்தியநாராயணா அவர்களே, திருமதி பலராமன் அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற உயர்கல்வித் துறையின் முதன்மை செயலாளர் அவர்களே!

வருகை புரிந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ப.துரைசாமி அவர்களே,

பல்கலைக்கழகத்தினுடைய பதிவாளர் அவர்களே, ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களே, பல்கலைக்கழகத்திலே பணிபுரிகின்ற பேராசிரியப் பெருமக்களே, மாணவர்களே, மாணவிகளே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, வருகை தந்திருக்கின்ற அத்தனைபேருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த பல்கலைக்கழகத்தின் 155ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். மாண்புமிகு அம்மாவின் வழிவந்த நானும், இந்த பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு கடந்த வைர விழாவில் தலைமையுரை ஆற்றுவதில் பெருமை கொள்கிறேன்.

சென்னை பல்கலைக்கழகம் தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது என்பதை இந்த நேரத்தில் நினைவுகூற விரும்புகிறேன்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

என்று கல்வியின் சிறப்பைப் பற்றி தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறியுள்ளார். மன்னருக்கு தன் தேசத்தைத் தவிர வேறு இடங்களில் சிறப்பில்லை. கற்றவர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்கிறது மூதுரை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் கல்விக்கு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது.

"கல்வி என்பது சுடரை தூண்டுவதாகும்.
பாத்திரத்தை நிரப்புவது அல்ல".

என்ற சாக்ரடீஸ் அவர்களின் கூற்றுப்படி மனித முன்னேற்றத்திற்கு சக்தி வாய்ந்த கருவியாகவும், சமூக சிந்தனையின் வலுவான வழிகாட்டியாகவும் கல்வி திகழ்கிறது. உண்மையான கல்வி, மனிதவள மேம்பாட்டினை வலியுறுத்தும். அது பாரம்பரிய மதிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதோடு மட்டுமின்றி, குறிப்பிடத்தக்க அவசியமான மேம்பாட்டையும் கொண்டு திகழ்கிறது.

“ஓராண்டை நீங்கள் சிந்தித்தால் நெல் நடுங்கள். 10 ஆண்டுகளை நீங்கள் சிந்தித்தால் மரங்களை நடுங்கள். 100 ஆண்டுகளை நீங்கள் சிந்திப்பீர்களேயானால், மக்களுக்கு கல்வி கற்பியுங்கள்” என்று ஒரு சீன பழமொழி கூறுகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே மாண்புமிகு அம்மாவின் அரசும் மூன்று செயல்களையும் செய்து வருகிறது.

இந்தியாவில் உயர் கல்வியில் சிறந்து விளங்கும் முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் சமீபத்திய அகில இந்திய உயர்கல்வி கணக்கெடுப்பு அறிக்கையின் படி,

தேசிய மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் 25.8 சதவீதம் ஆகும். ஆனால், தமிழ்நாட்டினுடைய மாணவர் சேர்க்கை விகிதம் 49.1 சதவீத மாணவர் சேர்க்கை உள்ளது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாணவிகளின் சேர்க்கை 48.2 ஆகும். ஆகவே, இன்றைக்கு இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கக்கூடிய மாணவ, மாணவிகளுடைய சேர்க்கை சதவிகிதத்தில் தமிழ்நாடுதான் முதலிடம் பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, ஆதிதிராவிடர் பிரிவினருக்கான மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய அளவில் 21.1 சதவிகிதமாகவும், தமிழ்நாட்டில் 38.3 சதவிகிதமாகவும் உள்ளது.

பழங்குடியினருக்கான தேசிய மாணவர் சேர்க்கை விகிதம் 15.4 சதவிகிதமாகவும், தமிழ்நாட்டின் சேர்க்கை விகிதம் 36 சதவிகிதமாகவும் பெற்று தொடர்ந்து தமிழ்நாடு தரவரிசையில் சிறப்புமிக்க இடத்தைப் பெற்றுள்ளது.

இந்த சாதனையை அடையும் முன் **மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திய அரிய திட்டங்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.**

- அதிக எண்ணிக்கையிலான அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்கல்வி நிறுவனங்கள் அமைத்து இருப்பது,

- மாநிலத்தில் தொலைதூரம் மற்றும் பின்தங்கிய இடங்களிலும், உயர்கல்வி நிறுவனங்கள் அமைத்து இருப்பதால் மாணவர் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு முன்னணி இடத்தைப் பெற்றுள்ளது.

- முதல் தலைமுறை பட்டதாரி கட்டணச் சலுகை, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை, விலையில்லா மடிக்கணினி, பின்தங்கிய மாணாக்கர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை, இலவச பேருந்து அட்டை மற்றும் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் முதுகலை படிக்கும் மாணவர் வரை இலவச கல்வி போன்ற முன்னோடி திட்டங்களால் இது சாத்தியமாயிற்று.

பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாணங்களான மெட்ராஸ், பம்பாய் மற்றும் கல்கத்தா ஆகியவற்றில் துவங்கப்பட்ட மூன்று பல்கலைக்கழகங்களில், முதல் பல்கலைக்கழகம் சென்னை பல்கலைக் கழகம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இப்பல்கலைக்கழகம், செப்டம்பர் 5, 1857 அன்று நிறுவப்பட்டது. முதலில் பட்டப் படிப்பிற்கான தேர்வுகளை நடத்தும் நிறுவனமாக துவங்கப்பட்டு, பின்னர் ஆய்வு அமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கற்றல் நடவடிக்கைகள் கொண்ட பல்கலைக்கழகமாக செயல்பட சென்னை பல்கலைக்கழக சட்டம், 1923 இயற்றப்பட்டு, அப்பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

இந்த பல்கலைக்கழகத்தின் அடிப்படை தத்துவம் “மரபு தொடர்ச்சியுடன் நவீன மாற்றம்” ஆகும்.

எனவே, இப்பல்கலைக்கழகத்தில் பாரம்பரிய துறைகளான மானுடவியல், சமூகவியல், மொழிக் கல்வி, மதம் தொடர்பான கல்வி, பண்டைய வரலாறு, தத்துவம், இசை, உளவியல் மற்றும் பொருளாதாரம் இவற்றுடன் சமகாலத் துறைகளான காப்பீட்டு கணிப்புத்துறை, பாதுகாப்பு மற்றும் குற்றவியல், நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், உயிர் தகவலியல், மகளிரியல் மற்றும் பொருளாதார கணித புள்ளியியல் போன்றவை கைகோர்த்து நடக்கின்றன.

இப்பல்லைக்கழகம் கல்வியில் வெளிப்படையான மதச்சார்பற்ற அமைப்பையும், அனைத்து தரப்பு கருத்துகளையும் உள்வாங்கிக் கொள்ளும் நோக்கத்துடனும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சாதாரண மக்களுக்கும் கல்வி கிடைக்க இப்பல்கலைக்கழகம் வழிவகுத்து வருகிறது.

இப்பல்கலைக்கழகம் சிந்தனையாளர்களாலும், அறிவார்ந்த அறிஞர் பெருமக்களாலும் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட பாரம்பரியத்தை கொண்டுள்ளது.

இந்த பல்கலைக்கழகத்தில் படித்த சர்.சி.வி.ராமன், டாக்டர் சந்திரசேகர் ஆகியோர் நோபல் பரிசுகளை பெற்றுள்ளனர். இங்கு திராவிட இயக்கத்தின் முன்னோடி தலைவரான பேரறிஞர் அண்ணா அவர்களும், முன்னாள் குடியரசுத் தலைவர்கள் சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களும், ஏவுகணை மன்னன்

டாக்டர் அப்துல் கலாம் அவர்களும், இந்தப் பல்கலைக் கழகத்தில் பயின்றார்கள். சென்னை பல்கலைக்கழகத்தில் பயின்ற இவர்களைத் தவிர எண்ணற்றோர் உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் முக்கிய துறைகளில் பணியாற்றி வருகின்றனர் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை பல்கலைக்கழகம்தான் 1978–1979ஆம் ஆண்டில் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சியில் முதன்முறையாக தன்னாட்சி கல்லூரிகளை ஏற்படுத்தியது. இப்பல்கலைக்கழகத்தில் 87 துறைகள் மற்றும் மையங்கள் 257 ஆசிரியர்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தில் 23 தன்னாட்சி கல்லூரிகளையும் சேர்த்து 133 இணைவு கல்லூரிகளும், 53 இணைவு நிறுவனங்களும் உள்ளன. இவற்றில் மொத்தம் 2.78 இலட்சம் மாணவர்கள் பயில்கின்றனர் என்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்கிறேன்.

மேலும், இந்தப் பல்கலைக்கழகம் தொலைதூர கல்வி நிறுவனத்தை தொடங்கி அதன் மூலம், கல்வியை தொடர முடியாத பலரை இளநிலை பட்டதாரிகளாகவும், முதுநிலை பட்டதாரிகளாகவும் உருவாக்கி வருகின்றது.

தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு 2018இன்படி, முதல் 100 இடங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 பல்கலைக்கழகங்களில், 7 பல்கலைக்கழகங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் சென்னைப் பல்கலைக்கழகம் 18ஆவது இடத்தை பெற்றுள்ளது. இந்த பல்கலைக்கழகம் வரும் ஆண்டுகளில் முதல் இடத்தைப் பிடிக்கும் என்று நான் நம்புகிறேன்.

2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் UGC நிறுவனம் சென்னை பல்கலைக்கழகத்திற்கு உயர்ந்த தரத்துடனான தன்னாட்சி நிலையை வழங்கியது, இந்த பல்கலைக்கழகம் உயர்கல்வித் துறையில் ஆற்றும் பணிக்கு ஒரு நற்சான்றாகும்.

ஆராய்ச்சி படிக்கும் மாணவர்களை இந்த பல்கலைக்கழகம் அதிக அளவில் ஊக்கப்படுத்தி வருகிறது.

மக்கள் தொகைக்கேற்ப அதிகமான கல்லூரிகளை துவக்கும் நோக்கத்தினை நிறைவேற்றத்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் சுயநிதிக் கல்லூரிகளை தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு அனுமதியளித்து, உயர் கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்.

உயர்கல்வித் துறையில் மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிகழ்த்தப்பட்ட சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

★ மாண்புமிகு அம்மா அவர்களும், அம்மாவின் அரசும் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில், குறிப்பாக, பின்தங்கிய பகுதிகளில் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியிருக்கிறது.

★ தனியார் துறையில் கல்வி, மருத்துவம், ஆராய்ச்சி ஆகியவற்றை ஊக்குவிக்க சாய் பல்கலைக்கழகம் உட்பட உயர்தர தனியார் பல்கலைக்கழகங்களை அமைத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

★ 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 10 பல்கலைக் கழகங்களில் காணொலி காட்சியுடன் கூடிய செயல்திறன் வளர்க்கும் வகுப்பறைகள், மாணவர்களின் மொழித் திறன்களை உயர்த்தி, அவர்களை உலகச் சந்தையில் போட்டியிட தயார்படுத்தும் வண்ணம், ஆங்கிலம், சீனம், பிரெஞ்ச், ஜெர்மன் போன்ற அயல்நாட்டு மொழிகளைக் கற்பதற்கான தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு மையங்கள், புகழ்பெற்ற வெளிநாட்டு பேராசிரியர்களை வரவழைக்கும் திட்டம் மற்றும் பாடத் திட்ட வளர்ச்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

★ அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களை அயல்நாடு அனுப்பி பயிற்றுவிக்கும் திட்டத்தின் மூலம் 25 மாணவர்களும், 5 பேராசிரியர்களும் இங்கிலாந்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பயில ஒருவருக்கு 15 இலட்சம் ரூபாய் வீதம் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ வேலை வாய்ப்பிற்கு ஆளுமைத் திறன், பேச்சுத் திறன், குழுப்பணித் திறன் போன்ற 60 விதமான அடிப்படை மென்திறன்களை மாணவர்களுக்கு கற்பிக்க 5 பல்கலைக் கழகங்கள் உட்பட 30 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மென்திறன் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

★ தனியார் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் வெளிநாட்டில் உள்ள கல்லூரிகளில் குறுகிய கால திறன் மேம்பாட்டு பயிற்சி பெறுவதைப் போன்று, அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களும் 15 நாட்கள் தொழில் பயிற்சி பெறும் பொருட்டு, அயல்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி இந்த ஆண்டு 99 மாணவர்கள், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற நாடுகளில் தொழில் பயிற்சி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

★ பல்கலைக்கழகங்களுக்கு ஆராய்ச்சி நிதியாக 25 கோடி ரூபாய் வழங்கப்பட உள்ளது.

★ கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் இயற்கை அறிவியல் போன்ற துறைகளில் உள்ள அறிவியல் ஆசிரியர்களை கண்டறிந்து, அவர்களில் 10 ஆசிரியர்களின் பணியினை பாராட்டி சிறந்த அறிவியல் ஆசிரியர் விருது 2018–2019ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட உள்ளது. இவ்விருதுடன் 25,000 ரூபாய் பரிசுத் தொகையாகவும் வழங்கப்பட உள்ளது.

★ கிராமப்புற மக்களின் அறிவுத் திறனை ஊக்குவித்து பல பயனுள்ள புதிய கண்டுபிடிப்புகளை வெளிக் கொணரும் விதத்தில் இரு சிறந்த கிராமப்புற கண்டுபிடிப்பாளர்களுக்கு கிராமப்புற புதுமை விருது 2018–2019ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட உள்ளது. இந்த விருதுடன் ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கப்பட உள்ளது.

மாணவர்களின் கல்வி மேம்பட மாண்புமிகு அம்மாவின் அரசு இதுபோன்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நல்லபேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே நம்நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் முல்லைகளே

என்ற பாடல் மூலம் மாணவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்றும்,

மனிதனாக வாழ்ந்திட வேணும் மனதில் வையடா
தம்பி மனதில் வையடா
வளர்ந்து வரும் உலகத்திற்கே நீ வலது கையடா–
நீ வலது கையடா
தனியுடைமைக் கொடுமைகள் தீர தொண்டு
செய்யடா – நீ தொண்டு செய்யடா

என்ற பாடல் மூலம் மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் மாணவர்கள் ஆற்ற வேண்டிய சமுதாய கடமைகள் குறித்து விரிவாக பாடியுள்ளார்கள்.

நமது நாட்டின் எதிர்காலம் மாணவர்களின் கையில் உள்ளது. நம்மை சுற்றிலும் பல சமூகப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை உணர்வுப் பூர்வமாக அணுகாமல் அறிவுப் பூர்வமாக அணுக வேண்டும்.

மாணவர்கள் படிக்கும்போது அவர்கள் கவனம் முழுவதும் படிப்பில்தான் இருக்க வேண்டும். ஆனால் சிலர் புத்தகம் தூக்கும் கையில் ஆயுதங்களை தூக்கிக் கொண்டு செல்வது மிகவும் வருத்தமாக உள்ளது. வன்முறையில் ஈடுபடும் செயலை மாணவர்கள் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாணவர்களின் எதிர்காலம் பற்றி கூறுகையில்,

"உங்களுக்கு ஒரு சமுதாய பொறுப்பு உள்ளது. எளிதாக தட்டி கழித்து விட முடியாத பொறுப்பு அது. உங்களை வளர்த்துவிட்ட நிறுவனத்திற்கும், உங்கள் மாநிலத்திற்கும், தேசத்திற்கும் உங்கள் பங்களிப்பை அளிக்கின்ற கொடைத் தன்மையை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். தேசிய கட்டுமானம் என்பது அங்கிருந்துதான் துவங்குகின்றது. மாற்றத்திற்கு வித்திடும் தூதுவர்களாக நீங்கள் உருவாவதை நான் பார்த்துக் கொண்டிருப்பேன்" என்றார்.

மாணவ, மாணவியர்கள் சகோதர மனப்பான்மையுடன் பழக வேண்டும். நமது குறிக்கோள் கல்வியை நல்ல முறையில் கற்பது. பின்னர் நாம் படித்த இந்த கல்வியைக் கொண்டு நாட்டிற்கு நல்லது செய்வது ஆகும்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாடம் நடத்தும் போதே, இடையில் வாழ்க்கையில் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள், அதனை தீர்க்க அவர்கள் பயன்படுத்த வேண்டிய நெறிகள், தேசப் பற்று, நேர்மை ஆகியவற்றைப் பற்றியும் எடுத்துரைக்க வேண்டும்.

ஆசிரியர், மாணவர், பெற்றோர் என்பது ஒரு முக்கோண வடிவம். இதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்கள் தான். அதே சமயத்தில் பெற்றோர்களும் பிள்ளைகளை பள்ளிக்கோ, கல்லூரிக்கோ அனுப்பி விட்டதாலேயே தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று நினைக்கக் கூடாது. படிக்கும் ஆர்வத்தை பிள்ளைகளிடையே ஏற்படுத்தும் அதே சமயத்தில், பிள்ளைகளை நல்ல நிலைக்கு உயர்த்த பெற்றோர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

இந்த படிப்புதான் படிக்க வேண்டும் என்று அவர்களை கட்டாயப்படுத்தக் கூடாது.

ஆர்வமாகப் படிக்க விரும்பும் படிப்பில் அடைகிற வெற்றியை ஆர்வமில்லாத படிப்பில் அடைய முடியாது.

அவர்கள் விரும்பும் படிப்பை படிக்க அனுமதித்தால் அனைத்து மாணவர்களின் வெற்றி உறுதி.

படிக்கும் எல்லா துறைகளிலும் வாய்ப்புகள் நிறைய உள்ளன. எனவே, மாணவர்கள் படிக்கும் படிப்புகள் அனைத்திற்குமே நல்ல எதிர்காலம் உள்ளது என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நமது முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள், மாணவர்களிடையே பேசும்போது, வரலாற்றின் பக்கங்களில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. உலகத்தினரை அதை படிக்க வைப்பது நமது கையில்தான் உள்ளது என்றார்.

டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் கூறிய அந்த நிலையை அடைய வேண்டுமென்றால், முதலில் நமக்கு திடமான இலட்சியம் வேண்டும். அதை அடையக்கூடிய அறிவைத் தேடிப் பெற வேண்டும். அதற்கு கடின உழைப்பு வேண்டும். பிரச்சினைகளை கண்டு பயப்படக்கூடாது. பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றிபெற வேண்டும். விடா முயற்சி வேண்டும். எல்லாவற்றிக்கும் மேலாக நல்ல ஒழுக்கம்

வேண்டும். குடும்பத்திற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் நல்லதொரு அங்கமாக இருப்பேன் என்ற உறுதி உங்களுக்கு இருக்க வேண்டும். நீங்கள் அனைவரும் சமுதாயத்தில் பொறுப்புள்ள மனிதர்களாக இருக்க வேண்டும். ஏட்டுக் கல்வி மட்டுமே வாழ்க்கைக்கு போதாது. அத்துடன் பொது அறிவையும், சமயோசித அறிவையும் வளர்த்துக் கொண்டால்தான் வாழ்க்கையில் உண்மையிலேயே வெற்றி பெற முடியும்.

தான் படித்த கல்வியை சமயோசித முறையில் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றி பெறும் வகையில் மாற்றியமைத்துக் கொண்டு, மாணவர்கள் செயல்பட வேண்டும்.

காவியங்கள் ஒருவனை உற்சாகம் உள்ளவனாக மாற்றுகிறது கணக்குகள் ஒருவனை நுண்மையானவனாக மாற்றுகிறது தத்துவ ஞானம் ஒருவனை ஆழ்ந்த பொருள் உள்ளவனாய் மாற்றுகிறது அறிவியல் அறிவு ஒருவனை விஞ்ஞானியாக மாற்றுகிறது! நீதி நூல்கள் ஒருவனை ஒழுக்கமுள்ளவனாக மாற்றுகிறது! தர்க்க நூல்கள் ஒருவனை வாதம் செய்வதில் வல்லவனாக மாற்றுகிறது! ஆனால் தன்னைத் தான் அறியும் நிலையே ஒருவனை மனிதனாக மாற்றுகிறது!

அந்த சுயசிந்தனையை தூண்டும் செயலைத்தான் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்கால தலைமுறையினரும் பேசக் கூடிய வகையில் நீடித்த சீர்திருத்தங்களை கல்வித் துறையில் நடைமுறைப்படுத்த மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உறுதி பூண்டுள்ளது. தரமான கல்வி நிறுவனங்கள் மூலம் மனித வள மேம்பாட்டை ஊக்குவித்து, உயர்தரம் வாய்ந்த கல்வியாளர்களை உருவாக்குவதும், தமிழ்நாட்டை கல்வியின் ஒரு பன்னாட்டு மையமாக உருவாக்குவதும் மாண்புமிகு அம்மாவின் அரசின் இலட்சியம் என்று கூறி கீழ்க்கண்ட இரண்டு

அறிவிப்புகளை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன்.

1. சென்னை பல்கலைக்கழகத்தில் அண்ணா பொது வாழ்வியல் மையம், திராவிட ஆய்வு மையம், இணைய தடயவியல் மற்றும் தகவல் பாதுகாப்பு மையம் ஆகியவை தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டது. அந்த வகையில், இப்பல்கலைக்கழகத்தின் 160ஆம் ஆண்டு விழா மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா ஆகியவற்றினை குறிக்கும் வகையில் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு சமூக வளர்ச்சி ஆய்வு மையம் 5 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மையத்தின் மூலம் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் முன்னோடி திட்டங்களான சத்துணவு திட்டம் மற்றும் கல்வி, சுகாதாரம், மகளிர் வளர்ச்சி தொடர்பான திட்டங்கள் குறித்து கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2. சென்னை பல்கலைக்கழகத்தில் உள்ள நூலக கட்டடம், மணிக்கூண்டு கட்டடம், ஓரியண்டல் கல்வி நிறுவன கட்டடம் மற்றும் நூற்றாண்டு கட்டடம் ஆகிய புராதன கட்டடங்களை தொன்மையை பாதுகாத்து பழுது பார்த்தல், புதுப்பித்தல் ஆகிய பணிகளுக்காக தமிழ்நாடு அரசால் 5 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாணவச் சமுதாயம் நாளைய இந்தியாவை, தமிழகத்தை ஆளக்கூடிய சமுதாயம். எதையும் சாதிக்கக் கூடிய வயது இளைஞர்களுடைய வயது. இந்த வயதில் உங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டிய நிலையிலே நீங்கள் இருக்கின்றீர்கள். பிற்காலத்திலே உங்களுடைய வாழ்க்கை சிறக்க வேண்டுமென்று சொன்னால் நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இப்பொழுது விளையாட்டாக இருந்துவிட்டால், பின்னர் உங்கள் வாழ்க்கை இருள் சூழ்ந்த வாழ்க்கையாக அமைந்துவிடும். ஆகவே, கல்லூரிப் பருவம் என்பது கிடைத்தற்கரிய ஒரு பருவம். அந்தக் கல்லூரி

வாழ்க்கையில்தான் ஒரு மாற்றம் ஏற்படும். பல்வேறு பிரிவினர்கள் ஒரே இடத்தில் சேர்ந்து படிக்கும்பொழுது பலருடைய நட்பு கிடைக்கின்றது. அவர்களுடைய அறிவு, பண்பு அத்தனையும் கிடைக்கின்றது. அத்தனையும் கிடைப்பதற்கு இந்தக் கல்லூரிதான் மையமாக விளைகின்றது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். மனிதனாகப் பிறந்தால் ஒவ்வொருவரும் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும். அப்படிக் கற்றால்தான் கல்லூரிப் படிப்பின் மூலம் அவர்களுடைய வாழ்க்கை சிறக்கும், செழிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து,

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவரின் புகழ்!

தொடர்க புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு!

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.09.2018 அன்று*
சென்னை பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு கடந்த
வைர விழா ஆண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை

மாணாக்கர்களின் தகுதியை மேம்படுத்தவும் அத்தகுதிக்கான வேலைவாய்ப்பினை அளிப்பதே அரசின் நோக்கமாகும்!

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

இந்த இனிய நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அண்ணன் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே!

மாண்புமிகு மீன்வளம் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அண்ணன் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே!

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் சகோதரர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் சகோதரர் திரு.பி.பெஞ்சமின் அவர்களே!

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர். நீலோபர் கஃபீல் அவர்களே!

மாண்புமிகு தகவல் தொழிநுட்பவியல் துறை அமைச்சர் சகோதரர் டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே!

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!

தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!

உயர்கல்வித்துறை முதன்மை செயலாளர் அவர்களே!

தொழிலாளர் நலத்துறை அரசு முதன்மை செயலாளர் அவர்களே!

தகவல் தொழில்நுட்பவியல் துறை அரசு செயலாளர் அவர்களே!

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் அவர்களே!

மற்றும் அரசு உயர் அலுவலர்களே!

தொழில் நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களே!

நிர்வாக இயக்குநர்களே மற்றும் உயர்நிலை அலுவலர்களே,!

உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வருகை தந்துள்ள பல்வேறு கல்லூரி நிறுவனர்களே! கல்லூரிகளின் முதல்வர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலை நோக்கு பார்வை–2023இல் தமிழ்நாட்டிலுள்ள மாணாக்கர்களின் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் நோக்கில் செயல் திறன் மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை அறிவித்திருந்தார்கள். இதை முன்னெடுத்து செல்லும் வகையில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் நடக்கும் அம்மாவின் அரசு “பொறியியல் பட்டதாரிகளுக்கான செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வு கூட்டமும்” தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கை–2018ஐ வெளியிடும் நிகழ்ச்சியும் இன்று இங்கே நடைபெறுகிறது. அதை தலைமையேற்று நடத்தி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் Madras Institute of Technology வளாகத்தில், திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையமும் மற்றும் ஐந்து பொறியியல் மற்றும் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில், தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களும் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறுவப்பட்டுள்ளன.

M/s.SIEMENS மற்றும் DESIGN TECH LTD என்ற தொழில் நிறுவனங்களுடன் இணைந்து 546 கோடியே 84 இலட்சம் ரூபாய் நிதிமதிப்பீட்டில், இச்சிறப்பு பயிற்சி மையங்கள் வாயிலாக தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்வி உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல்,

தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழில் திறன்களை மாணாக்கர்களிடையே மேம்படுத்துதல், வேலைவாய்ப்பு பெறுதலுக்கான திறனை அதிகரிக்கச் செய்தல், தொழிற் சாலைகளின் தற்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு திறனை மேம்படுத்துதல் ஆகிய முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பட்டய மற்றும் பட்ட வகுப்புகளில் பயின்று வரும் தொழில் நுட்ப மாணவர்களுக்கும் தொழிலகங்களிலிருந்து கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்களுக்கும், திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து, அவர்களுக்கு எளிதாக வேலை வாய்ப்பு பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

“தனியார் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களின் திறன் மேம்படும் வகையில், வெளிநாட்டில் உள்ள கல்லூரிகளில் குறுகிய கால பயிற்சி பெற அந்த கல்லூரிகள் வகை செய்வதை போன்று, அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கும் அந்த அரிய வாய்ப்பு கிடைத்திடும் வகையில் அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் 15 நாட்கள் தொழில்நுட்ப பயிற்சிபெறும் பொருட்டு வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிற்சி பெற அனுப்பி வைக்கப்படுவர்”, என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 23.08.2016 அன்று சட்டப்பேரவையில் சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் அறிவித்தார்கள். இத்திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மாணாக்கர்கள் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் 15 நாட்கள் தொழிற் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு, தங்கள் அறிவுத் திறனை உலகளவில் மேம்படுத்துவதற்கும், சர்வதேச அளவில் தொழில் நுட்ப கல்வியில் ஏற்பட்டு வரும் வளர்ச்சியினை அறியவும், அவர்களின் ஆய்வுத் திறனை வளர்க்கவும் வழிவகை செய்தார்கள்.

அந்த வகையில் 2016–2017 மற்றும் 2017–2018 கல்வி ஆண்டுகளில் 191 மாணாக்கர்கள், 15 நாட்களுக்கு ஸ்பெயின்,

தைவான், ஜப்பான், மலேசியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப பயிலகங்களில், தொழில்நுட்ப பயிற்சி பெற அனுப்பி வைக்கப்பட்டார்கள். இப்பயிற்சிக்காக, ஆண்டொன்றிற்கு 100 மாணாக்கர்களுக்கு 1.5 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. இந்த பயிற்சி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள 7 கல்வி நிறுவனங்களில் தொழில் நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டம் – III மூலம், இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு வழிகாட்டியாக செயல்பட தமிழ்நாடு தெரிவு செய்யப்பட்டு அக்கல்வி நிறுவனங்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது.

மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு புதிய கல்லூரிகளை பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கி வருவதாலும், முதல்தலைமுறை பட்டாதாரிகளுக்கு கல்வி கட்டண சலுகை வழங்கி வருவதாலும், விலையில்லா மடிக்கணினி, பின்தங்கிய மாணவர்களுக்கான உதவித்தொகை போன்ற எண்ணற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தியதாலும், தமிழ்நாட்டில் உயர்கல்வியில் மாணாக்கர் சேர்க்கை விகிதம் 48.6 சதவிதம் உயர்ந்துள்ளது. இது தேசிய சேர்க்கை விகிதமான 25.8 சதவிகிதத்தை விட உயர்ந்ததாகும்.

தேசிய அளவில் ஆராய்ச்சிப் படிப்பில் தமிழ்நாடு தான் முதன்மையான இடத்தில் உள்ளது என மத்திய அரசின் MHRD அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 2017–2018ஆம் ஆண்டில் 29,778 ஆராய்ச்சியாளர்கள் கலை, அறிவியல், பொறியியல், மருத்துவம், நிர்வாக மேலாண்மை ஆகிய துறைகளில் பி.எச்.டி, ஆராய்ச்சி படிப்பில் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் பல்வேறு பொறியியல் சார்ந்த துறைகளில் 6,914 மாணாக்கர்கள் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரி மாணாக்கர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களை பயன்படுத்தி தொழிற்சாலைகளுக்கு தேவையான ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளவும், திறன் மேம்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கும் உரிய உதவிகள் மற்றும் ஆலோசனைகளை நல்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இம் மாணவர்களுக்கான பயிற்சியை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. படித்த மாணாக்கர்கள் அனைவருக்கு அவர்களுடைய தகுதியை மேம்படுத்தவும், அத்தகுதிக்கு உரிய வேலை வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்பது மாண்புமிகு அம்மாவின் அரசின் நோக்கமாகும்.

On behalf of Government of Tamilnadu, I am happy to welcome all the captains of Industries, Experts, Heads of all Technical Institutions for this meeting.

The Government is equipping the state with sufficient and balanced work force, by conducting large number of programme under Skill Development Programme.

The State of Tamil Nadu which is known for educational infrastructure produces quality graduates and diploma holders, through various Universities, colleges, polytechnics and ITIs. Every year more than 1 lakh engineering graduates and more than 1 lakh diploma holders are passing out with degree's and diploma's from 509 Engineering Colleges and 522 polytechnic colleges and they are placed for employment through campus interviews conducted in Government

Colleges and Government-Aided Colleges and by the Tamil Nadu State level placement programme.

I request you all to give your valuable suggestions to consolidate and bring out a new path to increase placement opportunities for the Engineering Graduates in Tamil Nadu.

I am also happy to launch the Information Communication Technology Policy, 2018.

I believe that this policy will address the aspirations of investors, especially IT and ITEs companies, MSMEs, Start-ups etc., by way of provision of Standard Administrative Incentives, Fiscal Incentives, Capital Subsidies, Tax Exemptions, Special incentives, etc., Further, it also has provisions for incubating Startups and creation of Research Parks. Awards for promoting Green IT industry and Single Window Facilitation for early clearance from the concerned agencies are also part of this Policy.

I am happy to inform that this Government would be conducting the Second Global Investors Meet (GIM) in January, 2019 at Chennai to attract investments in various Sectors.

I would appeal to the Captains of industries present here to extend your continued support by way of fresh investments in industries and MSME sectors in the State. I hope the investments made would automatically lead to speedy development, which would contribute in a big way to further increase the GDP of the State and thereby the standard of living of the people of Tamil Nadu.

இந்த இனிய விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க !

வளர்க மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் புகழ்!

தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி!

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***10.09.2018** அன்று நடைபெற்ற பொறியியல் பட்டதாரிகளுக்கான*
செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு மேம்படுத்துதல்
கலந்தாய்வுக் கூட்டம் மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல்
*கொள்கை **2018** வெளியீடு நிகழ்ச்சியில் ஆற்றிய உரை*

நவீன தொழில்நுட்பத்திற்கு ஈடுகொடுக்குமளவிற்கு தமிழின் சொல்வளத்தை காக்க சொற்குவை திட்டம் அறிவிக்கப்பட்டது!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

திராவிட உணர்வோடும், மொழிப்பற்றோடும் இந்த இனிய விழாவில் குழுமியிருக்கின்ற உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

புனித பீட்டர் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் திராவிட ஆய்வியல் துவக்க விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பான

கருத்தை எடுத்துரைத்த மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த சிறப்பு நிகழ்ச்சிக்கு அடித்தளமாக விளங்கிய மாண்புமிகு நாடாளுமன்ற துணைத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் மு.தம்பிதுரை அவர்களே!

மிகச் சிறப்பாக, அழகாக பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்து அமர்ந்திருக்கின்ற கேரள அரசின் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. என்.கே.பிரேமசந்திரன் அவர்களே!

நிகழ்ச்சியிலே ஆழமான கருத்தை இங்கே பதிவு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சத்பதி அவர்களே! நிகழ்ச்சியிலே பங்கு பெற்று கருத்துக்களை வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முகமது பஷீர் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பான கருத்துக்களை வழங்கிய மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. குபேந்திர ரெட்டி அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

திராவிட இயல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநருமான திரு. எ. ரபி பெர்னார்ட் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற புனித பீட்டர் நிறுவன அறங்காலர் அவர்களே!

வருகை தந்துள்ள பேராசிரியப் பெருமக்களே, மாணவர்களே, மாணவிகளே, உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் பதிவாளர் முனைவர் எல்.மகேஷ்குமார் அவர்களே!

வருகை தந்துள்ள பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த சிறப்பான விழா நடைபெறுவதற்கும், நாம் அனைவரும் இங்கே எழுச்சியுடன் ஒன்று சேர்ந்து இவ்விழாவில் பங்கேற்பதற்கும் காரணமானவர் யார் ?

நம்மைப் போன்று எண்ணற்றோர் எழுச்சியும், ஏற்றமும் பெறுவதற்கு விதைபோட்டு, நீர்ஊற்றி, இயக்கமாய் வளர்த்து எடுத்தவர் யார் ? நம்மை எல்லாம் இப்பாதைக்கு அழைத்து வந்த அறிவுலக ஆசான், தமிழ்த்தாயின் அன்பு மகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் அல்லவா! அன்னாருடைய பிறந்த நாளான இன்று, திராவிட ஆய்வியல் நிறுவன துவக்க விழா நடைபெறுவது மிக்க பொருத்தமானதும், சிறப்பானதும் ஆகும்.

அதில் நான் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இருபதாம் நூற்றாண்டு – தமிழ் நாட்டிலும், பிறகு தென்னகம் முழுவதிலும் ஏற்படுத்திய, ஈடு இணை இல்லாத சமூக புரட்சிக்கு களப்பணி ஆற்றிய நம் வழிகாட்டி, ஆசான், அன்பு அண்ணன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஏற்றி வைத்த கொள்கை தீபத்தை வாழ்க்கை என்னும் தொடர் ஓட்டத்தில், கரங்களில் ஏந்தி ஓடும் வீரர்களாக இங்கே நாம் சேர்த்திருக்கிறோம். இனமும், மொழியும் காக்கப்படுவதற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அரும்பணிகளைப் பற்றிய ஆய்வுகளையும் திராவிட இயல் ஆய்வுநிறுவனம் மேற்கொள்ள வேண்டும் என்று உரிமையோடு கேட்டுக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பொதுவாழ்வு காலத்தில், இளம் சமூகத்தினரிடம் இருந்த இனப் பற்றும், மொழிப்பற்றும் இன்றைக்கும் நிலவிட வேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்ட அண்ணாவின் தம்பியாக, இந்த கருத்தினை திராவிட இயல் ஆய்வு நிறுவனத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆதிசங்கரர் வட நாட்டிற்கு பயணம் செய்த போது, அங்கே இருந்தவர்கள், “நீங்கள் யார் ?” – என கேள்வி கேட்ட போது, அவர், தன்னை திராவிட சிசு என முழங்கியதாக வரலாறு கூறுகிறது.

திராவிடம் என்றால் ‘திரவம்’ மற்றும் ‘விடா’ என்ற சொற்களின் சங்கமம் எனவும், அது மூன்று கடல்கள், அதாவது – வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் மற்றும் அரபிக் கடல் சந்திக்கும் இடம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

திராவிட மொழிகளின் தாயகமாக விளங்குவது தமிழ் மொழி. – ‘தமிழம்’ என்பதுதான் காலத்தால் மாறி மாறி கடைசியில் ‘திராவிடம்’ எனத் திரிந்ததாக மொழிஞாயிறு தேவநேயபாவாணர் கூறுவார்.

தென்னிந்தியாவின் மற்ற திராவிட மொழிகளின் இலக்கியங்கள் கி.பி.8ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தான் தோன்றியிருக்கிறது. ஆனால், தமிழ் இலக்கியத்திற்கு 30 நூற்றாண்டுக்கு மேற்பட்ட ஆதார வளம் உள்ளது. அத்தகைய பழமையும், வளமையும் கொண்ட மொழி தமிழ் மொழி. தமிழ் மொழி மிகவும் மூத்த மொழி, முதன்மையான மொழி.

எந்த மொழியின் துணைகொண்டும் இயங்காமல், தனி சொற்களைக் கொண்டு தனித்து இயங்கக்கூடிய ஒரு தனி மொழி என்பதை ஆராய்ச்சி மூலம் நிரூபிக்க வேண்டிய கடமையும், அவசியமும் தமிழர்களுக்கு ஏற்பட்டது. திரு.சுவாமிநாத அய்யர் முதற்கொண்டு திரு. ச. அகத்தியலிங்கம் வரை பல அறிஞர்கள் திராவிட மொழிகளைப் பற்றி ஆய்வு செய்தார்கள்.

தென்னிந்திய மொழியை ஆய்வு செய்த ஐரோப்பியர்களில் குறிப்பிட்ட ஒரு சிலரில், 1816ஆம் ஆண்டு சென்னை மாவட்ட ஆட்சியராக இருந்த திரு.பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ் முதற் கொண்டு, ஜி.யு.போப் வரை பலரும் திராவிட மொழிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்தார்கள்.

ஆனாலும், டாக்டர் ராபர்ட் கால்டுவெல் 1856ஆம் ஆண்டு திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதி, தமிழ் மொழி தனித்து இயங்கக் கூடிய தன்மை உடையது என்பதை உலகுக்கு உணர்த்தினார். பெயர்களில் உயர்திணை அஃறிணை என்று திராவிட இலக்கண ஆசிரியர்கள் வகுத்த முறை உலகில் வேறெந்த மொழிகளிலும் இல்லையென்று ராபர்ட் கால்டுவெல் போற்றியிருப்பது நமக்கு பெருமையல்லவா ?

குறிப்பாக, தமிழ் மொழியை ராபர்ட் கால்டுவெல் அவர்களும், தெலுங்கு மொழியை C.D. பிரௌன் அவர்களும், கன்னட மொழியை F. கிட்டல் அவர்களும், மலையாள மொழியை டாக்டர் கென்டர்ட் அவர்களும் ஆராய்ந்தனர். மொழி ஆராய்ச்சியாளர்கள், ஆராய்ச்சிசெய்து கண்ட உண்மை என்னவென்றால், பழைய தமிழ்மொழி – வேங்கடமலைக்கு வடக்கே தெலுங்காகவும், மேற்கே கன்னடமாகவும், சேர நாட்டில் மலையாளமாகவும் திரிந்தன என்பதுதான். திரு. பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ் அவர்கள் திராவிட மொழித் தொகுப்பு உலகத்திலேயே முக்கிய மொழித் தொகுப்பாக விளங்குகிறது எனவும், அத்தொகுப்பில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, கோன்டிஸ், ப்ராவி, குடகு உட்பட பல மொழிகள் இடம் பெற்றுள்ளன எனவும் கூறியுள்ளார்.

இம்மொழிகள் பேசப்பட்ட இடங்களில் சோழர்கள், பாண்டியர்கள், சேரர்கள், ராஷ்டிரகூடர்கள் பல்லவர்கள், விஜயநகரர்கள், சாளுக்கியர்கள், நாயக்கர்கள் உட்பட பல பேரரசுகள் கோலோச்சின. சோழர்களின் திராவிட சிற்பக் கலைக்கு முத்தாய்ப்பாக விளங்குகின்ற

‘நடராஜர் சிலை’ உலகளவில் இந்து மதத்திற்கே ஒரு அடையாளமாக விளங்குவதோடு, குறிப்பாக அண்ட சராசரம் எவ்வாறு உருவானது என ஆராய்ச்சி செய்யும் ஜெனிவாவிலுள்ள CERN என்ற ஐரோப்பிய துகள் இயற்பியல் ஆராய்ச்சி மையத்தின் முகப்பில் வீற்றிருப்பது, திராவிட கலைக்கே கிடைத்த தனிப் பெருமையாகும்.

வேதங்களில் மிகவும் தொன்மையானது ரிக் வேதமாகும். அந்த ரிக் வேதத்திலேயே, திராவிட மொழிகளிலிருந்து பல சொற்கள் எடுத்து பயன்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து திராவிட மொழிகளின் தொன்மையும், பெருமையும் புலப்படுகிறது. மேலும், உலகில் மிகவும் பழமையான நாகரிகமாகக் கருதப்படும் சிந்து சமவெளி நாகரிகமே திராவிட நாகரிகமாகும் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

குறிப்பாக, 2007ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் சிந்துசமவெளி எழுத்துக்கள் பொறித்த கற்கோடாரி ஒன்று கிடைத்துள்ளது. சமீபத்தில் காவேரி கழிமுகப் பகுதியில் நடந்த அகழ்வாராய்ச்சியில், பத்துக்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த முதுமக்கள் தாழிகளில் காணப்பட்ட சில குறியீடுகள், சிந்து சமவெளியிலுள்ள ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் கண்டு எடுக்கப்பட்ட குறியீடுகளைப் போன்றே உள்ளன என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்து இருக்கின்றனர்.

இதன்மூலம் திராவிட நாகரிகமும், திராவிடமொழிகளும் மிக மிகத் தொன்மையானது என்பதை நாம் அறிகிறோம். திராவிட மொழிகளில் திருந்திய மொழிகளாக அறியப்பட்ட 6 மொழிகளில், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய 4 மொழிகள் பெருமொழிகள் என அழைக்கப்பட்டன.

இந்த 4 மொழிகளும் இலக்கண வகையில் ஒரே பண்புகளைக் கொண்டுள்ளன என்றும்; ஒலியியல், சொல்லியல், தொடரியல், சொற்களஞ்சியம், பொருண்மை ஆகியவற்றில் ஒத்து இருக்கின்றன

என்றும் கருதப்பட்டது. மொழி என்பது – பண்பாட்டின் அடித்தளமாகவும் அடையாளமாகவும் விளங்குகிறது.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு பண்பாடு இருக்கிறது. சிந்து சமவெளி நாகரிகம், மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் ஆகியவற்றை ஏற்படுத்தி, சிந்து, பஞ்சாப் பள்ளத்தாக்குகளில் திராவிடர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தார்கள் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

தகவல் தொழில் நுட்பம் இல்லாத காலத்திலேயே திராவிட மொழி, பண்பாடு, கலாச்சாரம் உலக அறிஞர்களை கவர்ந்திருக்கிறது என்றால், தகவல் தொழில் நுட்பத்துடன் தம்மை இணைத்துக் கொண்ட நமது திராவிட மொழிகளும், திராவிடர்களும் எந்த அளவிற்கு உலகம் முழுவதும் பரவி வாழ வேண்டும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

திராவிடர்களாகிய நாம், மொழியாலும், நாகரிகத்தாலும், பண்பாட்டாலும், உணர்வாலும் ஒன்று பட்டிருக்கிறோம் என்று பெருமைப்பட்டு கொள்வதை மட்டுமே போதுமானதாக நான் கருதவில்லை. அதையும் தாண்டி நமது திராவிட மாநிலங்களிலுள்ள இயற்கை கொடைகளான, மிகை நீரையும், மிகை மின்சாரத்தையும், உற்பத்தியாகின்ற உணவையும், மாநிலத்திற்கு மாநிலம் பகிர்ந்து உதவ வேண்டும். இவை தான் திராவிடத்தின் உண்மையான ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

திராவிட மாநிலங்களுக்கிடையே பொதுவான இயற்கை வளங்களை பகிர்ந்து கொள்ளும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இப்போது துவங்கப்பட்டிருக்கின்ற திராவிட இயல் ஆய்வு நிறுவனம் தனது பணியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் இந்த நிறுவனம் துவங்கியதற்கான நோக்கம் முழுமையாக வெற்றி பெறும்.

தென்னகத்தைச் சார்ந்த நாம், மொழி குடும்பத்தாலும், பண்பாட்டாலும் ஒத்த உணர்வு கொண்டவர்கள். நாம் அனைவரும் திராவிடம் என்ற ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதை நமது ஒற்றுமையின் மூலமே உலகுக்கு உணர்த்த வேண்டும். அதற்கு எத்தனை வழிமுறைகள் உண்டோ, அதையெல்லாம் நாம் கையாள வேண்டும். அதற்கு ஒரு உதாரணத்தை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகின்றேன்.

தீபகற்ப நதிகள் இணைப்பு திட்டத்தின் கீழ் மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவேரி, வைகை, குண்டாறு மற்றும் பம்பா அச்சன்கோவில் வைப்பாறு நதிகளை இணைக்கும் திட்டங்களை செயல்படுத்த திராவிட நாடுகளைச் சார்ந்த நாம் ஒன்றிணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னுதாரணமாக மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் சென்னைக்கு கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை, அப்போதைய ஆந்திர மாநில முதலமைச்சராக இருந்த திரு. N.T. ராமாராவ் அவர்களின் ஒத்துழைப்போடு செயல்படுத்தினார்.

இது திராவிட மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை உணர்விற்கு ஒரு உதாரணமாக அமைந்தது என்பதை பெருமையோடு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது தமிழ்நாட்டிற்குள் ஓடும் நதிகளைக் கொண்டு நதிநீர் இணைப்பு திட்டத்தை சாத்தியப்படுத்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எப்படி செயல்படுகிறதோ, அதே போல் தென்னக நதிகளை இணைக்கும் திட்டத்திலும் அண்டை மாநிலங்களோடு தமிழ்நாடும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் என்று நான் உறுதியாக கூறுகின்றேன்.

இன்று தொடங்கப் பெற்றிருக்கின்ற திராவிட இயல் ஆய்வு நிறுவனம், திராவிட கலாச்சாரம், பண்பாடு, மொழியின்

வளம் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வை இளைய தலைமுறையினரிடையே ஏற்படுத்த வேண்டும்.

அதற்காக பேரறிஞர் அண்ணாவின் படைப்புகள் மற்றும் தந்தை பெரியாரின் சமூக நீதி சிந்தனைகளை மாணவர்களிடையே பரப்ப வேண்டும்.

திராவிட உயர்வுகளையும், உணர்வுகளையும் மக்களிடையே பிரதிபலிக்க, இந்த நிறுவனம் ஒரு செய்தி இதழை தொடங்க வேண்டும். திராவிடம் சார்ந்த புரிதல் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காக பள்ளி, கல்லூரி மாணாக்கர்களிடையே பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டிகளை இந்த நிறுவனம் நடத்த வேண்டும்.

மாதம் இருமுறை வெவ்வேறு ஊர்களில் திராவிடர்களிடையே ஒற்றுமையையும், உணர்வையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பன்னாட்டு அறிஞர்கள் கலந்து கொள்ளும் வகையில் கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.

உலகத்தின் பல பகுதிகளில் உள்ள திராவிட ஆராய்ச்சி மையங்களிலிருந்து வெளிவரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை இந்த நிறுவனம் மாணவர்களிடையே கொண்டு செல்ல வேண்டும்.

பெண்கள் விடுதலைக்கும், பெண்களின் பாதுகாப்பிற்கும் இந்த நிறுவனம் அரணாக இருப்பதுடன், எழுச்சிக்கான சிந்தனைகளை விதைக்க வேண்டும்.

இவை போன்ற செயல்களால், இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நோக்கம் நிச்சயம் வெற்றியடையும்.மொழிதான் ஒரு நாட்டின் பண்பாட்டையும், கலையையும் உலகுக்கு தெரிவிக்கும் வழியாகும்.

திரைப்பாடல்கள் மூலம் மக்களுக்கு பல பாடங்களைப் புகட்டிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்;

சிறுவர்களுக்கு அறிவுரை கூறும் ஒரு பாடலில்

“விழிபோல எண்ணி
நம் மொழி காக்க வேண்டும்”

என்ற பாடல் வரி மூலம் மொழிப் பற்றின் அவசியத்தை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துரைத்து உள்ளார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

நாட்டை ராணுவ வீரர்கள் காப்பதைப் போல – நமது பண்பாட்டை நமது தாய்மொழிதான் காத்து வருகின்றது. மொழிப் பற்றுதான், மொழி பாதுகாப்பிற்கும், வளர்ச்சிக்குமான உணர்வை நமக்கு ஏற்படுத்தும். மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து இன்றைய மக்கள் ஆட்சிக் காலம் வரை மொழியை வளர்த்த ஆட்சியாளர்கள்தான் மக்களால் போற்றப்படுகிறார்கள்; நிலைத்து வாழ்கிறார்கள்.

அந்த வகையில் தாய் மொழியை பாதுகாப்பதில் மற்ற நாட்டினருக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தஞ்சை பல்கலைக் கழகத்தை நிறுவியவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதற்கு புத்துணர்ச்சியும், புதுப் பொலிவும் கொடுத்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மதுரையில் உலகத் தமிழர்களை ஒரே குடையின் கீழ், ஒருங்கிணைக்கும் வகையில் உலகத் தமிழ் சங்கத்தை நிறுவ ஆணையிட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

அதனை 33.25 கோடி ரூபாய் செலவில் 14.15 ஏக்கர் நிலப்பரப்பில் பெருந்திட்ட வளாகமாக கட்டி தொடங்கி வைத்தவர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சீனம் மற்றும் அரபு மொழிகளில் திருக்குறள், மகாகவி பாரதியார்

மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களும், திருக்குறளை கொரிய மொழியிலும், ஆத்திசூடி – சீனத்திலும் மொழி பெயர்க்கப்பட்டன.

மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச் சென்ற தமிழ் பணியை தலையாய பணியாகக் கருதி மாண்புமிகு அம்மாவின் அரசு மிகக் குறுகிய காலத்தில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அவற்றையெல்லாம் முழுமையாக குறிப்பிட நேரம் போதாது. எனவே , நேரமின்மையின் காரணமாக தென்னகத்தைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுமியிருக்கின்ற இந்த விழாவில் மிக முக்கியமான திட்டங்களை மட்டும் சுட்டிக் காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தமிழர்களுடைய கலை, இசை, பண்பாடு, சித்த மருத்துவம், கட்டடக் கலை, அறிவியலுடன் கூடிய ஆன்மிக சிந்தனை ஆகியவற்றை உலகம் முழுவதும் பரப்பும் வகையில் உலகப் புகழ் பெற்ற ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க, தமிழ்நாடு அரசு 10 கோடி ரூபாய் வழங்கி உள்ளதை இங்கே நான் பெருமையுடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள நவீன தொழில் நுட்பத்திற்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு பல புதிய புதிய சொற்களை உருவாக்கினால்தான் தமிழின் சொல் வளத்தை காக்கவும், வளர்க்கவும் முடியும் என்பதை கருத்தில் கொண்டு 28.06.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் விதி எண் 110–ன் கீழ், ‘சொற்குவை’ என்ற ஒரு திட்டத்தினை நான் அறிவித்தேன்.

இந்த சொற்குவை திட்டத்தின் மூலம் சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களை தொகுத்து, நிரல்படுத்தி, அவற்றை இணையதளம் வழியாக, பொது வெளியில் உலகெங்கும் உள்ள தமிழறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், மொழியியல் ஆராய்ச்சியாளர்களும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் வெளியிடப்பட உள்ளது.

இதற்காக ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் தொடர் செலவினமாக மாண்புமிகு அம்மாவின் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்பதை இங்கே நான் பெருமையாக கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, தமிழுக்கு தொண்டாற்றும் தமிழறிஞர்களை ஊக்கப்படுத்த, முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு 65 விருதுகளை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகின்றது. தாய்மொழியின் மீது ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு, கவிதைப் போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தமிழில் வெளிவரும் சிறந்த பல துறை நூல்களுக்கு பரிசுகள் மற்றும் நூல்களை வெளியிட நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எனவே, திராவிடம் என்பதை தாரக மந்திரமாக்கிக் கொண்டு, நாம் திராவிடர்கள், நம் மொழி திராவிட மொழி, திராவிடத்தால் தென்னக நாடுகளைச் சார்ந்த நாம் ஒரே குடையின் கீழ் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தோம், வருகிறோம், வருவோம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், இந்த திராவிட ஆய்வியல் நிறுவனம் திறம்பட உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில், இந்த சிறப்பான விழாவை ஏற்பாடு செய்த நல்ல உள்ளங்களை நான் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். அண்டை மாநிலங்களிலிருந்து வருகை தந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் விடை பெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.09.2018 அன்று*
திராவிட ஆய்வியல் நிறுவன தொடக்க விழாவில் ஆற்றிய உரை

மாண்புமிகு அம்மாவின் அரசு மக்கள் நலன் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறது!

மாண்புமிகு அம்மா என்னும் தெய்வத்தை வணங்கி,

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மக்கள் நல்லுறவு மையம் பலநோக்கு கூட்ட அரங்கு திறப்பு விழா மற்றும் புதிய கட்டடங்கள் திறப்பு விழா, புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுவிழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சிக்கு வரவேற்புரை நிகழ்த்திய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பொன்னையா அவர்களே!

குறைந்த நேரமே பேசினாலும், அற்புதமான கருத்துக்களை பேசி அமர்ந்துள்ள மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார் அவர்களே!

முன்னிலையுரை ஆற்றி இந்த மாவட்டத்திலே நடக்கின்ற அத்தனை நிகழ்ச்சியிலும் பங்கு பெற்று, மக்களுக்கு உழைக்கின்ற மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின் அவர்களே!

இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற திருமதி அமுதா, இ.ஆ.ப., அவர்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி மரகதம் குமரவேல் அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.சோமசுந்தரம் அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.வைகைசெல்வன் அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களே!

சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களே, முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் மரியாதைக்குரிய வாலாஜாபாத் கணேசன் அவர்களே!

மரியாதைக்குரிய மைதிலி திருநாவுக்கரசு அவர்களே! மரியாதைக்குரிய ஜே. பாலாஜி அவர்களே, மரியாதைக்குரிய வெங்கட்ராமன் அவர்களே!

மரியாதைக்குரிய திருக்கழுக்குன்றம் ஆறுமுகம் அவர்களே, வருகை தந்துள்ள அரசு உயர் அதிகாரிகளே, கழகத்தினுடைய முன்னோடி நிருவாகிகளே, முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிருவாகிகளே, வருகை தந்துள்ள அரசு அலுவலர்களே, பெரியோர்களே! தாய்மார்களே! நலத்திட்ட உதவிகள் பெறவுள்ள பயனாளிகளே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சி மாநகரில் அன்னாரின் 110ஆவது பிறந்த நாள் விழா நிகழ்ச்சியினைத் தொடர்ந்து நடைபெறும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம், பட்டு நெசவுத் தொழிலுக்கு பெயர் பெற்ற மாவட்டமாகும். இந்த மாவட்டத்தினை கோவில்கள் நிறைந்த மாவட்டம் என்றும் அழைப்பார்கள் .

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தனது பிறந்த ஊரான காஞ்சிபுரத்திற்கு மாவட்டத்தின் தலைநகரை மாற்றினார்.

ஜூலை 1, 1968ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகராக செயல்பட்டு வந்தது.

பெரும்பாலான புனித நகரங்கள் ஆற்றின் கரையில் அமைந்துள்ளதைப் போன்றே, காஞ்சிபுரமும், வேகவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது இந்த நகரத்திற்கு சிறப்புமிக்கது .

நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும், பாடல்பெற்ற தலங்களில் காஞ்சிபுரம் முக்கியமானதாகும். அப்பர், சுந்தரர் மற்றும் சம்பந்தர் காஞ்சிபுரம் ஏகாம்பரீஸ்வரர் மீது திருமுறைகள் பாடியுள்ளனர்.

மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில் இத்தலத்தைப் பற்றி பாடியுள்ளார்.

சுற்றுலாத் தலமான மாமல்லபுரம், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் ஆகியவை இந்த மாவட்டத்திற்கு மேலும் புகழ் சேர்க்கின்றன.

இங்கு அதிக அளவில் நடைபெறும் நெசவுத்தொழிலைப் பற்றி இது குறிப்பிடுவதாகும். இங்கு தயாரிக்கப்படும் பட்டுப் புடவைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. பரம்பரை பரம்பரையாகப் பட்டுப் புடவைகள் நெய்யும் நெசவாளிகள் இங்கு வாழ்கிறார்கள். அவர்களுக்கென்று ஒரு தனி சிறப்பு இந்த காஞ்சிபுரத்திற்கு இருக்கின்றது. எங்கே போய் எடுத்தாலும், காஞ்சிபுரத்தில்தான் பட்டுப்புடவை எடுக்க வேண்டுமென்று பெண்கள் ஆர்வத்தோடு இருக்கின்ற பகுதி இந்த காஞ்சிபுரம் நகரம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், தனது பிறவியினை நல்ல முறையில் பயன்படுத்தி, மூடர்களின் சொற்களுக்கு செவி சாய்க்காமல் பகுத்தறிவுடன் ஆராய்ந்து பார்த்து, மக்கள் நல பணிகளை ஆற்றி, கோடிக்கணக்கான மக்கள் அவர் மறைந்த பிறகும் இன்றளவும் போற்றும் தலைவராக உயர்ந்து நிற்கின்றார்.

“மக்கள் கொடுக்கும் வரிப்பணம் மக்களின் நல்வாழ்விற்காக பயன்பட வேண்டும். மக்களுடன் கூடியிரு. மக்களுடன் பழகு; அவர்களுடன் வாழ்; அவர்களுக்காக திட்டம் தீட்டி செயல்படு. மக்களிடம் நீ போ – செய்” என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை எந்த வகையில் நிறைவேற்ற முடியுமோ, அந்த வகையில் நிறைவேற்றிக் காட்டினார்கள் .

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் வழியில் மாண்புமிகு அம்மா அவர்களும், அவர்கள் வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசும் மக்களின் நலன் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல் இது வரை பல்வேறு பிரச்சினைகளில் மக்களின் நலன் காக்கும் வகையில் பல முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

- காவேரி பிரச்சினையில் சட்டரீதியான தீர்வு காணப்பட்டது ,
- மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க உத்தரவு பெற்றது,
- தொடர்ந்து மின்மிகை மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது,
- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியதும்,
- சிறு நகரங்களுக்கு விமான போக்குவரத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது,
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் கடனை தமிழ்நாடு அரசே ஏற்கும் விதமாக உதய் திட்டத்தின் சேர்ந்து அதை இன்றைக்கு படிப்படியாக கடனை குறைத்து வருகிறது.
- தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட, நீரா பான உற்பத்திக்கு அனுமதி வழங்குதல்,
- வேளாண் பெருமக்களுக்கான பல்வேறு மானியத் திட்டங்கள் அளித்தல்,
- மண் வளத்தினைப் பாதுகாப்பதற்கும், நீர்நிலைகளை பராமரிப்பதற்குமான குடிமராமத்துத் திட்டம் அறிமுகப்படுத்துதல்,
- தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் பாலங்கள் மற்றும் சாலை வசதிகளை ஏற்படுத்துதல்,
- ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம் நகரம், பேரூராட்சி பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு சொந்தமாக வீடு கட்டுகின்ற திட்டத்தையும் அம்மாவினுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

- இப்படி பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டு இருக்கின்றது.
- பிளாஸ்டிக் ஒழிப்புக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு அடுத்த ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்த மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சாதனைகள் சிலவற்றை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

இம்மாவட்ட மக்களின் நெடுநாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையம் கீழ்கதிர்பூர் கிராமத்தில் அமைக்க 38 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணி துவக்கப்பட உள்ளது.

மழைநீர் கடலுக்கு செல்வதை தடுக்கும் வகையில் இம்மாவட்டத்தில் 7 தடுப்பணைகள் கட்ட நான் அறிவித்து, கட்டுமானப் பணிகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஏனென்றால், பெய்கின்ற மழைநீர் வீணாக கடலில் கலக்கின்றது. ஒரு சொட்டு நீர் கூட வீணாகக் கூடாது என்பதற்காக பெய்கின்ற மழை நீர் சேமித்து வைக்கின்ற அளவிற்கு, இன்றைக்கு இந்த மாவட்டத்தில் 7 தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று சுட்டிக்காட்டுகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 2 கோடி ரூபாய் செலவில் மக்கள் குறை தீர்க்கும் நாள் நடத்துவதற்கு, சுமார் 300 நபர்கள் அமரக்கூடிய அளவில் “பொதுமக்கள் நல்லுறவு மையம்” இங்கே அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் திருப்புக்குழி, மதுரமங்கலம் ஆகிய இடங்களில் கிராமப்புற சுகாதார பயிற்சி மையக் கட்டடம், காஞ்சிபுரம் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையில் தாய்சேய் நல பிரிவு ரூ.20 கோடி செலவில் அமைக்கப்படும்.

தமிழகத்தில் முதன்முறையாக காஞ்சிபுரம் அரசு அறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமனைக்கு ரூ.23 கோடி மதிப்பில் லீனியர் ஆக்ஸிலரேட்டர், கோபல்ட் சிகிச்சை அலகு மற்றும் சி.டி. ஸ்கேன் கருவி ஆகியவை வழங்கப்படும். ஏனென்றால், புற்று நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்க வேண்டும் என்பதற்காக ரூ.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கருவிகள் வழங்கப்பட்டு, ஸ்கேன் செய்யப்பட்டு, புற்றுநோயை கண்டறிந்து அதற்கு உரிய சிகிச்சை செய்வதற்கு அம்மாவினுடைய அரசு 23 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் சாலை விபத்துக்களால் ஏற்படும் இறப்பை குறைக்க தமிழ்நாடு அரசு விபத்து மற்றும் அவசர சிகிச்சை முன்னெடுப்புத் திட்டம் (Tamil Nadu Accident and Emergency Care Initiative - “தாய் திட்டம்”) ரூ.20 கோடி மதிப்பில் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செயல்படுத்தப்படும். ஏனென்றால், அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அப்படி விபத்து ஏற்படுகின்றபொழுது, அவர்கள் உயிரை காப்பாற்ற வேண்டிய கடமையிலே, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கின்றது.

மேலும், காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை ஒப்புயர்வு மையம் ரூ.8.55 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

இதுபோன்ற ஏனைய திட்டங்கள் மூலம் மக்கள் நல்வாழ்வுத்துறை காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.90 கோடி மதிப்பிலான திட்டங்களை செயல்படுத்த உள்ளது.

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வெகு சிறப்பான செயல்பாட்டின் மூலம் தாய்மார்கள் மற்றும் சிசு இறப்பு விகிதம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டில் அடையவேண்டிய நிலையான வளர்ச்சி இலக்குகளை தமிழகம் 14 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அடைந்து இமாலய சாதனை புரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறந்தவர்களின் உடல் உறுப்புகளை கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில் மிக சிறப்பாக செயல்படுவதில், நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்கான மத்திய அரசின் விருதினை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் தமிழ்நாடு பெற்று வருகிறது. உடல் மாற்று அறுவை சிகிச்சை இன்றைக்கு இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் மிக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவமனையைக் காட்டிலும் அரசு மருத்துவமனையில் கூடுதல் வசதி செய்து கொடுக்கப்பட்டு அறுவை சிகிச்சை செய்வதற்காக இன்றைக்கு அரசு பல்வேறு நல்ல திட்டங்களை எடுத்து வருகிறது என்பதை சுட்டிக்காட்டுகின்றேன்.

தமிழக அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக விபத்து நேரிடும் பகுதிகளுக்கு 108 அவசர கால ஊர்தி சென்றடையும் நேரம் 11 நிமிடத்திலிருந்து 8.32 நிமிடமாக குறைக்கப்பட்டுள்ளது. இது வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையானதாகும். உயிரை காப்பதற்காக அந்த வாகனம் வேகமாக, துரிதமாக செல்லக்கூடிய வகையிலே இன்றைக்கு அதனுடைய நேரத்தை குறைக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் பரந்தூர் கிராமத்தில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் அமைக்கப்படும்.

2 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவில் வாலாஜாபாத்தில் வட்டாட்சியர் அலுவலகம், ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் சிங்காடிவாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 9 வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், குடிநீர் வசதி, கழிப்பறைகள் மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவை, 60 இலட்சம் ரூபாய் செலவில் பஞ்சுபேட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் உரக் கட்டுப்பாடு ஆய்வுக்கூடம் உட்பட 34 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 164 கட்டடங்களை நான் திறந்து வைத்துள்ளேன்.

6 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் காஞ்சிபுரம் மற்றும் திருப்பெரும்புதூர் வட்டாட்சியர் அலுவலகங்களை புதிதாக கட்டுதல், 14 கோடி ரூபாய் செலவில் காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா மாவட்ட விளையாட்டு அரங்கு நவீன வசதிகளுடன் புதிதாக அமைக்க கட்டுமானப் பணிகள், 18 கோடி ரூபாய் மதிப்பில் காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் மகப்பேறு மற்றும் குழந்தைகள்

நலப் பிரிவுக்கு புதிய கட்டடம் உட்பட 70 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 101 பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இது தவிர, தமிழ்நாடு முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 2 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பில் 2018–2019ஆம் ஆண்டில் 123 பயனாளிகளுக்கு வீடு கட்ட ஆணை, 30 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் 300 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனம் ஆகியவை உள்பட பல்வேறு துறைகளைச் சார்ந்த 32 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் 6,250 பயனாளிகளுக்கு என்னால் வழங்கப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு பதவியேற்றதிலிருந்து இன்று வரை 23 ஆயிரத்து 269 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 42 ஆயிரத்து 136 பணிகள் துவக்கி வைத்துள்ளேன். அது அம்மா அரசு செய்த சாதனை என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

19 ஆயிரத்து 103 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 598 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ஆக மொத்தம் 42 ஆயிரத்து 373 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 49 ஆயிரத்து 734 பணிகள் நடைபெறுகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) நெடுஞ்சாலைத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, பேரூராட்சிகள் துறை மற்றும் நகராட்சி நிருவாகத்துறை மூலம் 393 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு முறையும் பருவகாலத்தில் மழை பெய்கின்ற பொழுது, ஆங்காங்கே தண்ணீர் தேங்கி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளைக் கண்டறிந்து அதிக வெள்ளம் வருகின்றபோது, அந்தப் பகுதியைக் கண்டறிந்து அங்கு எந்த விதத்திலும், வெள்ளம் ஏற்படாத வகையில், மக்கள் பாதிக்காத அளவிற்கு வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்காகத்தான், மரியாதைக்குரிய திருமதி அமுதா, இ.ஆ.ப.,அவர்களையே இந்த மாவட்டத்தினுடைய பொறுப்பாளராக நியமித்திருக்கின்றோம்.

மேலும், ஊரக வளர்ச்சித்துறை மூலம் கிருகம்பாக்கம் பகுதியில் அடையாற்றின் குறுக்கே 5.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. மேற்சொன்ன பணிகள் முடிவடையும் பொழுது, காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ள பாதிப்புகள் வெகுவாக குறையும்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று, மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து மக்களுக்கு பணியாற்றும் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு,

வாழ்க அண்ணா நாமம்,

வளர்க மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் புகழ், ஓங்குக மாண்புமிகு அம்மாவின் புகழ், தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.09.2018 அன்று*
காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில்
நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை

காவலர் நலன்காக்கும்
காவலர் நிறைவாழ்வுப் பயிற்சி!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தமிழ்நாட்டு மக்களுக்கு அரணாக விளங்குவது தமிழ்நாடு காவல்துறை. இத்துறையை மேலும் செம்மைப்படுத்தி, அதன் சிறந்த செயல்பாட்டிற்கு மேலும் ஊக்கம் அளித்திடும் நோக்கில், இந்த “நிறைவாழ்வு பயிற்சி” ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் துவக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சகோதரர் திரு. பி.தங்கமணி அவர்களே!

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் சகோதரர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே! மாண்புமிகு மீன்வளம், பணியாளர்

மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.டி.ஜெயகுமார் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே! தலைமை செயலாளர் மரியாதைக்குரிய முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே! உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் முதன்மை செயலாளர் மரியாதைக்குரிய திரு. நிரஞ்ஜன் மார்ட்டி அவர்களே! காவல் துறை தலைமை இயக்குநர் மரியாதைக்குரிய திரு. டி.கே.ராஜேந்திரன் அவர்களே!

தமிழ்நாடு காவல் துறையுடன் இணைந்து இந்த நிறைவாழ்வு பயிற்சியை செயல்படுத்த இருக்கும், **“நிம்ஹான்ஸ்”** என்று அழைக்கப்படும், தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தின் இயக்குநர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பேராசிரியர் கங்காதர் அவர்களே! மற்றும் இந்நிறுவனத்தின் பதிவாளர் அவர்களே! பேராசிரியர்களே! இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள அனைத்து அரசு மற்றும் காவல் துறை உயர் அதிகாரிகளே! காவலர்களே! மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம் !

நமது காவல் துறை எல்லா காலங்களிலும் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதிலும், குறிப்பாக, நெருக்கடியான தருணங்களில், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும், பொது ஒழுங்கை சிறப்பாக பேணி பாதுகாக்கும் துறையாக விளங்கி வருகின்றது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் தாரக மந்திரமான ‘அமைதி, வளம், வளர்ச்சி’க்கு ஆணிவேராக இருப்பது ‘அமைதி’ என்ற முதல் மந்திரம். இதனை நிலைநாட்ட திறமையான காவல் துறை இன்றியமையாதது.இதுதான் ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் அடித்தளமாகும்.

ஒரு மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமெனில் அங்கு அமைதி நிலவ வேண்டும். இப்பணியினைத்தான் நமது காவல் துறையினர் சிறப்பாக செய்து, தமிழ்நாட்டை ஒரு அமைதிப் பூங்காவாக திகழச் செய்கின்றனர் என்று இத்தருணத்தில் பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல் துறையின் மீது நன்மதிப்பும், நம்பிக்கையும் வைத்திருந்தார்கள். அவர்களின் நலனுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல் துறையின் பணிகளை ராணுவத்திற்கு இணையாக பாராட்டி பேசியிருக்கிறார்கள்.

காவல்துறையினர் தங்கள் உயிரை பணயம் வைத்து, சமூக விரோதிகளை சண்டையிட்டு வீழ்த்தியிருக்கிறார்கள். தீவிரவாதிகளின் நடமாட்டத்தினை தமிழ்நாட்டில் முழுவதுமாக கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு பாதுகாப்பதை திறம்பட செய்து வந்தாலும், குற்றங்கள் நடைபெறாமல் தடுத்தல், குற்றங்களை கண்டுபிடித்தல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளித்தல், முக்கியமான அமைப்புகளுக்கு பாதுகாப்பு வழங்குதல், இயற்கை சீற்றங்களை சமாளித்தல், பல்வேறு சமூக சட்ட விதிகளை செயல்படுத்துதல் போன்ற விரிவான பணிகளை நீங்கள் செய்து வருகின்றீர்கள்.

நீங்கள் பணிசெய்யும்போது, சில சமயங்களில், ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாவதை நாங்கள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் நீங்கள் '**என் கடன் பணி செய்து கிடப்பதே**' என்ற ஆன்றோரின் வாக்குப்படி அமைதியுடன் பணியாற்றி வருகிறீர்கள். இதை மக்களும் கவனித்துகொண்டுதான் இருக்கிறார்கள். சென்ற வருடம் பெய்த பெருமழையின் போது காவல் துறையினர் குழுக்களாக செயல்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல வகையில் உதவி புரிந்துள்ளனர்.

உதாரணமாக, சென்னை பெருமழையின் போது, சாலையில் தேங்கியிருந்த நீர் வடியும் பொருட்டு, ஒரு காவல் ஆய்வாளர் மழைநீர் வடிகாலில் இறங்கி அடைப்புகளை நீக்கியது, தாய் தந்தையை இழந்த ஒரு மாணவனை, தத்தெடுத்த ஒரு காவல் உதவி ஆணையர், 72 வயதான ஒரு முதியவர் பல ஆண்டுகளுக்குப் பிறகு அவரது பேரனைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்தல் போன்ற உங்களின் பல்வேறு மனித நேயப் பணிகளை, பத்திரிகை மற்றும் சமூக வலைதளங்கள் மூலம், மக்களும், நாங்களும் பார்த்து பாராட்டி கொண்டு இருக்கின்றோம்.

இது போன்ற எண்ணற்ற மக்கள் நலப்பணிகளை அரசு நிருவாகத்துடன் இணைந்து நீங்கள் ஆற்றியுள்ளீர்கள். சமுதாயத்தில் அநீதி இழைக்கப்பட்ட மக்கள், நியாயம் கோரி காவல் நிலையங்களுக்கு வரும்பொழுது, அவர்களை மனித நேயத்தோடு அணுகி, அன்பாக பேசி, அவர்களின் குறைகளை கேட்டறிந்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வாங்கித் தரும்போது உங்கள் பணியை நினைத்து நீங்கள் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும்.

அதனை எண்ணி நாங்களும் பெருமைப்படுகின்றோம். காவல் துறையின் இப்பணிகளால் சட்டத்தின் மீதும், அரசின் மீதும் மக்களுக்கு நம்பிக்கையும், மரியாதையும் ஏற்படுகிறது. **“மக்களுக்கு – நீ தேவைப்படுகிறாய். மக்களுக்கு நீ நெருக்கமாய் உள்ளாய் என்ற உணர்வே இன்பங்களில் தலையானது. மகிழ்ச்சிகளில் நிலையானது”** என்றார் மாக்ஸிம் கார்க்கி என்ற மேலை நாட்டு அறிஞர் ஒருவர். இந்த பொன்மொழி காவல் துறையினரின் பணிக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது.

வெயில், மழை, குளிர் என்ற இயற்கை சீற்றங்களின் இடையே காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள். இதன் காரணமாக, சில நேரங்களில் அவர்கள் உணவைக் கூட சரியான நேரத்தில் எடுத்துக் கொள்ள முடியாமல் போகிறது. பணியின் தன்மையினால்,

குடும்பத்தினருடன் நேரம் செலவிட முடியாத சூழ்நிலையும் ஏற்படுகிறது.

இதன் மூலம் காவல் துறையினரும், அவர்தம் குடும்பத்தினரும், சில நேரங்களில் மனஅழுத்தத்திற்கு ஆளாக நேரிடுகிறது. காவல் துறையினர் சந்திக்கும் பிரச்சனைகளை இந்த அரசு நன்கு அறியும். எனவே தான், காவலர்கள் நலன் மற்றும் துறை ரீதியான நலன் ஆகியவை குறித்து மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தான் நடித்த திரைப்படங்களில் காவல் துறையின் சிறப்பினை தனது கதாபாத்திரங்களின் மூலம் நன்கு வெளிப்படுத்தியுள்ளார்கள். அப்போதிருந்தே, இளைஞர்கள் காவல் துறையில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற உந்துதலை அவர் ஏற்படுத்தினார். **மாண்புமிகு புரட்சித்தலைவர் ஆட்சியிலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலும், அவர்களை தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசினாலும், காவல் துறையினர் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.**

- காவல் துறையினருக்கென தனியாக ஒரு வீட்டுவசதி கழகத்தை தோற்றுவித்தது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். பின்னர் மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை விரிவாக்கம் செய்தார்.

- “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் மூலம் காவலர்களுக்கு சொந்தமாக வீடு பெறுவதற்கு ஏற்பாடு செய்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

- தமிழக காவல் துறையினருக்கென தமிழ்நாடு முழுவதும் 50 இடங்களில் பல்பொருள் காவல் அங்காடிகள் நிறுவப்பட்டு, மலிவு விலையில் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

- 40 வயது நிரம்பிய காவலர்களுக்கு இதுவரையிலும் ஆண்டிற்கு ஒரு முறை இலவச முழு உடல் பரிசோதனை நடத்துவதற்கு இவ்வரசு ஆணையிட்டிருந்தது. தற்போது 30 வயது நிரம்பிய காவலர்கள் கூட அப்பயனை பெறுவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, 20.08.2018 அன்று ஆணை பிறப்பித்துள்ளது என்பதனை இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

- காவல் துறையினரின் பணிச்சுமையினை குறைப்பதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த 7 ஆண்டுகளில், 100 காவல் துணை கண்காணிப்பாளர்களும், 1,112 சார்பு ஆய்வாளர்களும், 32,905 இரண்டாம் நிலை காவலர்களும் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர். காலிப் பணியிடங்களும் அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகின்றன.

- இவ்வரசின் கடந்த ஏழு ஆண்டு கால ஆட்சியில் மறைந்த 1,232 காவல் துறையினரின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

- அதேபோல், பணியின்போது பல்வேறு காரணங்களால் உயிரிழந்த, 1,461 காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.42.45 கோடி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

- காவல் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் 36 புற நோயாளிகள் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

- அனைத்து காவல் துறையினரும், அவர்களது குடும்பத்தினரும் பயன் பெறும் வகையில், ஒன்றுபட்ட உள்சுற்று தொலைபேசி பயன்படுத்துவோர் குழு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- காவலர் நலனுக்காக 10 கோடி ரூபாய் செலவில் சமுதாய கூடம் கட்டுவதற்காக சென்னை ஆவடியில் 04.06.2018 அன்று

அடிக்கல் நாட்டப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற எண்ணற்ற நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

காவலர்கள், தங்கள் பணியின் தன்மையால், மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவது இயற்கை. காவலர்கள் தங்கள் பணிகளை தொய்வின்றி செய்ய, அவர்கள் குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருந்தால் தான், காவல் துறையினர் மன நிறைவுடன் நாட்டுப் பணியை ஆற்ற முடியும். அதே போல், காவல் துறையினரும் தங்கள் குடும்பத்தாரோடு போதுமான நேரம் செலவழிக்க வேண்டும். இதன் மூலம் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை காவல் துறையினரின் குடும்பங்களிலும், அவர் பணியாற்றும் இடங்களிலும் நிலவுவதற்கு வழிவகை ஏற்படும்.

எனவே, காவல் துறையினரின் மனநலன் மற்றும் குடும்ப நலன் ஆகியவற்றை பேணி பாதுகாப்பதற்காக மிகுந்த பரிசீலனைக்குப் பின்பு, தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டதே இந்த ஏற்றமிகு "காவலர் நிறைவாழ்வு பயிற்சி" திட்டம். இந்த திட்டம் பெங்களூரில் உள்ள, உலகத்தரம் வாய்ந்த "நிம்ஹான்ஸ்" என அழைக்கப்படும் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசால், தமிழக காவல் துறையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சி ஆகும்.

இந்தியாவிலேயே, ராணுவத்திலோ அல்லது துணை ராணுவத்திலோ கூட இம்மாதிரியான பயிற்சி இது வரை அளிக்கப்படவில்லை. காவல் துறையின் உயர் அதிகாரி முதல் கடைநிலை காவலர் வரை அனைவருக்கும் இம்மாதிரியான பயிற்சி வழங்கவிருப்பது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

அனைத்து மாவட்டம் மற்றும் காவல் பிரிவுகளிலும், சிறப்புப் பிரிவுகளிலும் பணியாற்றும் அனைத்து காவலர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் இந்த நிறைவாழ்வு பயிற்சி அளிக்கப்படும். இதற்கென, காவல் துறையின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், 358 முதன்மை பயிற்சியாளர்கள் உருவாக்கப்பட்டு, அவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள காவல் துறையினருக்கு பயிற்சி அளிப்பார்கள்.

அடுத்த ஒரு வருட காலத்திற்கு இந்த பயிற்சி அளிக்கப்படும். பின்னர், முதன்மைப் பயிற்சியாளர்கள் மூலம் 2 வருட காலங்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும்.

அதிக அளவு மன அழுத்தம் உள்ளோருக்கு, தனியாக நிறை வாழ்வு பயிற்சி அளிக்கப்படும். அனைத்து முதன்மை பயிற்சியாளர்களுக்கும் ஆற்றுப்படுத்துதலில் ஒரு பட்டயச் சான்றிதழ் (Diploma Certificate) வழங்கப்படும்.

காவல் துறையினர் பணிபுரியும் இடம் மற்றும் அவர்களின் குடும்பங்களில் நல்ல சூழல் நிலவுவதற்காக, கடைபிடிக்கப்பட வேண்டிய சில ஆலோசனைகளை இங்கே உங்களுக்கு தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

‘சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்’ என்ற பழமொழிக்கேற்ப காவல் துறையினர் தங்களது உடல்நலனில் அக்கறை செலுத்த வேண்டும். உடற்பயிற்சி, நடை பயிற்சி, தியானம்

போன்ற பயிற்சிகள் செய்து உடலை ஆரோக்கியத்துடன் வைத்துக் கொள்ள வேண்டும். உடற்பயிற்சி செய்து விட்டு ஓய்வு எடுக்கும்போது நமது உடலில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படும்.

❖ தங்கள் பலவீனங்களை பலங்களாக மாற்றிய மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை படியுங்கள். நல்ல புத்தகங்கள் படிப்பதையும், ஊக்கமூட்டும் உரைகள் கேட்பதையும் ஒரு அன்றாட பழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

❖ எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பாராமல் உங்களது நேரத்திலோ அல்லது பணத்திலோ ஒரு பகுதியை ஒழுங்கான திட்டமிட்ட முறையில் ஏதாவது தர்ம காரியங்களுக்கு அர்ப்பணியுங்கள்

❖ தீய ஆதிக்கங்களிலிருந்து விலகி இருங்கள். நண்பர்களின் அன்புத் தொல்லைக்கு இடம் கொடுத்து விடாதீர்கள்.

❖ மனமார்ந்த பாராட்டுதல்களை கனிவுடன் கொடுப்பதற்கும், பெறுவதற்கும் பயிலுங்கள்.

❖ உங்களது செயல்களுக்கும், நடத்தைக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள தொடங்குங்கள்.

❖ அசௌகரியமாக இருக்கும் பட்சத்தில் கூட சுய கட்டுப்பாட்டை தவறாது கடைபிடியுங்கள்.

❖ உயர்ந்த ஒழுக்க பண்புகள் உடையவர்களோடு பழகுங்கள்.

❖ படைப்பாற்றல் உள்ளவராக இருந்து உங்களது பலவீனங்களை உங்களது பலங்களாக மாற்றும் வழியை கண்டு பிடியுங்கள்.

❖ பொறுமையுடன் இருங்கள். பலன்கள் கண்ணுக்கு புலப்படாத போதிலும் தொடர்ந்து செயலாற்றுங்கள்.

அமைதியையும், ஆரோக்கியத்தையும், ஆனந்தத்தையும் காவலர்களிடையே ஏற்படுத்தும் வகையில், இந்த நிறைவாழ்வு பயிற்சியை நடத்துவதற்காக இவ்வாண்டிற்கு மட்டும் 10 கோடி ரூபாய்

மாண்புமிகு அம்மாவின் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்பயிற்சியானது தமிழ்நாடு காவல் துறையில் அனைத்து நிலைகளிலும் பணிபுரியும் சுமார் 1,20,000 காவல் அலுவலர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ள சுமார் 3,60,000 குடும்ப உறுப்பினர்களுக்கும், ஓர் ஆண்டுக்குள் வழங்கப்பட உள்ளது. காவல் துறையினரும் அவரது குடும்பத்தினரும் இந்த பயிற்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிறைவாழ்வு பயிற்சியின் வாயிலாக, தமிழக காவல் துறையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் மனநலன் மேம்படுத்தப்பட்டு, காவலர்கள் அவர்தம் பணிகளை மேலும் புத்துணர்ச்சியுடனும், சிறப்புடனும் செயல்பட வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இதேபோல் காவலர்களின் குடும்பங்களிலும் நல்ல அமைதியான சூழ்நிலை உருவாகும்.

தனிமனித அமைதி, குடும்ப அமைதியாக மாறும்; குடும்ப அமைதி, மாநில அமைதியாக மாறும்; மாநில அமைதி, நாட்டு அமைதியாக மாறும்; ஒரு நாட்டின் அமைதி, உலக அமைதியாக மாறும்.

“நன்றே செய், அதையும் இன்றே செய்
அதுவும் இப்போதே செய்”

என்பது நமது ஆன்றோர் வாக்கு. இந்த நிறைவாழ்வு பயிற்சியானது, பலமுறை ஆய்வு செய்யப்பட்டு, பின்னர் வடிவமைக்கப்பட்ட பல நிலைகளைக் கொண்ட பயிற்சியாகும்.

இந்த நிறைவாழ்வு பயிற்சி உங்களுக்கு வாழ்விலும், பணியிலும், மன நிம்மதியையும், ஆரோக்கியத்தையும் வழங்கும் என நம்புகிறேன். **சாதிக்க நினைப்பவர்கள், எந்த தடைகள் வந்தாலும், அதனை உடைந்தெறிந்து தனது பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பார்கள்.**

காவல் துறையை சார்ந்த நீங்கள் சாதிக்க பிறந்தவர்கள். ஆகவே, உங்களுக்கு தடைகள் பல வரினும், அதனை உடைத்தெறிந்து, உங்களுக்கு இடப்பட்ட பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றுங்கள் என உங்களை அன்புடன் இந்த தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அம்மாவின் வழியில் நடக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, காவலர்களுக்கு முழு சுதந்திரம் வழங்கியுள்ளது. அவர்களின் பணிகளில் குறுக்கீடு செய்வதில்லை. அதனால்தான் இன்று தமிழ்நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது.

அதனால் தான், தமிழக காவல் துறையானது, தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி, சிறப்பாக செயல்பட்டு உலக மற்றும் தேசிய அளவில் தனித்துவம் பெற்று விளங்குகிறது. புலனாய்விலும், குற்றங்களை கட்டுப்படுத்துவதிலும், உள்நாட்டு பாதுகாப்பிலும் நமது காவல்துறை மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக சிறப்பு தன்மையுடன் பீடுநடை போட்டு வருகிறது. இச்சிறப்பு மிக்க காவல் துறை மேலும் சிறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சி சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், எனது உளங்கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!
வளர்க புரட்சித்தலைவரின் புகழ்!
ஓங்குக புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழ்!

எனக் கூறி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.09.2018 அன்று*
காவல் நிறைவாழ்வு பயிற்சி துவக்க விழாவில் ஆற்றிய உரை

இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் சர்வதேச நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வருவார்கள் என உறுதியாக நம்புகிறேன்

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

Hon’ble Minister for Industries Thiru. Sampath,

Hon’ble Minister for Food Thiru.Kamaraj,

Hon’ble Minister for Information Technology Dr.M.Manikandan, Information Technology Secretary Dr. Santhosh Babu, Dear Past Chairman, CII Thiru S.Mahalingam Chairman, CII, Tamil Nadu State Council Thiru. Ponnusamy, Chairman, CII connect 2018 Thiru Krishnakumar Natarajan Founder, TCS - Thiru F.C.Kohli Captains from Industries, Delegates and other dignitaries, Friends from Press and Media, Good afternoon to one and all.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2001இல் Connectன் முதற் பதிப்பை தொடங்கி வைத்தார்கள். மேலும், 2002, 2005 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்வுகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு அம்மாவின் அரசும், இந்திய தொழிலகக் கூட்டமைப்பும் (CII) இணைந்து இந்த ஆண்டு நடத்துகின்ற இந்நிகழ்வில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஆண்டு இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட மூன்றாவது தென்மண்டல மாநாட்டில் கலந்து கொண்டதை நான் இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாடு வெற்றிகரமாக நடைபெற CII பேருதவியாக இருந்தது. அதே போன்று, வரும் 2019 ஜனவரி மாதம் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கும், தமிழ்நாடு அரசுக்கு பேருதவியாக இருக்க வேண்டுமென்று CII செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி.

டிஜிட்டல் பொருளாதாரம் என்பது, தற்பொழுது தகவல் தொழில்நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள புதிய புரட்சி. இதன் மூலம் மூன்றாவது தொழில் புரட்சி ஏற்படும் என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். வருங்காலத்தில் மனிதனின் தினசரி நடவடிக்கைகளும், செயல்பாடுகளும், டிஜிட்டல் முறையைச் சார்ந்தே இருக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இதனால் இத்துறையில் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் உருவாகி நாட்டின் பொருளாதார நிலை மேம்படும். உலகம் முழுவதும் பரவி வரும் தகவல் தொழில்நுட்ப புரட்சியானது, சமமான வளர்ச்சியை தூண்டுவதற்கும், புதிய கருவிகள், நடைமுறைகள், வளங்கள், சேவைகள், தயாரிப்புகள், திறன் மற்றும் சமீபத்திய தொழில் நுட்பங்களை சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளும் அடைய வழிவகுக்கிறது.

இதன்மூலம் அதிக வேலை வாய்ப்பு உருவாக்குதல், மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்தல், குடிமக்களுக்கு விரைவான சேவைகளை வழங்குதல், நேரத்தையும், ஆற்றலையும் சேமித்து, மக்களின் வாழ்க்கையை மிகவும் எளியதாக்குதல் போன்றவற்றை. தகவல் தொழில்நுட்பம் பெரிய அளவில் மாற்றியுள்ளது. மாநிலத்தின் மொத்த GDP (2017ஆம் ஆண்டில்), தகவல் தொழில்நுட்பவியல் உள்ளடக்கிய சேவை துறையின் பங்களிப்பு, 7.93 சதவீதமாக உள்ளது.

தற்காலத் தகவல் தொழில்நுட்பத்தின் புதிய பரிமாணங்களான மேகக் கணினியம், இயந்திரக் கற்றல், செயற்கை நுண்ணறிவு, ரோபோ தொழில் நுட்பம், முப்பரிமான அச்சிடுதல், மருத்துவத் தொழில் நுட்பம், வேளாண் தொழில் நுட்பம், பல்பொருள் இணையம், மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி (ESDM), அனிமேஷன் மற்றும் விளையாட்டு தரவு பகுப்பாய்வு, வணிக நுண்ணறிவு மென்பொருள், தரவு கிடங்கு மற்றும் தமிழகத்தில் முதலீடுகள் சார்ந்த தரவு மையங்கள் வங்கி மற்றும் வணிக சேவைகளில் தகவல் தொழில்நுட்பவியல் பயன்பாடுகள் போன்றவை மாண்புமிகு அம்மாவின் அரசால் தொடர்ந்து ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.

சென்னை இன்று இந்தியாவின் தகவல் தொழில் நுட்ப தலைநகரம் என்று கூறுகின்ற வகையில் பல புதிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. மிகப் பெரிய நிறுவனங்கள் தங்களுடைய கிளைகளை சென்னையில் திறந்துள்ளன. மற்ற நிறுவனங்களும் சென்னையில் தொடங்க விரும்புகின்றன.

நவீன தொழில்நுட்ப தேவைகளை நிறைவேற்றுகின்ற அளவிற்கு மனிதவள ஆற்றல் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. இங்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான மாணாக்கர்கள் பொறியியல் கல்லூரிகளில் தங்களது கல்வியினை முடித்து விட்டு திறமைமிக்க பொறியாளர்களாக வெளி வருகின்றனர்.

அவ்வாறு படிப்பை முடித்து வெளிவரும் பொறியாளர்கள், வெளிநாட்டில் மட்டுமன்றி, தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் வகையில், அவர்களது செயல்திறனை மேம்படுத்த வேண்டும் என்பது மாண்புமிகு அம்மாவின் அரசின் விருப்பமாகும். அதனை நிறைவேற்றும் பொருட்டு, பொறியியல் பட்டதாரிகளுக்கான செயல்திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு மேம்படுத்துதல் கலந்தாய்வு கூட்டம் ஒன்று என்னால் 10.09.2018 அன்று நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வின் போது மாநிலத்தின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வளர்ச்சிக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை –2018ஐ (Information Communication Technology Policy-2018) வெளியிட்டது. தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக் கழகத்தின் Madras Institute of Technology வளாகத்தில் திறன் மேம்பாட்டு சிறப்பு பயிற்சி மையமும், ஐந்து பொறியியல் மற்றும் பலவகைத் தொழில் நுட்பக் கல்லூரிகளில், தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனங்களும் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறுவப்பட்டுள்ளன.

திருவாளர்கள் Siemens மற்றும் திருவாளர்கள் Design Tech Limited ஆகிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து 546 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இச்சிறப்பு மையங்கள் வாயிலாக, தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்வி உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல், தொழிற்சாலைகளுக்கு தேவையான தொழில் திறன்களை மாணாக்கர்களிடையே மேம்படுத்துதல், வேலை வாய்ப்பு பெறும்வகையில், திறனை அதிகரிக்கச்செய்தல், தொழிற்சாலைகளின் தற்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு திறனை மேம்படுத்துதல் ஆகிய முக்கிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இத்திட்டத்தின் மூலம் பட்டய மற்றும் பட்ட வகுப்புகளில் பயின்று வரும் தொழில்நுட்ப மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து, அவர்கள் எளிதாக வேலை வாய்ப்பு பெறுவதற்கு

வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், தொழிலகங்களிலிருந்து கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்களுக்கு அவர்களது தொழில் திறனை மெருகூட்ட இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி 2017–2018ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 179 கோடி ரூபாயாக இருக்கும் எனவும், மென்பொருள் வல்லுநர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 38 ஆயிரமாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. தற்பொழுது அளிக்கப்பட்டு வரும் திறன் மேம்பாட்டு பயிற்சியின் மூலம் தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியும், திறன் வாய்ந்த மென்பொருள் வல்லுநர்களின் எண்ணிக்கையும் பல மடங்கும் பெருகும்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சென்னையிலுள்ள டைடல் பார்க்கில் 90 இருக்கைகள் வசதி கொண்ட தொழில் முனைவோர் மையத்தை அமைத்துள்ளது. 50 இருக்கைகள் வசதி கொண்ட ஒரு தொழில் முனைவோர் மையம் கோயம்புத்தூரில் நிறுவப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசு இந்திய அரசின் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில தரவு மையம் போன்ற திட்டங்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.

அரசின் சேவைகளை இணையதளம் வாயிலாக தங்கள் வீட்டில் இருந்தபடியே எளிதில் பெற ஏதுவாக,பொது மக்களுக்கான திறந்த நிலை தரவு தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகின் எந்த பகுதியிலிருந்தும், எந்நாளும், எப்போதும் சான்றிதழ்களை பெற விண்ணப்பிக்க இயலும்.

அனைவருக்கும் வளர்ச்சி என்ற எண்ணத்தை ஈடேற்ற, அரசின் அனைத்து சேவைகளையும் கிராம மக்கள் அடையும் வண்ணம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பாரத்நெட் கிராம ஊராட்சிகளுக்கான இணைய சேவைத் திட்டம் என்ற பெயரில் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்த உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை செயல்படுத்த கண்ணாடி இழை வலையமைப்பை (Optic fibre network) தமிழ்நாட்டில் உருவாக்கி செயல்படுத்தி, சுயமாக பராமரிக்க தமிழ்நாடு ஃபைபர்நெட் கார்ப்பரேஷன் லிமிடெட் எனும் ஒரு நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் எல்காட் நிறுவனம், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூரில் 8 தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைச் சார்ந்த சேவைகளுக்கான சிறப்பு பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு வியாபார குறியீடாக 'எல்கோசெஸ்' (Elcosez) என பெயரிட்டார். இவை, தமிழ்நாட்டில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் அதைச் சார்ந்த சேவைகளுக்கான முதலீடுகளை ஈர்க்கும் ஒரு சிறந்த இடமாக உருவாகியுள்ளது.

இந்த மண்டலத்தில் பல நிறுவனங்களுக்கு நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 75,000 நபர்களுக்கு மேல் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அதிக அளவில் மக்கள் கூடும் 50 இடங்களில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் அம்மா wi-fi மண்டலங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல் கட்டமாக, 5 இடங்களில் அம்மா wi-fi மண்டல சேவை என்னால் 05.04.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட, ஏற்கெனவே உள்ள உகந்த சூழ்நிலையை மேலும் எளிமைப்படுத்தும் வகையில் தொழில் நிறுவனங்களுக்கு தேவையான ஒப்புதல் மற்றும் உரிமங்கள் ஆகியவற்றை ஒரே விண்ணப்பத்தின் மூலம் ஆன்லைனில் பெறுவதற்கு "ஒருங்கிணைந்த இணையதள வழி ஒற்றைச்சாளர தகவு" ஒன்று மாண்புமிகு அம்மாவின் அரசால் துவக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 11 அரசுத் துறைகளிலிருந்து தேவையான பல்வேறு அனுமதிகள் பெறுதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய சேவைகளை தொழில் நிறுவனங்கள் எளிதாகப் பெற இயலும். தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேலும் அதிகரிக்க, வரும் ஜனவரி மாதம் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாடு நடைபெறுவதன் மூலம் பல சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்ய முன் வருவார்கள் என உறுதியாக நம்புகிறேன். இதன்மூலம் தமிழ்நாட்டில் தொழில் வளம் மேலும் பெருகும் என்பது உறுதி.

மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரமான “அமைதி, வளம், வளர்ச்சி” என்ற கொள்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு பின்பற்றி வருகிறது. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நன்கு பராமரிக்கப்படுவதன் மூலம் தமிழ்நாடு அமைதி பூங்காவாக திகழ்கிறது. இதன் மூலம் அனைத்து துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியினை கண்டு, முதலீட்டுக்கு தேவையான உகந்த சூழல், தமிழ்நாட்டில் திகழ்ந்து வருகிறது. இந்த வளர்ச்சியினை அடுத்த கட்டத்திற்குச் கொண்டு செல்லும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்து தந்த “தொலைநோக்கு பார்வை 2023” என்ற திட்டம் பல்வேறு துறைகளில், நமது மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளையும், செயல்படுத்த வேண்டிய திட்டங்களையும் மிகத் துல்லியமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதைநோக்கி மாண்புமிகு அம்மாவின் அரசு வேகமாக பயணித்துக் கொண்டிருக்கிறது. மாணாக்கர்களின் தகவல் தொழில் நுட்ப அறிவினை அதிகரிக்க விலையில்லா மடிக்கணினிகள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 38 இலட்சத்து 53 ஆயிரத்து 592 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 15 இலட்சத்து 66 ஆயிரத்து 22 மடிக்கணினிகள் வழங்கப்பட உள்ளன.

இதனால் மனித ஆற்றலும், இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்டு, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய

பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. மேலும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முறையே 16 மற்றும் 16.24 சதவீத பங்களிப்புடன் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அன்னிய நேரடி முதலீடு பற்றிய ரிசர்வ் வங்கியின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தமிழ்நாட்டில் 2017–2018 ஆம் ஆண்டு 56 சதவீதம் கூடுதல் முதலீடு பெறப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. மேலும், தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆய்வு நிறுவனம் 21 மாநிலங்களில் நடத்திய ஆய்வின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டில் தொழில் முதலீட்டிற்கு சிறந்த மாநிலமாக தில்லிக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 15 சென்னை தொழில் நிறுவனங்கள், 1.6 பில்லியன் டாலர் தொழில் முதலீடுகளை ஈர்த்துள்ளது எனவும், இது சென்ற வருட முதலீடுகளை காட்டிலும் மிக அதிகம் எனவும் சமீபத்தில் வெளியிடப்பட்ட ஒரு பத்திரிகை செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் சேவை நிறுவனங்கள் மட்டும் 100 மில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடுகளை ஈர்த்துள்ளது என இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

பெங்களூருவைச் சேர்ந்த பொது விவகாரங்கள் மையம், இந்தியாவிலேயே ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளது. தமிழ்நாட்டில் ஒரு திறமையான மற்றும் வலிமையான ஆட்சி நடைபெறுவதால்தான் இத்தகைய சாதனைகளை செய்ய இயல்கிறது என்பதை இங்கே அழுத்தமாக குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே, தொழில்துறையில் மட்டுமின்றி, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை ஒரு முன்னோடி மாநிலமாக திகழச்

செய்ய வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய கொள்கையின்படி இந்த அரசு தொடர்ந்து செயல்படும் எனக் கூறிக்கொள்கிறேன்.

Dear Friends,

I am happy to participate in the Connect 2018 - 17th Edition conducted by the CII, in association with the Government of Tamil Nadu.

CII is one of the Pivotal Organisation in developing Industries in India, particularly in Tamil Nadu. Tamil Nadu Government had successfully conducted the Global Investors Meet in 2015 in collaboration with CII. I am happy to note that the Global Investors Meet to be conducted in January, 2019 is also to be held in collaboration with the CII.

Our Government has recently launched the ICT Policy, 2018. I hope that this policy will address the aspirations of investors, especially those of IT and ITeS companies by way of provision of Standard administrative incentives, Fiscal Incentives, Capital subsidies, Tax Exemptions. Special incentives etc., Further, it also has provisions for incubating startups and creation of Research parks. Awards for promoting Green IT industry and Single Window Facilitation for early clearance from the concerned agencies are also part of this policy.

By implementing the above ICT Policy-2018, Government will achieve the following targets for development of IT/ITeS sector in Tamil Nadu:

➢ To make Tamil Nadu the number one State in the

sector in India.

- To make Tamil Nadu the destination of choice for foreign investors in the IT/ITeS sector
- To create large scale employment opportunities.
- To ensure world class skill availability.
- To make Tamil Nadu as a cost effective destination for IT / ITeS Companies.
- To encourage IT/ITeS for masses, especially for youth of the state
- To make available world class infrastructure with emphasis on promotion of Green IT & ITeS.
- To enhance the quality of life of citizens through IT & ITeS.
- To foster mass scale adoption of IT & ITeS for achieving inclusive growth.
- To encourage new entrepreneurs to establish Warehouse for Start-ups
- To facilitate growth and usage of Tamil Computing
- To achieve rapid development of IT & ITeS sector in the southern districts of Tamil Nadu.

This Government wants to take Governance to the next level by using Information Technology for which various ICT tools have been adopted.

Chennai is the SaaS Capital of India. We propose to give a huge impetus to this sector to make Tamil

Nadu a Global SaaS destination.

Hence, I appeal to the captains of Industries present here to extend your continued support by way of fresh investments in, Industries and MSME sectors in the State.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நல்லாசியுடன் முதலமைச்சராக நான் பொறுப்பேற்றது முதல் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு தொழில் புரட்சியை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் நான் எடுத்து வருகிறேன். தொழில் துவங்க என்னை சந்திக்க வருபவர்கள் உடனடியாக சந்தித்து அவர்களுடைய கோரிக்கையை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நிறைவேற்றி வருகின்றேன். இச்சமயத்தில், உங்களுடன் ஒரு தகவலை மகிழ்ச்சியுடன் பரிமாறிக் கொள்ள விரும்புகின்றேன். ஆற்று மணலுக்கு மாறாக வெளிநாட்டிலிருந்து மணலை இறக்குமதி செய்து விற்பனை செய்யப்படும் என்று அறிவித்து நான் எடுத்த நடவடிக்கையின் மூலமாக, இன்றையதினம் சென்னை எண்ணூர் துறைமுகத்தில் முதல் கப்பல் வந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, தற்போது மணல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. பல சோதனைகளைக் கடந்து வெற்றிகரமாக இன்று இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இல்லம் தேடி வரும் திட்டத்தின் மூலம், மணல் அவரவர் தேவைக்கேற்ப வீட்டிற்கு supply செய்யப்படும். தமிழ்நாட்டில் தொழில் முனைவோர்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு வசதியாக, துறைமுகத்திற்கான அணுகு சாலை வசதி மேம்படுத்தப்பட்டு வருகிறது, வேண்டிய அளவு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இவற்றுக்கான பல வசதிகளை நான் உங்களுக்கு செய்வதற்கு தயாராக உள்ளேன். உங்கள் அனைவரின் ஒத்துழைப்பு வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன். இங்கு வைத்துள்ள பல கோரிக்கைகளை நான் கனிவுடன் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுப்பேன் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தருணத்தில் மரியாதைக்குரிய திரு.பொன்னுசாமி, Chairman அவர்களை மனதார பாராட்ட விழைகின்றேன். ஏனென்றால், இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்வதற்கு அவர் உறுதுணையாக விளங்கினார். என்னை பலமுறை சந்தித்து நீங்கள் அவசியம் வந்து இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெறவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோளையும் ஏற்று உங்களை சந்திப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்தற்கு அவருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இனிய விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, எனது மிகச் சிறந்த நிகழ்ச்சியாக இதை கருதுகின்றேன். ஏனென்றால், இங்கே வருகை தந்திருக்கின்ற அத்தனை பேரும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை தரக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்ற நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சியை நான் பார்க்கின்றேன். ஏனென்றால், இன்றைக்கு இலட்சக்கணக்கான மாணவர்கள் தமிழகத்திலே படித்து வேலையில்லாமல் இருக்கின்ற சூழலிலே, அப்படிப்பட்ட மாணவர்களுடைய திறமைகளையும், நம்முடைய தமிழ்நாட்டில் படிக்கின்ற மாணவர்கள் திறமை மிக்க மாணவர்கள், அப்படி திறமை மிக்க மாணவர்கள் உங்கள் மூலமாக அவர்களுக்கு பணி கிடைப்பது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி அளிக்கின்றது என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 10.10.2018 அன்று*
இந்திய தொழில் கூட்டமைப்பும், தமிழ்நாடு அரசும் இணைந்து நடத்திய
Connect 2018 மாநாட்டில் ஆற்றிய உரை

விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் 2 சதவீதமாக உள்ள உள்ஒதுக்கீடு 3 சதவீதமாக உயர்வு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே !

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அண்ணன் திரு. டி.ஜெயகுமார் அவர்களே!

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அண்ணன் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே!

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சகோதரர் திரு. பா.பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

இந்தநிகழ்ச்சியிலேபங்குபெற்றுசிறப்பித்துக்கொண்டிருக்கின்ற தலைமை செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அவர்களே,

வருகை புரிந்துள்ள மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே, வருகை புரிந்துள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு வரவேற்புரை ஆற்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு முதன்மை செயலாளர் திரு. தீரஜ்குமார் அவர்களே! நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர் அவர்களே! பாராட்டுரை வழங்கிய தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு. என்.ராமச்சந்திரன் அவர்களே! தமிழ்நாடு தடகள சங்கத் தலைவர் திரு.டபிள்யூ.ஐ.தேவாரம் அவர்களே! தமிழ்நாடு கூடைப் பந்து கழகத்தின் நிர்வாகி திரு. ராஜ் சத்யன் அவர்களே! தமிழ்நாடு சிலம்பாட்ட சங்கத்தின் தலைமை ஆலோசகர் திரு. எம்.அமானுல்லா அவர்களே! தமிழ்நாடு டேக்வோண்டா கழகத்தின் தலைவர் திரு. ஐசரி கணேசன் அவர்களே! சதுரங்க விளையாட்டின் கிராண்ட் மாஸ்டராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மரியாதைக்குரிய திரு.விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே! ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டு வீரர் மரியாதைக்குரிய திரு.பாஸ்கரன் அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைத்து விளையாட்டு சங்கங்களின் நிர்வாகிகளே! சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்டு இந்தியாவிற்கு பெருமை சேர்த்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளே! சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற பயிற்சியாளர்களே, அர்ஜுனா விருது பெற்றிருக்கின்ற வீரர்களே, வீராங்கனைகளே! பெருந்திரளாக இங்கு கூடியிருக்கும் வருங்கால

நம்பிக்கை நட்சத்திரங்களான பரிசு பெற்றிருக்கின்ற விளையாட்டு வீரர்களே, வீராங்கனைகளே, இளைஞர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அனைத்து விளையாட்டு சங்கங்களின் சார்பில், தமிழ்நாடு அரசு அல்லது தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களில், குறிப்பிட்ட பதவிகளில், தகுதியின் அடிப்படையில் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 2 விழுக்காடு வரை உள் ஒதுக்கீடு வழங்கியமைக்காக நன்றி தெரிவித்தல் மற்றும் தேசிய பள்ளிக்குழு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு காசோலை வழங்கும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இளைஞர்களுக்கு படிப்பும், விளையாட்டும் இரண்டு கண்களாகும். படிப்பு – அறிவை வளர்ப்பது போல, விளையாட்டு உடலை பேணிக்காத்து, மன உறுதியையும், அறிவாற்றலையும் வளர்க்கும் என்பதை உணர்ந்து கல்வி, விளையாட்டு என்ற இரண்டிலும் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

இதன் மூலம் அறிவுசார்ந்த, ஆரோக்கிய இளைய சமுதாயம் உருவாகும். எனவே, இளைஞர்கள் கணினி மற்றும் கைப்பேசியில் விளையாடுவதை தவிர்த்து, உடல் உழைப்பை அதிகரிக்கும் விளையாட்டுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

விளையாட்டுகள் மூலம் **தோழமை, ஒற்றுமை, மற்றும் ஒழுக்கம் ஆகியவை வளர்வதுடன், தலைமை பண்பும், இலக்கு நோக்கிய பயணமும் ஏற்பட வழிவகை ஏற்படுகிறது.**

விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தனியார், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் ஆண்டுதோறும் விளையாட்டு தினவிழா கொண்டாடப்படுகிறது.

இந்த போட்டிகளில் வெற்றி பெறுவோர் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த ஊக்கம், அவர்கள் அடுத்தகட்ட போட்டிகளில் பங்கு பெறுவதற்கு ஒரு உத்வேகமாக அமைகிறது.

இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சியை மட்டுமல்லாது அவர்களது உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, உடல் நலம் ஆகியவற்றை பேண வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள், தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டியிடும் வண்ணம் தங்கள் திறமைகளை உயர்த்திக்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு அரசும் பல்வேறு திட்டங்களை கொடுத்து வருகிறது.

விளையாட்டுத் துறையை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

➢ இளைஞர் மற்றும் விளையாட்டு பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை

ஒருங்கிணைத்து, இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இணையாக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் என்ற ஒரு ஆணையத்தை 1992ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கினார்கள்.

- 1995ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் திறம்பட நடத்தப்பட்டது. இதன் விளைவாக, சென்னையில் சர்வதேச தரத்தில் நேரு உள்விளையாட்டு அரங்கம், மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நீச்சல் குள வளாகம், டென்னிஸ் விளையாட்டரங்கம் போன்ற விளையாட்டுகளுக்கான பல்வேறு கட்டமைப்பு வசதிகள் சென்னையில் ஏற்படுத்தப்பட்டன. இந்த அரங்குகள் அனைத்தும் நவீன வசதிகளுடன் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளன.

- காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் மாண்புமிகு அம்மா அவர்களால் 2005ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தனித்துவமான மற்றும் முதன்மையான இப்பல்கலைக் கழகத்தில் உரிய கட்டுமான வசதிகள் 16 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உலக சதுரங்கப் போட்டி தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது.

- ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வெல்லும் தமிழக வீரர்கள், வீராங்கனைகளை கௌரவிக்கும் வகையில் உயரிய ஊக்கத்தொகை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

- ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுப் போட்டிகள், பாரா ஒலிம்பிக் போட்டிகள் உள்ளிட்ட இதர விளையாட்டுகளில் பதக்கங்கள் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்களுக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது.

- விளையாட்டு வீரர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தற்பொழுது ஆண்டுதோறும் கலந்தாய்வு மூலம் நடைபெறும் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் வழங்கப்பட்டு வரும் 100 இடங்கள் ஒதுக்கீட்டினை 500 இடங்களாக உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் 2012ஆம் ஆண்டில் ஆணையிட்டார்கள்.

- ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை உருவாக்குவதற்காக “சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை” (Scholorship for Elite Sports Persons) என்ற திட்டம் ஒன்றினை துவக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். இந்தத் திட்டத்தின்கீழ், வருடத்திற்கு ஒவ்வொரு வீரருக்கும் தலா 25 இலட்சம் ரூபாய் வீதம், **அதிகபட்சமாக 12 விளையாட்டு வீரர்களுக்கு வழங்கி அவர்களை தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.**

- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் விளையாட்டுகளில் அதிக அளவில் பங்கு பெறுவதை ஊக்குவிப்பதற்காக, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தியும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உதவித்தொகையை 6,500 ரூபாயிலிருந்து 13,000 ரூபாயாக உயர்த்தியும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

- தமிழ்நாட்டிலுள்ள தடகள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில், முதலமைச்சர் கோப்பைக்காக மாநில அளவில் நடத்தப்படும் 20 வகையான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் பரிசு பெறும் வீரர் / வீராங்கனைக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசு வெல்பவர்களுக்கு தலா 75,000 ரூபாயும் மற்றும் மூன்றாம் பரிசு வெல்பவர்களுக்கு தலா 25,000 ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

- கிராம அளவில் சிறப்பாக திகழும் விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றுக்கு ஒரு கிராமம் வீதம் 31 கிராமங்களை தேர்ந்தெடுத்து, அக்கிராமங்களில் பிரபலமாக உள்ள விளையாட்டிற்கு ஏற்ப, விளையாட்டு மைதான வசதி ஏற்படுத்துதல், விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல், இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

- தமிழ்நாட்டிலுள்ள பத்து கடற்கரை மாவட்டங்களில் கடற்கரை கால்பந்து, கடற்கரை கையுந்து பந்து மற்றும் கடற்கரை கபடி போட்டிகள் நடத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

➢ கூடைப்பந்து மற்றும் கையுந்து பந்து விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில் திருச்சி, திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் கால்வாலியம் செயற்கை தகடுகளாக மேற்கூரை வசதியுடன் கூடிய கூடைப்பந்து மற்றும் கையுந்துபந்து விளையாட்டு மைதானங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமையை இறைவன் அளித்துள்ளான்.

சிலர் கல்வியில் சிறந்தவர்களாக இருப்பார்கள். சிலர் விளையாட்டில் சிறந்தவர்களாக இருப்பார்கள். சிலர் கலைத்துறையில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.

எனவே, **ஒவ்வொருவரிடமும் உள்ள திறமைகளை கண்டறிந்து, அவர்களிடம் உள்ள திறமையை வளர்ப்பதற்கான உரிய பயிற்சிகளை வழங்குவதே அரசின் கடமையாகும்.** இதன் அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு கீழ்க்கண்டவற்றை செயல்படுத்தி வருகின்றது :

❖ உலகத் திறனாளர்களை கண்டறியும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், விளையாட்டில் அதிக திறமை உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் சர்வதேச போட்டிகளில் பங்குபெற்று வாகை சூட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

❖ தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்ட தலைநகரிலும், ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

❖ விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தீவிர பயிற்சி அளிக்க 27 விளையாட்டு விடுதிகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

❖ கனோயிங் மற்றும் கயாக்கிங் எனும் நீர் விளையாட்டு உலகம் முழுவதும் பிரபலம் அடைந்துள்ளது. இது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இடம் பெறுகிறது. இதைக் கருத்தில் கொண்டும், இறகுப் பந்தாட்ட போட்டிகளில் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்லக் கூடிய திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக வளாகம் அருகில் **கனோயிங் மற்றும் கயாக்கிங் விளையாட்டுகளுக்கு முதன்மை நிலை விளையாட்டு மையம் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கவும், ஒரு இறகுப் பந்து அகாடமி 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

இந்த நடவடிக்கைகள் யாவும் மாண்புமிகு அம்மாவின் அரசு விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் மீது கொண்ட அக்கறையினை பறைசாற்றும் விதமாக அமைந்துள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக உலக அளவில், தேசிய அளவில் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அதிக அளவில் பதக்கங்கள் பெற்றுள்ளனர். எடுத்துக்காட்டாக திருச்சி மாவட்டம், லால்குடி அருகே வாழத்தியூர் கிராமத்தில் பிறந்த திரு. ஆரோக்கிய ராஜீவ் அவர்கள் தன்னுடைய கடின உழைப்புடன் கூடிய அயராத பயிற்சியால் கடந்த மாதம்

இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தடகளத்தில் 2 வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்து, தமிழ்நாடு அரசின் உயரிய ஊக்கத் தொகையான ரூ.60 இலட்சம் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். **இதே ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தின் சார்பில் மொத்தம் 31 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள். அவர்களில் 16 விளையாட்டு வீரர்கள், 5 வெள்ளிப் பதக்கம் மற்றும் 9 வெண்கலப் பதக்கங்கள் வென்று சாதனை படைத்தார்கள்** என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதன்மூலம் இந்தியாவிலேயே, ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்றவர்களின் பட்டியலில் மூன்றாம் இடத்தை பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களைப் பாராட்டி ஊக்குவிக்கின்ற விதமாக, பதக்கம் வென்றவர்களுக்கும், அவர்களது பயிற்சியாளர்களுக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு மொத்தம் 5 கோடியே 98 இலட்சம் ரூபாயை உயரிய ஊக்கத்தொகையாக வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, ஆஸ்திரேலியாவின் கோல்டு கோஸ்ட் நகரில் நடைபெற்ற 21ஆவது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்ற 7 விளையாட்டு வீரர்களுக்கும், அவர்களது பயிற்சியாளர்களுக்கும் சேர்த்து மொத்தம் 4 கோடியே 83 இலட்சம் ரூபாய் உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

அகில இந்திய பள்ளிக்குழுமத்தின் சார்பாக 14 வயதிற்கு உட்படோரர், 17 வயதிற்குட்பட்டோர் மற்றும் 19 வயதிற்கு உட்பட்டோர் ஆகிய மூன்று பிரிவுகளில் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு விளையாட்டுகளுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், முதன்முறையாக பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தி, அவர்கள் உலகளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொண்டு சாதனை படைப்பதற்கு ஏதுவாக, இவ்விளையாட்டுப் போட்டிகளில் **தமிழகத்தின் சார்பாக கலந்துகொண்டு தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.2 இலட்சமும், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.1.50 இலட்சமும், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டது.**

இதன்படி, 2017–2018ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய பள்ளிக்குழும விளையாட்டுப் போட்டிகளில், பல்வேறு போட்டிகளில், தமிழகத்தின் சார்பாக கலந்துகொண்டு **பதக்கங்கள் வென்ற 465 மாணவ, மாணவியருக்கு ரூபாய் 8 கோடியே 21 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை ஊக்கத்தொகையாக இவ்விழாவில் வழங்கியதில் நான் பெருமைகொள்கிறேன்** என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

2017ஆம் ஆண்டு தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த மேசைப் பந்து விளையாட்டு வீரர் திரு. சத்தியனுக்கு அர்ஜுனா விருதும், பயிற்சியாளர் திரு. சீனிவாச ராவ் அவர்களுக்கு துரோணாச்சாரியார் விருதும் வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறையில் நல்ல வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இங்கே விரிவாக எடுத்துக் கூறினேன். விளையாட்டுத் துறையில் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்குவதற்கு அரசு என்னதான் பெரிய அளவில் திட்டங்களை செயல்படுத்தினாலும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியிடங்கள் நிரப்புவதில்

விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு அவர்களிடமும், அவர்களது குடும்பத்தினரிடமும் நிலவுகிறது.

“மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு என்ன என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ அந்த வழிகளைப் பற்றி நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்” என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையை செயல்படுத்தும் மாண்புமிகு அம்மாவின் அரசு, விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில், குறிப்பிட்ட பதவிகளில் **தகுதியின் அடிப்படையில் 2 விழுக்காடு வரை உள் ஒதுக்கீடாக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எனது சுதந்திர தின உரையில் அறிவித்து, அதனை செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.**

இதன் முதல் கட்டமாக, தலைமை செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இக்குழு விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து, இந்த உள் ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தும்.

இந்த அறிவிப்பு அதிக அளவில் இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஈடுபடச் செய்ய வழிவகை செய்யும் என்று சொன்னால் அது மிகையாகாது.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள அரசு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களில் கபடி மற்றும் கைப்பந்து

போன்ற விளையாட்டுகள் பள்ளிக் கல்வித்துறை மற்றும் உயர்கல்வித் துறை மூலமாக செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் தமிழ்நாட்டை சேர்ந்த இளைஞர்கள் சர்வதேச, தேசிய மற்றும் மாநில அளவில் நடக்கும் போட்டிகளில் அதிக அளவில் பங்குபெறுவார்கள் என நம்புகிறேன். அது மட்டுமன்றி, விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளின் குடும்பத்தாருடைய முழு ஒத்துழைப்பும், ஈடுபாடும் இவர்களுக்குக் கிடைக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் ஒவ்வொருவரும் அவரது இலக்கினை அடைவதற்காக சில நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும். அவை Specific, Measurable, Achievable, Realistic and Time Bound. இது SMART என்று சுருக்கமாக அழைக்கப்படும்.

இதை கூறும்போது எனக்கு ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது. ஃப்ளோரன்ஸ் சாட்விக், ஜூலை 4, 1952இல் அமெரிக்காவில் உள்ள கேடலினா கால்வாயை நீந்திக்கடந்த முதல் பெண்மணி என்ற பெருமையை அடைவதற்கு போராடிக் கொண்டிருந்தார். அவர் ஏற்கெனவே இங்கிலிஷ் கால்வாயை கடந்து வெற்றிகண்டவர். உலகே அதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தது. சாட்விக் அடர்ந்த மூடுபனியையும், இரத்தத்தை உறைய வைக்கும் குளிரையும், பல சமயங்களில் சுறா மீன்களையும் எதிர்த்துப் போராடினார்.

அவர் கரையை அடைய பெருமுயற்சி செய்தாலும் ஒவ்வொரு முறையும் தனது மூக்குக் கண்ணாடி மூலம் பார்த்தது என்னவோ மூடு பனியைத்தான். கரையை பார்க்க முடியாததால் தனது முயற்சியை கைவிட்டார். அவர், “நான் நொண்டிச் சாக்கு சொல்ல விரும்பவில்லை. நான் கரையை மட்டும் பார்த்திருந்தால் வெற்றி இலக்கை அடைந்திருப்பேன்” என்று கூறினார்.

கரைக்கு வெறும் அரைமைல் தொலைவிலேயே தான் இருந்ததை அறிந்ததும் சாட்விக் மனம் வெறுத்துப்போனார்.

அவரால் நீந்த முடியாமல் முயற்சியை அவர் கைவிடவில்லை. அவரது இலக்கு எட்டக்கூடிய தூரத்தில் எங்கும் தெரியாததாலேயே கைவிட்டார். மற்ற எதுவும் அவரைத் தடுக்கவில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அவர் மீண்டும் திரும்பிச்சென்று கேடலினா கால்வாயை நீந்திக் கடந்தார். இம்முறை, மோசமான வானிலை இருந்தாலும்கூட, தனது மனதில் இலக்கை அவர் நினைவு வைத்திருந்ததால், அதனை அடைந்தது மட்டுமல்லாமல் இரண்டு மணிநேரம் முன்னதாகவே கடந்து ஆண்களின் சாதனையை முறியடித்துவிட்டார்.

எனவே, **இளைஞர்கள் முதலில் இலக்கை தெளிவாக நிர்ணயித்துக்கொண்டு, வெற்றிபெறும் வரை அதனை நோக்கி பயணிக்க வேண்டும்.**

விளையாட்டு என்றால் அது இளைஞர் நலனையே சார்ந்திருக்கும். விளையாட்டினால் இளைஞர்கள் நலன் பெறலாம். இளைஞர்களினால் விளையாட்டு மேம்பாடு அடையும். **விளையாட்டும், இளைஞர் நலனும் ஒன்றுக்கு ஒன்று பின்னிப் பிணைந்தவை.**

இளைஞர்கள் மீது அதிக நம்பிக்கை வைத்த ஏவுகணை நாயகன் மறைந்த பாரத குடியரசுத் தலைவர் மாண்புமிகு டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டும் என்று விரும்பினார்.

“புதிய எண்ணங்களை உருவாக்கும் உள்ளத்து உறுதி இன்று என்னிடம் மலர்ந்துள்ளது. எனக்கென்று ஒரு புதிய பாதையை உருவாக்கி அதில் பயணம் செய்வேன். முடியாது என்று எல்லோரும் சொல்வதை, என்னால் முடியும் என்று கூறும் மன உறுதி என்னிடம் உருவாகிவிட்டது. புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகளை செய்ய

முடியும் என்ற உறுதி, என்னிடம் என்றைக்கும் கொந்தளிக்கிறது. மன உறுதி இளம் சமுதாயத்தின் அஸ்திவாரம். இந்த நாட்டின் இளைய சமுதாயத்தின் உறுப்பினரான நான் என் கடின உழைப்பாலும், உள்ளத்து உறுதியாலும் தோல்வியை தோல்வியடையச் செய்து வெற்றி பெற்று என் நாட்டை வளமான நாடாக்குவேன் என உறுதி ஏற்றுக் கொள்கிறேன்'' என்று இளைஞர்களுக்கு அவர் கூறிய அறிவுரையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2020க்குள் இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டும் என்ற இலட்சியத்தை நாம் அடைய வேண்டுமானால் நம்நாட்டு இளைஞர் சமுதாயத்தின் பங்களிப்புடன்தான் இது சாத்தியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். **அனைத்து துறைகளிலும் நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச்செல்ல அறிவார்ந்த இளைஞர்களை தயார்படுத்துவதில் தமிழ்நாடு தனது உரிய பங்கினை அளிக்கும்** என்று இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இளைஞர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் ஆளுமைத் தன்மைக்கு உதவும் திட்டங்களை செயல்படுத்தவும், கண்காணிக்கும் விதமாகவும் இளைஞர் நல இயக்ககம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இயக்குநரகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களில் இளைஞர்கள் தங்களை இணைத்துக்கொண்டு செயல்பட வேண்டும்.

சமூக நலத்திற்காக பாடுபடும் இளைஞர்களின் சேவையை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 3 ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த விருதினை பெறுகின்ற வகையில் ஒவ்வொரு இளைஞர்களும் சமூகப் பணி ஆற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

நற்பண்பு, நட்புடமை, ஒழுக்கம், தலைமை பண்பு, சமய சார்பின்மை, துணிவு, செயலாற்றல் மற்றும் உன்னதமான தன்னலமற்ற சேவை மனப்பான்மையை இளைஞர்களிடம்

வளர்ப்பதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணாக்கர்கள் அதிக அளவில் இந்த தேசிய மாணவர் படையில் சேர்ந்து நாட்டுப் பணியாற்ற முன்வர வேண்டும்

"Not Me But you" என்ற குறிக்கோளுடன் தொடங்கப்பட்ட நாட்டுப் நலப்பணித் திட்டத்தில் இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்று நாட்டுநலப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட திட்டம்தான் மழைநீர் சேகரிப்புத் திட்டம். இந்தத் திட்டத்தால் ஏற்படும் பயன்கள் குறித்தும், இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவது குறித்தும் இளைஞர்கள் முன்னுதாரணமாக தங்கள் வீடுகளில் செயல்படுத்துவதோடு மட்டுமின்றி, தாங்கள் வாழும் பகுதியில் உள்ள மக்களிடம் எடுத்துரைத்து, இந்த திட்டம் மேலும் பரவலாக்கப்பட உதவ வேண்டும்.

கிராமங்களில் உள்ள இளைஞர்கள் அங்குள்ள மக்களிடம் ஒவ்வொரு வீட்டிலும் கழிவறை இருக்க வேண்டியதன் அவசியத்தையும், அதன் பயன்களையும் எடுத்துரைத்து, தங்கள் வீட்டில் கழிவறையைக் கட்டி, ஒவ்வொரு இல்லத்திலும் கழிவறை இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி, மழைக்காலங்களில் ஆங்காங்கே தேங்கும் நல்ல நீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் டெங்கு பரவுகிறது. இதற்கான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்திடவும், தன்னார்வம் மிக்க இளைஞர்களைக் கொண்டு, இதற்கான பணிகளை செய்திடவும் இளைஞர்கள் உதவ வேண்டும்.

வருகின்ற **2019** ஜனவரி **1**ஆம் தேதி முதல் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு முழுவதுமாக தடை செய்யப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை நமது எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம்

என நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் நான் அறிவித்து இருந்தேன்.

இந்தத் திட்டம் முழுமையாக வெற்றி பெறுவது நமது இளைஞர்கள் கையில்தான் உள்ளது. இளைஞர்களாகிய நீங்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

எதிர்கால இந்தியாவை வழிநடத்துபவர்களான நீங்கள் முன்உதாரணமாக பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். இதைப்பார்த்து மற்றவர்களும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தவிர்ப்பார்கள். இதன் மூலம் பிளாஸ்டிக் இல்லாத தமிழகம் உருவாக வழிவகை ஏற்படும்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் தங்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினியை பயன்படுத்தி தங்களது தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

கணினியின் மூலம் உபயோகமான விவரங்களை கண்டறிந்து அதனை மக்கள் நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.

இளைஞர்களாகிய நீங்கள் சிலரின் தீய எண்ணங்களுக்கு இடம் கொடுத்து தவறான பாதையில் செல்லாமல், நான் கூறிய பல்வேறு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டால், நாட்டின் நலனில் அக்கறையுள்ள ஒரு நல்ல குடிமகனாக உங்களை உயர்த்திக் கொள்வதற்கு வழிவகை ஏற்படும்.

விளையாட்டு வீரர்களே! வீராங்கனைகளே மற்றும் இளைஞர் பெருமக்களே! நீங்கள் வெற்றி பெற விளையாடுங்கள் - தோல்வியை தவிர்க்க அல்ல. தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள். நீண்ட கால திட்டங்களைப் பற்றி எப்போதும் சிந்தியுங்கள். உங்கள் பலத்தை மதிப்பீடு செய்து அதன்படியே திட்டமிடுங்கள். ஒரு பரந்த,

தொலைநோக்கு கண்ணோட்டத்துடனேயே முடிவெடுங்கள். உங்களது நேர்மையை ஒரு போதும் விட்டுக்கொடுத்து விடாதீர்கள் என்று கூறி,

இங்கே பேசியவர்கள் பல கோரிக்கைகளை வைத்தார்கள். அதை பரிசீலித்து ஒரு கோரிக்கையை நான் இந்த நேரத்திலே அறிவிக்க விரும்புகின்றேன். ஏற்கெனவே, தற்போது வேலைவாய்ப்பிலே உள்ள 2 சதவீதமான உள்ஒதுக்கீடு 3 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னே பேசிய பல்வேறு சங்கத்தினுடைய நிருவாகிகள், பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் விளையாடினால் என்ன நன்மை கிடைக்கும் என்று கேட்கின்றார்கள் என்று சொன்னார்கள். ஏற்கெனவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசினிடத்திலே இந்த சங்கத்தினுடைய நிருவாகிகள், மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள், விளையாட்டை தமிழகத்திலே ஊக்குவிக்கின்ற விதமாக இன்றைக்கு அரசின் சார்பாக 2 சதவீத உள்ஒதுக்கீட்டை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டார். அதை அறிவித்தோம். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நிகழ்ச்சியிலே, பல்வேறு சங்கத்தினுடைய நிருவாகிகளும், விளையாட்டுத் துறை அமைச்சரும் வேண்டுகோள் வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அந்த 2 சதவீதத்தை 3 சதவீதமாக உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொருவரும் இளைஞர் பருவத்திலே விளையாடுவது அவசியம். விளையாட்டில் கலந்துகொண்டு விளையாடுகின்றபொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சி எந்த விதத்திலும் குறைவானது அல்ல. மற்ற பதவிகளில் இருக்கின்ற மகிழ்ச்சியைவிட விளையாடுகின்றபொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சிதான் சிறந்த மகிழ்ச்சியென்று இந்த

நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். ஒவ்வொருவரும் விளையாட்டுப் போட்டிகளிலே கலந்துகொண்டு விளையாடுகின்ற பொழுது மனம் ஒருமைப்படும், அப்பொழுது அந்த விளையாட்டுதான் நமக்கு கண்ணுக்குத் தெரியும், எதுவுமே ஞாபகத்திற்கு வராது. ஆகவே, அப்படி, அந்த விளையாட்டை மேலும் தமிழகத்திலே ஊக்குவித்து, எனக்கு முன்னாலே விளையாட்டுத் துறை அமைச்சர் அருமை சகோதரர் பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் இங்கே தெரிவித்தார். இந்தியாவிலேயே, சர்வதேச அளவிலே நம்முடைய விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள் பல்வேறு போட்டியிலே கலந்துகொண்டு தங்கம் வென்றார்கள். 8ஆவது இடத்திலிருந்து இப்பொழுது 3ஆவது இடத்திற்கு நாம் முன்னேறி இருக்கின்றோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு இந்த விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு வகையிலே உதவி செய்து, 3ஆவது இடத்திலிருந்து முதல் இடத்திலே வருவதற்கு உங்களுக்கு அனைத்து வகையிலும் உதவி செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த பாராட்டு விழாவிற்கான சிறப்பான ஏற்பாடுகள் செய்த அனைத்து அமைப்புகளுக்கும் நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.10.2018 அன்று*
சென்னை, நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற
விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அரசின் வேலைவாய்ப்பில்
2 விழுக்காடு வரை உள்ஒதுக்கீடு அறிவித்ததையொட்டி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விளையாட்டுச்
சங்கங்களின் சார்பில் பாராட்டு விழா மற்றும் தேசிய பள்ளிக்குழும
விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு
காசோலை வழங்கும் விழாவில் ஆற்றிய விழாப் பேருரை

விபத்தில்லா நாடு உருவாக அரசுடன் மக்களும் ஒத்துழைக்க வேண்டும்!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே! கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஹரிஹரன் அவர்களே! கோவை மாநகராட்சி ஆணையர் முனைவர் விஜய கார்த்திகேயன் அவர்களே! கோவை மாநகர காவல் துறை ஆணையர் திரு. ஸ்மித் சரண் அவர்களே!

“உயிர்” என்ற தன்னார்வ அமைப்பை துவக்கியுள்ள டாக்டர் பாலசுப்பிரமணியம் அவர்களே! டாக்டர் சண்முகநாதன் அவர்களே! டாக்டர் கார்த்திகேயன் அவர்களே! திரு. சஞ்சய் ஜெயவர்தன வேலு அவர்களே! டாக்டர் ராஜசேகரன் அவர்களே! மற்றும் இந்த தன்னார்வ அமைப்பின் உறுப்பினர்களே! பத்திரிகை

மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ, மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

“அரிது அரிது மானிடராதல் அரிது மானிடராயினும் கூன்குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது”

என்று தமிழ் மூதாட்டி ஔவையார் அவர்கள், மானிடப் பிறவியின் சிறப்பைப் பற்றி இந்த பாடலில் தெளிவாக கூறியுள்ளார். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மானிடப் பிறவியினை நாம் வீணாக விபத்துகள் மூலம் இழக்க வேண்டுமா? என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும். உயிரின் அருமையைப் பற்றி மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு எடுத்துரைத்து, விபத்துகள் இல்லா கோவை மாநகரை உருவாக்க அரசுடன் கைகோர்த்து செயல்படுவதற்காக கோவையிலுள்ள சமூக ஆர்வலர்களால் உருவாக்கப்பட்ட “உயிர்” என்ற தன்னார்வ அமைப்பினை துவக்கிவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சாலை விபத்துகளினால் உண்டாகும் உயிரிழப்பு, ஊனம் ஆகியவற்றைத் தவிர்க்க, மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த உருவாக்கப்பட்டுள்ள அமைப்பின் பெயர்தான் ‘உயிர்’. **வாகன ஓட்டிகள் விதிகளை மதிக்காமல் நடந்து கொள்வதும், மிதமிஞ்சிய வேகமும், குடித்துவிட்டு வாகனங்கள் ஓட்டுவதும்தான்** கோவையில் நிகழும் 70 சதவீத **விபத்துகளுக்கு காரணம்** என்கிறது ஒரு புள்ளிவிவரம். தலைக்கவசம் அணிவது, சீட் பெல்ட்டுகளை மாட்டிக்கொள்வது, வாகனங்களை ஓட்டும்போது செல்லிடப் பேசியில் பேசாமல் இருப்பது போன்ற அடிப்படை பாதுகாப்பு அம்சங்களைக் கூட கருத்தில் கொள்ளாமல், பயணிகள் அலட்சியம் காட்டுவது பல விபத்துகளுக்கு வழிவகுக்கிறது.

வாகனங்களை இயக்குபவர்கள் தங்களது பொறுப்பை உணர்ந்தால் மாற்றங்கள் கட்டாயம் ஏற்படும். சாலைப் பாதுகாப்பு

விதிகளும், சாலை பொறுப்புணர்ச்சியும், போக்குவரத்து நடத்தையும் ஒரு மக்கள் இயக்கமாக மாற்றி விபத்துகளே இல்லாத கோயம்புத்தூரை உருவாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதுதான் 'உயிர்' என்ற இந்த அமைப்பு.

இந்த அமைப்பு, சாலை விபத்தினை தடுக்க ஒரு நூதனமானத் திட்டத்தினை உருவாக்கியுள்ளதாக அறிகிறேன். அதாவது, கல்விக்கூடங்களில் சாலை விழிப்புணர்வை ஏற்படுத்த 'குட்டி காப்ஸ்' (Kutty Cops) என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ், பள்ளிக் குழந்தைகள் வீட்டின் கண்காணிப்பு அதிகாரிகளாக செயல்படுவார்கள் எனவும், இவர்கள் பெற்றோர், உறவினர், நண்பர் ஆகியோர் விதிகளை மீறும்போது அவர்களுக்கு போக்குவரத்து விதிகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவார்கள் எனவும் நான் அறிகிறேன்.

இதன் மூலம் மக்களிடையே ஒரு மாற்றத்தினை சுலபமாக கொண்டுவர இயலும் என நான் நம்புகிறேன். **"மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று தன் வாழ்நாளையே அர்ப்பணித்த மாண்புமிகு அம்மா அவர்கள், மக்களின் வாழ்வை பாதுகாக்கும் வகையில் பல்வேறுத் திட்டங்களைக் கொண்டு வந்து செயல்படுத்தினார்கள். அவற்றில் சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.**

- ❖ மாண்புமிகு அம்மா அவர்களால் நெடுஞ்சாலை ரோந்து கண்காணிப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் தற்போது 272 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் இயங்கி வருகின்றன. இவை, விபத்துகளை தடுக்கும் வகையில், முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொண்டு வருகின்றன. நெடுஞ்சாலைகளில் விபத்துகள் நேரும்போது இந்த வாகனங்கள் விரைந்து செயல்பட்டு, பாதிக்கப்பட்டோரை

அருகிலுள்ள மருத்துவனைகளில் சேர்த்து உயிர்களை காப்பாற்றி வருகின்றன. இதுவரை, காயமடைந்த 15,757 நபர்கள் மாநிலம் முழுவதும் இந்த நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களால் காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

❖ இவ்வாகனங்கள் அனைத்திலும் புவிசார் இருப்பிட முறைமை (GPS) கருவி பொருத்தப்பட்டு, அந்தந்த மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் இருந்தபடியே இவ்வாகனங்களின் இயக்கம் கண்காணிக்கப்படுகிறது.

❖ **"108" ஆம்புலன்ஸ் சேவை தமிழ்நாட்டில் கட்டணமில்லாமல் வெற்றிகரமாக இயக்கப்படுகிறது.** இச்சேவைகள் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் இலவசமாக வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் 926 அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்திகள் இயங்குகின்றன. ஒவ்வொரு ஆம்புலன்ஸுக்கும் ஒரு முழு பயிற்சி பெற்ற அவசர மருத்துவத் தொழில் நுட்ப நிபுணர் (EMT) மருத்துவமனைக்கு கொண்டு வருவதற்கு முன்னர் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை அளிக்கிறார். அவசர சிகிச்சைக்கான மருந்துகள் 108 தகவல் அழைப்பு மையத்தில் உள்ள மருத்துவரின் ஆலோசனையின் அடிப்படையில் EMT ஆல் வழங்கப்படுகிறது. இவ்வாறு அவசர சிகிச்சை வழங்குவதன்மூலம் கடந்த 10 ஆண்டுகளில் 4,68,485 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

❖ அவசர கால இலவச 108 சேவை 7.21 கோடி மக்களுக்கு சேவையாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

❖ ஒரு அவசரகால ஊர்தி சராசரியாக ஒரு நாளைக்கு 3.9 பயனாளிகளுக்கு சேவை செய்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு அம்மாவின் அரசு, விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கும் வகையில், கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

விபத்து மற்றும் அவசரகால சிகிச்சைக்கு அழைக்கப்படும் பகுதிக்கு அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்தி செல்லும் நேரம் குறைய பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

- ❖ அவசரகால ஆம்புலன்ஸ் ஊர்திகளில் ஜி.பி.எஸ். சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.
- ❖ 108 ஆம்புலன்ஸ் செயலி (Avasaram 108 Mobile App) மூலம் மக்கள் அவசர காலங்களில் 108யினை அழைக்கும்போது அழைப்பவர்களின் தகவல்கள் துல்லியமாக மையக்கட்டுப்பாட்டு அறையில் காண இயலும். இதன்வாயிலாக மையக் கட்டுப்பாட்டு அறையில் உள்ள அலுவலர், அழைத்தவரின் அருகாமையில் உள்ள 108 அவசரகால ஊர்தியை GPS கருவியின் மூலம் கண்டறிந்து உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.
- ❖ 108 அவசரகால ஓட்டுநர் செயலி அறிமுகம் செய்யப்பட்டு, ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களுக்கு ஆன்ட்ராய்டு கைபேசி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ சாலை விபத்தில் காயம் அடைந்த பிறகு முதல் ஒரு மணி நேரம் பொன்னான மணித்துளிகள் என்று அழைக்கப்படுகிறது. அந்த முதல் ஒரு மணி நேரத்தில், சரியான முதலுதவி வழங்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்பும், காயங்களின் தீவிரத்தன்மை குறைவதற்கான வாய்ப்பும் அதிக அளவில் உள்ளன. இதனால்தான், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசரகால பாதுகாப்புத் திட்டம், பொன்னான மணித்துளிகள் கொள்கையில் கவனம் செலுத்தி, சிகிச்சை வழங்குவதற்கான காலத்தை குறைக்க அதிக கவனம் செலுத்துகிறது.
- ❖ இந்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த ஒரு வருடத்தில் பதிற்குறிப்பு நேரம் சராசரியாக நகர்ப்புறங்களில் 13 நிமிடமாகவும், ஊரகப் பகுதிகளில் 17 நிமிடமாகவும், சாலைப் போக்குவரத்து விபத்துகளுக்கு 13 நிமிடமாகவும் குறைக்கப்பட்டுள்ளன.

சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட நபர்களை தொலைவில் இருக்கும் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லும்போது உரிய அவசரசிகிச்சை அளித்து அவர்களது உடல்நிலையை சீராக்க அவசர சிகிச்சை மையம் அமைக்கப்பட்டுள்ளது. அவசர சிகிச்சை மையம் என்பது ஆரம்ப சுகாதார நிலையம் / அரசு மருத்துவமனைகளில் 3 முதல் 6 படுக்கைகளுடன் பயிற்சிப் பெற்ற மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தில் வெண்ட்டிலேட்டர் போன்ற உயர்ந்த உயிர் காக்கும் கருவிகளும் உள்ளன. இம்மையங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் தாம்பரம் அரசு மருத்துவமனை, பாடியநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ஈஞ்சம்பாக்கம் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டது. இம்மையங்களின் செயல்பாட்டினால், 2013ஆம் ஆண்டு முதல் மார்ச் 2018 வரை 23,949 நபர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. கூடுதலாக 10 அரசு மருத்துவமனைகளில் இம்மையங்கள் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

“மருத்துவமனைக்கு வரும்முன் தகவல் அறிவிப்பு” முறை மூலம் 108 ஆம்புலன்ஸ் ஊழியர்கள் மருத்துவமனையில் அமைந்துள்ள அவசரசிகிச்சை மையத்திற்கு (TI) தொடர்பு கொண்டு விபத்தில் காயம் அடைந்தவர்கள் பற்றிய குறிப்புகளை முன்கூட்டியே அறிவிப்பதன் மூலம் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.

- சென்னை அரசு கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
- மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை,
- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
- கன்னியாகுமரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
- சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை,
- வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

ஆகிய உயர்நிலை மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. **கூடுதலாக, கரூர், கிருஷ்ணகிரி, கோவில்பட்டி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் தலைக்காய மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.** மேலும், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கள்ளக்குறிச்சி மற்றும் கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் விபத்து சிகிச்சை மையங்கள் 28 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட உள்ளன.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவமனைகளிலும் விபத்து சிகிச்சை மையம் துவக்கப்பட உள்ளது. இதுபோன்று, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் ஏற்கெனவே உள்ள விபத்து சிகிச்சை மையங்களை தரம் உயர்த்துதல் மற்றும் விபத்து சிகிச்சை மையங்களை துவக்குதல் போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்ட மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் இந்த ஆண்டில் விபத்துகளுக்கான மரண விகிதம் 8.27லிருந்து 4.89 ஆகவும், அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் மரண விகிதம் 5.51இல் இருந்து 2.72 ஆகவும் குறைந்துள்ளது.

விபத்துகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயரிய சிகிச்சை வழங்குவதற்காக 215 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறுத் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது. எனவே, உயர்தர மருத்துவச் சேவைகளை வழங்குவதில் மட்டுமல்லாமல், மிகச்சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தித்தருவதிலும், தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. இவ்வாறு, பல முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி வருவதன் காரணமாக **'நிதி ஆயோக்' வெளியிட்டுள்ள "சுகாதாரமான மாநிலம் – முற்போக்கு இந்தியா" அறிக்கையில் மூன்று முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது.**

மாண்புமிகு அம்மாவின் அரசு பொறுப்பேற்றது முதல் பாதுகாப்பான சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பயண நேரம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துகளும் தடுக்கப்பட்டுள்ளது.

விபத்தில்லா நாட்டினை உருவாக்குவதற்கு அரசுடன் மக்களும் ஒத்துழைக்க வேண்டும். மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் உங்களைப் போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஈடுபட வேண்டும். பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் நிருவாகத்துடன் பேசி, அங்குள்ளவர்களுக்கு போக்குவரத்து விதிகளை பின்பற்றுவது பற்றியும், விபத்தினால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும் எடுத்துரைக்க கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடத்தி மக்களிடையே ஒரு புரிதலை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

விபத்து பற்றிய குறும்படங்களை ஆங்காங்கே திரையிடுதல், விளம்பர அறிக்கைகளை மக்களிடையே விநியோகம் செய்தல், விபத்தினை கண்டவுடன், பாதிக்கப்பட்டவர்களை, உடனே

மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுதல் போன்ற பணிகளை அரசுடன் சேர்ந்து உங்களைப் போன்ற தன்னார்வ அமைப்புகள் செய்வதன் மூலம் விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகளை அறவே தவிர்க்க முடியும் என்று நான் உறுதியுடன் நம்புகின்றேன்.

இறைவன் நமக்கு பல்வேறு சாதனைகளை புரிவதற்காக இந்த அரிதான மானிடப் பிறவியினை அளித்துள்ளான். அதனை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும். Slow and steady wins the race என்ற ஆங்கில பழமொழிக்கேற்ப நிதானமாகவும், கவனமாகவும் பணியாற்றினால் நாம் வாழ்க்கையில் பல வெற்றிகளைப் பெறலாம். இதனை நாம் வாகனங்களில் பயணம் செய்யும்போதும் கடைபிடிப்போம் என உறுதி எடுத்துக் கொள்ள உங்களை நான் அன்புடன் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கோவை மாநகரத்திலே “உயிர்” அறக்கட்டளையின் சார்பாக, விபத்தில்லாத ஒரு கோவை மாநகரமாக உருவாக்க வேண்டுமென்று இந்த அறக்கட்டளையை உருவாக்கி இருக்கின்றார்கள். இந்த அறக்கட்டளைத் துவங்குகின்றபோதே என்னை வந்து சந்தித்து, நீங்கள் வந்து இந்த “உயிர்” அறக்கட்டளையைத் துவக்கி வைக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரும் வேண்டுகோள் வைத்தார். அதை ஏற்று நான் இங்கே வந்து உங்களோடு கலந்து கொண்டு இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றதில் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இது தமிழகத்திற்கு மட்டுமல்ல, **இந்தியாவிற்கே ஒரு முன்னோடியாக Role Modelஆக இந்த அறக்கட்டளை திகழ்வதற்கு, இன்றைக்கு துவக்கமாக உங்கள் மூலம் “உயிர்” அறக்கட்டளைத் துவக்கப்பட்டிருக்கின்றது** என்று மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். மரியாதைக்குரிய டாக்டர் ராஜசேகரன் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, இதனுடைய நோக்கத்தைப் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்கள். இதற்காக

முதற்கட்டமாக “உயிர்” அறக்கட்டளையின் சார்பாக ரூ.4.5 கோடி நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு உபகரணங்கள் வாங்கி, இங்கே வைத்திருக்கிறோம், என்ற அந்த தகவல்களையெல்லாம் இங்கே சொன்னார்கள். இன்றைக்கு இதன் மூலமாக விபத்துக்களை தடுக்க முடியும், விபத்துக்களை குறைக்க முடியும் என்று தெளிவாக குறிப்பிட்டார்கள். ஆங்காங்கே, சாலை சந்திப்புகளிலே இங்கே இருக்கின்ற நவீன கேமராவை அமைக்கின்றபொழுது அந்த கேமரா மூலமாக எந்த விபத்தும் ஏற்படாமல் தடுக்கின்ற நோக்கோடு இந்த App உருவாக்கியிருக்கின்றார்கள். **இன்றைக்கு, காவல்துறை உடனடியாக அதைக் கண்டறிந்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து எதிர்காலத்திலே, விபத்தில்லா ஒரு மாநகரமாக உருவாக்குவதற்கு பேருதவியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.** அதேபோல, இங்கே சுட்டிக்காட்டுகின்றபொழுது, ஆம்புலன்ஸ் செல்கின்றபொழுது அந்த சாலை சந்திப்பில் இருக்கின்ற signal உடனடியாக அந்த ஆம்புலன்ஸிற்கு வழிவிடுகின்ற விதத்திலே அதையும் ஏற்பாடு செய்திருக்கின்றோம், உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியது. ஏனென்றால், signal **போட்டவுடனேயே அது ஒரு குறிப்பிட்ட நேரம் இருந்த பிறகுதான் அது அணையும். அதுவரைக்கும் காத்திராமல், அந்த ஆம்புலன்ஸ் வருகின்றபொழுதே அதை படம்பிடித்து, உடனடியாக அந்த** signal–**ஐ மாற்றி, அந்த ஆம்புலன்ஸ் செல்வதற்கு வழிவிடுகின்ற ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்,** அதுவும் பாராட்டுக்குரியது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல, இன்றைக்கு கோவை மாநகரத்தை பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஏற்கெனவே கோடிட்டுக் காட்டினார்கள், இதை விபத்தில்லா ஒரு மாநகரமாக உருவாக்க வேண்டுமென்று இந்த “உயிர்” அறக்கட்டளை ஆரம்பித்திருக்கின்றீர்கள். உங்களுக்கு உறுதுணையாக அரசு செயல்படும். ஏனென்று சொன்னால், சாலை சந்திப்புகளில் தான் அதிக

விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, அப்படி சாலை சந்திப்புகளில் எல்லாம் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே இருக்கின்ற சமூக ஆர்வலர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே பல்வேறு பாலங்கள் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல உப்பிலிபாளையம் வரை கிட்டத்தட்ட 9.5 கிலோ மீட்டருக்கு உயர்மட்ட பாலம் கட்டுவதற்கு விரைவாக அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான விரிவானத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பணி முடிந்தவுடன், பாலம் அமைக்கின்ற பணித் துவங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஆத்துப்பாலத்தை இன்றைக்கு ஆய்வு மேற்கொள்ள இருக்கின்றோம். அதுவும் அம்மாவினுடைய அரசில் தான் அந்தப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. காந்திபுரம் மேம்பாலத்திற்கும் அம்மாவினுடைய அரசுதான் நடவடிக்கை எடுத்து, அந்தப் பணிகள் முடிந்து இன்றைக்கு போக்குவரத்து மக்களுக்காக துவக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கோவை மாநகரத்திலே கனரக வாகனங்கள் மற்றும் வெளியூர் செல்கின்ற வாகனங்களெல்லாம் நகரத்திற்குள் வந்துசெல்கின்ற காரணத்தினாலே போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றன. அதற்கு புறவழிச்சாலை வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, கோவை மாநகரத்திற்கு உள்ளே வராமலேயே கோவை புறநகர் பகுதியில் கோவை கிழக்கு புறவழிச்சாலை, கோவை மேற்கு புறவழிச்சாலை என்று 2 புறவழிச்சாலைகள் அமைப்பதற்கும் அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கான நிலம் எடுக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மரியாதைக்குரிய டாக்டர் ராஜசேகரன் அவர்கள் சொல்லுகின்றபொழுது, கோவையிலே பல்வேறு சாலைகளை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே சுட்டிக்காட்டினார்கள், அவை எந்தெந்த சாலைகள் என்பதைப் பற்றியும் கடிதம் மூலமாக கொடுத்திருக்கின்றார், அதையெல்லாம் அரசு பரிசீலித்து முடிந்த அளவிற்கு அந்த சாலைகளையும் அகலப்படுத்துவதற்கான நடவடிக்கையும் அம்மாவினுடைய அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, நான் தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து அனுமதியை பெற்றிருக்கின்றது. 2011ஆம் ஆண்டு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக எனக்கு வாய்ப்பு தந்தார்கள். அதிலிருந்து கிட்டத்தட்ட ஏழாண்டு காலம் இந்தத் துறையின் அமைச்சராக இருக்கின்றேன். இந்த துறையின் அமைச்சராக இருந்த காலத்திலே, இன்றைக்கு மத்திய

அரசிடம் தொடர்பு கொண்டு, நமது சாலைகளையெல்லாம் தரம் உயர்த்த வேண்டும் என்பதற்காக மத்திய அரசிடம் நிதி கேட்டிருக்கின்றோம். அவர்கள், தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துவதற்கு நீங்கள் பரிந்துரைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, கிட்டத்தட்ட மாநிலத்தில் இருக்கின்ற 40 சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த வேண்டும் என்று தேர்வு செய்து, மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு, மத்திய அரசு முதல்கட்டமாக எடுத்துக்கொண்ட சாலைகளில், 12 சாலைகளில் உடனடியாக அந்தப்பணி துவங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், எஞ்சிய சாலைகளையும் விரைவாக பணிக்கு எடுத்துக் கொள்வதற்கு மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு பல்வேறு பகுதிகளிலிருந்து பேருந்துகள் வருகின்றன. நகரத்தின் மையப்பகுதிகளில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்துகள் எல்லாம் நகரத்திற்குள்ளிருந்து வெளியே வரும்பொழுது போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அதையும் குறைப்பதற்காக Bus Port என்ற பேருந்து மையத்தையும் நாங்கள் உருவாக்குவதற்கு மத்திய அரசிடம் கேட்டிருக்கின்றோம். அது மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அது விரைவிலே துவங்கும். இதன் மூலம் நகரங்களிலே போக்குவரத்து நெரிசல் ஓரளவு குறைகின்ற வாய்ப்பு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இன்றைக்கு சென்னையிலிருந்து சேலம் வரை எட்டுவழிச்சாலை அமைக்க மத்திய அரசிடம் கோரிக்கை வைத்து, மத்திய அரசும் அதற்கு அனுமதியளித்து, அதற்குண்டான நில அளவீடுகள் பணி முடிவடைந்து விட்டது. இது குறித்து **நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினாலே சுணக்கம் ஏற்பட்டிருக்கின்றது. சேலத்தில் மட்டுமல்ல, கோவைக்கு வருவதற்கும் அது வசதியாக இருக்கும்.**

ஏனென்று சொன்னால், சென்னையிலிருந்து கோவைக்கு வரவேண்டுமென்றால், 77 கிலோமீட்டர் மிச்சமாகின்றது. மேலும், விபத்துக்கள் குறைகின்றன, நேரம் மிச்சப்படுகிறது.இவையெல்லாம் இந்த சாலை அமைப்பதன் மூலம் ஏற்படுகின்ற நன்மை என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அந்தத் திட்டத்தையும் அம்மாவினுடைய அரசால் விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்து, இந்த "உயிர்" அறக்கட்டளை மக்களுக்கு நன்மை செய்கின்ற ஒரு அறக்கட்டளையாக, இன்றைக்கு கோவை மாநகர மக்களுக்கு கிடைத்திருக்கின்றது என்ற செய்தியை தெரிவித்து, தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் அவர்கள் தொண்டாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, இந்த வாய்ப்பை நல்கியதற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.10.2018 அன்று*
விபத்தில்லா கோவை மாநகரை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள "உயிர்" என்ற தன்னார்வ அமைப்பின் துவக்க விழாவில் ஆற்றிய உரை

மாண்புமிகு அம்மாவின் அரசு வன்னியர்குல மக்கள் நலனுக்காக தொடர்ந்து செயலாற்றி வருகிறது!

சமுதாயத்தில் பின்தங்கிய மக்களின் விடிவெள்ளியாக திகழும் மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இந்த விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே !

தலைமையுரை ஆற்றிய அகில இந்திய வன்னியர் குல க்ஷத்திரிய சங்கங்களின் பேரமைப்பின் தலைவர் மருத்துவர் எஸ்.எஸ்ஆர்.ராமதாஸ் அவர்களே !

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு சமூக ஆர்வலர்கள் பொதுநல அமைப்பின் மாநிலத் தலைவர் திரு. கோ.சூரியமூர்த்தி அவர்களே !

இவ்விழாவிற்கு முன்னிலை வகிக்கின்ற சென்னை வன்னிய குல க்ஷத்திரிய மகா சங்கத்தின் தலைவர் திரு. ஆர்.அன்பரசு அவர்களே !

வடஆற்காடு மாவட்ட வன்னிய குல க்ஷத்திரிய சங்கத்தின் தலைவர் திரு. என்.முனிய கவுண்டர் அவர்களே !

திரு. பி.எஸ்.பழனி நாயகர் அவர்களே !

வாழப்பாடியார் அறக்கட்டளையின் தலைவர் வாழப்பாடி திரு. ஆர்.இராமசுகந்தன் அவர்களே !

இராமசாமி படையாட்சியார் வாழப்பாடியார் பேரவையின் தலைவர் திரு. சைதை வி.தேவதாஸ் அவர்களே !

வன்னியர் க்ஷத்திரியர் சாம்ராஜ்ய இணைப் பொதுச் செயலாளர் திரு. கண்ணன் ஷத்திரியர் அவர்களே !

பாராட்டுரை வழங்கிய படையாட்சியார் பேரவையின் தலைவர் திரு. எம்.பி.காந்தி அவர்களே !

அகில பாரத க்ஷத்திரிய மஹாசபையின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி தலைவர் திரு. ஜி.சந்தானம் அவர்களே !

வன்னியர் மக்கள் சங்கத்தின் தலைவர் திரு.த.குபேந்திர குணபாலன் அவர்களே !

வன்னியர் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் திரு. சி.என்.ராமமூர்த்தி அவர்களே !

சமூகநீதி க்ஷத்திரியர் பேரவையின் அமைப்புச் செயலாளர் திரு. எஸ்.எம்.குமார் அவர்களே !

வன்னியர் வரலாற்று ஆய்வுப் பேரவையின் தலைவர் திரு. ஏ.சி.வெங்கடேச பல்லவன் அவர்களே !

அகில இந்திய வன்னிய சேனா தலைவர் டாக்டர் வீரவன்னிய ராஜா அவர்களே !

தமிழ்நாடு வன்னியர் கிறிஸ்தவர் சங்கத்தின் தலைவர் திரு. ஏ.ஜோசப் அவர்களே !

திரு. மு.ஜெயராமன் அவர்களே !

சேலம் மாவட்ட வன்னியர் அறக்கட்டளையின் செயலாளர் திரு. இரா.வெ.முத்துசாமி அவர்களே !

நன்றியுரை ஆற்றவுள்ள சென்னை வன்னிய குல க்ஷத்திரிய மகா சங்கத்தின் பொருளாளர் திரு. ஆர்.ஆனந்த பாபு அவர்களே !

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே, தாய்மார்களே, இளைஞர்களே! மாணவ மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடும் என்று அறிவித்ததற்கும், அன்னாரின் திருவுருவச் சிலையுடன் கூடிய ஒரு நினைவு மண்டபம் அமைக்கும் என்று அறிவித்ததற்கும், வன்னியர் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப்படும் இந்த பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திரு எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் அவர்கள் செப்டம்பர் 16, 1918ஆம் ஆண்டு பிறந்தார். இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, நம் நாடு சுதந்திரம் பெற அரும்பாடுபட்டவர். இவர் இந்தியா விடுதலை அடைந்த பின்பு 1952ஆம் ஆண்டு தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி என்ற ஒரு கட்சியை உருவாக்கினார். இவர் தலைமையில் 1952ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் திரு. ராமசாமி படையாச்சியார் உட்பட 19 உழைப்பாளர் கட்சி வேட்பாளர்கள் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்களவைக்கான தேர்தலில் நான்கு இடங்களில் இக்கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

பின்னர் 1954ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தலைமையில் அமைந்த அமைச்சரவையில் உள்ளாட்சித்துறை

அமைச்சராக 1957 வரை பணியாற்றினார். பின்னர் 1980 மற்றும் 1984ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று, நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

முதன் முறையாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவு தொடங்கப்பட்டு வன்னியர் சமூகத்திற்கு மாநிலத்தில் 20 சதவீத ஒதுக்கீடும், மத்தியில் 2 சதவீத ஒதுக்கீடும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை உழைப்பாளர் கட்சி மாநாட்டில் நிறைவேற்றியவர் மறைந்த திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் தான் என்பதை

இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதனைத் தொடர்ந்து இந்த தீர்மானம் வெற்றிபெற மத்திய, மாநில அரசுகளிடம் இது பற்றி விரிவாக எடுத்துரைத்து வன்னியர்குல மக்களின் நலனுக்காக பாடுபட்டவர் திரு. ராமசாமி படையாச்சியார் அவர்கள் தான் என்று சொன்னால் அது மிகையாகாது.

அவரது பணியினை சிறப்பிக்கும் வகையில், தேசிய தலைவர்களில் ஒருவரும், தமிழ்நாட்டு மக்கள் நலனுக்காக பாடுபட்டவரும், பின்தங்கிய மக்களின் வாழ்க்கை முன்னேற வேண்டும் என்பதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்த இவரின் பிறந்த நாள் அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று 29.6.2018 அன்று சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வன்னியர்குல சான்றோர் பெருமக்கள் என்னிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, திரு. ராமசாமி படையாச்சியார் அவர்களின் பெருமைக்கும், புகழுக்கும் சிறப்பு சேர்க்கும் விதமாக, அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில், அரசு சார்பாக ஒரு நினைவு மண்டபமும், அந்த நினைவு மண்டபத்தில் அவருக்கு முழுஉருவ வெண்கலச் சிலையும் அமைக்கப்படும் என்று 19.07.2018 அன்று மேட்டூரில் நடைபெற்ற ஒரு அரசு விழாவில் நான் அறிவித்தேன்.

அளித்த வாக்குறுதிகளை செயல்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வாறு செயல்பட்டாரோ, அதே வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசும் செயல்பட்டு வருகிறது. கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில் ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 69 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கி நினைவு மண்டபம் அமைக்க, 24.08.2018 அன்று அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது. அதன்படி அமைக்கப்பட உள்ள முழு உருவ சிலையுடன் கூடிய நினைவு மண்டத்திற்கு நான் 14.09.2018 அன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இந்த நினைவு மண்டபம் கட்டிமுடிக்கப்பட்டு மக்களின் பார்வைக்காக விரைவில் திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பண்டைய காலத்தில் நாட்டை ஆண்டது மற்றும் நாட்டை காக்கின்ற பணிகளை செய்த வன்னியர்கள், நாட்டின் சுதந்திரப் போரிலும் பெருமளவில் பங்கு கொண்டுள்ளனர்.

கந்தவராயன் மற்றும் சந்தவராயன் ஆகியோர் முதன்முதலில் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்து சிறைக்குச் சென்றனர். சத்தியாகிரக முறையில் இவர்கள் சுதந்திரத்திற்காக போராடியவர்கள்.

தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியடிகளை காப்பாற்றுவதற்காக குண்டடிபட்டு தனது இன்னுயிரை ஈந்தவர் மயூரம் நாகப்ப படையாச்சி. காந்தியடிகள் தமிழ்நாடு வந்த சமயம் அவரது குடும்பத்தை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதாக வரலாறு.

சர்தார் ஆதிகேசவலு நாயக்கர் தேச விடுதலைக்காக 11 ஆண்டுகள் சிறையில் இருந்தார். இவர் காந்தியடிகளிடம் சர்தார் பட்டம் பெற்றவர். மகாத்மா காந்தியின் வரிகொடா இயக்கத்தில் பங்கு கொண்டதால், சென்னையில் இருந்த தனது பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை ஆங்கிலேய அரசு கைப்பற்றிய போதும் தொடர்ந்து செயல்பட்டவர். மகாத்மா காந்தியடிகள், திலகர், பாரதியார்

போன்ற பெருந்தலைவர்களை அழைத்து சென்னை மெரினா கடற்கரையில் சுதந்திரப் போராட்ட எழுச்சி மாநாடு நடத்தியவர்.

இவரைத் தவிர, திரு. எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார், எம்.ஏ.மாணிக்கவேலு நாயக்கர், அஞ்சலை அம்மாள், தேவகி அம்மையார் போன்ற ஏராளமானோர் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டனர். இவர்களில் திரு. ராமசாமி படையாச்சியார் மற்றும் மாணிக்கவேலு நாயக்கர் சுதந்திர இந்தியாவில் தமிழ்நாடு அமைச்சரவையில் பங்கேற்று தமிழ்நாட்டின் நலனுக்காக பெரும் பணியாற்றினர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர், சமூக நிலையில் உயர்வடைய பல்வேறு சிறப்பான நலத் திட்டங்களை வகுத்து அவற்றை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

❖ 1980ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டினை 31 விழுக்காட்டிலிருந்து 50 விழுக்காடாக உயர்த்தினார். அது முதல் தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீடு உட்பட 69 விழுக்காடு இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது.

❖ தமிழ்நாட்டில் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள், 1993ஆம் ஆண்டு சட்டம் இயற்றி அதனை அரசமைப்பு சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்த்து, அரசமைப்பு பாதுகாப்பு பெற்றுத் தந்தார்கள். அது மட்டுமல்ல, இட ஒதுக்கீட்டுக்கு எப்போதெல்லாம் ஆபத்து வருகிறதோ, அப்போதெல்லாம் அதனை திறம்பட பாதுகாத்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தான்.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் சுயதொழில் மேற்கொள்ள

குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் நோக்கத்துடன் 1982ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது ஆட்சியில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் நிறுவப்பட்டது.

❖ பிற்படுத்தப்பட்டோர் நலன் காக்க நிரந்தரமாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 15.03.1993 முதல் ஓய்வு பெற்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

❖ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் 1,343 விடுதிகள் இயங்கி வருகின்றன. இதில் 84,814 மாணாக்கர்கள் தங்கி பயில்கின்றனர்.

❖ விடுதிகளில் தங்கி பயிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் எளிதில் வேலைவாய்ப்பு பெறும் வகையில், 2 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

❖ 2018–2019ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு UPSC, TNPSC, TRB, RRB போன்ற போட்டித் தேர்வுகளில் பங்கேற்று, வெற்றி பெறும் வகையில் புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.

❖ கல்வி உதவித் தொகை பெறுவதற்கான வருமான உச்சவரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ இந்த ஆண்டில் 437 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 11 இலட்சத்து 78 ஆயிரத்து 790 மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற எண்ணற்ற நலத் திட்டங்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்காக மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்த பல வள்ளல்கள் உயிலாக எழுதி வைத்த அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக அரசு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியுள்ளது.

இதுவரை 18 மாவட்டங்களில் உள்ள 79 வன்னியர் பொதுச் சொத்துக்கள் மற்றும் அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் அறச் செயல் நோக்கங்களுக்காக வழங்கப்பட்டுள்ள மீதமுள்ள சொத்துக்களை கண்டறியவும், கண்டறியப்பட்ட சொத்துக்களுக்கு உரிய பாதுகாப்பினை வழங்க வேண்டும் என்ற முறையீடுகள் எனக்கு பல வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்த அமைப்புகளிடமிருந்து வந்துள்ளன.

இதனைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மேற்படி கொடையாக வந்த சொத்துக்களை பாதுகாத்து, வன்னியமக்களின் மேம்பாட்டிற்காக அதனை முறையாக பயன்படுத்துவதற்கென தனியாக ஒரு சட்டமுன்வடிவினை சட்டமன்றத்தில் நிறைவேற்றி மேதகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது. இச்சட்டம் விரைவில் நடைமுறைக்கு வந்துவிடும். இந்த சட்டத்தினை அமல்படுத்த ஏதுவாக ஒரு நிர்வாக குழுமத்தை உருவாக்கி, அதன் மூலம் மேற்படி கொடையாளர்களின் எண்ணங்கள் ஈடேறும் வகையில், வன்னியகுல க்ஷத்திரிய ஏழை, எளிய மக்களின் கல்வி மற்றும் பல்வேறு வகையிலான முன்னேற்றங்கள் உறுதி செய்யப்படும்.

எனவே, வன்னியர்குல மக்களின் நலனில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் அதிகம் அக்கறை கொண்டு இருக்கிறது என்பதையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும், பின்னர் மாண்புமிகு

அம்மாவின் அரசும் தான் வன்னியர் குல மக்களின் நலனுக்கு தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்பதையும் நீங்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பீர்கள் என்பதை இந்த தருணத்தில் நான் நினைக்கின்றேன்.

ஏனென்றால், வன்னியர்களுக்காக கட்சி நடத்துவதாக கூறி கொள்பவர்கள் கூட, வன்னியர்களின் இந்த சொத்து பாதுகாப்பு சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு அம்மாவின் அரசு திறமையாகவும், வலுவாகவும் செயல்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு பொறுத்துக் கொள்ளாத சிலர், இந்த அரசின் மீது களங்கம் ஏற்படுத்துவதற்கும், அரசியல் லாபம் தேடுவதற்கும், விளம்பரம் தேடுவதற்காகவும், இந்த அரசைப் பற்றி விமர்சித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு அம்மாவின் அரசு இதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் 'எனது கடன் மக்கள் பணி செய்து கிடப்பதே' என்று மாநிலத்தின் கட்டமைப்பை வலுவாக்கும் திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்துவதற்கான மக்களுக்கான பணிகளை ஆற்றி வருகிறது.

இதனை கூறும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு ஆறு அமைதியாக, அதே நேரத்தில் வேகமாக சென்று கொண்டிருந்தது. அதன் ஒரே லட்சியம், போகும் பாதையில் இருக்கும் அனைத்து வயல்களையும், வளம் கொழிக்கச் செய்ய வேண்டும்; அந்த தேசம் வற்றாத செல்வத்தோடு விளங்க வேண்டும்; மக்கள் வயிறார உண்டு பசியாற வேண்டும்; எத்தனை எத்தனை மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அத்தனை பேருக்கும் நன்மை செய்ய வேண்டும்; எவ்வளவு விரைவில் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் செய்திட வேண்டும் – என்பதுதான்.

திடீரென்று வீசிய பலத்த காற்றினால், கரையோரம் வசித்து வந்த ஒரு தவளை அந்த ஆற்றில் விழுந்து விட்டது. அந்தத் தவளை சிறிதாக இருந்தாலும், அதற்கு ஆணவமும், வாயாடித்தனமும்

அதிகம். தன்னை தள்ளி ஆற்றில் போட்ட, அந்தக் காற்றிடம் தவளை சொன்னது,

“இதோ பார் இந்த ஆற்றை ஓடவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரத்தில் பார் இந்த ஆற்றை ஓடவிடாமல் செய்து விடப் போகிறேன். ஆறு என்னிடம் கெஞ்சப் போகிறது. நான் அதனிடம் இரக்கம் காட்ட மாட்டேன். ஓர் அங்குலம் கூட நகர முடியாமல் நான் இந்த ஆற்றை நிறுத்திவிடப் போகிறேன்” என்றது.

காற்று கைக்கொட்டி சிரித்தது. “என்ன சிரிக்கிறாய்?” என்று ஆத்திரத்துடன் கேட்டது அந்தத் தவளை. தவளையின் ஆணவப் பேச்சிற்கு காற்று பதில் சொல்ல விரும்பவில்லை. அது தன்போக்கிலேயே சென்று கொண்டிருந்தது. தவளைக்கு இன்னும் ஆணவம் தலைக்கேறி, “காற்றே நான் நினைத்தால் உன்னையும் நிறுத்தி விடுவேன்” என்று கொக்கரித்தது.

அதே நேரம் ஆற்றில் ஒரு சுழல் ஏற்பட்டது. அந்த ஆணவத் தவளை அந்த சுழலில் அகப்பட்டுக் கொண்டு, படாதபாடு பட்டது. கண நேரத்தில் அதன் கதை முடிந்து விட்டது. அந்த தவளை எங்கே போனது என்றே தெரியவில்லை. ஆறோ தன்போக்கில் அமைதியாக ஓடி தான் செல்லும் பாதையெல்லாம் வளமாக்கிக் கொண்டிருந்தது.

இந்த கதையில் வரும் ஆறு என்பது மாண்புமிகு அம்மாவின் அரசு. ஆணவத் தவளை யார் என்று நான் உங்களுக்கு அடையாளம் காட்டத் தேவையில்லை. உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும். இது போன்ற ஆயிரம் தவளைகள் வந்தாலும் எங்களின் வேகத்தையோ, ஓட்டத்தையோ தடை செய்ய முடியாது, கட்டுப்படுத்தவும் முடியாது. தடைகள் அத்தனையும் உடைத்தெறிந்து, நாங்கள் ஆறு போல் வளத்தைக் கொடுத்து, மக்கள் பணி ஆற்றிக் கொண்டிருப்போம்.

இறுதியாக இந்த நிகழ்ச்சியின் வாயிலாக ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். மாண்புமிகு பொன்மனச் செம்மல்

புரட்சித்தலைவர் எம்.ஜிஆரும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவும், மாண்புமிகு அம்மாவின் அரசும் வன்னியர்குல மக்களுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை வழங்கி, தமிழ்நாட்டை ஒரு முன்னோடி மாநிலமாக்க தொடர்ந்து செயல்படும் என்பதை ஆணித்தரமாக இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

விழாவில் பேசிய வன்னியர்குல இனத் தலைவர்கள் பல்வேறு கோரிக்கைகளை மேடையில் வைத்தார்கள். அதையெல்லாம் கவனமுடன் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, எனக்கு முன்னாலே பேசியவர்கள் எடப்பாடி சட்டமன்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எடப்பாடி சட்டமன்றத்திலே, அங்கிருக்கிற வன்னியர் இன மக்கள் எனக்கு அரசியல் அடையாளம் காட்டியவர்கள், அந்த மக்கள் நான் செல்கின்றபொழுதெல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைப்பார்கள். எங்களுக்கு கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் கொடுத்தேன், பாலிடெக்னிக் கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள், அதையும் கொடுத்தோம். அதுபோல, அங்கே தொழில்வளம் மிக்க பகுதியாக இருக்க வேண்டுமென்று கேட்டார்கள், அங்கே சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதேபோல, மருத்துவமனை, கால்நடை மருத்துவமனை, பால் சொசைட்டி, எண்ணற்ற திட்டங்களை கேட்டார்கள். அதையெல்லாம் ஒவ்வொன்றாக, படிப்படியாக அம்மா இருக்கின்றபொழுதே அவர்களுக்கு வாங்கித் தந்திருக்கின்றேன். இப்பொழுதும் தந்து கொண்டு இருக்கின்றேன். அந்த மக்கள் என்றென்றைக்கும் என் இதயத்திலே இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து, அந்த மக்களால் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்து, இங்கே ஒரு அறிவிப்பை வெளியிட நான் விரும்புகின்றேன். நீங்கள் மகிழ்ச்சியோடு கேட்பீர்கள் என்று

கருதுகின்றேன். தேசப்பற்று கொண்டு மக்களுக்காக உழைத்து மறைந்த பெருந்தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு பெருமையும் புகழும் சேர்க்கும்விதமாக, சட்டமன்றப் பேரவையில், அவருடைய முழு உருவப்படம் வைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து,

இங்கே மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்தப் பாராட்டு விழாவை நடத்திய அகில இந்திய வன்னியர்குல சத்திரிய சங்கத்தினுடைய பேரவையினுடைய குழு அத்தனைபேருக்கும், முன்னின்று நடத்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், வருகைதந்த வன்னியர்குல சகோதர, சகோதரிகளுக்கும், அவர்களுடைய எண்ணங்கள் ஈடேற அம்மாவினுடைய அரசு தொடர்ந்து பாடுபடும் என்று தெரிவித்து வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக ஆட்சி அதிகாரம், நீதி நிருவாகம், பத்திரிகை மற்றும் ஊடகங்கள் விளங்குகின்றன!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த இனிய விழாவில் பங்கேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் கழக ஒருங்கிணைப்பாளர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற கழக அவைத்தலைவர் முன்னாள் அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்களே!

கழக துணை ஒருங்கிணைப்பாளர் முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு கே.பி.முனுசாமி அவர்களே!

கழக துணை ஒருங்கிணைப்பாளர் முன்னாள் அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஆர். வைத்தியலிங்கம் அவர்களே!

முன்னாள் அமைச்சர், கழக அமைப்புச் செயலாளர் அண்ணன் திரு. சி. பொன்னையன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்களே!

மற்றும் நியூஸ் ஜெ நிர்வாக இயக்குநர் மரியாதைக்குரிய திரு. சி.வி. ராதாகிருஷ்ணன் அவர்களே!

வருகை தந்துள்ள மாண்புமிகு நாடாளுமன்ற, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!

மரியாதைக்குரிய வாரியத் தலைவர் அவர்களே!

வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தலைமைக் கழக நிருவாகிகளே!

மாவட்ட கழகச் செயலாளர்களே! கழகத்திலே அனைத்து பொறுப்புகளில் இருக்கின்ற நிர்வாகிகளே!

கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே! வருகை தந்துள்ள பல்வேறு ஊடகங்களுடைய உரிமையாளர்களே! வருகை தந்திருக்கின்ற திரைப்படத் துறையினுடைய நட்சத்திரங்களே! சின்னத்திரையினுடைய நட்சத்திரங்களே!

வருகை தந்திருக்கின்ற பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆகியோரை தெய்வமாக வணங்கிப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருக்கின்ற கழக உடன்பிறப்புக்களே!

பெரியோர்களே! தாய்மார்களே! ஊடகத் துறை நண்பர்களே! பத்திரிகைத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதன் தனது உணர்வுகளை கருத்துக்கள் மூலமாக வெளிப்படுத்தவும், செய்திகளை தெரிவிக்கவும், அக்காலம் முதல் இக்காலம் வரை அச்சு ஊடகம் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதன் பின்னர், தொழில்நுட்ப முன்னேற்றத்தால் மின்னணு ஊடகங்கள் மக்களின் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து, அவர்களுடைய மனதில் தனி இடத்தைப் பிடிக்கத் தொடங்கியது.

முதன்முதலாக, 1926இல் ஜான் லோகி பேர்டு (John Logie Baird) என்ற ஆங்கிலேயர் தொலைக்காட்சியை கண்டுபிடித்தார். 1930களில் அமெரிக்காவில் பிறப்பெடுத்த தொலைக்காட்சி 1960களில் இந்தியாவிற்குள் நுழைந்தது. 1975இல் முதன்முதலாக சென்னையில் தூர்தர்ஷன் தொலைக்காட்சி சேனல் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இந்தியா முழுவதும் அரசு மற்றும் பல்வேறு தனியார் தொலைக்காட்சிகள் துவக்கப்பட்டு, இன்று பல தொலைக்காட்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இன்று, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அருளாசியுடன் 'NEWS J' துவக்க விழாவில் தலைமையேற்று 'NEWS J' channelஐ மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடன் இணைந்து துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று முதல் ஒளிபரப்பை துவங்கியுள்ள NEWS J தொலைக்காட்சி மக்கள் நல்லாதரவோடு சிறந்து விளங்கவும், முதன்மை செய்தி தொலைக்காட்சியாக உயர்வு பெறவும், எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். 'NEWS J' தொலைக்காட்சி துவங்க அயராது பாடுபட்ட நிர்வாக இயக்குநர், நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும், நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் ஒரு சில கருத்துகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களாக ஆட்சி அதிகாரம், அரசு நிர்வாகம், நீதி நிருவாகம், பத்திரிகை மற்றும் ஊடகங்கள் விளங்குகின்றன. மக்களின் நாடி நரம்புகளை பிடித்துப் பார்த்து அவர்களின் எண்ணங்களை வெளிக்கொணரும் ஒரு அமைப்பாக செயல்படுவதே ஊடகத் துறை தான்.

நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்க அரசாங்கமும், ஊடகத் துறையும் இரு கண்கள் போல செயல்பட வேண்டும். ஊடகத்தின் மூலம் படிக்காத மக்களும் செய்திகளை கண்ணால் பார்த்தும், காதால் கேட்டும் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. ஊடகம் மக்களிடையே விழிப்புணர்வினையும், தாக்கத்தையும் ஏற்படுத்துகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

நாட்டு நடப்புகளையும், அரசின் மக்கள் நலத் திட்டங்களையும், பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், செய்திகளை உடனுக்குடன் கொண்டு சேர்ப்பதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாகும். ஊடகங்களில் ஒரு செய்தி வெளியிடும் போது, அது அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனுள்ளதாகவும், இளைஞர் சமுதாயத்திற்கு வழிகாட்டியாகவும் இருந்தால் அது நலம் பயக்கும், இளைஞர் சமுதாயம் மேம்படும்.

உண்மையை எழுத வேண்டும். உள்ளதை உள்ளபடியே சொல்ல வேண்டும். பரபரப்புக்காக உண்மைக்கு மாறான செய்திகளை பிறர் பாதிக்கின்ற வகையில் வெளியிடக் கூடாது. தனி மனித சுதந்திரம் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஒரு செய்தி கிடைக்கிறது என்றால், அதன் உண்மைத்தன்மையை கண்டறிந்து வெளியிட வேண்டும். ஒருவர் மீது புகார் அல்லது குற்றச்சாட்டு வருகின்ற போது, சம்மந்தப்பட்டவர்களின் கருத்தோடு அச்செய்தியை வெளியிட வேண்டும். அதுதான் பத்திரிகை தர்மம். வணிக நோக்கத்திற்காகவும், தொழில் போட்டி காரணமாகவும்,

எதையும் முதலில் தர வேண்டும் என்பதற்காகவும், அவசியமற்ற, ஆதாரமற்ற, உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளியிடுவதை தவிர்ப்பது நல்லது. ஒரு தொலைக்காட்சியில் வெளியாகும் செய்தி கோடிக்கணக்கான மக்களை சென்றடைகிறது. எனவே பொறுப்போடும், கடமை உணர்வோடும், எவரையும் காயப்படுத்தாத வகையில் செய்திகள் வெளியிடுவது சிறப்பு.

மாண்புமிகு அம்மாவின் அரசு, எத்தனையோ மக்கள் நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. அந்தத் திட்டங்கள் குறித்த செய்திகளை வெளியிடுவதில் ஊடகங்கள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இதை நான் ஏன் வலியுறுத்திச் சொல்கின்றேன் என்றால், ஒரு சில ஊடகங்கள் எதிர்மறையான செய்திகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து, அதையே திரும்பத் திரும்ப ஒளிபரப்புகின்றன. அதே சமயத்தில், அரசின் சார்பில் வெளியிடப்படும் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த செய்திகளை அந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்புவது இல்லை. மக்கள் நலத் திட்டங்கள் குறித்த செய்திகளை ஒளிபரப்புவது ஏதோ அரசுக்கு ஆதரவு தருவதாக எண்ண வேண்டாம். அது, எங்கோ ஒரு மூலையில், பட்டி தொட்டிகளில் வாழும் ஏழைப் பங்காளனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும் என்பதை ஊடகங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக, மக்கள் நலன் பயக்கும் ஒரு திட்டத்தை தொலைக்காட்சி வாயிலாக காணும் போது, பயனடையாத மக்கள் பயன் பெற அந்தச் செய்தி வழி வகுக்கும். அது தான் ஊடகத்திற்கு கிடைக்கும் உண்மையான வெற்றியாகும்.

“கத்தி முனையை விட பேனா முனை வலுவானது” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். “ஜனநாயகத்தின் நான்காவது தூணாக விளங்குபவர்கள் பத்திரிகையாளர்கள். காலம் நேரம் பாராது உழைக்கின்ற பத்திரிகையாளர்கள், தாங்கள் ஓய்வு பெறும் காலத்தில், மன நிறைவுடனும், மன அமைதியுடனும் வாழ்ந்திட

வேண்டும் என்பதில் இந்த அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது'' என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ல் ஆட்சிப் பொறுப்பேற்ற போது பத்திரிகையாளர்களுக்கு 5,000 ரூபாயாக இருந்த மாத ஓய்வூதியத்தை 8,000 ரூபாயாகவும், அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வந்த மாத ஓய்வூதியத்தை 2,500 ரூபாயிலிருந்து 4,750 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் மாண்புமிகு அம்மாவின் அரசும் பத்திரிகையாளர்களின் ஓய்வூதியத்தை 8,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாகவும், குடும்ப ஓய்வூதியத்தை 4,750 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கி வருகிறது. பத்திரிகையாளர்கள் அவர்களுடைய பணிக்காலத்தில் இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து குடும்ப உதவி நிதி 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டுள்ளது.

பணிக் காலத்தில் பத்திரிகையாளர்கள் கடுமையான நோயினால் பாதிக்கப்பட நேர்ந்தால், அவர்கள் சிகிச்சை மேற்கொள்ள பத்திரிகையாளர் நல நிதியம் மூலம் வழங்கப்பட்டு வந்த 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி தற்போது ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சொந்த வீடோ அல்லது வீட்டுமனையோ இல்லாத 375 பத்திரிகையாளர்களுக்கு கடந்த 7 ஆண்டுகளில் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களில் பணியாற்றும் 2,041 பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்கு கட்டணம் இல்லா பேருந்து பயண அட்டை மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றும் 1,250 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டையும், சென்னையில் காலமுறை இதழ்களில் பணியாற்றும்

750 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

18.07.2011 அன்று 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடம் மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

03.08.2011 அன்று 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு தலைமைச் செயலக செய்தியாளர் அறை மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்தியாளர் ஊடக மையம் மற்றும் மென்பொருள் வசதியுடன் இணைய மையம் அமைக்கப்பட்டு மாண்புமிகு அம்மா அவர்களால் 12.10.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெற, பணிக்கொடை உச்சவரம்பு ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாகவும், பணியில் இருக்கும் பத்திரிகையாளர்களின் ஆண்டு வருமானத்திற்கான உச்ச வரம்பு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்தி வழங்கினார்கள்.

தற்பொழுது, மாண்புமிகு அம்மாவின் அரசு பத்திரிகையாளர்களின் கோரிக்கையினை ஏற்று பணிக்கொடை உச்சவரம்பினை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாகவும், பணிக்கால ஆண்டு வருமான உச்சவரம்பினை 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2011இல் பதவியேற்ற பிறகு, குறைந்த விலையில் உயர்தர கேபிள் டிவி சேவையை பொது மக்களுக்கு வழங்குவதற்காக இந்நிறுவனத்திற்கு 3 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கி, புனரமைத்ததுடன், இந்நிறுவனத்தின் பெயரை “தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்” என மாற்றம் செய்தார்கள்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கேபிள் டிவி சேவையை 70 ரூபாய் என்ற மாத சந்தா கட்டணத்தில் 100 சேனல்களை வழங்கியது. புனரமைக்கப்பட்ட பின், 3 ஆண்டுகளில் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 70 இலட்சமாக உயர்ந்தது.

மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் ஆணைப்படி நாடு முழுவதும் கேபிள் டிவி சேவை முற்றிலுமாக டிஜிட்டல் முறையில் 31.03.2017க்குள் வழங்கப்பட வேண்டும். டிஜிட்டல் முறையில் கேபிள் டிவி சேவை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் DAS Licence கோரி, 05.07.2012 அன்று சென்னைக்கும், 23.11.2012 அன்று தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் விண்ணப்பித்தது. இந்த விண்ணப்பம், மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த தொடர் முயற்சியாலும், மத்திய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தால் 17.04.2017 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS MSO உரிமம் வழங்கப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்களின் 2016 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தவாறு, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் டிஜிட்டல் ஒளிபரப்பு மற்றும் இலவச செட்டாப் பாக்ஸ்கள் வழங்கும் சேவை என்னால் 01.09.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

ஒரு கட்சி ஆட்சிப்பொறுப்பில் இருக்கின்ற பொழுது அக்கட்சியின் செயல்பாடுகள், கொள்கை ரீதியான முடிவுகள், மக்கள் நலத் திட்டங்கள், மாநில வளர்ச்சியில் அரசு செலுத்தும் அக்கறை ஆகியவற்றை பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல் எங்கள் இயக்கத்தின் எஃகு கோட்டையாக விளங்கும் 1 1/2 கோடி தொண்டர்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெரும் முயற்சி எடுத்து தொடங்கிய ஜெயா தொலைக்காட்சியை, மாண்புமிகு அம்மாவின் மறைவுக்குப் பிறகு ஒரு சுயநலக் கூட்டம் கபளிகரம் செய்துவிட்டது. இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு

வருகிறது.

மகாபாரத யுத்தம் நிச்சயமாயிற்று. தங்களது படைக்கு வலு சேர்க்க தர்மரும், துரியோதனனும் பக்கத்திலுள்ள அரசர்களை தங்கள் பக்கம் இழுக்க முயற்சி செய்து வந்தனர். ஆனால் இருவரும் கிருஷ்ண பரமாத்மா தங்கள் பக்கம் இருக்க வேண்டும் என்று விரும்பினர். கிருஷ்ண பரமாத்மா இருவருக்கும் பொதுவானவர். அவர்கள் இருவரும் "கிருஷ்ண பரமாத்மா"வை பார்க்கச் சென்றபோது அவர் உறங்கி கொண்டிருந்தார். முதலில் வந்த துரியோதனன் கிருஷ்ண பரமாத்மாவின் உறக்கத்தை கலைக்காமல் அவரது தலைப் பகுதியில் இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். சிறிது நேரத்தில் தர்மரின் சார்பில் அங்கு வந்த அர்ஜுனனும் கிருஷ்ண பரமாத்மாவின் உறக்கத்தை கலைக்காமல் அவரது காலருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் உறக்கம் கலைந்து எழுந்த கிருஷ்ண பரமாத்மா, முதலில் தனது காலருகில் இருந்த அர்ஜுனனைக் கண்டு நலம் விசாரித்தார். பின்னர் துரியோதனனிடமும் நலம் விசாரித்தார். அப்பொழுது துரியோதனன், தானே முதலில் வந்ததாகவும், தனது கோரிக்கையை முதலில் ஏற்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

அதற்கு கிருஷ்ண பரமாத்மா "துரியோதனா உங்கள் கோரிக்கையை நான் அறிவேன். நீ முதலில் வந்தவன். அர்ஜுனன் என்னால் முதலில் பார்க்கப்பட்டவன். இந்த விஷயத்தில் நீங்கள் இருவரும் சமம். நீங்கள் இருவரும் எனக்குச் சமமான உறவுமுறை கொண்டவர்கள். உங்கள் இருவரில் யாருக்கும் நான் பாதகம் செய்யக் கூடாது.

ஆயுதம் எடுக்காத நான் தனியாக ஒரு புறமும், வீரம் மிக்க எனது படைகள் மற்றொரு புறமும் போர் புரியும். யாருக்கு எது வேண்டுமோ அவர் அதை எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினார்.

அர்ஜுனன் கிருஷ்ண பரமாத்மாவிடம், "கிருஷ்ணா! உலகம் அனைத்தும் உன்னில் நிலை பெற்றுள்ளன. நீயே எனக்குத் தேவை" என்று கூறினான்.

ஆயுதங்கள் எடுக்காத கிருஷ்ணரால் எப்படி போரிட முடியும்? எனவே, படை முழுவதையும் தனக்கே அளிக்கும்படி துரியோதனன் கோரினான். கிருஷ்ண பரமாத்மாவும் சம்மதித்தார். துரியோதனன் தனது மனதிற்குள் அர்ஜுனன் ஏமாந்தான் என்று எண்ணி மகிழ்ந்தான்.

கிருஷ்ண பரமாத்மா இல்லாமல் பலர் இருந்தால் என்ன பயன், அவர்கள் கிருஷ்ண பரமாத்மாவிற்கு இணையாக மாட்டார்கள். எனவே கிருஷ்ண பரமாத்மாவை மட்டும் விரும்பிய அர்ஜுனன் போரில் வெற்றி பெற்றான்.

அதுபோல் எங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அருளும், ஆசியும் இருந்தால் போதும். மக்கள் சக்தி தானாகவே எங்களிடம் வந்து சேரும். ஏனென்றால் அனைவரின் இதயங்களில் தெய்வமாக வாழ்கின்ற, ஆளுமைமிக்க எங்கள் அம்மா எங்கு இருக்கின்றார்களோ, அங்குதான் மக்களும், தொண்டர்களும் இருப்பார்கள்.

"பொன் பொருளை கண்டவுடன் வந்தவழி மறந்துவிட்டு கண்மூடி போகிறவர் போகட்டுமே, என் மனதை நான் அறிவேன், என் உறவை நான் அறிவேன் எதுவானபோதும் ஆகட்டுமே. நன்றி மறவாத நல்லமனம் போதும் என்றும் அதுவே என் மூலதனமாகும்

என்று பாடிய மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல் வரிகளை மனதில் கொண்டு, மக்களிடம் உண்மை நிலையினை எடுத்துச் சொல்வதற்காகவே News J என்ற இந்த தொலைக்காட்சி, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அருளாசியுடன், நல் உள்ளங்கள் பலர் சேர்ந்து தொடங்கி இன்று முதல் அது ஒளிபரப்ப தொடங்கியுள்ளது.

இது, பேரறிஞர் அண்ணா, கழகத்தின் நிறுவனத் தலைவர் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்., கழகத்தையும், நம்மையும் கட்டிக்காத்து வழிநடத்திய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆகியோர் காட்டிய அறவழியில் நின்று உண்மைச் செய்திகளை, உடனுக்குடன் சூடாகவும், சுவையாகவும், நடுநிலைமையுடனும், ஒளிவுமறைவின்றியும், அனைத்து தரப்பு மக்களும் விரும்பி பார்க்கும் வகையில் நியூஸ் J தொலைக்காட்சி நிறுவனம், நான் கூறியவைகளைப் பின்பற்றி, ஒளிபரப்பு செய்து, ஒட்டுமொத்த மக்களின் பேராதரவை பெற்று, மென்மேலும் வளர வேண்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

நியூஸ் J தொலைக்காட்சி வேகமாக, துரிதமாக நடைபெறுவதற்கு உறுதுணையாக விளங்கிய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் சகோதரர் தங்கமணி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் எஸ்.பி.வேலுமணி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்களுக்கும் இந்த நேரத்திலே மனமாற, உளமாற உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டு, இந்நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும் நடத்திய நியூஸ் J தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 14.11.2018 அன்று*
சென்னையில் நடைபெற்ற நியூஸ் J தொலைக்காட்சி
தொடக்க விழாவில் ஆற்றிய உரை

மாநில அரசு ஊரக பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது!

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாட்டில், 102.66 இலட்சம் பேர் பயனடையும் வகையில் 55 குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தேசிய ஊரக குடிநீர் திட்டத்திற்கான ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைத்துள்ள போதிலும், நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் **ஊரகப் பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டங்களை** மாநில அரசால் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருச்செங்கோடு கூட்டுக் குடிநீர் திட்டம் 17.09.2017 அன்று நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற அறிவிப்பு என்னால் அறிவிக்கப்பட்டது. ‘சொன்னதை செய்வோம்’

என்று சொல்லும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு உடனடியாக 05.03.2018 அன்று இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ரூ.399.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்து நிருவாக ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்கு நிதி ஆதாரங்கள் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு பணி உத்தரவு 16.08.2018இல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் காவிரி ஆற்றின் ஊராட்சிக்கோட்டை கதவணைக்கு மேற்புறத்தில் தேவையான குடிநீர் பெறப்பட்டு, பல்லக்காபாளையத்தில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நீர் நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, 741 மேல்நிலை நீர்த் தொட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலமாக **திருச்செங்கோடு ஒன்றியத்தில்** 26 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 345 கிராமங்களில் உள்ள 2,52,963 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 13.96 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. **பள்ளிபாளையம் ஒன்றியத்தின்** 15 ஊராட்சிகளுக்கு உட்பட்ட 324 கிராமங்களில் உள்ள 2,94,375 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 5.57 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. **ஆலாம்பாளையம் பேரூராட்சியில்** உள்ள 50,420 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 4.54 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட இருக்கிறது. **படவீடு பேரூராட்சியில்** உள்ள 15,028 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 1.35 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. **சேலம் மாவட்டம், சங்ககிரி பேரூராட்சியில்** உள்ள 48,363 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 4.35 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவிருக்கிறது. இத்திட்டம் முடிவுறும்போது மொத்தம் 6,61,000 மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 32.65 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும். ரூ.37.21 கோடி மதிப்பீட்டில் திருச்செங்கோடு நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம் 1 இலட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 18.12 மில்லியன் லிட்டர் அளவிற்கு குடிநீர் வழங்கும் வகையில் செயல்படுத்த 23.08.2018இல் நிருவாக

ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 486 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 இலட்சத்து 11 ஆயிரம் மக்களுக்கு 50.77 மில்லியன் லிட்டர் அளவிற்கு குடிநீர் வழங்க வேண்டுமென்று இரு திட்டங்களுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்திட்டத்தின் அனைத்துப் பணிகளும் விரைவுபடுத்தப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படவுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை 7 ஆண்டுகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் ரூ.58.64 கோடி மதிப்பீட்டில் 2.2 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் 6 குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் 1 பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், ரூ.185.24 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் நகராட்சிக்கென குடிநீர் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ரூ.55.42 கோடி மதிப்பீட்டில் ராசிபுரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்கள் தற்போது செயலாக்கத்தில் உள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மட்டுமின்றி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலமாகவும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **தமிழ்நாடு மக்கள் யாரும் குடிநீருக்கு கஷ்டப்படக் கூடாது** என்ற மாண்புமிகு அம்மாவின் உயரிய சிந்தனையின் அடிப்படையில் **குடிநீர் திட்டங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு**

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே எண்ணற்ற திட்டங்களை நாம் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் இருப்பதற்காக அம்மாவினுடைய அரசு ஒரு நீண்டகால திட்டத்தை வகுத்து, திட்டங்கள் தீட்டி, முதற்கட்டமாக குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை வகுத்து, **அதற்காக 1,519 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு,** 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் திட்டம் வெற்றி கண்டது. விவசாயப் பெருங்குடி மக்களும், பொதுமக்களும் குடிமராமத்து திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், மேலும், இந்த ஆண்டு 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அதற்காக 328 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. பெய்கின்ற மழைநீரை ஆங்காங்கே உள்ள ஏரிகள், குளங்களில் சேமித்து வைக்கப்படவேண்டும். ஏற்கெனவே இருக்கின்ற ஏரிகளை ஆழப்படுத்தாத காரணத்தினால், ஏரிகளில் வண்டல்மண் தேங்கி மேடாகிவிட்ட காரணத்தினால், மழைநீர் வீணாகிறது. இதைத் தடுப்பதற்காக, ஏரிகள், குளங்களிலுள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளிக் கொள்ளலாம் என்று அறிவித்ததன் அடிப்படையில், **விவசாயிகள் ஏரிகள், குளங்களிலுள்ள வண்டல்மண்ணை தங்களது நிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்துகிறார்கள்.** இந்தத் திட்டத்தை விவசாயிகள் சங்கத்தின் மூலமாக நிதியை கொடுத்து, விவசாயிகளே

அந்த குடிமராமத்துப் பணிகளை செய்கின்றார்கள். **இதன்மூலம் ஏரிகள், குளங்கள் ஆழமாகின்றது மற்றும் பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கப்படுகின்றது.** இந்தத் திட்டத்தை தமிழகத்திலே அம்மாவின் அரசுதான் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓடைகள், நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டவேண்டும் என்று கோரிக்கையின் அடிப்படையில், மூன்றாண்டு திட்டமாக இந்தத் திட்டத்திற்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, முதல் கட்டமாக இந்த ஆண்டு அந்தப் பணிகளை துவங்கியிருக்கின்றோம். **பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் இருக்க ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டி, நிலத்தடி நீரை உயரச் செய்து, மக்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது.** அதுமட்டுமல்லாமல், நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு ஆய்வுப்பணிகளை மேற்கொண்டிருக்கின்றோம். கரூர் மாவட்டத்தில் ஒருபுதியதடுப்பணைசுமார்400கோடிரூபாய்மதிப்பீட்டில்கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் 1 டி.எம்.சி. தண்ணீர் தேக்கப்படும். இதனால், அங்கிருக்கின்ற பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் குடிநீர் கிடைப்பதற்கு இது பேருதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராக 2011லிருந்து 2016 வரை மாண்புமிகு அம்மா அமைச்சரவையில் இருந்தபொழுது, இங்கு இருக்கின்ற எல்லா சாலைகளையும் விரிவுபடுத்த வேண்டும் என்று வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில், திருச்செங்கோட்டிலிருந்து பரமத்திவேலூர், திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல், திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம், வள்ளிக்கரை, திருச்செங்கோட்டிலிருந்து ஓமலூர்வரை நான்கு வழிச்சாலை அமைப்பதற்கு அம்மா அரசு நடவடிக்கை

எடுத்திருக்கின்றது. திருச்செங்கோட்டிலிருந்து ஈரோடு வரை நான்கு வழிச்சாலை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, திருச்செங்கோட்டுக்கு புறவழிச்சாலை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒருசிலர், நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினாலே அந்தப்பணி தடைபட்டிருக்கின்றது. நீதிமன்றம் மூலமாக அதை சரிசெய்து, திருச்செங்கோடு நகரத்திற்கு புறவழிச்சாலை அமைக்கின்ற பணியும் மேற்கொள்ளப்படும். அதோடு, ராசிபுரத்தில் புறவழிச்சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது. எஞ்சிய புறவழிச்சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. நாமக்கல் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அங்கேயும் புறவழிச்சாலை அமைப்பதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. **என்னென்னவெல்லாம் கேட்டீர்களோ, அத்தனையையும் அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது** என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நாமக்கல்லில் இருந்து திருச்சி வரை உள்ள சாலையை அகலப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில், அதையும் அம்மாவின் அரசு செயல்படுத்துவதற்கு திட்டம் தீட்டப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, அனுமதியும் கிடைத்துள்ளது. மேலும், நாமக்கல்லில் இருந்து துறையூர் வரை சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அந்த சாலையையும் விரிவுபடுத்துவதும், அம்மா அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக, நாமக்கல் மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை சாலைகளையும் விரிவுபடுத்துகின்ற பணியை அம்மாவின் அரசு எடுத்து வருகிறது. மேலும், பல சாலைகளையும் அம்மாவின் அரசு புதுப்பித்து, சீரமைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய அரசு பதவியேற்ற பிறகு, கல்வியிலே ஒரு புரட்சி மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறது. 2011இல் மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி ஏற்றபொழுது, உயர்கல்வி படிக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை 100க்கு 21 சதவீதமாக இருந்தது. அம்மா அவர்கள் கல்வியில் செய்த புரட்சி, உதவிகள் வாயிலாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசில் 100க்கு 46.8 சதவீதம் உயர்கல்வி படிக்கின்றார்கள். இவை கல்வியில் செய்த புரட்சி, மறுமலர்ச்சி.

மருத்துவத் துறையில், அகில இந்திய அளவில் தொடர்ந்து மூன்று ஆண்டு காலமாக உறுப்புமாற்று அறுவை சிகிச்சையில் முதலிடத்தில் இருக்கின்றோம். அரசாங்க மருத்துவமனையில் தனியார் மருத்துவமனைக்கு இணையாக அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கின்றோம். இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு உறுப்புமாற்று அறுவை சிகிச்சை மூலம் இரண்டு கைகளையும் பொருத்தி, **இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நமது அரசு மருத்துவமனையில் நமது மருத்துவர்கள் சாதனை செய்திருக்கிறார்கள்.** மாற்று அறுவை சிகிச்சை மூலமாக சீறுநீரகம் மாற்று அறுவை சிகிச்சை, இருதய அறுவை சிகிச்சை செய்கின்றோம். அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, அம்மாவினுடைய அரசு, பிறக்கின்ற குழந்தையின் இறப்பு சதவீதத்தை குறைத்திருக்கின்றது, தொடர்ந்து இதை செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. அதுபோல் பிரசவிக்கின்ற தாய்மார்களின் இறப்பு குறைக்கப்பட்டிருக்கிறது. அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்தபடி கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.6,000லிருந்து ரூ.12,000 கொடுத்தார்கள், 2016இல் ரூ.12,000லிருந்து ரூ.18,000 கொடுத்தோம். அம்மா அவர்கள், வேலைக்கு செல்கின்ற பெண்கள் உரிய நேரத்தில் பணிக்குச் சென்று வீடு திரும்ப வேண்டுமென்று இருசக்கர வாகனம் கொடுக்கப்படும் என்று சொன்னதை, அம்மா அரசு நடைமுறைப்படுத்தி காட்டியிருக்கிறது. **சொன்னதை செய்து**

சாதித்துக் கொண்டிருக்கிறது அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையில், இந்தியாவிலேயே அதிக அளவு உணவு தானிய உற்பத்தியை பெருக்கி, **கிருஷி கர்மான்** என்ற உயரிய விருதை நாம் தொடர்ந்து பெற்று வருகிறோம். இத்தனை சாதனைப் பட்டியலும் அம்மாவினுடைய அரசில் தான் கிடைத்திருக்கிறது. வேறு எந்த ஆட்சியிலும் இல்லை.

புதிய, புதிய கல்லூரிகளை திறந்திருக்கின்றோம். இதனால் ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி படிக்கக்கூடிய சதவீதம் உயர்ந்திருக்கிறது.

இந்தியாவில், மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சட்டம்—ஒழுங்கு சிறப்பாக செயல்பட்டு குற்றங்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. எல்லா நகரங்களிலும், மாநகராட்சிப் பகுதிகளில் இன்றைக்கு சிசிடிவி கேமராக்கள் வைத்திருக்கின்றோம். இத்திட்டத்தை அனைத்து நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்த உள்ளோம். குற்றவாளிகளின் எண்ணிக்கையை குறைக்கும் விதமாக அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு திட்டங்களையும் மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களுக்கு வாரி, வாரி வழங்கிக் கொண்டிருப்பது எதிர்க்கட்சிகளின் கண்ணிற்குத் தெரியவில்லை. இன்றைக்குக் கூட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் தெளிவாக சொன்னதைப்போல, இந்தப்புயல் வந்தால் எப்படி தாக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்ததன் அடிப்படையில், அம்மாவினுடைய அரசு 5 முறை வடகிழக்குப் பருவ மழையை எதிர்கொள்வது எப்படி என்று ஆய்வுக் கூட்டம் நடத்தி, அந்த ஆய்வுக் கூட்டத்திலே மாண்புமிகு துணை முதலமைச்சர், மூத்த அமைச்சர்கள், உயர் அதிகாரிகள்

கலந்துகொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது குறித்து தகுந்த ஆலோசனைகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் செயல்பட்டதன் காரணமாக பாதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. கஜா புயல் நேற்று நள்ளிரவில் கிட்டத்தட்ட 111 கிலோ மீட்டர் வேகத்தில் அடித்திருக்கிறது. அவ்வளவு வேகமாக புயல் வீசிய காரணத்தினால், கடலோர மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் செய்ய வேண்டுமென்று நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தப் புயல் வருவதற்கு முன்பாகவே, மூத்த இந்திய ஆட்சிப் பணியாளர்களை 6 கடலோர மாவட்டங்களுக்கும் அனுப்பி, பணிகள் செய்த காரணத்தினால்தான் பாதிப்பு குறைந்திருக்கிறது. புயல் வருவதற்கு முன்பாகவே தாழ்வான பகுதிகளிலும், குடிசைப் பகுதிகளிலும் வசித்துவந்த சுமார் 82,000 மக்களை 471 முகாம்களில் தங்க வைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இன்றைக்கு பாதிப்புகள் குறைக்கப்பட்டு, மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றார்கள். கஜா புயலினால், சாய்ந்துள்ள அதிகமான மின்கம்பங்களும், ஒடிந்து விழுந்த மரங்களும் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 27 ஆயிரம் மின்கம்பங்கள்

சாய்ந்துள்ளதாக தகவல் தருகின்றார்கள், இன்னும் முழுமையாக கணக்கிடப்படவில்லை. 105 துணை மின்நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கு கூறுகின்றார்கள். இவ்வளவு பணிகளும் துரிதமாக, போர்க்கால அடிப்படையில் செய்து அந்த மக்களுக்கு தேவையான மின்சார வசதியை அம்மாவினுடைய அரசு செய்து கொடுக்கும்.

மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அமைச்சர்களை அனுப்பியிருக்கின்றோம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அண்ணன் தங்கமணி அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி அவர்களும், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் சகோதரர் உதயகுமார் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அண்ணன் ஜெயக்குமார் அவர்களும் நாளைய தினம் கடலோர மாவட்டங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறி தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். புயல் வருவதற்கு முன்பாகவே வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் கட்டுப்பாட்டு அறையிலே நேற்று இரவு முழுவதும் விழித்திருந்து கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தொடர்பு கொண்டு, அங்கிருக்கக்கூடிய நிலவரங்களை கேட்டறிந்து, ஒவ்வொரு மணிநேரமும் நடப்பதை எனக்கு தகவல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதிகாலை 2.30 மணிக்கு புயல் அடித்தது, 4 மணிக்கு அங்கு நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. எந்த ஆட்சியில் நடந்தது? புயல் வருவதற்கு முன்பாகவே அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் அங்கு இருந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அமைச்சர்களை கேட்டுக் கொண்டதற்கிணங்க, நாகை மாவட்டத்தில் அண்ணன் ஓ.எஸ்.மணியன் அவர்களும்,

திருவாரூர் மாவட்டத்தில் சகோதரர் காமராஜ் அவர்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் மணிகண்டன் அவர்களும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டனர். எந்தக் காலத்திற்கும் மக்களுக்கு துன்பம் ஏற்பட்டால் உடனடியாக அந்தத் துன்பத்திலிருந்து விடுவிக்கக் கூடிய ஒரே அரசு, அது அம்மாவினுடைய அரசாகத்தான் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான ஆறுதலை தெரிவித்து, படுகாயமடைந்த, உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கும் ஆறுதலைச்சொல்லி, அவர்களுக்கு தேவையான நிதியுதவியையும் அளிப்பதற்கு இருக்கின்றோம். தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் அதை எதிர்கொள்கின்ற அளவிற்கு அம்மாவினுடைய அரசு முன்கூட்டியே நடவடிக்கை எடுத்து, மக்களை பாதுகாக்கின்ற அரசாகத் திகழுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மிகச் சிறப்பாக, எழுச்சியாக, குறுகிய காலத்திலே இந்த கூட்டுக் குடிநீர் திட்டம் அடிக்கல் நாட்டு விழாவை ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர் சகோதரர் தங்கமணி அவர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.11.2018 அன்று,*
நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் கூட்டுக் குடிநீர்
திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி, ஆற்றிய உரை

சேலம் மாவட்டம், வனவாசியில், ரூ.6.03 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

நான் ஏற்கெனவே, இதே இடத்தில், கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு முன்பு, நீங்கள் வைத்த கோரிக்கை நிறைவேற்றுகின்ற விதமாக, நீண்ட நாட்களாக இந்த சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மாணவ, மாணவிகளின் கோரிக்கையின் அடிப்படையிலே, ஒரு பாலிடெக்னிக் கல்லூரியை திறந்து வைத்து இந்தப் பகுதியில் இருக்கின்ற **ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி பயிலக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளேன்.**

2011இல் நான் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்ட பொழுது குடிநீர் பிரச்சினையை சுட்டிக்காட்டினீர்கள், பிறகு, 2016லும் இதைச் சுட்டிக்காட்டினீர்கள். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்தில் 2011இல் இங்கே ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். 2011–2016 இடைப்பட்ட காலத்தில் மரியாதைக்குரிய முன்னாள்

அமைச்சர் அண்ணன் கே.பி.முனுசாமி அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் அவரை அழைத்து மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தை சகோதரர் எடப்பாடி பழனிசாமி கேட்கின்றார், அதை நிறைவேற்றி உடனடியாக ஆணை பிறப்பியுங்கள் என்று அவரிடத்திலே சொன்னார். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க அப்பொழுதே அந்தப் பணி துவங்கப்பட்டது. ஆகவே, இந்தப் பணி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. ஏனென்று சொன்னால், இந்த மண்ணிலிருந்து மறைந்தாலும் அவர்களுடைய திட்டங்களை இப்பொழுதும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அம்மா அவர்களிடம் சொன்னவுடன், கிட்டத்தட்ட ரூ.158 கோடி இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கி கிட்டத்தட்ட 698 இடங்களில் tank கட்டி 698 குடியிருப்புப் பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவேரி நீரை என்றைக்குமே இல்லை என்ற நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். ஒரு நிலையான கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். மேட்டூர், எடப்பாடி என 6 பேரூராட்சிகளை உள்ளடக்கி இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

நான் வந்தவுடன் சாலைகளை விரிவுபடுத்தி சீர் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அனைத்து சாலைகளும் சீர் செய்யப்பட்டுவிட்டது. உள்ளாட்சி சாலைகளை சீர் செய்யும் பணிகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. படிப்படியாக அனைத்து ஊராட்சிகளில் இருக்கின்ற ஊராட்சி சாலைகள் சீர் செய்யப்படும்.

போக்குவரத்து வசதி வேண்டுமென்று வைத்த கோரிக்கைகளுக்கு அனைத்து ஊர்களுக்கும் பேருந்து வசதி கொடுத்த ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி. அதேபோல, ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற அனைத்து வசதிகளையும் அம்மா அரசு நிறைவேற்றி தந்திருக்கிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் தாராபுரம் ஊராட்சி மணியக்காரன் பாளையத்தில், குட்டப்பட்டு ஊராட்சியிலும் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு அங்கன்வாடி மைய கட்டடம், தாய்த் திட்டம்–2இன் கீழ், ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் குட்டப்பட்டு மற்றும் கலிக்காப்பட்டி ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள 2 புதிய அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய அம்மா பூங்காக்களும், ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கலிக்காப்பட்டியில் புதிய ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடமும், பாராளுமன்ற உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், ரூ.8,75,000 மதிப்பீட்டில் எடப்பாடி நெடுங்குளம் ஊராட்சி கோனேரிப் பட்டியில் கட்டப்பட்டுள்ள புதிய சுகாதார வளாகமும் மற்றும் எடப்பாடி நகராட்சியின் வார்டு எண் 6, 8, 12, 18, 19 மற்றும் 21 ஆகிய 6 இடங்களில் ரூ.5இலட்சம்மதிப்பீட்டில்அமைக்கப்பட்டுள்ளபுதிய சிமெண்ட்சாலை மற்றும் குப்பைகள் சேகரிக்கும் மையம் கட்டும் பணியும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் உள்கட்டமைப்பு முகமை நிதியிலிருந்து ரூ.24 இலட்சம் மதிப்பீட்டில் எடப்பாடி நகராட்சி பேருந்து நிலையம் அருகில் மேற்கொள்ளப்பட்டுள்ள பூங்கா மேம்பாட்டுப்பணியும், கூட்டுறவுத்துறையின் சார்பில் கச்சப்பள்ளி பகுதிகளில் சுமார் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க புதிய

அலுவலகக் கட்டடமும், பால்வளத் துறையின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நடுப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடமும் இன்றைக்கு திறக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் வெள்ளக்கோவில் ஊராட்சியில் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகமும், கூட்டுறவுத் துறையின் சார்பில் வெல்லாண்டிவலசில் சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடியும் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 6,842 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2,31,53,000 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகளும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகின்றன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ், 100 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கும், தூய்மைப் பார்வை இயக்கத்தின் சார்பில் 100 பயனாளிகளுக்கு தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்கும் என மொத்தம் 200 பயனாளிகளுக்கு 1 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மானியத் தொகையும், மகளிர் திட்டம் சார்பில் 40 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு பாதுகாப்பு நிதி உதவியும், 19 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு சுழல் நிதியும், 145 உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் என மொத்தம் 244 பயனாளிகளுக்கு ரூ.51,65,000 நிதியுதவியும், வருவாய்த் துறையின் சார்பில் 345 பயனாளிகளுக்கு ரூ.52,62,500 மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டா, நத்தம் நிலவரித்திட்டப் பட்டா, கல்வி உதவித்தொகை, இயற்கை மரண நிதியுதவி, முதியோர் உதவித்தொகை, விபத்து நிவாரண நிதி உதவி, முதிர்க்கன்னி உதவித்தொகை, திருமண நிதி உதவி, கணவனால் கைவிடப்பட்டோர்

உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, விதவை உதவித்தொகை மற்றும் புதிய குடும்ப அட்டைகள் உள்ளவைகளும் மற்றும் வேளாண்மைத் துறை சார்பில் 51 விவசாயிகளுக்கு ரூ.49,800 மதிப்பீட்டில் சிறு தானியங்கள், உயிர் உரங்கள், நுண்ணோட்டம் மற்றும் விதைகள், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 40 விவசாயிகளுக்கு ரூ.14,27,300 மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனக் கருவி, நிலப் போர்வை, கத்தரி, தக்காளி, வெங்காயம், பருப்பு வகைகளுக்கு மானியம், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் வாங்கும் திட்டத்தின் கீழ், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க 5 நபர்களுக்கு ரூ.2,86,600 மானியம், கூட்டுறவுத் துறையின் சார்பில் 150 நபர்களுக்கு ரூ.64,90,000 மதிப்பீட்டில் மத்திய காலக்கடனுதவி மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக் கடனுதவியும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூ.75 ஆயிரம் மதிப்பீட்டில் 10 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரம், 5 பயனாளிகளுக்கு விலையில்லா சலவைப் பெட்டிகள், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ், தொழில் துவங்க ஒரு பயனாளிக்கு ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரம் மானியமும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறையின் சார்பில் டாக்டர் முத்துலட்சுமி

ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ், மூன்றாம் தவணைத் தொகையாக ரூ.4,000மும், ஆதிதிராவிட நலத்துறையின் சார்பில் ஒரு பயனாளிக்கு ரூ.10,000 மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாவும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒரு மாற்றுத் திறனாளிக்கு ரூ.50,000 திருமண உதவியுடன் தாலிக்கு 8 கிராம் தங்கமும் என மொத்தம் 7,248 பயனாளிகளுக்கு ரூ.6.3 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட உள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய ஆட்சியில், நிறைய திட்டங்கள் எடப்பாடி தொகுதியில் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். சவுரியூரில் ஆரம்ப சுகாதார நிலையம், கோணேரிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம், பக்கநாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம், சமுத்திரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம். ஆகவே, கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் நோய்வாய்ப்பட்டால் அங்கேயே சிகிச்சை செய்வதற்காக இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை அம்மாவினுடைய அரசு குறுகிய காலத்தில் தொடங்கி, இன்றைக்கு மக்களெல்லாம் சிகிச்சை பெற்றுவருகிறார்கள்.

ஏற்கெனவே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப்பட்டு, அந்த சுகாதார நிலையத்தில் இருக்கின்ற மருத்துவர்கள் அதிகரித்திருக்கிறார்கள். அந்த மருத்துவமனையிலே கூடுதல் கட்டடங்கள் ஒரு கோடி ரூபாயில் கட்டியிருக்கிறார்கள், நங்கவள்ளி, கொங்கணாபுரம், சித்தூர் ஆகிய இடங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

கால்நடைகள் நோய்வாய்ப்பட்டால், அதற்கு சிகிச்சை அளிப்பதற்காக எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் 4 இடங்களில் கால்நடை மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கிறோம். விலையில்லா ஆடு 4,512 பயனாளிகளுக்கு ரூ.5.75 கோடி மதிப்பீட்டில் வழங்கியிருக்கிறோம்.

மானாவாரி மேம்பாடு திட்டத்தில், 144 விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணித் திட்டத்தில் ஒரு கோடியே 53 இலட்சத்தில் 450 வளர்இளம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதுவரை 2,425 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு செய்யப்பட்டுள்ளது. 2011 முதல் தற்போது வரை 23,511 நபர்களுக்கு ரூ.65.11 கோடி மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டிருக்கிறது. கிராமச் சாலைகள் செப்பனிடப்பட்டுள்ளன. பக்கநாடு, தாராபுரம், தோடமங்கலம், நத்தக்காடு ஆகிய பகுதிகளில் 5 புதிய பாலங்கள் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. சுமார் 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2016–2018, இரு ஆண்டுகளில் சுமார் 57 கிலோமீட்டர் நீளமுள்ள ஊராட்சி சாலைகள் மேம்படுத்தப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் வடகத்திக்காடு, வெள்ளாளபுரம் மற்றும் வடகரை வாய்க்கால், நரிமேடு ஆகிய பகுதிகளில் 3 புதிய பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றது. ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் எடப்பாடியில் 3 புதிய பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

அதேபோல எடப்பாடி புறவழிச்சாலை, எடப்பாடி தொகுதியில் ஐந்தாண்டுகளில் மட்டும் நெடுஞ்சாலைத் துறையில் மட்டும் 236 கிலோமீட்டருக்கு ரூ.140 கோடி ஒதுக்கீடு செய்து அந்த சாலைகளையெல்லாம் சீரமைத்துக் கொடுத்திருக்கிறோம். இந்தப் பணிகளெல்லாம் எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டில், இந்த மாவட்டத்தில் 93 கோடி ரூபாயில் 83 கிலோமீட்டர் சாலை மேம்படுத்தும் பணியும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. என்னுடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதி, எடப்பாடி சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகள் 13 அங்கன்வாடி கட்டடங்களைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 13 பயணிகள்

நிழற்குடை கட்டிக் கொடுத்திருக்கிறோம், 19 கான்க்ரீட் சாலைகள் அமைத்துக் கொடுத்திருக்கிறோம், 18 பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்திருக்கிறோம், பள்ளிக் குழந்தைகள் மிதிவண்டிகளை நிறுத்துவதற்காக 16 மிதிவண்டி நிறுத்தும் இடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 8 கழிவுநீர் வாய்க்கால் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 4 நூலக கட்டடம், 7 பல்நோக்கு மைய கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். பல்வேறு இடங்களில் குடிநீர் பிரச்சினையைப் போக்க 60 ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கிறது, எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் 42 நியாய விலைக் கடைகளுக்கு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அங்கன்வாடிகளில் சமையல் செய்வதற்காக 90 சதவீத அங்கன்வாடிகளுக்கு எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பும் கொடுத்திருக்கிறோம், 11 பொது சுகாதார வளாகங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம், 16 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி என்னுடைய நிதியிலிருந்து கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 2,168 பசுமை வீடுகள், 272 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள், 1,149 குடியிருப்புகள். இப்படி பல்வேறு திட்டங்களை அம்மாவின் அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

7 நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியிருக்கிறோம்.

எடப்பாடியில் அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிக் கொடுத்திருக்கிறோம். வனவாசியில் பாலிடெக்னிக் கல்லூரி, எட்டிக்குட்டைமேட்டில் பி.டெக். கல்லூரி வர இருக்கின்றது. எட்டிக்குட்டைமேட்டில் சிட்கோ தொழிற்பேட்டைக்கான நிலம் உறுதி செய்யப்பட்டு, பணிகளை துவங்கியிருக்கிறோம். நான் இந்தத் திட்டத்தையெல்லாம் அறிவித்ததன் காரணத்தினால் **எடப்பாடி தொகுதி நன்றாக வளர்ந்து வருகிற ஒரு தொகுதியாக இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஒன்றியங்களில் கூட்டுக்குடிநீர் திட்டம் பணி முடிவடைந்து அம்மாவின் திருக்கரங்களால் திறக்கப்பட்டது. எடப்பாடி நகரத்திற்கு கூட்டுக் குடிநீர் திட்டமும் அம்மாவின் திருக்கரங்களால் திறக்கப்பட்டது. ஆகவே, எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் தங்குதடையில்லாமல் நிலையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு என்பதையும், மேலும், நீங்கள் கொடுத்திருக்கின்ற அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நங்கவள்ளியிலிருந்து செல்லும் வழியில் உள்ள 4 இரயில் பாதையைக் கடக்கும் இடத்தில் உயர்மட்டப் பாலம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.செம்மலை அவர்களது கோரிக்கையின் அடிப்படையில், மேட்டூரில் பெரிய கிணறு வெட்டி, பெரிய பைப்லைன் போடும் பொருட்டு ரூ.7.7 கோடி மதிப்பீட்டில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பணி துவங்கப்பட்டுவிட்டது. மேச்சேரியிலிருந்து தோப்பூர் வரையுள்ள சாலையை சீரமைப்பதற்காக ரூ.9 கோடி நிதி ஒதுக்கப்படும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமத்திலிருந்து நகரம் வரை எல்லா சாலைகளும் சீர்செய்து, அனைத்து பகுதிகளிலும் சாலைகளெல்லாம் சிறப்பான சாலையாக

அமைத்துக் கொடுத்திருக்கிறோம். அதோடு பேரூராட்சி பகுதிகளில் இருக்கும் சாலைகளும் சீரமைப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, நீங்கள் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கின்றார்கள். அம்மா மறைந்தாலும், அம்மாவினுடைய அரசு, அம்மா அறிவித்த அனைத்து திட்டங்களை நிறைவேற்றி இந்தப் பகுதி மக்களுக்கு காவேரி நீரை பெற்றுத்தந்த அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்பு இருந்த ஆட்சியாளர்கள் என்ன செய்தார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தான் இந்த ஆட்சியின் சிறப்பு உங்களுக்குத் தெரியும். அம்மாவின் அரசு உங்களுடைய அரசு, ஏழை, எளியவர்களின் அரசு, மக்கள் எண்ணுவதை நிறைவேற்றுகின்ற அரசு அம்மாவின் அரசு. எப்பொழுதும் அம்மாவின் அரசுக்கு நீங்கள் பக்கபலமாக இருக்கவேண்டும் என்று தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 17.11.2018 அன்று*
சேலம் மாவட்டம், வனவாசியில் அரசு நலத்திட்ட உதவிகள்
வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

84 ஆண்டுகளுக்குப் பின் மேட்டூர் அணையில் தூர்வார நடவடிக்கை எடுத்தது அம்மாவின் அரசு!

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் 67 குடியிருப்புகளும், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் 338 குடியிருப்புகளும், மேச்சேரி, பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் ஆகிய மூன்று பேரூராட்சிகளிலும் என மொத்தம் 405 குடியிருப்புகளுக்கு தடையின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் இன்றையதினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ், 60 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கும், தூய்மை பாரதம் இயக்கத்தின் சார்பில் 90 பயனாளிகளுக்கு தனி நபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்கும் என மொத்தம் 150 பயனாளிகளுக்கு ரூபாய் 1,15,80,000 மானியத் தொகையும், மகளிர் திட்டம் சார்பில்

14 மகளிர் சுயஉதவிக் குழுவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு பாதுகாப்பு நிதி உதவியும், ஒரு மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் என 151 பயனாளிகளுக்கு ரூ.3,75,000 நிதியுதவியும், வருவாய்த் துறையின் சார்பில் 394 பயனாளிகளுக்கு ரூ.19,79,600 மதிப்பீட்டில் கல்வி உதவித் தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை, முதியோர் உதவித் தொகை, விதவை உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை மற்றும் இலவச வீட்டு மனைப்பட்டா மற்றும் நிலவரித் திட்டப் பட்டா, வேளாண்மைத் துறை சார்பில் 25 விவசாயிகளுக்கு ரூ.2,46,800 மதிப்பீட்டில் தெளிப்பு நீர் பாசனக் கருவி, மழைத்தூவான் கருவி, விதைகள் மற்றும் வேளாண் கருவிகள், வேளாண் பொறியியல் துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் திட்டத்தின் கீழ், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள் அமைப்பதற்கு ரூ.15 இலட்சம் மானியம், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 20 விவசாயிகளுக்கு ரூ.18,10,200 மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசன நிலப் போர்வை, தெளிப்பு நீர் பாசனம், பசுமைக் குடில், வெங்காய சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கான மானியம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் 10 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரம், 10 பயனாளிகளுக்கு விலையில்லா சலவைப் பெட்டிகள், மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ் சுயநிதித் திட்ட 1 பயனாளிக்கு ரூ.95 ஆயிரம் மானியம், பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறையின் சார்பில் மாணவர்களுக்கு ரூபாய் 2 ஆயிரம் மதிப்பீட்டில் கணிப்பொறி, கூட்டுறவுத் துறையின் சார்பில் 50 நபர்களுக்கு ரூ.37,90,000 மதிப்பீட்டில் மாநில கடனுதவி மற்றும் பயிர்க் கடனுதவி, ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.20 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் சார்பில்

1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.25,000 சுயஉதவி தொடங்குவதற்கான வங்கிக் கடன் மானியம் என மொத்தம் 825 பயனாளிகளுக்கு ரூ.2,15,21,800 மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்டப் பணிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படவுள்ளது என்பதை பெருமையுடன் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புரட்சித்தலைவி அம்மாவின் ஆட்சிக்காலத்தில் 2011லிருந்து 2016 வரைக்கும் ஏழு ஆண்டுகளில் குடிநீர் திட்டங்களுக்கு செயல்படுத்தப்பட்ட விவரங்களை தெரிவிக்க விரும்புகின்றேன். 598 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.2,641.35 இலட்சம் மதிப்பீட்டில் 598 குடியிருப்பு திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, 52,750 குடும்பங்களில் சுமார் 2.11 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். அதேபோல, 20 ஊராட்சி ஒன்றியங்களில் 447 பள்ளிகள், 431 அங்கன்வாடி மையங்கள், 7 மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு ரூ.387.64 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 157 தடுப்பணைகள் ரூ.1,150.16 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன. ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சியில் 20 பேரூராட்சிகள் மற்றும் 8 ஒன்றியங்களுக்குட்பட்ட 1,345 குடியிருப்புகளுக்கு 3.2 இலட்சம் குடும்பங்களில் சுமார் 13.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.270 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 63.35 மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

எடப்பாடி, கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சார்ந்த 327 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டம் ரூ.46.45 கோடி மதிப்பீட்டில் 27,590 குடும்பங்களில் சுமார் 1.15 இலட்சம் மக்கள் பயன்பெறும்

வகையில் திட்டப்பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் **28.12.2012** அன்று திட்டம் துவக்கி வைக்கப்பட்டது. எடப்பாடி நகராட்சிக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலமாக வழங்கப்பட்டது. அம்மாவினுடைய ஆட்சியில்தான் மேட்டூர் நகராட்சிக்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலமாக குடிநீர் வழங்கப்பட்டது. புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட ரூ.**391.28** கோடி மதிப்பீட்டில் **4,43,190** குடும்பங்களில் **18.02** இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் பயன்பாட்டில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகளை விரிவாக்க வேண்டுமென்று வந்த கோரிக்கைகளின் அடிப்படையில், தளவாடியிலிருந்து மேட்டூர் வரை 4 வழிச்சாலை, மேட்டூரிலிருந்து தொப்பூர் வரை 4 வழிச்சாலை, மேச்சேரியிலிருந்து ஓமலூர் வரை சாலை விரிவாக்கம் செய்யப்படும். மேச்சேரிக்கு புறவழிச்சாலைகள் அமைக்கப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சேலத்திலிருந்து ஓமலூர் வரும் வழியில் உள்ள ரயில்வே கேட் உள்ளது. அங்கே ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு ஆணையிட்டு, அந்தப் பணியும் துவக்கி வைக்கப்படும். ஓமலூரிலிருந்து மேட்டூர் வரைக்கும் பல இடத்தில் railway crossing இருக்கிறது. தொட்டப்பட்டியில் ரூ.**19.34** கோடியில் உயர்மட்டப் பாலம் இரயில்வே கேட் குறுக்கே கட்டப்படும். முத்துநாயக்கன்பட்டியில் இரயில்வே கடவிற்கு குறுக்கே இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்.

மேச்சேரி ஒன்றியம், ஓமலூர் ஒன்றியம் போன்ற இடங்களில் சிறுகுறு விவசாயிகள் நிறைந்த பகுதி. மானாவரி தக்காளியும் மற்றும் வேறு பல காய்கறிகள் உற்பத்தி இங்கு அதிகமாக இருக்கிறது. அதிகமாக தக்காளி உற்பத்தியாகும்பொழுது, தக்காளி விலை வீழ்ச்சியடையும்பொழுது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், ஓமலூருக்கும் மேச்சேரிக்கும் இடையில் காய்கறி

மற்றும் பழங்கள் விற்பனை செய்யக்கூடிய மிகப் பெரிய மார்க்கெட் அமைத்துக் கொடுக்கப்படும். விவசாயி உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்கள் போன்றவை வீணாகாமல் இருப்பதற்காக அங்கே ஒரு குளிர்சாதன கிடங்கு அமைக்கப்படும். எனவே, விற்காத பழங்களை பாதுகாப்பாக அந்த குளிர்சாதன கிடங்கில் விவசாயிகள் எந்த வாடகையும் இல்லாமல் வைத்துக் கொள்ளலாம். விவசாயிகள் பயன்பெற வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தை அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கின்றது. ஆகவே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பழங்கள், காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக இந்தத் திட்டத்தை கொண்டு வந்திருக்கின்றோம் என்பதை அன்போடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் வாயிலாக, இன்றைக்கு, இரு மடங்கு உற்பத்தி, மும்மடங்கு இலாபம் விவசாயிகளுக்குக் கிடைக்கும்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக, நிலத்தடி நீர் குறைந்துவிட்டதால், தண்ணீரை சேமித்து, சொட்டு நீர்ப் பாசனம் மூலம் அதைப் பயன்படுத்தினால் விவசாயம் சிறக்கும். சொட்டு நீர்ப் பாசன கருவியும் ஒரு ஏக்கருக்கு 100 சதவிதம் மானியமும், அதற்கு மேல் இருக்கக்கூடிய நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 25 சதவிகிதம் மானியமும், வேளாண் கருவிகளும், டிராக்டர் வாங்கினால் மானியமும், பண்ணைத் திட்டத்தின் வாயிலாக நிறைய

உதவிகளும், பண்ணைத் திட்டத்தின் வாயிலாக சின்ன, சின்ன குட்டைகள் கட்டுவதற்கு நிதியுதவியும், அம்மாவினுடைய அரசு வழங்குகிறது.

எங்கெல்லாம் ஓடைகள் இருக்கின்றதோ, எங்கெல்லாம் தண்ணீர் தேங்குவதற்கு வசதியிருக்கின்றதோ, அங்கெல்லாம் தடுப்பணை கட்டி, பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீரை சேமித்து, அதன் மூலம் நிலத்தடி நீரை உயரச் செய்து, குடிப்பதற்கு, விவசாயத்திற்குத் தேவையான நீரை உருவாக்குகின்ற பணியைத் துவங்குவதற்காக 3 ஆண்டு கால திட்டத்தின் வாயிலாக ரூ.1,000 கோடி ஒதுக்கியுள்ளோம்.

மேட்டூர் அணை கட்டி 84 ஆண்டுகளாக தூர்வாராமல் இருந்ததை அம்மாவினுடைய அரசுதான் தூர்வாரி, அதன் மூலம் கிடைத்த வண்டல் மண், விவசாயிகளுக்கு இயற்கை உரமாகக் கிடைக்கிறது. எனக்கு முன்னால் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் செம்மலை அவர்கள் சொன்னதைப்போல, மிகப் பெரிய குடிமராமத்துத் திட்டத்திற்கு விவசாயிகளிடம் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்தத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்து, ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டு, பொழிகின்ற மழைநீர் சேமித்து வைக்கப்படுவதுடன், நிலத்தடி நீர் உயர்ந்து, குடிநீர், விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கின்றது. இத்திட்டம் முழுக்க, முழுக்க விவசாயிகள் மூலமாக நிறைவேற்றப்படுகிறது. இந்த ஆண்டு ரூ.328 கோடி ஒதுக்கப்பட்டு, தமிழ்நாட்டில் 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

காய்கறி மார்க்கெட் அமைப்பதற்கு, குளிர்ப்பாசன வசதி, சிப்பம் கட்டுதல் அமைப்பை ஏற்படுத்துதல், எடைபோடும் மிஷின் அமைப்பு, வேளாண் தகவல் மையம், உதவி மையம், விவசாயிகள் தங்கும் வசதி, பயிற்சி மையம் அனைத்தும் இத்திட்டத்தின் வாயிலாக வருகின்றது. ஓமலூருக்கும், மேச்சேரிக்கும் இடைப்பட்ட

சாலைகளில் பயிரிட்டுள்ள விவசாயிகள் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றார்கள் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றேன். மேலும், விவசாயிகள் கொண்டு வருகின்ற பழங்கள், காய்கறிகளுக்கு உரிய விலை கிடைப்பதற்காக மின்னணு வர்த்தக ஏற்பாட்டை அம்மாவினுடைய அரசு செய்திருக்கிறது.

கோதாவரியையும், காவிரியையும் இணைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கி விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைப்பதன் மூலம் வறட்சி என்பதே இல்லாத ஒரு நிலையை உருவாக்குவதற்காக, மத்திய நீர்வளத் துறை அமைச்சர் நிதின் கட்கரி அவர்களிடம் தெரிவித்தவுடனே, நம்முடைய தமிழகத்திற்கு 125 டி.எம்.சி. தண்ணீர் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்போம் என்ற உறுதியைத் தந்திருக்கின்றார்கள். அப்படி தண்ணீர் கிடைக்கும்பொழுது, மேட்டூரிலிருந்து பல்வேறு ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு ஏரிகளில் சேமித்து வைக்கப்படும் என்று மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான பணிகள் மேற்கொள்ள பொறியாளர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். மேட்டூரிலிருந்து உபரி நீரை எடுத்து, மேட்டூர், ஓமலூர், எடப்பாடி, சங்ககிரி ஆகிய 4 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஏரிகளை எல்லாம் நிரப்புவதற்கு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாராகிக் கொண்டிருக்கிறது. விரைவாக அந்தப் பணி துவங்கப்படும். இந்த உன்னதத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு 4 தொகுதிகளிலும் நிறைவேற்றித் தரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களை அம்மா அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது. 338 குடியிருப்புகளுக்கு மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் கொடுக்கின்றோம். எதைச் சொன்னோமோ அதை இன்று சாதித்துக் கொண்டிருக்கின்றோம்.

தாலிக்குத் தங்கம், வேலைக்குச் செல்கின்ற பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனம், கிராமங்களில் வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளுக்குக்கூட சிறந்த கல்வி கிடைக்க வேண்டுமென்பதற்காக உயர்கல்வி கிடைக்கின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். ஒரு மடிக்கணினி ரூபாய் 14 ஆயிரம் விலையுள்ளதை, விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ், இதுவரை 38 இலட்சம் பேர்களுக்கு கொடுத்திருக்கின்றோம். இந்த ஆண்டு 15 இலட்சம் பேருக்குக் கொடுத்தால் 53 இலட்சம் பேர் வருகிறார்கள். இப்படிப்பட்ட உயர்கல்வி, விஞ்ஞானக் கல்வி கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு உருவாக்கியிருக்கிறது. இதுபோல வல்லரசு நாடுகளில் கூட கிடையாது. இன்றைக்கு தமிழகத்தில் விஞ்ஞானக் கல்வி வழங்குவதற்கு இந்தத் திட்டம் அடிப்படையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசு உங்களுடைய அரசு. ஏழை, எளியோர்களின் அரசு, விவசாயிகளின் அரசு, ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய வாழ்வாதார பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி உங்களுக்கு அர்ப்பணிக்கின்ற அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 17.11.2018 அன்று,*
சேலம் மாவட்டம், மேச்சேரியில், மேச்சேரி–நங்கவள்ளி
கூட்டுக் குடிநீர் திட்ட திறப்பு விழாவில் ஆற்றிய உரை:

அரசு விரைவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இந்தப் பாலமே சான்று!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

சேலம் மாநகர் இரும்பாலை சாலை சந்திப்பில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலம் மற்றும் மாவட்டத்தில் முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, தரம் உயர்த்தப்பட்ட கால்நடை மருந்தகங்கள் மற்றும் சிறு, குறு சிறப்பு அங்காடிகள் துவக்க விழா, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் சேலத்தான்பட்டில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 496 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணி, புதிய பணிகள் அடிக்கல் நாட்டு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்றுள்ள அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்தில், சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற மாநகரமாக இருப்பதினால் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைக்கவும் மற்றும் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய சேலம் மாநகர மக்கள் வழங்கிய கோரிக்கை மனுவினை,

அம்மா அவர்களிடம் நான் அளித்தேன். சேலம் மாநகர மக்கள் பல ஆண்டுகளாக இந்தக் கோரிக்கைகளை கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த திட்டங்கள் எல்லாம் நிறைவேறாமல் இருக்கின்றது. நீங்கள் இருக்கின்ற காலத்திலே சேலம் மாநகர மக்களுக்கு ஒரு விடிவுகாலம் பிறக்க வேண்டும், அந்த விடிவு காலம் உங்களால்தான் பிறக்கும், ஆகவே, அவைகளையெல்லாம் எவ்வளவு நிதி ஆனாலும் பரவாயில்லை, நீங்கள் ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டவுடனேயே 5 ரோட்டிற்கு ஒரு பாலம், ஏ.வி.ஆர். ரவுண்டானா, சிறுவாகவுண்டனூர், மணல்மேடு பாலம், பழைய சூரமங்கலம், முள்ளுவாடி போன்ற இடங்களில் எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ அந்த இடங்களுக்கெல்லாம் உயர்மட்டப்பாலம் கீழ்ப்பாலம் வேண்டுமென்று கேட்டபொழுது, அம்மா அவர்கள் அதற்கும் ஆணையிட்டு, உடனடியாக அதற்குண்டான ஒப்பந்தப் புள்ளிகளும் கோரப்பட்டு, இன்றைக்கு 5 ரோடு பாலம் விரைவிலே முடிவுற இருக்கின்றது. மற்ற பாலங்களான சிறுவாகவுண்டனூர் ரவுண்டானா பாலம் மற்றும் ஏ.வி.ஆர். ரவுண்டானா பாலம் முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுவிட்டது.

மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் திரு.வெங்கடாசலம், சகோதரர் திரு.பன்னீர்செல்வம் அவர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கைக்கு ஏற்ப, இரும்பாலை சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஒரு உயர்மட்டப்பாலம் கட்ட அடிக்கல் நாட்டி, 5 மாதத்திலேயே, சுமார் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டுள்ளது. அரசு எந்தளவிற்கு விரைவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இந்தப் பாலமே ஒரு சான்று.

அதுமட்டுமல்லாமல், இளம்பிள்ளை பிரிவு பகுதியில் விபத்துக்களை தவிர்க்கவும், போக்குவரத்து நெரிசலை குறைக்கவும் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அரியானூரிலிருந்து பிரிந்து வீரபாண்டி,

ஆட்டையாம்பட்டி, திருச்செங்கோடு வரை செல்லுகின்ற சாலையிலும், வீரபாண்டி சட்டமன்ற உறுப்பினர் சகோதரி மனோன்மணியம் அவர்களும், திரு.பன்னீர்செல்வம் அவர்களும், முன்னாள் ஊராட்சி பெருந்தலைவர்களும் வைத்த கோரிக்கைகளை ஏற்று, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் சாலையாக இருப்பதினால், மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்கள் சென்னை வந்தபொழுது அதனை தெரிவித்தபொழுது, அரியானூர் பகுதி தவிர வேறு ஏதும் வேண்டுமா என்று அவர் கேட்டபொழுது மகுடஞ்சாவடியில் எடப்பாடி செல்கின்ற பிரிவு சாலையிலும் ஒரு பாலம் வேண்டுமென்று கேட்டதற்கு, உடனடியாக நான் ஒப்புதல் தந்து, இரண்டையும் கட்டிக் கொடுப்பதாகச் சொன்னதைப்போல, இன்றைக்கு அரியானூர் பாலத்திற்கு டெண்டர் விடப்பட்டு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. மகுடஞ்சாவடி பாலத்திற்கு டெண்டர் விடப்பட்டுள்ளது. இன்னும் ஒரு வாரத்தில் ஒப்பந்தம் கோரப்படும். இரண்டு பாலங்களும் இன்னும் 5 மாதங்களில் பணிகள் நிறைவு பெற்று இதேபோல் திறப்பு விழா செய்யப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களும், மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையை ஏற்று **சேலம் மாநகரத்தில் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால், போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடனும், சாலை விபத்துக்களைக் குறைத்து விலை மதிக்கமுடியாத உயிர்களை காப்பாற்றும் நோக்கத்துடனும் இந்த உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது** என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சேலம் மாவட்டத்தில் நிறைய சாலைகளை நெடுஞ்சாலைத் துறை மூலமாக பராமரித்திருக்கின்றோம். 8 வழிச்சாலை அமைக்க நாம் முயற்சித்தோம், பலர் நீதிமன்றத்திற்கு சென்றிருக்கின்றார்கள், நீதிமன்ற வழக்கு முடிந்த பிறகு அந்தப் பணியும் துவங்கும். சிலர்,

முதலமைச்சர் ஊர் சேலமாக இருப்பதினால் 8 வழிச் சாலை அமைக்கின்றார் என்றும், சேலத்திற்கு மட்டும் 8 வழிச் சாலை அமைப்பது போலவும், அங்கு எனக்கு பத்து தொழிற்சாலையா ஓடிக்கொண்டிருப்பதுபோலவும் ஒரு தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். 8 வழிச் சாலை பல்வேறு ஊர்களிலிருந்து சேலம் வழியாக சென்னைக்குச் செல்கிறதே தவிர, வேறு ஒரு காரணமும் இல்லை. எதிர்க்கட்சியினர் ஒரு தவறான விமர்சனத்தை செய்து கொண்டிருக்கின்றார்கள். நாளுக்கு நாள் வாகனங்களின் எண்ணிக்கை, கனரக வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற காரணத்தினால் சாலைகளின் தேவையும் அதிகரிக்கிறது. 8 வழிச் சாலை அமைப்பதினால் கிட்டத்தட்ட 70 கிலோமீட்டர் தூரம் மீதமாகிறது. அதனால், எரிபொருள் தேவை குறைகிறது. எட்டு வழிச்சாலை அமைப்பதன் மூலம், சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது, பயண நேரம் குறைகிறது, வாகனங்கள் மூலம் வரும் புகைகள் தவிர்க்கப்படுகிறது, சாலைகள் விபத்து குறைகிறது. சாலைகள் கட்டமைப்பு சிறப்பாக இருந்தால்தான், புதிய புதிய தொழிற்சாலைகள் வரும் சூழல் ஏற்படும், அதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும், பொருளாதாரம் மேம்படும். இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் வரும்பொழுது வரவேற்க வேண்டும். பொதுமக்கள் தாங்களாக முன்வந்து அரசுக்கு உதவ வேண்டும். எதிர்க்கட்சிகளும் முன்வந்து இந்தத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும்.

தி.மு.க. ஆட்சிகாலத்தில், டி.ஆர்.பாலு மத்திய தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபொழுது, கிட்டத்தட்ட 700 கிலோமீட்டருக்கு மேல் முழுமை பெறவில்லை. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், அப்பொழுதெல்லாம் பாதிக்கவில்லையா ? ஆகவே, புதிய திட்டம் வரும்பொழுது அதிமுக–விற்கு நல்ல பெயர் கிடைத்துவிடும் என்று சொல்லி, ஒரு சிலபேர் தூண்டிவிடுகிறார்கள். எனவே, எட்டுவழிச்சாலை திட்டம் மிக அவசியமென்று இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அம்மாவினுடைய அரசு பதவியேற்ற பிறகு, கல்வியிலே ஒரு புரட்சி மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்கள். 2011இல் மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி ஏற்றபொழுது உயர்கல்வி படிக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை 100க்கு 21 சதவீதமாக இருந்தது. அம்மா அவர்கள் கல்வியில் செய்த புரட்சி, உதவிகள் வாயிலாக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசில் 100க்கு 46.8 சதவீதம் உயர்கல்வி படிக்கின்றார்கள். இவை கல்வியில் செய்த புரட்சி, மறுமலர்ச்சி. அம்மா அவர்கள் 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தார்கள். மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவற்றை கொடுத்தார்கள். அம்மாவினுடைய அரசும் 11 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தது. அம்மாவின் அரசு கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு அளித்து, தமிழகத்திலே நம்முடைய மாணவ, மாணவிகள் விஞ்ஞான கல்வியை பெறவேண்டும் என்ற நோக்கத்தில் இதுவரை மாண்புமிகு

அம்மாவின் அரசால் 38 இலட்சம் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 15 இலட்சம் மாணாக்கர்களுக்கு கொடுக்க இருக்கிறோம்.

குடிநீர் பிரச்சினையே இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் கூட்டுக்குடிநீர் திட்டங்கள் மூலமாக நடவடிக்கை எடுத்தார்கள். அந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக இன்றைக்கு அம்மாவினுடைய அரசும், குடிநீர் பிரச்சினை இருக்கும் இடங்களிலெல்லாம், அதற்குத் தேவையான நிதிஒதுக்கீடு செய்து, கூட்டுக்குடிநீர் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது சேலம் மாவட்டத்தில் கூட தினந்தோறும் குடிநீர் வழங்கவேண்டும் என்ற நோக்கில், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் வாயிலாக, அதற்குத் தேவையான 110 கோடி ரூபாயை ஒதுக்கி, பழைய குழாய்களையெல்லாம் மாற்றியமைத்து தங்குதடையில்லாமல் சேலம் மாவட்ட மக்களுக்கு தண்ணீர் வழங்க விரைவில் அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அம்மா அளித்த வாக்குறுதியான அம்மா இரு சக்கர வாகன திட்டத்தை தொடர்ந்து அம்மாவின் அரசு நிறைவேற்றி வருகிறது. பணிக்குச் செல்கின்ற மகளிருக்கு மானிய விலையிலே

இருசக்கர வாகனங்களை அம்மாவின் அரசு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கிறது.

அம்மா இருக்கின்றபொழுது எப்படி விலைவாசியை கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்களோ, அதேபோல, **அம்மாவினுடைய அரசும் விலைவாசி உயராமல் ஏழை, எளிய மக்களை பாதுகாத்து வருகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.**

சுகாதார வசதியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதன்மையாக இருக்கிறது. இரண்டு கைகளும் இல்லாத ஒருவருக்கு, இறந்த ஒருவருடைய இரண்டு கைகளையும் எடுத்து பொறுத்தி, ஒரு வரலாற்று சாதனையை படைத்துள்ளனர் தமிழ்நாடு அரசு மருத்துவமனை மருத்துவர்கள். மேலும், தனியார் மருத்துவமனைக்கு இணையாக நமது அரசு மருத்துவமனைகளில் இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்றவையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றோம். இதெல்லாம் அம்மாவின் அரசு செய்த சாதனை என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் வழங்கப்படுகிறது. கூட்டுப் பண்ணைத் திட்டத்தின் மூலமாக விவசாயிகள் செய்கின்ற



விளைச்சலை பெருக்கவேண்டும் என்ற நோக்கில் அம்மா அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல, பால் உற்பத்தியில் தன்னிறைவை பெற்றிருக்கின்றோம். அந்தளவிற்கு பால் உற்பத்தியாளர்களுக்கு அம்மாவினுடைய அரசு உதவி செய்து கொண்டிருக்கிறது. அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக ஏழை எளிய சிறு, குறு விவசாயிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் கொடுத்திருப்பதன் மூலமாக இன்றைக்கு பால் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கிராமங்களில் வாழ்கின்ற விவசாய பெண் தொழிலாளர்களுக்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில், வளர்ப்பதற்கு கோழிகள், கோழிக்குஞ்சு கொடுக்கின்றோம்.

கிராமப்புற காய்கறி வளர்ப்புத் திட்டத்தை உருவாக்குவதற்காக அம்மாவுடைய அரசு திட்டம் தீட்டி, மக்களுக்கு கத்தரி, தக்காளி, மிளகாய் போன்றவற்றிற்கு தேவையான விதைகளை கொடுக்கின்றோம்.

இதுபோன்ற பல்வேறு திட்டங்களின் வாயிலாக தமிழகம் வளர்ச்சி பெற வேண்டும். தமிழக மக்களுக்குத் தேவையான திட்டங்கள் கிடைக்க வேண்டும், கடைக்கோடியில் இருக்கின்ற

சாதாரண ஏழைக்குக் கூட அரசாங்கத்தினுடைய திட்டங்கள் சென்று சேருகின்ற அளவிற்கு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, தமிழகம் முழுவதும் பல்வேறு உயர்மட்டப் பாலங்கள், சாலைகள் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். கூட்டுக் குடிநீர் திட்டம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். புதிய மருத்துவமனைகள் திறப்பு விழா செய்து கொண்டிருக்கின்றோம். வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றோம். வேளாண் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற பழங்கள், காய்கறிகளை பாதுகாக்க குளிர்பதன கிடங்குகள் அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். இப்படி அனைத்துத் துறைகளும் வளர்ந்து இந்தியாவிலேயே தமிழகம் சிறந்து விளங்குகின்றது என்ற நல்ல பெயரை எடுப்பதற்கு இரவு, பகல் பாராமல் அம்மாவினுடைய அரசு பாடுபடும், மக்களுடைய நல்லாதரவை பெறும் என்று சொல்லி, மிகச் சிறப்பாக, குறுகிய காலத்திலே இந்தப் பாலத்தை கட்டிக் கொடுத்த நிறுவனத்திற்கும், இங்கே மிகத் திரளாக காலையிலிருந்து என்னை வரவேற்று மகிழ்ந்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், குறிப்பாக மகளிர் அணியைச் சேர்ந்த சகோதரிகளுக்கும், சிறப்பான ஏற்பாடுகளைச் செய்த கழக முன்னோடி நிர்வாகிகளுக்கும், சட்டப்பேரவை உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு.வெங்கடாசலம் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், முன்னாள் சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி ! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.11.2018 அன்று*
சேலம் மாவட்டம், இரும்பாலை சந்திப்பில் பாலங்கள்
திறப்பு விழாவில் ஆற்றிய உரை

ஒட்டுமொத்த செயல்திறன், சட்டம் ஒழுங்கு மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டிற்கு “இந்தியா டுடே” விருது!

மாண்புமிகு முதலமைச்சர்களே, மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, இந்தியா டுடே திரு. ராஜ் செங்கப்பா மற்றும் குழுவைச் சேர்ந்தவர்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அனைவருக்கும் வணக்கம்,

இந்தியா டுடே பத்திரிகை குழுமத்தின் விருதினை பெறுவது என்பது மிகப்பெரும் பெருமையாகும். தமிழகத்திற்கு ஒட்டுமொத்த செயல்திறன், சட்டம் ஒழுங்கு மற்றும் சுற்றுலாத் துறைக்கு தேசத்தின் முக்கிய பத்திரிகை நிறுவனமான இந்தியா டுடே விருது கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமானது.

நான், மிகவும் எளிய விவசாய குடும்பத்திலிருந்து வந்தவன் எனச் சொல்வதில் மிகவும் பெருமைப்படுகிறேன். நான் இந்த நிலைமைக்கு உயர்வதற்கு காரணம் எனது தலைவி புரட்சித்தலைவி அம்மாவிடம் பெற்ற 33 ஆண்டுகள் பயிற்சியாகும்.

கடந்த 30 ஆண்டுகளில் தமிழகத்தின் பொருளாதாரம் மற்ற மாநிலங்களைவிட மிக வலிமையாகவும், நீடித்தும் நிலைத்தும் வருகிறது. இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் 8.4 சதவீதம் அளிப்பதன் மூலம் தமிழகம் இந்தியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார மாநிலமாக திகழ்கிறது. ஒட்டுமொத்த வறுமையை ஒழிப்பதில் தமிழகம் அகில இந்திய சராசரியை விட அதிகமாக உள்ள சில மாநிலங்களில் ஒன்றாக உள்ளது. தொலைநோக்குப் பார்வை, திட்ட அமலாக்க மூலம் தான் இது சாத்தியமானது.

தமிழகத்தின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடு மிகப்பெரிய மாநிலங்களில் இரண்டாவதாகவும், அகில இந்திய குறியீட்டைவிட அதிகமாகவும் உள்ளது. இதற்கு முக்கிய காரணம் சமூக நலத்திட்டங்களுக்கு முக்கியமாக சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன், மாற்றுத்திறனாளிகள் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் நலனுக்கு தொடர்ந்து செலவிடப்படுவதாகும். இன்று இந்தியாவிலேயே மிக அதிக அளவு படித்த மற்றும் திறன் பெற்ற இளைஞர்கள் உள்ள மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. ஒட்டுமொத்த வளர்ச்சிக் குறியீட்டில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. உயர்கல்வியில் மொத்த சேர்க்கையில் அதிகபட்சமாக 8.6 சதவீதமாக உயர்ந்து விளங்குகிறது.

7.2 கோடி மக்கள் தொகையில் 80 சதவீதம் கற்றோர், 50 சதவீதம் நகர்ப்புறத்தில் உள்ளனர். தமிழகம் ஒரு புதுமை சார்ந்த பொருளாதாரத்தை கொண்டுள்ளது. இதில், உற்பத்தி மற்றும் சேவைத்துறை மிகவும் வலுவான அடிப்படையாக உள்ளது.

உள்கட்டமைப்பு துறையில், நிலையான முதலீடுகள் செய்ய தமிழகம் உறுதிசெய்துள்ளது. புரட்சித்தலைவி அம்மா எடுத்த சீரிய முயற்சியால் மின்துறையில் முதலீடு செய்யப்பட்டதன் மூலம், 2011இல் மின் பற்றாக்குறையாக இருந்த தமிழகம் 2016இல் மின்மிகை மாநிலமாக மாறியுள்ளது. சாலை, நகர்ப்புற மேம்பாடு, போக்குவரத்து மற்றும் அதை சார்ந்த துறைகளில் அதிக அளவு முதலீடுகள் செய்யப்பட்டன.

தரமான மனித வளமும், சிறந்த கட்டமைப்பும் உள்ளதால் சிறந்த முதலீடுகளை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. நேரடையாக வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் அகில இந்திய அளவில் மூன்றாவது இடத்தை அடைந்துள்ளது. பன்னாட்டு ஆலோசனை நிறுவனமான, Frost and sullivan and NCAER தமிழகம் முதலீடுகள் ஈர்ப்பதில் முன்னோடி மாநிலமாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அதிக அளவு தொழிற்சாலைகளும், தொழில் துறையில் அதிக அளவு வேலை வாய்ப்பும் உள்ளது. தமிழகத்தின் தொழில்துறை மிகவும் பரந்துள்ளது. அது ஜவுளி, தோல், மோட்டார் வாகன உதிரி பாகங்கள், வாகனங்கள், கனரக மற்றும் இலகுரக பொறியியல் துறை, மின்னணு உற்பத்தி, தகவல்தொடர்பு மற்றும் தகவல்தொடர்பு சார்ந்த துறைகளில் தமிழகம் பரந்து விரிந்து, முன்னணியில் உள்ளது, மற்றும் மக்கள் நலம் போன்றவற்றில் முதலீடுகள் ஈர்ப்பதில் முதன்மை மாநிலமாக உள்ளது.

பொருளாதாரத்திற்கு சேவைத்துறையின் பங்கு, நாட்டிலேயே தமிழகத்தில்தான் அதிகம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தமிழகம் முன்னோடி மாநிலமாக உள்ளது. எங்களது நோக்கமெல்லாம் புதியதாக மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் எல்லாம் திருப்புமுனை ஏற்படுத்துவதாகும். எங்களது முயற்சி நுண்ணியல் துறை, தகவல் தொடர்புத் துறை மற்றும் நவீன உற்பத்தி தொழில்நுட்பம் ஆகியவற்றில் முன்னோடி மாநிலமாக இருக்க வேண்டும் என்பதாகும்.

சமீபத்தில் இந்த அரசு புதிய சுற்றுப்புறச்சூழல் கொள்கை, மின்ஆளுமை கொள்கை, சுற்றுலா கொள்கை, தகவல் மற்றும் தொடர்பு கொள்கை, மாநில வனக்கொள்கை, இளைஞர்களுக்கான கொள்கை மற்றும் உணவு பதப்படுத்தும் கொள்கை வெளியிட்டது. முக்கியமான துறைகளுக்கு விரைவில் புதிய கொள்கைகள் அறிவிக்கப்படும். இதன்மூலம் முதலீட்டாளர்களுக்கு தெளிவான வழிகாட்டுதல்கள் கிடைக்கும்.

தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் 2018 மூலம் தொழில் நிறுவுவதற்கான உரிமைகள் 30 நாட்களுக்கு வழங்கப்படும். அப்படி அதில் தாமதம் ஏற்பட்டால் தானாக ஒப்புதல் அளித்ததாக கருதி வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2015இல் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் சந்திப்பின் வெற்றியைத் தொடர்ந்து அடுத்த சந்திப்பு சென்னையில், 23.01.2019 மற்றும் 24.01.2019 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சி மாதிரி மிகவும் புதுமையானது என்றாலும் அது பொதுநலனுக்கு வேண்டுகிற பாதுகாப்பையும் நிதிபங்களிப்பையும் உறுதிசெய்கிறது.

இந்தியாவிலேயே தமிழகம் சுகாதார குறியீட்டில் சிறந்து விளங்குகிறது. நிதி ஆயோக் வெளியிட்ட "சுகாதாரமான மாநிலம் – முற்போக்கு இந்தியா" அறிக்கையில் மூன்று முன்னணி மாநிலங்களுள் ஒன்றாக தமிழகம் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சிலர் தமிழகத்தின் பொதுநலத் திட்டங்களை ஜனரஞ்ஜகமானதாக நினைக்கிறார்கள். ஆனால், அவை மக்களின் நலனை ஒட்டியே தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட தேவையை அடிப்படையாகக் கொண்டது. மாணவர்களுக்கு கொடுக்கப்படும் மடிக்கணினி மின்னணு சார்பு இடைவெளியை குறைக்கிறது. தமிழகத்தின் பல முக்கியத் திட்டங்கள், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மதிய உணவுத்திட்டம், மகப்பேறு

நலத்திட்டம், இந்தியாவிற்கு முன்னோடியாக உள்ளது. இத்திட்டங்கள் யாவும் அகில இந்திய அளவில் மாதிரி திட்டங்களாக செயல்படுகிறது. இத்திட்டங்களை உச்சநீதிமன்றம், மத்திய அரசாங்கம், மற்றும் பன்னாட்டு நிறுவனங்களால் பாராட்டு பெற்றுள்ளது. இத்திட்டங்கள் யாவும் தொலைநோக்கும் பன்முகத் தன்மையும் கொண்டது. இவையாவும் வறுமையை ஒழிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

தமிழகம் தனக்கென ஓர் உள்ளடக்கிய வளர்ச்சி போக்கை கடைபிடித்து வருகிறது. இது புரட்சித்தலைவி அம்மாவின் வாக்குறுதியான அனைவருக்கும் அனைத்தையும் வழங்குவதை ஒட்டியுள்ளது.

சட்டம் ஒழுங்கை பராமரிப்பதில் மிகவும் உறுதியாக இருப்பதால் தமிழகம் அமைதியின் புகலிடமாக திகழ்கிறது. தமிழ்நாடு காவல்துறை, தனது பணிகளை நன்கு பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு மிக உயர்ந்த ஒழுக்கத்துடனும், உத்வேகத்துடனும் திறம்பட செயலாற்றுவதால் மாநிலத்தில் இனவாத, இடதுசாரி தீவிரவாதம், மதவாதம் மற்றும் தொழிலாளர் கிளர்ச்சிகளை கட்டுக்குள் வைத்துள்ளது.

புதிய தொழில்நுட்பங்கள் மூலம் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் தமிழகம் முன்னனியில் உள்ளது. மாநிலத்தில் உள்ள பல காவல் நிலையங்களில் மற்றும் பொது இடங்களிலும் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டுள்ளது. இதனால், குற்றங்களைத் தடுக்கவும் மற்றும் கண்டுபிடிக்கவும் முடிகிறது. தொழில்நுட்பங்கள் இன்னும் பல வழிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காவலன் SOS என்ற செயலியின் செயல்பாட்டின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு அதிகப்படுத்தப்பட்டதுடன் அவர்கள் மீதான குற்றங்களும் குறைக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளால் சென்னை Metro இந்தியாவிலேயே பாதுகாப்பான நகரம் என்றும், கோயம்புத்தூர் பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான பெரிய நகரம் என்றும் தேசிய குற்றப்பதிவு அமைப்பு கருத்துக் கூறியுள்ளது.

காவலர் மற்றும் அவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் ஏற்படும் மன உளைச்சல் மற்றும் உடல் ரீதியான உளைச்சல்களில் இருந்து விடுபட தமிழக காவல்துறை பெங்களூரில் உள்ள NIMHANS என்ற நிறுவனத்துடன் இணைந்து காவல் நல்வாழ்வு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

தமிழகம் எப்போதும் மற்ற மாநிலங்களை விட அதிக அளவு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகிறது. மிளிரும் தமிழகம் என்ற அடையாளத்தின் மூலம் தமிழகத்தின் உள்ள பண்பாட்டு சுற்றுலா மையங்கள் புராதன கோவில்கள், பாரம்பரிய நினைவுச்சின்னங்கள் சிறந்த உட்கட்டமைப்பு சிறந்த விருந்தோம்பல் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலை தமிழகத்தை ஒரு சிறந்த சுற்றுலா இலக்காக ஆக்கியுள்ளது.

தமிழ்நாட்டின் செயல்பாடு பல்வேறு விருதுகளை பெற்றதன் மூலம் அங்கீகாரம் பெற்றுள்ளது. வேளாண் துறைக்கு ‘கிரிஷி கர்மான்’ விருது, மகாத்மா காந்தி வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கு விருது, பொதுவிநியோக திட்டத்தை கணினிமயமாக்கியதில் விருது, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித் துறைக்கு விருது, தரமான மருத்துவ சேவைகள் மற்றும் உடல் உறுப்பு மாற்றில் சிறந்த முறையில் செயல்பட்டதற்கான விருது, போக்குவரத்து கழகங்களுக்கும், நகராட்சிகளுக்கும் சிறந்த முறையில் பணியாற்றியதற்கான விருது என பல்வேறு விருதுகள் பெற்றுள்ளது. பெங்களூரில் உள்ள Public Affairs Centre, தமிழகம் இரண்டாவது சிறந்த ஆளுமை நகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் இது வெளிப்படுகிறது.

இந்த விருதுகள் எல்லாம் புரட்சித்தலைவி அம்மாவின் சீரிய தொலைநோக்கு பார்வையும், அரசு மற்றும் சக அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற, அரசு அதிகாரிகளின் உழைப்பே காரணமாகும்.

எங்களது புரட்சித்தலைவி அம்மாவோ நாங்களோ செய்து முடித்ததை நினைத்துக்கொண்டிருப்பவர்கள் அல்ல. புரட்சித்தலைவி அம்மாவின் குறிக்கோள் தமிழகத்தை 2023இல் ஒரு முன்னோடி மாநிலமாக்குவதுதான் அதையே எங்களது இலட்சியமாக கொண்டு செயல்படுவோம். அம்மா அவர்கள் எங்களுக்கு நிர்ணயித்த அமைதி, வளம், வளர்ச்சி என்ற குறிக்கோளை எய்துவதற்கு நாங்கள் தொடர்ந்து பாடுபடுவோம்.

தமிழகம் மிகவும் வலிமையான மற்றும் அமைதியாக செயல்படும் மாநிலம். ஆகவே, இந்தியா டுடேயின் விருதுகளை பெற்றதில் ஆச்சரியமில்லை. மீண்டும் ஒருமுறை இந்தியா டுடே குழுமத்திற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 22.11.2018 அன்று*
புதுடெல்லியில் நடைபெற்ற "இந்தியா டுடே" விருது வழங்கும் விழாவில்
கலந்துகொண்டு ஆற்றிய உரையின் தமிழாக்கம்

சென்னை மற்றும் கோயம்புத்தூரை பெண்கள் வாழ பாதுகாப்பான நகரங்களாக அறிவிக்க காவல் துறையினரின் தன்னலமற்ற பணியே காரணம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

காவலர் பணிக்கென பணி நியமன ஆணைகள் வழங்குதல் மற்றும் வீரத் தியாகிகள் என்ற புத்தகம் வெளியிட தலைமை தாங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காகவும் தங்களது இன்னுயிரை ஈந்த தமிழகக் காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் தியாகத்தினை அங்கீகரித்து, மக்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில் அவர்கள் புரிந்த வீர, தீரச் செயல்களை சித்தரிக்கும் அழகிய வண்ணப் புத்தகத்தை வெளியிட்டு, தமிழ்நாடு

சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட **6,119** ஆளிநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் இந்த விழாவில் கலந்துகொண்டு உங்களை சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அண்ணன் ஜெயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற வருவாய்த்துறை அமைச்சர் சகோதரர் உதயகுமார் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே, நாடாளுமன்ற உறுப்பினர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமை செயலாளர் அவர்களே!

உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே!

காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களே!

தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் இயக்குநர் அவர்களே!

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் அவர்களே!

சிறைத்துறையின் கூடுதல் காவல்துறை இயக்குநர் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் காவல்துறை இயக்குநர்களே மற்றும் வருகை தந்திருக்கின்ற அனைத்து காவல் துறை உயர் அதிகாரிகளே! காவலர்களே! பணிநியமன ஆணைகள் பெற்று, காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளில் சேரவுள்ள ஆளிநர்களே! பணியில் இருந்தபோது வீரமரணமடைந்த காவல்,

சிறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினரின் பெருமைமிகு குடும்ப அங்கத்தினர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தோல்வி வரும்பொழுது விடா முயற்சியுடன் இருத்தல்,
துன்பம் வரும்பொழுது தைரியமாக இருத்தல்,
பதவி வரும்பொழுது பணிவுடன் இருத்தல்,
ஏழ்மை வரும்காலத்தில் நேர்மையாக இருத்தல்,
கோபம் வரும்பொழுது நிதானமாக இருத்தல்,
செல்வம் வரும்பொழுது எளிமையாக வாழ்தல்

என்ற ஆன்றோரின் அறிவுரைகள், உங்கள் பணியினை திறம்பட ஆற்றுவதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், காவல் துறையின் பணியினை இராணுவத்துடன் ஒப்பிட்டு, இராணுவம் எப்படி நாட்டுக்கு வெளியே உள்ள எதிரிகளிடமிருந்து நாட்டை காப்பாற்றுகிறதோ, அதே போல், உள்நாட்டிலுள்ள சமூக எதிரிகளிடமிருந்து நாட்டு மக்களை காவல் துறை காப்பாற்றுகிறது என்று ஒப்பிட்டு கூறுவார்.

“உடலில் எத்தனையோ உறுப்புகள் உள்ளன. ஆனால் இந்த உறுப்புகளிலேயே மிகவும் தலைசிறந்தது நாக்கு. அதாவது சாமர்த்தியமாக, சாதுரியமாக, திறமையாக செயல்படுவதில் நாக்கிற்கு இணை வேறு எதுவும் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. நாக்கின் நிலைமையை நீங்கள் எண்ணிப்பாருங்கள். வாயின் நடுவிலே உள்ள நாக்கைச் சுற்றி 32 பற்கள் உள்ளன. இந்த 32 பற்களும் அந்த நாக்கை கடித்து, குதறி தள்ளக்கூடிய வலிமை வாய்ந்தவை. ஆனால், இந்த சாதுர்யமான நாக்கு, ஆயுட்காலம் முழுவதும் அந்த 32 பற்களுக்கு இடையிலேயே

இருந்து திறமையாக செயல்பட்டு, வெற்றிகரமாக காலத்தை ஓட்டுகிறது. தினம் தினம் தப்பித்தோம் பிழைத்தோம் என்ற நிலையில் வாழ்கின்ற நாக்கு எத்தனை பணிகளை செய்கிறது? கண்டிப்பாக பேசவேண்டிய நேரங்களில் கண்டிப்புடன் பேசுகிறது, கட்டளை இட வேண்டிய நேரங்களில் கட்டளையிடுகிறது. கனிவாக பேச வேண்டிய நேரங்களில் தேன்மழை போன்ற சொற்களை பொழிகிறது. சிலரை மிரட்ட வேண்டிய நேரத்தில் அதையும் செய்கிறது. சுவையான, சத்தான உணவுகளை இந்த உடலுக்கு வழங்குகிறது. பலவிதமான கடமைகளை, காரியங்களை இந்த நாக்கு திறமையாக செயலாற்றுகிறது. அதுவும் பற்களாகிய எதிரிகளுக்கு நடுவில் இருந்துகொண்டே செயலாற்றுகிறது. இந்த நாக்கினைப் போன்று நீங்களும் சமயோசிதமாக செயல்பட்டு அளிக்கப்பட்ட பணியினை வெற்றிகரமாக முடிக்க வேண்டும்'' என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அமுத வாக்கினை பின்பற்றி நீங்கள் பணியாற்ற வேண்டும். சீருடைப் பணியாளர்கள் சிறப்பாக பணியாற்ற உடல் தகுதி மிகவும் இன்றியமையாதது. அதனை பேணிக்காக்க தகுந்த உடற்பயிற்சிகளையும், தியானமும் தினமும் செய்து, உடலையும், மனதையும் கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும்.

காவல் துறை, சிறைத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகியவற்றிற்கு தகுந்த சீருடை சார்நிலைப் பணியாளர்களை நியமிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உருவாக்கப்பட்டது.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம் அணிகளன்ப
நாட்டிற்கு இவ்வைந்து''

அதாவது நோயின்மை, செல்வம், விளைதல், மகிழ்ச்சி, காவல் என்னும் ஐந்தும் பெற்றிருத்தல் நாட்டிற்கு அழகு.

என்ற வள்ளுவர் பெருமானின் வாக்கிற்கு இணங்கவும், ''அமைதி, வளம், வளர்ச்சி'' என்ற மாண்புமிகு அம்மா அவர்களின்

தாரகமந்திரத்தின் வழிகாட்டுதலின்படியும், மாண்புமிகு அம்மாவின் அரசு தமிழ்நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உலகத்திலேயே திறமை வாய்ந்த ஸ்காட்லாண்டு யார்டு போலீசுக்கு இணையாக தமிழ்நாட்டு காவல் துறையின் பணி பாராட்டி பேசப்பட்டு வருகிறது. மேலும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க அனைத்து மகளிர் காவல் நிலையம் அதிக அளவில் நிறுவப்பட்டது தமிழ்நாட்டில் மட்டும்தான். இத்தகைய பெருமைமிக்க தமிழ்நாடு காவல் துறையில் உங்களுக்கு பணியாற்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

அதுபோன்று, தமிழ்நாடு சிறைத் துறையினர், குற்றம் புரிந்தவர்களுக்கு தண்டனையை நிறைவேற்றும் பொறுப்போடு மட்டுமல்லாமல், மேற்படி சிறைவாசிகள் மனம்திருந்தி வாழ்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு, அவர்களின் மறுவாழ்விற்கும், பல நல்ல அரிய திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஏற்படும் இயற்கை பேரிடர்களின் போதும், தீ மற்றும் இதர பெரும் விபத்துக்களின் போதும், தமிழக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் தங்களின் உயிரை பணயம் வைத்து பொதுமக்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாத்து சீரிய முறையில் செயல்பட்டு வருகின்றனர்.

இவ்வாறாக, இந்த மூன்று பிரிவினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு சேவை செய்து வருகின்றனர். இது போன்ற பெருமைகளைக் கொண்ட தமிழக காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைகளில் பணியில் சேரும் நீங்கள், பெருமிதம் கொள்ள வேண்டும். நாங்களும் பெருமை கொள்கிறோம்.

சென்ற ஆண்டில் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால் 15,621 சீருடை பணியாளர்கள்

தேர்ந்தெடுக்கப்பட்டு 16.10.2017 அன்று என்னால் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டன. நான் அந்த நிகழ்ச்சியில், உரையாற்றுகையில், இதுமட்டுமல்லாமல் இன்னும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட பணியிடங்கள் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வாணையத்தால் விரைவில் நிரப்பப்பட உள்ளது என்று அறிவித்தேன்.

"நாங்கள் செய்வதைதான் சொல்வோம்; சொல்வதைத்தான் செய்வோம், மேலும், சொல்லாததையும் செய்வோம்" என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வாக்கிற்கிணங்க, தமிழ்நாடு சீருடை பணியாளர்கள் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 6,119 சீருடைப் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்படவுள்ளன. இதில் 5,531 நபர்கள் காவல் துறைக்கும், 351 நபர்கள் சிறைத் துறைக்கும் 237 நபர்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். காவல் துறையில் சுமார் 5 விழுக்காட்டிற்கும் குறைந்த பணியிடங்கள் மட்டுமே காலியாக இருக்கின்றன. இந்தப் பணியிடங்களையும் கூட விரைவில் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன.

தமிழ்நாடு அரசு 2011ஆம் ஆண்டு முதல் இதுநாள் வரை 1,112 சார்பு ஆய்வாளர்களையும், 32,905 இரண்டாம் நிலை காவலர்களையும் தெரிவு செய்து பணிநியமன ஆணை வழங்கியுள்ளது. மேலும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2014ஆம் ஆண்டில் 9,140 நபர்கள், தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படையினராக பணிநியமனம் செய்யப்பட்டு, அவர்களில் 8,569 நபர்கள் இரண்டாம் நிலை காவலர்களாக 2016–2017ஆம் ஆண்டுகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்
அது முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்

உள்ளம் என்றொரு ஊர் இருக்கும்
அந்த ஊருக்குள் எனக்கொரு பேர் இருக்கும்
கடமை அது கடமை
அன்பே உன் அன்னை
அறிவே உன் தந்தை
உலகே உன் கோவில்
ஒன்றே உன் தேவன்
வாழை மலர் போல பூமி முகம் பார்க்கும்
கோழை குணம் மாற்று தோழா
நாளை உயிர்போகும் இன்று போனாலும்
கொள்கை நிறைவேற்று தோழா,''

என்ற புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப நீங்கள் பணியாற்றி தமிழ்நாடு காவல் துறையின் நற்பெயரை நிலைநிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2016ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்காக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், தமிழகம் தொடர்ந்து அமைதி பூங்காவாக திகழ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குற்ற நிகழ்வுகளை தொடர்ந்து குறைத்திட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார். அதன்படியே தமிழ்நாடு தொடர்ந்து அமைதி பூங்காவாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று குற்ற நிகழ்வுகளும் குறைந்துள்ளன. இதுபற்றிய புள்ளிவிவரம் சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய குற்றவியல் ஆவண காப்பக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மெட்ரோ நகரங்களில் சென்னையும், பெரு நகரங்களில் கோயம்புத்தூரும் பெண்கள் வாழ பாதுகாப்பான நகரங்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் காவல் துறையினரின் தன்னலமற்ற பணி என்பதை நினைத்து நீங்கள் பெருமைப்பட வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றேன்.

நேற்றையதினம், புதுதில்லியில் இந்தியா டுடே பத்திரிகை சார்பாக தேசிய அளவில் பல்வேறு காரணிகள் அடிப்படையில் மாநிலத்தின் வளர்ச்சி ஆய்வு செய்யப்பட்டு அதில், தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சிறப்பாக செயல்படுகின்றது என்பதற்காக விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது உங்கள் பணிக்குக் கிடைத்தவெற்றி என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் பாகிஸ்தானின் எல்லையை ஒட்டி அமைந்திருந்த இராணுவ பிரிவுகளை பார்த்துவிட்டு வந்தபோது அவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒன்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

“நீங்கள் முப்பது வருட காலம் இராணுவத்தில் வேலை செய்யும் வாய்ப்பு உங்கள் எதிரே காத்திருக்கிறது. அதிகாரி என்ற முறையில் எதை உங்களது சிறப்பான குறிக்கோளாக வைத்துக் கொண்டு பணிபுரியப் போகிறீர்கள்”, என்று இராணுவ வீரர்களிடம் திரு. அப்துல் கலாம் அவர்கள் கேட்டார்.

மூத்த அதிகாரிகள் பலரும் அமைதியாக இருந்தபோது, ஓர் இளம் அதிகாரி, “சார், எனக்கு ஒரு கனவு இருக்கிறது. “மற்றவர்கள் கைப்பற்றிய எனது தாய் பூமியை எல்லாம் மீட்டெடுக்க வேண்டும்” என்றார். அதைக் கேட்டவுடன் கூட்டமே சிலிர்த்து எழுந்து, இளம் அதிகாரியைப் பார்த்து எல்லோரும் சந்தோஷமாக ஆரவாரம் செய்தார்கள்.

எனவே, அந்த இளம் இராணுவ வீரரைப் போல தெளிவான இலக்கினை நிர்ணயம் செய்துகொண்டு பணியாற்றுங்கள் என அன்புடன் உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களும் மற்றும் அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் சீருடை பணியாளர்களுக்கு எண்ணற்ற சலுகைகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் எடுத்த துரித நடவடிக்கைகள் காரணமாக காவல் துறை முழுமையாக நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

காவல்துறைக்கென தனியாக ஒரு வீட்டுவசதிக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் காவலருக்கென தங்குவதற்கான குடியிருப்புகளும் மற்றும் உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ், சொந்த குடியிருப்புகளும் தமிழ்நாடு முழுவதும் கட்டப்பட்டு வருகின்றன. காவல் நிலையங்கள் புதியதாக கட்டப்பட்டும், ஏற்கெனவே உள்ள காவல் நிலையங்கள் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன.

காவல் துறையினரின் மனநலன் மற்றும் குடும்ப நலன் ஆகியவற்றை பேணி பாதுகாப்பதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசால் உருவாக்கப்பட்ட திட்டமான காவலர் நிறைவாழ்வு பயிற்சி திட்டம் என்னால் சமீபத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த திட்டம் பெங்களூரில் உள்ள நிம்ஹான்ஸ் என அழைக்கப்படும் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசால் தமிழ்நாட்டு காவல் துறையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் பயிற்சி ஆகும். அனைத்து மாவட்டம் மற்றும் காவல் பிரிவுகளிலும், சிறப்பு பிரிவுகளிலும் பணியாற்றும் காவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் இந்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே

இராணுவத்திலோ அல்லது துணை இராணுவத்திலோகூட இம்மாதிரியான பயிற்சி இதுவரை அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்காக அரசால் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் தமிழக சீருடைப் பணியில் சீரிய முறையில் வீரத்துடன் பணிபுரிந்து, பணியின் காரணமாக நாட்டிற்காகவும், மக்களின் நலனிற்காகவும் தன்னுயிர் நீத்த நிகழ்வுகளை நினைவு கூர்ந்து "வீரத் தியாகிகள்" என்ற புத்தகத்தினை வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்புத்தகத்தில் 1960ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் தமிழக காவல், சிறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தமது உயிரினை துச்சமாக நினைத்து பணியின் போது உயிரினைத் துறந்த 146 வீரத் தியாகிகளின் சேவைகள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. இதில் 118 காவல் துறையினர், 23 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினர் மற்றும் 5 சிறைத் துறையினர் தொடர்பான குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. தமது தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் குடும்பத்தினரை கருத்தில் கொள்ளாமல் சமுதாயம் மற்றும் மக்கள் நலனையே பெரிதெனக் கருதி நமது இன்றைய நல்வாழ்க்கைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த இத்தியாகிகள் மிகவும் போற்றத்தக்கவர்கள். குறிப்பாக, சமுதாயத்திற்கு கேடு விளைவித்து, பொது அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய நக்சல் தீவிரவாதிகள், உள் மற்றும் அண்டை நாட்டு தீவிரவாதிகள் மற்றும் சமூக விரோதிகளை ஒடுக்கும் பணியில் ஈடுபட்ட போது, தங்களது உயிரினைத் துறந்து வீரமரணம் அடைந்த காவல் துறையைச் சார்ந்தவர்களின் பணிகளை என்றும் நம்மால் மறக்கமுடியாது.

பொதுமக்களை இடர்பாடுகளின் போது மீட்கும் பணியில் தங்களது இன்னுயிரை ஈந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினைச் சார்ந்தவர்களின் பணிகளும் மெச்சத்தகுந்ததாகும்.

மேலும், தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை நல்வழிப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்து வீரமரணம் எய்திய சிறைத்துறை பணியாளர்களின் சீர்மிகுந்த பணிகள் நமது அமைதியான வாழ்க்கைக்கு அடித்தளமிட்டதாகும்.

இவ்வீரத் தியாகிகள் தற்போது நம்மிடையே இல்லையென்றாலும் அவர்களுடைய விலை மதிப்பற்ற தியாகச் செயல்கள் இன்றும், என்றும் நமது நினைவில் உள்ளன. இதற்கேற்ப, தங்களின் இன்னுயிரை ஈந்து நாம் மற்றும் சமூகம் நலமுற வாழ தங்களது உயிரை மாய்த்துக் கொண்ட இவ்வீரத் தியாகிகளுக்கு இத்தருணத்தில் எனது சிரம் தாழ்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தியாகிகள் சிறப்புற செயல்பட அவர்களது குடும்பமும் உறுதுணையாக இருந்துள்ளது. எனவே, அத்தியாகிகளின் குடும்பத்தார் அனைவருக்கும் தமிழக அரசின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக உயிர்நீத்த காவலர்களின் தீரச் செயல்களை நினைக்கும்போது எனக்கு பிரான்ஸ் நாட்டில் ஒரு இளம் பெண் நிகழ்த்திய உலக சாதனை நினைவுக்கு வருகிறது. அதனை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

'ஜோன் ஆப் ஆர்க்' என்ற இளம் பெண்.

15ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து—பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையே கடும் போர் நடந்து கொண்டிருந்த காலம். பிரான்ஸின் பல பகுதிகளை இங்கிலாந்து கைப்பற்றியது. பிரான்ஸ் அரசனான ஏழாவது சார்லஸ், அதிகாரங்கள் எதுவுமின்றி பொம்மையாக இருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டான்.

பிரான்ஸ் தேசத்தில் சிறிய கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள் ஜோன். இவள், தனது தாய்நாடான பிரான்ஸ், இங்கிலாந்திடம் அடிமைப்பட்டுக் கிடப்பதை பற்றி, தன் தந்தையின் மூலம் அறிந்திருந்தாள். தனது தாய்நாட்டை அந்நிய ஆதிக்கத்தில்

இருந்து விடுவிக்க வேண்டும் என்ற விருப்பம் அவளுக்கு தோன்றியது. நாளடைவில் இந்த விருப்பம் தீவிரமடைந்தது. இதனை தனது தாய் தந்தையரிடம் தெரிவித்தாள். அவர்கள், “நீ திருமணம் செய்துகொண்டு வாழும் வழியைப் பார்” என்று அறிவுரை கூறினர்.

ஆனால், அவள் தாய்நாட்டை விடுவிக்க வேண்டும் என்ற தனது எண்ணத்தில் உறுதியாக இருந்தாள். ஒரு சிலரது துணையுடன் பிரான்ஸ் அரசர் ஏழாவது சார்லஸ் அவர்களை சந்தித்தாள் ஜோன். தான் இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இருந்து பிரான்ஸை மீட்க வந்திருப்பதாக அரசனிடம் பணிவுடன் தெரிவித்தாள். மேலும், ஒரு முக்கிய நகரை மீட்க பிரஞ்சுப் படையை தன் தலைமையின் கீழ், அனுப்புமாறு வேண்டினாள். பெரும் தயக்கத்திற்கு பின் அவளது கோரிக்கையை அரசன் ஏற்றான்.

போர்க் கவசம் அணிந்து ஒரு கையில் உருவிய கத்தி, மறுகையில் அல்லிப் பூக்கள் வரையப்பட்ட வெண் கொடியுடன் குதிரையின் மீது அமர்ந்துகொண்டு ஐந்தாயிரம் பிரஞ்ச் போர் வீரர்களுடன் புறப்பட்டாள் ஜோன். இது நடந்தது 1429ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம். அப்போது அவளது வயது 18. இளம் பெண் ஒருவரது தலைமையில் வரும் பிரெஞ்ச் படையை பார்த்து முதலில் சிரித்தனர் ஆங்கிலேயப் படையினர்.

ஆனால் சுதந்திர வேட்கை மிகுந்த ஜோனின் உணர்ச்சியூட்டும் தலைமையின் கீழ் வீரப்போர் புரிந்த பிரெஞ்ச் படையினரின் தாக்குதலில் நகரின் கோட்டைகள் ஒன்றன் பின் ஒன்றாக வீழ்ந்தது. கடைசியாக அவள் போரில் காயமுற்றாலும், அதனைப் பொருட்படுத்தாமல் கடும்போர் புரிந்து அந்த நகரை கைப்பற்றினாள். இவளது வீரத்தினைக் கண்ட ஆங்கிலேயப் படையினர் மிகவும் வியந்தனர். இதுபோன்ற பல போர்களில் போரிட்டு பிரான்ஸ் தேசத்துக்கு வெற்றி மேல் வெற்றியை தேடிக் கொடுத்து, ஆங்கிலேயர்களை பிரான்ஸின் வடக்கு மூலைக்கே

விரட்டியடித்தாள். இதனையடுத்து, பிரான்ஸின் அரசனாக ஏழாவது சார்லஸ் முடிசூடிக்கொண்டார்.

இத்தகைய சாதனை புரிந்த ஜோன் வாழ்ந்தது மொத்தம் 19 ஆண்டுகள்தான். இந்த வீராங்கனையின் வீரம் இன்றும் பிரான்ஸ் நாட்டில் போற்றப்பட்டு வருகிறது.

இந்த சரித்திர உண்மை சொல்வது என்ன ? ஒவ்வொருவரும் பெரும் சாதனைகளுக்காகவே பிறந்திருக்கிறோம். அவற்றை நிகழ்த்திக் காட்டும் திறனும், வலிமையும் நம் ஒவ்வொருவரிடம் இயற்கையாகவே அமைந்துள்ளன. அவற்றை உணர்ந்து செயல்படுவதே நமது கடமை.

மேலும், இன்று பணி நியமனம் பெறவுள்ள நீங்கள் எதிர்காலத்தில் பதக்கங்கள் பல குவிக்கும் திறமைமிக்கவர்களாக திகழ வேண்டும் என உளமாற வாழ்த்துகிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க !
வளர்க புரட்சித்தலைவர் அவர்களின் புகழ் !
ஓங்குக மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் !
தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி !

நன்றி ! வணக்கம் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.11.2018 அன்று*
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு
காவல்துறையின் வீரத்தியாகிகள் புத்தகம் வெளியிடுதல் மற்றும்
6,119 சீருடைப் பணியாளர்களுக்கான பணி நியமன ஆணைகள்
வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

மனித வளம் தான் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை! நலமான மாநிலமே, வளமான மாநிலம்!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்த மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் திரு.வெங்கைய்யா நாயுடு அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அண்ணன் திரு. டி.ஜெயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சகோதரர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே!

இந்தநிகழ்ச்சியிலேபங்குபெற்றுசிறப்பித்துக்கொண்டிருக்கின்ற பாரத ஜனதா கட்சியினுடைய மாநிலத் தலைவர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் அவர்களே!

ஜெம் மருத்துவமனையின் தலைமை நிருவாகி மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் சி. பழனிவேலு அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மரியாதைக்குரிய வானதி சீனிவாசன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

இம்மருத்துவமனையினுடைய நிருவாகிகளே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மருத்துவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! தொழில் அதிபர்களே! நண்பர்களே! மற்றும் பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவையில் உள்ள ஜெம் மருத்துவமனை நிருவாகம் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்ட மக்களின் நலனுக்காக சென்னையிலும் ஜெம் மருத்துவமனையை துவக்கும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே இரைப்பை மற்றும் குடல் சார்ந்த நோய்கள் மற்றும் குடல் இறக்க நோய்க்கான லேப்பிராஸ்கோப்பி அறுவை சிகிச்சை மையத்தை ஜெம் மருத்துவமனை என்ற பெயரில் முதன் முதலில் கோவையில் துவக்கியவர் டாக்டர் திரு.சி.பழனிவேலு அவர்கள். லேப்ராஸ்கோபிக் முறையினால் நோயாளிகள் மருத்துவமனையிலும், பின்னர் வீட்டிலும் நீண்ட நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டிய சூழ்நிலையை தவிர்த்து, வெகு விரைவிலேயே

தங்கள் அன்றாட பணிகளுக்கு திரும்ப முடியும். அதேபோல் கடந்த 2001ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக லேப்ராஸ்கோப் அறுவை சிகிச்சை முறையையும் அறிமுகப்படுத்தியவர் டாக்டர் சி.பழனிவேலு அவர்கள். சிறுநீரகம் உட்பட அனைத்து சிறப்பு மருத்துவத்திற்கான சிகிச்சையையும் லேப்ராஸ்கோப் அறுவை சிகிச்சை மூலம் மேற்கொண்ட இந்தியாவின் முதல் மருத்துவமனை இது தான் என்பதும், 3D, 4K மற்றும் ரோபோடிக் போன்ற நவீன முறையிலான லேப்ராஸ்கோப் அறுவை சிகிச்சையும் இம்மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் அறிய முடிகிறது. மேலும், மருத்துவ ஆராய்ச்சிப் படிப்புக்கும் இம்மருத்துவமனை ஒரு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், தென்னிந்தியாவில் முதல் முறையாக லேப்ராஸ்கோப்பி முறையில் கல்லீரல் தான அறுவை சிகிச்சை செய்து ஜெம் மருத்துவமனை சாதனை படைத்தது பாராட்டுக்குரியதாகும்.

இங்கிலாந்து, அமெரிக்கா, கொரியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் லேப்ராஸ்கோபிக் சிகிச்சையை செய்து காண்பித்ததோடு, அதனை கற்றுக் கொடுக்கும் முதல் இந்தியர் என்ற பெருமையையும் பெற்றவர் டாக்டர் திரு.சி.பழனிவேலு அவர்கள். இவர் தனது ஆராய்ச்சி படிப்பினை இங்கிலாந்து நாட்டில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முடித்தார். 2005ஆம் ஆண்டு, லேப்ராஸ்கோப் அறுவை சிகிச்சைகளை சிறப்பாக செய்தமைக்காக, இந்தியாவின் மிக உயரிய விருதான டாக்டர் பி.சி.ராய் விருது இவருக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. மீண்டும் 2015ஆம் ஆண்டு ‘Eminent Medical Person’ என்ற பிரிவின் கீழ் இவருக்கு டாக்டர் பி.சி.ராய் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்தப் பிரிவின் கீழ் தென்னிந்தியாவில் விருது பெற்ற நான்கு மருத்துவர்களின் இவரும் ஒருவர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

“சமூக பொருளாதார பின்னணி எதுவாக இருந்தாலும், அதனைக் கருத்தில் கொள்ளாமல், மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும்

மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து நடைமுறைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவத் திறன் செயல்பாடுகள் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதே எனது நோக்கம் ஆகும்'' என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் தமிழ்நாட்டு மக்களின் உடல் நலனுக்கு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. ''நலமான மாநிலமே, வளமான மாநிலமாகும்.'' சிறந்த மனித வளம் தான் ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை ஆகும். அந்த வகையில், மகப்பேறு மற்றும் குழந்தை நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்துவதினால் தான், IMR மற்றும் MMRI குறைப்பதிலும், பிற சுகாதார குறியீடுகளிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்பதை இங்கே பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீரான சுகாதார பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்யும் நோக்கில் முன்னோடி செயல் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

❖ தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைக்குழு

ஆகியவை சிறந்த மருத்துவ சேவையை அளித்து வருகிறது. மேலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சுகாதாரத் திட்டம், பிரசவ உடனாளர் திட்டம், அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை, அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா மருந்தகம் போன்ற பல முன்னோடி திட்டங்களையும் முதன் முதலாக செயல்படுத்திய பெருமை தமிழ்நாட்டிற்கு உள்ளது.

❖ இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்படுவதில் நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்காக மத்திய அரசின் விருதை தமிழ்நாடு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பெற்று வருகிறது.

❖ தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வெகு சிறப்பான செயல்பாட்டின் மூலம் குழந்தை இறப்பு விகிதம், தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் மொத்த கருவள விகிதம் போன்ற சுகாதார குறியீடுகளில் தமிழ்நாடு சிறந்த சாதனையை படைத்துள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளின் கீழ், தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய இலக்கினை 2016ஆம் ஆண்டுக்குள் அடைந்த இந்தியாவின் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

❖ கடந்த 7 ஆண்டுகளில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 221 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

❖ இதுதவிர 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, ஸ்கேன் போன்ற வசதிகளுடன் 190 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

❖ அரசு மருத்துவமனைகளில் சிறந்த தூய்மை பாராமரிப்பிற்காக கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, மணப்பாறை, அரசு தலைமை மருத்துவமனை, அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், முகையூர் ஆகிய 4 அரசு மருத்துவ நிலையங்களுக்கு மத்திய அரசின் காயகல்ப் விருதிற்கான கேடயமும், பாராட்டு சான்றிதழ் மற்றும் 1 கோடி ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டுள்ளன.

❖ அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக 1,035 கோடி ரூபாயும், பல்வேறு உபகரணங்களுக்காக 376 கோடி ரூபாயும், மாவட்ட மற்றும் துணை மாவட்ட அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புக்காக 174 கோடியே 68 இலட்சம் ரூபாயும், உபகரணங்களுக்காக 82 கோடியே 41 இலட்சம் ரூபாயும் மாண்புமிகு அம்மாவின் அரசு இதுவரை வழங்கியுள்ளது.

❖ அரசு மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக ஆயிரத்து 630 கோடியே 40 இலட்சம் ரூபாயும், மருத்துவக் கல்லூரிகளுக்காக 722 கோடியே 26 இலட்சம் ரூபாயும் தேசிய நலவாழ்வு குழுமம் வழங்கியுள்ளது.

❖ ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ், ஆயிரத்து ரூ.634 கோடி செலவில் உட்கட்டமைப்பு மற்றும் உயர் தொழில்நுட்ப மருத்துவக் கருவிகளுடன் நகர்ப்புற ஏழை மக்களின் பயன்பாட்டிற்காக 11 அரசு மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அளவிலான மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட உள்ளன.

❖ அரசு மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன், சி.டி.ஸ்கேன் போன்ற பல புதிய நவீன உபகரணங்களை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

❖ மாண்புமிகு அம்மா அவர்களாலும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக மதுரை மாவட்டம் தோப்பூரில் ரூ.1,500 கோடி செலவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது.

❖ கரூரில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், விருதுநகரில் ஒரு புதிய பல் மருத்துவக் கல்லூரியும் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

❖ உலகத் தரம் வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம் செங்கல்பட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.60 கோடி செலவில் நிறுவப்பட உள்ளது.

❖ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

❖ உயர்தரமருத்துவசேவைகளைவழங்குவதில்மட்டுமல்லாது,மிகச் சிறந்தமனிதவளம்மற்றும்கட்டமைப்பைஏற்படுத்தித்தருவதிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகிற காரணத்தால், தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக விளங்குகிறது.

ஜெம் மருத்துவமனையில் வசதியான அறுவை சிகிச்சை அரங்கங்களும், தீவிர சிகிச்சை பிரிவும், அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.பொதுவாக கணையத்தில் புற்றுநோய் என்பது சிகிச்சைக்கு மிகவும் சிக்கலான ஒன்றாக கருதப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட சிக்கலான அறுவை சிகிச்சையை மரியாதைக்குரிய டாக்டர் திரு.பழனிவேலு அவர்கள் தன்னுடைய தனிப்பட்ட ஆற்றலினால், உலகிலேயே

முதன்முறையாக லேப்ரோஸ்கோபிக் முறை மூலம் வெற்றிகரமாக செய்த பெருமைக்குரியவர். சர்வதேச அறுவை சிகிச்சைக்கான ஒலிம்பிக்ஸில் வெள்ளிப்பதக்கம் பெற்றவர் மரியாதைக்குரிய டாக்டர் திரு.பழனிவேலு அவர்கள். இது மட்டுமன்றி, சர்வதேச அளவில் 25 விருதுகளுக்கு மேல் பெற்ற சிறப்புக்குரியவர். சர்வதேச அளவில் "திரு.பழனிவேலுவின் உணவுக் குழாய் புற்றுநோய் அறுவை சிகிச்சை" என்று மருத்துவ தொழில்நுட்பத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது இவரது தனிச் சிறப்பைக் காட்டுகிறது. இவரால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

எனவேதான், தங்களுடைய உயிரை பாடுபட்டு காப்பாற்றும் மருத்துவர்களை தெய்வத்திற்கு இணையாக மக்கள் போற்றுகிறார்கள்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்ப மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும். "கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே"என்று பகவான் கிருஷ்ணர் பகவத் கீதையில் கூறினார். "செய்யும் செயலுக்கு உரிய வெகுமதி கண்டிப்பாக கிடைக்கும்" என்றனர் நமது ஆன்றோர் பெருமக்கள். எனவே, பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்பவர்களுக்கு உரிய பலன் நிச்சயம் கிடைக்கும். இதுகுறித்த நிகழ்வு ஒன்றினை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கிலாந்து நாட்டு கிராமம் ஒன்றில் ஃபிளெமிங் என்ற ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு நாள் நிலத்தில் வேலை செய்யச் செல்லும்போது, ஒரு சிறுவன் புதை குழியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள போராடிக் கொண்டிருந்தான். காப்பாற்றுங்கள் எனக் கத்திக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த ஃபிளெமிங் உடனே மிகவும் கஷ்டப்பட்டு போராடி அந்த சிறுவனை புதைகுழியில் இருந்து காப்பாற்றினான்.

மறுநாள் அவனது வீட்டிற்கு அந்த பையனின் தந்தை வந்தார். அவர் ஒரு பெரிய செல்வந்தர். வந்த அவர் அந்த விவசாயியிடம், “உனக்கு என்ன வேண்டும்”, என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி, “அது எனது கடமை, வெகுமதி எதுவும் வேண்டாம்”, என்றான். உடனே அங்கிருந்த அந்த விவசாயியின் மகனைப் பார்த்த செல்வந்தர், “இவன் நல்ல கல்வி பெற ஏற்பாடு செய்கிறேன்”, என்று ஃபிளெமிங்கின் மகனை தன்னுடன் அழைத்துச் சென்றார். அவரது உதவியால் படித்துப் பட்டங்கள் பெற்று, மருத்துவத் துறையில் பெரும் சாதனை செய்தான் அந்த விவசாயி மகன். ஆம். சிறு காயம் முதல் இதய நோய்வரை உடல் உபாதைகள் பலவற்றுக்கு அருமருந்தான பென்சிலின் என்ற ஆன்டிபயாடிக் மருந்தைக் கண்டுபிடித்து மனித குலத்துக்கு சேவை செய்த அலெக்சாண்டர் ஃபிளெமிங்தான் அந்த சிறுவன்.

இவரது தந்தையால் காப்பாற்றப்பட்ட அந்த செல்வந்தரின் மகன் பல ஆண்டுகளுக்குப் பின் நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டபோது அந்த பென்சிலின் மருந்தே அவனைக் காப்பாற்றியது. அப்படி காப்பாற்றப்பட்ட சிறுவன் யார் தெரியுமா? 2ஆம் உலகப்போரில் ஹிட்லரை வீழ்த்துவதில் பெரும் பங்குவகித்த இங்கிலாந்தின் புகழ்பெற்ற பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில்தான் அவர்.

எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், ஒரு ஏழை விவசாயி உயிருக்குப் போராடிய ஒரு சிறுவனை காப்பாற்றிய செயலுக்கான பலன், அவனது மகன் ஒரு செல்வந்தரின் உதவியால் உலகம் போற்றும் மருத்துவராக உயர்ந்தான். அதுமட்டுமின்றி, அந்த மருத்துவர் கண்டுபிடித்த பென்சிலின் என்ற மருந்தினால், உலக மக்கள் பயனடைந்தனர். அதேபோல், ஏழை விவாசாயி மகனை நன்கு படிக்க வைத்த செயலுக்கான பலன், அந்த செல்வந்தரின் மகன் உயிர் காப்பாற்றப்பட்டு, நாட்டிற்கே பிரதமர் ஆனார்.

“உற்றான் அளவும், பிணியளவும், காலமும் கற்றான் கருதிச் செயல்”

என்றார் வள்ளுவர் பெருமான். அதாவது நோயுற்றவனின் வயது, நோயின் அளவு மற்றும் உடலில் எவ்வளவு நாளாக நோய் உள்ளது ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து, தகுந்த முறையில் மருத்துவம் செய்ய வேண்டும்.

சென்னை பெருங்குடியில் இன்று துவக்கப்பட்டுள்ள உங்கள் மருத்துவமனையின் பணி, வள்ளுவர் பெருமான் கூற்றுக்கு ஏற்ப அமைய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். ஏழை, பணக்காரர் வித்தியாசம் பார்க்காமல் அனைவருக்கும் தரமான மருத்துவ சேவையை வழங்க வேண்டும் என்பதை கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும். இவ்வாறான சேவையின் மூலம் இந்த மருத்துவமனை வருங்காலத்தில் நல்லமுறையில் வளர்ந்து உலகம் போற்றும் மருத்துவமனையாக திகழ வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 03.12.2018 அன்று*
சென்னை, பெருங்குடியில் நடைபெற்ற
GEM மருத்துவமனை திறப்பு விழாவில் ஆற்றிய உரை

உயிர்களைக் காப்பாற்றிட உயர்மட்ட பாலங்கள்!



மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் சேலம் மாநகராட்சி புதுப்பொலிவு பெறுகின்ற விதமாக பல்வேறு திட்டங்கள், சீர்மிகு நகரத் திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா.

இன்றையதினம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னான தினம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே சேலம் மாவட்டம் என்று சொன்னாலே அம்மாவிற்கு தனி பிரியம் உண்டு. அதுவும் சேலம் மாநகராட்சி என்றால் ஒரு ராசியான இடம் என்று அம்மா எப்பொழுதும் நினைப்பார்கள். ஆகவே, இந்த ராசியான மாநகராட்சிக்கு

என்னென்ன திட்டங்கள் வேண்டுமோ அத்தனை திட்டங்களையும் வாரி வழங்கிய முதலமைச்சர் மறைந்த இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கின்றேன். அவருடைய காலத்தில் தான் நிறைய திட்டங்கள் நாங்கள் கொண்டுவந்தோம். தி.மு.க.வினர் ஆனந்தா பாலத்தை பாதியிலே கட்டிவிட்டுச் சென்று விட்டார்கள், அதையும் நாம் தான் கட்டி முடித்தோம், அதற்கு நில எடுப்பிற்குத் தேவையான நிதியையும் அம்மாதான் கொடுத்தார்கள்.

திருவாக்கவுண்டனூர், ஏ.வி.ஆர். ரவுண்டானா, இரும்பாலை சந்திப்பு, சூரமங்கலம் இரயில்வே கீழ்ப்பாலம் போன்ற பாலங்கள் கட்டுவதற்கும் அம்மா தான் ஒப்புதல் செய்து, நிதி ஒதுக்கி, அம்மாவினுடைய நல்லாசியோடு கட்டி முடிக்கப்பட்டு, இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்கு திறந்து வாகனங்கள் அருமையாக போய்க் கொண்டிருக்கிறது. 5 ரோடு சந்திப்பு ஈரடுக்கு மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அவைகளும் விரைவாக நடைபெற்று முடிந்து, மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும். ஏனென்றால், சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற ஒரு மாநகரம், போக்குவரத்து நெரிசல் அதிகமான மாநகரம். ஆகவே, இந்த மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே அவரிடம் எடுத்துச் சொல்லி, பல்வேறு பாலங்கள் பெறுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம்.

அதேபோல, செவ்வாய்ப்பேட்டை லீ பஜார், ஒரு சிலர் நீதிமன்றத்திற்கு சென்ற காரணத்தினால், அது தடைப்பட்டுள்ளது. வழக்கு முடிந்தவுடன் அந்தப் பாலங்களும் மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

அதேபோல, அருமைச் சகோதரர் வெங்கடாசலம் அவர்கள் கந்தம்பட்டி–சோழாபுரம் பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள்,

அதற்கும் ஒப்பந்தம் விடப்பட்டு பணிகள் தொடங்கப்படும். தேசிய நெடுஞ்சாலையில் எந்த இடத்திலும் போக்குவரத்து நெரிசல் இல்லாமல், எளிதாக கனரக வாகனங்கள், பேருந்துகள் மற்றும் இலகுரக வாகனங்கள் செல்வதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுத்து, தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் பல்வேறு பாலங்கள் கட்டப்பட்டு, இன்றைக்கு போக்குவரத்து சீர் செய்யப்பட்டிருக்கிறது. கந்தம்பட்டி—சோழாபுரம் பாலத்திற்கும் விரைவாக அடிக்கல் நாட்டப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, வீரபாண்டி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி மனோன்மணி அவர்கள் அரியானூர் பாலம் கட்ட வேண்டுமென்று தெரிவித்தார்கள், அதற்கு ஒப்பந்தம் விடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட இன்னும் 20 நாட்களில் அதற்கும் அடிக்கல் நாட்டு விழா இருக்கும்.

சங்ககிரி சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரர் ராஜா அவர்கள் மகுடஞ்சாவடியில் உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டுமென்று தெரிவித்தார்கள், அதற்கு ஒப்பந்தம் விடப்பட்டிருக்கிறது, அதற்கும் விரைவாக அடிக்கல் நாட்டப்படும். ஆகவே, உயிர் சேதம் இல்லாமல், விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு அம்மாவினுடைய அரசால் புதிய மேம்பாலங்கள் கட்டி திறக்கப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 8 வழிச் சாலை அமைப்பதற்கு விடமாட்டேன் என்கிறார்கள். வெளிநாடுகளில் அருமையான சாலைகள் உள்ளன. விபத்தைக் குறைக்க வேண்டும். மனித உயிர் விலை மதிக்க முடியாதது, எதை வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம், உயிரை சம்பாதிக்க முடியாது, அந்த உயிர் காப்பாற்றப்பட வேண்டும், விபத்தில்லாத சாலை அமைக்கப்பட வேண்டும். பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்று சொன்னால், புதிய, புதிய தொழிற்சாலைகள் வரவேண்டுமென்றால், உள்கட்டமைப்பு வசதிகள் மிகவும் முக்கியம். ஆகவே, 8 வழிச் சாலையை கொண்டு வருவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தோம். எல்லோரும் சேலத்திற்கு மட்டும்

இந்தச் சாலையை போடுவதாக நினைக்கின்றார்கள், தவறு, சேலம் வழியாக நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை என்று கன்னியாகுமரி வரை செல்கிறது, அதேபோல, ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், கொச்சின் வரை செல்கிறது. இதனால், சுமார் 70 கிலோமீட்டர் தூரம் குறைவாகிறது, அதனால், அதற்குரிய எரிபொருள் தேவை, பயண தூரம் குறைகிறது. அதுமட்டுமல்ல, விபத்தில்லாமல் நாம் பார்த்துக் கொள்கிறோம் என்பது தான் மிக முக்கியம். சர்வதேச தரத்திற்கு இணையான சாலை போடுகிறோம், இதில் என்ன தப்பு? சில இடங்களில் இடம் எடுக்க வேண்டிய சூழ்நிலையில், அந்த மக்களுக்குத் தேவையான இழப்பீடு வழங்குகிறோம், சிறப்பு இழப்பீடாக வழங்குகின்றோம், யாருக்கும் நஷ்டம் ஏற்படாது. ஒரு ஏக்கருக்குக் கீழ் இருந்தால் அவர்களுக்கு இழப்பீடு கொடுத்த பிறகு, அவர்களுக்குத் தேவையான வீடு கட்டுவதற்கு இடவசதி கொடுத்து, வீடும் கட்டிக் கொடுக்கின்றோம், இவ்வளவு வசதியும் செய்து தருகின்றோம். எனவே, ஒரு நகரம் வளர வேண்டுமென்று சொன்னால், மாநிலம் வளர்ச்சி பெற வேண்டுமென்று சொன்னால் உள்கட்டமைப்பு மிக முக்கியம்.

இன்றைக்கு, இந்த தேசிய நெடுஞ்சாலை, தருமபுரியிலிருந்து கோயம்புத்தூர் செல்வதற்கு உருவாகும் பொழுது, கடுமையான போக்குவரத்து குறைந்தது. நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் வாகனங்களின் எண்ணிக்கை, கிட்டத்தட்ட 180 மடங்கு அதிகரித்துள்ளது. ஏற்கெனவே அந்தத் திட்டங்களை செயல்படுத்தியதன் காரணமாக, ஓரளவு நாம் வாகன நெருக்கடி இல்லாமல் செல்கிறோம். இன்னும் இந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு கிட்டத்தட்ட 5 ஆண்டு காலமாகும். ஒவ்வொரு ஆண்டும் 17 இலட்சம் வாகனங்கள் தமிழ்நாட்டில் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. 5 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 100 சதவீதம் வந்துவிடும். எனவே, 280 சதவீதமானால் எப்படி சாலைகளில் செல்ல முடியும்?

ஆகவே, விபத்துக்களை தவிர்ப்பதற்கு அம்மாவினுடைய அரசு 8வழிச் சாலையை முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இதனை பல்வேறு அமைப்புகள் தடை செய்து கொண்டிருக்கின்றன, இருந்தாலும், இந்த நாட்டினுடைய நலன் கருதி, அனைவரும் இதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக முடிவுற்ற பணிகள் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. நகராட்சி நிருவாகம், குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் சேலம் மாநகராட்சியில் Smart City-க்கு ரூபாய் 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பரவலாக்கப்பட்ட 5 நுண்உயிரி உரம் தயாரிக்கும் வணிகக் கட்டடம் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதேபோல, ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டில் மரங்களும், ரூபாய் 28 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 39 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் குடிமியான் தெரு மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடம் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஆகமொத்தம் ரூபாய் 5 கோடியே 10 இலட்சம்

மதிப்பீட்டில் முடிவுற்ற 4 பணிகள் இன்றைக்கு திறக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கியிருக்கிறோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்கள் சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தின் கீழ், ரூபாய் 92 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டில் பழைய பேருந்து நிலையத்தை ஈரடுக்கு பேருந்து நிலையமாக மாற்றியமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 20 கோடியே 58 இலட்சம் மதிப்பீட்டில் எருமாபாளையம் திடக்கழிவு கிடங்கினை நவீன விஞ்ஞான முறையில் சுகாதாரமான பசுமைத் தளமாக மாற்றியமைக்கின்ற பணி, ரூபாய் 18 கோடியே 8 இலட்சம் மதிப்பீட்டில் திருமணி முத்தாற்றின் கரைகளை மேம்படுத்துகின்ற திட்டப் பணிகள், ரூபாய் 13 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் ஆனந்தா பாலம் அருகில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, ரூபாய் 7 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் விக்டோரியா வணிக வளாகம் பகுதியில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைக்கும் பணி, ரூபாய் 5 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில், பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் மத்திய பேருந்து நிலையத்திற்கான பணிகள், ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில், 6 பரவலாக்கப்பட்ட நுண்உயிரி உரம் தயாரிக்கும் மையக் கட்டடம் அமைக்கும் பணி, ரூபாய் 3 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டில் சீர்மிகு (Smart) சாலைகள் அமைய இருக்கும் சாலைகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தும் பணி என மொத்தம் ரூபாய் 166 கோடியே 52 இலட்சம் மதிப்பீட்டில் 8 புதிய திட்டப் பணிகள் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் பல்வேறு புதிய திட்டப் பணிகள் இந்த சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தின் கீழ், ரூ.26 கோடியே 20 இலட்சம்

மதிப்பீட்டில் 110 பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் தனி குடிநீர்த் திட்டம் நிறைவுற்ற பணிகளில் சாலைகள் மறுசீரமைக்கும் பணிகள், ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை குழாய்களில் அடைப்புகளை சரிசெய்திடும் வாகனம், ரூபாய் 53 இலட்சம் மதிப்பீட்டில் தொழில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ள 2 ஜேசிபி வாகனம் என மொத்தம் ரூ.27 கோடியே 23 இலட்சம் மதிப்பீட்டிலான 3 பணிகள் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும், இன்றைக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. மாநகராட்சியின் சார்பாக 2,190 சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டைகளும், 56 நபர்களுக்கு கருணை அடிப்படையில் வாரிசுகள் பணி நியமன ஆணைகள், மாற்றுத்திறனாளிகள் துறையின் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 30 மாற்றுத்திறனாளிகளுக்கு அதிநவீன செயற்கை அவயங்கள், மூளை முடக்குவாத நோயால் பாதிக்கப்பட்ட 10 குழந்தைகளுக்கு ரோலேட்டர் எனப்படும் நடைபயிற்சி உபகரணங்களும், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு வைப்புநிதி வங்கிக்கடன் மானியம் மற்றும் ஆவின் விற்பனை நிலையம் அமைப்பதற்கான ஆணைகளும், மனவளர்ச்சி குன்றிய 10 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், 75 சதவீதத்திற்கு மேல் கை, கால் பாதிக்கப்பட்ட 255 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 5 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், 10 மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகையும், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் செய்வதற்கான வங்கிக்கடன் மற்றும் மானியமும், கல்வி நிலையம் செல்வோர், பணிக்கு செல்வோர், சுயதொழில் புரிவோர் என 40 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்திய விலையில்லா

பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 40 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களும், 20 மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும், 30 மாற்றுத் திறனாளிகளுக்கு ஊன்றுகோல்களும், 10 மாற்றுத் திறனாளிகளுக்கு காதொலி கருவிகளும், 25 மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்திய தையல் இயந்திரமும், வறுமைக் கோட்டின் கீழ், வாழும் 176 வயது முதிர்ந்தோர்களுக்கு உதவி உபகரணங்களும், என மொத்தம் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில், 576 பயனாளிகளுக்கு ரூபாய் 92 இலட்சத்து 91 ஆயிரத்து 600 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த்துறையின் சார்பில் 52 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும், 40 நபர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாவும், 11 நபர்களுக்கு கல்வி உதவித்தொகையும், 27 நபர்களுக்கு விதவை உதவித் தொகையும், 2 நபர்களுக்கு கணவரால் கைவிடப்பட்டவருக்கான உதவித்தொகையும், 11 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணைகளும் என வருவாய்த் துறையின் சார்பில் 145 நபர்களுக்கு ரூபாய் 5 இலட்சத்து 45 ஆயிரத்து 600 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், ஊரக வளர்ச்சித் துறையின் மகளிர் திட்டத்தின் சார்பில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், 100 மகளிருக்கு ரூபாய் 25 இலட்சத்திற்கு மானியத் தொகையும், சமூக நலத் துறையின் சார்பில், 4 மகளிருக்கு ரூபாய் 3 இலட்சம் என பல்வேறு திட்டங்கள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட்டிருக்கின்றது என்ற நல்ல செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மறைந்த பிறகு, அம்மா வழியிலே இன்றைக்கு அம்மாவின் அரசு செயல்பட்டுக்

கொண்டிருக்கின்றது. ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள், அனைத்துத் தர மக்களுக்கும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் அமைப்பானது உள்ளாட்சி அமைப்பு. தமிழகம் முழுவதும் இன்று உள்ளாட்சி அமைப்பு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சருடைய செயல்பாடு தான் காரணம், எனக்கு உறுதுணையாக அவர் விளங்கிக் கொண்டிருக்கின்றார், அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல, நமது சட்டப்பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். என்னோடு இணைந்து பணியாற்றுகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள், நான் முழு அதிகாரம் கொடுத்திருக்கிறேன், எல்லா துறைகளும் இன்றைக்கு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன.

கஜா புயலால் பல மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் அழிந்துவிட்டது. அங்கு இருக்கின்ற தென்னை மரம், தேக்கு மரம், சவுக்கு மரம், வெற்றிலைக்கொடி, மற்றும் பல மரங்கள், நெற்பயிர்கள் அழிந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் இழந்து நிற்கின்றார்கள். உண்மையிலேயே மனம் வேதனைப்படுகின்றது. அவர்கள் வாழ்வை புனரமைப்பதற்காக அம்மாவின் அரசால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, தேவையான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆட்சியில் எதுவும் கிடைக்கவில்லை, இன்னும் விரைந்து நடக்க வேண்டும் என்று வேண்டுமென்றே ஒருசில எதிர்க்கட்சிகள் தவறான செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

புயலால் **2,21,000** மின்கம்பங்கள் சாய்ந்துவிட்டன. **21** ஆயிரம் மின்சார ஊழியர்கள் அங்கேயே முகாமிட்டு, இரவு, பகல் பாராமல், மழையை பொருட்படுத்தாமல், மக்களுக்கு மின்சார

இணைப்பு கொடுப்பதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். கிட்டதட்ட 75 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன, மீதம் 25 சதவீத பணிகள் தான் இருக்கும், அவைகளும் வேகமாக முடிக்கப்பட்டுவிடும். டெல்டா பாசனப் பகுதிகள் வயல்கள் நிறைந்த பகுதிகளாதலால், மின்கம்பங்கள் நடுவது மிகவும் கடினமான பணி, சொல்வது சுலபம், செயல்படுவது கடினம். உயிரைப் பணயம் வைத்து நம்முடைய மின்சார ஊழியர்கள் அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதேபோல, உள்ளாட்சி துப்புரவுப் பணியாளர்கள் சுமார் 2,400 நபர்கள், பேரூராட்சி, நகராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள குப்பைகளை எல்லாம் அகற்றி, தூய்மைப்படுத்தி பழைய நிலைக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். உள்ளாட்சி துப்புரவுப் பணியாளர்களும், அதற்காகப் பாடுபட்ட உள்ளாட்சியைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் எனது மனமார்ந்த, உளமார்ந்த பாராட்டுகளை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வருவாய்த்துறை அதிகாரிகள் மிகச் சிறப்பாக செயல்பட்டிருக்கிறார்கள். வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, மீன்வளத்துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து, ஆறுதல் சொல்லி, அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை, வேகமாக, துரிதமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஒட்டுமொத்த அரசு இயந்திரத்தில் இருக்கின்ற அத்தனை அரசு ஊழியர்களும் சிறப்பான முறையிலே பணியாற்றுகின்றார்கள். கஜா புயல் எந்த வேகத்தில் வந்ததோ, அதே வேகத்தில், சீரமைக்கும் பணிகளை மேற்கொண்ட நல்ல உள்ளம் படைத்த, நேர்மையான, திறமையான, அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றியவர்களுக்கு இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன்.

அதேபோல, Bus-port, நான் ஏற்கெனவே கூறியதுபோல், மத்திய அரசு அதிகாரிகள் எல்லாம் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே, சேலம் மாநகரில் நவீன பேருந்து நிலையம் உருவாக்கப்படும். Role Model City–யாக இந்த சேலம் மாநகரம் திகழும் என்பதை மனமாற, உளமாற இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, அம்மா அவர்கள் தந்த தனிக்குடிநீர் திட்டம், அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி, அந்தப் பணியை நிறைவு செய்கின்ற பாக்கியம் அம்மா அவர்கள் அரசிற்குத் தான் கிடைத்திருக்கின்றது. சேலம் மாநகர மக்களுக்குத் தேவையான குடிநீரை அம்மாவினுடைய அரசு வழங்கி வருகிறது.

அதேபோல, இடி, மின்னல் வருகின்ற காலங்களில் அடிக்கடி ஏற்படும் மின்தடையினை போக்குவதற்கு பூமிக்கு அடியில் கேபிள் பதிக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாதாளச் சாக்கடைப் பணி, கடந்த ஆட்சியில் பாதியிலே விட்டுவிட்டுச் செல்லப்பட்டது, அதனை, அம்மாவினுடைய அரசு எடுத்து, விரைவுபடுத்தி, வேகப்படுத்தி செயலாக்கிக் கொண்டிருக்கிறது.

2011க்கு முன்பு சேலம் மாநகரம் எப்படி இருந்தது, 2011க்குப் பிறகு அம்மா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றதற்குப் பிறகு, அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, அம்மா அவர்கள் அரசு எந்தளவிற்கு சேலம் மாநகர மக்களுக்கு திட்டங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

சேலம் மாநகர மக்களின் வளர்ச்சிக்காக அடிப்படை தேவைகள் முழுமையாக நிறைவேற்றுகின்ற விதமாக அம்மாவினுடைய அரசால் அனைத்துத் திட்டங்களும் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகள் எதையுமே செய்யவில்லையென்று சொல்கிறார்கள், இவற்றையெல்லாம் பார்த்து தெரிந்து கொண்டு, இவ்வளவு திட்டங்களை நாங்கள் செயலாற்றிக் கொண்டிருக்கின்றோம், இவ்வளவு பாலத் தூண்கள் காட்சியளிக்கின்றன, இத்தனைத் தூண்களும் மேம்பாலப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதற்கு அவர்களுக்கு சான்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி,

மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த விழா நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை அழைத்தவுடனே, நம்முடைய அழைப்பை ஏற்று, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்றார்கள். ஆகவே, அவருக்கு உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்து நம்முடைய சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற மாநகரம், அந்த மாநகர மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து தருவதற்கு அம்மாவினுடைய அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.12.2018 அன்று*
சேலம் மாநகரில் நடைபெற்ற அரசு விழாவில்,
பல்வேறு திட்டங்களைத் தொடங்கியும், சீர்மிகு நகரத் திட்டப் பணிகளுக்கு
அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து
அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை

நாங்கள் மக்களோடு கூட்டணி வைத்திருக்கிறோம்! மக்கள் எண்ணுவதை நிறைவேற்ற செயல்பட்டு கொண்டிருக்கிறோம்!

தமிழ்நாடெங்கும் நீரை சேமிப்பதற்கு திட்டங்கள் உருவாக்குவதற்காக தனிப் பிரிவே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளரை நியமித்து, அவர்கள் அதற்காக திட்டத்தை வகுத்துக் கொடுத்து, அரசு செயல்படுத்த இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின், அம்மாவின் மறைவிற்குப் பிறகு, இந்த ஆட்சி கலைந்துவிடும், தான் முதலமைச்சராகி விடலாம்

என்று கனவு கண்டிருந்தார், அந்தக் கனவு பகல் கனவாகிவிட்டது. டி.டி.வி தினகரனும் திமுக–வின் தூண்டுதலில், இந்தக் கட்சியை உடைக்க ஒரு கட்சியை ஆரம்பித்தார். இன்றைக்கு பாலாஜி என்கிற ஒரு செங்கல் பிடுங்கி சென்றுவிட்டது. அவரை முதலமைச்சராக வேண்டும் என்று எங்களிடமிருந்து பிரிந்து சென்றார், இப்பொழுது ஸ்டாலினை முதலமைச்சராக்க வேண்டும் என்று சென்றிருக்கிறார். கடைசியில், யாருடன் நடுத்தெருவில் நிற்கப் போகிறாரோ தெரியவில்லை. இதை எதற்காக சொல்கிறேனென்றால், திமுக–விற்கு கொள்கை, கோட்பாடே கிடையாது, அதிகாரம் மட்டும்தான் அவர்களுக்குத் தேவை. பாரதீய ஜனதா ஆட்சியின்பொழுது, கூட்டணி அமைத்து ஆட்சியில் இருந்தார்கள். அதற்கு சறுக்கல் வந்தவுடன், காங்கிரசிடம் கூட்டு சேர்ந்து அங்கே மத்திய அமைச்சராக இருந்தார்கள், அவர்களுக்குத் தேவை அதிகாரம் ஒன்றுதான். 14 ஆண்டுகாலம் தொடர்ந்து மத்தியில் ஆட்சி செய்த ஒரு கட்சி திமுக தான், தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை, அவர்கள் குடும்பம்தான் வளர்ந்தது, கருணாநிதி, அவருடைய பையன், இப்பொழுது பேரனும் வந்துவிட்டார், எல்லாம் வாரிசு. அதிமுக–வில் திறமை இருப்பவர்கள், மக்களுக்கு உழைப்பவர்கள்தான் பதவிக்கு வரமுடியும், சாதாரண தொண்டன், விவசாயத் தொழிலாளி கூட வரலாம். 14 ஆண்டுகாலம் மத்தியில் திமுக ஆட்சி செய்தபொழுது, தமிழகத்திற்கு தேவையான தொழிற்சாலைகளை கொண்டு வந்திருக்கலாம், புதிய, புதிய திட்டங்களை போடுவதற்கு நிதியை பெற்றுத் தந்திருக்கலாம், ஒன்றும் கொண்டு வரவில்லை. காவிரி நதிநீர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏதாவது பாடுபட்டார்களா? மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தால்தான் இவற்றையெல்லாம் செய்ய முடியும், அந்த வாய்ப்பு திமுக–விற்கு இருந்தும் செய்யவில்லை. மக்களைப் பற்றி கவலையில்லை, அவர்களுடைய வீட்டு மக்களைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

யார் பெரியவன் என்று சர்வே போட்டு, மூன்று பேரை எரித்தே கொன்றார்கள். இவையெல்லாம் கடந்தகால வரலாறு. அதிமுக ஆட்சியில், மக்களைப் பற்றி சிந்திப்பதுதான் அரசின் கடமை. உங்கள் துணையோடு, நான்காண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம், ஏனென்றால், மக்கள்தான் நீதிபதி. நீங்கள் எத்தனை கட்சியில் கூட்டு சேர்ந்தாலும், மக்கள் நினைத்தால்தான் வெற்றி பெற முடியும். ஆனால், நாங்கள் மக்களோடு கூட்டணி வைத்திருக்கின்றோம், மக்கள் எண்ணுவதை நிறைவேற்றும் விதமாக நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

உழைப்பவர்கள் என்றைக்கும் உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்பதற்கு நானே சான்று. சாதாரண கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, படித்து, உழைத்து, படிப்படியாக முன்னேறி இன்றைக்கு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன், உங்களைப் போல் குறுக்கு வழியில் வரவில்லை. நான் என்று எம்.எல்.ஏ ஆனேனோ, அப்பொழுதுதான் ஸ்டாலினும் எம்.எல்.ஏ ஆனார். 1981இல் நான் சேவல் சின்னத்தில் வெற்றிபெற்று சட்டமன்றத்தில் நுழைகின்றபொழுதுதான், ஸ்டாலினும் வெற்றிபெற்று சட்டமன்றத்திற்கு வந்தார். ஆனால், நீ வந்த வழி வேறு, நான் வந்த வழி வேறு. நான் உழைத்து, படிப்படியாக முன்னுக்கு வந்து, இன்று முதலமைச்சராகியிருக்கிறேன், நீங்கள் அப்படியல்ல, உங்கள் அப்பா திமுக தலைவராக இருந்தார், முதலமைச்சராக இருந்தார், அதனால் நீ எம்.எல்.ஏ ஆகி வந்துவிட்டாய். கிராமத்தில் பிறந்தவன் முதலமைச்சராக வேண்டுமென்றால் எவ்வளவு கடினம் என்பது மக்களுக்குத் தெரியும். குடும்பத்தில் அப்பன் பணக்காரனாக இருந்தால் கார் வாங்கிக் கொள்ளலாம், தானே சம்பாதித்து கார் வாங்குவது எவ்வளவு கஷ்டம்? நாங்கள் உழைக்கின்றோம், மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுகின்றோம், அதனால், மக்கள் எங்களை வரவேற்கின்றார்கள். மக்களுடைய பிரச்சினைகளை அன்றாடம் தீர்த்துக் கொண்டிருக்கிறோம்.

கஜா புயலால் கடுமையான சேதம் ஏற்பட்டு, விவசாயிகள் வாழ்வாதாரத்தை இழந்துள்ள சூழ்நிலையில், 15 நாட்கள் அமைச்சர்கள் அங்கேயே முகாமிட்டு பணி மேற்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இன்றைக்கு புயலால் 2,21,000 மின்கம்பங்கள் சாய்ந்துவிட்டன. 1,687 மின்மாற்றிகள் பழுதடைந்து விட்டன, 196 துணை மின்நிலையங்கள் சேதமடைந்துள்ளன. போர்க்கால அடிப்படையில் பணிகள் மேற்கொண்டு, கிட்டத்தட்ட 75 சதவீதப் பணிகள் இன்றைக்கு நிறைவு பெற்றிருக்கின்றன. அதேபோல, மின்சார ஊழியர்கள் அங்கேயே முகாமிட்டு, இரவு, பகல் பாராமல், மழையை பொருட்படுத்தாமல், மக்களுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதற்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். திமுக–வினரால் முடியுமா? என்றைக்காவது திமுக அமைச்சர்கள் 5 நாள் முகாமிட்டு வேலை பார்த்திருக்கிறார்களா, கிடையாது. ஆனால், அதிமுக–வில் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எளிதாக மக்களை சந்திப்பார்கள், மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இரவு, பகல் பாராமல் பாடுபடுவார்கள், உழைக்கின்ற வர்க்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். டெல்டா பாசனப் பகுதிகள் வயல்கள் நிறைந்த பகுதி ஆதலால் மின்கம்பங்கள் நடுவது மிகவும் கடினமான பணி, சொல்வது சுலபம், செயல்படுவது கடினம். உயிரைப் பணயம் வைத்து நம்முடைய மின்சார ஊழியர்கள் அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். வாழ்வாதாரம் இழந்த மக்களுக்கு புதியபுதிய திட்டங்களைக் கொண்டுவந்து அம்மாவினுடைய அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

காப்பீடு திட்டத்தை 2 இலட்சத்திலிருந்து 5 இலட்சமாக உயர்த்திய அரசு அம்மாவினுடைய அரசு. ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்தவர்கள் நோய்வாய்ப்பட்டால், 5 இலட்சம் ரூபாய்வரை மருத்துவ சிகிச்சை பெறலாம். தமிழகம் முழுவதும் இன்றைக்கு சாலை வசதிகள் சிறப்பாக இருக்கிறது. எதிர்க்கட்சிகள் எத்தனை கட்சிகள்

சேர்ந்து குறை கூறினாலும், மக்களோடு சேர்ந்து அவைகளை எல்லாம் முறியடித்து மீண்டும் அம்மாவினுடைய ஆட்சி தொடர நீங்கள் பக்கபலமாக இருப்பீர்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் உங்களையெல்லாம் நாடி வந்து கேட்பார்கள், அப்பொழுது நீங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது, நாட்டு மக்களுக்கு என்ன செய்தீர்கள், என்ன திட்டங்களை கொண்டு வந்தீர்கள் என்று கேளுங்கள். ஏனென்றால், அதிகமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றால்தான், மத்திய அரசிடம் போராடி அதிக நிதியை கேட்டு திட்டங்களை நிறைவேற்ற முடியும். அந்த வாய்ப்பை அம்மாவினுடைய அரசுக்கு தொடர்ந்து நல்குங்கள்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.12.2018 அன்று*
சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், கூடமலை பகுதியில்
பொதுமக்கள் அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை

மக்களுக்குத் தேவையான கூட்டுக் குடிநீர் திட்டம்! பாதுகாக்கப்பட்ட காவேரி நீரை அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கும் அரசு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சி சிறப்பாக, எழுச்சியாக, அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் இந்த வீரகனூர் பகுதி மக்கள் கெங்கவல்லி ஒன்றியத்திலிருந்து, பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்து, சாலையின் இருபுறங்களிலும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க வரவேற்பு நல்கிய அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் என்னுடைய மனமார்ந்த, உளமார்ந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

இந்த இனிய நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அத்தனை பேரும் என்னுடைய பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே சமர்ப்பித்து, இன்றைக்கு, முப்பெரும் விழா, புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழா. ஆகவே, இந்த நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்து வீரகனூர் பேரூராட்சிப் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த ஆட்சியிலே என்ன நடக்கிறது ? என்ன திட்டங்களை நிறைவேற்றுகின்றார்கள் ? நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கும் என்றெல்லாம் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள், பொய்யான பிரச்சாரத்தை மக்களிடத்திலே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அம்மாவினுடைய அரசு என்ன சாதனைகளை செய்திருக்கின்றது என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிந்து கொள்ளமுடியும். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, ஊரக வளர்ச்சித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, பள்ளிக்கல்வித் துறை, கூட்டுறவுத் துறை, பேரூராட்சிகள் துறை, மீன்வளத் துறை, வருவாய்த் துறை, சமூக நலத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, ஊரக வளர்ச்சித் துறை மகளிர் திட்டம், வனத் துறை, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, பட்டு வளர்ச்சித் துறை, தாட்கோ, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, பால்வளத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பழங்குடியினர் நலத் துறை என்று 21 துறைகளில், இந்த ஒன்றியப் பகுதியில், ஆத்தூர் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு மட்டும், கிட்டத்தட்ட 27,092 பயனாளிகளுக்கு உதவித் திட்டங்கள் வழங்குகின்றோம். ஒரு அரசு எப்படி செயல்பட வேண்டுமென்பதற்கு இந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவே ஒரு சான்று என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, இன்றைக்கு அரசு அனைத்துத் துறைகளிலும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டுதல், முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் ஆகியவற்றிற்காக, மக்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூபாய் 131 கோடியே 51 இலட்சத்து 608 ஆக, அரசு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த அனைத்துத் துறைகளிலும் மக்களுக்குத் தேவையான நன்மைகள்

போய் சேர்ந்து கொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் வீரகனூரில் நடைபெறுகின்ற இவ்விழாவில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ஏற்காடு, கூத்தமுத்தல் முதல் கோவிலூர் வரை ரூபாய் 4 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி.

மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவம் மற்றும் நலப் பணிகள் சார்பில் நிறைய திட்டங்கள்.

கூட்டுறவுத் துறையின் சார்பில், கெங்கவல்லி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திட்டச்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நவீன கட்டடம்.

பேரூராட்சிகள் துறையின் சார்பில், பேளூர் பேரூராட்சியில், மூலதன மானிய நிதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் நவீனமயமாக்கும் பணி. வீரகனூர், பேளூர், கெங்கவல்லி, செந்தாரப்பட்டி, தம்மம்பட்டி, தெடாவூர், கீரிப்பட்டி, பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி ஆகிய பேரூராட்சிகளில் ரூபாய் 8 கோடியே 30 இலட்சத்து 46 ஆயிரம் மதிப்பீட்டில் சாலை வசதிகள், தெருவிளக்கு, குடிநீர், கழிப்பிட வசதிகள் உள்ளிட்ட 21 புதிய திட்டப் பணிகள் இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் செயல்படுத்தப்பட இருக்கின்றன.

மீன்வளத் துறையின் சார்பில், மேட்டூர் நகராட்சிப் பகுதியில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் தூய ரோகு இன சினை மீன் பாதுகாப்பு மற்றும் சினை மீன்களை பெருக்குதலுக்கு புதிய மையம் அமைக்கும் பணி என மொத்தம் ரூபாய் 35 கோடியே 41 இலட்சத்து 34 ஆயிரம் மதிப்பீட்டில் 31 பணிகளுக்கு இன்றையதினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் மாவட்ட ஊரக முகமையின் சார்பில் பெத்தநாயக்கன் பாளையம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியங்களில், சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி மேம்பாடு மற்றும் தாய்–II திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் 9 முடிவுற்ற திட்டப் பணிகளும்,

மக்கள் நல்வாழ்வுத் துறையின் மருத்துவம் மற்றும் நலப்பணிகள் சார்பில், ஆத்தூர் அரசு மருத்துவமனை ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் 3 புதிய டயாலிசிஸ் இயந்திரமும் என மொத்தம் ரூபாய் 1 கோடியே 55 இலட்சம் மதிப்பீட்டில் 10 முடிவுற்றப் பணிகள் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

நலத்திட்ட உதவிகளை பொறுத்தவரை, இன்றைக்கு 100 பயனாளிகளுக்கு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ், தலா ரூ.1.70 இலட்சம் வீட்டுத் திட்டத்திற்கான மானியம் 400 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் பணி, 1,500 பயனாளிகளுக்கு தனிநபர் இல்ல கழிப்பறைகள் கட்டுவதற்கான மானியம் என மொத்தம்

3,000 பயனாளிகளுக்கு ரூபாய் 28 கோடியே 90 இலட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள்.

பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் 12,366 மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 4 கோடியே 59 இலட்சத்து 38 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள்.

கூட்டுறவுத் துறையின் சார்பில், 5,801 நபர்களுக்கு பயிர்க் கடனுதவி, 506 நபர்களுக்கு மத்திய காலக் கடனுதவி, 99 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான கடனுதவி, 616 நபர்களுக்கு சுயஉதவிக் குழு கடனுதவி, 11 நபர்களுக்கு தனிநபர் கடனுதவி, 126 நபர்களுக்கு வீட்டு அடமான கடன் மற்றும் இதர கடனுதவி என மொத்தம் 7,159 பயனாளிகளுக்கு ரூபாய் 50 கோடியே 98 இலட்சத்து 77 ஆயிரம் பல்வேறு கடனுதவிகள் வழங்குகின்ற விழா.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில், அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 286 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 46 இலட்சத்து 82 ஆயிரம் வீடு கட்டுவதற்கான நிதியுதவியும்,

வருவாய்த்துறைசார்பில்,907நபர்களுக்குபழங்குடியினருக்கான சான்றிதழ்கள், 315 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், 83 நபர்களுக்கு கல்வி உதவித் தொகை, 76 நபர்களுக்கு உழவர் பாதுகாப்புத் திட்ட இயற்கை மரண உதவித் தொகை, 20 நபர்களுக்கு திருமண உதவித் தொகை, 47 நபர்களுக்கு இயற்கை மரண உதவித் தொகை, 10 நபர்களுக்கு முதியோர் உதவித் தொகை, 8 நபர்களுக்கு விபத்து நிவாரண உதவித் தொகை, 6 நபர்களுக்கு விதவை உதவித் தொகை, 4 நபர்களுக்கு விவசாய கூலி உதவித் தொகை என மொத்தம் 1,476 நபர்களுக்கு ரூபாய் 85 இலட்சத்து 68 ஆயிரம் மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகள்.

சமூக நலத்துறையின் சார்பில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், 571 மகளிருக்கு

ரூபாய் 3 கோடியே 63 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதியுதவியுடன் தாலிக்கு 8 கிராம் தங்கமும்,

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், 500 பயனாளிகளுக்கு ரூபாய் 64 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா தலா 4 வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளும்,

மகளிர் திட்டத்தின் சார்பில், உழைக்கும் மகளிருக்கு, அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ், 103 மகளிருக்கு மானியமும், 1 மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு நேரடி கடனுதவியும், 396 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியும், என மொத்தம் 500 மகளிருக்கு ரூபாய் 47 இலட்சத்து 75 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

வனத் துறையின் சார்பில், 100 பயனாளிகளுக்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் மூங்கில் கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் உபகரணம்.

வேளாண்மைத் துறை சார்பில், 500 விவசாயிகளுக்கு ரூபாய் 33 இலட்சத்து 53 ஆயிரத்து 900 மதிப்பிலான சொட்டு நீர் பாசனக் கருவி, விசைத் தெளிப்பான், தார்ப்பாலின், ரொட்டவேட்டர், கூட்டுப் பண்ணைத் திட்ட நிதியுதவி, விதைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள்.

தோட்டக்கலைத் துறை சார்பில், 400 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 60 இலட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் மண்புழுக் கூடம், தக்காளி நாற்றுகள், சொட்டுநீர்ப் பாசனம், இயற்கைப் பண்ணையம் அமைத்தல், தேனீ வளர்ப்புப் பெட்டி, பவர் டிரில்லர், மினி டிராக்டர் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள்.

வேளாண் பொறியியல் துறை சார்பில், 3 விவசாயிகளுக்கு ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் இயந்திரம் மற்றும் கருவிகள் வாடகை மையம் அமைப்பதற்கான மானியம்.

பட்டு வளர்ச்சித் துறை சார்பில், 4 பயனாளிகளுக்கு ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் மல்பெரி நடவு

மானியம் மற்றும் பட்டுப் புழு வளர்ப்பு மனை அமைப்பதற்கான மானியம், தாட்கோ மூலம் 1 பயனாளிக்கு ரூபாய் 9 இலட்சத்து 94 ஆயிரத்து 800 மதிப்பீட்டில் பொலிரோ வாடகை வாகனம் வாங்குவதற்கான நிதியுதவி.

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில், 101 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 19 இலட்சத்து 77 ஆயிரம் மதிப்பிலான அதிநவீன செயற்கைக் கால் மற்றும் மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான பராமரிப்பு உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு ஆணை.

பால்வளத் துறை சார்பில், வீரகனூர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு ரூபாய் 30 இலட்சத்து 61 ஆயிரம் மதிப்பீட்டில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பான் மையமும், 6 உறுப்பினர்களுக்கு சிறந்த பால் உற்பத்தியாளர்களுக்கான ரூபாய் 18 ஆயிரத்து 500 பரிசுத் தொகை மற்றும் ஊக்கத் தொகை.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில், ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 30 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் விலையில்லா சலவைப் பெட்டிகள்.

ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில், 10 நபர்களுக்கு ரூபாய் 93 ஆயிரத்து 600 மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்கள்.

பழங்குடியினர் நலத் துறை சார்பில், 78 நபர்களுக்கு தனி நபர் என வன உரிமைப் பட்டா மற்றும் சமுதாய வன உரிமைப் பட்டாக்களும் என மொத்தம் இன்று நடைபெறுகின்ற இந்த விழாவில் 27 ஆயிரத்து 92 பயனாளிகளுக்கு ரூபாய் 94 கோடியே 55 இலட்சத்து 26 ஆயிரத்து 800 மதிப்பிலான பல்வேறு நலத்திட்டப் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலும் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். அரசு எப்படி செயல்படுகிறது என்பதை

மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் நான் புள்ளிவிவரத்தோடு சொல்கின்றேன்.

எப்பொழுது பார்த்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் அவர்கள் இந்த ஆட்சியில் என்ன நடக்கின்றது? ஒன்றுமேயில்லை, இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை, மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று சொல்கிறார். நான் கூறியதைப்போல், 27 ஆயிரத்து 92 நபர்களுக்கு இந்தப் பகுதியிலிருப்பவர்களுக்கு உதவி செய்கிறோம் என்றால், மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதை பார்த்துப் பார்த்து செய்கின்ற அம்மாவினுடைய அரசு எப்படி செயல்படுகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் செயல்படுகின்ற அரசு. அம்மா இருக்கும்பொழுதும் செயல்பட்டார், அம்மா மறைவிற்குப் பிறகு அம்மா எப்படி செயல்பட்டார்களோ அதே வழியை பின்பற்றி, அம்மாவினுடைய அரசும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், 2011க்கு முன்பு திமுக ஆட்சியில் கெங்கவல்லி சட்டமன்ற தொகுதி எப்படி இருந்தது? 2011–க்குப் பிறகு அம்மா ஆட்சி மலர்ந்த பிறகு, அம்மா முதலமைச்சரான பிறகு, எப்படி இந்த ஆட்சி செயல்பட்டது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பிறகு, அம்மா மறைவிற்குப் பிறகு கிட்டத்தட்ட 1 வருடம் 10 மாத காலமாக எப்படி ஆட்சி நடைபெற்றிருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், அதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் எந்த ஆட்சியில் மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் கிடைக்கிறது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். அம்மா வழியில் அரசு இன்றைக்கு செய்கின்ற சாதனைகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊராட்சி ஒன்றிய சாலை, மாவட்ட ஒன்றிய சாலையாக தரம் உயர்த்தி, மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ், ரூபாய் 1 கோடியே 37 இலட்சம் மதிப்பீட்டில் மல்லிக்கரை முதல் கருத்தராஜபாளையம் செல்லும் சாலை 3.15 கிலோமீட்டர் நீளத்திற்கு மேம்பாலப் பணி

மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

பெத்தநாயக்கன்பாளையம் பேரூராட்சி சின்ன சமுத்திரம் ஆதிதிராவிடர் காலனி சாலையில் ரூபாய் 6.60 கோடி மதிப்பீட்டில் பஸ் நிலையம் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கின்றது. காந்தி நகரம் முருகன் கோயில் சாலையில் பஸ் நிலையம் குறுக்கே ரூபாய் 5.25 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கியின் அனுமதிக்கு அனுப்பப்பட்டது, விரைவில் அனுமதி பெறப்பட்டவுடன் இந்தப் பணி துவங்கும்.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், பனைமடை கிராமத்தில் கல்லாறாற்றின் குறுக்கே ரூபாய் 1 கோடியே 37 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி, ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது, விரைவில் இப்பணி துவங்கப்படும்.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், ஏத்தாப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளி நபார்டு திட்டத்தின் கீழ், ரூபாய் 1.66 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 8 வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகம், கழிப்பறைகள், குடிநீர் வசதி

உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு விரைவில் பணி துவங்கப்படும்.

ஆத்தூர் வட்டம் வடசென்னிமலை கிராமத்தில் உள்ள அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் ரூபாய் 6 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கலையரங்கம் அமைக்கும் பணி விரைவில் துவங்கப்படவுள்ளது.

மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் 2018–2019ஆம் ஆண்டு திட்டத்தில் ஆத்தூர், அம்மாபாளையம், நரிக்குறவர் காலனி சாலையில் நதியின் குறுக்கே ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் 2018–2019–ஆம் ஆண்டு திட்டத்தில் அயோத்திப்பட்டணம், தும்பல் அருகில் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் பணி மேற்கொள்ளப்படும்.

ஆத்தூர் மற்றும் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி ஆண்டு திட்டத்தின் கீழ், தேசிய நெடுஞ்சாலையில் தஞ்சாவூர், பெரம்பலூர், ஆத்தூர் சாலையில் பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 54.80 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையில் 7 மீட்டர் அகலத்திலிருந்து 10 மீட்டர் அகலம் கொண்ட சாலையாக செய்யும் பணிக்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, பிறகு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் தொடங்கி, இந்த சாலை விரிவாக்கம் செய்யப்பட்டு போக்குவரத்து நெரிசல் இல்லாத சாலையாக உருவாக்கித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி தெடாவூர் பேரூராட்சி, தெடாவூர் தெற்கு மணக்காடு சாலை 0/2–இல் மாரியம்மன் கோவில் அருகில் சுவேதா நதியின் குறுக்கே ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஊராட்சி ஒன்றிய சாலைகளை மாவட்ட இதர சாலையாக தரம் உயர்த்த, மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ் ரூபாய் 99 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி நகர், தம்மம்பட்டி 2.20 கிலோமீட்டர் தூரம் நீள சாலை மேற்கொள்ளப்படும், ரூபாய் 1.70 கோடி மதிப்பீட்டில் தம்மம்பட்டி, தெடாவூர் சாலையில் நடுவலூர் செல்லும் 3 கிலோ மீட்டர் தூரம் செல்லும் சாலையில் ரூபாய் 5.45 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசிதழில் வெளியிடப்பட்டு, முதல் கட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணி முடிந்தவுடன், ஒப்பந்தப்புள்ளிகோரப்பட்டு பாலப் பணிகள் துவங்கப்படும். தலைவாசல், மும்முடிச் சாலையில் ரூபாய் 5 கோடி மதிப்பில் உயர்மட்டப் பாலம் மற்றும் திட்டச்சேரி முதல் முத்துவாடி சாலை வரை உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படுகிறது, திட்ட அறிக்கை கிடைத்தவுடன் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு பாலப் பணிகள் துவங்கப்படும். கெங்கவல்லி வட்டம், நத்துவாடி கிராமத்தில் நதியின் குறுக்கே ரூபாய் 2 கோடியே 43 இலட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படும். கெங்கவல்லி வட்டம், கூடலூர் கிராமத்தில் ஸௌபர்னிகா நதியின் குறுக்கே காளியம்மன் கோவில் முன்புறம் ரூபாய் 1.88 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பிரிசீலனையில் உள்ளது, விரைவில் இப்பணி தொடங்கப்படும். கெங்கவல்லி வட்டம், வீரகனூர் பேரூராட்சி, சொக்கானூர் அக்ரஹாரம் கிராமத்தில் பொன்னாளியம்மன் கோவிலில் ரூபாய் 27 கோடி மதிப்பீட்டில் புதிய ஏரி அமைக்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது, விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் துவங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப்பணி நிறைவு பெற்ற பிறகு இந்த ஏரிக்கு அருகிலுள்ள நிலத்திலுள்ள அந்த கிணறுகளிலெல்லாம் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கும், குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கும். சேலம் மாவட்டத்தில் கெங்கவல்லி

தொகுதியில்தான் அதிக பாலங்கள் கட்டுகிறோம். இப்பொழுது நான் அறிவிக்கப்பட்ட பாலங்கள், தடுப்பணைகள் போன்ற பணிகள் நிறைவு பெறுகின்றபொழுது கெங்கவல்லி சட்டமன்ற தொகுதி, மற்ற தொகுதிகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் கேட்டதையெல்லாம் நாங்கள் செய்துகொண்டே இருக்கிறோம். ஆனால், எதிர்க்கட்சிக்கு மட்டும் கண்ணுக்கு தெரியவில்லை. இவர்கள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபொழுது தமிழ்நாட்டிற்கு ஏதாவது நன்மை கிடைத்ததா என்றால்,இல்லை,குடும்ப ஆட்சிதான்நடைபெற்றுக்கொண்டிருந்தது. முதலில் பாரதீய ஜனதா கூட ஆட்சியில் இருந்தார்கள், அப்பொழுது முரசொலி மாறன் அமைச்சர் பதவியில் இருந்தார். அந்தக் கட்சி செல்வாக்கை இழந்தவுடன், காங்கிரஸிற்கு தாவி விட்டார்கள், பின்னர் மந்திரி பதவியை பெற்றார்கள், அப்பொழுதும் தமிழ்நாட்டிற்கு ஒன்றும் செய்யவில்லை. காவேரி நதிநீர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, பாலாறு பிரச்சினை தீர்த்திருக்கலாம், ஒன்றையும் தீர்க்கவில்லை. தடுப்பணை கட்டினீர்களா, இல்லை, எதுவுமே செய்யவில்லை. ஆனால் நம் சிறப்பான ஆட்சியில், எதையுமே செய்யவில்லை என்று ஒரு பொய்யான பிரச்சாரத்தை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்குத் தேவையான திட்டங்களை வகுத்து கொடுக்கிறது. இன்றைக்கு விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை திட்டத்தை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் அம்மாவினுடைய அரசு குடிமராமத்து என்ற திட்டத்தை கொண்டுவந்து, ஏரிகள், குளங்களில் இருக்கின்ற வண்டல் மண் அள்ளப்பட்டு விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரமாகப் பயன்படுத்துகிறார்கள். கடந்த ஆண்டு முதற்கட்டமாக ரூபாய் 100 கோடி ஒதுக்கி, 1,519 ஏரிகளை தூர்வாரப்பட்டது. இந்தத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதன் காரணமாக, இந்த ஆண்டு புதிதாக 1,511 ஏரிகள் குளங்களில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பருவமழைக் காலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகப் போவதை தடுக்கும் நோக்கில், தடுப்பணை கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு மூன்றாண்டுகளில் நிறைவேற்றுவதற்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கி திட்டப் பணிகள் ஆரம்பிக்கக்கப்பட்டு விட்டன. இதன் மூலம் நிலத்தடி நீர் உயர்ந்து விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்கும்.

விவசாயிகள் வேளாண் கருவிகளைப் பயன்படுத்துவதற்கு மானிய விலையில் கொடுத்து, விவசாயிகளை ஊக்குவிக்கிறோம். இன்றைக்கு, இந்திய அளவில் உணவுதானிய உற்பத்தியில் தொடர்ந்து முதலிடம் வகித்து "க்ரிஷ் கர்மாண்" என்ற விருதை தமிழ்நாடு பெற்றிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாடு தன்னிறைவு பெறுகின்ற மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா டுடே என்ற பத்திரிகை எல்லா வகையிலும், எல்லா துறையிலும் சிறந்து விளங்குகின்ற முதல் மாநிலம் தமிழ்நாடு என்று அந்த விருதை தமிழ்நாட்டிற்கு கொடுத்தார்கள்.

அதேபோல், தமிழ்நாட்டில் தான் சட்டம், ஒழுங்கு சிறப்பாக இருக்கிறது என்று அதற்கும் விருது கொடுத்தார்கள். அம்மாவினுடைய ஆட்சியில்தான் சிறப்பான திட்டத்தை தமிழகத்திற்கு கொடுத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, அம்மா மறைவிற்குப் பிறகு, அந்தத் திட்டங்களையெல்லாம் இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

தமிழகத்தில் கல்வியில் ஒரு புரட்சி, மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறோம். கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கில், கல்விக்கு முன்னுரிமை கொடுத்து, கல்வித் துறைக்குத் தான் அதிக நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆரம்பப் பள்ளி நடுநிலைப்பள்ளியாகவும், நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப்

பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக உயர்கல்வி படிக்கின்றவர்களின் எண்ணிக்கை 2011இல் திமுக ஆட்சியில் 21 சதவீதமாக இருந்தது, இன்றைக்கு அது அம்மாவின் அரசு கல்வியில் எடுத்த புரட்சி, மறுமலர்ச்சி காரணமாக 46 சதவீதமாக உயர்ந்து இந்தியாவிலேயே முதல் மாநிலமாக திகழ்கிறது. இன்றைக்கு பள்ளிகளில் படிக்கின்றவர்களின் சேர்க்கை விகிதம் உயர்ந்திருக்கிறது. இதைவிட என்ன செய்யவேண்டும் ?

ஏழை, எளிய விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்பதற்காக, ஆடு, பசுமாடு, கொடுக்கும் திட்டம் போன்றவற்றை செயல்படுத்தியிருக்கிறோம், இந்தியாவில் வேறு எங்கும் இந்தத் திட்டம் இல்லை. இந்தத் திட்டம் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதற்காக உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சி நிலையம் ஒன்று கூட்டுரோடு அருகில் 800 ஏக்கர் பரப்பளவில், பல நூறு கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சி செய்கின்ற பொய் பிரச்சாரம் அத்தனையும் முறியடிக்கப்படும்.

மக்களுக்குத் தேவையான கூட்டுக் குடிநீர் திட்டம், பாதுகாக்கப்பட்ட காவேரி நீர் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் தடையில்லாமல் வழங்கும் ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி.

அம்மா இருக்கும்பொழுது, 65 கல்லூரிகள் கொடுத்திருக்கின்றார்கள், அம்மா மறைந்த பிறகு 11 கலைக் கல்லூரிகளை கொடுத்திருக்கிறோம், மொத்தம் 76 கலைக் கல்லூரிகளை கொடுத்திருக்கிறோம். வேளாண்மைக் கல்லூரி, கால்நடை மருத்தவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, ஐ.டி.கல்லூரி என ஏராளமான கல்லூரிகளை கொடுத்த காரணத்தினாலே ஏழை, எளிய மக்கள் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்கக்கூடிய நிலை தமிழகத்தில் பார்க்க முடிகிறது.

குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு காலணி, சீருடை, விலையில்லா புத்தகம், நோட்டு கொடுத்து, அதை கொண்டு செல்வதற்கு பை கொடுத்தார்கள். அறிவுபூர்வமான, விஞ்ஞான கல்வியை பெறவேண்டும் என்ற நோக்கில், கல்வி பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி அம்மா அவர்கள் கொடுத்தார்கள், இன்றைக்கு உலக அளவிலே விஞ்ஞானக் கல்வியை கொடுத்த அரசு அம்மாவின் அரசு. இந்தியாவிலேயே இன்றைக்கு தமிழகம் கல்வியிலே ஒரு முன்மாதிரி மாநிலமாக, வழிகாட்டியாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அப்படிப்பட்ட அற்புதமான திட்டத்தை வழங்கும் அரசை பார்த்து, இந்த ஆட்சியில் ஒன்றும் நடைபெறவில்லை என்று தவறான, பொய்யான பிரச்சாரத்தை எதிர்க்கட்சிகள் பரப்பி வருகின்றன. ஆனால், அது உண்மையல்ல. நான் சொன்ன அத்தனை திட்டங்களும், மக்களுக்கு பயனளிக்கக்கூடிய திட்டம் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

வெயிலை பொருட்படுத்தாமல் இங்கே நிற்கின்ற பொதுமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து, மிகச்சிறப்பாக இந்த விழாவை நடத்திய மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அரசு அதிகாரிகளுக்கும், வருகை தந்திருக்கின்ற பத்திரிகையாளர்களுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.12.2018 அன்று*
சேலம் மாவட்டம், வீரகனூரில் நடைபெற்ற, முப்பெரும் விழாவில்
(புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டு விழா, முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற விழா)
ஆற்றிய உரை

மனம் மகிழ்ச்சியடைவதற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், தெய்வ வழிபாட்டிற்கும் பாலமாக விளங்குவது இசை!

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

இந்த இனிய விழாவிற்கு தலைமையேற்கும் இந்திய மக்கள் முன்னேற்ற கழகத்தின் தலைவர், டாக்டர் தி.தேவநாதன் யாதவ் அவர்களே!

முன்னிலை வகிக்கின்ற ‘ஜீ’ தமிழ் தொலைக்காட்சியின் தென்னிந்திய தலைவர், திரு. சிஜு பிரபாகரன் அவர்களே !

வரவேற்புரை நிகழ்த்திய லஷ்மண் ஸ்ருதியின் ஆலோசகர் திரு. ஆர்.எஸ்.மணி அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அருமைச் சகோதரர்கள் திரு. எஸ்.ஆர்.விஜயகுமார் அவர்களே !

மருத்துவர் ஜெ.ஜெயவர்தன் அவர்களே !

சட்டப்பேரவை உறுப்பினர்கள்

தி.நகர். திரு. பி.சத்யா அவர்களே !

திரு. விருகை வி.என்.ரவி அவர்களே !

மற்றும்

மெல்லிசை மன்னரின் திருவுருவ மெழுகுச் சிலையை திறந்து வைத்து இந்நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பத்மபூஷண் திருமதி. சரோஜாதேவி அவர்களே!

இசை ஆழ்வார் தங்க பதக்க விருதினை பெற்ற பத்மஸ்ரீ ஏ.கே.பழனிவேலு அவர்களே!

நல்லி சில்க்ஸ் நிர்வாக இயக்குநர் மரியாதைக்குரிய முனைவர் நல்லி குப்புசாமி அவர்களே !

வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் வேந்தர் மரியாதைக்குரிய சகோதரர் முனைவர் ஐசரி கணேஷ் அவர்களே !

போத்தீஸ் நிறுவன தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் மரியாதைக்குரிய திரு. எஸ்.ரமேஷ் அவர்களே!

மற்றும் மேடையிலே வீற்றிருக்கின்ற முக்கியப் பிரமுகர்களே!

விழா அமைப்பாளர் இயக்குநர் லக்ஷ்மண் ஸ்ருதி மியூசிக்கல்ஸ் திரு. வே.லக்ஷ்மணன் அவர்களே!

நன்றியுரை ஆற்ற இருக்கின்ற திரு. சரவணன் அவர்களே!

பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,

இந்நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பெரியோர்களே, தாய்மார்களே, ரசிக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரங்கில் உள்ள சங்கீத நாட்டிய கலைஞர்களுக்கும், ரசிகர்களுக்கும், பொது மக்களுக்கும் அன்பு வணக்கம்.

மெல்லிசை மேடைக் கச்சேரிகளில் அனைவரும் அறிந்த 'லஷ்மன் ஸ்ருதி' இசைக் குழுவினர் சார்பாக நடத்தப்படுகின்ற "சென்னையில் திருவையாறு" விழாவினை துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பன்னெடுங்காலமாக தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவையாறில், உலகெங்கிலும் இருந்து வருகின்ற கர்நாடக இசைக் கலைஞர்கள் ஒன்றுகூடி நடத்துகின்ற "தியாகராஜர் ஆராதனை விழா"வை சென்னை மக்களும் கண்டு ரசிக்கின்ற வகையில் காமராசர் அரங்கத்தில் கடந்த 13 ஆண்டுகளாக மிகச் சீறும் சிறப்புமாக 'லஷ்மண் ஸ்ருதி' குழுவினர் நடத்தி வருவது பாராட்டுக்குரியது.

மார்கழி மாத இசை விழாக்களில் தனித்துவம் பெற்ற சென்னை மாநகருக்கும், தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் சிறப்பு சேர்க்கும் விழாவாக 'சென்னையில் திருவையாறு' நிகழ்ச்சி விளங்குகிறது. தொன்மையான கலைகளிலும், கலாச்சாரத்திலும், நாகரிகத்திலும் உலகத்திற்கே முன்னோடியாக விளங்கும் நமது இந்திய தேசத்தில் எண்ணற்ற அரிய கலைகள் தோன்றி மக்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கின்றன. அவ்வாறாக தோன்றிய அருங் கலைகளில் இன்றும் உயிர்ப்போடு காண்போரையும், கேட்போரையும் பரவசப்படுத்துகின்ற ஒன்று என்று சொன்னால், தென்னிந்தியாவின் கர்நாடக சங்கீதம் என்பதை யாரும் மறுக்க இயலாது. இசை, மனித குலத்திற்குக் கிடைத்த மகத்தான வரப்பிரசாதம். வாழ்க்கையின் அத்தனை நிலைகளிலும், அது இரண்டறக் கலந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. இசையில் எத்தனை வகை இருந்தாலும், அது

நாடு, இனம், மொழி என எந்தப் பாகுபாடும் இல்லாமல் அனைவரையும் கவர்ந்து ஒருங்கிணைக்கும் சக்தி கொண்டதாக விளங்குகிறது.

மனம் மகிழ்ச்சியடைவதற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், தெய்வ வழிபாட்டிற்கும், தேசபக்திக்கும், கொள்கை முழக்கத்திற்கும், மக்களின் மனங்களை இணைப்பதற்கும் ஒரு பாலமாகவே இசை பயன்பட்டு வருகிறது. அந்த இசையை பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல அயராது பாடுபடும் கலைஞர்களை கௌரவிக்கும், அப்பணியை சிறப்புடன் செய்யும் பெரியோர்களை பெருமைப்படுத்தும், ஒரு மிகச் சிறந்த மேடையாக ‘சென்னையில் திருவையாறு’ சங்கீத நாட்டிய விழா அமைத்திருப்பது பாராட்டுக்குரியது. அதனால் தான், ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மைல்களைக் கடந்து வேடந்தாங்கலை முற்றுகையிடும் பறவைகளைப் போல, உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் இசை ரசிகர்களும், மார்கழி மாதத்தில் சென்னையை நோக்கி குவிந்து வருகிறார்கள்.

கர்நாடக இசை என்றால் அது நமக்கில்லை என காததூரம் சென்ற காலம் மலையேறி, இன்று வீட்டுக்கு வீடு தங்கள் குழந்தைகளை கர்நாடக சங்கீதப் பயிற்சியில் சேர்த்து விடுவதை பார்க்க முடிகிறது.

கர்நாடக இசை அல்லது கர்நாடக சங்கீதம் தென்னிந்திய இசை வடிவமாகும். உலகின் தொன்மையான இசை வடிவங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. இது தமிழ்நாட்டில் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது. ஏழிசை என்பது குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி மற்றும் தாரம் என அழைக்கப்பட்டதையே தமிழ் மொழியில் வடமொழிக் கலப்பு ஏற்பட்டபோது இந்த ஏழு இசைகளை ஸ்வரம் என்றனர்.

தியாகராஜ சுவாமிகள், முத்துசுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் என்னும் மூவரும் கர்நாடக இசையில் மும்மூர்த்திகள் ஆவார்கள். இவர்கள் இயற்றிய ஆயிரக்கணக்கான பாடல்கள்

இன்று வரை கர்நாடக இசையில் உயிர் நாடியாக உள்ளன. மேலும், முத்துத் தாண்டவர், அருணாச்சல கவிராயர், மாரிமுத்துப் பிள்ளை என்னும் முப்பெரும் இசை அறிஞர்கள் சீர்காழியில் வாழ்ந்து தமிழ் கீர்த்தனைகளை சிறப்புற வளர்த்தனர்.

ஆரம்ப காலத்தில் திரைத் துறையில் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்டே பாடப்பட்டது. ஆரம்ப காலத்தில் தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா போன்றவர்கள் பாடிய பாடல்கள் அனைத்தும் கர்நாடக இசையின் ராகங்களின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

பிற்காலத்தில் நமது புரட்சித்தலைவர் அவர்கள் தன்னுடைய திரைப்படங்களில் பாடல்களுக்கு முக்கியத்துவம் அளித்தார்கள். அவரது பாடல்கள் பெரும்பாலும் கர்நாடக இசை ராகங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களும் கர்நாடக இசையில் பற்று கொண்டவர் மற்றும் பரதக் கலையில் சிறந்த வல்லுநர் ஆவார்கள். இவர்கள் இருவரது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் பல்வேறு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இசையின் மீது மிகுந்த பற்று இருந்தது. குறிப்பாக கர்நாடக இசை மீது அளவற்ற பிரியம் இருந்தது. இதனை கூறுகையில் எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் பிரபல கர்நாடக இசை வித்வான் திரு. பாலமுரளி கிருஷ்ணா அவர்களின் 75ஆவது பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவரை பாராட்டிப் பேசுகையில், அவர் கர்நாடக இசை உலகில் சாதித்த சாதனைக்காக, அவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும் என எடுத்துரைத்து பேசினார்கள். மேலும், தான் அவருடைய சீடராக பிறக்க வேண்டும் என்றும், அவரிடம் சங்கீதம் கற்றுக் கொண்டு, அவரிடமே சபாஷ் பெற வேண்டும் என்ற தனது

ஆசையை அப்பொழுது வெளிப்படுத்தினார்கள். மேலும், இந்த நிகழ்ச்சியில், பாலமுரளி கிருஷ்ணா அவர்கள், கர்நாடக இசையில் தான் அமைத்த ஒரு புதிய ராகத்திற்கு 'ஜெய ஜெய லலிதே' என்றே மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரையை சூட்டினார்.

இன்று இந்நிகழ்ச்சியில் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களின் திருவுருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளதை எண்ணி, மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், எங்களுடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களுக்காகவும், புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்காகவும் நூற்றுக்கணக்கான எழுச்சி மிக்க திரை இசை பாடல்களை வழங்கியவர் என்பதால் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படிப்பட்ட சந்தோஷமான வேளையில், "எம்.எஸ்.வி." அவர்களைப் பற்றி எண்ணி வியப்படைகின்ற சில விஷயங்கள் என் நினைவுக்கு வருகின்றன.

❖ இசைத் துறையில் பல்வேறு பரிமாணங்களை உருவாக்கியவர்.

❖ எளிய மக்களும் ரசிக்கும் விதமாக மெல்லிசை வடிவத்தினை ஏற்படுத்தியவர்.

- எல்லா காலக் கட்டத்திற்கும், சூழ்நிலைக்கும், மன நிலைக்கும், உணர்விற்கும், சம்பவங்களுக்கும் ஏற்ப பாடல்களை வழங்கிய மாமனிதர்.
- காலங்கள் கடந்தும் வரலாற்றில் நிற்கும் அளவிற்கு பாடல்களை உருவாக்கி சாதனை படைத்தவர்.
- மகாகவி பாரதியாரின் பல பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்தவர்.
- மக்கள் திலகம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல்களில் 50 சதவீதத்திற்கும் மேல் இவருடைய இசை என்றால் மிகையாகாது.
- ஆயிரம் படங்களுக்கு மேல் இசையமைத்தது மட்டுமல்லாமல், நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடிய இசை அமைப்பாளர்.
- தமிழ்த் தாய் வாழ்த்து இவர் இசையமைப்பில் உருவானது.
- ஒரு திரை இசை அமைப்பாளருக்கான ரசிகர் மன்றம் அமைக்கப்பட்டது முதன்முதலில் மெல்லிசை மன்னருக்குத் தான்.
- பாமரர்கள், படித்தவர்கள், இசை அறிஞர்கள் என அனைவரின் ஒருமித்த அன்பிற்கும், பாராட்டிற்கும் உரியவர் மெல்லிசை சக்கரவர்த்தி எம்.எஸ்.வி. அவர்கள்.
- மெல்லிசை மன்னர், மெல்லிசை மாமன்னர், மெல்லிசை சக்கரவர்த்தி என்ற பட்டப் பெயர்களைத் தொடர்ந்து மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களால் "திரை இசைச் சக்கரவர்த்தி" என்ற பட்டத்தைப் பெற்றவர்.
- மேலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மெல்லிசை மன்னரின் வாழ்நாள் சாதனையை பாராட்டும் விதமாக சென்னை நேரு உள் விளையாட்டரங்கத்தில் மாபெரும் விழா எடுத்து கௌரவப்படுத்தினார்கள்.

இந்த விழாவிற்கு வருகை தந்து சிறப்பு செய்து கொண்டிக்கின்ற மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பத்மபூஷண் திருமதி. சரோஜா தேவி அவர்கள் புரட்சித்தலைவருடன் 26 படங்களில் நடித்தவர். இந்தியா முழுவதும் பல்வேறு மொழிப் படங்களில் நடித்து புகழ் பெற்றவர். மெல்லிசை மன்னர் இசை அமைத்தவற்றில் மட்டுமே 100 படங்களுக்கு மேல் நடித்த பெருமைக்குரியவர். இன்றும் உலக அளவில் ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து நிலைத்து நிற்பவர் மரியாதைக்குரிய திருமதி. சரோஜாதேவி அவர்கள்.

தவில் இசை மேதை பத்மஸ்ரீ ஏ.கே.பழனிவேல் அவர்கள் இன்று இசை ஆழ்வார் விருது பெறுவதை நான் மனதார பாராட்டுகின்றேன். அவர் மேலும் உலக அளவில் சாதனைகள் படைத்து இசைத் துறைக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித்தர மனதார வாழ்த்துகிறேன்.

இசைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் “இசைப் பல்கலைக்கழகம்” உருவாக்கி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்திருந்தார்கள்.

ஒரு இசைக் குழுவினராக லஷ்மன் ஸ்ருதி சகோதரர்கள் என்னை இந்த விழாவிற்கு அழைத்தபோது, இத்துறையை அரசு அங்கீகரித்த துறையாக அறிவிக்க வேண்டும் என்ற தங்களுடைய வேண்டுகோளை வைத்தார்கள். இந்த கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை இந்த இனிய விழாவில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால், மேடையில் இருக்கின்றவர்கள் எல்லாம் என்னைப் பற்றிப் பேசினார்கள். நாங்கள் எல்லாம் அரசியல் பொதுக் கூட்டத்திலே எங்களுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலே நாங்கள் பேசுவோம். ஆனால், இது பெரியோர், சான்றோர்கள் அமர்ந்த இடம். இந்த இடத்திலே நாங்கள் எழுதி வந்தது நிறைய இருந்தது, உங்களையெல்லாம் பார்த்த பிறகு அதையெல்லாம் தவிர்த்து, இந்த

நிகழ்ச்சி ஒரு அற்புதமான நிகழ்ச்சி, இசைக்கு மயங்காதவர்கள் எவருமேயில்லை, இசை என்பது நம்முடைய மன ஓட்டத்திற்கு எல்லையே இல்லாமல் மனதில் ஓடிக்கொண்டிருப்பது. ஆகவே, அந்த இசை மழையை பொழிகின்ற நம்முடைய நண்பர்களுக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், இசை ஜாம்பவான்கள், இசை விருந்தை உங்களுக்கு வழங்க இருக்கின்ற அவர்களுக்கும், அதை ரசித்துக் கேட்க இங்கே அமர்ந்திருக்கின்றவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 'சென்னையில் திருவையாறு' நிகழ்ச்சி வெள்ளி விழா கண்டு, பொன் விழா கண்டு நூற்றாண்டுகளைக் காண மனமார்ந்த, இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.12.2018 அன்று*
"சென்னையில் திருவையாறு"
14ஆவது ஆண்டு இசை தொடக்க விழாவில் ஆற்றிய உரை

மருத்துவத் துறையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கும், ஒரே சீரான தரமான சேவை வழங்குவதற்கும் இக்கருத்தரங்கு அடிக்கோலாக அமையும்!

அனைவருக்கும் வணக்கம்.

இந்திய அறுவை சிகிச்சை மருத்துவர்களின் சங்கம் நடத்தும் ASICON 2018-Chennai 78ஆவது ஆண்டு தேசிய கருத்தரங்கின் துவக்க விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. காமராஜ் அவர்களே!

இவ்விழாவிலே வரவேற்புரை ஆற்றிய டாக்டர் ரத்தினசாமி அவர்களே!

செயலாளர் டாக்டர் எபினேஷ் பென்சம் அவர்களே!

தலைமையுரை ஆற்றிய டாக்டர். திலிப் எஸ். கோடே அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய துணைத் தலைவர் டாக்டர் அரவிந்த் குமார் அவர்களே! மற்றும் டாக்டர் சிவா கே. மிஸ்ரா அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள டாக்டர் கே.விநாயக் செந்தில் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பல்வேறு நாடுகளிலிருந்து வருகை புரிந்து கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ள அறுவை சிகிச்சை நிபுணர்களே!

இந்திய அறுவை சிகிச்சை மருத்துவ சங்க நிருவாகிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

I welcome all the surgeons who have come from all over India, SAARC countries and other countries for the prestigious conference. I hope you all have a pleasant stay at Chennai and excellent discussions in this Conference.

இந்தியாவிலே மருத்துவ சிகிச்சைத் துறையில் தமிழ்நாடுதான் முதன்மை இடத்தை வகிக்கின்றது. இந்தக் கருத்தரங்கில் ஒருவருக்கொருவர் இடையே நடைபெறும் கலந்துரையாடல்கள், மருத்துவத் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் மேற்கொள்வதற்கும், நாடு முழுவதும் ஒரே சீரான, தரமான மருத்துவ சேவை வழங்குவதற்கும் அடிகோலாக அமையும் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த அமைப்பிற்கு நாடு முழுவதும் 22 மாநிலங்களில் கிளைகளும், பல்வேறு நகரங்களில் பிரிவு அமைப்புகளும் இருப்பதை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த தேசிய மருத்துவ மாநாடு 25 ஆண்டுகளுக்குப் பின் சென்னையில் நடப்பது தமிழ்நாட்டிற்கு கிடைத்த பெருமையாகும்.

The Associations of surgeons of India was started in the year 1938 with its headquarters at Chennai. The Association has ensured that the latest modern surgical technologies are taken to everyone in our country. I am happy to note that more than 18,000 surgeons in the association are serving our people to relieve them from pain and sufferings in a selfless and committed way. I hope you share the latest developments and your valuable experiences in the Conference so that the surgeons become more skilled and effective.

Chennai is fast developing as a medical tourism hub and this Conference would add pace towards this objective. Hon'ble Amma's Government always provides excellent medical services to the people of Tamil Nadu and it has established health and medical care facilities all over the State. My Government has taken various policy decisions towards the same so that Tamil Nadu becomes a numero-uno State for providing health care facilities not only for our countrymen but also for everyone all over the world.

மருத்துவத் துறையில் உயரிய தொழில்நுட்பமாக கருதப்படும் அறுவை சிகிச்சை இன்று சர்வசாதாரணமாக உலகெங்கும் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, பல நூற்றாண்டு காலத்தின் தொடர் போராட்டத்தின் மூலம் தான் மனிதனால் அறுவை சிகிச்சை மருத்துவத்தில் இன்றைய வளர்ச்சியை எட்ட முடிந்தது.

மருந்துகளால் குணப்படுத்த முடியாத உடலின் பாதிப்படைந்த பகுதிகளை, அறுவை சிகிச்சை மூலம் உயிரிழப்பை ஏற்படுத்தாமல் எப்படி குணப்படுத்துவது, அதற்காக உடலில் கீறல்களை எப்படி உண்டாக்கி, செப்பனிட்டு பின்பு கிழிந்த உடலை மீண்டும் எப்படி தைப்பது என்பதை உலகிற்கு முதன் முதலாக தெளிவான

வழிகாட்டுதலுடன் விளக்கிக் கூறி, செய்தும் காட்டியவர், அறுவை சிகிச்சைத் துறையின் தந்தை என்று அழைக்கப்படும் சுஸ்ருதர் என்பதை நான் இங்கு பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். இவர் தான் **உலகின் முதல் அறுவை சிகிச்சை கலைக் களஞ்சியமான "சுஸ்ருத சம்ஹிதையை" என்ற நூலை மனித சமுதாயத்திற்கு வழங்கியவர். இவர் அறுவை சிகிச்சைத் துறையில் மாமேதையாக விளங்கினார். இவர்தான் மயக்க மருந்து அறிவியல் மற்றும் பிளாஸ்டிக் சர்ஜரியின் தந்தையாக போற்றப்படுகின்றார்.** மருத்துவத்தில் உலகிற்கே வழிகாட்டியாக திகழ்ந்தது நமது நாடு தான் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். மகப்பேறு இயற்கையான முறையில் நடைபெற முடியாத சந்தர்ப்பங்களில் அறுவை சிகிச்சையின் வாயிலாக குழந்தையை வெளியே எடுக்கலாம் என்பதை செய்தவரும் இவரே. இதை நாம் உலகளவில் எடுத்துரைத்து பெருமைகொள்ள வேண்டும்.

இன்றைய காலத்தில் உலகளவில் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை முறையில் பரிணாம வளர்ச்சி ஏற்பட்டு, இருதய அறுவை சிகிச்சை, எலும்பு மூட்டு அறுவை சிகிச்சை என மனித உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புக்கும் ஏற்படும் பாதிப்புகளை அறுவை சிகிச்சை மூலம் நோயாளிகளுக்கு எந்தவிதமான பாதிப்புமின்றி சுலபமாக சரிசெய்யப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் உள்ள மருத்துவர்களாகிய நீங்களும் இந்த அறுவை சிகிச்சை செய்யும் முறையில் பல்வேறு சாதனை புரிந்து வருகிறீர்கள். அதற்கு ஒரு நிகழ்வினை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அபிஷேக் பிரசாத் என்ற ஒரு கிடார் இசைக் கலைஞர் அதிக அளவில் கிடாரில் பயிற்சி செய்ததன் விளைவாக அவரது இடதுகை நடுவிரல், மோதிர விரல், சுண்டு விரல் ஆகியவை செயல்படாமல் போனது. உடனே அவர் ஒரு நரம்பியல் வல்லுநரை அணுகினார். மருத்துவ வல்லுநரும் அபிஷேக் பிரசாத்தை பரிசோதனை செய்து, அவர் "டிஸ்டோனியா" என்ற நோயால் பாதிக்கப்பட்டதாக கூறினார். இதனை அறுவை சிகிச்சையின் மூலம் சரிசெய்யலாம் என்றும் கூறினார். அறுவை சிகிச்சையின்போது மூளையின் சில மின் சுற்றுகள் எரிக்கப்பட்டன. இந்நிலையால் வலி மிகுந்த பிடிப்புகள், விரல்கள் முறுக்கிக் கொள்வது, மீண்டும் அசைவு போன்றவை ஏற்பட்டது.

ஒவ்வொரு சுற்றினை எரிக்கும்போதும், டாக்டர்கள் அபிஷேக் பிரசாத்தை கிடார் வாசிக்கச் சொன்னார்கள். ஆறாவது முறை எரிக்கும்போதே, விரல்கள் திறந்து விட்டன. அறுவை சிகிச்சை மேசையிலேயே, தான் இயல்பு நிலைக்கு வந்துவிட்டதாக கூறினார் அந்த கிடார் இசைக் கலைஞர்.

அறுவை சிகிச்சைக்குப் பிறகு தன்னால் நன்கு வாசிக்க முடிவதாக கூறினார் அந்த கிடார் கலைஞர் அபிஷேக் பிரசாத் அவர்கள்.

சிகிச்சை நடக்கும்போது நோயாளி சுய நினைவிலேயே இருந்தார். அறுவை சிகிச்சை நடைபெறுவதை தனது கண்களால் பார்த்துக் கொண்டே இருந்தார். இது மாதிரியான மூளை மின்சுற்று அறுவை சிகிச்சை இந்தியாவிலேயே செய்யப்படுவது ஒரு மைல்கல். இந்த சாதனையை நிகழ்த்தியவர் இந்தியாவைச் சார்ந்த ஒரு அறுவை சிகிச்சை நிபுணர்தான் என்பதை அறியும்போது நமக்கெல்லாம் மிகவும் பெருமையாக உள்ளது.

தமிழ்நாட்டில் அரசாங்க மருத்துவமனையில் இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது. அதேபோல் தமிழ்நாட்டில் 3 அரசு மருத்துவமனைகளில் 16 இருதய மாற்று அறுவை சிகிச்சைகளும் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல், தற்போது உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் அதிக அளவில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. **உடல் உறுப்பு தானம் வழங்கும் மாநிலங்களில் தமிழ்நாடு முதல் மாநிலமாக தொடர்ந்து 4 முறை விருதுகளை பெற்றுள்ளது.**

இதுவரை இதயம் பழுதடைந்தவர்களை, சிறுநீரகம் பழுதடைந்தவர்களை, நுரையீரல் பழுதடைந்தவர்களை உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் வாழ வைத்திருக்கிறது மருத்துவத் துறை. ஆனால், கர்ப்பப்பை இல்லாதவர்களுக்கும், பழுதடைந்தவர்களுக்கும் தீர்வு காணப்படவில்லை. இப்போது அதற்கும் தீர்வு கண்டு சாதித்து காட்டியிருக்கிறது, புனேவை சேர்ந்த ஒரு மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவக் குழு. சென்ற வருடம் கர்ப்பப்பை மாற்று சிகிச்சை செய்து ஒரு பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. இது ஒரு வரலாற்று சாதனை.

சீரான சுகாதார பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்யும் நோக்கில் பல முன்னோடி செயல் திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

❖ தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைக்குழு ஆகியவை சிறந்த மருத்துவ சேவையை அளித்து வருகிறது. மேலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்

திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சுகாதாரத் திட்டம், பிரசவ உடனாளர் திட்டம், அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை, அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா மருந்தகம் போன்ற பல முன்னோடி திட்டங்களையும் முதன்முதலாக செயல்படுத்திய பெருமை தமிழ்நாட்டிற்கே உள்ளது.

❖ மாண்புமிகு அம்மா அவர்களாலும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக மதுரை மாவட்டம் தோப்பூரில் 1,500 கோடி ரூபாய் செலவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது.

❖ கரூரில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், விருதுநகரில் ஒரு புதிய பல் மருத்துவக் கல்லூரியும் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

❖ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் இதுவரை 27.68 இலட்சம் நோயாளிகளுக்கு 5,420 கோடி ரூபாய் செலவில் பல்வேறு சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில் மட்டுமல்லாது. மிகச்சிறந்த மனித வளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகிற காரணத்தால், தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக விளங்குகிறது.

“சமூக பொருளாதார பின்னணி எதுவாக இருந்தாலும், அதனை கருத்தில் கொள்ளாமல், மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும்

மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து நடைமுறைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவத்திறன் செயல்பாடுகள் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதே எனது நோக்கம் ஆகும்” என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

அதுபோல் We are for Service என்பதுதான் உங்கள் அமைப்பின் குறிக்கோள் என கேள்விப்பட்டேன். பொருளாதார ஏற்றத்தாழ்வை பார்க்காமல், மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல் செயல்பட்டு, மருத்துவத் துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய தொழில்நுட்ப முறைகள் கடைக்கோடி கிராமத்து மக்களையும் சென்றடைவதற்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மருத்துவர்களாகிய நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கருத்தரங்கில் கலந்துகொண்ட இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளைச் சேர்ந்த அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

I thank the organisers of the Conference for inviting me and hope this Conference would benefit all those who are participating in it. I also sincerely wish that the outcomes to this Conference would benefit the humanity as a whole.

Thank you.

அனைவருக்கும் வணக்கம்! நன்றி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.12.2018 அன்று*
சென்னையில் நடைபெற்ற இந்திய அறுவை சிகிச்சை நிபுணர்கள்
கூட்டமைப்பின் 78ஆம் ஆண்டு தேசிய கருத்தரங்கை
தொடக்கி வைத்து ஆற்றிய உரை

இளமையில்தான் மிகச் சிறந்த பண்புகள் பதியம் போடப்படுகின்றன. நூல்கள் வாசிக்கும் ஆர்வத்தை இளமையிலேயே ஊட்டவேண்டும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரால் நடத்தப்படும் 42ஆவது சென்னை புத்தகக் காட்சியை தொடங்கி வைத்து உங்களையெல்லாம் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

படைப்பாளர்களும், படிப்பாளர்களும் சூழ்ந்திருக்கின்ற அறிவுசார்ந்த இந்த இனிய விழாவில் தலைமையேற்றுள்ள பத்மஸ்ரீ டாக்டர் நல்லி குப்புசாமி செட்டி அவர்களே!

சிறப்பு விருந்தினர் முன்னாள் கல்வி அமைச்சர் மரியாதைக்குரிய முனைவர் வைகைச் செல்வன் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய மரியாதைக்குரிய திரு. எஸ். வயிரவன் அவர்களே!

விருது பெறும் அறிஞர் பெருமக்களே,

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பாடநூல் நிறுவனத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மரியாதைக்குரிய திருமதி பா.வளர்மதி அவர்களே,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் வாரியத் தலைவர் சகோதரர் திரு.பாலகங்கா அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் சகோதரர் சுப்புரத்தினம் அவர்களே,

மரியாதைக்குரிய காங்கிரஸ் கட்சியினுடைய மூத்த தலைவர், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் அண்ணன் குமரி அனந்தன் அவர்களே,

மற்றும் நிகழ்ச்சியிலே பங்கு பெற்று நன்றியுரை ஆற்றவிருக்கின்ற திரு.அரு.வெங்கடாசலம் அவர்களே!

நிகழ்ச்சியிலே கண்டுகளித்துக் கொண்டிருக்கிற தாய்மார்களே, பெரியோர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களே!

வருகை தந்திருக்கின்ற நண்பர்களே,

அத்தனை பேருக்கும் என்னுடைய முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

1977ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கம் 41 ஆண்டுகளாக புத்தகக் கண்காட்சிகளை நடத்தி வெற்றிப் பாதையில் பயணம் செய்து கொண்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து இன்று 42ஆவது புத்தகக் காட்சியை நான் தொடங்கி வைப்பது பெருமையாக இருக்கிறது.

ஆண்டுக்கு ஆண்டு புத்தகம் படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போவதால், இப்படிப்பட்ட புத்தகக் கண்காட்சிகளின் தேவையும் அதிகரிக்கத்தான் செய்யும். வாசகர்களை கவர்ந்திருக்கும் வகையில் நவீனங்களையும் வசதிகளையும் அறிமுகப்படுத்தியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

- முதல்முறையாக, இந்த புத்தகக் கண்காட்சியில் ஆன்லைன் நுழைவு சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது
- புத்தகக் கண்காட்சி நாட்களில் இரண்டு ATMகளும் நிறுவப்பெற்றுள்ளன.
- பாதுகாப்பு கருதி வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன
- மாற்றுத் திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள், ரத்த வங்கி ஆகிய சிறப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்பதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், வாசகர்களை மகிழ்விக்க தினந்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும், மாணவ, மாணவிகளை உற்சாகப்படுத்த அவர்களைக் கொண்டே மேடை நிகழ்ச்சிகளும், பல்வேறு போட்டிகள் நடத்தப்படுவதும் தனி சிறப்பாகும். சிறந்த எழுத்தாளர்கள், படைப்பாளர்கள் மற்றும் சிறந்த புத்தக விற்பனையாளர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தல் போன்ற இந்த சங்கத்தின் செயல்பாடுகளைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த புத்தக அரங்கிலே 820 அரங்குகள், 12 இலட்சம் தலைப்புகளில் ஒன்றறை கோடி புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு அறிவு சார் மாநிலம் என்பதை பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

புத்தக கண்காட்சி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் அன்னையின் சிலையைக் கண்டு நான் உளமாற மகிழ்ச்சி அடைகிறேன்.

"நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னை சந்திப்பவனே என் தலை சிறந்த நண்பன்" என்றார் முன்னாள் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கன் அவர்கள்.

'ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள், அவனே எனது வழிகாட்டி' என்றார் ரோமானிய மன்னன் ஜுலியஸ் ஸீஸர் அவர்கள்.

'புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே' என்றார் ரஷிய நாட்டைச் சார்ந்த லெனின் அவர்கள்.

கிரேக்க நாட்டுச் சிந்தனையாளர் சாக்ரடீஸ் மரண தண்டனை விதிக்கப்பட்டு நஞ்சு தனக்கு கொடுக்கும் வரை படித்துக் கொண்டே இருந்தார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் ஒரு நாள், மருத்துவர்கள் இன்று உங்களுக்கு அறுவை சிகிச்சை என்றபோது, தாம் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால், அதை முடிக்கும் வரை உயிர் காக்கும் அறுவை சிகிச்சையை தள்ளி வைக்க கேட்டுக் கொண்டார். அதனால்தான் அறிஞர் அண்ணாதுரையாக இருந்தவர் பேரறிஞர் அண்ணாவாக மாற்றி போற்றப்பட்டார்கள்.

நமது மூதாதையர் அறிவையும், அனுபவத்தையும் ஆவணப்படுத்தி நமக்கு சொத்தாக வழங்கிடுவது நூல்கள்தான். ஆயிரமாயிரம் மலர்களின் மகரந்தச் சேகரமே தேன்கூடாக மாறுகிறது. ஆயிரமாயிரம் கருத்துக்களின் சேகரமே புத்தகங்கள். இவை வெறும் காகிதங்களின் கற்றை அல்ல. அவை உண்மையின் ஊற்றுக்கண். புத்தகத்தை திறப்பவன் அறிவு சுரங்கத்தின் வாயிலை திறக்கிறான்.

இளமையில்தான் மிகச் சிறந்த பண்புகள் பதியம் போடப்படுகின்றன. நூல்கள் வாசிக்கும் ஆர்வத்தை இளமையிலேயே ஊட்ட வேண்டும். பிள்ளைகள் பெற்றோர்கள் சொல்வதிலிருந்து கற்றுக் கொள்வதைவிட, பெற்றோர்கள் செய்வதைப் பார்த்து மிகுதியாகக் கற்றுக் கொள்கிறார்கள். எனவே, முதலில் பெற்றோர்கள் நூல்கள் வாசிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் ஓராண்டில் சராசரியாக இரண்டாயிரம் பக்கங்கள் படிக்க வேண்டும் என்று பன்னாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் பரிந்துரை செய்கிறது.

‘தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைத்தூறும் அறிவு’

என்ற குறளுக்கு ஏற்ப தோண்ட, தோண்ட தண்ணீர் மிகுவதைப்போல, படிக்க, படிக்க அறிவு வளரும் என்பதை பெற்றோர்கள் குழந்தைகளுக்குச் சொல்லித் தரவேண்டும், ஏனெனில் சிக்கல்களை எதிர்கொள்வதற்கும், சவால்களைச் சந்திப்பதற்கும், புத்தக வாசிப்பு பெரும் துணையாகிறது.

படிக்க எடுத்த பிறகு, படித்து முடிக்கும் வரை கீழே வைக்கவிடாமல் நமது ஆர்வத்தை தூண்டச் செய்கிற புத்தகம் எதுவோ, அதுவே சிறந்த புத்தகம். ஒரு முறைக்குப் பலமுறை திரும்பத் திரும்ப படிக்கத் தூண்டும் புத்தகம் எதுவோ, அதுவே சிறந்த புத்தகம்.

தூங்கச் சென்றவன் தூக்கம் வருவதற்காக புத்தகத்தை புரட்டுகிறபோது, எந்தப் புத்தகம் அவனைத் தூங்கவிடாமல் புரட்டிப் போடுகிறதோ, அதுவே சிறந்த புத்தகம். நல்ல நூல்களை படிப்பதற்கு ஆகும் நேரத்தைவிட, அவற்றைத் தேர்ந்தெடுப்பதற்கு அதிக நேரம் செலவிடுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கும் நூல்கள் உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்கக் கூடும். நூல்களை படித்து மேதையானவர்களைவிட, நல்ல மனிதர்களாக மாறியவர்கள் அதிகம் என்பதால் மாற்றத்திற்கும், ஏற்றத்திற்கும் நூல் வாசிப்பது மிக, மிக அவசியம் என்பதை உணருங்கள். நீங்கள் படிப்பதன் மூலம், உங்களை அறியாமலேயே மொழியை வாழவைக்கின்றீர்கள். உங்களால் மொழி வளர்ச்சியடைகிறது. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தன்னுடைய படங்களிலே படிப்பதைப்போலவே காட்சிகளில் தோன்றுவார். அது நடிப்பல்ல. இளைஞர்கள் புத்தகம் படிக்கும் பழகத்தை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற புரட்சித்தலைவர் அவர்களின் அறிவுரை ஆகும். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் நல்ல புத்தகங்களை விரும்பிப் படிப்பார்கள். அதனால்தான் அவரால் ஒரு எழுத்தாளராகவும்,

சிறந்த பேச்சாளராகவும் ஒளிர்ந்திட முடிந்தது. பல்வேறு மொழிகளில் புலமைமிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் பேச்சில், தொலை நோக்கு சிந்தனையும், தத்துவங்களும், பொதிந்து கிடக்கிறது என்றால், அவர்கள் அதிகமான நூல்களை படித்து அறிவை செம்மைப்படுத்தி வைத்திருந்தார்கள். அதன் காரணமாகவே தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லக்கூடிய தொலைநோக்குத் திட்டங்களை தீட்டி, சிறப்பாக செயல்படுத்தி, அவரால் வெற்றி காண முடிந்தது.

தமிழ்நாடு அரசினால் தற்போது 4,622 நூலகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் 8 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்கள் கைவசம் உள்ளன. 8 கோடியே 49 இலட்சம் வாசகர்கள் இந்நூலகங்களை பயன்படுத்துகின்றனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2004 ஆம் ஆண்டு கன்னிமரா பொது நூலகத்தில் ஒரு நிரந்தர புத்தக கண்காட்சியை அமைத்தார். அக்கண்காட்சி கடந்த 15 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மக்களிடம் புத்தகம் படிக்கும் பழக்கத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 23ஆம் தேதி உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகிறது.

பொதுவாக ஆண்டுதோறும் 10 அல்லது 12 நாட்கள் நடைபெறும் இந்தக் புத்தக காட்சி இந்த ஆண்டு ஜனவரி 4ஆம் நாள் முதல் 20ஆம்

நாள்வரை 17 நாட்கள் நடைபெறுவது புத்தகங்களை விரும்பி படிக்கும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். பொது மக்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தி அதிக அளவில் புத்தகங்களை வாங்கி பயன்பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா அவர்களின் வழியில் வந்த புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களாலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களாலும் வளர்க்கப்பட்ட நாங்கள் எப்போதும் படைப்பாளர்கள் பக்கமும், படிப்பாளிகளின் பக்கமும்தான் இருப்போம் என்று உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் நலனில் அதிக அக்கறைக் கொண்டுள்ள மாண்புமிகு அம்மாவின் அரசு, உங்கள் நியாயமான கோரிக்கையை பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த விழாவில் அறிஞர் பெருமக்களை சிறப்பிக்கும் வண்ணம், அவர்கள் ஆற்றிய பணிக்காக இன்று விருதுகள் வழங்கி சிறப்பித்ததில் நான் பெரிதும் உவகை கொள்கிறேன்.

இந்த 42ஆவது புத்தக கண்காட்சியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் தென்னிந்திய புத்தக விற்பானையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கத்தினரை மீண்டும் ஒரு முறை பாராட்டுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.01.2019 அன்று சென்னையில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தினரால் நடத்தப்பட்ட 42ஆவது சென்னை புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை

சுற்றுலா பயணிகள் வருகையில் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்று சென்னை தீவுத் திடலில் 45ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை தொடங்கி வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவிலே சிறப்புரையாற்றி அமர்ந்துள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்த்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே உரையாற்றிய மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அண்ணன் திரு. வெல்லமண்டி நடராஜன் அவர்களே!

நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. செல்லூர் ராஜு அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு. தங்கமணி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் வி.சரோஜா அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு. உடுமலைப்பேட்டை ராதாகிருஷ்ணன் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு. பா.பென்ஜமின் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சகோதரி திருமதி வி.என்.ராஜலட்சுமி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு.ஜி.பாஸ்கரன் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சகோதரி திருமதி எஸ்.வளர்மதி அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் திரு.வெங்கடேஷ்பாபு அவர்களே, திரு.விஜயகுமார் அவர்களே, திரு. ஜெயவர்தன் அவர்களே, முன்னாள் அமைச்சர் அண்ணன் திரு.சோமசுந்தரம் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரர் தி.நகர் திரு. சத்யா அவர்களே, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு.பாலகங்கா அவர்களே, மற்றும் இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு வரவேற்புரை ஆற்றிய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.அபூர்வ வர்மா அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற நன்றியுரை ஆற்ற இருக்கின்ற திரு.வெ.பழனிகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

அரசு உயர் அதிகாரிகளே! காவல் துறை உயர் அதிகாரிகளே!

மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கிற சுற்றுலா பயணிகளே,

இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் விளங்குவதற்கு ஏற்பாடு செய்த சுற்றுலா அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!

அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொங்கல் என்றாலே அதனுடன் சேர்த்து நினைவுக்கு வருவது சென்னை தீவுத்திடலில் நடக்கும் இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி தான். பொழுது போக்கு அம்சங்களுடன் தமிழ்நாடு அரசுத்துறைகளின் நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் பொதுமக்கள் அறிந்துக் கொள்ள வாய்ப்பளிப்பதே இந்தப் பொருட்காட்சியின் நோக்கம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் நடத்தப்படும் 45ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியை இன்று தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த ஆண்டு பொருட்காட்சியின் கருப்பொருள் Tourism and the Digital Transformation என்பதாகும். இப் பொருட்காட்சியில் 28 மாநில அரசுத்துறைகள், 16 மாநில பொதுத்துறை நிறுவனங்கள், 2 மத்திய அரசு நிறுவனங்கள், 4 பிற மாநில அரசு நிறுவனங்கள், இந்திய செஞ்சிலுவை சங்கம், தமிழ் நாடு சட்ட உதவி மையம் மற்றும் 60 தனியார் அரங்குகள் இந்த பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை மாண்புமிகு அம்மாவின் அரசு தடை செய்துள்ளது. இதற்கு பொது மக்களாகிய நீங்கள் அனைவரும் ஆதரவு அளிப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கின்றது. இந்த உயரிய கொள்கைக்கு இந்தப் பொருட்காட்சியில் முக்கியத்துவம் அளித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது பாராட்டுக்குரியது.

இந்த பொருட்காட்சியில் துபாயில் கட்டப்பட்டுள்ள உலகிலேயே மிக உயரமான கட்டடத்தின் மாதிரி வடிவம், கடல்வாழ் மீன் அருங்காட்சியகம், மேக கூட்டங்களை பிரதிபலிக்கும் மாதிரி ஆகிய சிறப்பு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இதுபோன்ற பயனுள்ள விஷயங்கள் மட்டுமின்றி, பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் இந்த பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள அண்ணா கலையரங்கத்தில் தினந்தோறும் நாட்டியம், நாடகம், இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் பிடித்த பல்வேறு விளையாட்டு சாதனங்கள் இந்த பொருட்காட்சியில் இடம் பெற்றுள்ளன என்பதை இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில அரசின் ஆக்கப்பூர்வமான பணிகளையும், மக்கள் நலனுக்காக செயல்படுத்தப்படும் புதிய திட்டங்களையும், மக்கள் எளிதில் புரிந்துக் கொள்ளும் வகையில் செயல்மாதிரிகளுடன் அரசுத்துறை அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கிய பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துதல், தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்தல், சுற்றுலாப்

பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு செயல்படுத்தி வருவதால், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் நடைபெறும் இசை விழா நிகழ்ச்சிகளையும், நாட்டியாஞ்சலி நிகழ்ச்சிகளையும், நமது தமிழ்நாட்டிற்கே உரிய வீர விளையாட்டுகளையும் காண்பதற்கு மட்டுமின்றி, இந்தியாவின் மருத்துவ தலைநகர் என அழைக்கப்படும் தமிழ்நாட்டில் மருத்துவத்திற்கு வருபவர்களும், உயர்கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கு வரும் மாணாக்கர்களும் என தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வந்த வண்ணம் உள்ளனர்.

இது தவிர, தமிழ்நாட்டில் ஆன்மிகம் மற்றும் பொழுதுபோக்கும் சுற்றுலாத் தலங்கள் அதிக அளவில் அமையப் பெற்றுள்ளன. குறிப்பாக மலைகளின் ராணி– உதகமண்டலம், மலைகளின் இளவரசி – கொடைக்கானல் மற்றும் தென்னகத்தின் அணிகலன் – ஏற்காடு ஆகிய மலைவாசஸ்தலங்கள், உலகின் 2வது பெரிய சென்னை மெரினா கடற்கரை, உலகிலேயே மூன்று கடல்கள் சங்கமிக்கும் ஒரே இடம் – கன்னியாகுமரி, பல்லவர் வரலாறு பரப்பும் மாமல்லபுரம் ஆகிய சுற்றுலாத்தலங்கள், தமிழ்நாடு முழுவதும் கலைநயத்துடன் நிறைந்து காணப்படும் சிறப்புமிக்க ஆயிரக்கணக்கான கோயில்கள், கிறிஸ்துவ மற்றும் இஸ்லாமிய வழிபாட்டு தலங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை மிகவும் ஈர்த்து வருகின்றது. மேலும் யுனஸ்கோ நிறுவனம் Creative Cities Network என்று 64 நகரங்களை தேர்வு செய்துள்ளது. அவற்றுள், சென்னையை “இசை படைப்பாற்றல் மிக்க நகரமாக” தேர்வு செய்து சிறப்பித்துள்ளது. இதுதவிர, யுனஸ்கோவின் உலக பாரம்பரிய சின்னங்கள் ஐந்து தமிழ்நாட்டில்

உள்ளன. ஆக மொத்தம் உலகின் பழமையான கலாச்சாரம், வரலாற்று சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள், பிரமிக்கத்தக்க கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை, மனதை வசீகரிக்கும் இயற்கைத் தோற்றங்கள், வனப்பகுதிகள் முதலியவை தமிழ்நாட்டில் உள்ளன. சிறந்த சாலை வசதிகள் மற்றும் நான்கு பன்னாட்டு விமான நிலையங்கள் இங்கு அமைந்துள்ளன.

இதன்காரணமாக, 2014, 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. மேலும், 2017ஆம் ஆண்டில் முனைப்பாக சந்தைப்படுத்தியதன் விளைவாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்து, தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது. மேலும் 2017ஆம் ஆண்டில் 34 கோடியே 50 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், 48 இலட்சத்து 60 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து சென்றுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாத்துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்திய சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காக சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து 46 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள், தமிழ்நாட்டின் கடற்கரை சுற்றுலாத்தலங்களில் 99 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள், ஆசிய வளர்ச்சி வங்கியிடம் சுற்றுலா வளர்சித் திட்டங்களுக்காக 218 கோடி ரூபாயில் பணிகள், என தமிழ்நாடு சுற்றுலாத்துறை பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும், மேம்படுத்தியும் வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ தமிழ்நாடு சுற்றுலாத்துறை சிறப்பான வளர்ச்சி பணிகளுக்காக பல்வேறு விருதுகளை பெற்று உள்ளது.

❖ குறிப்பாக டிராவல் லீசர் (இந்தியா மற்றும் தெற்கு ஆசியா) என்ற இதழ் வெளியீட்டாளர்கள் தமிழ்நாட்டை "இந்தியாவில் சிறந்த மாநிலம்" என்ற விருதை 2017 ஆம் ஆண்டிற்கு வழங்கியுள்ளனர்.

❖ பட்வா (Pacific Area Travel Writers Association) "சிறந்த ஆன்மிக சுற்றுலா மாநிலம்" Best State - Pilgrimage Tourism என்ற 2018ஆம் ஆண்டிற்கான சர்வதேச பயண விருதை தமிழ்நாடு மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

❖ அதேபோல், 2019ஆம் ஆண்டிற்காக பட்வா வழங்கும் "சர்வதேச பயண விருது பாரம்பரிய சின்னங்கள் நிறைந்த மாநிலம்" Best State - Heritage Tourism என்று தமிழ்நாடு மாநிலத்திற்கு அறிவித்துள்ளது.

❖ மேலும், இந்தியா டுடே நிறுவனத்தால், 2018ஆம் ஆண்டிற்கான சிறப்பான சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்ட சிறந்த மாநிலம் என்ற விருதையும் தமிழ்நாடு பெற்றுள்ளது.

இந்த விருதுகள் தவிர, தமிழ்நாடு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறப்பான செயல்முறை உட்பட உயர்தரமான சுகாதார சேவைகளுக்கு அங்கீகாரம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்கான விருதுகள் போன்ற எண்ணற்ற விருதுகளை ஒவ்வொரு துறையிலும் பெற்று, தமிழ்நாடு, இந்தியாவிலே அதிக அளவில் விருதுகளை பெறும் ஒரே முன்னணி மாநிலமாக திகழ்ந்து வருகிறது என்பதை இங்கே பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்த சாதனைகளுக்காக அரசை பாராட்டாமல், ஒரு சிலர் இந்த அரசைப் பற்றி, வேண்டுமென்றே ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை மக்களிடத்திலே பரப்பி வருகிறார்கள். ஆனால் மக்கள் உண்மை நிலவரத்தை நன்கு அறிவார்கள். இதை சொல்லும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு அடர்த்தியான காடு. அந்த காட்டில் நிறைய மிருகங்கள் வசித்து வந்தன. அந்த காட்டில் ஒரு பொந்தில் ஒரு முயல் ஒன்று வசித்து வந்தது. காட்டிலேயே இந்த முயல்தான் சற்று படித்த முயல். எனவே, தனக்குத்தான் எல்லாம் தெரியும். இவர்கள் எல்லாம் படிக்காத முட்டாள் என்ற நினைப்பில் யாரையும் மதிக்காது.

இந்த முயல் மற்ற முயல்கள் போன்றதல்ல. எப்பொழுதும் அசாதாரண கற்பனையிலேயே மிதக்கும், நடக்காத காரியங்களை எல்லாம் நடந்து விட்டதாக கருதும். எந்த நேரமும் ஏதாவது சிந்தித்தப்படியே இருக்கும்.

இந்த முயல் ஒரு நாள் வெகுதூரம் ஓடிய களைப்பில் ஒரு பனை மரத்தடியில் கண்களை மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தவாறு இருந்தது. அப்பொழுது ஒரு பனம் பழம் ஒன்று பொத்தென்று கீழே விழுந்தது. கண்களை முடியவாறு இருந்ததால், பனம் பழம் விழுந்ததை முயல் பார்க்க வில்லை. முயலின் சிந்தனை கலைந்தது. அது தன் ஆயுளில் இதுபோன்ற சத்தத்தை கேட்டதில்லை. உலகத்தை பற்றிய

சிந்தனையில் இருந்ததால் ஒருவேளை உலகம்தான் புரண்டு விழுந்து விட்டதோ என்று நினைத்தது. இதனை நினைத்தவுடன் அதன் உடல் நடுங்கியது. இனி இங்கிருந்தால் நமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று நினைத்தவாறு தலை தெறிக்க ஓடியது.

வேகமாக ஓடிய முயலை வழியிலுள்ள மிருகங்கள் பார்த்து “ஏன் வேகமாக ஓடுகின்றாய்?” என்று கேட்டன. அதற்கு அந்த முயல், “உலகம் விழுந்து விட்டது. நாம் இங்கிருந்தால் ஆபத்து. அதனால் ஓடுகிறேன்” என்றது. இதனைக் கேட்ட மற்ற மிருகங்களும் ஓட ஆரம்பித்தன. எல்லாம் சிங்கத்திடம் சென்று இது பற்றி தெரிவித்தன.

உடனே சிங்கம் முயலைப் பார்த்து, “நீ அந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்தாயா?” என்று கேட்டது. “ நான் நல்ல வேளையாக கண்களை மூடிக்கொண்டிருந்தேன்” என்றது முயல்”. எந்த இடத்தில் இந்த சம்பவம் நடந்தது?அந்த இடத்தைக் காட்டு என்றது சிங்கம்.

உடனே முயல் தான் படுத்திருந்த பனைமரத்திற்கு அழைத்து சென்றது. “இந்த பனை மரத்தடியில் இருக்கும்போது தான் உலகம் விழுந்ததை பார்த்தேன்”, என்றது. சிங்கம் அங்கே சுற்றும் முற்றும் பார்த்து அங்கே பனம் பழம் விழுந்திருந்ததை பார்த்தது. “தன்னை புத்திசாலியாக காட்டிக் கொள்ளும் முயல், பனம் பழம் விழுந்ததை உலகம் விழுந்ததாக கற்பனை செய்துக் கொண்டு உங்களையே குழுப்பி விட்டது. உலகம் விழவில்லை” என்று சிங்கம் கூறியது. உண்மையை விளக்கிய சிங்கம், முயலின் அகங்காரத்தை ஒழிக்கும் வகையில் உரிய தண்டனை வழங்கியது.

முயல் போன்று, மக்களை குழப்புவதற்காக எதிர்கட்சிகள் கூறும் கற்பனை குற்றச்சாட்டுக்களுக்கு, சிங்கம் போல் மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மா வழியில் ஆட்சி – அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு எங்களை எதிர்வருகின்ற தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து விட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு

சேவை ஆற்றுவது மட்டுமே இலக்காக கொண்டு நாங்கள் உழைத்து வருகின்றோம்.

“ஒரு நல்ல காரியத்தை செய்ய வேண்டும் என்ற லட்சியத்துடன் நல்லவர்கள் பலர் சேர்ந்து, நல்ல தியாக உணர்வுடன் நல்ல முறையில் மேற்கொள்கின்ற எந்த ஒரு உழைப்பும், முயற்சியும், பொது மக்களின் ஒத்துழைப்புடன், ஆதரவுடன் வெற்றி அடையும் என்பது நிச்சயம்” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் அவர்களின் வாக்கிற்கிணங்க, மக்கள் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்துகின்றது. மக்களின் ஆதரவோடு பல்வேறு சாதனைகளை படைத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் கூறியதுபோல், நூறாண்டுக்கு மேல் அம்மாவின் ஆட்சி தொடரும் என்று உறுதிப்பட தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பொருட்காட்சியில் நேர்த்தியாக அரங்கங்களை அமைத்த அரசுத்துறை நிறுவனங்கள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள், மத்திய, பிற மாநிலத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 09.01.2019 அன்று*
சென்னையில் நடைபெற்ற 45ஆவது இந்திய சுற்றுலா மற்றும்
தொழில் பொருட்காட்சியைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை

பெண்களின் முகத்தில் மலர்ச்சியும் அவர்களின் வாழ்வில் வளர்ச்சியும் நபார்டு வங்கி ஏற்படுத்தியுள்ளது!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி,

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றவுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே!

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே!

நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. கே.சண்முகம் அவர்களே !

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ் ராஜ் வர்மா அவர்களே !

வரவேற்புரை ஆற்றிய நபார்டு வங்கியின் தலைமைப் பொது மேலாளர் திருமதி. பத்மா ரகுநாதன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள நபார்டு வங்கியின் பொது மேலாளர் திரு. டி.ரமேஷ் அவர்களே!

இந்திய ரிசர்வ் வங்கியின் தலைமைப் பொது மேலாளர் டாக்டர் கே.பாலு அவர்களே!

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு. ஆர்.சுப்பிரமணிய குமார் அவர்களே!

இந்தியன் வங்கியின் செயல் இயக்குநர் திரு.எம்.கே.பட்டாச்சார்யா அவர்களே!

நபார்டு வங்கியின் சென்னை துணை பொது மேலாளர் திரு. வி.மஷார் அவர்களே!

சென்னை நபார்டு வங்கியின் பொது மேலாளர் திருமதி. எஸ்.விஜயலட்சுமி அவர்களே!

பல்லவன் கிராம வங்கியின் தலைவர் திரு. தன்ராஜ் அவர்களே!

மற்றும் விருது பெற்ற வங்கியின் பிரதிநிதிகளே!

வேளாண் பெருமக்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

இங்கே திரளாக கூடியிருக்கும் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நபார்டு வங்கி நடத்தும் 2019 – 2020ஆம் ஆண்டிற்கான மாநில வங்கிக் கடன் நிதி கருத்தரங்கு, உழவர் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வேளாண் உற்பத்தியை பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக ஆக்கி வளமான தமிழகத்துக்கு வித்திடுவதை தமிழ்நாடு அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. விவசாயிகள் இடர்பாடுகளில் இருக்கும்போது, மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்களுக்கு எப்போதும் அரணாக இருந்து வருகிறது. அந்த அடிப்படையிலேயே இந்தக் கருத்தரங்கம் அமைவது சிறப்பானது.

- ❖ தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமை புரட்சி ஏற்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக 2011–2012 முதல் 2017–2018 ஆண்டு வரையிலான காலத்தில் உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னை ஐந்து முறை கடந்து சாதனை படைத்தது. அதற்காக மத்திய அரசின் “கிரிஷி கர்மான்” விருதினை தமிழ்நாடு அரசு நான்கு முறை பெற்றுள்ளது என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ❖ டெல்டா விவசாயிகளின் நலன் காக்க குறுவை தொகுப்பு திட்டம் 115 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்த “நீரா” பானம் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 802 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மானாவாரி சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ கூட்டு பண்ணைய முறையை ஊக்குவிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து கூட்டுப் பண்ணையத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, 2016–2017ஆம் ஆண்டில் அதிக அளவிலான

காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை பெற்றதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றது. அதாவது, கடந்த 2016–2017ஆம் ஆண்டில் மட்டும் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து 3 ஆயிரத்து 526 கோடியே 78 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை ஒப்பளிக்கப்பட்டு, வேளாண் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அது போல, 2017–2018ஆம் ஆண்டில் ஆயிரத்து 8 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை இது வரை ஒப்பளிக்கப்பட்டு உள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் இது வரை 16 இலட்சத்து 39 ஆயிரம் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர். கடந்த ஆண்டை விட 2 இலட்சத்து 41 ஆயிரம் விவசாயிகள் கூடுதலாக இந்த ஆண்டு காப்பீடு திட்டத்தில் பதிவு செய்துள்ளனர்.

❖ தமிழ்நாட்டில் பெரிய மற்றும் மிகப்பெரிய உணவுப் பூங்காக்களை அமைக்க தமிழ்நாடு உணவு பதப்படுத்தும் கொள்கை ஒன்றினை மாண்புமிகு அம்மாவின் அரசு அண்மையில் வெளியிட்டுள்ளது. அது மட்டுமன்றி, கிராம அளவில் குறிப்பிட்ட விளைபொருட்களுக்கான உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

❖ பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற பொருட்கள் தன்மை மாறாமல் விநியோகம் செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி, அறுவடைக்கு பிந்தைய சேதத்தைத் தவிர்க்கவும், நுகர்வோருக்கு ஆண்டு முழுவதும் தரமான பொருட்கள் நல்ல விலைக்கு கிடைப்பதை உறுதி செய்யவும் விநியோகத் தொடர் மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 495 சேகரிப்பு மையங்களும், 31 பிரதான பதனிடும் அலகுகளும், 34 பிரதான சந்தைகளும் 1,720 கிராமங்களில் 10 மாவட்டங்களில் 398 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

❖ அது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் பெரிய மற்றும் மிகப் பெரிய உணவுப் பூங்காக்கள் 10 மாவட்டங்களில் அமைக்கப்பட உள்ளன. இந்த திட்டங்களின் மூலம் விவசாய உற்பத்தி அதிகரிப்பதுடன், விவசாயிகளின் வருமானமும் இருமடங்காக அதிகரிப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

விவசாயிகள் வளமான வாழ்வு வாழ, உற்பத்தித் திறன், சரியான விலை மற்றும் வேளாண் பொருட்களின் பசுமை மாறாமல் பாதுகாத்தல் ஆகியவை முக்கியமாகும்.

வேளாண்மை உற்பத்தியை மட்டும் அதிகரித்தால் போதாது, சரியான நேரத்தில் அதனை சந்தைப்படுத்தி, வேளாண் பெருமக்களின் உழைப்பிற்கு ஏற்ற சரியான விலையை பெற்றுத் தந்தால்தான் அவர்களின் வாழ்வு வளம் பெறும். இதற்காக வேளாண் உற்பத்தியாளர் சங்கங்களை ஊக்குவித்து, வேளாண் பெருமக்களுக்கு நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நபார்டு வங்கியின் மாநில வங்கிக் கடன் கருத்தரங்கில் 2019–2020ஆம் ஆண்டில், தமிழ்நாட்டு மக்களுக்கு 2 இலட்சத்து 21 ஆயிரத்து 900 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்குவதற்கான திட்ட கையேட்டினை இன்று வெளியிடுவதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இத்தொகையில் 1 இலட்சத்து 46 ஆயிரம் கோடி ரூபாய் வேளாண் பெருமக்களுக்காகவும், வேளாண் சார்ந்த

தொழில்களுக்காகவும் ஒதுக்கியிருப்பதை அறிவதில் ஒரு விவசாயி என்ற முறையில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாய கூட்டு பொறுப்புக்குழுக்கள் – பால் பண்ணை குழுக்கள் முதல் பட்டுத்துணி நெசவாளி குழுக்கள் வரை மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. மேலும், இந்த குழுக்கள் நிலுவையின்றி வங்கியில் பெற்ற கடனை திரும்பி செலுத்தி வருகிறது என்று நபார்டு வங்கி கூறியிருப்பது, விவசாயிகளின் பொறுப்புணர்வைக் காட்டுகிறது. அதற்காக விவசாயப் பெருமக்களை நான் மனதார பாராட்டுகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடனுதவி பெறுவதற்கு நபார்டு வங்கி முக்கிய பங்காற்றியுள்ளது. பெண்களின் முகத்தில் மலர்ச்சியும், அவர்களின் வாழ்வில் வளர்ச்சியும் நபார்டு வங்கி ஏற்படுத்தியுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

01.01.2019 முதல் தமிழ்நாட்டில் ஒரு முறை உபயோகித்து தூக்கி எறியக்கூடிய **14** பிளாஸ்டிக் பொருட்களை தமிழ்நாடு அரசு தடை செய்துள்ளது. இதனால் பொதுமக்களிடையே மாற்று பொருட்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. இம்மாற்றுப் பொருட்களை அதிக அளவில் தயாரிக்க மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் தாராளமாக கடனுதவி வழங்கவேண்டும் என்று அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தயாரித்த தொழில் நிறுவனங்களுக்கு, வேறு தொழில்கள் தொடங்குவதற்கும் கடனுதவி அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டும், நபார்டு வங்கி ஏற்பாடு செய்த சுய உதவிக் குழுக்களுக்கு விருது வழங்கும் விழாவில் நான் பங்குகொண்டேன் என்பதை பெருமிதத்துடன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வருடம் தமிழ்நாட்டிலுள்ள 2 இலட்சத்து 72 ஆயிரம் சுய உதவிக் குழுக்களுக்கு கிட்டத்தட்ட 12 ஆயிரம் கோடி ரூபாய் அதாவது சென்ற ஆண்டைக் காட்டிலும் இரு மடங்கு கடன் வழங்க வங்கிகள் திட்டமிட்டிருப்பது, ஏழை பெண்களின் வாழ்வு மேலும் ஒளிர வழிவகை செய்யும்.

கிராமச் சாலைகள் முதல் பாடசாலை வரை, கால்நடை மருத்துவ மையங்கள் முதல் மீன்பிடி துறைமுகங்கள் வரை அனைத்து விதமான ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாடு அரசுக்கு நபார்டு வங்கி ஆண்டுக்கு 2,000 கோடி ரூபாய் அளவில் கடன் அளித்து வருவதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சென்ற வருடம் 30 நாட்களுக்கு மேல் காவேரியில் தொடர்ந்து வெள்ள நீர் வெளியேற்றப்பட்ட காரணத்தால், 182 ஆண்டுகள் பழமையான அணைக்கட்டின் மதகுகள் சேதமடைந்தன. புதிய நீரொழுங்கி அமைக்கும் திட்டத்திற்கு 387.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கென நபார்டு வங்கி 368 கோடி ரூபாய் கடனுதவி வழங்க திட்டமிட்டுள்ளது. வழக்கமாக நபார்டு வங்கியால் தமிழ்நாட்டிற்கென ஒதுக்கீடு செய்யப்படும் நிதி ஒதுக்கீட்டினை காட்டிலும், இந்தத் தொகை கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இது தமிழ்நாட்டின் மீது இந்த வங்கி கொண்டுள்ள அக்கறையை காட்டுகிறது.

மேலும், தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சி ஏற்படுத்த 5 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 500 கோடி ரூபாய் கடன் உதவியை தேசிய பால் வளர்ச்சி கழகத்தின் மூலம் நபார்டு வங்கி வழங்க உள்ளது என்பதை இங்கே கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்களின் நடவடிக்கைகளை நவீனப்படுத்த மின்னணு கொள்முதல் மற்றும் நவீன சேமிப்பு கிடங்குகள் அமைக்க 468 கோடி ரூபாய் அளவில் இந்த வருடம் நபார்டு வங்கி கடனுதவி அளித்துள்ளது.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளிலிருந்து விவசாயிகளையும், மீனவர்களையும் பாதுகாப்பதற்காக பசுமை பருவக்கால நிதியிலிருந்து (Green Climate Fund) நபார்டு வங்கியின் உதவியுடன் 12 திட்டங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்காக நபார்டு வங்கி தமிழ்நாடு அரசுக்கு தொடர்ந்து கடனுதவி அளித்து வருகிறது. இனி வரும் காலங்களிலும், மக்கள் நலனுக்காக செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக அளவில் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி அளிக்க நபார்டு வங்கியை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தியாவின் முதுகெலும்பாக இருக்கும் வேளாண் பெருமக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் வங்கிக் கடன் கொடுத்தல், கடன் பெறும் வழிமுறைகளைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்காக விருது பெறும் வங்கிகளுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி தன் பணிகளை நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு கையாள்வதற்கான விருது பெறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சிறந்த முறையில்

பணியாற்றி முன்மாதிரி வேளாண்மை விற்பனைக் குழுக்கள் விருதினைப் பெற்ற வேளாண்மை உற்பத்தி குழுக்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதங்களில் நான் மார்கழியாக இருப்பேன் என்கிறார் இறைவன். இறைவனே விரும்புகின்ற இந்த மார்கழி திங்களில், இக்கருத்தரங்கினை துவக்கி வைத்து மாநில கடன் திட்டத்தினை வெளியிடுவது மிகவும் பொருத்தமானதாகும். இந்த திட்டத்தின் பயனாக தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழிக்கு இணங்க, வேளாண் பெருமக்களின் வாழ்வில் தை திங்கள் முதல் மென்மேலும் வளமும், வசந்தமும் பெருகும் என்று உறுதியாக நம்புகிறேன். வேளாண் பெருமக்கள் உட்பட இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் எனது இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், நபார்டு வங்கி அலுவலர்களுக்கும் எனது பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 10.01.2019 அன்று*
சென்னையில் நடைபெற்ற NABARD வங்கியின்
மாநில வங்கிக் கடன் குறித்த கருத்தரங்கில் ஆற்றிய உரை

ரூ.121.55 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.8.94 கோடி மதிப்பில் 21 புதிய பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது!

இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றைக்கு மகிழ்ச்சியான நாள். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சான்றோர்கள் சென்னதைப் போல தை பிறந்திருக்கின்றது, நமக்கு வழி பிறந்திருக்கின்றது. அத்தனை ஏழை குடும்பத்திலும் இந்த ஆண்டு பொங்கல் நாளை சிறப்பாக கொண்டாடி மகிழ்கின்ற பொங்கல் இந்த தை பொங்கல். அத்தனை குடும்பங்களிலும் பொங்கல் பொங்கி, மகிழ்ச்சி பொங்க இந்த நன்னாளில் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும் மணிமண்டபம், அந்த மணிமண்டபத்திலே பொன்மனச் செம்மல் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய வெண்கல முழு உருவச்சிலையையும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய வெண்கல

முழு உருவச்சிலையையும் திறந்து வைத்து உங்களைப் காண்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். ஏனென்றால், நான் முதன்முதலில் 1989இல் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டேன். அப்பொழுது மகுடஞ்சாவடி ஒன்றியம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியாக இருந்தது. அந்த காலகட்டத்தில், மகுடஞ்சாவடியில் இருக்கின்ற வாக்காளர்கள் அதிக அளவில் வாக்களித்ததன் காரணத்தினால், அன்றைக்கு வெற்றிபெற்று சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஆகவே, இந்த மண்ணை எப்போதும் மறக்காமல், இந்த மண்ணிலே நிலைத்து நிற்கின்ற அளவிற்கு எனக்கு மிகப் பெரிய இடத்தை அளித்த ஒன்றியம் மகுடஞ்சாவடி ஒன்றியம். அன்றைக்கு நீங்கள் கொடுத்த அங்கீகாரம், இன்றைக்கு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்றேன். இந்த சேலம்–கோவை தேசிய நெடுஞ்சாலையில் மகுடஞ்சாவடியிலும், அரியானூரிலும் அடிக்கடி விபத்து ஏற்படுகின்ற பகுதி. மகுடஞ்சாவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உறுப்பினர் திரு. ராஜா அவர்களும், அரியானூருக்குட்பட்ட வீரபாண்டி சட்டமன்ற தொகுதி சகோதரி மனோன்மணி அவர்களும் வைத்த கோரிக்கையை ஏற்று, அரியானூர், மகுடஞ்சாவடி இரண்டிலும் உயர்மட்டப் பாலம் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியிலே வரவேற்புரையாற்றிய மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கின்ற மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ராஜா அவர்களே, இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.சுந்தரம் அவர்களே, திரு. பன்னீர்செல்வம் அவர்களே, மற்றும் இந்த நிகழ்ச்சியை சிறப்பித்துக் கொண்டிருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி மனோன்மணி அவர்களே, முன்னாள் அமைச்சர் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.செம்மலை அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வெங்கடாசலம்

அவர்களே, திரு. சக்திவேல் அவர்களே, திரு.எஸ்.வெற்றிவேல் அவர்களே, திரு.சின்னத்தம்பி அவர்களே, திருமதி சித்ரா அவர்களே, முன்னாள் தமிழ்நாடு கூட்டுறவினுடைய தலைவர் சகோதரர் ஆர்.இளங்கோவன் அவர்களே, நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற அரசு உயரதிகாரிகளே, நமக்கு சிறப்பு சேர்த்த சமூக நலத்துறை அமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் வி.சரோஜா அவர்களே, இங்கே குழுமியிருக்கின்ற கழகத்தினுடைய நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, விசைத்தறி தொழிலாளர்களே, பொதுமக்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் சட்டப்பேரவை உறுப்பினர் வைத்த கோரிக்கையெல்லாம் நிறைவேற்றித் தந்திருக்கிறோம். இன்னும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அதையெல்லாம் பரிசீலித்து படிப்படியாக இந்த அரசு நிறைவேற்றித் தரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தேசிய நெடுஞ்சாலை கோட்டத்தின் சார்பில், மத்தியசாலை நிதி திட்டத்தின் கீழ், சேலம்–கோவை தேசிய நெடுஞ்சாலையில் சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மகுடஞ்சாவடி–குமாரபாளையம்–எடப்பாடி சாலை சந்திப்பில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சேலம்–கோவை தேசிய நெடுஞ்சாலையில் வீரபாண்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு–அரியானூர் சாலை சந்திப்பில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு புதிய மேம்பாலங்கள் கட்டுகின்ற பணிகளுக்கும்,

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மேட்டூர், எடப்பாடி மற்றும் ஆத்தூர் ஆகிய மூன்று நகராட்சிகளில் ரூபாய் 8 கோடியே 96 இலட்சம்

மதிப்பீட்டில், குப்பை கிடங்குகளில் தேங்கியுள்ள குப்பைகளை உயிரி அகழ்வு (Bio-Mining) முறையில் அகற்றி நிலத்தை மீட்டெடுக்கும் பணிகளுக்கும்,

நெடுஞ்சாலைத்துறையின் நபார்டு மற்றும் கிராம சாலைகளின் சார்பில் நபார்டு ஆர்.ஐ.டி.எப் நிதித் திட்டத்தின் கீழ், எடப்பாடி – மகுடஞ்சாவடி சாலையில், கவுண்டனேரி பகுதியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டும் பணிக்கும்,

வருவாய்த்துறையின் சார்பில் சங்ககிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 2 கோடியே 53 இலட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கும், சேலம் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் ரூ.23 இலட்சத்து 82 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய வட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணிக்கும், சூரமங்கலம் மற்றும் தலைவாசல் ஆகிய பகுதிகளில் ரூ.29 இலட்சத்து 73 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய இரண்டு குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளர் அலுவலகம் கட்டடம் கட்டும் பணிகளுக்கும்,

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ், துட்டம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, நங்கவள்ளி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, சித்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி, வைகுந்தம் அரசு மேல்நிலைப்பள்ளி, சின்னப்பிள்ளையூர் அரசு உயர்நிலைப்பள்ளி, சின்னமநாயக்கன் பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய 7 பள்ளிகளில்

ரூ.10 கோடியே 79 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பள்ளி கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், மாணவ, மாணவியர் கழிப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிகளுக்கும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் சார்பில் சங்ககிரி அரசு தாலுக்கா மருத்துவமனையில் ரூ.3 கோடியே 15 இலட்சத்து 9 ஆயிரம் மதிப்பீட்டில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் கூடுதல் கட்டிடங்கள் கட்டும் பணிக்கும்,

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் மகுடஞ்சாவடியில் ரூ.1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மைய கட்டிடம் கட்டும் பணிக்கும்,

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறையின் சார்பில் சேலம் பெண்கள் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரவியல் குளிர்பதனம் மற்றும் குளிரூட்டல் தொழில் பயிலரங்கம், வகுப்பறை மற்றும் கழிவறை கட்டிடங்கள் கட்டும் பணிக்கும்,

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சேலம் கோட்டத்தின் சார்பில் நகர்ப்புற சுற்றுச்சூழல் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ், ரூ.2 கோடியே 47 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் 33 புதிய மழைநீர் வடிகால் தொட்டி, தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கும்,

என மொத்தம் ரூ.121 கோடியே 55 இலட்சத்து 16 ஆயிரம் மதிப்பீட்டில் 53 புதிய திட்டப்பணிகளுக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் (16.01.2019) மகுடஞ்சாவடியில் நடைபெறுகின்ற இவ்விழாவில் திறந்து வைக்கப்படும் முடிவுற்ற திட்ட பணிகள்

நெடுஞ்சாலைத்துறையின் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டத்தின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் எடப்பாடி – பூலாம்பட்டி

– மேட்டூர் சாலையில் ரூபாய் 99 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய மேம்பாலமும்,

வருவாய்த்துறையின் சார்பில் சங்ககிரியில் ரூ.15 இலட்சத்து 36 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள குடியிருப்புடன் கூடிய குறுநில வட்ட அளவையர் அலுவலக கட்டிடமும்,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் எடப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 40 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய பயணியர் நிழற்கூடம், மின்மோட்டார் பொருத்தப்பட்ட ஆழ்துளை கிணறு, கழிவுநீர் கால்வாய் உள்ளிட்ட பணிகளும்,

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ், ரூ.8 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் நீர்முள்ளிக்குட்டை ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக்கட்டிடமும்,

வனத்துறையின் சார்பில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் மாவட்ட வன அலுவலக இணைப்பு கட்டிடம், சிறுவன மகசூல்

பொருட்கள் விற்பனை வசதி மையம் மற்றும் சமுதாயக் கூடம் கூடுதல் கட்டிடமும்,

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ், கண்ணியாம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி, சக்கரச்செட்டிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் டி.கோனகாப்பாடி அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் ரூபாய் 4 கோடியே 10 இலட்சத்து 53 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், அறிவியல் ஆய்வகம், நூலகம் மற்றும் கழிப்பறைகளும்,

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ், ரூபாய் 58 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்காடு கால்நடை மருத்துவமனை புதிய கட்டிடமும்,

அயோத்தியாபட்டணம், சீலநாயக்கன்பட்டி, மிட்டா அய்யம்பெருமாம்பட்டி, கச்சுப்பள்ளி மற்றும் பைத்தூர் ஆகிய பகுதிகளில் ரூபாய் 1 கோடியே 62 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தக கட்டிடங்களும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையின் சார்பில் மாநில பராமரிப்பு நிதி திட்டத்தின் கீழ், ரூ.24 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்கநாடு துணை சுகாதார நிலைய புதிய கட்டிடமும்,

கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் ரூ.53 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் தளவாய்ப்பட்டி ஒருங்கிணைந்த கலை பண்பாட்டு மையத்திற்கு புதிதாக கட்டப்பட்டுள்ள குடில்கள், வாகன நிறுத்துமிடம், சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பறை கட்டிடங்களும்,

என மொத்தம் ரூபாய் 8 கோடியே 94 இலட்சத்து 84 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 21 புதிய பணிகள் இன்றைய தினம் இந்த

நிகழ்ச்சியின் வாயிலாக பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ், சேலம் மாநகரில் சேலம் மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு அருகில் கந்தம்பட்டி பிரிவில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய மேம்பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ், ஆத்தூர் அம்மம்பாளையம்–நரிக்குறவர் காலனி கி.மீ. 0/6இல் சாலையில் புழுதிக்குட்டை வசிஷ்ட நதியின் குறுக்கே ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் திரும்ப கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ், புழுதிக்குட்டை–சந்துமலை சாலையில் கி.மீ. 5/10இல் புங்கமடுவு அருகில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

மத்திய சாலை நிதி திட்டத்தின் கீழ், அயோத்தியாபட்டினம்–பேளூர்–கிழாக்காடு சாலையில் கி.மீ. 32/6இல் தும்பல் அருகில்

ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது.

என மொத்தம் 4 உயர்மட்டப் பாலப் பணிகளுக்காக ரூ.45.50 கோடி மதிப்பிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டு விரைவாக இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சேலம் மாநகரப் பகுதிக்கு அருகிலே, சேலம் மாநகரில் பஸ் போர்ட் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு, இன்றைக்கு விரைவாக திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலே, முதன் முதலாக பஸ் போர்ட் நம்முடைய பகுதியில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேருந்து வசதிகள் பல்வேறு இடங்களில் வேண்டும் என்று நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்களும், பொதுமக்களும் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, நான் வருவதற்கு முன்பே, அங்கே சிலை திறப்பு விழா, மணிமண்டபம் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அந்த பேருந்து நிலையத்தை திறந்து வைத்திருக்கின்றேன் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஏற்காடுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகள் சென்றுவருவதற்கு வசதியாக, ஒரு சிற்றுந்து அந்த நிகழ்ச்சியின் வாயிலாக விடப்பட்டிருக்கின்றது.

குண்டூருக்கு ஏற்காட்டிலிருந்து, ஒரு சிற்றுந்து வசதி துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. கருமந்துரை பகுதியில் குண்டூருக்கு வாழப்பாடியிலிருந்து ஒரு சிற்றுந்தும் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றது.

விவசாய பெருமக்கள் மற்றும் வியாபாரிகளின் வசதிக்காக ஆத்தூரிலிருந்து கோவை செல்லும் பேருந்தை நீட்டிப்பு செய்து இயக்கப்படுகிறது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், எதிர்க்கட்சியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மு.க.ஸ்டாலின் அவரது கட்சியின் சார்பாக தமிழ்நாட்டில் கிராமம், கிராமமாகச் சென்று மக்களை சந்திப்பதாக ஒரு அறிக்கை வெளியிட்டு, அந்த பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் காலத்திலும் சரி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா காலத்திலும் சரி, கிராமம், கிராமமாகச் சென்று, மக்களை சந்தித்து, குறைகள் நீக்கப்பட்ட அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் எம்.எல்.ஏ ஆக இருக்கிறபொழுது மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் எல்லா கிராமங்களுக்கும் சென்றிருக்கிறேன். சேலம் மாவட்டத்திலுள்ள அத்தனை கிராமங்களுக்கும், பேரூராட்சி பகுதிக்கும், நகராட்சிப் பகுதிக்கும், மாநகராட்சி பகுதிக்கும் நாங்களெல்லாம் சென்று வந்திருக்கிறோம். அப்பொழுது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவை சுமார் 1 கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்தத் திட்டம் போய் சேரவேண்டும் என்று அறிவித்து, எல்லா பகுதிக்கும் நானே நேரடியாகச் சென்று அந்தத் திட்டத்தை துவக்கி வைத்தேன் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.நாங்களெல்லாம்ஏற்கெனவே கிராமம், கிராமமாகச் சென்று, மாண்புமிகு அம்மாவினுடைய ஆணையை ஏற்று, அந்த கிராம மக்களுக்கு என்னென்ன தேவை என்பதையறிந்து, அதை உடனுக்குடன் அம்மாவிடத்திலே தெரிவித்து, அவர்களுடைய குறையை நிறைவேற்றியிருக்கின்றோம். அம்மாவின் மறைவிற்குப் பிறகும், அதையே தொடர்ந்து இன்றைக்கு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அனைத்து மக்களுடைய அடிப்படை தேவைகளை முழுமையாக நிறைவேற்றுகின்ற அரசு

அம்மாவினுடைய அரசு என்பதை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் கிராமம், கிராமமாக போனாலும் சரி, நடைபயணம் மேற்கொண்டாலும் சரி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏராளமான திட்டங்களை மக்களுக்கு தந்திருக்கின்றது. அவர் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார். கிராமப்புற, நகரப்புற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்கின்ற பொறுப்பு உள்ளாட்சி அமைச்சரிடத்தில் இருந்தது. அப்பொழுது, எத்தனை கிராமத்திற்கு நீங்கள் சென்றீர்கள் ? எத்தனை மக்களை பார்த்தீர்கள் ? எத்தனை மக்களுக்கு என்னென்ன திட்டங்களை கொடுத்தீர்கள் ? எதையும் செய்யவில்லை, இதெல்லாம் போலி விளம்பரம். இவர் ஆட்சியில், பதவியில் இருந்தபொழுது, எனக்குத் தெரிந்த அளவில் இவர் கிராமத்திற்கு சென்றதுபோல் தெரியவில்லை. மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் எத்தனை கிராமங்களுக்கு வந்திருக்கிறார் ? ஆளுங்கட்சியாக இருக்கும்பொழுதே மக்களை பார்க்கவில்லை, இப்பொழுது எதிர்க்கட்சியாகி மூன்று வருடங்கள் ஆகிறது, எங்கு போய் மக்களை பார்த்தீர்கள் ? இப்பொழுது நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்காக, இவர்கள் கிராம சபை கூட்டம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுகின்ற நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்களை எந்த அரசியல் தலைவராலும் ஏமாற்ற முடியாது என்பதை தெளிவாக சொல்லிக் கொள்கிறேன். மக்களுக்கு யார் நன்மை செய்வார்கள் என்பது மக்களுக்குத் தெரியும்.

பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் கட்சியை துவக்கியதற்கு காரணமே கிராமத்திலே இருந்து நகரம் வரை ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து திட்டங்களும் சேரவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக இயக்கம். மக்களுக்கு நாங்கள்

தொடர்ந்து சேவை செய்து கொண்டிருக்கின்றோம். இருபெரும் தலைவர்கள் ஏராளமான திட்டங்களை வாரி வழங்கியிருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் மட்டும் செய்த சாதனைகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இந்த ஆட்சியில் எதுவும் கிடைக்கவில்லை என்று தவறான குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு பதிலளிக்கின்ற வகையில் இன்றைக்கு அம்மாவினுடைய அரசும், அம்மா அவர்கள் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த காலங்களிலும் சேலம் மாவட்டத்தில் மட்டும் செய்த சாதனைகளை குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தினையில் உதித்த திருமண உதவித் திட்டம் என்பது, ஏழை, எளிய பெண்களுக்கு உரிய நேரத்தில் திருமணம் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில்தான். திருமண உதவித் திட்டத்தின் கீழ், 44,975 ஏழை பெண்களுக்கு இதுவரை 205.50 கிலோ தங்கம் கொடுத்திருக்கிறோம். திருமணத்திற்கு ஆகின்ற செலவிற்கு, அம்மாவினுடைய அரசு ரூ.159 கோடியே 93 இலட்சம் திருமண உதவியாக கொடுத்திருக்கிறது.

விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றை அனைத்து தகுதியான குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

12ஆம் வகுப்பு பயின்ற 1 இலட்சத்து 78 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு 273.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினி வழங்கியிருக்கிறோம். இதுவரையில் அம்மா

அவர்கள் 37 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினியை கொடுத்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக அம்மாவினுடைய அரசு 15 இலட்சம் பேருக்கு கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இறுதி செய்யப்பட இருக்கிறது. மொத்தம் 52 இலட்சம் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி கொடுப்பதன் மூலமாக, உலகத்தரமான கல்வி நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு கிடைக்கிறது.

கிராமத்திலே இருக்கின்ற விவசாய தொழிலாளி பெண்களுக்கு ஆடுகள் கொடுக்கின்றோம். நம்முடைய மாவட்டத்தில் மட்டும் 42 ஆயிரம் பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் கொடுத்திருக்கின்றோம்.

சேலம் மாவட்டத்தில் மட்டும் 1,874 கோடி ரூபாயை 73,896 மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கொடுத்திருக்கிறோம்.

பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், நம்முடைய மாவட்டத்தில் மட்டும், சுமார் 16,000 பயனாளிகளுக்கு 270 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பசுமை வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம். அதேபோல 1,490 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். பாரதப் பிரதமர் வீடுகட்டும் திட்டத்தின் கீழ், 11,940 நபர்களுக்கு 203 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

81,233 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியாக 408.72 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

4 இலட்சத்து 11 ஆயிரத்து 110 விவசாயிகளுக்கு சுமார் 1,998 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

3,793 மாற்றுத்திறனாளிகளுக்கு 14.42 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் மூலமாக அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா பரிசு பெட்டகம்,

பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் வங்கி, அம்மா உணவகம், மெக்கா புனித யாத்திரைக்கு 1,000 கோடி ரூபாய் மானியம், இப்படி நிறைய திட்டங்களை அம்மாவினுடைய அரசு செயல்படுத்தியிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருந்த சில பகுதிகளும் இன்று கூட்டுக் குடிநீர் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கும் நிலையான, பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கொடுக்கப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரபாண்டி பகுதியில் உள்ள மக்களுக்கும் குடிநீர் பிரச்சினை தீர்க்கும் வகையில், நிலையான, பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் கொடுக்கப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காப்பீட்டுத் திட்டம் 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க அறிவித்த அரசு அம்மாவினுடைய அரசு.

மருத்துவத் துறையிலே எண்ணற்ற சாதனைகளை படைத்திருக்கிறது. இரண்டு கையும் இல்லாத ஒருவருக்கு இறந்தவரது கைகளை எடுத்து பொறுத்தி, அரசு மருத்துவமனை ஒரு சாதனை படைத்திருக்கிறது.

கால்நடைகள் வளர்ப்பு சிறப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக ஆங்காங்கே கால்நடை மருந்தகங்களை அம்மா அரசு செய்து கொடுத்திருக்கிறது. தலைவாசல் கூட்டுரோடு பகுதியில் இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு, ஒரு கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையம் உருவாக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளிய தாய்மார்கள் கோழி வளர்க்க வேண்டும் என்பதற்காக கோழி கொடுக்கும் திட்டத்தையும் நான் கொண்டு வந்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்து, இன்றைக்கு அம்மாவின்

அரசுதான் சாதனைகளை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சேலத்திலிருந்து சிங்கப்புள்ளி வரை உள்ள நான்கு வழிச்சாலை, எட்டு வழிச்சாலையாக அகலப்படுத்தப்படும். இதற்காக, ஒரு கிலோ மீட்டருக்கு 18 கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்க இருக்கின்றது. இந்த விரிவாக்கத்திற்காக, 1,931 கோடி ரூபாய் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உங்களுடைய அரசு, ஏழை, எளிய மக்களுடைய அரசு, மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு.

இன்றைக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம், வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு தவறான, பொய்யான செய்தியை இன்றைக்கு பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அத்தனையையும், உங்களுடைய மகத்தான ஒத்துழைப்போடு தவிடுபொடியாக்கப்படும் என்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்து, இந்த தை பொங்கல் நாளிலே அனைவரும் பொங்கல் வைத்து, இந்த தைத் திருநாளை சிறப்பாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து, அம்மாவின் அரசு என்றைக்கு உங்களுக்கு துணை நிற்கும், உங்களுக்காக சேவை செய்கின்ற அம்மாவின் அரசு என்பதை சுட்டிக்காட்டி, இந்த மகுடஞ்சாவடி ஒன்றியம் அம்மாவினுடைய கோட்டை, அது எப்பொழுதும் அம்மாவினுடைய அரசிற்கு துணை நிற்கும், எங்களுக்கும் துணை நிற்கும். என்னை இந்த நிலைக்கு உயர்த்திய இந்த ஒன்றியத்தில் இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 16.01.2019 அன்று*
சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடியில் நடைபெற்ற
அரசு விழாவில் ஆற்றிய உரை

தமிழன் என்று சொன்னாலே வீரத்திற்கு புகழ் பெற்றவர்கள் என்பதை இந்த ஜல்லிகட்டின் வாயிலாக உணர்த்தப்படுகிறது!

ஜல்லிக்கட்டு திருவிழாவை காண வந்துள்ள அத்தனை பேருக்கும் எனது முதற்கண் வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன், தமிழனென்றால் அதற்கு தனிப் பெருமை உண்டு. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள் அதன்படி தை பிறக்கின்றபோதே ஜல்லிக்கட்டு விளையாட்டும் துவங்கிவிடுகிறது. இது ஒரு வீர விளையாட்டு, இதனை நம் முன்னோர்கள் நமக்கு வழங்கிவிட்டு சென்றிருக்கிறார்கள். இவ்விழா நம் இளைஞர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் தொன்றுதொட்டு

காலங்காலமாய்நடைபெற்றுவருகிறது.தமிழகத்தில் அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு ஆகிய பகுதிகளில் புகழ்பெற்று விளங்கிய ஜல்லிக்கட்டானது, இப்பொழுது விராலிமலையிலும் அதற்கு இணையாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் ஜல்லிக்கட்டு ஒரு சாதாரண விளையாட்டு அல்ல, இது காளையை அடக்கக்கூடிய வீர விளையாட்டு ஆகும். இங்கு காளைகளை அடக்கக்கூடிய வீரர்கள் என்முன்னே நின்று கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய விவசாய குடிமக்கள் தம் குழந்தையைப் போல் வளர்த்த இந்தக் காளைகளை இந்த வீர விளையாட்டு வீரர்கள் அடக்க தயாராக இருக்கின்றார்கள். தமிழன் என்று சொன்னாலே வீரத்திற்கு புகழ் பெற்றவர்கள் என்பதை இந்த ஜல்லிக்கட்டின் வாயிலாக உணர்த்தப்படுகிறது. இன்று இந்த நிகழ்ச்சியில் ஆயிரம் காளைகள் கலந்துகொண்டு உள்ளன. இங்கு நடைபெறும் ஜல்லிக்கட்டு விழாவானது மிகப் பெரும் விழாவாக உருவெடுக்கப்பெற்றுள்ளது. இந்த காளைகளை அடக்குவதற்காக

600 வீரர்கள் திரண்டு நிற்கின்றார்கள். அவர்களுக்கும் இந்நேரத்தில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாபெரும் ஜல்லிக்கட்டு திருவிழா உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, பாதுகாப்புடன் விதிமுறைகளை பின்பற்றி நடைபெற்று வருகிறது. உச்சநீதிமன்றம் இவ்விளையாட்டிற்கு என்னென்ன விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதோ அதன்படி நடைபெற்று வருகிறது. போட்டியில் பங்குபெறும் வீரர்கள் தவிர முதல் முறையாக பார்வையாளர்களுக்கும் காப்பீடு செய்யப்படுகிறது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நானும் ஒரு விவசாயி என்ற முறையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாபெரும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை மாவட்ட மக்கள் கண்டுகளிக்க இரவு பகல் பாராது கடந்த பத்து நாட்களாக ஏற்பாடு செய்து மேலும், இந்த நிகழ்ச்சியில் பல்வேறு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை பங்கேற்கச் செய்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுக்கு பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்களும் கலந்துகொள்வார் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 20.01.2019 அன்று*
புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் நடைபெற்ற
ஜல்லிக்கட்டு விழாவில் ஆற்றிய உரை.

நெல்லேரு உழவருக்கும், சொல்லேரு புலவருக்கும் விழா எடுக்கும் பண்பாடு தமிழருக்கே உரித்தாகும்!

ஏழைகளின் உள்ளங்களில் விளக்காய் எரியும் தீபமாய், அருந்தமிழ் மண்ணில் வானுயர உயர்ந்து நிற்கும், அறியாமை இருளகற்றும் திருவள்ளுவர் என்னும் அறிவுத் திருக்கோயிலை வணங்குகிறேன்.

பூமிக்கு வந்த புது விடியலாய், புண்ணிய நதியாய், தர்மத்தின் மறு பிறவியாய், தமிழர்கள் அத்தனை பேரின் இல்லங்களிலும் விளக்காய் எரியும் தீபமாய், அருந்தமிழ் மண்ணில் ஒரே தாயாக வந்த தாய்மையின் உருவாய் இருக்கும் அம்மா என்னும் தெய்வத்தை வணங்குகிறேன். “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்று தேசிய கவி பாரதியால் போற்றப்பட்ட திருவள்ளுவரின் பெயரில் நடைபெறும் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு தன்னிகரில்லா நம் தமிழ்மொழியைக்

காக்கவும், வளர்க்கவும், வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் அத்தனை பேரையும் ஒரே இடத்தில் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் மரியாதைக்குரிய திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. க.பாண்டியராஜன் அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார் அவர்களே! நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் திரு.கே.எ.செங்கோட்டையன் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் திருமதி டாக்டர் வி.சரோஜா அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே! மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. வெங்கடேஷ்பாபு அவர்களே! திரு. விஜயகுமார் அவர்களே! டாக்டர் ஜெயவர்த்தன் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு. விருகை ரவி அவர்களே! திரு. தி.நகர் சத்யா அவர்களே! திரு. நடராஜன், முன்னாள் டிஜிபி அவர்களே! தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய திருமதி வளர்மதி அவர்களே!

இந்நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செலாளர் திரு. இரா. வெங்கடேசன் அவர்களே! மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற தமிழ்நாடு அரசின் சிறப்பிற்குரிய விருதுகளை பெற வந்து அமர்ந்திருக்கிற முன்னாள் அமைச்சர் திரு.பொன்னையன் அவர்கள் உட்பட விருது பெறவிருக்கிற அறிஞர் பெருமக்களே! அரசு அலுவலர்களே! தமிழறிஞர் பெருமக்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! இளைஞர்களே! மாணவ, மாணவிகளே! பரத நாட்டியக் கலைஞர்களே! பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் உயிருக்கும் மேலான தமிழை அன்னைத் தமிழ், ஆட்சித் தமிழ், இனிமைத் தமிழ், ஈகைத் தமிழ், உயிர்த் தமிழ், ஊக்கத் தமிழ், தென் தமிழ், தேன் தமிழ், ஏழிசை இனிமைத்தமிழ், ஒண்தமிழ், ஓது தமிழ், கன்னித் தமிழ், சங்கத் தமிழ், செந்தமிழ், நற்றமிழ், மதுரத் தமிழ், வளர் தமிழ், முத்தமிழ் என்றெல்லாம் அளவில்லா அடைமொழிகளோடு போற்றி புகழுகின்ற நம் தாய்மொழிக்கு "அறிவியல் தமிழ்" என்று ஒரு அடைமொழியை தந்து "அம்மா" என்று உறவுத் தமிழாய் உயர்ந்து நின்றவர் நமது புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தமிழர்களிடையே தமிழாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நமது அம்மா அவர்கள். தமிழ் வளர்ச்சியை தலைத் தொண்டாக ஏற்று செயல்பட்டவர் மாண்புமிகு "அம்மா" அவர்கள்.

தமிழுக்குத் தொண்டு செய்வதென்றால், தமிழை வளர்க்கவும், தமிழை பாதுகாக்கவும் எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கின்ற தமிழ் அறிஞர்களை சிறப்பிப்பதாகும். அவர்களுடைய படைப்புகளை நாட்டுடமை ஆக்குவதும், அவர்களை நினைவுகூரும் வகையில்

அவர்களது பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாடுவதும், அவர்களுடைய திருவுருவச் சிலைகளுக்கு மாலையிட்டு மரியாதை செலுத்துவதும் தமிழறிஞர்களை சிறப்பிப்பதாகும்.

ஒரு நாட்டின் விடுதலைக்கு பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு எந்த அளவிற்கு அரசு சிறப்பு செய்து வருகிறதோ, அதே அளவிற்கு, தமிழ் மொழியின் விடுதலைக்கு பாடுபட்ட மொழிப்போர் தியாகிகளையும், அம்மாவின் அரசு நினைவுகூர்ந்து சிறப்பித்து வருகிறது. ஒரு நாட்டுக்கே அடையாளம் "மொழி" என்கிற பொழுது அது உயிரினும் மேலானதாக காக்கப்பட வேண்டும் என்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக இருக்கிறது என்பதை, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளின் எண்ணிக்கையையும், அதற்காக அரசு செய்யும் செலவினங்களையும் கணக்கிட்டுப் பார்த்தாலே நன்றாகத் தெரியும்.

தமிழின் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலும் பெறும் பங்காற்றும் தமிழறிஞர்களுக்கு இதுவரை 65 விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 5 விருதுகள் போக 60 விருதுகளை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினால் அறிவித்தவையாகும். இதிலிருந்து அம்மாவின் அரசு, தமிழர்கள் மீதும், தமிழறிஞர்கள் மீதும் கொண்டிருக்கும் அதீத ஈடுபாட்டை நாம் நன்கு அறிவோம்.

தமிழர் திருநாளாகக் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையில் தை மாதத்தின் இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாளாக நாம் கொண்டாடி மகிழ்கிறோம். தெய்வப் புலவர் திருவள்ளுவரை நினைவுகூரும் நாளாகவும், திருக்குறள் என்னும் நீதி நெறி நூலை மானுடத்திற்கு வழங்கி தமிழரின் பெருமையை உலககெங்கும் பரவச்செய்த திருவள்ளுவருக்கு நன்றி நல்கிடும் விழாவாகவும் இத்திருநாளை நாம் கொண்டாடுகின்றோம்.

'தமிழ்' மொழி தமிழருக்கு அடையாளம் என்றால்,
திருக்குறள் தமிழருக்கு முகமாக இருக்கிறது.

தமிழை நேசித்தால், பிறந்த நாட்டையும், வணங்கும் தெய்வங்களையும், ஈன்ற பெற்றோரையும் நேசிப்பதற்கும், வணங்குவதற்கும் சமம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தாய்மொழியிற் சிறந்த வேறு மொழியுமில்லை' என்பதை

நமக்கு நினைவு படுத்தவே இப்படிப்பட்ட நாட்கள் அனுசரிக்கப்படுகின்றன.நெல்லேரு உழவருக்கும், சொல்லேரு புலவருக்கும்விழா எடுக்கும் பண்பாடு தமிழருக்கே உரித்தாகும்.

உலகம் இயங்குவதற்கும், மக்கள் வாழ்வதற்கும் மழையும், கதிரவனும் மிகவும் இன்றியமையாததாகும் என்பதை உணர்ந்த தமிழர், பொங்கல் பண்டிகையின் முதல் நாள் மழையையும், இரண்டாம் நாள் கதிரவனையும் போற்றுவது என்றெண்ணி அவற்றை வணங்குகிறார்கள். அதன் விளைவுதான் "மாமழை போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று சிலப்பதிகாரம் முகப்பு பாடல் வழியாக வணங்கியது.

"சுழன்றும் ஏர் பின்னது உலகு" என்று

உழவின் சிறப்பைக் கூறினார் திருவள்ளுவர்.

தொழிலுக்கு முதன்மையான உழவுத் தொழிலையும், தமிழ்ப் புலவரில் முதன்மையானதாக கருதப்படுகின்ற திருவள்ளுவரையும் நினைவுகூரும் வகையில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

வாழ வகை சொல்லிய வள்ளுவரையும், வாழ உணவு கொடுக்கும் உழவரையும் நன்றிப் பெருக்கோடு நாம் போற்றும் தினம்தான் இந்த திருவள்ளுவர் திருநாள். உழவனோடு சேர்ந்து நமக்காக உழைக்கும் மாடுகளுக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம்.

எந்த நூல்கள் மனிதர்களின் மனதோடு பேசி அவர்களுக்குள்ளே தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்துகின்றனவோ, அவைதான் உலகத்தில் தலை சிறந்த நூல்களாக, படைப்புகளாக மதிக்கப்படுகின்றன, போற்றப்படுகின்றன.

அவற்றையும் மிஞ்சும் அளவிற்கு ஒரு நூல் போற்றி வணங்கப்படுகிறது என்றால் அது திருக்குறள் மட்டும்தான். இந்நூல் மட்டும் தான் உலகில் உள்ள அத்தனை மனிதர்களாலும் வணங்கப்படுகிறது. மற்ற நீதி நூல்களின் பின்னணியில் மதங்களும், சமயங்களும் இருக்கின்றன. திருக்குறளுக்கு அப்படி எந்த பின்புலமும் இல்லை. கடவுள் வாழ்த்து என்ற ஒரு அதிகாரம் இருக்கிறதே ஒழிய, எந்த மதக்கடவுளும் தனித்து வாழ்த்தப்படவில்லை. அதுதான் திருக்குறளின் மகிமை. அதனால்தான் திருக்குறளை உலகப் பொதுமறை என அழைக்கின்றோம்.

மகாகவி பாரதியார் அவர்கள், ‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்’ என்று கூறினார்.

தமிழ் மொழி அறியாத, வெளிநாட்டில் பிறந்து தமிழை ஆராய்ச்சி செய்த ராபர்ட் கால்டுவெல், ‘தமிழ் மொழி தனித்தியங்கக் கூடிய வல்லமை உடையது’ என்று கூறுவது தமிழ் மொழிக்கு மேலும்

சிறப்பு. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித்தன்மை உண்டு. ஆனால், நம் தமிழ் மொழிக்கு இருக்கும் சிறப்புகள் வேறு மொழிகளுக்கு நிச்சயமாக இருக்காது.

“தான் சிதையாமல் மற்ற மொழிகளை வளர்க்கும் தனித்தன்மையும் ஆற்றலும் தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ் மொழியின் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு செல்லும் வகையிலும், இதுகுறித்து ஆராய்ச்சிக் கல்வியில் தமிழ் இலக்கியம், இலக்கணம், பண்பாடு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளும் வகையில் மாணவர்களை உருவாக்குவதற்காகவும், அமெரிக்க நூலகங்களிலும், ஆவணக் காப்பகங்களிலும் உள்ள தமிழ் தொடர்பான ஆவணங்களை ஆய்வுக்கு உட்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகவும் உலகிலேயே தொன்மையான மொழியாக விளங்கும் தமிழ் மொழிக்கு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு 10 கோடி ரூபாய் வழங்கியிருக்கிறது.

மேலும், சிறப்புமிக்க பல வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைக்கப்படும் என்று நான் கடந்த 8ஆம் தேதி சட்டசபையில் அறிவித்துள்ளேன்.

சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் தமிழ் மொழி தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்றால், பொருள் தேடி கடல் கடந்து சென்று குடியேறிய நாடுகளிலும், தமிழர் என்ற தன் அடையாளத்தை, தன் பண்பாட்டை மறக்காமல் இருக்கும் தமிழர்களின் மொழியுணர்வு தான் அதற்குக் காரணம்.

கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி மாணவர்களால் பதிவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனைத்தையும் ஒரே தளத்தில் வெளியிட்டு தமிழர்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு அரசு புதிய திட்டத்தையும் அறிவித்து அதற்கான பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டது என்றும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்பதையே தாரக மந்திரமாக ஏற்று, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், உலகில் அதிக மக்கள் பேசும் சீனம், அரபு, கொரிய மொழிகளில் திருக்குறள், ஆத்தி சூடி, பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை மொழிபெயர்க்கச் செய்து வெளியிட்டார்கள்.

இன்றைக்கு தமிழ் மொழி நீதி நூல் படைப்புகளாக உலகம் முழுவதும் பரவி தமிழுக்கு மகுடம் சூட்டியிருப்பதற்கு முழுமுதற்காரணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான். சென்னை உயர்நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிற மொழியில் உள்ள அரிய படைப்புகளை தமிழிலும், தமிழில் உள்ள அரிய நூல்களை பிறமொழிகளிலும் மொழிபெயர்க்கச் செய்வதன் மூலம் தமிழை மேலும் வளர்க்க முடியும் என்று எண்ணித்தான் ‘மொழி பெயர்ப்பாளர் விருது’ உருவாக்கி வருடாவருடம் தமிழ் புத்தாண்டு விழாவில் 10 சிறந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கு விருது வழங்கினார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசும் அதனை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

எந்த நாட்டிலே புலவர்கள் ஆதரிக்கப்படுகிறார்களோ, அந்த நாட்டில்தான் மொழி வளரும். மொழி வளர்ந்தால் அந்த நாடு வளரும். ஆகவே தான், புலவர்களை ஆதரிக்க வேண்டும், தமிழ் மொழியை வளர்க்க வேண்டும், அவர்களுடைய படைப்புகளையெல்லாம் ஆதரித்து காப்பாற்ற வேண்டும் என பேரறிஞர் அண்ணா அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் ‘விழிபோல எண்ணி நம் மொழி காக்கவேண்டும்’ என்ற எண்ணத்தில் தமிழறிஞர்களுக்கு புதிய, புதிய விருதுகளை அளித்து சிறப்பித்தார்கள்.

➢ பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டையும்,

➢ மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டையும்,

➢ மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டையும் நடத்தி தமிழுக்கு புத்துணர்ச்சி ஊட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழுக்கென்று தஞ்சையில் தமிழ் பல்கலைக்கழகத்தை தொடங்கி

வைத்தார்கள். மதுரையில் உலகத் தமிழ் சங்கம் நிறுவ வேண்டும் என்று அறிவித்தார்கள். அதை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சுமார், 38 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்ட வளாகமாக செயல்படுத்தினார்கள்.

மேலும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ஒய்வூதியத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது. ஒய்வூதியம் பெறும் அறிஞர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டது. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சு, கவிதை போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இலக்கியத்தில் ஆர்வம் மிக்க 200 கல்லூரி இளைஞர்களை ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து ‘இளந்தமிழர் இலக்கியப் பட்டறை’யின் மூலம் அவர்களுக்கு மொழி புத்துணர்வு அளிக்கப்படுகிறது.

செந்தமிழ் சொற்பிறப்பியல் பேரகராதியை காலத்திற்கேற்றவாறு செப்பனிட்டு, புதிய கலைச் சொற்களை சேர்த்தும், புழக்கத்தில் இல்லாத பழைய சொற்களை கழித்தும், திருந்திய பதிப்பாக சுமார் 8,000 பக்கங்களைக் கொண்ட 7 தொகுப்புகளாக வெளியிடப்பட இருக்கிறது. இந்தப் பேரகராதி உலகத் தமிழர்கள் அனைவருக்கும் பயன்படும்வகையில் அமைந்திருக்கும் என்று நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

2018–2019ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி தமிழறிஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூ.3,000/–லிருந்து ரூ.3,500/–ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. குறள் பரிசுத் திட்டத்தின் கீழ், பரிசு பெறும் மாணவர் எண்ணிக்கையை 50லிருந்து 70ஆக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறேன்.

தஞ்சாவூர் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ள அரிய நூல்களை மின்னாக்கம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மெரினா வளாகத்தில் தொல்காப்பியர் சிலை அமைக்கும் பணி நடந்து வருகிறது. முன்னாள் அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன், திரு.மேலாண்மை பொன்னுசாமி மற்றும் முனைவர் பொன்.சவுரிராஜன் ஆகிய தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

மேலும், மறைந்த திரு.ஐராவதம் மகாதேவன் அவர்கள் எழுதிய நூல்களை நாட்டுடைமையாக்க அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும் தமிழுக்கும், தமிழறிஞர்களுக்கும் பல்வேறு திட்டங்கள் மூலம் நற்பணி ஆற்றி வந்தார்கள். அவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டிலிருந்து சிறிதும் பிறழாமல், நாங்கள் தமிழ் மொழி தொண்டாற்றி வருகிறோம்.

அதன் வெளிப்பாடாகத்தான் இந்த இனிய திருவள்ளுவர் திருநாளில் தமிழ் தொண்டாற்றி வரும் 7 தமிழறிஞர்களுக்கும், சமுதாயத் தொண்டாற்றி வரும் 2 பொதுநலவாதிகளுக்கும் இந்த மாபெரும் சபையில் பலருடைய பாராட்டுகளோடும், வாழ்த்துகளோடும் நான் விருதுகள் வழங்கி சிறப்பித்திருக்கிறேன்.

திருவள்ளுவரின் நெறிகளைப் பரப்பும் நோக்கில் செயல் புரிந்து திருவள்ளுவர் விருது பெற்ற முனைவர் திரு. அன்வர் பாட்சா அவர்களுக்கும், சமூக நீதிக்காக சிறந்த பங்காற்றி தந்தை பெரியார் விருது பெற்ற முன்னாள் அமைச்சர் திரு.சி. பொன்னையன் அவர்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கு தொண்டு செய்து அண்ணல் அம்பேத்கர் விருது பெற்ற மருத்துவர் ராமகுரு அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனையின்படி

சமுதாய முன்னேற்றத்திற்காக பாடுபட்டு பேரறிஞர் அண்ணா விருது பெற்ற திரு. மு. அய்க்கண் அவர்களுக்கும்,

பெருந்தலைவர் காமராசரின் அடிச்சுவட்டில் மக்களுக்கு தொண்டாற்றி பெருந்தலைவர் காமராசர் விருது பெற்ற திரு. பழ.நெடுமாறன் அவர்களுக்கும், மகாகவி பாரதியின் படைப்புகளில் உள்ளவற்றை நுட்பமாக கவிதைகள் மற்றும் உரையாடல்கள் மூலம் பாரெங்கும் பரப்பி மகாகவி பாரதியார் விருது பெற்ற பாவரசு திரு. மா.பாரதி சுகுமாறன் அவர்களுக்கும்,

பாவேந்தரின் கவி மரபினை போற்றும் வகையில் படைப்புகளை வழங்கிய கவிஞர் என்ற முறையில் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற கவிஞர் தியாரூ அவர்களுக்கும், சிறந்த எழுத்தாளராக தேர்வு பெற்ற தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெற்ற முனைவர் கு. கணேசன் அவர்களுக்கும், தகைசால் தமிழறிஞராக விளங்கி முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதுபெற்ற திரு. சூலூர் கலைப்பித்தன் அவர்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பிலும் எனது சார்பிலும் மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்து, நீங்கள் இன்னும் பல உயரிய விருதுகளைப் பெற்று நீண்ட நெடுங்காலம் தமிழ் வாழ்வதற்காக நீங்கள் வாழ வேண்டுமென்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்* ***21.01.2019*** *அன்று*
சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற
திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசின்
விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பான முறையில் செயல்படுத்துப்பட்டு வருகிறது!

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

அனைவருக்கும் வணக்கம்.

புதிதாக துவக்கப்பட்டுள்ள அப்போலோ புரோடான் கேன்சர் சென்டரை துவக்கி வைத்த மாண்புமிகு பாரத துணை குடியரசு தலைவர் திரு.வெங்கையா நாயுடு அவர்களே! மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களே! நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத் தலைவர் திரு.ஜி. நாகேஸ்வரராவ் அவர்களே! அப்போலோ மருத்துவமனைகள் குழுமத் தலைவர் டாக்டர் பிரதாப் சி ரெட்டி அவர்களே! அடையாறு புற்றுநோய் மருத்துவ நிலையத் தலைவர் டாக்டர் வி. சாந்தா அவர்களே! L & T நிறுவன நிர்வாக தலைமை செயல் அலுவலர் மற்றும் நிர்வாக இயக்குநர்

திரு.எஸ்.எம். சுப்பிரமண்யன் அவர்களே! IBA தலைமை செயல் அலுவலர் திரு. ஆலிவர் லெக்ரெய்ன் அவர்களே! அப்போலோ மருத்துவமனைகள் குழும இயக்குநர்களே மற்றும் மருத்துவர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக சிறந்து விளங்கி வருகிறது. தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களை செயல்படுத்துவதிலும், நோய்களைத் தடுப்பதற்காகவும் பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு திறம்பட செயல்படுத்தி வருகிறது.

உலகத்தரம் வாய்ந்த சிகிச்சை அளிக்கும் வகையில், மருத்துவ கட்டமைப்பை வலுப்படுத்துதல், மருத்துவ மனித வளத்தை பெருக்குதல் போன்றவைகளில் மாண்புமிகு அம்மாவின் அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. இதன் காரணமாக இந்தியாவில் உயரிய மருத்துவ சேவை பெற வசதியுள்ள இடமாக தமிழ்நாடு கருதப்படுகிறது. வளர்ந்த நாடுகள் அடைந்துள்ள சுகாதார குறியீடுகளை, 2023ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்ற இலக்கு, புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட “தொலைநோக்கு திட்டம் 2023”–இல் சேர்க்கப்பட்டுள்ளது. தாய்மார்கள் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் போன்ற சுகாதார குறியீடுகளில் ஐக்கிய நாடுகளின் மில்லினியம் வளர்ச்சி இலக்குகளை ஏற்கெனவே அடைந்த நிலையில், மற்ற மாநிலங்களுக்கு முன்னதாகவே தேசிய இலக்குகளையும் தமிழ்நாடு அடைந்துள்ளது.

பொருளாதார ரீதியாக பின்தங்கிய மக்களுக்கும் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கும் அனைத்து வசதிகளுடன், உலகத் தரம் வாய்ந்த மருத்துவ உதவிகள் கிடைக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை 2012இல் செயல்படுத்தினார்கள். தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 27.73 இலட்சம் பயனாளிகள் 5,426.74 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில், அரசு மருத்துவமனைகள் மட்டும் 1,969.14 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுள்ளன என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நமது மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு கவனம் செலுத்தி வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 221.30 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டதோடு, 51 புதிய தாலுகா மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி, 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 190.37 கோடி ரூபாய் செலவில் 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி, அறுவை சிகிச்சை வசதி போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மனித வளத்தை பெருக்குவதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த அக்கறை கொண்டு செயல்பட்டதினால் கடந்த 8 ஆண்டுகளில் 5 புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்கியும், ஏற்கெனவே செயல்படும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்பு இடங்களை அதிகரித்தும், 1,000 எம்.பி.பி.எஸ். இடங்கள்

அதிகரிக்கப்பட்டுள்ளன. இது தவிர, **606** முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பு இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழ்நாடு எப்பொழுதுமே மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறது. கடந்த 4 வருடங்களாக தமிழ்நாடு தேசிய அளவில் மிகச் சிறப்பாக செயல்படும் மாநிலம் என்ற விருதினை பெற்று வருகிறது. சமீபத்தில், சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு, கைகள் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்பது ஒரு சாதனையாகும்.

புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு, அரசு மருத்துவமனைகளை வலுப்படுத்தி வருகிறது. புற்று நோய் உட்பட தொற்றா நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் புற்றுநோய்களுக்கான சிகிச்சை அளிக்க காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

மாநில அளவில் புற்று நோய் பாதிப்புள்ளவர்களை பதிவு செய்வதற்கு, மாநில அரசுடன் இணைந்து செயல்பட, அடையாறு புற்றுநோய் சிகிச்சை மையம் தலைமை மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் அரசு அண்ணா புற்றுநோய் சிகிச்சை மையம் ஏற்கெனவே மண்டல புற்றுநோய் சிகிச்சை மையமாக இயங்கி வருகிறது. இத்துடன் மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் **60** கோடி ரூபாய் செலவில் 4 மண்டல புற்றுநோய் சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய புற்றுநோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அரசு மருத்துவக்

கல்லூரிகளில் புற்றுநோய் சிகிச்சை பிரிவுகள் வலுப்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. புற்றுநோய் அறிகுறிகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக 165 கோடி ரூபாய் செலவில் லீனியர் ஆக்ஸிலரேட்டர்களும், 79 கோடி ரூபாய் செலவில் கோபால்ட் கதிர்வீச்சு சிகிச்சை கருவிகள் போன்ற நவீன மருத்துவக் கருவிகள் அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் ஏழை மக்களுக்கு தரமான, உயரிய சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் அளிக்கப்படுகின்றது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து செயல்படும் 710 தனியார் மருத்துவமனைகளில் அப்போலோ மருத்துவமனையும் இணைந்து மருத்துவ சேவை ஆற்றி வருகிறது. இந்தியாவில் பிற மாநிலங்களில் மட்டுமல்லாமல், உலகின் பல நாடுகளிலிருந்தும் நோயாளிகள் தமிழ்நாட்டிற்கு சிகிச்சை பெறுவதற்காக வருகின்றனர். இதனால், தமிழ்நாடு மருத்துவ சுற்றுலாவின் தலைமையிடமாக விளங்குவது மட்டுமன்றி, நமது நாட்டிற்கு அந்நிய செலாவணியையும் ஈட்டித்தருகிறது.

மரியாதைக்குரிய டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்கள், 1983ஆம் ஆண்டு அப்போலோ மருத்துவமனையை, இந்தியாவின் முதல் கார்ப்பரேட் மருத்துவமனையாக சென்னையில் துவக்கினார்கள். தற்போது இந்தியா முழுவதும் முக்கியமான நகரங்களில் அப்போலோ மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் அப்போலோ மருந்தகங்கள், அப்போலோ பரிசோதனை நிலையங்கள், அப்போலோ டெலிமெடிசன் நிலையங்கள் என்று அப்போலோ மருத்துவ நிறுவனம், பல்வேறு மருத்துவ சேவைகளை ஆற்றி வருகிறது.

இந்நிறுவனத்தின் தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் பிரதாப் ரெட்டி அவர்களின் மருத்துவ சேவையை பாராட்டி, இந்தியாவின் உயரிய விருதான பத்ம விபூஷன் விருதை இந்திய அரசு அவருக்கு 2010ஆம் ஆண்டு வழங்கியுள்ளது.

உலகளவில், புற்றுநோய் சிகிச்சைக்கான மேம்படுத்தப்பட்ட சிகிச்சை முறைகள் பல நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றுதான் புரோடான் தெரபி முறை. ஏற்கெனவே 1983 முதல் சென்னையில் புற்றுநோய் மருத்துவமனையை சிறப்பாக நடத்திவரும் அனுபவம் மிக்க நிறுவனமான அப்போலோ மருத்துவமனை நிறுவனம் அப்போலோ புரோடான் கேன்சர் சென்டர் என்ற இந்த மையத்தினை அமைத்ததற்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மையம் இன்று மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. இம்மாதிரி மையம் தெற்காசியாவிலேயே முதன் முதலாக சென்னையிலேயே துவக்கப்படுகிறது என்பதை அறிவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த முறை பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் பலன்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

❖ புற்றுநோய் கட்டிகள் மீது குறைந்த அளவு கதிர்வீச்சு முதல் கதிர்வீச்சில்லா சிகிச்சை அளிக்கப்படும்;

❖ ஒவ்வொரு சிகிச்சைக்கும் குறைந்த கதிர்வீச்சே பயன்படுத்தப்படும்;

❖ குறைந்த அளவு பக்கவிளைவுகளே ஏற்படும்;

❖ சிகிச்சையின் போதும், சிகிச்சைக்குப் பிறகும் நல்ல ஆரோக்கியமான வாழ்க்கையை வாழலாம்;

❖ இந்த சிகிச்சை நோயாளிகளுக்கு வலி ஏற்படாவண்ணம் அளிக்கப்படுகிறது.

"சமூக பொருளாதார பின்னணி எதுவாக இருந்தாலும், அதனை கருத்தில் கொள்ளாமல், மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து

நடைமுறைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவத் திறன் செயல்பாடுகள் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதே எனது நோக்கமாகும்"

என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். பொருளாதார வசதி உள்ளவர்கள் எந்த மருத்துவமனையிலும், சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள ஏழை மக்களுக்கும், தரமான சிகிச்சை கிடைக்க வேண்டும் என்பதே மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு அம்மா அரசின் நோக்கமாகும்.

எனவே, ஏழை எளிய மக்களுக்கு உயரிய சிகிச்சைகள் தேவைப்பட்டு, அவர்கள் தனியார் மருத்துவமனைகளை அணுக வேண்டிய சூழ்நிலையில், அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்து அவர்களின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதை இத்தருணத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில், அப்போலோ மருத்துவமனை புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு சிறப்பான நவீன மருத்துவ சிகிச்சையை வழங்கி பலருடைய வாழ்க்கையிலும் ஒளியேற்றி வருகிறது. இம் மருத்துவமனையின் பணி தொடர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***25.01.2019** அன்று சென்னையில், அப்போலோ மருத்துவமனையால் துவக்கப்பட்டுள்ள அப்போலோ புரோடான் கேன்சர் சென்டர் திறப்பு விழாவில் ஆற்றிய உரை.*

எண்ணற்ற சுகாதாரத் திட்டத்தை செயல்படுத்தி தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே! மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே! மாண்புமிகு மக்களவை துணைத் தலைவர் திரு.தம்பிதுரை அவர்களே! மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.பொன். ராதாகிருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், திரு.செல்லூர் ராஜூ அவர்களே! டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே! திரு.உதயகுமார் அவர்களே! வருகை தந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! வருகை தந்திருக்கின்ற தலைமைச் செயலாளர் அவர்களே! மற்றும் வருகை தந்துள்ள மத்திய, மாநிலத்தினுடைய உயர் அதிகாரிகளே! மருத்துவர்களே! வருகை தந்துள்ள பெரியோர்களே! தாய்மார்களே!

அத்தனை பேருக்கும் என் முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கு எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க உத்தரவிட்டு, அதற்கு அடிக்கல் நாட்டவும் மற்றும் மத்திய மாநில அரசுகளின் நிதி பங்களிப்புடன் மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய 3 மருத்துவக் கல்லூரிகளில் தலா 150 கோடி ரூபாய் செலவில் பன்நோக்கு உயர்சிறப்பு மருத்துவ வசதி வழங்கும் வகையில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைக்கவும் இன்று வருகை புரிந்துள்ள தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்து, எனது உரையை தொடங்குகிறேன்.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தவுடன், தமிழ்நாட்டில் இத்தகைய மருத்துவமனை அமைய வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தங்களுக்கு கடிதம் எழுதியதோடு, இந்த திட்டத்திற்கு மத்திய அரசு கோரிய விவரங்கள் அனைத்தையும் உடனுக்குடன் வழங்கி, இந்த மருத்துவமனை அமைய வலியுறுத்தி வந்தார்கள். நானும் மத்திய அரசையும், தங்களையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன்.

சுகாதாரச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதில், இந்தியாவிற்கே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்குகிறது. வளர்ந்த நாடுகளுக்கு இணையான சுகாதாரத் தரத்தை தமிழ்நாடு அடைய வேண்டும் என்பது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வெளியிடப்பட்ட தொலைநோக்குத் திட்டம் 2023–இன் குறிக்கோளாகும். தொற்று மற்றும் தொற்றா நோய்களை தடுப்பதிலும், கட்டுப்படுத்துவதிலும், சிகிச்சை அளிப்பதிலும் தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக திகழ்கிறது. பல்வேறு மருத்துவமனைகள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் மூலமாக நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது. மகப்பேறு நலத் திட்டங்கள் மற்றும் குழந்தை நலத்

திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்றாகும்.

இத்தகைய செயல்பாடுகளினால், 'நிதி ஆயோக்' அண்மையில் வெளியிட்டுள்ள "சுகாதாரமான மாநிலம் – முற்போக்கு இந்தியா" அறிக்கையில் மூன்று முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தேசிய அளவில் குழந்தை இறப்பு விகிதம் 34ஆக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 2010ஆம் ஆண்டு 24ஆகவும், 2016இல் 17ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தாய்மார்கள் பேறுகால இறப்பு விகிதம் தற்போது 130 ஆகும். 2010ஆம் ஆண்டிலேயே தமிழ்நாட்டில் இவ்விகிதம் 90ஆக இருந்தது. அதுவே, 2014ஆம் ஆண்டு 66ஆக குறைந்துள்ளது. தற்போது 2016–2017ஆம் ஆண்டைய விவரப்படி, இது மேலும் 62ஆக குறைந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை, சுகாதாரம் குறித்து வகுத்துள்ள நிலையான வளர்ச்சி இலக்குகளில் 2030ஆம் ஆண்டுக்குள் தாய்மார்கள் பேறுகால இறப்பு விகிதத்தை 66ஆக குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கினை தமிழ்நாடு 2016ஆம் ஆண்டிலேயே அடைந்து, மத்திய அரசின் விருதினையும் பெற்றுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு திட்டங்களின் மூலம், மக்களுக்குத் தரமான சுகாதார சேவை கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. குடும்ப நலத் திட்டத்தில் முழுக் கவனம் செலுத்துதல், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் தொடங்கியது, ஆரம்ப சுகாதார நிலையங்களில் தாய்சேய் நலச் சேவைகளை 24 மணி நேரமும் வழங்குதல், 30 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்துதல், போதுமான இரத்த வங்கிகளை ஏற்படுத்துதல், இரவில் பிரசவ அறுவை சிகிச்சை செய்வதற்கு தேவையான வசதிகளை அளித்தல்,

பச்சிளம் குழந்தைகளை நிலைப்படுத்துதல் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளைத் தோற்றுவித்தல், ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை சிகிச்சைப் பிரிவுகளின் தரத்தை மேம்படுத்துதல், பிரசவ உடனாளர் திட்டத்தை அறிமுகப்படுத்துதல், தாய் இறப்பைத் தணிக்கை செய்தல், நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம், தேசிய சுகாதாரத் திட்டங்கள் அனைத்திலும் குறியீடுகளை அடையப் பெறுதல் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாகத் தான், தமிழ்நாடு சுகாதாரக் குறியீடுகளில் பல சாதனைகளை செய்ய முடிந்தது.

மேற்கண்ட திட்டங்களுடன், மாதவிடாய் கால சுகாதாரத் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், அரசு கூடுதல் நிதி உதவியுடன் கூடிய டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தமிழ்நாட்டின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தையின் சுகாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதியுதவி 12,000/– ரூபாயிலிருந்து 18,000/– ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 8 ஆண்டுகளில் இத்திட்டத்தில் 51.03 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 4,651.58 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட திட்டங்கள் தவிர, தாய் சேய் நலத்தைப் பேணுவதற்கு, அம்மா குழந்தை நலப்பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்,

மகளிர் சுகாதாரத் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி, தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

இறந்தவர்களின் உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்டத்தை செயல்படுத்துவதில், தமிழ்நாடு எப்பொழுதுமே மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்து வருகிறது. தேசிய அளவில் மிகச் சிறப்பாக செயல்படும் மாநிலம் என்ற விருதினை கடந்த 4 வருடங்களாக தமிழ்நாடு அரசு தொடர்ந்து பெற்று வருகிறது.

At this juncture, on behalf of Tamil Nadu, I would like to thank Hon'ble Prime Minister for sanctioning AIIMS at Madurai. I would also like to place before you that Ramanathapuram district has been historically backward and geographically remote with a long coast line. The very famous Rameswaram temple attracts tourist across the country and world, and is located in Ramanathapuram district. This district has been selected by Government of India as an aspirational district. I, therefore, request you to sanction a Government Medical College for this district in the ensuing Union Budget under the Centrally Sponsored Scheme.

தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தில் எய்ம்ஸ் மருத்துவமனை 1,264 கோடி ரூபாய் செலவில் அமைக்க அனுமதி அளித்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு, தமிழ்நாடு மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும், மதுரை மாவட்ட மக்களின் சார்பாகவும் நன்றியை மீண்டும் ஒரு முறை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

---

*மதுரையில் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் (எய்ம்ஸ்) அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 27.01.2019*

தொழில் தொடங்க தேவையான அனைத்து சாதகமான சூழ்நிலைகளும் தமிழ்நாட்டில் உள்ளது!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இன்று ஸ்ரீபெரும்புதூர் அருகே செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் மூன்றாவது மிதவை கண்ணாடி ஆலையையும், இரண்டு தொழிற்சாலைகளையும் தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டுள்ள மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு.பென்ஜமின் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய சகோதரர் திரு.வேணுகோபால் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் குமரவேல் அவர்களே! பிரான்ஸ் கவுன்சல் ஜெனரல் திருமதி கேத்தரின் சுவார்டு அவர்களே! தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன் அவர்களே! மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற திரு. மதன்மிஸ்ரா அவர்களே!

செயிண்ட் கோபைன் குழுமத்தின் தலைவர் மற்றும் தலைமை நிருவாக அதிகாரி திரு.ஆண்ட்ரோ சேலண்டர் அவர்களே! செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தலைவர் திரு. ஆனந்த மகாஜன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கிற முன்னாள் அமைச்சர்கள் சகோதரர் திரு.சோமசுந்தரம் அவர்களே! திரு.மூர்த்தி அவர்களே!

திருமதி மைதிலி திருநாவுக்கரசு அவர்களே! முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகோதரர் திரு.சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களே! திரு. காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் சகோதரர் திரு.வாலாஜாபாத் கணேசன் அவர்களே! சகோதரர் திரு.மணிமாறன் அவர்களே! திரு. திருக்கழுகுன்றம் ஆறுமுகம் அவர்களே!

செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பி.சந்தானம் அவர்களே! பிரெஞ்ச் நாட்டு தூதரக அதிகாரிகளே! செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் நிருவாகிகளே! மற்றும் பெருந்திரளாக கூடியிருக்கின்ற, நிறுவனத்தில் பணிபுரிகின்ற பணியாளர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் தொழிலாளர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, தொழில்நுட்ப அனுபவத்துடன் கூடிய மனித வளம், தடையில்லா மின்சாரம், சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், சிறப்பான சட்ட ஒழுங்கு பராமரிப்பு, வெளிப்படையான மற்றும் எளிமையான அணுகுமுறை போன்ற தொழில் தொடங்கத் தேவையான அனைத்து சாதகமான சூழ்நிலைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உற்பத்தியை பெருக்கி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், தமிழ்நாட்டை முதலீட்டுக்கு உகந்த தேர்விடமாக உருவாக்கவும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆக்கபூர்வமான கொள்கைகளை வெளியிடுதல், திட்டமிடுதல் மற்றும் அத்திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதற்காக, தொலைநோக்குத் திட்டம் 2023, தமிழ்நாடு தொழில் கொள்கை 2014, மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்கள் கொள்கை 2014, உயிரி தொழில் நுட்பக் கொள்கை 2014, தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை 2018 மற்றும் தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கை 2019 ஆகியவை தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டன.

திருத்தப்பட்ட தமிழ்நாடு சூரிய சக்தி கொள்கை விரைவில் வெளியிடப்படும். முதலீடு செய்ய வரும் நிறுவனங்களுக்கு, 30 நாட்களுக்குள் ஒற்றைச்சாளர முறையில் வேண்டிய அனுமதிகள் வழங்கப்படுவதை 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம் உறுதி செய்கிறது. 30 நாட்களுக்கு மேலாகும் பட்சத்தில், தானாகவே அனுமதி வழங்கப்பட்டதாக கருதப்படும் ஷரத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் புதிய தொழில் தொடங்க தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை சமீபத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. தொழில்நுட்பம் வழியே புத்தாக்கத்திற்கு

உகந்த சூழலை உருவாக்குவதே இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் துடிப்பான புத்தொழில் சூழலை உருவாக்குவதன் மூலம் 2023க்குள் 10 உலகளாவிய உயர் வளர்ச்சி புத்தொழில்கள் உட்பட, குறைந்தபட்சம் 5,000 புத்தொழில்கள், உருவாக்கப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே இந்த கொள்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும், தொழில் மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒரு முன்னணி மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. சமீபத்தில் நாடாளுமன்றத்தில் அன்னிய நேரடி முதலீடு குறித்து ரிசர்வ் வங்கி சமர்ப்பித்த அறிக்கையில் தமிழ்நாட்டில் 2017–2018ஆம் ஆண்டில் கூடுதலாக 56 சதவீதம் முதலீடு பெறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் முதலீட்டிற்கு சிறந்த மாநிலமாக சென்ற ஆண்டு ஆறாம் இடத்தில் இருந்து, 2018ஆம் ஆண்டில் தமிழ்நாடு இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளது என தேசிய பயன்பாட்டு பொருளாதார ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் பீடுநடை போடுகிறது என்பதை இந்த அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

தொழில் வளர்ச்சியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையிலும், அதிக தொழில் முதலீட்டினை ஈர்க்கும் வண்ணமும், தொழில் மயமாக்குதல், வேலைவாய்ப்பை அதிகரித்தல், மக்களின்

வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், மாநிலம் முழுவதுமான சீரான வளர்ச்சி மற்றும் சுற்றுச் சூழலுடன் இணைந்த நிலைத்த நீண்ட கால முன்னேற்றம் ஆகியவற்றினை அடைவதற்கு மாநிலத்தில் முதல் முறையாக உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2015ஆம் ஆண்டு செப்டம்பர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சென்னையில் வெற்றிகரமாக நடத்தினார்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து சென்ற வாரம் மீண்டும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மாண்புமிகு அம்மாவின் அரசால் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இதன் காரணமாக, இன்றைய தினம் 3 இலட்சத்து 431 கோடி ரூபாய்க்கு தொழில் முதலீடுகளும், சுமார் 10 இலட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு மேல் வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

செயிண்ட் கோபைன் நிறுவனம் 1665ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் தொடங்கப்பட்டு, மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக கண்ணாடி தொழில்நுட்பத்தில் தொடர்ந்து உலகளவில் ஓர் சிறந்த முன்னோடி நிறுவனமாக விளங்குகிறது.

“The Customer is King” அதாவது, “வாடிக்கையாளரே மன்னர்” என்ற கூற்று செயிண்ட் கோபைன் நிறுவனத்திற்கு மிகப் பொருத்தமாக உள்ளது.

பிரான்ஸ் நாட்டின் மன்னர் 14ஆவது லூயிஸ் அவர்கள்தான் இந்த நிறுவனத்தின் முதல் வாடிக்கையாளர் என்றும், அவர் தனது அரண்மனைக்காக கண்ணாடி வாங்குவதற்காக இந்த நிறுவனத்தை அணுகினார் என்றும் அறிகிறேன்.

மன்னர் முதல் பொதுமக்கள் வரை அனைவரது விருப்பத்தினை பூர்த்தி செய்யும் வகையில் விதவிதமான கண்ணாடிகளை உங்கள் நிறுவனம் தயாரித்து வருகிறது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

செயிண்ட் கோபைன் நிறுவனம் தமிழ்நாட்டுடன் இதுவரை நான்கு ஒப்பந்தங்களில் பல்வேறு கட்டங்களில் கையொப்பமிட்டு, அதன் மூலம் இதுவரை 3,400 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டில் தனது மூன்றாவது மிதவை கண்ணாடி தொழிற்சாலையை 800 கோடி ரூபாய் முதலீட்டில் 5 ஆண்டுகளில் முடிக்க திட்டமிட்டு, மாண்புமிகு அம்மாவின் அரசின் ஒத்துழைப்புடன் மூன்றாண்டு காலத்திற்குள்ளேயே அந்த தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதனை நான் இன்று தொடங்கி வைத்துள்ளேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 17.02.2006 அன்று ஸ்ரீபெரும்புதூரில் செயிண்ட் கோபைன் நிறுவனத்தின் 2ஆவது மிதவை கண்ணாடி ஆலையை நாட்டிற்கு அர்ப்பணித்தார்கள்.

அப்பொழுது மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த வளாகம் ஒரு உலகத் தரம் வாய்ந்த கண்ணாடி உற்பத்தி செய்யும் வளாகமாக உருவெடுக்கும் என்று கூறினார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அன்று தீர்க்க தரிசனமாக கூறியதுபோல், இந்த வளாகத்தில் மேலும் பல தொழிற்சாலை அலகுகள் அமைக்கப்பட்டு வருவதை அறிந்து நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையை ஏற்று இந்த நிறுவனம் இயற்கை வளம் காத்தல், மழைநீர் சேகரிப்பு ஆகிய திட்டங்களை செயல்படுத்தியதை மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த நிகழ்ச்சியில் பாராட்டினார்கள்.

மேலும், செயிண்ட் கோபைன் நிறுவனம் வளர்ச்சியடைய பலவித ஆலோசனைகளையும் அந்நிகழ்ச்சியில் வழங்கினார்கள் என்பது, நமது அம்மா அவர்கள் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறையை தெளிவாக காட்டுகின்றது.

சென்னை தரமணியில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 110 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடும் வகையில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் சதுரஅடி பரப்பில் அமைந்துள்ள செயிண்ட் கோபைன் ஆராய்ச்சி (இந்தியா) மையத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் 29.01.2016 அன்று துவக்கி வைத்தார் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களும், தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் அளித்த ஊக்கத்தினால் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள இந்த நிறுவனத்தின் கண்ணாடி வளாகம் ஆண்டுக்கு ஆண்டு விரிவடைந்து கொண்டே இருக்கிறது.

மேலும், இந்த நிறுவனம் தனது பன்னாட்டு முதலீடுகளில் அதிக அளவில் தமிழ்நாட்டில் தான் செய்துள்ளது என்பதை அறிவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்ற வாரம் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில், மேலும் 720 கோடி ரூபாயினை தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் ஒப்பந்தத்தில் செயிண்ட் கோபைன் நிறுவனம் கையொப்பமிட்டுள்ளது என்பதை அறிவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை எவ்வாறு இந்நிறுவனம் செயல்படுத்தியதோ, அதே போன்று, தற்போது மாண்புமிகு அம்மாவின் அரசு 01.01.2019 முதல் அறிவித்திருக்கிற பிளாஸ்டிக் தடை அறிவிப்பினையும் முழுமையாக செயல்படுத்திட வேண்டும் என்று அன்போடு இந்தத் தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிறுவனம் அதிக அளவில் தமிழ்நாட்டில் முதலீடுகளை செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு உங்கள் நிறுவனத்திற்கு அனைத்து ஒத்துழைப்பும் நல்கும் என்று கூறி, இந்த நிறுவனம் தனது வெற்றிப் பயணத்தை தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த, உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
28.01.2019 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில்,
விரிவாக்கம் செய்யப்பட்ட செயிண்ட் கோபைன் இந்தியா
தொழிற்சாலையை துவக்கி வைத்து ஆற்றிய உரை

உலக முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு இங்கு நிலவும் அமைதியான சட்ட ஒழுங்கு நிலைதான் காரணம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

காவல் துறை மற்றும் சீருடைப் பணியாளர்களுடைய பதக்கங்கள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தனது நிருவாகத் திறமையினால் தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக திகழச் செய்த மாண்புமிகு அம்மா அவர்களை

வணங்கி, இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அண்ணன் திரு.திண்டுக்கல் சீனிவாசன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் சகோதரர் திரு.பி.தங்கமணி அவர்களே! மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு.ஜெயகுமார் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு.கருப்பணன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு.ஆர்.காமராஜ் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே! மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய திரு. நிரஞ்சன் மார்டி அவர்களே! காவல் துறை உயர் அதிகாரிகளே! காவலர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களே! மரியாதைக்குரிய டி.ஜி.பி அவர்களே! வருகை தந்திருக்கின்ற பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களைக் காக்கும் மகத்தான பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள காவல் துறை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, ஊர்க்காவல் மற்றும் சமூக பாதுகாப்பு படையினரின் தீரச் செயல், தகைசால் பணி, மெச்சத் தக்க பணி, சீர்திருத்தப் பணி,

சிறப்புப் பணி, சிறந்த புலனாய்வு, விரல்ரேகை அறிவியல் சீர்மிகு பணி, தொழில்நுட்ப சிறப்புப் பணி மற்றும் பொது சேவைக்கான சீர்மிகு பணி ஆகிய பணிகளில் திறம்படச் செயலாற்றியவர்களுக்கு பதக்கங்கள் வழங்கும் இந்த இனிய விழாவில் பங்கேற்றதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். பதக்கங்களை பெற்ற அனைவருக்கும் எனது மனதார பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்கள் சிறப்பான முறையில் பணியாற்றி பதக்கங்கள் பெற ஊக்குவித்த இவர்களது உயர் அதிகாரிகளுக்கும், உறுதுணையாக இருந்த குடும்பத்தினருக்கும் எனது பாராட்டுதல்களையும், நல்வாழ்த்துகளையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சரின் காவலர் விருதுகளின் எண்ணிக்கையை 1,500 லிருந்து 3,000 ஆக உயர்த்தப்படும் என 2018–2019ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதன்படி, 3,000 காவலர்களுக்கு இன்று பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சட்ட, ஒழுங்கு பராமரிப்பு பணியைக் காவல் துறையினர் செவ்வனே மேற்கொள்ளும் வகையில் காவல் துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் முன்கூட்டியே கண்டறியப்பட்டு, அவை அவ்வப்போது நிரப்பப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசால் 2017ஆம் ஆண்டில் 15,621 சீருடை பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 16.10.2017 அன்று என்னால் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டில் சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 511 உதவி ஆய்வாளர்களும், 6,140 காவல் ஆளிநர்களும் என மொத்தம் 6,651 நபர்கள் சீருடைப் பணிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.

தற்போது காவல் துறையில் 5 விழுக்காட்டிற்கும் குறைந்த பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. அவையும் கூடிய விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

காவல் துறையினரின் நலனைப் பாதுகாப்பதில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியைப் பின்பற்றி வரும் இந்த அரசு, மக்களின் நலன் காக்கும் பணியில் தங்களை முழுமையாக அர்ப்பணித்து இருக்கும் தமிழக காவல் துறையினர் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வினை மேம்படுத்தும் நோக்கத்தோடு "காவலர் நிறைவாழ்வு பயிற்சித் திட்டத்தை" கடந்தாண்டு அறிவித்தது. இப்பயிற்சித் திட்டமானது, தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து வரும் அனைத்து காவல் அதிகாரிகள், காவல் ஆளிநர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்காக, பெங்களூருவில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற நிம்ஹான்ஸ் என்று அழைக்கப்படும் தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்காக 10 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்து, இச்சிறப்பான திட்டத்தை செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இவ்வாறான முழுமை பெற்ற பயிற்சி ஒரு மாநிலத்திலுள்ள அனைத்து காவலர்கள் / அதிகாரிகள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஒருங்கே அளிக்கப்படுவது இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பயிற்சி, காவலர்களின் உடல் நலத்தையும், மனத்திண்மையையும், பணித் திறனையும் மேம்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதென இதுவரை பயிற்சி பெற்ற காவல் அதிகாரிகள் / ஆளிநர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். உதாரணமாக, மேற்கு மண்டல காவல் துறையில் பணிபுரியும் ஒரு ஆளிநர், குடிப்பழக்கத்திற்கு ஆளாகி, குடும்பத்தையும் சரிவர கவனிக்காமல், மன அழுத்தத்திற்கு ஆளாகியிருந்தார்.

இப்பயிற்சியை முடித்த அவர், மனமாற்றம் ஏற்பட்டு, குடிப்பழக்கத்தை அறவே விட்டு, குடும்பத்தாருடன் நல்ல முறையில் வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அதே போன்று, உடன் பிறந்தவர்களுடன் சொத்து பிரச்சினை காரணமாக சச்சரவு செய்து கொண்டு, மன அழுத்தத்துடன் இருந்த காவல் அலுவலர் ஒருவரும், இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெறும்போதே தனது சகோதரர்களுக்கு தகவல் தெரிவித்து, மீண்டும் அவர்களுடன் நல்லுறவினை பராமரித்து சுமூகமாக வாழ்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

காவல் ஆளிநர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் இடையே, இப்பயிற்சி பரஸ்பர நல்லுணர்வு மற்றும் பணியிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு சிறப்பு மிக்க, பயனுள்ள இப்பயிற்சியில், இதுவரை 20,000 காவலர்களும் சுமார் 22,000 காவலர்களின் குடும்பத்தாரும் பங்கேற்றுள்ளனர் என்பதை பெருமிதத்துடன், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற வாரம் பெங்களூர் நிம்ஹான்ஸ் நிறுவனத்திற்கு வந்திருந்த இந்தியாவின் உள் துறை அமைச்சர், தமிழ்நாடு செயல்படுத்திவரும் இந்நிறைவாழ்வுத் திட்டத்தை வெகுவாக பாராட்டி, இது போன்ற திட்டத்தை மத்திய அரசின் கீழ் இயங்கும் மத்திய எல்லை பாதுகாப்பு படை மற்றும் மத்திய சேம காவல் படையினருக்கும் (CRPF) செயல்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள்.

மேலும், சென்ற ஆண்டு வரை 40 வயது முடிவடைந்த காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை அரசாங்க மருத்துவமனைகளில் கட்டணமின்றி முழு உடல் பரிசோதனை செய்து கொள்ளலாம் என்ற உத்தரவை மாற்றி 30 வயது முடிந்த காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரை இவ்வசதியினைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டுள்ளது.

இதே போன்று பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற காவல் துறையினர், சிறைத் துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் படைத் துறையினர் மற்றும் காவல் துறையில் அமைச்சுப் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் குறைந்த விலையில் பொருட்கள் வழங்க மேலும் 2 காவல் அங்காடிகள் (கேன்டின்) திறக்கப்பட்டு, தமிழகமெங்கும் தற்போது 50 காவல் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

அதே போன்று ஓய்வு பெற்ற காவல் துறையினரின் நலனைக் கருத்தில் கொண்டு, "ஓய்வு பெற்ற காவல் துறையினருக்கான நல வாரியம்" ஒன்றினை அமைக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு போராட்டங்களை திறம்பட கையாள்வதிலும், தீமையினை விளைவிக்கும் இயக்கங்களின் முயற்சிகளை முறியடிப்பதிலும், பிரிவினைவாத இயக்கங்கள் வளராமல் முளையிலேயே கிள்ளி எறிவதிலும், இயற்கை சீற்றங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளின் போது தேவையான நிவாரண பணிகளில் ஈடுபடுவதிலும், தமிழ்நாடு காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் ஊர்க்காவல் படையினர் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றனர். அதே போல் தண்டனைக்குள்ளாகி சிறையில் இருக்கும் குற்றவாளிகளை வழிநடத்துவதிலும், அவர்களது வருங்காலத்தை கருத்தில் கொண்டு அவர்களை நல்ல மனிதர்களாக மனித நேயத்தோடு மாற்றுவதிலும் தமிழ்நாடு சிறைத் துறை மிகவும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. ஊர்க்காவல் படையினர் தங்களது சொந்த அலுவல்களுக்கிடையே, காவல் பணியிலும் ஈடுபட்டு காவல் துறைக்கு சிறப்பான முறையில் வலு சேர்த்து வருகின்றனர் என்பதும் பெருமைக்குரிய ஒன்றாகும். விரல் ரேகைப் பிரிவினரும், தடய அறிவியல் பிரிவினரும், காவல் துறையின் புலன் விசாரணைக்கு முதுகெலும்பாக செயல்பட்டு, குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் பெரும் உதவியாக இருந்து வருகின்றனர். தமிழக காவல் துறையின் விரல் ரேகை பிரிவினரின்

சிறந்த செயல்பாட்டினால், விரல் ரேகை தடயங்கள் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள குற்ற வழக்குகளின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக தொடர்ந்து இருந்து வருகிறது என்பது மிகவும் பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

தமிழ்நாடு காவல் துறை நாட்டிலேயே சிறந்த படை என்ற பெயர் பெற்று விளங்குகிறது. இதற்குச் சான்றாக, அண்மையில் இந்தியா டுடே பத்திரிகை, – சட்டம் ஒழுங்கில் சிறப்பாக செயல்படும் மாநிலம் தமிழ்நாடு, என்பதற்காகவும், குறுகிய காலத்தில் இந்த சாதனை செய்ததற்காகவும் தனித்தனியாக 2 விருதுகள் வழங்கியுள்ளது. இது காவல் துறையினரான உங்களின் அயராத உழைப்பினால் மட்டுமே சாத்தியமாயிற்று என்று சொன்னால் அது மிகையாகாது.

கோவை ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம் நாட்டிலேயே சிறந்த முதல் காவல் நிலையமாகவும், சென்னை அண்ணா நகர் கே.4 காவல் நிலையம் 5வது காவல் நிலையமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டன. அது போல, சமீபத்தில், பெரியகுளம் காவல் நிலையம் நாட்டிலேயே 8வது சிறந்த காவல் நிலையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் உங்களின் பல்வேறு செயல்பாடுகளுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

சமீபத்தில் நடந்து முடிந்துள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் சுமார் 3 இலட்சத்து 413 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்ய உலகமெங்கும் உள்ள நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பம் இட்டுள்ளனர். மாண்புமிகு அம்மா அவர்களின் தாரக மந்திரமான "அமைதி, வளம், வளர்ச்சி" என்ற கூற்றின்படி, இந்நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு முக்கியமான காரணம், தமிழ்நாட்டில் நிலவும் அமைதியான சட்ட ஒழுங்கு நிலை தான் என்பதை இங்கே பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு சட்டம் ஒழுங்கில் அமைதியான மாநிலமாக தமிழ்நாடு உள்ளதால், வளங்கள்

தேடி வந்து, மாநிலம் வளர்ச்சிப் பாதையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதையும், அதற்கு உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் உள்ளது என்பதையும் எண்ணி நீங்கள் பெருமை கொள்ள வேண்டும்.

காவல் துறையை நவீனப்படுத்தியும், அவர்களது திறனை மேம்படுத்தியும், அவர்களுக்கு நவீன சாதனங்கள் வழங்கியும், அவர்களது மன வலிமை மேம்பட பயிற்சிகள் வழங்கியும் வருவதால், சாதிக் கலவரங்கள், தீவிரவாதம், மதவாதம், அடிப்படைவாதம், தொழிலாளர் கிளர்ச்சி போன்றவை பெருமளவில் குறைந்துள்ளன.

குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த தமிழ் நாடு அரசு பொது இடங்களில் சிசிடிவி கேமராக்களை பொருத்த வழிவகை செய்துள்ளது. தமிழ்நாடு அரசின் அறிவுரைகளை பின்பற்றி, பொது மக்கள் ஒத்துழைப்புடன் இது வரையில் 2,79,440 சிசிடிவி கேமராக்கள் தமிழ்நாடு முழுவதும் பொருத்தி குற்றங்கள் நடைபெறுவது பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இப்பணியை தொடர்ந்து செயல்படுத்தி குற்றச் செயலற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கு அனைத்து முயற்சிகளையும் தமிழ்நாடு காவல் துறையினர் மேற்கொள்ள வேண்டும். அம்முயற்சிகளையும், பணிகளையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து ஊக்கப்படுத்தும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

“மக்களின் வரிப் பணத்திலிருந்து நமக்கு சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே மக்களுக்கு தொண்டு செய்கிறோம் என்பது மட்டுமல்ல, மக்கள் நமது எஜமானர்கள் என்ற வகையில் அரசு அலுவலர்களும், மற்றவர்களும் அந்தப் பணியை செய்தால் தான் நிலைமை சீர்படும், எந்தத் திட்டமும் நிறைவேறும்” என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

காவல் பணி என்பது ஒரு மகத்தான பணி. சமுதாயத்தில் அநீதி இழைக்கப்பட்ட மக்கள் நியாயம் கோரிட காவல் நிலையங்களுக்கு வரும்போது, அவர்களை மனித நேயத்தோடு அணுகி, அன்போடு பேசி, அவர்களது குறைகளை கேட்டறிந்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத் தரும்போது மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். அதைப் பார்த்து உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. இதனால், இந்த அரசின் மீதும், சட்டத்தின் மீதும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகிறது.

சீருடைப் பணியாளர்களின் கடமையுணர்வு, தியாகம் மற்றும் செயல்பாட்டினை கவுரவிக்கும் வகையில் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இது போன்ற நிகழ்ச்சிகள் பதக்கம் பெறுபவருக்கு ஊக்கம் அளிப்பதுடன் மற்ற பணியாளர்களும் சிறப்பாக பணிபுரிந்து, இதே போன்று பதக்கங்கள் பெற வேண்டுமென்ற உத்வேகத்தையும் அளிக்கிறது.

நீங்கள் வாழ்க்கையில் யாராக இருக்க விரும்புகிறீர்கள்? ஊர் பேர் தெரியாத பத்தோடு பதினொன்றாகவா? அல்லது சாதனையாளராகவா? ஊர் பேர் தெரியாத ஒருவராக இருக்க விரும்புகிறீர்கள் என்றால், கூட்டத்தோடு கலந்து போய் விடுவீர்கள். ஆனால், வாழ்க்கையில் சாதிப்பவராக நீங்கள் விரும்பினால், எல்லோரும் உங்களை மதிக்கும் வண்ணம் செயல்பட்டு, நிமிர்ந்து நில்லுங்கள். உங்கள் பணியை நீங்கள் சிறப்பாக செய்யுங்கள். அவ்வாறு செய்தால், இப்போது பதக்கங்கள் பெறும் சாதனையாளர்களைப் போல் உங்களுக்கான அங்கீகாரம் தானாக உங்களைத் தேடி வரும்.

காவல்துறையில் பணியாற்றும் நீங்கள் நாட்டில் ஏற்படும் குற்ற நிகழ்வுகளுக்கு, யாரும் சிந்திக்காத வகையில் மாறுபட்ட சிந்தனையோடு அதற்கு தீர்வு காண வேண்டும். இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு காட்டில் நிறைய யானைகள் வசித்து வந்தன. அந்த காட்டில் மழையின்மை காரணமாக யானைகளுக்கு குடிக்க நீர் கிடைக்கவில்லை. யானைக் கூட்டத் தலைவன், யானைகளை அழைத்து பக்கத்தில் எங்காவது தண்ணீர் கிடைக்கிறதா என்று பார்க்கச் சொன்னது. அதன்படி யானைகள் நீர் கிடைக்கும் இடங்களை தேடின. அப்பொழுது பக்கத்திலுள்ள காட்டில் நிறைய நீர்நிலைகள் இருப்பதாக சில யானைகள் தலைவனிடம் கூறின. உடனே எல்லா யானைகளும் அந்த காட்டை நோக்கி விரைந்தன. அந்த காட்டில் முயல்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தன. தண்ணீர் இருக்கின்றது என்று அறிந்த யானைகள், கூட்டம் கூட்டமாக அந்த காட்டிற்குள் சென்றன. வழியில் பல முயல்கள் இதன் காலடியின் சிக்கி மடிந்தன. அந்த காட்டிலுள்ள தண்ணீரை யானைகளின் கூட்டமே மொத்தமாக அருந்தியது. முயல்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. யானைகள் அக்கம் பக்கத்திலுள்ள யானைகளையும் அந்தக் காட்டிற்கு அழைத்து வந்தன. யானைகளின் அட்டகாசம் அந்த காட்டிலேயே தொடர்ந்தது. இதனை முடிவுக்கு கொண்டு வர முயல்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்தன. “நம்மால் யானைகளை தடுக்க முடியாது” என்றன சில முயல்கள். அப்பொழுது ஒரு முயல், “ஏன் முடியாது ? நான் இந்த யானைக் கூட்டம் இந்தப் பக்கம் வரவிடாமல் செய்துவிடுவேன்” என்று மனதில் ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு கிளம்பியது.

அந்த முயல், யானைகளிடம் நேரடியாக நெருங்கினால் ஆபத்து என்பதை உணர்ந்து, சற்று உயரமான இடத்திலிருந்து பேசியது. “நான் சந்திர பகவான் அனுப்பிய தூதுவன், இன்று நான் முயலின் தோற்றத்தில் வந்துள்ளேன்” என்று கூறியது. “சந்திர பகவானின் ஆணைப்படி ஒரு செய்தியை இங்கே தெரிவிக்க வந்திருக்கிறேன்” என்று உரக்கக் கூறியது.

“என்னுடைய ஆதரவில் வாழும் முயல்கள் உங்களால் நசுங்கி இறந்திருக்கின்றன, இது மன்னிக்க முடியாத குற்றம். எனக்குச்

சொந்தமான இந்த ஏரியில் நீங்கள் நீர் அருந்தக் கூடாது. எனது ஆதரவில் வசிக்கும் முயல்களுக்கு இனிமேல் எந்த தீமையும் செய்யக் கூடாது. மீறினால் உங்களுக்கு அழிவுக் காலம் வந்து விட்டது என்று அறியவும்".

"நீங்கள் ஒழுங்காக நடந்து கொண்டால், நான் நல்லவனாக இருப்பேன். இல்லையேல் உங்களை ஒழித்துக் கட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என சந்திர பகவான் உங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்" என்று கூறியது, அந்த புத்திசாலி முயல். உடனே யானைக் கூட்டம் நடுங்கியது. அந்த யானைக் கூட்டத் தலைவன், "என்னை சந்திரனிடம் கூட்டிச் செல்லுங்கள் நான் மன்னிப்பு கேட்க வேண்டும்'' என்று கூறியது. உடனே அந்த முயல், "சந்திர பகவானைக் காட்டுகிறேன்'', என்று கூறி, அந்த யானைக் கூட்டத் தலைவனை அழைத்துச் சென்றது.

செல்லும் வழியில் உள்ள ஒரு ஏரியில் சந்திரனின் உருவம் நன்றாக தெரிந்தது. உடனே சமயோசிதமாக அந்த முயல், ஏரியில் தெரிந்த சந்திர பிம்பத்தை யானைக்கு காட்டியது. உடனே யானை, "நான் நீராடிவிட்டு சந்திர பகவானை தரிசிக்கிறேன்" என்று கூறி தண்ணீரில் இறங்கியது. யானையின் கால் பட்டதால் தண்ணீர் கலக்கப்பட்டது. தண்ணீரில் ஏற்பட்ட கலக்கத்தினால், சந்திரனின் பிம்பம் பல உருவங்களாக தெரிந்தது.

அதைக் கண்ட முயல் சாமர்த்தியமாக யானையிடம், "நீங்கள் தண்ணீரை இப்படி தொட்டு கலக்கலாமா? அதனால் தான் சந்திர பகவானுக்கு உங்கள் மீது கோபம் வந்து விட்டது. அதனால் தான் அவரது உருவம் சிதறி காணப்பட்டது" என்றது. "அதன் விளைவை நினைத்து நான் பயப்படுகிறேன்'', என்று பயம் காட்டியது.

இதனால் பயந்து போன யானைக் கூட்டத் தலைவன், "நானும், எனது கூட்டமும் இந்த ஏரியிலே தண்ணீர் குடிக்க மாட்டோம். இந்த காட்டிலேயே இருக்க மாட்டோம்" என்று கூறி விட்டு கிளம்பியது. காட்டை விட்டு யானைக் கூட்டமும் அகன்றது.

ஒரு சிறிய முயல் தனது மாறுபட்ட சிந்தனையினால் பலம் கொண்ட யானைக் கூட்டத்தையே காட்டை விட்டு விரட்டியது. அதுபோல் நீங்களும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கும், குற்ற நிகழ்வுகளை தடுப்பதற்கும், சமயோசிதமாக மாறுபட்ட முறையில் சிந்தித்தால், எல்லாவற்றிற்கும் ஒரு நல்ல நிரந்தர தீர்வு கிடைக்கும்.

காவல் துறையில் பணிபுரியும் நீங்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்ற கோட்பாடுகளை மனதில் நிலைநிறுத்தி செயலாற்ற வேண்டும். அவ்வாறு நீங்கள் நேர்மையுடனும், தனித்துவத்துடனும் பணியாற்றினால், உங்கள் பணிக் காலங்களில் நீங்கள் மேன்மேலும் பல சிறப்புகளைப் பெற முடியும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பதக்கங்கள் பெற்ற அனைத்து சீருடை பணியாளர்களுக்கும் மீண்டும் ஒரு முறை எனது வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ அபிநவ், ஐ.பி.எஸ் தலைமையிலான மிடுக்கான அணிவகுப்பு நடத்திய நமது காவல் துறை வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விழாவை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
31.01.2019 *அன்று சென்னையில் நடைபெற்ற*
இந்திய குடியரசுத் தலைவர் மற்றும் தமிழக முதலமைச்சரின்
பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

ரூ.33 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம்! ரூ.12.26 கோடி மதிப்பீட்டில் 4,049 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

உங்கள் சட்டப்பேரவை உறுப்பினர்களது கோரிக்கைகள் மற்றும் பொது மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக, கந்தம்பட்டி பைபாஸ் சாலையில் புதிய மேம்பாலம் கட்டுகின்ற நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, இன்றைக்கு சேலம் மாநகரத்திலே

போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது என்பதை அம்மாவின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இந்த போக்குவரத்து நெரிசலை முற்றிலும் குறைப்பதற்காக, அம்மா அவர்கள் தமிழகத்திலே முதலமைச்சராக இருந்த காலத்திலே, சேலம் மாநகரப் பகுதியில் பல்வேறு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்காக அறிவித்து அந்தப் பணி அம்மாவின் ஆட்சிக் காலத்தில் துவக்கப்பட்டது. இன்றைக்கு அந்தப் பணிகளெல்லாம் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, இன்றைக்கு பல்வேறு பாலப் பணிகள் நிறைவு பெற்று, மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டு, போக்குவரத்து நெரிசல் இல்லாமல் மக்கள் செல்கின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம்.

இந்த கந்தம்பட்டி பைபாஸில் அடிக்கடி விபத்து ஏற்படுவதால், அங்கேயும் ஒரு உயர்மட்டப் பாலம் வேண்டுமென்று பலபேர் கோரிக்கை வைத்த காரணத்தினால், அந்த கோரிக்கையை ஏற்று, 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த உயர்மட்டப் பாலம் இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது. இதன் தொடர்ச்சியாக, தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள மூன்று உயர்மட்டப்பாலங்கள் கட்டப்பட்டு போக்குவரத்துக்கு திறக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள கந்தம்பட்டி பைபாஸ் பகுதியில் கிட்டத்தட்ட 5 மாத காலங்களில் நிறைவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

15 நாட்களுக்கு முன், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரியானூர் பிரிவு ரோடு திருச்செங்கோட்டுக்கு செல்கின்ற ஆட்டையம்பட்டி ரோட்டில் ஒரு உயர்மட்டப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டினேன். சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மகுடஞ்சாவடியில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆகவே, அந்த அரியானூர் பிரிவு ரோடு, மகுடஞ்சாவடி பிரிவு ரோடு ஆகிய இரண்டு பகுதிகளிலுமே ஏற்படும் விபத்துக்களை தவிர்ப்பதற்காக அங்கேயும்

90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு உயர்மட்டப் பாலங்கள் 15 நாட்களுக்கு முன்தான் அடிக்கல் நாட்டப்பட்டது.

கந்தம்பட்டி பைபாஸில் மட்டும், 2003ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை 100 பேர் விபத்தில் இறந்திருக்கிறார்கள், 143 பேர் காயமுற்றிருக்கிறார்கள். ஆகவே, இந்த விபத்துக்களை தவிர்ப்பதற்காகத் தான் அம்மாவின் அரசு உயர்மட்டப் பாலங்களுக்கு அடிக்கல் நாட்டி, பணியை விரைவில் முடித்து திறக்கப் போகிறோம்.

இன்றையதினம், பல்வேறு திட்டங்களுக்காக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. வாழப்பாடி ஒன்றியத்தில் புழுதிக் குட்டை, சந்துமலை சாலையில், புங்கமடு அருகில் 3 கோடியே 50 இலட்சம் செலவில் ஒரு உயர்மட்டப் பாலம். பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் அயோத்திப்பட்டினம், பேலூர், கிளாக்காடு சாலையில், தும்பல் அருகில் 3 கோடியே 50 இலட்சம் செலவில் ஒரு உயர்மட்டப் பாலம். இந்தப் பாலத்தைச் சேர்த்து மூன்று பாலங்களுக்கு உங்களுடைய வாழ்த்தோடு இன்றைக்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கின்றது.

இதுதவிர, இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, வருவாய்த் துறையின் சார்பாக 100 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா, 100 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகையும், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் சுமார் 81 நபர்களுக்கு பசுமை வீடுகள், இல்லக் கழிவறை போன்ற நலத்திட்ட உதவிகளும், கூட்டுறவுத் துறை சார்பில் 671 நபர்களுக்கு பயிர்க் கடனும், வேளாண் துறை சார்பில் தலா 1 நபர் வீதம் மூன்று நபர்களுக்கு விசை தெளிப்பான், நுண்ணுயிர் பாசன மானியம் மற்றும் வேளாண் இயந்திரங்களும், வனத் துறையின் சார்பில் 19 நபர்களுக்கு சிறு தொழில் தொடங்க கடனும், சமூக நலத் துறை சார்பாக 200 நபர்களுக்கு பிற்பட்டோர் நலத் துறை மூலமாக 10 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களும், ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக

9 நபர்களுக்கு, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 221 நபர்களுக்கு, பள்ளிக் கல்வித் துறை மூலமாக 2,652 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குதல் மற்றும் மாற்றுத் திறனாளித் துறை மூலம் இரண்டு நபர்களுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குகின்ற நிகழ்ச்சி இந்த விழாவின் மூலமாக நடைபெறுகிறது. இன்று மட்டும் 4,049 பயனாளிகளுக்கு சுமார் 12 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலேயே சேலம் மாவட்டத்தில் பஸ்போர்ட் உருவாக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவினுடைய அரசு, அம்மா முதலமைச்சராக இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

திருமண உதவித் திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் 48,975 பேருக்கு கிட்டத்தட்ட 237.50 கிலோ தங்கம் கொடுத்திருக்கிறோம். இதற்காக 174 கோடியே 98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

8 இலட்சத்து 10 ஆயிரம் குடும்பங்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. 12ஆம் வகுப்பு பயின்ற 1 இலட்சத்து 72 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு 237.25 கோடி ரூபாய் செலவில் விலையில்லா மடிக்கணினி கொடுத்திருக்கிறோம்.

கிராமசபை கூட்டம் ஏற்கெனவே அரசாங்கம் நடத்திக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின் ஒரு பஞ்சாயத்தில் உட்கார்ந்து கொண்டு கிராமசபை கூட்டம் என்று, இவர் தனியாக ஒரு கூட்டத்தைக் கூட்டி பேசும்பொழுது, பல்வேறு குற்றச்சாட்டை அரசின் மீது சுமத்துகிறார், இந்த ஆட்சியைப் பற்றி விமர்சனம் செய்கிறார். இந்த ஆட்சியில் எதுவும் நடக்கவில்லை

என்று ஒரு தவறான குற்றச்சாட்டைக் கூறிக் கொண்டிருக்கிறார். இந்த ஆட்சியில் அதை தெளிவுபடுத்துவதற்காகத் தான் இந்தக் கூட்டத்தின் வாயிலாக நான் விளக்குகின்றேன்.

மாண்புமிகு அம்மா முதலமைச்சராக இருந்த காலத்தில், என்னென்ன திட்டங்கள் அறிவிக்கப்பட்டதோ, அதை அம்மா முதலமைச்சராக இருந்த காலத்தில் நடைமுறைப்படுத்தி வந்தார்கள். அதைத் தொடர்ந்து, அம்மாவின் மறைவிற்குப் பிறகு, அம்மாவினுடைய அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி, மக்கள் வரவேற்பை பெற்றிருக்கிறோம். அதைப் பொறுக்க முடியாத ஸ்டாலின் அவர்கள் கிராமசபை கூட்டி பேசுகின்ற பொழுது, கிராமம் தான் கோயில் என்று பேசுகிறார். இது ஏற்கெனவே நமக்குத் தெரியும், நானெல்லாம் கிராமத்தில் பிறந்து வாழ்ந்தவன். அவர் நகரத்தில் இருந்ததால், கிராமம் ஒரு கோயில் என்று இப்பொழுதுதான் புதிதாக கண்டுபிடித்திருக்கிறார். அவரது புது கண்டுபிடிப்பிற்கு, கின்னஸ் சாதனை கிடைத்தது மாதிரி, அவர் அந்த சாதனையை படைத்திருக்கிறார். கிராமத்தில் இருக்கிற மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காகத் தான் அம்மா திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். கிராமத்தில் பிறந்த, ஏழை குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு அவர்களுக்கு இந்த திருமண உதவித் திட்டத்தில் பயன்பெற வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். யார் ஆட்சிக்கு வந்தாலும், அம்மா கொடுத்த திட்டத்தை எவராலும் நிறுத்த முடியாத அளவிற்கு திட்டத்தைக் கொண்டு வந்த தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம், மகளிர் சுய உதவிக் குழு. எந்த சுய உதவிக் குழுவுக்கும் கடன் கொடுக்கவில்லை என்றார். அவருக்கு புள்ளி விவரங்கள் தெரியாது. எப்பொழுதும் என்னை பற்றிய நினைப்பு தான் இருக்கிறது. தூங்குவது கூட என்னை நினைத்துக் கொண்டுதான் தூங்குவார் என்று நினைக்கிறேன்.

எப்பொழுது இந்த எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சரிலிருந்து அகற்ற வேண்டும், அந்த முதலமைச்சர் பதவியிலிருந்து அகற்றுவதற்கு எவ்வித தில்லுமுல்லு செய்யணும், எவ்வித சூழ்ச்சி செய்யணும், யார் யாரையெல்லாம் போராடுவதற்கு தூண்டி விடணும், இந்த நாட்டிலே எப்படியெல்லாம் சட்டம், ஒழுங்கு சீர்குலைவதற்கு என்னென்ன சூழ்ச்சி வேண்டுமோ அத்தனையையும் செய்து கொண்டிருக்கிறார். அத்தனையையும் மக்களுடைய ஆதரவோடு முறியடிக்கப்பட்ட ஆட்சி அம்மாவினுடைய ஆட்சி.

மகளிர் சுய உதவிக் குழுவிற்கு எதுவும் கொடுக்கவில்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார். இன்று சேலம் மாவட்டத்தில் மட்டும் 73,796 மகளிர்சுய உதவிக் குழுவிற்கு 1,874 கோடி வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இலட்சக்கணக்கான பேர் இந்த சுய உதவிக் குழு மூலம் கடன் பெற்று, சுயமாக தொழில் துவங்கக் கூடிய மாவட்டமாக சேலம் மாவட்டம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சேலம் மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுவிற்கு தேவையான நிதி வழங்கப்படுகிறது, தேவையான மானியமும் வழங்கப்படுகிறது. அதைக் தெரிந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பேசவேண்டுமென்று என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை மக்களுக்காகத் தான் பொங்கல் பரிசாக 1,000 ரூபாய் கொடுத்தோம். எந்த ஆட்சியில் கொடுத்தார்கள், எந்த மாநிலத்தில் கொடுத்தார்கள் ? எதிர்க்கட்சித்தலைவர், திமுக கட்சியின் தலைவர், அவருடைய கட்சியை சேர்ந்த வழக்கறிஞரை தூண்டிவிட்டு உயர்நீதிமன்றத்தில் வழக்குபோட்டு, தடையாணை வாங்க முயற்சி செய்தார். ஆனால், மக்கள் தான் எஜமானர்கள், மக்கள் தான் நீதிபதிகள், ஆகவே, நீதிமன்றத்தில் நீதி வென்றது. நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், அனைத்து ஏழை மக்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கி, எல்லா இல்லங்களிலும் பொங்கல் பொங்குகின்ற காட்சியை பார்க்க முடிந்தது.

என்னுடைய விருப்பம் என்னவென்றால், பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். இந்த இயக்கத்தை உருவாக்குகின்றபொழுது, ஏழை, எளிய மக்களுக்காக இந்த இயக்கத்தை உருவாக்கினேன் என்று சொன்னார். அவர் ஏழை, எளிய மக்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி, ஏழை மக்களை வாழ்க்கையில் உயரச் செய்தார். அவருக்குப் பிறகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களுக்காக திட்டங்களை வகுத்துஅறிவித்தார்கள். அதையெல்லாம் நாம் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்த வழியில் தான் இந்த பொங்கல் பரிசு கொடுக்கப்பட்டது.

இன்றைக்கு, பல்வேறு தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றவர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் பொங்கல் போனஸ். தீபாவளி பண்டிகை போனஸ் கொடுக்கின்றார்கள், அதைப்போல நம்முடைய ஏழை மக்களுக்கு ஏன் கொடுக்கக்கூடாது ? அதற்கு எந்தத் தடை வந்தாலும் அம்மாவினுடைய அரசு உடைத்தெறிந்து அவர்களுக்கு கொடுக்கும். ஏனென்றால், அவர்கள் உழைத்தால் தான் மற்றவர்கள் சிறப்பாக வாழமுடியும். அவர்கள் உழைத்தால் தான் மற்றவர்கள் சிறப்பாக வாழ முடியும். அவர்கள் வேர்வையாக சிந்துகிற இரத்தம் இந்த நாட்டின் வளர்ச்சிக்காக சிந்துகின்ற வேர்வை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த ஏழைகளுக்கு வாரிவாரி இரண்டு பெரும் தலைவர்களும் கொடுத்தார்கள். அந்த வழியிலே, அம்மாவின் அரசும் வாரிவாரி வழங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அவர்களுக்கு போனஸ் கிடைக்கின்றபொழுது, ஏன் இவர்களுக்கு போனஸ் போல கொடுக்கக்கூடாது. ஆகவே, இது அரசின் கவனத்தில் இருக்கின்றது. எதிர்காலத்தில் அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும், ஏழை தொழிலாளர்களுக்கும் அவர்களுக்கு பொங்கல் திருவிழா வருகின்றபொழுது அவர்கள் இல்லங்களில் சிறப்பாக கொண்டாடுகின்ற விதத்திலே அம்மாவின் அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் 4,868 விலையில்லா இருசக்கர வாகனம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இன்றைக்கு 4,549 நபர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்தலின் போது சொன்னவற்றையெல்லாம் அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அம்மாவின் ஆட்சியில் சேலம் மாவட்டத்தில் மட்டும் 16,000 பயனாளிகளுக்கு 270 கோடி ரூபாயில் சூரிய சக்தியுடன் கூடிய பசுமை வீடுகளை கட்டிக் கொடுத்திருக்கிறோம். சேலம் மாவட்டத்தில் உள்ள 1,490 நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் அம்மாவினுடைய அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 16,700 நபர்களுக்கு 183 கோடி ரூபாயில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. பாரதப் பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் 11,940 நபர்களுக்கு 203 கோடி ரூபாயில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 81,233 விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக 408.72 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 4 இலட்சத்து 11 ஆயிரத்து 132 விவசாயிகளுக்கு சுமார் 1998 கோடி ரூபாய் பயிர்க் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் எதற்காக சொல்கிறேனென்றால், இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேறவில்லை. இவ்வளவும் சேலம் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள். இன்றைக்கு ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பதன் காரணமாகத்தான் ஒரு தனியார் துறை, இந்தியாவிலேயே நிர்வாகத் திறமையுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது என்று அறிவித்திருக்கிறது.

3,799 மாற்றுத் திறனாளிகளுக்கு 14.4 கோடி ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால் வறட்சி ஏற்படும் சூழ்நிலை. பருவமழை பெய்கின்ற காலங்களில் அந்த மழைநீரை முழுமையாக சேமித்து வைப்பதற்காக குடிமராமத்துத் திட்டத்தை இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

சேலம் மாவட்டத்தில் 70 புதிய வழித்தடங்களை பேருந்து வசதி செய்து கொடுத்திருக்கிறோம்.

டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தில் அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம், கருவிலிருக்கும் சிசுவிற்கு ஊட்டச்சத்து, அம்மா பரிசு பெட்டகம், பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் வங்கி இவையெல்லாம் அம்மாவின் ஆட்சியில் கொண்டு வந்த திட்டம். ஏழை தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகள் நலமோடு இருக்க வேண்டும் என்று அம்மா இருந்தபொழுது அறிவித்த திட்டத்தை அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

அன்னதானத் திட்டம், முஸ்லீம் பெருமக்கள் மெக்கா புனித யாத்திரை செல்வதற்கு மத்திய அரசு கொடுக்கப்பட்ட மானியத்தை நிறுத்தியதால் இப்பொழுது 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. கிறிஸ்துவர்கள், ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்பவர்களின் எண்ணிக்கையை 500லிருந்து 1,000ஆக உயர்த்தியிருக்கிறோம்.

இறந்தவர்கள் உடம்பில் இருந்து உறுப்புகளை எடுத்து மற்றவர்கள் உடலில் பொருத்தும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக இன்றைக்கு அம்மாவின் அரசு சேலம் முதல் செங்கப்பள்ளி வரை தேசிய நெடுஞ்சாலை 103 கிலோ மீட்டருக்கு தற்போது 4 வழிச் சாலையாக இருப்பதை 8 வழிச் சாலையாக மாற்றுவதற்கு அரசு எடுத்த நடவடிக்கையின் மூலமாக மத்திய அரசு அதற்கு நிதியை ஒதுக்கியிருக்கிறது. ஒரு கிலோமீட்டருக்கு 18 கோடி ரூபாய் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மட்டும் 1,854 கோடி ரூபாய் மத்திய அரசு நமக்கு இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறது. இந்தப் பணி மிக விரைவாக தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நிலம் கையகப்படுத்தும் பணிக்கு

83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் இந்த 4 வழிச்சாலையை 8 வழிச்சாலையாக விரிவாக்குவதற்கு ஒதுக்கப்பட்ட நிதி 1,937 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் ஆகிய 4 மாவட்டங்களை இணைக்கும் சேலம், ஊத்தங்கரை, திருப்பத்தூர் தேசிய நெடுஞ்சாலை என்.எச்.179ஏ, 44 கிலோமீட்டர் நீளத்திற்கு இரு வழிச் சாலையிலிருந்து 4 வழிச் சாலையாக அகலப்படுத்துவதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டிருக்கிறது.

வேலூர் மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரை முதல் வாணியம்பாடி வரை 45.20 கிலோமீட்டர் சாலையை 289.12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4 வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி செயல்படுத்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் அம்மா அரசின் சாதனை என்பதை சொல்லிக் கொள்ள விழைகின்றேன். இன்னும் பல திட்டங்கள் அம்மா ஆட்சியில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

சேலம் மாநகரத்தில், பாதாள சாக்கடைப் பணி, குடிநீர் குழாய் பதிக்கின்ற பணி, மின்சாரம் தடையில்லாமல் கிடைப்பதற்கு கேபிள் பதிக்கின்ற பணி போன்றவையெல்லாம் செய்கின்றபொழுது சாலைகளெல்லாம் மேடு பள்ளமாகி உள்ளது. அதையெல்லாம் சரிசெய்து மிக சிறப்பான சாலையாக சீரமைப்பதற்கு அம்மாவின் அரசு 77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. மாநகராட்சி மூலமாக அதற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டிருக்கிறது. அந்தப்பணி துரிதமாக செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலம் மாநகரத்திலுள்ள அத்தனை சாலைகளும் அம்மாவின் அரசால் சீர்செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவின் அரசு தான் இத்தனையும் செய்திருக்கிறது. சேலம் மாநகரத்தில் வருகின்றபொழுது, வெளிநாடுகளில் இருக்கின்ற, அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளில் இருக்கின்ற நகரங்களில்

நுழைவது போன்ற நிலைமையை உருவாக்குகின்ற அளவிற்கு, சேலம் சீர்மிகு நகரமாக உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்கள் மாலை நேரங்களிலும், காலை நேரங்களிலும் பூங்காவில் நடைபயிற்சி மேற்கொள்வதற்கும் 13 பூங்காங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறோம். என்னென்ன மக்கள் கேட்டார்களோ அதையெல்லாம் செய்து கொடுத்துவிட்டோம். அம்மாவின் அரசு வந்த பிறகு எப்படி இருக்கிறது, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்து எப்படி இருந்தது என்று எண்ணிப் பாருங்கள். சேலம் மாநகரமும் சரி, சேலம் மாவட்டமும் சரி, தமிழ்நாடு முழுவதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்படியெல்லாம் திட்டங்கள் கொண்டு வந்தார்கள், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்கள், அம்மா மறைவிற்குப் பிறகு அம்மாவின் அரசு கொண்டு வந்த திட்டங்கள் இதையெல்லாம் ஒப்பிட்டுப் பாருங்கள். நான் சொல்வதெல்லாம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், நிறைவேற்றப்பட இருக்கின்ற திட்டங்கள், புதிய திட்டங்கள்.

வேண்டுமென்றே திட்டமிட்டு, ஊர் ஊராகச் சென்று இந்த ஆட்சியிலே எதுவும் செய்யவில்லை, மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என்று தவறான செய்தியை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்து வருகிறார். இதெல்லாம் உண்மைக்குப் புறம்பானது. அவருக்கு அரசியல் ரீதியாக எங்களை எதிர்க்க முடியவில்லை. ஆகவே, குறுக்கு வழியை கையாண்டு பொய்யான செய்தியை மக்களிடத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறார். அம்மாவின் அரசு உங்களின் அரசு, மக்களின் அரசு, மக்களுக்கு என்ன தேவையோ அதை நிறைவேற்றுகின்ற அரசு.

கோடை காலத்தில் குடிநீர் பிரச்சினை ஏற்படும் என்று கருதி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆலோசனைகளைப்

பெற்று, என்னுடைய தலைமையில், இரண்டு நாட்களுக்கு முன்பு தலைமைச் செயலகத்திலே நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு மூத்த அமைச்சர்களும், துறையைச் சார்ந்த அமைச்சர்களும் கலந்து கொண்டனர். கோடை காலத்தில் குடிநீர் பிரச்சினை வருமா என்று ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் குடிநீர் பிரச்சினையை போக்குவதற்கு 158 கோடி ரூபாய் அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்து முன்னெச்சரிகையாக எடுத்திருக்கிறது. ஆகவே, எதுவும் வருவதற்கு முன்பாகவே நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே, அம்மாவின் அரசைப் பொறுத்தவரைக்கும், வேகமாக, துரிதமாக நடவடிக்கை எடுத்து மக்களுக்கு பிரச்சினையில்லாமல் செயல்படுகின்ற அரசு அம்மாவினுடைய அரசு. வேண்டுமென்றே திட்டமிட்டு, சில அரசியல் சூழ்ச்சியாளர்கள், இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும், இந்தக் கட்சிக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்று முனைந்தால் அவர்கள் எடுக்கின்ற அத்தனை முயற்சியும் தோல்வியில் தான் முடியும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவின் அரசு இன்றைக்கு சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது, அம்மாவின் அரசிற்கு நீங்கள் அத்தனை பேரும் துணை நிற்க வேண்டும் என்று கூறி, அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்,

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
02.02.2019 அன்று சேலம் மாவட்டம், கந்தம்பட்டியில்
புதிய சாலை மேம்பாலம் மற்றும் உயர்மட்டப் பாலம்
அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை

ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றைய தினம் விவசாயிகளுடைய நலன் கருதி, விவசாயிகள் விளைவித்த நெல்லை கொள்முதல் செய்வதற்காக பூலாம்பட்டி மற்றும் தேவூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்க விழா, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, ஏற்கெனவே நடைபெற்ற திட்டப் பணிகளுக்கு திறப்பு விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியில் வருகை தந்துள்ள அனைவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோலாம்பட்டியிலும், சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்ககிரியிலும் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 2 நேரடி கொள்முதல் நிலையங்களை இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றிலேயே முதல் முறையாக விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி கிராமத்திலும் மற்றும் சங்ககிரி வட்டம், தேவூர் கிராமத்திலும் விவசாயிகள் பயனடையும் வகையில்

மாண்புமிகு அம்மாவின் அரசால் 2 நேரடி கொள்முதல் நிலையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் நிர்ணயித்த விலை சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,770, பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரு.1,750 விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மாவின் அரசு, விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு கூடுதல் விலை கிடைக்கும் வகையில், மாநில அரசு சார்பில் ஊக்கத் தொகையாக, சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.70, பொது ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.50 வழங்க ஆணையிட்டு அதன்படி விவசாயிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விளைவித்த நெல்லை நேரடியாக விற்பனை செய்யும் பொழுது, விவசாயிகள் சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1840, பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,800 அதிகமான விலை கிடைக்கும். எனவே, விவசாயிகள் விளைவித்த நெல்லினை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் புளியங்குறிச்சி மற்றும் புத்தரகவுண்டன்பாளையம் ஆகிய கிராமங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 2,513 விவசாயிகளிடமிருந்து 467.920 மெட்ரிக் டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு ரூ.7 கோடியே 75 இலட்சம் 77 ஆயிரத்து 544 வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவின் மூலமாக, திறந்து வைக்கப்பட்ட, முடிவுற்ற பணிகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக

வேலை உறுதித் திட்டத்தின் கீழ், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சி செவிடனூரிலும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோணசமுத்திரம் ஊராட்சி, கனியாம்பட்டியிலும், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சிக்குட்பட்ட கருங்கரடு மற்றும் மோட்டாண்டிக்கரை ஆகிய நான்கு இடங்களில் தலா ரூ.8.50 இலட்சம் வீதம் ரூ.32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 4 புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள் இன்றையதினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம், இந்த விழாவின் சார்பாக வழங்கப்படுகின்ற நலத் திட்ட உதவிகள், வருவாய்த் துறையின் சார்பில் 253 பயனாளிகளுக்கு, ரூ.24,44,500 மதிப்பீட்டில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், விவசாய கூலி உதவித்தொகை, முதியோர் விதவை உதவித் தொகை மற்றும் நகர நிலவரித் திட்ட பட்டாக்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் 150 பயனாளிகளுக்கு ரூபாய் 1.05 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டவதற்கான மானியமும், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட நிதியும், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் தனி நபர் இல்ல கழிப்பறை கட்டுவதற்கான நிதியும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 534 நபர்களுக்கு ரூபாய் 3 கோடியே 14 இலட்சத்து 63 ஆயிரம் பயிர்க் கடன் மற்றும் மத்திய கடனுதவியும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில், விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 400 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 56 இலட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டில் விலையில்லா கறவை மாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையின் சார்பில், 100 விவசாயிகளுக்கு ரூபாய் 6 இலட்சத்து 74 ஆயிரம் மதிப்பீட்டில் இயந்திர நடவு நிதி உதவி, செயல்விளக்கத் திடல் அமைக்க நிதியுதவி மற்றும் பேட்டரியில் இயங்கும் விசை தெளிப்பான் கருவியும், தோட்டக்கலைத் துறையின் சார்பில், 100 விவசாயிகளுக்கு ரூபாய் 27 இலட்சத்து 69 ஆயிரம் மதிப்பீட்டில் கூட்டுப்பண்ணைத் திட்டம், நுண்ணுயிர் பாசனத் திட்ட மானிய நிதியுதவியும், வேளாண்

பொறியியல் துறையின் சார்பில், கிராம வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இரண்டு குழுவிற்கு ரூபாய் 8 இலட்சத்து 35 ஆயிரத்து 800 மதிப்பீட்டில் வேளாண் கருவிகள் வாங்குவதற்கான மானியம், வனத் துறையின் சார்பில் வனக்குழு நிதியிலிருந்து 1 பயனாளிக்கு ரூபாய் 15 ஆயிரம் மதிப்பில் சிறு தொழில் தொடங்குவதற்கான கடனுதவி. சமூக நலத் துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூபாய் 5 இலட்சம் திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யத்திற்கு தலா 8 கிராம் தங்கம். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூபாய் 60 ஆயிரத்து 700 மதிப்பிலான விலையில்லா சலவைப் பெட்டிகள் மற்றும் விலையில்லா தையல் இயந்திரங்கள். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையின் சார்பில், 1 பள்ளி மாணவிக்கு ரூபாய் 200 மதிப்பிலான கண் கண்ணாடி. மகளிர் திட்டம் சார்பில், ரூபாய் 6 கோடியே 2 இலட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் 450 மகளிர் சுய உதவிக் குழுக்கு நேரடி கடனுதவியும், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியமும், இத்திட்டத்தின் கீழ், ஒரு மகளிருக்கு மானிய நிதியுதவியும், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், 10,664 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 3 கோடியே 96 இலட்சத்து 70 ஆயிரத்து 100 மதிப்பிலான 10,664 விலையில்லா மிதிவண்டிகளும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு, ரூபாய் 6 இலட்சத்து 25 ஆயிரத்து 100 மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் அதிநவீன செயற்கை அவயமும், என மொத்தம் இன்றைய தினம், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, 12,701 பயனாளிகளுக்கு ரூபாய் 16 கோடியே 54 இலட்சத்து 26 ஆயிரத்து 400 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக முகமையின் சார்பில், மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட

நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள் திட்டத்தின் கீழ், ரூபாய் 2 கோடியே 79 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணியும்,

ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள் திட்டத்தின் கீழ், ரூபாய் 2 கோடியே 77 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கும், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஜருகுமலை மலைவாழ் மக்களின் தேவைக்காக நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணிகளுக்கும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை சார்பில், கொங்கணாபுரம் வட்டாரம், சமுத்திரம் ஊராட்சியிலுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிகளுக்கும், வனத் துறையின் சார்பில், ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குறுவம்பட்டி உயிரியல் பூங்காவில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மற்றும் காட்டு மாடுகளுக்கான கூடாரம் அமைக்கும் பணிகளுக்கும் என மொத்தம் நடைபெறுகின்ற விழாவில் ரூபாய் 15 கோடியே 66 இலட்சம் மதிப்பீட்டில் 5 புதிய திட்டப் பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி பல திட்டங்களை அம்மாவின் அரசு நிறைவேற்றியிருக்கிறது, அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய அரசு ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் விதத்தில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

விலையில்லா கறவை மாடுகள் வழங்குவதன் மூலமாக, சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. இன்றைக்கு, தமிழ்நாட்டிலேயே அதிக பால் கொள்முதல் செய்கின்ற பால் பண்ணை சேலம் பால் பண்ணை. அது தொடர்ந்து முதலிடத்தில் இரக்கின்றது. அதுபோல, நம்முடைய சேலம் மாவட்டத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் காவிரியிலிருந்து வழங்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலத்திலும் சரி, அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு அம்மா அவர்களின் ஆட்சியிலும் சரி, அம்மா அவர்களால் போடப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. 2011ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக பதவியேற்றபோது நான் எடப்பாடி சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்று அப்பொழுது எடப்பாடி மக்கள், எடப்பாடி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் கல்லூரி கட்டிக் கொடுங்கள் என்று வைத்த கோரிக்கையை ஏற்று அம்மா அவர்களிடம் தெரிவித்தவுடன், நம்முடைய பகுதிக்கு எடப்பாடியில் இருந்து சங்ககிரி செல்லும் வழியில், ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தந்தார்கள், அதற்கு ரூபாய் 10 கோடியில் புதிதாக கட்டடம் கட்டித் தந்தார்கள். மேலும், அதனை விரிவுபடுத்துவதற்கு கிட்டத்தட்ட 12 வகுப்பு அறை கட்டவதற்கு இப்பொழுது ரூ.5 கோடி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஆண்டில், அங்கே இரண்டாயிரம் மாணவ, மாணவியர் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம். இது மிகப்பெரிய வரலாறு. அதேபோல, சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் ஆகிய மூன்று பகுதிக்கும் மையப் பகுதியாக இருக்கக்கூடிய நங்கவள்ளி தொகுதியில், வனவாசி பகுதியில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரியை ஐந்து மாதத்திற்கு முன்பு நான் துவக்கி வைத்தேன். அங்கும் கிட்டத்தட்ட இரண்டாயிரம் மாணவ, மாணவியர் சேர்ந்து படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். ஆகவே, நம்முடைய பகுதியில் ஏழை, எளிய குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள் கிட்டத்தட்ட 4,000 பேர் உயர்கல்வி

படிக்கக்கூடிய சூழ்நிலையை அம்மா அரசு தான் உருவாக்கித் தந்திருக்கிறது. எட்டிகொடைமேட்டில் பி.டெக் கல்லூரி கட்டிக் கொண்டிருக்கிறார்கள், வரும் நடப்பாண்டில் அங்கேயும் பி.டெக் கல்லூரி திறக்கப்பட்டு, ஏழை மாணவ, மாணவிகள் பி.டெக் படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறோம்.

2011–க்கு முன்பு எடப்பாடி சட்டமன்றத் தொகுதி எப்படியிருந்தது, இப்பொழுது உங்கள் ஆதரவில் நான் சட்டமன்ற உறுப்பினராகி அமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நம்முடைய தொகுதியில் சாலைவசதி எப்படியிருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எடப்பாடி நகரம், கொங்கணாபுரம், ஆகிய பகுதிகளில் புறவழிச் சாலை அமைக்கப்பட்டு, கனரக வாகனங்கள் செல்லக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம். காரமங்கலத்திலும் புறவழிச்சாலை அமைக்குப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எடப்பாடியில் அருமையான மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கிறோம். கொங்ணாபுரம், சித்தூர், நங்கவள்ளி ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கிறோம். பல இடங்களில், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை கொடுத்திருக்கிறோம். கால்நடை மருத்துவமனை கொடுத்திருக்கிறோம். இந்தியாவிலேயே தமிழகம் மருத்துவ சேவையிலே முதலிடம் வகிக்கின்ற அளவிற்கு சிறப்பான பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை, எளியவர்களுக்கு பசுமை வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களையெல்லாம் புனரமைக்கிறோம். எடப்பாடி நஞ்சுண்டேஸ்வரர் கோவில் புனரமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே திருமண மண்டபமும் கட்டியிருக்கிறோம். அங்கே மார்க்கெட் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எடப்பாடி நகர மக்களுக்காக பூங்கா அமைக்கும் பணியும் தொடங்கப்பட்டு இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, அனைத்து மக்களுக்கும் பொங்கல் பரிசு கொடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு டிராக்டர் கொடுத்தோம். இவையெல்லாம் அம்மாவின் ஆட்சியில் செய்த திட்டங்கள். விவசாயிகள், நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக சொட்டுநீர் பாசன கருவிகளை விவசாயிகளுக்குத் தருகிறோம். ஒரு ஏக்கர் நிலம் வைத்திருந்தால் முழுவதும் மானியமாக கொடுக்கிறோம். அதற்கு மேல் எத்தனை ஏக்கர் வைத்திருந்தாலும் அவர்களுக்கு 75 சதவீதம் மானியம் அளிக்கிறோம்.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக இயங்குகிறது. இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு தான் என்று அதற்கு இந்தியா டுடே என்ற ஆங்கில நாளிதழ் நமக்கு விருது கொடுத்திருக்கிறார்கள்.

எனவே, அம்மாவின் அரசு மக்களுக்காக உள்ள அரசு, இது மக்களின் அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை வழங்குகின்ற அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டு, சேலம் மாவட்டம் முழுவதும் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை சுட்டிக்காட்டி, இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், அவரோடு துணை நின்ற அதிகாரிகளுக்கும், அனைத்து பயனாளிகளுக்கும், மற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
02.02.2019 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடியில்
நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். அதனால்தான் தமிழகம் இன்றைக்கு கல்வியிலே இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கக்கூடிய அளவிற்கு வளர்ச்சியைப் பார்க்க முடிகிறது.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்